# ஜீவனின்
# அறிவு

Witness Lee

# ஜீவனின் அறிவு

விட்னெஸ் லீ

விற்பனைக்கு அல்ல
இலவச விநியோகத்திற்காக மட்டும்

***Living Stream Ministry***
Anaheim, California • www.lsm.org

© 2010 Living Stream Ministry

All rights reserved. No part of this work may be reproduced or transmitted in any form or by any means—graphic, electronic, or mechanical, including photocopying, recording, or information storage and retrieval systems—without written permission from the publisher.

Original Title:
**THE KNOWLEDGE OF LIFE**
© 1973 Living Stream Ministry

**Jeevanin Aarivu**
(Tamil)

By
WITNESS LEE

First Edition, 2010

ISBN: **978-0-7363-4484-5**

Translated in India by
*Amana Literature [Pvt] Ltd.*
Gurgaon, Haryana, India
Email: office@amanaliterature.in
www.amanaliterature.in

See back page for local distribution information.

Published by
*Living Stream Ministry*
2431 W. La palma Ave., Anaheim, CA 92801 U.S.A.
P. O. Box 2121, Anaheim, CA 92814 U.S.A.

# பொருளடக்கம்


| அத்தியாயம் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | 5 |
| | ஜீவனைப்பற்றிய பதினான்கு முக்கியமான குறிப்புகள் | 7 |
| 1 | ஜீவன் என்றால் என்ன? | 9 |
| 2 | ஜீவனின் அனுபவம் என்றால் என்ன? | 21 |
| 3 | ஜீவனின் முதல் அனுபவம்—மறுபிறப்பு | 29 |
| 4 | மறுபிறப்பின்மூலம் ஆதாயப்படுத்தப்படுபவைகள் | 35 |
| 5 | ஜீவனின் உணர்வு | 57 |
| 6 | ஜீவனின் ஐக்கியம் | 69 |
| 7 | ஆவியின் உணர்வும் ஆவியை அறிதலும் | 75 |
| 8 | ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் உள்ள வேறுபாடு | 89 |
| 9 | மூன்று ஜீவன்களும் நான்கு விதிகளும் | 107 |
| 10 | ஜீவவிதி | 135 |
| 11 | உள்ளார்ந்த அறிவு | 181 |
| 12 | ஜீவனின் வளர்ச்சி என்றால் என்ன? | 219 |
| 13 | ஜீவனின் வடிகால் | 231 |
| 14 | வெளிச்சமும் ஜீவனும் | 245 |

# முன்னுரை

தேவன் தம் நித்திய இளைப்பாறுதலைப் பெறும்படி, தம் சாயலைக் கொண்டிருந்து, தம் மகிமையை வெளிப்படுத்துகிற, மேலும் தம் அதிகாரத்தைக் கொண்டிருந்து தம் எதிரியோடு இடைபடுகிற ஒரு கூட்டு மனிதனை ஆதாயப்படுத்துவதே தேவனுடைய விருப்பமும் நோக்கமும் என்பதை நாம் அறிந்திருந்தாலும், தேவனுடைய இப்படிப்பட்ட மாபெரும் நோக்கத்தையும் விருப்பத்தையும் அவருடைய சொந்த ஜீவன்மூலமாகவே அடையமுடியும் என்பதை ஒரு சிலரே அறிந்திருக்கிறார்கள். தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்றுகிற இந்த ஜீவனை அறிந்து, அனுபவிக்கிற இந்தக்காரியத்தை கிட்டத்தட்ட ஒரு சிலரே தொட்டிருக்கிறார்கள். ஆகவே பரிசுத்தவான்கள் இன்று பலவீனமாயும், முதிர்ச்சியற்றும் இருக்கிறார்கள். தேடுபவர்கள் அநேகர் இருந்தாலும், மிகக் குறைவானவர்களே ஜீவனின் வழியைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அநேக மக்கள் வைராக்கியம், அறிவு, வல்லமை, வரங்கள் போன்ற காரியங்களை ஜீவன் என்று தவறாகப் புரிந்திருக்கிறார்கள்.

இந்தக் கடைசி நாட்களில் அவசரத் தேவைக்காக தேவன், நம் சகோதரனுடைய செய்திகள்மூலம் தம் அற்புதமானதும் மறைவானதுமான ஜீவனின் கோட்டை வெளிப்படுத்தியதற் காக நாம் தேவனுக்கு நன்றிசெலுத்துகிறோம்; இதனால் ஒவ்வொரு விசுவாசியும் இந்தக் காரியத்தைப் பார்க்கவும் தொடவும்முடியும். கடந்த 2000 ஆண்டுகளில் இருந்த பரிசுத்தவான்களுடைய ஜீவனின் அறிவு மற்றும் அனுபவம் ஆகியவற்றினுடைய சாரத்தின் படிகம் கூட்டல் நம் சகோதரனின் 30 வருட தனிப்பட்ட அனுபவம் ஆகியவைகளே இந்தச்செய்திகள் என்று நாம் கருதலாம். இது உண்மையாகவே முழுமையானதும், அதி சிறந்ததுமாகும். இந்தச் செய்திகளின் உள்ளடக்கங்களை நாம் இரண்டு முக்கியமான பகுதிகளாகப் பிரிக்கலாம். முதல்பகுதி ஜீவனின் அறிவைப்பற்றி ஆய்வுசெய்கிறது; இது ஜீவனின் குணாதிசயத்தையும், அதன் பல்வேறு வேலைசெய்யும் கோட்பாடுகளையும் காண்பிப்பதற்காக 14 முக்கியமான குறிப்புகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாம் பகுதி* ஜீவனின் அனுபவங்களை ஆய்வுசெய்கிறது; அது ஆவிக்குரிய வாழ்க்கையின் பல்வேறு நிலைகளிலுள்ள

* இரண்டாம் பகுதி, ஜீவனின் அனுபவம் என்ற தலைப்பைக்கொண்ட திரட்டு, லிவிங் ஸ்ட்ரீம் மினிஸ்ட்ரீயின் வெளியீடு.

அனுபவங் களையும், ஜீவனின் வழியை ஆசையாய்ப் பின்தொடரு கிறதையும் விளக்கும் வண்ணம் 19 வகைகளாகப் பிரிக்கப் பட்டிருக்கிறது. நாம் இந்தப் பாடங்களை ஆசையாய்ப் பின் தொடர்ந்து ஒவ்வொன்றாகப் பயிற்சிசெய்தால், நாம் நேர்த்தியாக வளர்ந்து, ஜீவனின் முதிர்ச்சியை துரிதமாக அடைவோம்.

ஆகையால் இந்தச் செய்திகளெல்லாம் ஏறக்குறைய காண முடியாததும், தொடமுடியாததுமாகிய ஜீவனின் அறிவியலை நடைமுறைக்குரியதாக்கியிருக்கிறது. கர்த்தரை நேசித்து, ஜீவனின் வளர்ச்சியை ஆசையாய்ப் பின்தொடர்கிற எல்லாப்பரிசுத்தவான் களும் இந்தச் செய்திகளையெல்லாம் வாசிக்கவேண்டும்.

டாக்டர் ஒய். எல். சேங்

நவம்பர் 1956
தைப்பே, தைவான், சீன குடியரசு

# ஜீவனைப்பற்றிய பதினான்கு குறிப்புகள்

*ஜீவன் என்றால் என்ன என்பதையும், ஜீவனோடு தொடர்புடைய சில காரியங்களையும் ஒவ்வொரு கோணத்திலிருந்தும் நாம் பார்க்க 14 முக்கியமான குறிப்புகளை உள்ளடக்கியுள்ள 14 அத்தியாயங்களை நாம் பயன்படுத்துவோம். இந்தப் புத்தகத்தில் ஜீவனின் அறிவின்மேல் நாம் அஸ்திவாரத்தைக் கட்டுகிறோம். ஜீவனின் அனுபவத்தைக்குறித்த காரியத்தை வேறொரு திரட்டில் நாம் கூறியுள்ளோம்.**

* *ஜீவனின் அனுபவம் லிவிங் ஸ்ட்ரீம் மினிஸ்ட்ரீயின் வெளியீடு.*

அத்தியாயம் ஒன்று

# ஜீவன் என்றால் என்ன?

முதலாவது, நாம் ஜீவன் என்றால் என்ன என்பதைப் பார்ப்போம். ஜீவனை அறிவதற்கு ஜீவன் என்றால் என்ன என்பதை நாம் அறிய வேண்டும். இதை விளக்குவது சற்றுக் கடினம்; எனவே, நிச்சயமாகவே கர்த்தருடைய இரக்கம் நமக்குத் தேவை. வேதாகமப் போதனையின்படி, இந்தக் கருப்பொருளைத் தெளிவு படுத்துவதற்கு குறைந்தது ஆறு குறிப்புகளாவது பரிசீலிக்கப்பட வேண்டும்.

## I. தேவனுடைய ஜீவன் மட்டுமே ஜீவன்

ஜீவன் என்றால் என்ன என்பதை விளக்கும்போது, இப் பிரபஞ்சம் முழுவதிலும் எதை ஜீவனாகக் கருதமுடியுமோ அதுவே ஜீவன் என்ற ஒரு காரியத்தைக்குறித்து முதலாவது நாம் தெளிவாக இருக்கவேண்டும். "குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்; தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்" என்று *1 யோவான் 5:12* கூறுகிறது. மேலும், "குமாரனிடத்தில் விசுவாச மாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்; தேவனுடைய குமாரனை விசுவாசியாதவனோ ஜீவனைக் காண்பதில்லை" என்று யோவான் *3:36* கூறுகிறது. தேவனுடைய ஜீவன் மனிதனிடம் இல்லாவிட்டால், அவனிடம் ஜீவன் இல்லை என்று இந்த இரண்டு வேத வசனங்களும் நமக்குச் சொல்லுகின்றன. தேவனுடைய பார்வையில் அவருடைய ஜீவன் மட்டுமே ஜீவன் என்று இது காட்டுகிறது; இதைத் தவிர வேறு எந்த ஜீவனும் ஜீவனாகக் கருதப்படமுடியாது. இவ்வாறு, வேதாக மத்தில் தேவனுடைய ஜீவன் என்று குறிப்பிடப்படும்போது, இது மட்டுமே ஒப்பற்ற ஜீவன் என்ற முறையில் பயன்படுத்தப்படுகிறது *(யோவான் 1:4; 10:10; 11:25; 14:6 போன்றவைகள்).*

தேவனுடைய ஜீவன் மட்டுமே ஜீவன்; ஏனென்றால், தேவனுடைய ஜீவன் மட்டுமே தெய்வீகமாகவும், நித்தியமாகவும் இருக்கிறது. மற்ற ஜீவன்கள் ஜீவனாகக் கருதப்படுவதில்லை.

*தெய்வீகம்* என்பதின் அர்த்தம் என்ன? தெய்வீகம் என்பதற்கு, தேவனுக்குரியது, தேவனுடைய சுபாவத்தையுடையது, அல்லது மற்ற எல்லாவற்றிலிருந்தும் வரம்புகடந்தது, வேறுபட்டது என்று அர்த்தமாகும். தேவன் மட்டுமே தேவன், தேவனிடம் மட்டுமே தேவனுடைய சுபாவம் இருக்கிறது, தேவன் மட்டுமே வரம்புகடந்தவராகவும், வேறுபட்டவராகவும் இருக்கிறார்; ஆகையால், தேவன் மட்டுமே தெய்வீகம். தேவனுடைய ஜீவன்

என்பது தேவனே (இந்தக் குறிப்பைப் பின்பு நாம் பரிசீலிக்கலாம்). ஜீவன் என்பது தேவனாகவே இருப்பதால், இயல்பாகவே அதனிடம் தேவனுடைய சுபாவம் இருக்கிறது. எடுத்துக்காட்டாக, ஒரு தங்கக் கோப்பை தங்கமாக இருக்கிறது. அது தங்கமாக இருப்பதால், அதற்குத் தங்கத்தின் சுபாவம் இருக்கிறது. உண்மையில், தங்கமே அதனுடைய சுபாவம். இதுபோல, தேவனுடைய ஜீவன் என்பது தேவனே, மேலும் அதற்கு தேவனுடைய சுபாவம் இருக்கிறது; தேவனே அவருடைய ஜீவனின் சுபாவமாக இருக்கிறார். தேவனுடைய ஜீவன் தேவனாக இருப்பதாலும், தேவனுடைய சுபாவத்தைக் கொண்டிருப்பதாலும், தேவனுடைய ஜீவன் தெய்வீகமாக இருக்கிறது.

*நித்தியம்* என்பதின் அர்த்தம் என்ன? நித்தியம் என்றால் படைக்கப்படாதது, தொடக்கமும் முடிவும் இல்லாதது, தன்னில் தானே என்றென்றும் இருப்பது, மாறாமல் இருப்பது. தேவன் மட்டுமே படைக்கப்படாதவர்; "நித்தியத்திலிருந்து நித்தியம் வரை" இருப்பவர் (சங். 90:2, மூலப்படிவம்), அதாவது தொடக்கமும் முடிவும் இல்லாதவர். அவர் "இருக்கிறவராகவே இருக்கிறவர்" (யாத். 3:14), எப்போதும் "மாறாதவர்" (சங். 102:27). தேவன்தாமே இப்படி இருப்பதால், தேவனாகவே இருக்கும் ஜீவனும் இப்படிப் பட்டதாக இருக்கிறது. தேவனைப்போலவே தேவனுடைய ஜீவனும் படைக்கப்படாதது, தொடக்கமும் முடிவும் இல்லாதது, தானாகவே என்றென்றும் இருப்பது, ஒருபோதும் மாறாதது; ஆகையால், தேவனுடைய ஜீவன் நித்தியமானது. எனவே, தேவனுடைய ஜீவனை நித்திய ஜீவன் என்று வேதவாக்கியங்கள் பேசுகின்றன.

தெய்வீகமும் நித்தியமும் தேவனுடைய சுபாவமாக இருப்பதாலும், தேவனுடைய குணாதிசயங்களை வெளிக் காட்டுவதாலும், அவைகள் அவருடைய ஜீவனின் சுபாவ மாகவும் ஜீவனுடைய குணாதிசயங்களைச் சித்திரிக்கிறதாகவும் இருக்கிறது. இருப்பினும் தெய்வீகமாயிருப்பது, தேவனுடைய ஜீவனின் ஒரு குணாதிசயமாக இருப்பது மட்டுமல்ல, இன்னும் அதிகமாக அது அவருடைய ஜீவனின் சாராம்சமாகவும் இருக்கிறது; அப்படியிருக்க, நித்தியமாயிருப்பது என்பது தேவனுடைய ஜீவனின் குணாதிசயம் மட்டுமே. தங்கக் கோப்பையின் உதாரணத்தை நாம் மீண்டும் பார்ப்போம். அதன் சுபாவம் தங்கமாகவும், துருப்பிடிக்காததாகவும் இருக்கிறது. இருப்பினும், தங்கம் அந்தக் கோப்பையின் குணாதிசயத்தை மட்டும் வருணிக்கவில்லை, அது அதன் சாராம்சமாகவே இருக்கிறது; அப்படியிருக்க, அது தங்கமாக இருப்பதால், அதன் சுபாவம் துருப் பிடிக்காததாக இருக்கிறது. இதுபோல, தேவனுடைய ஜீவன் நித்தியமாக இருப்பதற்குக் காரணம் அது தெய்வீகமாக இருப்பதேயாகும். (தெய்வீகமாயிருப்பது என்பது தேவனுக்

குரியதை மட்டுமல்ல, தேவனையே அடையாளப்படுத்துகிறது.) தேவனுடைய ஜீவன் நித்தியமானது ஏனென்றால் அது தெய்வீகமானது. இப்பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட எந்த ஜீவனுக்கும் தெய்வீகசுபாவம் இல்லை; ஆகவே, படைக்கப்பட்ட எந்த ஜீவனும் நித்தியமானதல்ல. தேவனுடைய படைக்கப்படாத ஜீவனுடைய சுபாவம் மட்டுமே தெய்வீகமாகவும் நித்தியமாகவும் இருக்கிறது. தேவனுடைய ஜீவனின் சுபாவம் இப்படியிருப்பதால், இயல்பாகவே தேவனுடைய ஜீவனும்கூட அப்படியே இருக்கிறது. தேவனுடைய ஜீவன் நித்தியமானது ஏனெனில் அது தெய்வீக மானது. இப்பிரபஞ்சம் முழுவதிலும் தேவனுடைய ஜீவன் மட்டுமே தெய்வீகமாகவும் நித்தியமாகவும் இருக்கிறது; ஆகையால், தேவனுடைய ஜீவன் மட்டுமே ஜீவனாகக் கருதப்படுகிறது.

தெய்வீகமாகவும், நித்தியமாகவும் இருக்கிற ஜீவன் மட்டுமே ஜீவனாகக் கருதப்படமுடியும், ஏனெனில் ஜீவன் என்பது ஜீவிக்கிற ஒன்றைக் குறிக்கிறது; ஜீவன் என்று கருதப்படுவதெல்லாம் சாவாமையுடையதாக இருக்கவேண்டும். சாவாமையுடையதாக இருப்பது மாறாததாகவும் இருக்க வேண்டும். எந்தவிதமான தாக்குதலையோ அழிவையோ கடந்து வந்தபின்பும், அது முன்பு இருந்ததுபோலவே இருந்து, தொடர்ந்து வாழ்கிறது. ஒரு ஜீவன் மரணத்திற்கும், மாற்றத்திற்கும் உட்பட்டதாகவும், எந்தத் தாக்குதலையும், அழிவையும் சகித்துக்கொள்ளமுடியாததாகவும் இருப்பது நித்தியமானதோ, சாவாமையுள்ளதோ, மாறாததோ, இல்லை; ஆகையால் அது ஜீவனாகக் கருதப்படமுடியாது. ஜீவன் என்ற ஒன்று என்றென்றும் ஜீவிக்கிறதாகவும், ஒருபோதும் மாறாததாகவும் இருக்கவேண்டும். நித்தியமாக இருப்பது மட்டுமே இப்படி இருக்கமுடியும். அப்படியானால், நித்தியமானது என்பது என்ன? தெய்வீகமாக இருப்பது மட்டுமே! தெய்வீகம் என்பது தேவனுக்குரியது, இது தேவனே. தேவன் மட்டுமே தொடக்கமும் முடிவும் இல்லாதவராகவும், தாமாகவே இருப்பவராகவும், என்றென்றும் இருப்பவராகவும் இருக்கிறார். ஆகையால், அவரே நித்தியமானவர். தெய்வீகமாக இருப்பது மட்டுமே நித்தியமாக இருப்பதாலும், நித்தியமாக இருப்பது மட்டுமே எந்த மாற்றமும் இல்லாமல் நித்தியத்திற்கும் வாழமுடியும் என்பதாலும், தெய்வீகமாகவும் நித்தியமாகவும் இருப்பது மட்டுமே ஜீவனாகக் கருதப்படமுடியும்.

தேவதூதன், மனிதன், விலங்கு, தாவரம் போன்ற இப் பிரபஞ்சத்திலுள்ள எல்லா வகையான ஜீவன்களும் சாகக் கூடியவைகள், மாறக்கூடியவைகள். எனவே, அவைகள் நித்தியமானவைகள் இல்லை. அவைகளிடம் தேவனுடைய சுபாவமோ, தெய்வீகமோ இல்லை. தேவனுடைய ஜீவனுக்கு மட்டுமே தேவனுடைய சுபாவம் இருக்கிறது. ஆகையால், அந்த

ஜீவன் தெய்வீகமானது நித்தியமானது, மற்றும் சாவாமையுள்ளது மாறாதது, மற்றும் மரணத்தினால் பிடித்து வைக்கப்படமுடியாதது அழிக்கப்படமுடியாதது (அப். 2:24; எபி. 7:17). எப்பேர்ப்பட்ட தாக்குதலையோ, அழிவையோ அது கடந்துவந்தாலும் அது மாறாததாகவும், எப்போதும் ஒரே மாதிரியாகவும் இருக்கிறது. இப்பிரபஞ்சத்தில் தேவனுடைய ஜீவனைத்தவிர வேறு எந்த ஜீவனாலும் இப்படி இருக்கமுடியாது. ஆகையால், நித்தியம் என்ற நிலையில் பார்க்கும்போது, தேவனுடைய ஜீவன் மட்டுமே ஜீவன், அது பெயரளவில் மட்டுமல்ல, அது நிஜத்திலும் ஜீவனாக இருப்ப தால், அது ஜீவனுடைய அர்த்தத்தை முற்றும் நிறைவேற்று கிறது. மற்ற ஜீவன்கள் பெயரளவில் மட்டுமே ஜீவன்களாக இருக்கின்றன, நிஜத்தில் இல்லை. ஆகவே, அவைகளால் ஜீவனுக்குரிய சாவாமை மற்றும் மாறாமை என்ற விதிகளை சந்திக்கமுடியவில்லை; அவைகள் ஜீவனாகக் கருதப்பட முடியாது. எனவே, தேவனுடைய ஜீவனுக்குரிய தெய்வீகம், நித்தியம் என்ற சுபாவத்தின்படி, இப்பிரபஞ்சத்தில் தேவனுடைய ஜீவன் மட்டுமே ஒப்பற்ற ஜீவனாக இருக்கிறது.*

## II. ஜீவன் தேவனுடைய வெளிப்பாய்தல்

ஜீவன் என்றால் என்ன என்பதைப் பொறுத்தவரை, தேவனுடைய ஜீவன் மட்டுமே ஜீவன் என்பதை முதலாவது நாம் பார்க்கவேண்டும். பின்பு, ஜீவன் என்பது தேவனுடைய வெளிப்பாய்தல் என்பதை நாம் கட்டாயம் பார்க்கவேண்டும். ஜீவத்தண்ணீருள்ள ஒரு நதி தேவனுடைய சிங்காசனத்தி லிருந்து பாய்ந்தோடுவதையும், அந்த ஜீவத்தண்ணீருள்ள நதியில் ஜீவமரம் இருப்பதையும்பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 22:1-2 பேசுகிறது. ஜீவத்தண்ணீர், ஜீவமரம் இரண்டும் ஜீவனையே அடையாளப் படுத்துகின்றன. ஆகையால், தேவனிடமிருந்து வெளிப்பாய்வதே ஜீவன் என்பது இங்கு நமக்குத் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கிறது. எனவே, ஜீவன் என்பது தேவனுடைய வெளிப்பாய்தல் என்று

* தேவனுடைய ஜீவனே ஒப்பற்ற ஜீவனாக இருப்பதால், மூல கிரேக்க மொழியில் புதிய ஏற்பாடு இந்த ஜீவனைப்பற்றிப் பேசும்போதெல்லாம், அது எப்போதும் மிக உயர்ந்த ஜீவனைக் குறிக்கிற *சோயே* (*zoe*) என்ற சொல்லையே பயன்படுத்துகிறது (யோவான் 1:4; 1 யோவான் 1:2; 5:12, முதலானவை). இதைத் தவிர, (1) மாம்சத்தின் ஜீவனைப்பற்றிப் பேசுவதற்கு *பயோஸ்* (*bios*) (லூக்கா 8:43; 21:4, முதலானவை), மற்றும் (2) மனிதனுடைய ஆத்தும ஜீவனை அல்லது இயற்கையான ஜீவனைப்பற்றிப் பேசுவதற்கு *சூக்கே* (*psuche*) (மத். 16:25-26; லூக்கா 9:24, முதலானவை) ஆகிய சொற்களையும் புதிய ஏற்பாட்டின் மூலப்படிவம் பயன்படுத்துகிறது.

நாம் கூறமுடியும்.

ஜீவன் என்பது தெய்வீகமாகவும் நித்தியமாகவும் இருக்க வேண்டுமென்று ஏற்கெனவே நாம் பார்த்திருக்கிறோம். தேவன் தேவனாக இருப்பதால், இயல்பாகவே அவர் தெய்வீகமாக இருக்கிறார். மேலும் தேவன் நித்தியமானவர் என்று வேதாகமம் கூறுகிறது. எனவே தேவன் தெய்வீகமாகவும் நித்தியமாகவும் இருப்பதால், அவர் ஜீவனாக இருக்கிறார். ஆகையால், தேவன் வெளிப்பாய்வதே ஜீவன்.

தேவனுடைய தெய்வீகமும், நித்தியமுமான சுபாவத் தின்படி, தேவன்தாமே ஜீவனாக இருக்கிறார். ஆனால் தேவன் பாய்ந்தோடவில்லையென்றால், தம்மைப்பொறுத்தவரை அவர் ஜீவனாக இருந்தாலும், நமக்கு அவர் ஜீவனாக இல்லை. அவர் கட்டாயம் பாய்ந்தோடவேண்டும்; அப்பொழுது அவர் நமக்கு ஜீவனாக இருப்பார். அவருடைய வெளிப்பாய்தல் இரண்டு படிகள் மூலமாக கடந்துவருகிறது. முதலாவது, அவருடைய மாம்சமாகுதல். இதனால் அவர் பரலோகத்திலிருந்து மனிதர்கள் மத்தியில் பாய்ந்தோடி, தம்மை ஜீவனாக வெளிப்படுத்தமுடிந்தது (யோவான் *1:1, 14, 4*). ஆகையால், வேதாகமம் இதனை, ஒருபக்கத்தில், அவர் "மாம்சத்திலே வெளிப்பட்டார்" என்றும் (1 தீமோ. *3:16*), மறுபக்கத்தில், "அந்த ஜீவன் வெளிப்பட்டது" (1 யோவான் *1:2*) என்றும் பேசுகிறது. எனவே, அவர் மாம்சத்தில் இருந்தபோது, தம்மை ஜீவன் என்று கூறினார் (யோவான் *14:6*). அவருடைய வெளிப்பாய்தலின் முதல்படியில், அவர் தம்மை ஜீவனாக நமக்கு வெளிப்படுத்த முடிந்தாலும், நம்மால் அவரை ஜீவனாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை; ஆகையால், அவர் வெளிப்பாய்தலின் இரண்டாவது படியை எடுத்தாகவேண்டும். அவருடைய வெளிப்பாய்தலின் இரண்டாவது படி, அவர் சிலுவையில் அறையப்படுவதாகும். அவர் எடுத்துக்கொண்ட மாம்ச உடல் மரணத்தின்மூலம் உடைக்கப்பட்டது. இவ்வாறு அவர் மாம்சத்திலிருந்து வெளிப்பாயவும், நாம் பெற்றுக்கொள்ளக்கூடிய ஜீவிக்கிற ஜீவத்தண்ணீராக மாறவும் முடிந்தது (யோவான் *19:34; 4:10, 14*). பழைய ஏற்பாட்டில் உள்ள பாறை அவரை முன்னடையாளப்படுத்தியது; அது அடிக்கப்பட்டது; இஸ்ரயேல் மக்கள் பெற்றுக்கொள்வதற்காக அதிலிருந்து ஜீவத்தண்ணீர் வந்தது (யாத். *17:6*; 1 கொரி. *10:4*). ஜீவனைத் தனக்குள் கொண்ட ஒரு கோதுமை மணியாக இருக்கும்படி அவர் மாம்சமானார். மாம்சமாகிய ஓட்டிலிருந்து நமக்குள் பாய்ந்தோடி, அவருடைய அநேக கோதுமை மணிகளாகிய நம் ஜீவனாகும்படி அவர் சிலுவையில் அறையப்பட்டார் (யோவான் *12:24*).

இவ்வாறு, தேவனிடமிருந்து நாம் பெறுகிற ஜீவன் தேவனுடைய வெளிப்பாய்தலாக இருக்கிறது. நமக்குள்

பாய்ந்தோடுகிற இந்த ஜீவன் நம் பக்கத்தில் தேவனுடைய உள்பாய்தலாகவும், தேவனுடைய பக்கத்தில் தேவனுடைய வெளிப்பாய்தலாகவும் இருக்கிறது. பின்பு, இந்த ஜீவன் நம்மிடத்திலிருந்து வெளியே பாய்ந்தோடும்போது, இது மீண்டும் தேவனுடைய வெளிப்பாய்தலாகும். தேவனுடைய இந்த வெளிப்பாய்தல் அவருடைய சிங்காசனத்திலிருந்து தொடங்கியது: முதலாவது இது நசரேயனாகிய இயேசுவுக்குள் பாய்ந்தோடியது; பின்பு இது சிலுவையினூடாகச் சென்று, அப்போஸ்தலர்களுக்குள் பாய்ந்தோடியது; அதன்பின்பு, இது அப்போஸ்தலர்களிடமிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகளாகப் பாய்ந்தோடியது (யோவான் *7:38*); இது எல்லா யுகங்களிலும் இருந்த பரிசுத்தவான்களினூடாகப் பாய்ந்தோடியிருக்கிறது; இறுதியாக இது நமக்குள்ளும் பாய்ந்தோடியிருக்கிறது. இது நம்மிடமிருந்து இன்னும் இலட்சக்கணக்கானவர்களுக்கு நித்தியத்திற்கும் பாய்ந்தோடும்; அதாவது, வெளிப்படுத்தின விசேஷம் *22:1-2*, யோவான் *4:14*-ல் பேசப்பட்டுள்ளபடி, இடைவிடாமல், என்றென்றும் பாய்ந்தோடிக் கொண்டேயிருக்கும்.

எசேக்கியேல் *47*-ல் குறிப்பிடப்பட்டுள்ள தண்ணீர் தேவனுடைய வெளிப்பாய்தலுக்கு அடையாளமாக இருக்கிறது. இந்தத் தண்ணீர் பாயும் இடத்திலுள்ள எல்லாவற்றிற்கும் ஜீவன் உண்டாயிருக்கும். அதைப்போல, எங்கெல்லாம் தேவ னுடைய இந்த வெளிப்பாய்தல் செல்லுகிறதோ, அங்கெல்லாம் ஜீவன் இருக்கும்; ஏனென்றால், இந்த வெளிப்பாய்தல் ஜீவனாகவே இருக்கிறது. இந்த வெளிப்பாய்தல் நித்தியத் திற்குப் பாய்ந்தோடும் போது, நித்தியம் ஜீவனின் தன்மையால் நிறைந்து, ஜீவனுடைய நித்தியமாக மாறிவிடும்.

முதன்முதலாக, வேதாகமம் ஜீவனைப்பற்றிப் பேசும்போது, அது பாய்ந்தோடுகிற ஒரு நதியை நமக்குக் காட்டுகிறது (ஆதி. *2:9-14*). ஜீவத்தண்ணீரோ ஜீவமரமோ, ஜீவனோடு தொடர்புடைய எல்லாக் காரியங்களும் நம்மைப் பொறுத்த வரை தேவனுடைய வெளிப் பாய்தலாகவே இருக்கின்றன என்று வெளிப்படுத்தின விசேஷத்தின் முடிவில் நமக்குக் காட்டப்பட்டிருக்கின்றன. நமக்கு ஜீவன் என்பது தேவனுடைய வெளிப்பாய்தல் என்பதை இது தெளிவாகப் பேசுகிறது. தேவன் பரலோகத்திலிருந்து பாய்ந்தோடி, மாம்சத்தின்மூலமாக நமக்கு வெளிப்பட்ட ஜீவனாக நம் மத்தியில் பாய்ந்தோடினார். பின்பு, அவர் மாம்சத்திலிருந்து ஜீவனாக நமக்குள் பாய்ந்தார்; இந்த ஜீவனை நாம் பெற்றுக்கொண்டோம்.

## III. ஜீவன் தேவனுடைய உள்ளடக்கம்

ஜீவன் என்றால் என்ன என்பதைப் பொறுத்தவரை, ஜீவன் என்பது தேவனுடைய உள்ளடக்கம் என்பதே நாம் அறிந்து

கொள்ளவேண்டிய மூன்றாவது குறிப்பு. ஜீவன் தேவனுடைய வெளிப்பாய்தலாக இருப்பதால், இது தேவனுடைய உள்ளடக்க மாக இருக்கிறது; ஏனெனில், தேவனுடைய வெளிப்பாய்தல் தேவனிடமிருந்தே வருகிறது, மேலும் தேவன்தாமே தேவனுடைய உள்ளடக்கமாக இருக்கிறார்.

தேவனுடைய உள்ளடக்கம் தேவனாகவே இருப்பதால், இந்த உள்ளடக்கம் தேவன் என்னவாகவெல்லாம் இருக் கிறாரோ அவைகள் அல்லது தேவத்துவத்தின் பரிபூரணம். தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாம் கிறிஸ்துவில் இருக்கிறது என்று வேதாகமம் சொல்லுகிறது (கொலோ. *2:9*). இது ஏனென்றால், தேவனுடைய ஊனுருவாகிய கிறிஸ்து மனிதனுடைய ஜீவனாக இருக்கும்படி வெளிப்பட்டார். இந்த ஜீவன் தேவத்துவத்தின் பரிபூரணத்தை யெல்லாம், அதாவது தேவன் என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ அவை எல்லாவற்றையும் உள்ளடக்கியிருக்கிறது. தேவன் என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ அவையெல்லாம் இந்த ஜீவனில் இருக்கிறது. தேவன் தேவனாக இருப்பது இந்த ஜீவனில் பிணைந்திருக்கிறது. ஆகையால், இந்த ஜீவன் தேவனுடைய உள்ளடக்கம், அதாவது தேவத்துவத்தின் பரிபூரணமாகும். நாம் இந்த ஜீவனைப் பெறும்போது நாம் தேவனுடைய உள்ளடக் கத்தைப் பெறுகிறோம், மேலும் தேவனில் உள்ள எல்லா வற்றையும் பெறுகிறோம். தேவன் என்னவாக இருக்கிறாரோ அதுவே நம்முள் இருக்கிற இந்த ஜீவன். இன்று இந்த ஜீவனில்தான் தேவன் நம் எல்லாமுமாக மாறுகிறார், மேலும் நம் எல்லாமுமாக இருக்கிறார்; இந்த ஜீவனில்தான் தேவன் நம் தேவனாக மாறுகிறார், மேலும் நம் தேவனாக இருக்கிறார். கிறிஸ்துவில் இந்த ஜீவன், தேவத்துவத்தின் பரிபூரணமாகவும், தேவனுடைய உள்ளடக்க மாகவும் இருப்பதால், நம்மிலும் இது தேவத்துவத்தின் பரிபூரண மாகவும், தேவனுடைய உள்ளடக்கமாகவும் இருக்கிறது.

## IV. ஜீவன் தேவனே

ஜீவன் என்பது தேவனுடைய வெளிப்பாய்தல் என்றும், ஜீவன் என்பது தேவனுடைய உள்ளடக்கம் என்றும் நாம் பார்த்திருக்கி றோம். தேவனுடைய வெளிப்பாய்தல் தேவ னிடம் இருந்தே வருகிறது. மேலும் தேவனுடைய உள்ளடக்கம் தேவனாகவே இருக்கிறது. ஜீவன் தேவனுடைய வெளிப்பாய்தலும், தேவனுடைய உள்ளடக்கமுமாக இருப்பதால், இயல்பாக ஜீவன் தேவனே. இது, ஜீவன் என்றால் என்ன என்பதைப்பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டிய நான்காவது குறிப்பாகும்.

யோவான் *14:6*-ல், கர்த்தராகிய இயேசு, தாம் ஜீவன் என்று கூறுகிறார். இதைக்கூறியபின், *7*-ல்இருந்து *11*-வரையுள்ள வசனங்களில், தாமும் தேவனும் ஒன்று என்றும், அவர் இந்த

வார்த்தையைப் பேசும்போது, அது அவரில் தேவன் பேசுகிறார் என்றும் தம் சீடர்களுக்குத் தெரியப் படுத்தினார். அவர் மாம்சமாக மாறின தேவன்; அவர் மாம்சத்தில் இருந்த தேவன் (யோவான் 1:1, 14; 1 தீமோ. 3:16). தாம் ஜீவன் என்று அவர் கூறும்போது, அது தேவன் ஜீவனாக இருக்கிறார் என்று தேவன் கூறுவதாகும். எனவே ஜீவன் என்பது சாட்சாத்து தேவனே என்று அவருடைய வார்த்தைகள் நமக்குக் காண்பிக்கின்றன.

"தேவனுடைய ஜீவன்" என்ற பதத்தை வேதாகமம் அபூர்வமாகவே பயன்படுத்துகிறது என்ற உண்மைக்கு நாம் கவனம்செலுத்தவேண்டும். தேவன் ஜீவனாக இருக்கிறார் என்பதையே வேதாகமத்தின் போதனை முக்கியமாக நமக்கு வெளிப்படுத்துகிறது; அது பெரும்பாலும் தேவனை ஜீவனாகப் பேசுகிறது; "தேவனுடைய ஜீவன்" என்று அது அபூர்வ மாகவே குறிப்பிடுகிறது. தேவன் நம் ஜீவனாக இருக்கிறார் என்று அது சொல்லுகிறது; மேலும் தேவனை நம் ஜீவனாகவும் பேசுகிறது; நாம் "அவருடைய ஜீவனைப்" பெற தேவன் விரும்புகிறார் என்று அது ஏறக்குறைய சொல்லவேயில்லை. தேவனுடைய ஜீவன் என்பது தேவனே ஜீவன் அல்லது ஜீவனாக தேவன் என்பதிலிருந்து வித்தியாசமானது. தேவனுடைய ஜீவன் என்பது தேவனுடைய முழுமையையும் குறிக்கவேண்டுமென்ற அவசியமில்லை; அப்படியிருக்க தேவனே ஜீவன் அல்லது ஜீவனாக தேவன் என்பது முழுமையான தேவனையே குறிக்கிறது. கண்டிப்பாகப் பேசுவதானால், நாம் ஜீவனைப் பெறும்போது, நாம் தேவனுடைய ஜீவனைப் பெறவில்லை, மாறாக தேவனை ஜீவனாகப் பெறுகிறோம். தேவன் தம் ஜீவனை மட்டும் நமக்குக் கொடுக்கவில்லை; அவரே நம் ஜீவனாக இருக்கும்படி வந்தார். தேவன் தாமே ஜீவனாக இருப்பதால், அவருடைய ஜீவன் சாட்சாத்து அவராகவே இருக்கிறது.

அப்படியானால், ஜீவன் என்றால் என்ன? ஜீவன் தேவனாகவே இருக்கிறது. ஜீவனைக் கொண்டிருப்பதின் அர்த்தம் என்ன? ஜீவனைக் கொண்டிருப்பதென்றால், தேவனையே கொண்டிருப்பதாகும். ஜீவனை வாழ்ந்துகாட்டுவ தென்றால், தேவனையே வாழ்ந்துகாட்டுவதாகும். ஜீவன் என்பது தேவனிலிருந்து சற்றும் வேறுபட்டதல்ல. அது அப்படி யிருந்தால், அது ஜீவனாக இருக்கமுடியாது. இதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும். நாம் ஜீவனைக் கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் அறிந்திருந்தால் போதாது; நாம் கொண்டிருக்கும் இந்த ஜீவன் தேவனே என்பதை நாம் மேலும் அறியவேண்டும். நாம் ஜீவனை வாழ்ந்துகாட்டவேண்டும் என்பதை மட்டும் அறிந்திருந்தால் போதாது; நாம் வாழ்ந்துகாட்டவேண்டிய ஜீவன் தேவனே என்பதையும் நாம் அறியவேண்டும்.

சகோதர சகோதரிகளே, உண்மையில் நாம் வாழ்ந்து காட்ட வேண்டிய ஜீவன் என்ன? நாம் ஜீவனை வாழ்ந்து காட்டும்போது, எதனை வாழ்ந்துகாட்டுகிறோம்? அன்பு, தாழ்மை, சாந்தம், பொறுமை ஆகியவைகளை வாழ்ந்துகாட்டுவது ஜீவனை வாழ்ந்துகாட்டுவதா? இல்லை! ஏனென்றால், அன்போ, தாழ்மையோ, பொறுமையோ ஜீவன் இல்லை; எந்தவித நன்மையோ, நற்பண்போ ஜீவன் இல்லை; தேவன் மட்டுமே ஜீவன். ஆகவே இப்படிப்பட்ட நற்பண்புகளை வாழ்ந்து காட்டுவது ஜீவனை வாழ்ந்துகாட்டுவதல்ல. தேவனை வாழ்ந்துகாட்டுவது மட்டுமே ஜீவனை வாழ்ந்துகாட்டுவதாகும். நாம் வாழ்ந்துகாட்டும் அன்பு, தாழ்மை, சாந்தம், பொறுமை ஆகியவைகள் தேவனுடைய வெளிப் பாய்தலாகவோ, தேவனுடைய வெளிப்படுதலாகவோ இல்லையென்றால், அவைகள் ஜீவன் இல்லை. நாம் வாழ்ந்து காட்டும் எந்த நன்மையோ, நற்பண்போ நம்மூலம் தேவனுடைய வெளிப்படுதலாக இல்லாவிட்டால், அது ஜீவன் இல்லை. நாம் வாழ்ந்துகாட்டும் நற்பண்புகள் தேவனுடைய வெளிப்பாய்தலாக, தேவனுடைய வெளியரங்கமாக, தேவனுடைய வெளிப்படுதலாக இருக்கவேண்டும்; அப்போது, நாம் ஜீவனை வாழ்ந்துகாட்டு கிறோம்; ஏனென்றால், ஜீவன் தேவனாகவே இருக்கிறது.

கொலோசெயர் 2:9-ம், எபேசியர் 3:19-ம் தேவனுடைய பரிபூரணத்தை நமக்குக் காட்டுகின்றன. நாம் பெறுகிற ஜீவன் இந்த பரிபூரணமான தேவனே. ஆகையால், இந்த ஜீவனும் பரிபூரணமானது. இதனில், அன்பு ஒளி மற்றும் தாழ்மை சாந்தம் மற்றும் பொறுமை சகிப்புத்தன்மை மற்றும் பரிவு புரிந்து கொள்ளுதல் ஆகியவைகள் இருக்கின்றன. இந்த ஜீவனில் தேவனிலுள்ள எல்லா நன்மைகளும் நற்பண்புகளும் இருக்கின்றன. ஆகையால் இந்த ஜீவன், இந்த நற்பண்புகளையெல்லாம் நம்மிலிருந்து வாழ்ந்துகாட்டமுடியும். இந்த நற்பண்புகளை வாழ்ந்துகாட்டுவது, தேவனை வாழ்ந்துகாட்டுவதாகும். ஏனெனில், இந்த ஜீவன் தேவனாகவே இருக்கிறது. இந்த ஜீவன் வாழ்ந்துகாட்டப்படும்போது, அன்பு, தாழ்மை, சாந்தம், பொறுமை போன்ற அநேக வெளிப்படுதல்கள் இந்த ஜீவனுக்கு இருந்தாலும், அவையாவும் தேவனுடைய வெளிப்படுதல்களாகும்; ஏனென்றால், அவை யாவும் தேவனிடத்திலிருந்து வாழ்ந்துகாட்டப் படுகின்றன. தேவனிடத்திலிருந்து வாழ்ந்துகாட்டப்படுவது, தேவனுடைய வெளிப்படுதலாகும் அல்லது ஜீவனுடைய வெளிப்படுதலாகும்; ஏனென்றால், தேவன் ஜீவனாக இருக்கிறார், ஜீவன் தேவனாக இருக்கிறது.

## V. ஜீவன் கிறிஸ்துவே

ஜீவன் என்பது தேவனே என்று வேதாகமம் காண்பிக் கிறது.

ஜீவன் கிறிஸ்துவாக இருக்கிறது என்று இன்னும் அதிகமாக அது நமக்குக் காண்பிக்கிறது. ஜீவன் தேவனாக இருந்தது; பின்பு தேவன் மாம்சமானார், அது கிறிஸ்து. ஆகையால் கிறிஸ்து தேவனே; மேலும், கிறிஸ்து ஜீவனும்கூட *(1 யோவான் 5:12)*. தேவனாக இருந்த ஜீவன், அதாவது தேவன் என்னவாக இருக்கிறாரோ அந்த ஜீவன் அவரில் இருக்கிறது (யோவான் *1:4*). எனவே கிறிஸ்து, தாமே ஜீவன் என்றும் (யோவான் *14:6; 11:25*), மனிதன் ஜீவனைக் கொண்டிருக்கும்படி, பூமிக்கு தாம் வந்தார் என்றும் மீண்டும் மீண்டும் கூறினார் (யோவான் *10:10*). ஆகையால், வேதாகமம் அவரை உடையவன் ஜீவனை உடையவன் என்றும் *(1 யோவான் 5:12)*, நம்மில் இருக்கிற அவரே நம் ஜீவன் என்றும் (கொலோ. *3:4*) கூறுகிறது.

ஜீவன் தேவனாக இருப்பதுபோல, ஜீவன் கிறிஸ்துவாகவும் இருக்கிறது. ஜீவனைக் கொண்டிருப்பது தேவனைக் கொண்டிருப்பதுபோல, ஜீவனைக் கொண்டிருப்பது கிறிஸ்துவைக் கொண்டிருப்பதாகும். ஜீவனை வாழ்ந்துகாட்டுவது தேவனை வாழ்ந்துகாட்டுவதுபோல, ஜீவனை வாழ்ந்துகாட்டுவது கிறிஸ்துவை வாழ்ந்துகாட்டுவதாகும். ஜீவன் என்பது தேவனிலிருந்து சற்றும் வேறுபட்டதல்ல என்பதைப்போல, ஜீவன் என்பது கிறிஸ்துவிலிருந்து சற்றும் வேறுபட்டதல்ல. தேவனைவிட்டு சற்று விலகுதல் ஜீவன் இல்லை என்பதைப்போல, கிறிஸ்துவைவிட்டு சற்று விலகுதலும் ஜீவன் இல்லை. ஏனென்றால், கிறிஸ்து ஜீவனாக இருக்கும் தேவனாவார். கிறிஸ்துமூலமாகவும், கிறிஸ்துவாகவும் தேவன் ஜீவனாக வெளிப்படுத்தப்படுகிறார். எனவே, கிறிஸ்து ஜீவனாக இருக்கிறார்; ஜீவன் கிறிஸ்துவாக இருக்கிறது.

## VI. ஜீவன் பரிசுத்த ஆவியானவரே

யோவான் *14:6*-ல் கர்த்தராகிய இயேசு, தாமே ஜீவன் என்று கூறியபின்பு, தாமும் தேவனும் ஒன்று என்று மட்டுமல்ல (வசனம் *7-11*), பரிசுத்த ஆவியானவரும் தாமும் ஒன்று என்றும் (வசனம் *16-20*) தம் சீஷர்களுக்குத் தெரியப்படுத்தினார்.* அவர் தேவனுடைய ஊனுரு, அதாவது அவர் தேவனில் இருக்கிறார், தேவன் அவரில் இருக்கிறார் என்று *7*-ல்இருந்து *11*-வரையுள்ள வசனங்களில் அவர் நமக்குக் காண்பித்தார். எனவே, அவர் ஜீவனாக இருப்பதின் அர்த்தம் தேவன் ஜீவனாக இருப்பதாகும். பரிசுத்த ஆவியானவர் அவருடைய ஊனுரு, அதாவது அவருடைய வேறொரு உருவம் என்று வசனங்கள் *16*-ல்இருந்து *20*வரை அவர் வெளிப்படுத்தினார்; அவருடைய பௌதீக பிரசன்னம் நம்மைவிட்டுப் போகும்போது, இந்த நிஜத்தின் ஆவியானவராகிய அவரே வேறொரு தேற்றரவாளனாக நமக்குள் வந்து, நம்முடன்

தங்குகிறார். நம்மில் வாழ்ந்து, நம்முடன் தங்கியிருக்கிற இந்த ஆவியானவர், நாம் வாழும்படியாக நம் ஜீவனாக நம்மில் வாழ்ந்து கொண்டிருக்கிற அவரே ஆவார்; ஆகையால், தேவன் அவரில் இருப்பதாலும், அவர் பரிசுத்த ஆவியானவராக இருப்பதாலும், அவர் ஜீவனாக இருக்கிறார் என்று இந்த இரண்டு பகுதிகளும் நமக்குக் காண்பிக்கின்றன. தேவன் அவரில் ஜீவனாக இருக்கிறார்; அவர் பரிசுத்த ஆவியானவராக ஜீவனாக இருக்கிறார். அவர் ஜீவனாக இருப்பது, தேவன் ஜீவனாக இருப்பதும், பரிசுத்த ஆவியானவர் ஜீவனாக இருப்பதுமாகும். இவ்வாறு, அவர் தருகிற ஜீவத்தண்ணீர் நித்திய ஜீவன் என்று யோவான் *4:10, 14* நமக்குச் சொல்லுகிறது. நாம் பெற்றுக்கொண்ட பரிசுத்த ஆவியானவரே நம்மிலிருந்து பாய்ந்தோடுகிற ஜீவத்தண்ணீர் என்று யோவான் *7:38-39* மேலும் நமக்குச் சொல்லுகிறது. பரிசுத்த ஆவியானவரே நித்திய ஜீவன் என்று இது வெளிப்படுத்துகிறது. நாம் பெறுகிற பரிசுத்த ஆவியானவரே நாம் அனுபவிக்கிற நித்திய ஜீவன் அல்லது ஜீவனாக நம்மால் அனுபவமாக்கப்படுகிற கிறிஸ்து. நித்திய ஜீவன், அல்லது ஜீவனாக கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவ ராக நம்மால் அனுபவமாக்கப்பட வேண்டும். இதன் காரணமாக பரிசுத்த ஆவியானவர் "ஜீவனின் ஆவியானவர்" என்று அழைக்கப் படுகிறார் (ரோமர் *8:2*).

பரிசுத்த ஆவியானவர் "ஜீவனின் ஆவியானவராக" இருக்கிறார்; ஏனெனில், தேவனும் கிறிஸ்துவும் ஜீவனாக இருப்பது அவரில் பிணைக்கப்பட்டிருக்கிறது. அவரும் ஜீவனும் ஒன்றாக இணைக்கப்பட்டிருக்கிறார்கள், அவர்களைப் பிரிக்கமுடியாது. அவர் ஜீவனுக்குரியவர், ஜீவன் அவருக் குரியது. ஜீவன் அவருடைய உள்ளடக்கம், அவர் ஜீவனின் நிஜம். இன்னும் துல்லியமாகப் பேசுவதென்றால், அவர் ஜீவனின் நிஜம் மட்டுமல்ல, அவர் ஜீவனே ஆவார்.

தேவன் என்பவர் மூவொரு தேவன், அதாவது பிதா, குமாரன், ஆவியானவர் என்று நாம் யாவரும் அறிவோம். பிதா குமாரனில் இருக்கிறார்; குமாரன் ஆவியானவராக இருக்கிறார். குமாரனில் பிதா மனிதர்கள் மத்தியில் வெளிப்படுத்தப்படுகிறார். ஆகையால்

* வசனங்கள் *16* மற்றும் *17*-ல் பரிசுத்த ஆவியானவரை "அவர்" என்று கர்த்தர் குறிப்பிட்டார். ஆனால் வசனம் *18*-ல், "அவர்" என்ற பிரதிப்பெயர்ச்சொல்லை "நான்" என்று மாற்றினார். "அவர்" என்பதை "நான்" என்று மாற்றியதால், "அவரே" "நான்" என்று கர்த்தர் கூறுகிறார். வசனங்கள் *16*-லும் *17*-லும் அவர் பேசின பரிசுத்த ஆவியானவர் கர்த்தரே என்று இது வெளிப்படுத்துகிறது.

குமாரன் பிதாவின் வெளிப்படுதல். குமாரன் ஆவியானவராக மனிதனுக்குள் நுழைகிறார்; ஆகையால் ஆவியானவர் குமாரனுடைய நுழைதல். பிதா ஜீவனின் ஊற்று, அதாவது சாட்சாத்து ஜீவனே. குமாரன் பிதாவின் வெளிப்படுதலாக இருப்பதால் *(1 தீமோ. 3:16)*, அவர் ஜீவனின் வெளிப்படுதலாக இருக்கிறார் *(1 யோவான் 1:2)*. ஆவியானவர் குமாரனின் நுழைதலாக இருப்பதால், அவர் ஜீவனின் நுழைதலாக இருக்கிறார். தொடக்கத்தில் ஜீவன் பிதா; அது குமாரனில் மனிதர் மத்தியில் வெளிப்படுத்தப்படுகிறது; மனிதன் அனுபவிக்கும்படியாக அது ஆவியானவராக மனிதனுக்குள் நுழைகிறது. இவ்வாறு ஆவியானவர் ஜீவனின் ஆவியாக மாறுகிறார். ஆவியானவர் ஜீவனின் ஆவியாக இருப்பதால், மனிதன் ஆவியானவர்மூலம் ஜீவனைப் பெறமுடியும்; மேலும் மனிதன் தன் மனதை ஆவியானவர்மேல் பொருத்தும்போது, அது ஜீவனாகிறது *(ரோமர் 8:6)*. ஆவியானவர் ஜீவனின் ஆவியாக இருப்பதால், மனிதன் ஆவியானவரைத் தொடுவதற்குத் தன் ஆவியை இயக்கும்போது, அவன் ஜீவனைத் தொடுகிறான். அவன் ஆவியானவரைத் தொடர்புகொள்ளும்போது, ஜீவனைத் தொடர்புகொள்ளுகிறான், அவன் ஆவியானவருக்குக் கீழ்ப்படியும்போது, அவன் ஜீவனை அனுபவமாக்குகிறான்.

இவ்வாறு, சுருக்கமாகச் சொன்னால், ஜீவன் மூவொரு தேவன்; ஆனால் நம்மைப் பொறுத்தவரை, ஜீவன் பரலோகத்தில் உள்ள மூவொரு தேவன் இல்லை, மாறாக பாய்ந்தோடுகிற மூவொரு தேவன். அவராகவே இருக்கிற அவருடைய உள்ளடக்கம் முதலாவது கிறிஸ்துவின்மூலமாகப் பாய்ந்தோடியது, பின்பு நாம் ஜீவனாக அவரைப் பெறும்படி ஆவியானவராக அது பாய்ந்தோடியது என்பதே மூவொரு தேவனின் இந்தப் பாய்ந்தோடுதலின் அர்த்தமாகும். இவ்வாறு, ஆவியானவராக கிறிஸ்துவில் தேவனைத் தொடும்போது, நாம் ஜீவனைத் தொடுகிறோம், ஏனென்றால், ஜீவன் என்பது ஆவியானவராக கிறிஸ்துவில் தேவனே ஆகும்.

அத்தியாயம் இரண்டு

# ஜீவனின் அனுபவம் என்றால் என்ன?

இப்போது நாம் இரண்டாவது கேள்வியைக் கேட்போம்: ஜீவனின் அனுபவம் என்றால் என்ன? ஜீவன் என்றால் என்ன என்பதை நாம் பார்த்துவிட்டால், ஜீவனின் அனுபவம் என்றால் என்ன என்பதை எளிதாக அறிந்துகொள்ளலாம்.

## I. தேவனை அனுபவமாக்குதல்

ஜீவன் தேவனே என்று நாம் பார்த்திருக்கிறோம். நாம் பெற்று, அனுபவமாக்கும்படி, நமக்குள் பாய்ந்தோடுகிற தேவனே ஜீவன். ஆகையால், தேவனை அனுபவமாக்குவது ஜீவனை அனுபவமாக்குவதாகும். ஜீவனின் அனுபவங்களெல்லாம் தேவனை அனுபவமாக்குவதும், தொடுவதுமாகும். தேவனைத் தொடாத எந்த அனுபவமும் ஜீவனின் அனுபவம் இல்லை.

எடுத்துக்காட்டாக, சில மனந்திரும்புதல்கள் தேவனுடைய பிரகாசித்தலின்படியானதல்ல, மாறாக மனிதனுடைய தற்பரிசோதனையின்படியானது. அது மனிதன் தேவனைத் தொடும்படிச்செய்யாததால், அது ஜீவனின் அனுபவம் இல்லை. தேவனுடைய பிரகாசித்தலினால் ஏற்படுகிற மனந்திரும்புதல், நிச்சயமாக மனிதன் தேவனைத் தொடும்படிச்செய்யும். ஆகையால் இது ஜீவனின் ஓர் அனுபவமாகும்.

மனிதனுடைய சொந்த நடத்தையிலிருந்து வருகிற எதுவும் ஜீவனின் அனுபவமல்ல. அது செயற்கையானது, மேலும் மனிதனுடைய சொந்த வேலையினாலானது; அது தேவன் மனிதனூடாகக் கடந்துசென்றதாலோ, மனிதன் தேவனூடாகக் கடந்துசென்றதாலோ ஏற்பட்டதல்ல. ஆகையால் அதனை ஜீவனின் ஓர் அனுபவமாகக் கருதமுடியாது.

பின்பு, எதை ஜீவனின் அனுபவமாகக் கருதமுடியும்? தேவன் மனிதனூடாகக் கடந்துசெல்வதினாலும், மனிதன் தேவனூடாகக் கடந்துசெல்வதினாலும் ஏற்படுகிற ஓர் அனுபவமே ஜீவனின் அனுபவமாகக் கருதப்படுகிறது. எடுத்துக்காட்டாக: நம் ஜெபத்தில், நாம் தேவனைச் சந்தித்து, பிரகாசிக்கப்பட்டு, நம் சொந்த தவறைப் பார்த்து, தேவனுக்கு முன்பாக அதோடு இடைபடுகிறோம். நாம் நம் சொந்த தவறுகளைக் கண்டுபிடிப்பதல்ல, மாறாக, நாம் தேவனிடம் நெருங்கும்போது, நாம் உள்ளார்ந்தரீதியாக தேவனால் சந்திக்கப்பட்டு, அதனால் நம் சொந்த தவறைப்பார்க்கிறோம். தேவன் ஒளியாக இருக்கிறார், எனவே நாம் அவரைச் சந்திக்கும்

போது, அவருடைய வெளிச்சத்தில் நம் தவறைப் பார்க்கிறோம். நாம் இயல்பாக தேவனிடம் அறிக்கையிட்டு, கர்த்தருடைய இரத்தத்தின் கழுவுதலைக் கேட்கிறோம். இதன் விளைவாக, தேவன் நம்மூடாகக் கடந்துசெல்கிறார், நாமும் தேவனூடாகக் கடந்துசெல்கிறோம். இப்படிப்பட்ட அனுபவம், நாம் தேவனை அனுபவமாக்குவதை விளைவிக்கிறது, ஆகையால் இது ஜீவனின் அனுபவமாகும்.

ஜீவனின் அனுபவங்களெல்லாம் தேவனிடமிருந்து வருகிறதாகவும், நமக்குள் அவருடைய வேலைசெய்தலாகவும் இருக்கின்றன; ஆகையால் அவை தேவனைத் தொடவும், அவரை அனுபவமாக்கவும் நமக்கு ஏதுவாயிருக்கமுடியும். இப்படியில்லாத அனுபவமெல்லாம் ஜீவனின் அனுபவம் இல்லை. ஏனெனில் ஜீவன் தேவனாக இருக்கிறது, மேலும் ஜீவனை அனுபவமாக்குவது தேவனை அனுபவமாக்குவதாகும். எனவே தேவனுடைய இப்படிப்பட்ட எந்த அனுபவமும் ஜீவனை வெளிக்காட்டும் (பிலி. *2:13-16*).

## II. கிறிஸ்துவை அனுபவமாக்குதல்

ஜீவனை அனுபவமாக்குவது தேவனை அனுபவமாக்குவதாகும், இருப்பினும் நம்மால் அனுபவமாக்கப்படும்படி தேவன் கிறிஸ்துவில் இருக்கிறார். கிறிஸ்து தேவனுடைய வெளிப்படுதலாகவும், ஊனுருவாகவும் இருக்கிறார்; அவர் நம் அனுபவமாக மாறுகிற தேவன். ஆகையால், தேவனுடைய நம் அனுபவமெல்லாம் கிறிஸ்துவின் அனுபவமாகவும், கிறிஸ்துவிலும் இருக்கிறது. இவ்வாறு, ஜீவனை அனுபவமாக்குவது தேவனை அனுபவமாக்குவதாக இருப்பதால், இது கிறிஸ்துவை அனுபவமாக்குவதாகவும் இருக்கிறது.

தேவன் ஜீவனாக இருந்தாலும், அவர் கிறிஸ்துவில் இருந்து, கிறிஸ்துவாக மாறி, நம்மால் அனுபவமாக்கப்பட வில்லை என்றால், அவர் நம் ஜீவனாக இருக்கமுடியாது. நம்மால் அனுபவமாக்கப்படுவதற்கு அவர் நம் ஜீவனாக இருக்கவேண்டும். ஆனால் அவர் பரலோகத்தில், அதாவது எந்த மனிதனும் சேரக்கூடாத ஒளியில் இருக்கையில், அவர் நம் ஜீவனாக இருக்கமுடியாது (*1 தீமோ. 6:16*). மேலும் அவர் நம் ஜீவனாக இருப்பதற்கு அவர் நம் மனித சுபாவத்தைக் கொண்டிருக்க வேண்டும். மனித சுபாவத்தை யுடைய நம்முடன் இணைக்கப் பட்டு, நம் ஜீவனாக இருக்கும்படி அவருடைய தெய்வீக ஜீவன் மனித சுபாவத்துடன் கலந்திணைய வேண்டும். ஆகையால் அவர் பரலோகத்திலிருந்து வந்து, மாம்சமாகி, மனித சுபாவத்தோடு கலந்திணைந்தார். இவ்வாறு, நாம் அவரை அனுபவமாக்குவதற்காக

தேவன் கிறிஸ்துவாகி, மனிதசுபாவத்தில் நம் ஜீவனாகிறார். அவரை நம் ஜீவனாக அனுபவமாக்கும்போது, நாம் கிறிஸ்துவை அனுபவமாக்குகிறோம்.

சுருங்கக்கூறின், நாம் கிறிஸ்துவை அனுபவமாக்கும் போது, பின்வரும் அம்சங்களை நாம் அனுபவமாக்குவோம்:

## A. கிறிஸ்து நம்மில் வெளிப்படுத்தப்படுதல் (கலா. 1:16)

இது, நாம் இரட்சிக்கப்படும்போது கிறிஸ்துவினுடைய நம் ஆரம்ப அனுபவமாகும். தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலமாக கிறிஸ்துவை நம்மில் வெளிப்படுத்துவதை நாம் அனுபவமாக்குகிறோம். இவ்வாறு நாம் அவரை நம் ஜீவனாகவும் நம் எல்லாமாகவும் அறிவதும் பெறுவதும் நமக்குச் சாத்தியமாகிறது.

## B. கிறிஸ்து நம்மில் வாழ்தல் (கலா. 2:20)

இது, நாம் இரட்சிக்கப்பட்டபின்பு நம் ஜீவனாக நம்மில் வாழ்கிற கிறிஸ்துவினுடைய நம் தொடர்ச்சியான அனுபவமாக இருக்கிறது. வேறுவார்த்தைகளில் சொன்னால், கிறிஸ்து நம்மில் நிலைத்திருந்து நமக்காக வாழ்வதை நாம் அனுபவமாக்குகிறோம். பரிசுத்தவான்களாக நம் அனுதின வாழ்க்கையில் கிறிஸ்துவினுடைய இந்தத் தொடர்ச்சியான அனுபவம் கிறிஸ்துவினுடைய நம் அனுபவத்தின் பெரும் பகுதியாக இருக்கிறது.

## C. கிறிஸ்து நம்மில் உருவாகுதல் (கலா. 4:19)

இது, கிறிஸ்து நம்மில் வளர்ந்து உருவாகும்படி கிறிஸ்துவின் எல்லாவற்றையும் நம் உள்ளார்ந்த ஜீவனின் மூலக்கூறாக இருக்க நாம் அனுமதிப்பதாகும். நம் ஜீவனாக அதாவது நமக்காக வாழ்கிற ஒருவராக நாம் அவரை அனுபவமாக்குவதற்கு மட்டுமல்லாமல், இன்னும் அதிகமாக நம் எல்லாமுமாக நாம் அவரை அனுபவமாக்குவதற்காக கிறிஸ்து நம்மில் இருக்கிறார்; இதன்மூலமாக அவருடைய ஜீவன் நம்மில் முதிர்ச்சியடையும்படி, நம் வாழ்க்கையில் அவர் வளர்ந்து உருவாகமுடியும்.

## D. கிறிஸ்து நம் உடலில் பெரிதாக்கிக் காண்பிக்கப்படுதல் (பிலி. 1:20-21)

இது, கிறிஸ்து வெளியார்ந்தரீதியாக வெளிப்படும்படி, கிறிஸ்துவின் எல்லாவற்றையும் நம் வெளியார்ந்த வாழ்க்கையின் வெளிப்படுதலாக மாற நாம் அனுமதிப்பதாகும். வாழ்வானாலும் சாவானாலும் எந்தச் சூழ்நிலையிலும் நம் உடலில் கிறிஸ்து பெரிதாக்கிக் காட்டப்பட அனுமதிக்கிறோம். வேறு வார்த்தைகளில் சொன்னால், நமக்கு வாழ்வதென்றால் கிறிஸ்துவே. இது, நிச்சயமாகவே கிறிஸ்துவினுடைய சற்று ஆழமான அனுபவம்தான்:

இது, அவர் நமக்குள் உருவாகுவதை அனுபவமாக்குவது மட்டுமல்ல, அவர் நம்மிலிருந்து வெளியே பெரிதாக்கிக் காண்பிக்கப்படுவதை அனுபவமாக்குவதுமாகும். கிறிஸ்து நம்மில் உருவாகுவது உள்ளார்ந்த ஜீவனின் முதிர்ச்சியாகும்; இதன்பிறகுதான், அவருடைய எல்லாவற்றையும் நம் உள்ளார்ந்த மூலக்கூறுகளாகக் கொண்டிருக்கிறோம். கிறிஸ்து நம் உடலில் பெரிதாக்கிக் காண்பிக்கப்படுவது வெளியார்ந்த வாழ்க்கையின் வெளிப்படுதலாகும்; இதனால் அவருடைய எல்லாவற்றையும் நம் வெளியார்ந்த வெளிப்படுதலாக இருக்க நாம் அனுமதிக்கிறோம். எனவே, இந்த அனுபவத்தில் கிறிஸ்துவை நம் உள்ளார்ந்த ஜீவனின் மூலக்கூறுகளாக மட்டுமல்ல, நம் வெளியார்ந்த வாழ்க்கையின் வெளிப்படுதலாகவும் அனுபவமாக்குகிறோம்.

## E. கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவினால் நிறைந்திருத்தல் (எபே. 4:11)

இதன் அர்த்தம் சரீரமாகிய நாம் எல்லாரும் கிறிஸ்துவின் மூலக்கூறுகளாலும், கட்டமைப்பாலும் நிறையும்வரை கிறிஸ்துவை அனுபவமாக்குவதாகும்; இவ்வாறு நாம் வளர்ந்து, கிறிஸ்துவின் நிறைவின் வளர்ச்சியால் நிறைந்திருக்கிறோம். இது நிச்சயமாக கிறிஸ்துவினுடைய கூட்டான அனுபவத்தின் முழுமையாகும்.

## F. கிறிஸ்துவின் சாயலாக மறுசாயலாக்கப்படுதல் (2 கொரி. 3:18)

கிறிஸ்துவின் நம் அனுபவம் நாம் அவரைப்போலாகும் வரை நம்மை மறுசாயலாக்கமுடியும். இது, கிறிஸ்து நம்மில் வெளிப் படுத்தப்படும் நம் அனுபவத்தில் ஆரம்பித்து, நம் உடல் மீட்கப் படும்வரை தொடர்ந்து செல்கிறது (ரோமர் 8:23). நாம் எவ்வளவு அதிகமாக அவரை அனுபவமாக்குகிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் மாற்றப்படுகிறோம், அதாவது நம் உடல் அவருடைய மகிமையான உடலின் ரூபத்துக்கு உருமாற்றப் படும்வரை மாற்றப்படுகிறோம் (பிலி. 3:21). அந்த நேரத்தில், நாம் முழுவதுமாக அவருடைய சாயலுக்கு ஒத்தசாயலாக்கப்பட்டு (ரோமர் 8:29), நாம் “அவருக்கு ஒப்பாக” இருப்போம் (1 யோவான் 3:2). அப்பொழுது நாம் அவரை முழுமையான வழியில் அனுபவமாக்குவோம்.

நம்முள் இருக்கிற ஜீவனுக்கும் நம்மிலிருந்து வாழப்படும் பரிசுத்த மான வாழ்க்கைக்கும் உரியதெல்லாம் கிறிஸ்துவின் நம் அனுபவமாக இருக்கவேண்டும். கிறிஸ்து நம் ஜீவனாக இருப்பதால், அவரே நம் பரிசுத்தமாகுதலாகவும் இருக்கிறார் (கொலோ. 3:4; 1 கொரி. 1:31). நம் உள்ளார்ந்த ஜீவனுக்குரிய

எந்த அனுபவமும் கிறிஸ்து நம்முள் வாழ்வதாக இருக்கவேண்டும்; மேலும் நம் வெளியார்ந்த பரிசுத்த மாக்கப்பட்ட வாழ்க்கையும் நம்மூலமாக கிறிஸ்து வாழ்ந்துகாட்டப்படுவதாக இருக்கவேண்டும். ஜீவனின் நம் அனுபவமெல்லாம் கிறிஸ்துவின் அனுபவமாக இருக்கவேண்டும். கிறிஸ்துவுடன் மரித்தல், அவருடன் உயிர்த் தெழுதல், அவருடன் பரமேறுதல் போன்ற இப்படிப்பட்ட ஜீவனின் பெரிய அனுபவங்கள் மட்டுமல்ல, நம் அன்றாட வாழ்வின் எல்லா சிறிய அனுபவங்கள்கூட கிறிஸ்துவின் அனுபவமாக இருக்கவேண்டும். பாவத்திலிருந்து விடுதலை அல்லது உலகத்தை ஜெயங்கொள்வது, பரிசுத்தமாக்குதலையும் ஆவிக்குரியதன்மை யையும் வாழ்ந்துகாட்டுவது அல்லது அன்பையும் தாழ்மையையும் வாழ்ந்து காட்டுவது எல்லாம் கிறிஸ்துவின் அனுபவமாக இருக்கவேண்டும். நாம் மற்றவர்களிடம் காட்டும் சிறிதளவு சகிப்புத்தன்மையும் பொறுமையும்கூட கிறிஸ்துவின் அனுபவமாக இருக்கவேண்டும்.

கிறிஸ்துவை அனுபவமாக்குதல், நமக்குள்ளும் நம்மி லிருந்தும் கிறிஸ்துவை வாழ அனுமதிப்பதாகும். கிறிஸ்துவை அனுபவமாக்குவது கிறிஸ்துவை ஜீவனாக எடுத்துக்கொண்டு, கிறிஸ்துவினால் வாழ்வதாகும். கிறிஸ்துவை அனுபவமாக்கு வதின் அர்த்தம் நம் வாழ்க்கை மற்றும் செயல்கள் எல்லாம் கிறிஸ்துவே நம்மிலிருந்து வாழ்வதும் செயல்படுவதுமாகும். கிறிஸ்துவை அனுபவமாக்குவது, கிறிஸ்துவின் உயிர்த் தெழுந்த வல்லமையை அனுபவமாக்குவதாகும் (பிலி. 3:10); இது அவரை ஜீவனாக அனுபவமாக்குவதாகும்; ஆகையால் இப்படிப்பட்ட அனுபவமும் ஜீவனின் அனுபவம்தான்.

## III. பரிசுத்த ஆவியானவரை அனுபவமாக்குதல்

யோவான் 14-ல் தாம் ஜீவன் (வ. 6) என்று கர்த்தராகிய இயேசு நமக்குச் சொல்லியபிறகு, தாமும் தேவனும் ஒன்று அதாவது அவர் தேவனில் இருக்கிறார், தேவன் அவரில் இருக்கிறார், அவர் ஜீவனாக இருப்பதின் அர்த்தம் தேவன் ஜீவனாக இருக்கிறார் (வ. 7-11) என்றும், பரிசுத்த ஆவியானவரும் தாமும்கூட ஒன்று அதாவது பரிசுத்த ஆவியானவர் நமக்குள் நுழைந்து, நம்மோடு தங்கியிருப்பது நம்முடைய ஜீவனாக இருக்க நம்மில் கிறிஸ்து வாழ்வது (வ. 16-19) என்றும் மட்டுமல்ல, அவர் பரிசுத்த ஆவியானவராக நமக்குள் நுழைந்து நம்மில் வாழ்வதின் அர்த்தம் அவரும் தேவனும் ஆவியானவராக நமக்குள் நுழைந்து நம் ஜீவனாக நம்முடன் தங்கியிருப்பதுமாகும் (வ. 20-23) என்றும் அவர் நமக்குக் காண்பிக்கிறார். எளிமையாகப் பேசுவதானால், தாம் ஜீவன் என்று கர்த்தர் கூறியபிறகு, அவர் மூன்று

காரியங்களை நமக்குக் காண்பிக்கிறார்: *(1)* தேவன் அவரில் ஜீவனாக இருக்கிறார், *(2)* அவர் பரிசுத்த ஆவியானவராக ஜீவனாக இருக்கிறார், *(3)* மூவொரு தேவன் ஜீவனாக நமக்குள் நுழைகிறார். இவ்வாறு நாம் ஜீவனை அனுபவமாக்கும்போது, நாம் தேவனை அனுபவமாக்குவது மட்டுமல்ல, கிறிஸ்துவை அனுபவமாக்குவது மட்டுமல்ல, பரிசுத்த ஆவியான வரையும் அனுபவமாக்குகிறோம். உண்மையில் பரிசுத்த ஆவியானவர், நம்மால் அனுபவமாக்கப் படும் ஜீவனாக தேவனும் கிறிஸ்துவும் அல்லது நம்மால் அனுபவமாக்கப்படும் ஜீவனாக கிறிஸ்துவில் தேவன் ஆவார்.

கிறிஸ்து தேவனுடைய ஊனுருவாக இருப்பதுபோல, பரிசுத்த ஆவியானவரும் கிறிஸ்துவின் ஊனுருவாக இருக்கிறார். தேவன் ஜீவனாக கிறிஸ்துவில் இருக்கிறார், கிறிஸ்து ஜீவனாக பரிசுத்த ஆவியானவராக இருக்கிறார். நாம் தேவனை கிறிஸ்துவில் அனுபவமாக்குகிறோம், கிறிஸ்துவைப் பரிசுத்த ஆவியானவராக அனுபவமாக்குகிறோம். இவ்வாறு ஜீவனை அனுபவமாக்குவது தேவனையும் கிறிஸ்துவையும் அனுபவமாக்குவதுபோல, பரிசுத்த ஆவியானவரையும் அனுபவமாக்குவதாகும்.

தேவன் ஜீவனாக இருக்கிறார், கிறிஸ்து ஜீவனாக வருகிற தேவனாக இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் ஜீவனாக கிறிஸ்து வில் தேவனுடைய ஆவியானவராக அல்லது ஜீவனின் ஆவியான வராக இருக்கிறார் (ரோமர் *8:2*). இந்த ஜீவனின் ஆவியானவரே அதாவது பரிசுத்த ஆவியானவரே ஜீவனாக கிறிஸ்துவில் தேவனு டைய உள்ளடக்கம் எல்லாவற்றையும் நாம் அனுபவமாக்கும்படிச் செய்கிறவர். இந்த ஜீவனின் பரிசுத்த ஆவியானவரே கிறிஸ்துவின் உள்தங்குதலை நாம் அனுபவமாக்கும்படிச் செய்கிறவர். இந்த ஜீவனின் பரிசுத்த ஆவியானவரே கிறிஸ்துவில் தேவனுடைய உயிர்த்தெழுதலின் வல்லமையை நாம் அனுபவ மாக்கும்படிச் செய்கிறவர் (ரோமர் *8:9-11*). இந்த ஜீவனின் பரிசுத்த ஆவியான வரே உடலின் தீய செயல்களையெல்லாம் மரணத்திற்குட்படுத்த நம்மை நடத்துகிறவர். மேலும் இந்த ஜீவனின் பரிசுத்த ஆவியான வரே நம்மில் ஜெபிக்கிறவர் (ரோமர் *8:13, 26*). ஆழமானதோ மேலோட்டமானதோ ஜீவனின் நம் அனுபவங்க ளெல்லாம் பரிசுத்த ஆவியானவரால் உற்பத்திசெய்யப் படுகின்றன; ஆகையால் அவையெல்லாம் இந்த ஜீவனின் பரிசுத்த ஆவியானவருடைய அனுபவங்களாகும்.

பரிசுத்த ஆவியானவரே கிறிஸ்துவின் உள்தங்குதலையும், தேவனுடைய உயிர்த்தெழுதலின் வல்லமையையும் நம்மை அனுபவமாக்கச் செய்பவர் மட்டுமல்ல, நம்மில் தங்கியிருக்கிற பரிசுத்த ஆவியானவர்தான், ஜீவன் கிறிஸ்துவே என்பதை நாம் அனுபவ மாக்கும்படிச் செய்கிறவர், மேலும் நம்மில் தங்கியிருக்கிற

தேவனே நாம் ஜீவனை அனுபவமாக்கும்படிச் செய்கிறவர் என்று ரோமர் 8:9-11 காண்பிக்கிறது. இவ்வாறு, தேவனுடைய ஜீவன் கிறிஸ்துவில் பரிசுத்த ஆவியானவர்மூலம் நம்மால் அனுபவமாக்கப் படுகிறது. எனவே இந்த ஜீவனை அனுபவமாக்க நாம் பரிசுத்த ஆவியானவரை அனுபவமாக்கவேண்டும்; மேலும் இந்த ஜீவனை நாம் அனுபவமாக்கும்போது, நாம் பரிசுத்த ஆவியானவரை அனுபவமாக்குகிறோம்.

ஆகையால், ஜீவனின் அனுபவம் என்பது மூவொரு தேவனின் அனுபவம் அல்லது நம் ஜீவனாக தேவனை கிறிஸ்துவிலும், கிறிஸ்துவை பரிசுத்த ஆவியானவராகவும் அனுபவமாக்குவதாகும். நம்மில் வேலைசெய்கிற பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவை அனுபவமாக்குவதற்கும், கிறிஸ்துவில் தேவனை அனுபவமாக்கு வதற்கும் நம்மை நடத்துகிறார்; இதுவே ஜீவனின் அனுபவமாகும். பரிசுத்த ஆவியானவரில், நாம் தேவனூடாகவும் கிறிஸ்துவி னூடாகவும் கடந்துசென்று, தேவனும் கிறிஸ்துவும் நம்மூடாகக் கடந்து செல்ல அனுமதிக்கும்போது, இது ஜீவனின் அனுபவமாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின், கிறிஸ்துவின், தேவனின், இப்படிப்பட்ட அனுபவம் மட்டுமே ஜீவனின் அனுபவமாகும். மற்றபடி எதுவும் ஜீவனின் அனுபவமாகக் கருதப்படமுடியாது. நீங்கள் இதை வைராக்கியம், மத வாழ்க்கை, சுய-முன்னேற்றம் என்று சொல்லக்கூடும். ஆனால் இது ஜீவனின் அனுபவம் என்று நீங்கள் சொல்லமுடியாது. ஜீவனை அனுபவமாக்குவது என்றால், தேவனை அனுபவ மாக்குவதும், கிறிஸ்துவை அனுபவமாக்கு வதும், பரிசுத்த ஆவியானவரை அனுபவமாக்குவதுமாகும். இது நாம் சொந்தமாக செய்யும் ஏதோவொன்றோ, முன்னேற்றத்திற்கான முயற்சியோ இல்லை; மாறாக, இது தேவன் நம்மில் அசைவது, கிறிஸ்து நம்மூலமாக வாழ்ந்துகாட்டப்படுவது, பரிசுத்த ஆவியானவர் நம்மை அபிஷேகிப்பது ஆகியவைகளின் விளைவாகும். நாம் இதை ஆசையாய்ப் பின்தொடர்வோமாக.

### அத்தியாயம் மூன்று

## ஜீவனின் முதல் அனுபவம்—மறுபிறப்பு

ஜீவன் என்றால் என்ன என்றும், ஜீவனின் அனுபவம் என்றால் என்ன என்றும் நாம் பார்த்திருக்கிறோம். இப்போது நாம் மறுபிறப்பு என்ற ஜீவனின் முதல் அனுபவத்தைப் பார்ப்போம். மறுபிறப்பு தேவனுடைய ஜீவனுக்குரிய நம் அனுபவத்தின் முதல்படியாகும். ஆகையால் இது தேவனுடைய ஜீவனுக்குரிய நம் முதல் அனுபவமாகும். இந்த அனுபவம் மிகவும் அடிப்படையானதும், அதி முக்கிய மானதுமாகும். இதைப் பார்க்க நாம் பல்வேறு குறிப்புகளைப் பயன்படுத்துவோம். முதலில் நாம் இதைப் பார்ப்போம்.

### I. மறுபிறப்பு ஏன் அவசியம்?

நாம் ஏன் மறுபடிபிறப்பிக்கப்பட வேண்டும்? இதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, தாழ்வான அம்சத்திலிருந்து பேசுவதானால், நம் ஜீவன் கெடுக்கப்பட்டு, தீமையாக மாறினதாலும் (எரே. 17:9; ரோமர் 7:18), தீமையிலிருந்து அது நன்மையாக மாற்றப்படமுடியாததாலும் (எரே. 13:23), மறுபிறப்பு அவசியமாகிறது. மறுபிறப்பிற்கு நாம் வழக்கமாகச் சொல்லும் காரணம் இதுதான். நம் ஜீவன் (1) கெடுக்கப்பட்டதும், பொல்லாததும், (2) முன்னேற்றப்பட முடியாததுமாக இருப்பதால், நாம் மறுபடிபிறக்கவேண்டும். கடந்த காலத்திலும் நிகழ்காலத்திலும் சாதுக்களெல்லாரும் மனிதனை முன்னேற்றுவதற் காக சுய-முன்னேற்றக் கொள்கையை வலியுறுத்தினார்கள். நம் மனித ஜீவன் ஏற்கெனவே கெடுக்கப்பட்டு முன்னேற்றுவதால் நல்லதாக்கப்பட முடியாத தாகிவிட்டதால், தேவனுடைய இரட்சிப்பு மனிதனை சரிசெய்வதோ முன்னேற்றுவதோ இல்லை, மாறாக மனிதனை மறுபடிபிறப்பிப்பதாகும். இதுவே நாம் மறுபடிபிறப் பிக்கப்பட வேண்டியதற்கான முதல் காரணமாகும்.

இரண்டாவது, உயர்வான அம்சத்திலிருந்து பேசுவ தானால், நாம் மறுபடிபிறப்பிக்கப்படுவதற்கான மற்றொரு காரணமும் இருக்கிறது. ஆனால் முதலாவது நாம் கேட்போம்: நம் ஜீவன் கெடுக்கப்பட்டு, தீமையாக மாறாமல் இருந்திருந்தாலும், மறுபடிபிறப்பிக்கப்பட வேண்டியது தேவையா? ஆம்; நாம் மறுபடிபிறப்பிக்கப்படவேண்டியது இன்னும் தேவைதான்; ஏனென்றால், நம் மனித ஜீவன் படைக்கப்பட்ட ஜீவன் மட்டுமே, தேவனுடைய படைக்கப்படாத ஜீவன் அல்ல. நாம்

படைக்கப்பட்டபோது, படைக்கப்பட்ட ஜீவனை மட்டுமே பெற்றோம்; தேவனுடைய படைக்கப்படாத ஜீவனை நாம் பெறவில்லை. நாம் தேவனுடைய படைக்கப்படாத ஜீவனைப் பெற்று, அவரைப்போலவே அவர் இருக்கிற வண்ணமாக இருக்க அவருடைய சாயலாக மறுசாயலாக்கப்படுவதே மனிதர்களாகிய நம்மைப்பற்றிய தேவனுடைய குறிக்கோளாகும். ஆகையால், நம் மனித ஜீவன் கெடுக்கப்படாமல் இருந்திருந்தாலும், நாம் மறுபடிபிறப்பிக்கப்படுவது இன்னும் அவசியம்தான்.

தொடக்கத்தில், ஆதாமுடைய ஜீவன் கெடுக்கப்படாமல் இருந்தாலும், அது படைக்கப்பட்ட ஜீவனாக இருந்தது, படைக்கப்படாத ஜீவன் இல்லை; அது மனித ஜீவன்; தேவனுடைய ஜீவன் இல்லை. ஆகையால் மனிதன் வீழ்ந்துபோகாமல் அல்லது அவனுடைய ஜீவன் கெடுக்கப்படாமல், எந்தத் தீமையுமில்லாமல், அவன் நல்லவனாகவே இருந்திருந்தாலும்கூட, அவனுக்கு மறுபிறப்பு இன்னும் தேவைதான். மனிதனைப் படைத்ததில் தேவனுடைய குறிக்கோள் ஒரு நல்ல மனிதனைப் பெறுவது மட்டுமல்ல, ஆனால் இன்னும் அதிகமாக, தேவனுடைய ஜீவனையும் சுபாவத்தையும் உடைய தேவனைப்போலவே இருக்கிற ஒரு ***தேவ**-மனிதனைப்* பெறுவதேயாகும். ஒரு நல்ல மனிதனாக மட்டும் மனிதன் இருக்கவேண்டும் என்று தேவன் விரும்பியிருந்து, மனிதன் வீழ்ந்துபோகாமலும், கெடுக்கப் படாமலும் இருந்திருந்தால், அவன் மறுபடிபிறப்பிக்கப்பட வேண்டிய தேவை இருந்திருக்காது. ஆனால் மனிதன் ஒரு நல்ல மனிதனாக இருக்க வேண்டும் என்பது மட்டுமல்ல, அதற்கும் மேலாக, அவரைப்போலவே இருக்கும் ஒரு **தேவ**-மனிதனே தேவ னுடைய விருப்பமாகும். ஆகையால் ஒரு நல்ல மனிதன்கூட மறுபடிபிறப்பிக்கப்படவேண்டும்.

இந்த இரண்டாவது காரணத்தை இலகுவாக எடுத்துக்கொள்ளா தீர்கள். இது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த காரியமாகும். ஆ! மறுபிறப்பின் குறிக்கோள், நாம் தேவனுடைய ஜீவனைப் பெற்று தேவனைப்போல் இருப்பதே! நாம் கெடுக்கப்பட்டும், தீமையாகவும், முன்னேற்றப்பட முடியாதவர்களாகவும் இருக்கிறோம் என்று சொல்வது தேவையில்லாதது; ஒருவேளை நாம் முற்றிலும் நல்லவர்களாக அல்லது பூரணராகும்படி முன்னேற்றப்படக்கூடியவர்களாக இருந்திருந்தாலும், தேவனுடைய ஜீவனைப் பெறுவதற்கு நாம் மறுபடிபிறப்பிக்கப்பட வேண்டிய தேவை இன்னும் இருந்திருக்கும்.

மனிதன் தேவனைப்போலவும், அவருடைய ஜீவனையும் சுபாவத்தையும் பெற்ற **தேவ**-மனிதனாகவும் இருக்கவேண்டும் என்ற குறிக்கோளுடன் தேவன் மனிதனைப் படைத்தார். ஆனால்

அவர் மனிதனைப் படைத்தபோது, தம் ஜீவனை மனிதனுக்குள் வைக்கவில்லை. அவருடைய ஜீவனைப் பெற்றுக்கொள்வதைத் தெரிந்தெடுக்க மனிதன் தன் சொந்த சித்தத்தைப் பயிற்சிசெய்ய வேண்டும் என்று அவர் விரும்பி னார். ஆகையால், படைக்கப் பட்ட மனிதர்களாகிய நாம் வீழ்ந்துபோகாமல் இருந்திருந்தாலும், இயற்கையான மனித ஜீவனோடு கூடுதலாக தேவனுடைய ஜீவனை நாம் இன்னும் பெறவேண்டியிருந்திருக்கும். நாம் மறுபடிபிறப்பிக்கப்பட வேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.

ஆகையால், மறுபிறப்பிற்கான காரணங்களுக்கு இரண்டு அம்சங்கள் இருக்கின்றன: நம் ஜீவன் கெடுக்கப்பட்டது, தீமையானது, மாற்றப்பட முடியாதது என்பது தாழ்வான அம்சம்; ஆகையால், நமக்கு இன்னொரு ஜீவன் தேவை; இதனால் நாம் வாழமுடியும். மனிதன் தேவனைப்போல் இருக்கவேண்டும் என்ற தேவனுடைய நோக்கமே உயர்வான அம்சம்; ஆகையால், நம் சொந்த ஜீவனோடுகூட, தேவனுடைய ஜீவனையும் நாம் பெறவேண்டும். நாம் பூரணமாகவும் பாவமில்லாமலும் இருந்திருந்தாலும், மறுபடி பிறப்பிக்கப்படவேண்டியது இன்னும் தேவை என்பதைப் பார்க்க மக்களுக்கு உதவும்படி இதுமுதல் நாம் மறுபிறப்பைப்பற்றிப் பேசும்போது, இந்த உயர்வான அம்சத்தையும் சுட்டிக் காட்டும்படியாக நாம் அனைவரும் இதைப் பார்ப்போமாக.

## II. மறுபிறப்பு என்றால் என்ன?

வேதவாக்கியங்களின்படி, மறுபடிபிறப்பிக்கப்படுதல் என்றால் ஆவியானவரால் பிறப்பதாகும் (யோவான் *3:3-6*). முதலில் நம் ஆவி மரித்த நிலைமையில் இருந்தது; ஆனால் நாம் விசுவாசித்த போது நம் ஆவியைத் தொட தேவனுடைய ஆவியானவர் வந்தார், இவ்வாறு நம் ஆவி தேவனுடைய ஜீவனைப்பெற்று உயிர்ப்பிக்கப் பட்டது. இந்த வழியில்தான், நம் இயற்கையான முதல் பிறப்பிற்கு அப்பாற்பட்ட ஒரு பிறப்பை தேவனுடைய ஆவியானவர் நமக்குக் கொடுத்தார். சுருங்கக்கூறின், மறுபடிபிறப்பிக்கப்படுவது என்றால் மீண்டும் பிறப்பது, அதாவது தேவனால் பிறப்பது (யோவான் *1:13*), அல்லது நம் இயற்கையான ஜீவனோடுகூட தேவனுடைய ஜீவனைப் பெறுவதாகும்.

மறுபடிபிறப்பிக்கப்படுவதின் அர்த்தம் மீண்டும் பிறப்பதாகும். "மறுபடிபிறப்பது" என்ற பதத்தை நாம் ஏன் பயன்படுத்துகிறோம்? நாம் முதலில் நம் பெற்றோர்களால் பிறந்தோம்; ஆனால் இப்போது நாம் மீண்டும் பிறக்கிறோம் அதாவது இந்தமுறை தேவனால் பிறக்கிறோம்; எனவே இந்த அனுபவம் மறுபடிபிறத்தல் என்று அழைக்கப்படுகிறது. பெற்றோர்களால் பிறப்பது நம்மை மனித

ஜீவனைப் பெறச்செய்தது, இப்படியிருக்க, தேவனால் பிறப்பது நம்மை தேவனுடைய ஜீவனைப் பெறச்செய்கிறது. ஆகையால், மறுபடி பிறப்பிக்கப்பட்ட நாம் மனித ஜீவனோடு கூடுதலாக தேவனுடைய ஜீவனையும் கொண்டிருக்கிறோம்.

ஆகையால், மறுபடிபிறப்பிக்கப்படுவது என்றால், தேவனால் பிறப்பது அல்லது நம் இயற்கையான மனித ஜீவனோடுகூட தேவனுடைய ஜீவனைப் பெற்றுக்கொள்வது என்பதை நாம் தெளிவாகப் பார்க்கவேண்டும். நம் இயற்கையான ஜீவனுக்கு அப்பாற்பட்டு, தேவன் தம் ஜீவனை நமக்குள் வைக்கிறார். இதுவே மறுபிறப்பாகும்.

## III. நாம் எவ்வாறு மறுபிறப்பு அடைவது?

ஒரு மனிதன் எவ்வாறு மறுபடிபிறப்பிக்கப்படமுடியும்? சுருங்கக் கூறின், தேவனுடைய ஆவியானவர் மனித ஆவிக்குள் நுழைந்து, தேவனுடைய ஜீவனை அதற்குள் வைக்கிறார்; இவ்வாறு மனிதன் மறுபடிபிறப்பிக்கப்படுகிறான்.

தேவனுடைய ஆவியானவர் எவ்வாறு மனித ஆவிக்குள் நுழைகிறார்? மனிதன் சுவிசேஷத்தைக் கேட்கும்போதோ, வேத வார்த்தையை வாசிக்கும்போதோ, தேவனுடைய ஆவியானவர் அவனில் வேலைசெய்து, அவன் பாவம்செய்திருக்கிறான் என்றும், அவன் கெடுக்கப்பட்டிருக்கிறான் என்றும் அவனை உணரச் செய்கிறார்; எனவே அவன் பாவத்தைக் குறித்தும், நீதியைக் குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும் கண்டித்து உணர்த்தப் படுகிறான் (யோவான் 16:8). ஒரு மனிதன் தன்னைப் பாவி என்று பார்த்து, தன் சீரழிவை உணர்ந்தறிந்து, மனந்திரும்ப சித்தமாயிருக்கும்போது, தேவனுடைய ஆவியானவர், கர்த்தராகிய இயேசு தன் இரட்சகர் என்றும், தன் பாவ மன்னிப்பிற்காக சிலுவையில் மரித்தார் என்றும் அவனைப் பார்க்கச்செய்கிறார். அந்தக் கணத்தில், அவன் தானாகவே கர்த்தரில் விசுவாசித்து, அவரைத் தன் இரட்சகராக பெற்றுக்கொள்ளுகிறான். அவன் கர்த்தரைத் தன் இரட்சகராகப் பெறும்போது, தேவனுடைய ஆவியானவர் அவன் ஆவிக்குள் நுழைந்து, தேவனுடைய ஜீவனை அதில் வைத்து, அவனை மறுபடிபிறப்பிக்கிறார்.

எனவே, தேவனுடைய ஆவியானவரின் கோணத்திலிருந்து பேசினால், தேவனுடைய ஜீவனை நம் ஆவியில் வைக்க தேவனுடைய ஆவியானவர் அதற்குள் நுழைகிறார், இது நம்மை மறுபடிபிறப்பிக்கிறது. நம் கோணத்திலிருந்து நாம் மனந்திரும்பி, விசுவாசித்து, கர்த்தராகிய இயேசுவை நம் இரட்சகராக ஏற்றுக்கொள்வதினால், நாம் மறுபடிபிறப்பிக்கப்படுகிறோம். இதன் அர்த்தம் நம் இயற்கையான ஜீவனோடு கூடுதலாக தேவனுடைய

ஜீவனை நாம் பெற்றுக்கொள்கிறோம் என்பதாகும்.

## IV. மறுபிறப்பின் விளைவுகள்

மறுபிறப்பின் விளைவுகளை அல்லது நிறைவேறுதல்களை மூன்று காரியங்களாக சுருக்கமாக வகைப்படுத்தலாம்:

1) மறுபிறப்பு மனிதர்களைத் தேவனுடைய பிள்ளைகளாக்கு கிறது. தேவனால் பிறப்பதே மறுபிறப்பின் அர்த்தம் என்பதால், இது தானாகவே மனிதர்களைத் தேவனுடைய பிள்ளைகளாகும்படியும் (யோவான் 1:12-13), தேவனுடன் ஜீவ உறவைக் கொண்டிருக்கும் படியும் செய்கிறது. மறுபிறப்பின்மூலமாகத் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் இந்த ஜீவன் மனிதர்களைத் தேவனுடைய பிள்ளைகளாகும்படிச் செய்கிறது; இந்த ஜீவன், மனிதர்கள் தேவனுடைய பிள்ளைகளாகும்படியான அதிகாரமாகவும் இருக்கிறது. தேவனுடைய ஜீவனையும் சுபாவத்தையும் கொண்டிருந்து தேவனைப்போலவே இருக்கக்கூடிய இப்படிப்பட்ட தேவனுடைய பிள்ளைகள், தேவன் மனிதனைப் படைத்ததின் குறிக்கோளை நிறைவேற்றமுடியும்.

2) மறுபிறப்பு மனிதர்களைப் புதிய படைப்பாக மாற்றுகிறது. புதிய படைப்பு என்பது தன்னுள் தேவனுடைய மூலக்கூறுகளைக் கொண்டிருக்கிற ஒன்றாகும். ஏதோவொன்று தன்னுள் தேவனுடைய மூலக்கூறுகளைக் கொண்டிருக்கும்போது, அது ஒரு புதிய படைப் பாகும். பழையபடைப்பில் தேவனுடைய எந்த மூலக்கூறும் இல்லை. மனிதர்களாகிய நம்மிடத்தில் இயற்கையாகவே தேவனு டைய எந்த மூலக்கூறுகளும் இல்லை; ஆகையால் நாம் பழைய படைப்பாக இருக்கிறோம். தேவனுடைய மூலக்கூறு நமக்குள் சேர்க்கப்படாதவரை நாம் புதிய படைப்பாக மாறுவதில்லை. இதையே மறுபிறப்பு நம்மில் நிறைவேற்றியிருக்கிறது. மறுபிறப்பு தேவனுடைய ஜீவனையும், சாட்சாத்து அவருடைய மூலக்கூறையும் நாம் கொண்டிருக்கச்செய்து, இதன்மூலம் நம்மைப் புதிய படைப்பாக்குகிறது (2 கொரி. 5:17). இந்தப் புதிய படைப்பு, தேவன் மனிதனோடு கலந்திணைவதின் இறுதிவடிவமாகும்; இதுவே இப்பிரபஞ்சத்தில் மிகவும் அதிசயமான காரியமாகும்: இது மனுஷிக மூலக்கூறுகளையும் தெய்வீக மூலக்கூறுகளையும் கொண்டுள்ளது, இது மனிதனாகவும் தேவனாகவும் இருக்கிறது, இது மனிதனைப்போலவும் தேவனைப்போலவும் இருக்கிறது.

3) மறுபிறப்பு மனிதர்களைத் தேவனோடு ஒன்றாக இருக்கும்படி இணைக்கிறது. இது மனிதனை, தேவனுடைய ஜீவனையும், அவருடைய மூலக்கூறுகளையும் பெறச் செய்வதுடன் தேவனுடன் ஒன்றாக இணைக்கவும் செய்கிறது. மறுபிறப்பினால் ஆவியானவராகிய தேவன் மனித ஆவிக்குள் நுழைந்து, மனிதன்

அவரோடு ஒரே ஆவியாக இணைந் திருக்கும்படிச் செய்கிறார் *(1 கொரி. 6:17)*. இது தேவனுடன் மனிதன் மிக ஆழமான உறவைக்கொண்டிருக்கும்படி, அதாவது தேவனுடன் ஒன்றாயிருக்கும்படி தேவன் செய்வதாகும்.

முடிவாக, கர்த்தராகிய இயேசுவில் நாம் விசுவாசிப்பதால் பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய ஜீவனை நம் ஆவிக்குள் வைத்து, நம்மைத் தேவனால் பிறக்கச்செய்து, தேவனுடைய பிள்ளைகளாக்கி, புதிய படைப்பில் தேவனோடு ஒன்றா யிருக்கும்படி இணைக்கும்போது, இதுவே மறுபிறப்பாகும்.

### அத்தியாயம் நான்கு

## மறுபிறப்பின்மூலம் ஆதாயப்படுத்தப்படுபவைகள்

நாம் ஜீவனில் வளர விரும்பினால், மறுபிறப்பைப்பற்றிய எல்லா வற்றையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும், மேலும் மறுபிறப்பின்மூலம் நாம் எதனை ஆதாயப்படுத்தியிருக்கிறோம் என்று அறியவேண்டும். மறுபிறப்பு ஜீவனில் ஒரு தொடக்கத்தை நமக்குத் தருகிறது, மேலும் மறுபிறப்பின்மூலம் நாம் ஆதாயப்படுத்திக்கொண்டவை நமக்கு ஜீவனில் வளர்ச்சியைத் தருகிறது. எனவே நாம் ஜீவனில் வளர விரும்பினால் மறுபிறப்பைப்பற்றிய அறிவு நமக்குக் கொஞ்சமாவது இருக்கவேண்டும், மேலும் மறுபிறப்பின்மூலம் ஆதாயப்படுத்தப் படுபவைகளை நாம் அறியவேண்டும்.

மறுபிறப்பின்மூலம் ஆதாயப்படுத்தப்படுபவைகள் மறு பிறப்பின் விளைவுகளோடு மிக நெருங்கிய தொடர்புடைய வைகளாகும். மறுபிறப்பின் விளைவுகள், மறுபிறப்பின்மூலம் ஆதாயப்படுத்தப்படுவதிலிருந்து வருகின்றன, அதாவது முன்சொல்லப்பட்டது பின்சொல்லப்பட்டதால் நிறைவேறுகிறது. மறுபிறப்பு நம்மில் நிறைவேற்றுகிறவைகளே மறுபிறப்பின் விளைவுகளாக இருக்கின்றன. அதே நேரத்தில் மறுபிறப்பின்மூலம் ஆதாயப்படுத்தப்படுபவைகள், மறுபிறப்பின்மூலம் நாம் பெறுகிற காரியங்களாக இருக்கின்றன. ஏனெனில், மறுபிறப்பு சில காரியங்களை நாம் ஆதாயப்படுத்தும்படிச் செய்திருப்பதால், இது நம்மில் சில நிறைவேறுதல்களைக் கொண்டிருக்கமுடியும். மறுபிறப்பு நம்மைத் தேவனுடைய பிள்ளைகளாக்கமுடியும்; ஏனென்றால், மறுபிறப்பு தேவனுடைய ஜீவனை நாம் ஆதாயப்படுத்தும்படிச்செய்கிறது. மறுபிறப்பு நம்மைப் புதிய படைப்பாக்கமுடியும்; ஏனென்றால், அது தேவனுடைய மூலக்கூறுகளை நாம் ஆதாயப் படுத்தும்படிச்செய்கிறது. மறுபிறப்பு நம்மைத் தேவனோடு இணைக்கமுடியும்; ஏனென்றால், மறுபிறப்பு தேவனுடைய ஆவியானவரை நாம் ஆதாயப்படுத்தும் படிச் செய்கிறது. நம்மில் மறுபிறப்பின் எல்லா நிறைவேறுதல் களும் மறுபிறப்பின்மூலம் நாம் பெற்றுக்கொண்ட காரியங்களால் சாதிக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட காரியங்கள் நம் மறுபிறப்பின் போது, நம் ஆவிக்குரிய வாழ்வில் பல்வேறு அனுபவங்களை நாம் கொண்டிருக்கச்செய்வதுடன், மறுபிறப்பிற்குப்பின்பு அவைகள் நம்மை ஜீவனில் வளரவும்செய்கின்றன. எனவே நாம் ஜீவனில் வளர விரும்பினால், மறுபிறப்பின்மூலம் நாம்

ஆதாயப்படுத்தியிருக்கிற காரியங்களை நாம் அறியவேண்டும்.

வேதாகமத்தின் போதனையின்படி, மறுபிறப்பு குறைந்தது ஏழு காரியங்களை நாம் பெறும்படிச்செய்கிறது. இந்த ஏழு காரியங்களும் தெய்வீகமாகவோ பெரியதாகவோ, மற்றும் மிகமுக்கியமாகவோ நமக்கு நெருக்கமாகவோ இருக்கின்றன. நாம் இந்த ஏழு காரியங்களையும் ஒவ்வொன்றாகச் சுருக்கமாகப் பார்ப்போம்.

## I. தேவனுடைய ஜீவன்

மறுபிறப்பின்மூலமாக நாம் ஆதாயப்படுத்துகிற முதலாவது காரியம் தேவனுடைய ஜீவன். தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய ஜீவனை நம் ஆவிக்குள் வைக்கிறபோது மறுபிறப்பு நிகழ்கிறது என்று நாம் முந்தைய அத்தியாத்தில் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். மறுபிறப்பில், தேவனுடைய ஆவியானவர் செய்கிற முதன்மையான காரியம் நமக்குள் தேவனுடைய ஜீவனை வைப்பதாகும். ஆகையால், மறுபிறப்பு நமக்குத் தருகிற முதன்மையான காரியம் தேவனுடைய ஜீவனாகும்.

ஆனால் தேவனுடைய ஜீவன் என்றால் என்ன? அது தேவனுடைய உள்ளடக்கமும் தேவனுமேயாகும். தேவனில் இருப்பவைகள் எல்லாமும் தேவன் என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ அவைகளும் தேவனுடைய ஜீவனில் இருக் கின்றன. தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் தேவனுடைய ஜீவனில் மறைந்திருக்கின்றன. தேவனுடைய சுபாவமும் தேவனுடைய ஜீவனில் அடங்கியிருக்கிறது. தேவன் என்னவாக இருக்கிறாரோ அதன் ஒவ்வொரு அம்சமும் தேவனுடைய ஜீவனில் உள்ளடங்கியிருக்கிறது.

எந்தவகையான உயிரினமானாலும், அது என்னவாக வெல்லாம் இருக்கிறதோ அவையெல்லாம் அந்த ஜீவனில் இருக்கிறது. அதன் எல்லாத் திறமைகளும் செயல்பாடுகளும் அதன் ஜீவனிலிருந்தே விளைகின்றன, மேலும் அதன் வெளியார்ந்த எல்லா நடவடிக்கைகளும் வெளிப்படுதல்களும் அதன் ஜீவனிலிருந்தே தோன்றுகின்றன. அது அந்தவகையான உயிரினமாயிருக்கிறது, ஏனெனில் அது அந்த வகையான ஜீவனைக் கொண்டிருக்கிறது. அதின் உயிருரு அதன் ஜீவனில் இருக்கிறது. இது ஒரு தெளிவான கோட்பாடாக இருக்கிறது.

தேவனே உச்ச உயர்வான ஜீவிக்கிற நபர், நிச்சயமாக (இன்னும் அதிகமாக) அவர் என்னவாகவெல்லாம் இருக் கிறாரோ அவையெல்லாம் அவருடைய ஜீவனில் இருக்கிறது. அவர் என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ, அதாவது சத்தியம், பரிசுத்தம், ஒளி, அன்பு எதுவாகயிருந்தாலும், அவையெல்லாம் அவருடைய

ஜீவனிலிருந்தே வருகின்றன. அவருடைய வெளிப்படுதல்களெல்லாம் அதாவது நன்மை, நீதி, தயவு, மன்னிப்பு எதுவாகயிருந்தாலும், அவையெல்லாம் அவருடைய ஜீவனிலிருந்தே வருகின்றன. அவருடைய ஜீவன் உள்ளார்ந்த ரீதியாக இப்படிப்பட்ட தெய்வீகத் திறமைகளையும், செயல்பாடுகளையும், வெளியார்ந்தரீதியாக இப்படிப்பட்ட தெய்வீக நடவடிக்கைகளையும், வெளிப்படுதல்களையும், அவர் கொண்டிருக்கச் செய்கிறது. அவர் இப்படிப்பட்ட தேவனாக இருப்பதற்கான காரணம் அவர் இப்படிப்பட்ட ஜீவனைக் கொண்டிருப்பதேயாகும். எனவே, அவர் தேவனாக இருப்பது அவருடைய ஜீவனில் இருக்கிறது.

தேவனுடைய ஜீவன் தேவனுடைய உள்ளடக்கமாக இருப்பதால், தேவனுடைய பரிபூரணம் அதில் மறைந்திருக்கிறது, மேலும் அதில் தேவனுடைய சுபாவமும் அடங்கியிருக்கிறது; ஆகையால், நாம் தேவனுடைய ஜீவனைப் பெறுகிறபோது, தேவனுடைய பரிபூரணத்தைப் பெறுகிறோம் (கொலோ. 2:9-10), மேலும் தேவனுடைய சுபாவத்தை நாம் கொண்டிருக்கிறோம் (2 பேதுரு 1:3-4). தேவன் தம்மில் எவைகளையெல்லாம் கொண்டிருக்கிறாரோ அவைகளும், தேவன் தாம் என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ அவைகளும் தேவனுடைய ஜீவனில் இருப்பதால், இந்த ஜீவனை நாம் பெறும்போது, தேவன் தம்மில் எவைகளை யெல்லாம் கொண்டிருக்கிறாரோ அவைகளையும், தேவன் தாம் என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ அவைகளையும் நாம் பெறுகிறோம். தேவனுடைய ஜீவன் இப்படிப்பட்ட தெய்வீகத் திறமைகளையும், செயல்பாடுகளையும் தேவன் கொண்டிருக்கச் செய்வதால், தேவனுடைய ஜீவன் தேவனில் உள்ளதைப்போல அதேவகையான திறமைகளையும், செயல்பாடுகளையும் நாமும் கொண்டிருக்கச் செய்யமுடியும். தேவன் என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ அவைகளும், தேவன் என்னவெல்லாம் செய்கிறாரோ அவைகளும் அவருடைய ஜீவனிலிருந்து வருவதால், தேவன் என்னவாக இருக்கிறாரோ அதுவாக நாம் இருப்பதற்கும், தேவன் என்ன செய்கிறாரோ அதை நாம் செய்வதற்கும் நம்மிலுள்ள இந்த ஜீவன் நமக்குத் திறனளிக்கமுடியும்; நாம் தேவனைப்போல இருக்கவும், தேவனை வாழ்ந்துகாட்டவும் இது நமக்குத் திறனளிக்க முடியும் என்பதே இதன் பொருளாகும்.

சகோதர சகோதரிகளே, தேவனுடைய ஜீவன் நம்மில் இருப்பதால், தேவனில் உள்ள எல்லாத் திறமைகளும் செயல்பாடுகளும் நம்மில் இருக்கின்றன என்று நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா? நாம் தேவனுடைய ஜீவனை நம்மில் கொண்டிருப்பதால், தேவன் என்னவாக இருக்கிறாரோ

அதுவாக நாம் இருக்கமுடியும் என்றும், தேவன் எதைச் செய்கிறாரோ அதை நாம் செய்யமுடியும் என்றும் நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக்கிறீர்களா? தேவனில் பரிசுத்தத்தின் திறமையும், ஒளியின் செயல்பாடும் இருக்கின்றன. தேவனுடைய ஜீவன் நம்மில் இருப்பதால், தேவனில் இருப்பதைப்போலவே அதே பரிசுத்தத்தின் திறமையும், ஒளியின் செயல்பாடும் நம்மில் இருக்கின்றன. தேவன் தம் பரிசுத்தத்தை வாழ்ந்துகாட்டி, தம்மிலிருந்து தம் ஒளியைப் பிரகாசிப்பதுபோல, நாமும்கூட நம்மிலுள்ள தேவனுடைய ஜீவனால் அவருடைய பரிசுத்தத்தை வாழ்ந்துகாட்டி, நம்மிலிருந்து அவருடைய ஒளியைப் பிரகாசிக்கமுடியும்; தேவன் பரிசுத்தமாயிருப்பதுபோல நாமும் பரிசுத்தமாயிருக்கமுடியும், தேவன் பிரகாசிப்பதுபோல நாமும் பிரகாசிக்க முடியும் என்பதே இதன் அர்த்தமாகும். தேவன் என்னவாக இருக்கிறாரோ அது அன்பு, தேவன் என்ன செய்கிறாரோ அது நீதி. நாம் தேவனுடைய ஜீவனை நம்மில் கொண்டிருப்பதால், தேவன் என்னவாக இருக்கிறாரோ அதுவாக நாம் இருக்க முடியும், தேவன் என்ன செய்கிறாரோ அதை நாம் செய்ய முடியும். தேவன் அன்பாக இருந்து, நீதியைச் செய்வதுபோலவே, தேவனுடைய ஜீவன் நம்மில் இருப்பதால், நாமும்கூட தேவனைப்போல அன்பாக இருக்கமுடியும், தேவனைப்போல நீதியைச் செய்யமுடியும். தேவன் அன்புகூருவதுபோல நாமும் அன்புகூரமுடியும், தேவன் நீதியுள்ளவராக இருப்பதுபோல நாமும் நீதியுள்ளவர்களாக இருக்கமுடியும். இவ்வாறு நாம் தேவனைப்போல இருக்க முடியும் தேவனை வாழ்ந்துகாட்டமுடியும்.

தேவனுடைய ஜீவன் கர்த்தராகிய இயேசுவை உயிர்ப்பித்த மாபெரும் வல்லமையாக இருக்கிறது என்பதை மேலும் நாம் அறியவேண்டும். கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்தபோது, அவர் மரணத்தை உதறித்தள்ளி, மரணத்தை மேற்கொண்டார். மரணம் மிக வலிமையானது (உ. பா. 8:6). இந்த முழுப் பிரபஞ்சத்திலும் தேவனையும், தேவனுடைய ஜீவனையும் தவிர, மரணத்தைவிட வலிமையானது வேறெதுவும் இல்லை. கர்த்தராகிய இயேசு மரணத்திற்குள் நுழைந்தபோது, அவரைப் பிடித்துவைக்க மரணம் தன் எல்லா வல்லமையையும் பயன்படுத்தியது, ஆனால் கர்த்தர் மரணத்தின் பிடித்துவைக்கும் வல்லமையை உடைத் தெறிந்து, எழும்பினார்! இவ்வாறு கர்த்தர் மரணத்தால் பிடித்துவைக்கப் படாதவராக எழமுடியும் (அப். 2:24), ஏனென்றால், தேவனுடைய வல்லமையுள்ள ஜீவன் அவரில் இருக்கிறது. தேவனுடைய மாபெரும் வல்லமையுள்ள ஜீவன் மரணத்தின் பிடித்து வைக்கும் வலிமையான வல்லமையை உடைத்தெறிய அவருக்குத் திறனளித்தது. மறுபிறப்பு நமக்குத் தருகிற தேவனுடைய ஜீவன்

மாபெரும் வல்லமையுள்ள தேவனுடைய இந்த ஜீவனேயாகும்! மாபெரும் வல்லமையுள்ள தேவனுடைய இந்த ஜீவன் இன்று நம்மில் உயிர்த்தெழுதலின் மாபெரும் வல்லமையாக இருக்கிறது; தேவன் மேற்கொண்டதுபோல, நாமும் மரணத்தை உதறித்தள்ளி, மரணத்திற்குரியவைகளை எல்லாம் மேற்கொள்வதற்கு இது நமக்குத் திறனளிக்கிறது.

தேவனுக்கு இரண்டு வகையான மாபெரும் வல்லமைகள் உண்டு என்று வேதாகமம் நமக்குக் காட்டுகிறது: ஒன்று படைப்பின் மாபெரும் வல்லமை, மற்றொன்று உயிர்த் தெழுதலின் மாபெரும் வல்லமை. தேவனுடைய படைப்பின் மாபெரும் வல்லமை இல்லாதவைகளை இருக்கிறவைகளாக அழைக்கிறது. உயிர்த்தெழுதலின் மாபெரும் வல்லமை மரித்தவர்களுக்கு ஜீவன் தருகிறது. இதனையே ஆபிரகாம் விசுவாசித்தான் (ரோமர் 4:17). தேவனுடைய கரத்தில் இருக்கும் தேவனுடைய படைப்பின் மாபெரும் வல்லமை மனிதனுக்காக எல்லாக் காரியங்களையும் படைக்க வல்லது. தேவனுடைய ஜீவனில் இருப்பதும், தேவனுடைய ஜீவனாக இருப்பதுமான தேவனுடைய உயிர்த்தெழுதலின் மாபெரும் வல்லமை, தேவனுக்கு வெளியேயுள்ள மரித்துப்போன காரியங்கள் எல்லாவற்றிலிருந்தும் மனிதன் விடுவிக்கப்பட்டு, தேவனையே வாழ்ந்துகாட்ட அவனுக்குத் திறனளிக்கிறது. ஆ, மறுபிறப்பின்மூலமாக நாம் பெறுகிற தேவனுடைய ஜீவன் தேவனுடைய இந்த மாபெரும் உயிர்த்தெழுதலின் வல்லமை! மறுபிறப்பின்மூலம் தேவன் நமக்குள் தம் ஜீவனை வார்த்திருக்கிறார், அதாவது நமக்குள் தம் மாபெரும் உயிர்த்தெழுதலின் வல்லமையை வார்த்திருக்கிறார் என்று அர்த்தமாகும். ஆ, நாம் மறுபடிபிறப்பிக்கப்படுகிறபோது நாம் பெறுகிற தேவனுடைய இந்த ஜீவன் தேவனுடைய உயிர்த்தெழுதலின் மாபெரும் வல்லமை என்பதை நாம் பார்ப்போமாக! இன்று நம்மில் உள்ள இந்த ஜீவன் தேவன் எவ்வளவு பலமுள்ளவராக இருக்கிறாரோ, அவ்வளவு பலமுள்ளவர்களாக நம்மை ஆக்கமுடியும். தேவன் மரணத்தை மேற்கொள்ள வல்லவராயிருப்பதுபோல, நம்முள் இருக்கிற மாபெரும் வல்லமையுள்ள இந்த ஜீவனால் நாமும் மரணத்தை மேற்கொள்ள வல்லவர்களாக இருக்கிறோம். மறுபிறப்பின் மூலமாக நாம் பெற்றுக்கொண்ட இந்த தேவனுடைய ஜீவன் என்னே ஜீவன்! இந்த ஜீவன் எந்த அளவிற்கு நம்மை தேவனைப்போல ஆக்கமுடியும்! இந்த ஜீவனுக்காக நாம் எவ்வளவாய் தேவனுக்கு ஆராதனைசெய்து, நன்றிகூற வேண்டும்!

## II. ஜீவவிதி

மறுபிறப்பு தேவனுடைய ஜீவனை நமக்குத் தருவதால், அது ஜீவவிதியையும் நமக்குத் தருகிறது. தேவனுடைய ஜீவன் நமக்குள் நுழைந்ததால், இந்த ஜீவனில் அடங்கியுள்ள ஜீவவிதியும்கூட நமக்குள் கொண்டுவரப்பட்டது.

ஒவ்வொரு வகையான ஜீவனுக்கும் அதன் சொந்த உள்ளியல்பான ஆற்றல் இருக்கிறது. அது அதன் இயல்பான செயல்பாடாகும். மேலும், ஒவ்வொரு வகையான ஜீவனின் இயல்பான செயல்பாடும் அதன் இயல்பான விதி அல்லது அதன் ஜீவவிதியாகும். ஒரு குறிப்பிட்ட ஜீவன் ஒரு குறிப்பிட்ட உயிரினத்திற்குள் நுழையும்போது, அந்த ஜீவன் தன் இயல்பான விதி அல்லது தன் ஜீவவிதியை அந்த உயிரினம் கொண்டிருக்கும்படிச் செய்கிறது. அதுபோல, தேவனுடைய ஜீவனுக்கு அதன் தெய்வீக ஆற்றல் இருக்கிறது, அதுவே அதன் தெய்வீக இயல்பான செயல்பாடுகளாகும். மேலும், தேவனுடைய ஜீவனின் இயல்பான செயல்பாடுகள் அதன் இயல்பான விதி அல்லது ஜீவவிதியாகும். தேவனுடைய ஜீவன் நமக்குள் நுழையும்போது, அதனுள் அடங்கியுள்ள இயல்பான விதியை நமக்குள் கொண்டு வருகிறது; மேலும், இந்த விதி நமக்குள் ஜீவவிதியாக மாறுகிறது. இவ்வாறு, தேவனுடைய ஜீவன் நமக்குள் நுழையும்போது, அதனுள் அடங்கியுள்ள ஜீவவிதியும் நமக்குள் நுழைகிறது. தேவனுடைய ஜீவன் என்பது நாம் மறுபிறப்பின்மூலம் ஆதாயப்படுத்திக்கொண்ட ஒன்றாக இருப்பதால், அது தன்னுடன் கொண்டுவரும் ஜீவவிதியும்கூட நாம் மறுபிறப்பின்மூலமாக ஆதாயப்படுத்திக் கொண்டதாகும்.

தேவனுடைய ஜீவனில் தேவனுடைய சுபாவம் அடங்கி யிருக்கிறது, மேலும் தேவனுடைய ஜீவனில் தேவனுடைய பரிபூரணம் மறைந்திருக்கிறது என்று அத்தியாயம் ஒன்றில் நாம் பார்த்திருக்கிறோம். ஆகையால், தேவனுடைய ஜீவனில் அடங்கியுள்ள விதி தேவனோடும், தேவன் என்னவாக இருக்கிறா ரோ அதோடும், தேவனுடைய சுபாவத் தோடும் ஒத்திருக்கிறது; எனவே இந்த விதி சாட்சாத்து தேவனின் விதியாகும். தேவனுடைய ஜீவன் அதன் விதியை நமக்குள் கொண்டு வருகிற போது, அது நமக்குள் தேவனின் விதியைக் கொண்டுவருகிறது என்றும் அதற்கு அர்த்தமாகும்.

தேவனுடைய ஜீவன் நமக்குள் கொண்டுவருகிற ஜீவவிதி எபிரேயர் *8:10*-ல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளாகும், இவை தேவன் நம் மனங்களுக்குள் வைத்து, நம் இருதயங்களில் எழுதியவைகளாகும். இந்த விதிகள் பழையஏற்பாட்டு விதிகளிலிருந்து வித்தியாசமானவை. பழையஏற்பாட்டு விதிகள் மனிதனுக்கு வெளியே கற்பலகைகளின்மீது தேவன்

எழுத்துக்களால் எழுதியிருந்த தேவனுடைய விதிகளாகும் (யாத். *34:1, 28*). ஜீவவிதிகள் நமக்குள் நம் இருதய-பலகையின்மீது தேவன் தம் ஜீவனால் எழுதியிருக்கிற தேவ னுடைய விதிகளாகும். கற்பலகைகளின்மீது எழுதப்பட்டிருந்த விதிகள் வெளியார்ந்த விதிகள், எழுத்துக்களாலான விதிகள், மரித்துப்போன விதிகள், வல்லமையற்ற விதிகள்; அவைகள் மனிதனில் எதையும் நிறைவேற்ற இயலாத விதிகளாகும் (ரோமர் *8:3*; எபி. *7:18-19*). நம் இருதயமாகிய பலகையின் மீது எழுதப்பட்டிருக்கிற விதிகள் உள்ளார்ந்த விதிகள், ஜீவவிதிகள், ஜீவிக்கிற விதிகள், மாபெரும் வல்லமையை யுடைய விதிகள்; அவைகள் தேவனுடைய இருதய விருப்பத்தை அறிந்து அவருடைய சித்தத்தைப் பின்பற்றுவதோடு மட்டுமல்லாமல், தேவனையே அறிந்து, தேவனையே வாழ்ந்துகாட்டவும் நமக்குத் திறனளிக்கின்றன.

எந்தவொரு ஜீவனிலும் அடங்கியுள்ள இயல்பான விதிகள், எவ்வாறு வாழவேண்டும், எவ்வாறு செயல்பட வேண்டும் என்று அந்த உயிரினம் எப்போதும் தானாகவே அறிந்துகொள்ளும்படிச் செய்கின்றன; இவ்வாறு, அவைகள் அந்த உயிரினத்திற்குள் ஜீவிக்கிற விதிகளாக மாறுகின்றன. ஒரு கோழியின் உதாரணத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அது எவ்வாறு வாழவேண்டும், எவ்வாறு முட்டையிடவேண்டும் என்பவை அந்தக் கோழியின் ஜீவனில் அடங்கியுள்ள இயல்பான விதிகளாகும்; அந்த விதிகள் இந்தக் காரியங்களை எப்படிச் செய்யவேண்டும், அவைகளை எவ்வாறு வாழ வேண்டும் என்று தானாகவே அந்தக் கோழி அறியும்படிச் செய்கின்றன. மனிதன் வெளியே இருந்து எந்த விதியையும் அந்தக் கோழிக்குக் கொடுக்கவேண்டிய தேவையில்லை. அந்தக் கோழியில் இருக்கும் ஜீவனில் அடங்கியுள்ள இயல்பான விதிகள் அந்தக் கோழிக்குள் இருக்கும் ஜீவிக்கிற விதிகளாகும். அந்தக் கோழி இந்த முறையில் வாழவேண்டும் என்பதை அந்த விதிகள் தானாகவே அறிந்துகொள்ளச்செய்து, இந்தமுறையில் வாழ அந்தக் கோழிக்குத் திறனளிக்கின்றன.

அதைப்போல, நம்மிலுள்ள தேவனுடைய ஜீவனில் அடங்கியுள்ள இயல்பான விதிகள் அதன் இயல்பான ஆற்றல்களாகும்; நாம் எவ்வாறு செயல்பட்டு நடக்க தேவன் விரும்புவார், எவ்வாறு அவருக்குப் பிரியமாயிருப்பது, எவ்வாறு நாம் அவரை வாழ்ந்துகாட்டுவது என்று தானாகவே அறிய அவைகள் நமக்குத் திறனளிக்கின்றன. ஒரு காரியம் தேவனுடைய சுபாவத்துக்கு ஒத்திருக்கிறதா, தேவனுடைய சுபாவத்துக்கு முரண்பட்டிருக்கிறதா என்றும், அது நாம் செய்யும்படி தேவன் விரும்புகிற காரியமா, நாம் செய்யக்கூடாது என்று தேவன் விரும்புகிற காரியமா என்றும், தேவனுடைய ஜீவனிலுள்ள

இயல்பான ஆற்றல்கள் அல்லது இயல்பான விதிகள் நம்மை அறிந்துகொள்ளச்செய்கின்றன, அதாவது இதைக்குறித்த உணர்வை நமக்குக் கொடுக்கின்றன. இவ்வாறு தேவனுடைய ஜீவனின் இயல்பான ஆற்றல்கள் அல்லது இயல்பான விதிகள் நம் உள்ளார்ந்த விதிகளாக மாறுகின்றன.

நம்மில் எழுதப்பட்டிருக்கிற இந்த விதிகள் தேவனுடைய ஜீவனின் இயல்பான ஆற்றல்களாகவும், தேவனுடைய இயல்பான விதிகளாகவும் இருப்பதால், வேதாகமம் அவைகளைப் "பிரமாணம்" என்று அழைக்கிறது. ரோமர் 8-ல் குறிப்பிடப்பட்டுள்ள "ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்" நம்மிலுள்ள இந்த ஜீவவிதியாகும். இந்த விதி தேவனுடைய ஜீவனிலிருந்து வருவதாலும், தேவனுடைய ஜீவன் தேவ னுடைய ஆவியானவரில் இருப்பதாலும், தேவனுடைய ஆவியானவரிலிருந்து பிரிக்கப்படமுடியாததாலும், ரோமர் 8 இந்த விதியை "ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்" என்று அழைக்கிறது. தேவனுடைய ஜீவன் தேவனுடைய ஆவியான வரில் இருக்கிறது, மேலும் தேவனுடைய ஆவியானவரோடு இணைக்கப்பட்டிருக்கிறது; தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய ஜீவனை அடக்கியிருக்கிறார்; இது தேவனுடைய ஜீவனின் ஆவியானவரே. இந்த விதி தேவனுடைய ஜீவனிலிருந்து வருவதால், இது தேவனுடைய ஜீவனின் ஆவியானவரி லிருந்து வருவதாகும். இது தேவனுடைய ஜீவவிதியாக இருப்பதால், இது தேவனுடைய ஜீவனின் ஆவியானவருடைய விதியாகவும் இருக்கிறது.

தேவனுடைய ஜீவன் வல்லமையுள்ளது; தேவனுடைய ஆவியானவரும் வல்லமையுள்ளவர். தேவனுடைய வல்லமை யுள்ள ஜீவனிலிருந்தும், தேவனுடைய வல்லமையுள்ள ஆவியானவரிலிருந்தும் வருகின்ற ஜீவனுடைய ஆவியின் விதியும் வல்லமையுள்ளது. நம்மிலுள்ள தேவனுடைய ஜீவன் இந்த விதியின் ஊற்று என்றும், நம்மிலுள்ள தேவனுடைய ஆவியானவர் இந்த விதியை செயல்படுத்துபவர் என்றும் நாம் சொல்லலாம். நம்மிலுள்ள இந்த விதி விசேஷமாக பலமானதும் வலிமையானதுமாகும்; இது தெய்வீக அறிவைக் கொண்டிருக்க நமக்குத் திறனளிப்பது மட்டுமல்ல, இது தெய்வீக வல்லமையைக் கொண்டிருக்கவும் நமக்குத் திறனளிக்கிறது. நாம் மறுபடிபிறப்பிக்கப்பட்டு தேவனுடைய ஜீவனைப் பெற்றவுடன் நாம் தேவனுடைய மக்களாக இருக்கவேண்டுமென்றும், இந்த பலமும் வலிமையுமான விதியின்படி, அதாவது இந்த மாபெரும் வல்லமையின் விதியின்படி அவரில் வாழவேண்டுமென்றும் தேவன் விரும்புகிறார். நாம் இரட்சிக்கப்பட்டபின்பு, இந்த ஜீவவிதி, அதாவது இந்த ஜீவிக்கும் விதியாகிய நம்மிலுள்ள இந்த

விதிக்கேற்றபடி நாம் அவருடைய ஜீவனில் வாழவேண்டு மென்றும், அவருடைய ஜீவனை வாழ்ந்துகாட்ட வேண்டு மென்றும் தேவன் விரும்புகிறார்.

## III. ஒரு புதிய இருதயம்

தேவன் நம்மை சுத்திகரிக்கிறபோது, இரட்சிக்கிறபோது அல்லது மறுபடிபிறப்பிக்கிறபோது, அவர் நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தருகிறார் என்று எசேக்கியேல் *36:26* நமக்குச் சொல்லுகிறது. வேதாகமத்தின் போதனையின்படி, மறுபிறப்பு நமக்கு ஒரு புதிய இருதயத்தையும் தருகிறது.

புதிய இருதயம் என்றால் என்ன? புதிய இருதயம் என்றால் பழைய இருதயம் புதிதாகியுள்ளது என்று அர்த்தம்; இந்தப் புதிய இருதயம் நம் பழைய இருதயம் புதுப்பிக்கப்படுவதி லிருந்து வருகிறது. தேவன் நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தருவ தென்றால், தேவன் நம் பழைய இருதயத்தைப் புதிதாக்குகிறார் என்று அர்த்தமாகும். தேவன் நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தருகிறார் என்று எசேக்கியேல் *36:26* கூறிய பின்பு, அவர் நம் கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு நமக்கு ஒரு சதையான இருதயத்தைத் தருகிறார் என்று அது கூறுகிறது. இந்த வசனத்திலிருந்து, நம் பழைய இருதயத்தைப் புதிதாக்குவதால் தேவன் நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தருகிறார் என்பது தெளிவாகிறது.

ஆரம்பத்தில் நம் இருதயம் தேவனை எதிர்த்தது, தேவனை விரும்பவில்லை, மேலும் தேவனைப்பொறுத்தவரை கல்லைப் போல கடினமாயிருந்தது; இவ்வாறு அது ஒரு “கல்லான இருதயமாக” மாறியது. பரிசுத்த ஆவியானவர் நம்மை மறுபடிபிறப்பிக்கும்போது, அவர் நம் இருதயத்தை பாவத்தி லிருந்து திரும்பச்செய்து தேவனைப்பொறுத்தவரை மிருது வாக்குகிறார். எனவே மறுபிறப்புக்குப்பின்பு, நம் கல்லான இருதயம் “சதையான இருதயமாக” மாறுகிறது. இந்தக் கடினமான கல்லான இருதயம் நாம் கொண்டிருந்த பழைய இருதயமாகும்; இந்த மிருதுவான சதையான இருதயம் தேவன் நமக்குத் தருகிற புதிய இருதயமாகும். நாம் மறுபடிபிறப்பிக்கப்படும்போது, தேவன் நம் பழைய இருதயத்தைப் புதிதாக்கி அதனை மிருதுவாக்குகிறார் என்பதே இதன் அர்த்தமாகும்.

நம் இருதயம் காரியங்களைக்குறித்த நம் பற்று மற்றும் பாசத்தின் உறுப்பாக இருக்கிறது. இது காரியங்களோடு உள்ள தொடர்பில் நம் பற்று, பாசம், களிப்பு, விருப்பம் ஆகியவற்றில் நம்மை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. நம் பற்று, பாசம், களிப்பு, விருப்பம் ஆகியவையெல்லாம் நம் இருதயத்தின்

செயல்பாடுகளாக இருக்கின்றன. நாம் மறுபடி பிறப்பிக்கப் படுவதற்குமுன்பு, நம் இருதயம் பாவத்தைப்பற்றியிருந்தது, உலகத்தை நேசித்தது, இச்சையான காரியங்களை விரும்பியது; இருப்பினும் தேவனைப் பொறுத்தவரை, அது பற்றும் பாசமும் இல்லாமல் குளிர்ந்ததாகவும் கடினமானதாகவும் இருந்தது; தேவனுடைய காரியங்களையும் ஆவிக்குரிய காரியங்களையும் பொறுத்தவரை அதற்கு எந்தக் களிப்புமில்லை எந்த விருப்பமுமில்லை. எனவே தேவன் நம்மை மறுபடிபிறப்பிக்கிற போது அவர் நம் இருதயத்தைப் புதுப்பிக்கிறார், மேலும் ஒரு புதிய பற்று, புதிய பாசம், புதிய களிப்பு, புதிய விருப்பம் ஆகியவைகளுடன் ஒரு புதிய இருதயமாக நம் இருதயத்தை அவர் ஆக்குகிறார். இவ்வாறு நாம் மறுபடிபிறப்பிக்கப்பட்டு இரட்சிக்கப்பட்டபோது நம் இருதயம் தேவனைநோக்கிச் சாய்கிறது, தேவனை நேசிக்கிறது, தேவனை விரும்புகிறது; தேவனுடைய காரியங்களையும் ஆவிக்குரிய காரியங் களையும் பரலோக காரியங்களையும் பொறுத்தவரை அது களிப்பையும் விருப்பத்தையும் கொண்டுள்ளது. இப்படிப்பட்ட காரியங்கள் குறிப்பிடப்படும்போதெல்லாம் நம் இருதயம் மகிழ்ச்சியுள்ள தாகவும், உணர்வுள்ளதாகவும், விருப்பமுள்ளதாகவும் இருக்கிறது.

சகோதர சகோதரிகளே, நீங்கள் இதைப் பார்த்திருக்கிறீர்களா? நம் மறுபிறப்பின்போது, நம் இருதயத்தை அவர் புதிதாக்கி நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தருவதின் காரணம், நாம் அவர் பக்கமாய் சாய்ந்து, அவரைப் போற்றி, அவரை விரும்பி, அவரை நேசிக்க வேண்டுமென்று தேவன் விரும்புவதேயாகும். முன்பு நாம் அவரை நேசிக்கவில்லை, நம்மால் அவரை நேசிக்க முடியவுமில்லை, ஏனெனில் நம் இருதயம் பழமையாகவும் கடினமாகவும் இருந்தது. இப்போது, அவர் நம் இருதயத்தைப் புதிதாக்கியும், மிருதுவாக்கியும், திருப்பியும் இருக்கிறார்; இவ்வாறு, நாம் அவரை நேசிக்கத் திறனுள்ளவர்களாகவும் சித்தமுள்ளவர்க ளாகவும் இருக்கிறோம். நம் இருதயம் புதிதாக்கப்படுவதின்மூலமாக ஒரு புதிய இருதயமாக மாறியிருப்பதால், இப்போது அதற்கு ஒரு புதிய செயல்பாடு இருக்கிறது. அது தேவன் பக்கமாய் சாய்ந்து, தேவனையும் தேவனுடைய காரியங்களையும் நேசிக்க முடியும் என்பதே இந்தப் புதிய செயல்பாடாகும்.

மறுபிறப்பு நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தருவதால், ஒரு புதிய பற்றையும் அன்பையும் மற்றும் ஒரு புதிய விருப்பத்தையும் ஏக்கத்தையும் நாம் கொண்டிருக்கச்செய்கிறது. இந்தப் புதிய பற்று, அன்பு, விருப்பம், ஏக்கம் ஆகியவை யெல்லாம் தேவனையும் தேவனுடைய காரியங்களையும் நோக்கியே உள்ளன. இதுவே புதிய இருதயத்தின் செயல்பாடு; இது நமக்கு ஒரு புதிய

இருதயத்தைக் கொடுப்பதில் தேவனுடைய குறிக்கோளாகவும் இருக்கிறது.

## IV. ஒரு புதிய ஆவி

தேவன் நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தருகிறார் என்று எசேக்கியேல் *36:26* கூறியபின்பு, தேவன் நம்மில் ஒரு புதிய ஆவியையும் வைக்கிறார் என்று அது கூறுகிறது. ஆகவே, மறுபிறப்பு நாம் ஒரு புதிய இருதயத்தை மட்டும் கொண்டிருக்கச் செய்வதில்லை; நாம் ஒரு புதிய ஆவியையும் கொண்டிருக்கச் செய்கிறது.

புதிய ஆவி என்றால் என்ன? புதிய ஆவி என்றால் நம் மரித்த பழைய ஆவி புதுப்பிக்கப்பட்டு உயிர்ப்பிக்கப் பட்டிருக்கிறது என்று அர்த்தமாகும். புதிய இருதயம் என்றால் புதுப்பிக்கப்பட்ட பழைய இருதயம் என்பதுபோல, புதிய ஆவி என்றால் புதுப்பிக்கப்பட்ட பழைய ஆவியாகும். பழைய இருதயம் புதுப்பிக்கப்படும்போது, மிருதுவாக்கப்படுகிறது; பழைய ஆவி புதுப்பிக்கப்படும்போது, உயிர்ப்பிக்கப்படுகிறது. இது ஏனென்றால், நம் பழைய இருதயத்தின் பிரச்சினை அதன் கடினத்தன்மையாகும், ஆனால், நம் பழைய ஆவியின் பிரச்சினை அதன் மரணத்தன்மையாகும். ஆயைால், தேவன் நம்மை மறுபடிபிறப்பிக்கும்போது, நம் கடினமான பழைய இருதயம் புதிய இருதயமாக மாறும்படி, அவர் அதை மிருதுவாக்குவதால் புதிதாக்குகிறார்; அதுபோல, நம் மரித்த பழைய ஆவி புதிய ஆவியாக மாறும்படி, அவர் அதை உயிர்ப்பிப்பதால் புதிதாக்குகிறார்.

மனிதனுடைய படைக்கப்பட்ட ஆவி ஆரம்பத்தில் மனிதன் தேவனைத் தொடர்புகொள்வதற்கான உறுப்பாக இருந்தது. மனிதன் தன் ஆவியின்மூலமாகவும், ஆவியினாலும் தேவனோடு ஐக்கியம் கொண்டு, தேவனோடு தொடர்புகொண்டான். பின்னர், மனிதனுடைய வீழ்ச்சியின் காரணமாக பாவத்தின் கறைப்படுத்து தலால் அவனுடைய ஆவி சேதப்படுத்தப்பட்டது. இவ்வாறு, மனித ஆவி தேவனோடு கொண்டிருந்த அதன் செயல்பாட்டை இழந்து மரித்த ஆவியாக மாறியது. அது மரித்ததாயிருந்ததால் பழையதாக இருந்தது. நாம் மறுபடிபிறப்பிக்கப்படுகிறபோது, நம் ஆவி அனுபவித்த கறைபடுதலை கர்த்தராகிய இயேசுவின் இரத்தம் சுத்திகரிப்பதால், தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய மூலக்கூறாகிய தேவனுடைய ஜீவனை நம் ஆவிக்குள் வைத்து அதை உயிர்ப்பிக்கிறார் (கொலோ. *2:13*-ஐ பார்க்க). இந்த முறையில் நம் மரித்த பழைய ஆவி புதுப்பிக்கப்பட்டு ஜீவிக்கிற ஒரு புதிய ஆவியாக மாறுகிறது.

ஆரம்பத்தில் நம் ஆவி ஒரு பழைய படைப்பாக இருந்தது; தேவனுடைய எந்த மூலக்கூறும் அதில் இல்லை. பின்னர், தேவனுடைய எந்த மூலக்கூறையும் அது கொண்டிருக்கவில்லை என்பது மட்டுமல்லாமல், அது பாவத்தால் கறைபடுத்தவும்பட்டது; இவ்வாறு, அது பழையதாக மாறியது. எதுவும் பழையபடைப்பின் ஒரு பகுதியாக இருப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றன: ஒன்று, அது படைப்பின்போது தேவனுடைய மூலக்கூறு இல்லாததாக இருந்தது; மற்றொன்று, அது பாவத்தினாலும் சாத்தானாலும் கறைப்படுத்தப்பட்டும் சீரழிக்கப்பட்டும் இருக்கிறது. இந்த இரண்டு காரணங்களால்தான் நம் ஆவியும் ஒரு பழைய ஆவியாக மாறியது. எனவே, தேவன் நம்மை மறுபடி பிறப்பிக்கிறபோது, நம் ஆவியைப் புதுப்பித்து, அதை ஒரு புதிய ஆவியாக மாற்றும்படி அவர் இரண்டு பக்கங்களிலிருந்து வேலைசெய்கிறார். ஒருபக்கத்தில் நம் ஆவியின் கறைபடுதலை சுத்திகரிக்க அவர் கர்த்தராகிய இயேசுவின் இரத்தத்தைப் பயன்படுத்துகிறார், இதனால் நம் ஆவி சுத்தமாகிறது. மறுபக்கத்தில் நம் ஆவிக்குள் தம் ஜீவனை வைக்க அவர் தம் ஆவியைப் பயன்படுத்துகிறார், இதனால் நம் ஆவி அவருடைய மூலக்கூறைக் கொண்டிருக்கிறது. இவ்வாறு அவர் நம் பழைய ஆவியைப் புதுப்பித்து அதை ஒரு புதிய ஆவியாக ஆக்குகிறார். அவர் நம் ஆவியைப் புதுப்பித்து அதை ஒரு புதிய ஆவியாக ஆக்குவதின் அர்த்தம், அவர் நம்மில் ஒரு புதிய ஆவியை வைப்பதாகும்.

நம் மறுபிறப்பின்போது தேவன் ஏற்கெனவே நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தந்திருப்பதால், ஏன் மேலும் ஒரு புதிய ஆவியையும் அவர் நம்மில் வைக்கிறார்? இது ஏனென்றால் இருதயம் தேவனை விரும்பவும், தேவனை நேசிக்கவும் மட்டுமே முடியும்; அது தேவனைத் தொடர்புகொள்ளவோ, தேவனைத் தொடவோ முடியாது. ஆகையால் தேவன் நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தருவது மட்டும் போதுமானதல்ல, அவர் நம்மில் ஒரு புதிய ஆவியையும்கூட வைக்கவேண்டும். தேவன் ஒரு புதிய இருதயத்தை மட்டும் நமக்குத் தந்தால், நாம் அவரை விரும்பவும் நேசிக்கவும் மட்டுமே அவர் செய்யமுடியும், நாம் அவரைத் தொடர்புகொள்ளும்படி அவர் செய்யமுடியாது. ஆகையால் நாம் அவரைத் தொடர்புகொள்ளவும், அவரோடு ஐக்கியம் கொள்ளவும், அவர் நம்மில் ஒரு புதிய ஆவியை வைக்க வேண்டும்.

இருதயம் நம் பற்று மற்றும் அன்பின் உறுப்பு என்று நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். ஆகையால் தேவனை பொறுத்தவரை இருதயத்தின் செயல்பாடு அவரை நோக்கி

சாய்ந்துகொள்வதும் அவரை நேசிப்பதுமாகும். இருதயம் தேவனை வாஞ்சிக்கிறது, அதாவது இருதயம் தேவன்மேல் தாகமாயிருக்கிறது என்று வேதாகமம் கூறுகிறது (சங். *42:1-2*). இருதயம் தேவனை வாஞ்சிக்கமுடியும், தேவன்மேல் தாகமாயிருக்கமுடியும், ஆனால் அது தேவனைத் தொடர்புகொள்ளவோ, தேவனைத் தொடவோ முடியாது. இருதயத்திற்குத் தேவனை நேசிக்கும், தேவன்மேல் தாகமாயிருக்கும் செயல்பாடு மட்டுமே உண்டு; அதற்குத் தேவனைத் தொடர்புகொள்ளும் அல்லது தேவனைத் தொடும் ஆற்றல் இல்லை. தேவனைத் தொடர்புகொள்ளக்கூடியது இருதயமல்ல, ஆவியே. இருதயம் நாம் தேவனை நேசிப்பதற்கு மட்டுமே ஏற்றது, ஆனால் ஆவியே நாம் தேவனைத் தொடர்புகொள்ளவும், தேவனோடு ஐக்கியம்கொள்ளவும் ஏற்றதாக இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, என்னிடம் ஒரு நல்ல பேனா இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். என் இருதயம் அதை மிகவும் விரும்புகிறது; ஆனால் என் இருதயம் அதைத் தொடவோ அதை எடுக்கவோ முடியாது. ஏனெனில் என் இருதயத்திற்கு அப்படிப்பட்ட ஆற்றல் இல்லை. அப்படிப்பட்ட ஆற்றல் என் கைக்கு உரியது. கை ஆவிக்கு உதாரணமாயிருக்கிறது. நம் இருதயம் தேவனை நேசித்து அவருக்காக ஆழமாகத் தாகம்கொண்டிருந்தாலும், அது தேவனைத் தொடர்புகொள்ளவும்முடியாது அவரோடு ஐக்கியம் கொள்ளவும்முடியாது. நம் ஆவி மட்டுமே அதைச் செய்ய முடியும். ஆகையால் நாம் மறுபடி பிறப்பிக்கப்படுகிறபோது தேவன் நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தருவது மட்டுமல்ல, அவர் நமக்குள் ஒரு புதிய ஆவியையும் வைக்கிறார்.

புதிய இருதயத்தைக்கொண்டு நாம் தேவனை விரும்பவும் தேவனை நேசிக்கவும் முடியும். புதிய ஆவியைக்கொண்டு நாம் தேவனைத் தொடர்புகொள்ளவும் தேவனைத் தொடவும் முடியும். தேவனையும் தேவனுடைய காரியங்களையும் பொறுத்தவரை, புதிய களிப்பையும் பற்றுகளையும் மற்றும் புதிய உணர்வுகளையும் ஆர்வத்தையும் கொண்டிருக்க நம் புதிய இருதயம் நமக்குத் திறனளிக்கிறது. தேவனையும் தேவனுடைய காரியங்களையும் பொறுத்தவரை புதிய தொடர்பையும் உட்பார்வையையும் மற்றும் புதிய ஆவிக்குரிய ஆற்றலையும் செயல்பாட்டையும் கொண்டிருக்க நம் புதிய ஆவி நமக்குத் திறனளிக்கிறது. முன்னாளில், நாம் தேவனை நேசிக்கவுமில்லை தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களை விரும்பவுமில்லை; மேலும் தேவனைத் தொடர்புகொள்ளவோ தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்ளவோ நம்மால் இயலவில்லை. ஆனால் இப்போது ஒரு புதிய இருதயமும், ஒரு புதிய ஆவியும் நம்மிடம்

இருக்கின்றன; ஆகையால் நாம் தேவனையும் தேவனுடைய காரியங்களையும் நேசிப்பது மட்டுமல்ல, நாம் தேவனைத் தொடர்புகொள்ளவும் தேவனையும் தேவனுடைய காரியங்களையும் அறிந்துகொள்ளவும் முடியும். முன்னாளில், தேவனைப் பொறுத்தவரை எந்த உணர்வும், தேவனில் எந்த ஆர்வமும் நமக்கு இல்லாதிருந்தது; தேவனையும் தேவனுடைய காரியங்களையும் பொறுத்தவரை, நாம் பலவீனமாகவும் எந்தவித ஆற்றல் இல்லாமலும் இருந்தோம். ஆனால் இப்போது ஒரு புதிய இருதயத்தோடும், ஒரு புதிய ஆவியோடும் தேவனையும் தேவனுடைய காரியங்களையும் பொறுத்தவரை, உணர்வும் ஆர்வமும் நாம் கொண்டிருப்பது மட்டுமல்ல, நாம் அவைகளைத் தொடர்புகொண்டு புரிந்துகொள்ள வல்லவர்களாகவும் இருக்கிறோம். எனவே நாம் தேவனை நேசிக்கிறபோது நம் ஆவி அவரைத் தொடுகிறது. நம் இருதயம் தேவனுடைய காரியங்களில் களிகூரும்போது, நம் ஆவி அவைகளைப் புரிந்துகொள்கிறது. இதுவே ஒரு புதிய இருதயத்துடன் கூடுதலாக ஒரு புதிய ஆவியை நமக்குக் கொடுப்பதில் தேவனுடைய நோக்கமாகும்.

## V. பரிசுத்த ஆவியானவர்

தேவன் நமக்கு ஒரு புதிய இருதயத்தைத் தருகிறார், மேலும் தேவன் நம்மில் ஒரு புதிய ஆவியை வைக்கிறார் என்று எசேக்கியேல் 36:26 கூறியபின்பு, தேவன் தம் சொந்த ஆவியை நம்முள் வைக்கிறார் என்றும் 27 தொடர்ந்து கூறுகிறது. ஆகையால் மறுபிறப்பின்மூலம் நாம் ஆதாயப் படுத்துகிறவைகளுள் தேவனுடைய ஆவியானவரும் இருக்கிறார். ஆரம்பத்தில் தேவனுடைய ஆவியானவர் நம்மிடம் இல்லை. தேவனுடைய ஆவியானவர் நம்மிடம் இல்லை என்பது மட்டுமல்ல, தேவனைப்பொறுத்தவரை நம் ஆவி மரித்திருந்தது. தேவன் நம்மை மறுபடிபிறப்பித்தபோது, ஒருபக்கத்தில் அவருடைய ஆவி அவருடைய ஜீவனை நம் ஆவிக்குள் வைக்கும்படிச்செய்து, நம் மரித்த ஆவியை இவ்வாறு உயிர்ப்பித்தார்; மறுபக்கத்தில் தேவன் தம் ஆவியையும் நம் ஆவிக்குள் வைத்தார்; நம் உயிர்ப்பிக்கப் பட்ட புதிய ஆவியில் அவர் தம் ஆவியை குடியிருக்கச் செய்தார் என்பதே இதன் அர்த்தமாகும். இவ்வாறு மறுபடி பிறப்பிக்கப் பட்டிருக்கிற நம்முள் தேவனுடைய ஜீவனின் மூலக்கூறைக் கொண்ட ஒரு உயிர்ப்பிக்கப்பட்ட புதிய ஆவி மட்டுமல்ல, நம் புதிய ஆவியில் குடியிருக்கிற தேவனுடைய ஆவியானவரும் இருக்கிறார்.*

தேவன் ஏன் தம் ஆவியை நம்முள் வைக்கிறார்? நம் ஆவிக்குள் தங்கியிருக்கும் தேவனுடைய ஆவியின் செயல்பாடு என்ன?

வேதாகமத்தின்படி, நம்முள் தங்கியிருக்கிற தேவனுடைய ஆவியானவரின் பிரதானமான செயல்பாடுகளுக்கு குறைந்தபட்சம் ஏழு அம்சங்கள் இருக்கின்றன:

## A. உள்குடியிருக்கும் ஆவியாக

நாம் தேவனையும், தேவன் கிறிஸ்துவில் நமக்காக நிறைவேற்றிய எல்லாவற்றையும் அறியவும், அனுபவ மாக்கவும் அவருடைய ஆவி நமக்கு உள்குடியிருக்கிற ஆவியாக இருக்கும்படி தேவன் தம் ஆவியை நம்முள் வைக்கிறார் (ரோமர் 8:9-11). இது புதியஏற்பாட்டுக் காலத்தில் தேவனால் தரப்பட்டிருக்கிற சிறப்பான ஆசீர்வாதம்; பழைய ஏற்பாட்டில் இது இல்லை. பழையஏற்பாட்டில், தேவன் வேலைசெய்ய தம் ஆவியை வெளியே இருந்து மனிதன்மேல் அனுப்பினார்; அவர் தம் ஆவியை மனிதனுக்கு உள்ளே குடியிருக்கச்செய்யவில்லை. கர்த்தருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலுக்குப்பின்புதான், தேவன் தம் ஆவியை நமக்குக் கொடுத்து உள்குடியிருக்கிற ஆவியானவராகத் தம் ஆவியை நம்மில் குடியிருக்கச்செய்தார் (யோவான் 14:16-17). இவ்வாறு கிறிஸ்துவில் நாம் தேவனுடைய பரிபூரணத்தைப் (கொலோ. 2:9-10) பெற்று அனுபவிக்க உள்ளிருந்து நமக்கு தேவனையும் கிறிஸ்துவையும் அவரால் வெளிப்படுத்தமுடிகிறது.

## B. தேற்றரவாளனாக

யோவான் 14:16-17-ல் தேற்றரவாளனைப்பற்றி கர்த்தர் நமக்குச் சொன்னார். வேறொரு தேற்றரவாளனாக நம்மில் குடியிருப்பதற்கு பரிசுத்த ஆவியை நமக்குத் தரும்படி பிதாவிடம் வேண்டிக்கொள்வேன் என்று அவர் சொன்னார். “தேற்றரவாளன்” என்ற வார்த்தை மூலப்படிவத்தில் 1 யோவான் 2:1-ல் உள்ள “பரிந்துபேசுபவர்” என்ற வார்த்தைக்கு இணையானது; எழுத்தின்படி இதை “வழக்கறிஞர்” அல்லது “நமக்காக வாதாடுபவர்” என்று மொழிபெயர்க்கலாம். ஆரம்பத்தில் தேவன் தம் குமாரனை நம் தேற்றரவாளனாக, அதாவது பரிந்துபேசுபவ ராகத் தந்தார். அவருடைய குமாரன் அவரிடம் திரும்பிச்சென்ற போது அவர் தம் ஆவியை வேறொரு தேற்றரவாளனாக, அதாவது வேறொரு பரிந்துபேசுபவராக நமக்குத் தந்தார். நம் தேற்றரவாளனாக இருக்கும்படி தம் குமாரனின் ஊனுருவாக தம் ஆவியை அவர் அனுப்பினார் என்றும் இதற்கு அர்த்தமாகும். ஆகையால் நம்மில் குடியிருக்கிற தேவனுடைய ஆவியானவர் நம்முள் கிறிஸ்துவின் ஊனுருவாகவே இருக்கிறார். தேவனுக்கு முன்பாக கிறிஸ்து நமக்காக இருப்பதுபோல, நம்முள்

ஆவியானவரும் முழுமையாகப் பொறுப்பேற்று நம்மைக் கவனித்துக்கொள்கிறார்.

## C. சத்திய ஆவியாக

தேற்றரவாளனாக நம்மில் குடியிருக்க வருகிற பரிசுத்த ஆவியான வரே "சத்திய ஆவியானவர்" என்று யோவான் 14:16-17-ல் கர்த்தர் நமக்குச் சொல்லுகிறார். எனவே நம்மில் குடியிருக்கிற தேவனுடைய ஆவியானவர் சத்திய ஆவியானவரும் ஆவார். மூலப்படிவத்தில் சத்தியம் என்ற வார்த்தைக்கு நிஜம் என்று அர்த்தமாகும். ஆகையால், "சத்திய ஆவியானவராக" அல்லது "நிஜத்தின் ஆவியானவராக" நம்மில் குடியிருக்கிற தேவனுடைய ஆவியானவர், தேவனும் கிறிஸ்துவும் என்னவாக இருக்கிறார்களோ அவையெல்லாவற்றையும் நமக்குள் நிஜமாக்குகிறார். தேவன் என்னவாக இருக்கிறாரோ, கிறிஸ்துவில் அவர் நமக்காக என்னவெல்லாம் ஆயத்தம்பண்ணியிருக்கிறாரோ, கிறிஸ்து என்னவாக இருக்கிறாரோ, தம் மரணம் உயிர்த்தெழுதலினால் நமக்காக என்னவெல்லாம் நிறைவேற்றியிருக்கிறாரோ அவைகளெல்லாம் நம்மில் குடியிருக்கிற தேவனுடைய இந்த ஆவியானவரால் நிஜமாக நமக்கு வெளிப்படுத்தப்பட்டு பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இவ்வாறு அவைகள் நம்முடையவைகளாகும்படி நாம் அவைகளைத் தொட்டு அனுபவமாக்கமுடியும்.

## D. ஜீவனின் ஆவியாக

நம்மில் குடியிருக்கிற பரிசுத்த ஆவியானவரை "ஜீவனுடைய ஆவி" என்று ரோமர் 8 அழைக்கிறது (வ. 9, 2). நம்மில் குடியிருக்கிற தேவனுடைய ஆவியானவர் தேவனுடைய ஜீவனின் ஆவியானவர் என்றும் இது நமக்குக் காட்டுகிறது. தேவனுடைய ஜீவன் கிறிஸ்துவில் இருந்தாலும் (யோவான் 1:4) அது நம்முள் குடியிருக்கிற பரிசுத்த ஆவியானவர்மூலமாகத்தான் நம்மால் அறியப்பட்டு அனுபவமாக்கப்படுகிறது. ஜீவனோடு தொடர்புள்ள எல்லாக் காரியங்களும் நம்மில் குடியிருக்கிற இந்த பரிசுத்த ஆவியானவரால்தான் நமக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன.

* "தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால்" என்று ரோமர் 8:9 கூறுகிறது, மேலும் "ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூட சாட்சிகொடுக்கிறார்" என்று வசனம் 16 கூறுகிறது. இந்த இரண்டு வசனங்களிலிருந்து தேவனுடைய ஆவியானவர் நம்மில் குடியிருப்பதென்றால், அவர் நம் ஆவியில் குடியிருக்கிறார் என்று அர்த்தமாகும் என்பதை நாம் பார்க்கிறோம்; அவர் நம் ஆவியுடன் இருக்கிறார்.

ஜீவனின் எல்லா அனுபவங்களும்கூட நம்மில் குடியிருக்கிற இந்தப் பரிசுத்த ஆவியானவரால்தான் நமதாக்கப்படுகின்றன.

## E. முத்திரையாக

மறுபிறப்பில் நாம் பெறுகிற பரிசுத்த ஆவியானவர் நம்முள் முத்திரையாக இருக்கிறார் என்று எபேசியர் 1:13 மற்றும் 4:30 நமக்குக் காண்பிக்கின்றன. தேவன் தம் ஆவியை நம்மில் வைக்கும்போது அவர் தம் ஆவியை ஒரு முத்திரையாக நம்மீது பதிக்கிறார் என்பது அதன் அர்த்தமாகும். ஒரு முத்திரை ஒரு பொருளின்மீது பதிக்கப்படும்போது, அது அந்தப் பொருளின் மீதான உரிமையின் அடையாளமாக மாறுவது மட்டுமல்ல, மேலும் முத்திரிப்பதற்காக பயன் படுத்தப்படும் முத்திரையைப் போல அந்தப் பொருளின்மீது ஒரு அச்சுப்பதிவையும் ஏற்படுத்து கிறது. இது, முத்திரையாக நம்மிலுள்ள தேவனுடைய ஆவியான வரின் செயல்பாடாகும். நம்மில் குடியிருக்கிற தேவனுடைய ஆவியானவர் நாம் தேவனுக்குச் சொந்தமானவர்கள் என்பதைக் காண்பித்து, உலக மனிதர்களிலிருந்து நம்மை வேறுபிரிக்கிற ஒரு குறியாக இருப்பதுடன், தேவன் மற்றும் கிறிஸ்துவின் ஊனுருவாக அவர், தேவனைப்போல அதாவது கிறிஸ்துவைப் போல நாம் மாறும்படி தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய சாயலின்படி நம்மை முத்திரிக்கிறார்.

## F. அச்சாரமாக

தேவனுடைய பரிசுத்த ஆவியானவர் அச்சாரமாக நம்மில் குடியிருக்கிறார் என்று எபேசியர் 1:14-ம், 2 கொரிந்தியர் 1:22-ம் நமக்குச் சொல்லுகின்றன. அச்சாரம் என்பது பிணையம் அல்லது உத்தரவாதமாகும். நம்மில் குடியிருக்கிற தேவனுடைய ஆவியானவர் தேவனுக்குச் சொந்தமானவர்களாக நம்மை வேறுபிரித்து, தேவனுடைய சாயலின்படி நம்மை முத்திரிக்கும் ஒரு முத்திரையாக மட்டும் இருக்கவில்லை; தேவனும் தேவனுக்குரிய எல்லாமும், நாம் அனுபவித்து மகிழ்வதற்கான நம் பங்கும் நம் பரம்பரைச் சொத்துமாக இருக்கின்றன என்று உத்தரவாதமளிக்கிற அச்சாரமாகவும் அவர் இருக்கிறார்.

## G. அபிஷேகமாக

நாம் கர்த்தரிடமிருந்து பெற்ற அபிஷேகம் நம்முள் இருக்கிறது என்று 1 யோவான் 2:27 கூறுகிறது. வேதாக மத்தில் அபிஷேகம் என்பது தேவனுடைய ஆவியானவரைக் குறிக்கிறது (லூக்கா 4:18). ஆகையால், நம்மில் குடியிருக்கிற தேவனுடைய ஆவியானவரே அபிஷேகம் என்று இந்த வசனங்கள் நமக்குச் சொல்லுகின்றன. நம்மிலுள்ள இந்த அபிஷேகம் நம்மை அடிக்கடி அபிஷேகிக்கிறது.

அபிஷேகம் என்பது நமக்குள் தேவனுடைய ஆவியானவரின் அசைதலாகும். நம்மில் தேவனுடைய ஆவியானவரின் அசைதல் அல்லது நம்மை அபிஷேகித்தல் என்றால், தேவனுடைய மூலக்கூறு நம் உள்ளார்ந்த மூலக்கூறாகும்படியும், நாம் தேவனையும் எல்லாவற்றிலும் அவருடைய விருப்பத்தையும் சித்தத்தையும் அறியும்படிக்கும் அவர் தேவனையே நம்மில் அபிஷேகிக்கிறார் என்று அர்த்தமாகும்.*

இந்த ஏழு செயல்பாடுகளும் என்னே உயர்வானவை, என்னே மகிமையானவை! நம்மில் குடியிருக்கிற தேவனுடைய ஆவியானவரின் செயல்பாடுகளை அவைகள் நமக்குக் காட்டுவது மட்டுமல்ல, அவைகள் மறுபிறப்பின் மூலம் நாம் பெற்றுக் கொண்ட தேவனுடைய இந்த ஆவியானவர் எப்படிப்பட்ட ஆவியானவர் என்பதையும் நமக்குத் தெரியப்படுத்துகின்றன.

## VI. கிறிஸ்து

நம்மில் குடியிருக்கிற தேவனுடைய ஆவியானவர் நம்மில் குடியிருக்கிற கிறிஸ்துவின் ஆவியானவரே என்றும், நம்மில் குடியிருக்கிற கிறிஸ்துவின் ஆவியானவர் நம்மில் குடியிருக்கிற கிறிஸ்துவே என்றும் ரோமர் *8:9-10* நமக்குக் காட்டுகிறது. நம்மிலுள்ள தேவனுடைய ஆவியானவர் கிறிஸ்துவின் ஊனுரு என்று இது வெளிப்படுத்துகிறது. மறுபிறப்பு தேவனுடைய ஆவியானவரை நம்முள் கொண்டிருக்கச்செய்வதால், அது நம்முள் கிறிஸ்துவையும் கொண்டிருக்கச் செய்கிறது.

நாம் விசுவாசிக்கிறபோது, தேவன் தம் ஆவியானவர்மூலம் நம்மில் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறார் (கலா. *1:16*). ஆகையால் கிறிஸ்துவை இரட்சகராக நாம் பெறுகிறபோது அவர் ஆவியானவராக நம்மில் குடியிருக்கிறார் (*2* கொரி. *13:5*).

நம்மில் கிறிஸ்து குடியிருப்பதின் குறிக்கோள் என்ன? அவர் நம் ஜீவனாக இருப்பதற்காகவே. நம் எல்லாமுமாக இருக்கும்படி கிறிஸ்து நம்மில் குடியிருந்தாலும்கூட, அவர் நம் ஜீவனாக இருக்கவேண்டும் என்பதே அவருடைய உள்குடியிருப்பதற்கான மையக் காரணமாகும்.

நாம் அவருடைய ஜீவனையும், சுபாவத்தையும் பெற்று முற்றும்முடிய அவரைப்போல இருக்கவேண்டும் என்பதற் காகவே தேவன் தம் இரட்சிப்பில் நம்மை மறுபடிபிறப்பித் தார். நாம் பெற்றுக்கொள்வதற்கு அவர் கிறிஸ்துவில் தம் ஜீவனை வைக்கிறார் (யோவான் *1:4*; *1* யோவான் *5:11, 12*). வேறு வார்த்தைகளில் சொல்வதானால், கிறிஸ்து நம் ஜீவனாக இருக்கவேண்டும் என்று அவர் விரும்புகிறார் (யோவான் *14:6*; கொலோ. *3:4*). அவருடைய ஆவியானவர் நம்மில் அவருடைய ஜீவனை வைத்தாலும்,

அவருடைய ஆவியானவர் தம் ஜீவனை அறியவும் அனுபவமாக்கவும் வாழ்ந்துகாட்டவும் நமக்குத் திறனளித்தாலும், அவருடைய ஜீவன் கிறிஸ்துவே. அவருடைய ஆவியானவர்மூலம் நாம் அவருடைய ஜீவனைப் பெற்று, அறிந்து, அனுபவமாக்க செய்தாலும்கூட, அவர் கிறிஸ்துவையே நம் ஜீவனாக்குகிறார். தேவன் தம் ஆவியின்மூலம் நம்மில் கிறிஸ்துவை வெளிப்படுத்துகிறார் என்றால், கிறிஸ்து நம் ஜீவனாகவேண்டுமென்று அவர் விரும்புகிறார் என்று அர்த்தம். கிறிஸ்து நம்மில் குடியிருக்கிறார் என்றால், அவர் நம்மில் ஜீவனாக வாழ்கிறார் என்றும் (கலா. 2:20), நம்மிலிருந்து அவர் தம் ஜீவனை வாழ்ந்துகாட்ட விரும்புகிறார் (2 கொரி. 4:10-11) என்றும் அர்த்தம். இவ்வாறு தம் ஜீவனில் நாம் அவருடைய சாயலாக வளர்ந்து, அவரைப்போல மாறவேண்டும் என்று அவர் விரும்புகிறார் (2 கொரி. 3:18). அவர் தேவனுடைய சாயலாக இருப்பதால் (கொலோ. 1:15), நாம் அவருடைய ஜீவனில் அவருடைய சாயலாக வளர்ந்து அவரைப்போலவே மாறும்போது நாம் தேவனுடைய சாயலாக வளர்ந்து தேவனைப்போல மாறுகிறோம்.

தேவன் என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ அதுவே தேவனுடைய ஜீவன் என்று நாம் ஏற்கெனவே பார்த் திருக்கிறோம். தேவன் தம் ஜீவனை கிறிஸ்துவில் வைக்கும்போது, தாம் என்னவாகவெல்லாம் இருக்கிறாரோ அதை கிறிஸ்துவில் வைக்கிறார். கிறிஸ்து தேவனுடைய மனிதமாம்சமாகுதலும் தேவனுடைய ஊனுருவுமாவார். தேவன் என்னவாக இருக்கிறாரோ அதுவும், தேவத்துவத்தின் பரிபூரண மெல்லாமும் சரீரப் பிரகாரமாக கிறிஸ்துவில் குடியிருக்கிறது (கொலோ. 2:9). ஆகையால், நம்மில் குடியிருக்கிற கிறிஸ்து தேவனின் பரிபூரணமெல்லாவற்றையும் கொண்டு நாம் நிரப்பப்படும்படிச் செய்கிறார் (எபே. 3:17-19).

நம் ஜீவனாக நம்மில் குடியிருக்கிற கிறிஸ்து இன்று தேவனுடைய பரிபூரணத்தையெல்லாம் அனுபவிப்பதற்கு மட்டுமல்ல, எதிர்காலத்தில் தேவனுடைய மகிமைக்குள் நுழைவதற்கும் நமக்குத் திறனளிக்கிறார் (ரோமர் 8:17; எபி. 2:10). ஆகையால், இன்று நம்மில் குடியிருக்கிற அவர் ஒருபக்கத்தில் நம் ஜீவனாக இருக்கிறார், மறுபக்கத்தில் நம் மகிமையின் நம்பிக்கையாக இருக்கிறார் (கொலோ. 1:27). நம் ஜீவனாக இன்று அவர் நம்மில் குடியிருப்பதின் அர்த்தம், அவரில் உள்ள தேவனுடைய

*இந்தக் குறிப்பின் விரிவான விளக்கம் *ஜீவனின் அனுபவம்* என்ற புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளது (லிவிங் ஸ்ட்ரீம் மினிஸ்ட்ரீயின் வெளியீடு), அத்தியாயம் 7.

ஜீவன்மூலம் நாம் வளர்ந்து தேவனைப்போல மாறவும், வளர்ந்து தேவனுடைய சாயலுக்கு ஒப்பாக்கப்படவும், இறுதியாக தேவனுடைய மகிமைக்குள் வளரவும் செய்வார் என்பதாகும்.

## VII. தேவன்

கிறிஸ்து தேவனுடைய ஊனுருவாக இருக்கிறார். மறுபிறப்பு நாம் கிறிஸ்துவைப் பெற்றுக்கொள்ளச்செய்வதால், அது நாம் தேவனைக் கொண்டிருக்கவும்செய்கிறது. மேலும் கிறிஸ்து தேவனுடைய ஊனுருவாக இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் நிஜமாக இருக்கிறார். தேவன் கிறிஸ்துவில் இருக்கிறார், கிறிஸ்து பரிசுத்த ஆவியானவராக இருக்கிறார். ஆகையால் மறுபிறப்பு பரிசுத்த ஆவியானவரை நாம் கொண்டிருக்கச் செய்யும்போது, அது கிறிஸ்துவை மட்டுமல்ல, தேவனையும் நாம் கொண்டிருக்கச் செய்கிறது.

தேவன் நம்மை மறுபடிபிறப்பித்ததிலிருந்து அவர் கிறிஸ்துவில் தம் ஆவியின்மூலம் நம்மில் குடியிருக்கிறார். அவர் நமக்குத் தந்திருக்கும் பரிசுத்த ஆவியானவரால் தேவன் நம்மில் குடியிருப்பதை நாம் அறிவோம் என்று அப்போஸ்தல னாகிய யோவான் கூறுகிறார் (*1 யோவான் 3:24; 4:13*). தாமும் தேவனும் சேர்ந்து நம்மில் குடியிருப்பதாக கர்த்தராகிய இயேசுவும் கூறினார். ஆகையால், நம்மில் குடியிருப்பது பரிசுத்த ஆவியானவரானாலும், கிறிஸ்துவானாலும் அது நம்மில் தேவன் குடியிருப்பதேயாகும். தேவன் கிறிஸ்துவில் இருக்கிறார், கிறிஸ்து ஆவியானவராக இருக்கிறார். ஆகை யால் ஆவியானவர் நம்மில் குடியிருப்பது கிறிஸ்து நம்மில் குடியிருப்பதாகும்; மேலும், கிறிஸ்து நம்மில் குடியிருப்பது தேவன் நம்மில் குடியிருப்பதாகும். தேவன் கிறிஸ்துவில் நம்மில் குடியிருக்கிறார்; மற்றும், கிறிஸ்து ஆவியானவராக நம்மில் குடியிருக்கிறார். ஆகையால் நம்மில் ஆவியானவர் குடியிருக்கிறபோது, நம்மில் கிறிஸ்துவும் தேவனும் குடியிருக்கிறார்கள். ஆவியானவர், கிறிஸ்து, தேவன் ஆகிய மூவரும் ஒன்றாக நம்மில் குடியிருக்கிறார்கள். மூவொரு தேவன் நம்மில் குடியிருக்கிறார் என்பதே இதன் அர்த்தமாகும்.

ஆனால், பரிசுத்த ஆவியானவர் நம்மில் குடியிருப்பதை வேதாகமம் குறிப்பிடுகிறபோது, நம்மில் அவர் அபிஷேகிப் பதை வலியுறுத்துகிறது (*1 யோவான் 2:27*); கிறிஸ்து நம்மில் குடியிருக்கிறார் என்று குறிப்பிடுகிறபோது, நம் ஜீவனாக நம்மில் அவர் வாழ்வதை அது வலியுறுத்துகிறது (கலா. *2:20*); தேவன் நம்மில் குடியிருக்கிறார் என்று அது குறிப்பிடுகிறபோது, தேவன் நம்மில் வேலைசெய்வதை வலியுறுத்துகிறது (பிலி. *2:13*; எபி. *13:21*; *1* கொரி. *12:6*). இந்த மூன்று காரியங்களைப்பற்றிய மிகத்

தெளிவான வேறுபாடுகளை வேதாகமம் தருகிறது. நம்மில் பரிசுத்த ஆவியானவர் குடியிருப்பதைப்பொறுத்த வரை, அது "அபிஷேகிப்பதைப்"பற்றிப் பேசுகிறது; நம்மில் கிறிஸ்து குடியிருப்பதைப் பொறுத்தவரை, அது "வாழ்வதைப்"பற்றிப் பேசுகிறது; நம்மில் தேவன் குடியிருப்பதைப்பொறுத்தவரை, அது "வேலை செய்வதைப்" பற்றிப் பேசுகிறது. கிறிஸ்துவோ, தேவனோ நம்மை அபிஷேகிப்பதாக அல்லது பரிசுத்த ஆவியானவரோ, தேவனோ நம்மில் வாழ்வதாக அல்லது பரிசுத்த ஆவியானவரோ, கிறிஸ்துவோ நம்மில் வேலைசெய்வதாக அது ஒருபோதும் கூறவில்லை. பரிசுத்த ஆவியானவர் நம்மை அபிஷேகிக்கிறார், கிறிஸ்து நம்மில் வாழ்கிறார், தேவன் நம்மில் வேலைசெய்கிறார் என்று மட்டுமே அது கூறுகிறது. இந்த மூன்று வகையான பேசுதல்களும் ஒன்றுக்கொன்று மாற்றப்படத்தக்கதல்ல. "அபிஷேகிப்பது" நம்மில் பரிசுத்த ஆவியானவர் தைலமாக இருப்பதோடு தொடர்புடையது; "வாழ்வது" நம்மில் கிறிஸ்து ஜீவனாக இருப்பதோடு தொடர்புடையது; "வேலைசெய்வது" நம்மில் தேவன் வேலை செய்வதோடு தொடர்புடையது.

பரிசுத்த ஆவியானவர் நம்மில் குடியிருப்பது தைலமாக இருப்பதாகும்; ஆகையால், அவர் நம்மில் என்ன செய்கிறாரோ அது அபிஷேகிப்பதாகும். கிறிஸ்து நம்மில் குடியிருப்பது ஜீவனாக இருப்பதாகும்; ஆகையால், அவர் நம்மில் என்ன செய்கிறாரோ அது வாழ்வதாகும். தேவன் நம்மில் குடியிருப்பது வேலைசெய்கிற ஒரு காரியமாகும்; ஆகையால், அவர் நம்மில் என்ன செய்கிறாரோ அது வேலைசெய்வதாகும். பரிசுத்த ஆவியானவர் நம்மை அபிஷேகிப்பதால் தேவனுடைய மூலக்கூறை நமக்குள் அபிஷேகிக்கிறார். கிறிஸ்து நம்மில் வாழ்வதால், தேவனுடைய ஜீவனை நம்மிலும் நம்மிலிருந்தும் வாழ்கிறார். தேவன் நம்மில் வேலைசெய்வதால், அவருடைய சித்தம் நம்மில் நிறைவேற்றப் படும்படி அவர் அதை நமக்குள் நடப்பிக்கிறார்.

ஆகையால், மறுபிறப்பின்மூலம் நாம் பெற்றுக் கொண்டவைகள் எவைகளோ அவைகள் மிகவும் பெரியவை, மிகவும் உயர்ந்தவை, மிகவும் ஐசுவரியமானவை, மிகவும் மகிமையானவை என்பதை நாம் பார்க்கவேண்டும். மறுபிறப்பின்மூலமாக தேவனுடைய ஜீவனையும் இந்த ஜீவனின் விதியையும் நாம் பெறுகிறோம். மறுபிறப்பின் மூலமாக ஒரு புதிய இருதயத்தையும் ஒரு புதிய ஆவியையும் நாம் பெறுகிறோம். மறுபிறப்பின்மூலம் பரிசுத்த ஆவியானவரையும் கிறிஸ்துவையும் தேவனையும் நாம் மேலும் பெறுகிறோம். நம்மைப் பரிசுத்தமாக்குவதற்கும் ஆவிக்குரியவர்களாக்குவதற்கும் மற்றும் நம்மை வெற்றியுள்ளவர்களாக்குவதற்கும் வரம்புகடந்தவர்க

ளாக்குவதற்கும் மற்றும் நாம் ஜீவனில் வளர்வதற்கும் முதிர்ச்சி யடைவதற்கும் இவைகள் உண்மையாகவே நமக்குப் போதுமான வைகளாக இருக்கின்றன.

அத்தியாயம் ஐந்து

# ஜீவனின் உணர்வு

ஜீவன் என்றால் என்ன என்றும், ஜீவனின் அனுபவம் என்றால் என்ன என்றும் நாம் பார்த்திருக்கிறோம். மறுபிறப்பு என்ற ஜீவனின் முதல் அனுபவத்தையும், மறுபிறப்பின் மூலமாக ஆதாயப்படுத்தப்பட்ட பல்வேறு காரியங்களையும்கூட நாம் பார்த்திருக்கிறோம். நாம் இவைகளைப் பார்த்திருப்பதால், இப்போது ஜீவனின் உணர்வு என்ற காரியத்திற்கு வரமுடியும்.

நம்மைப் பொறுத்தவரை ஜீவனின் உணர்வு மிகவும் அனுபவத்துக்குரியது, தனிப்பட்டது, நடைமுறைக்குரியது. ஆகையால் ஜீவனில் எந்தவொரு ஈடுபாடும் நாம் கொண்டிருக்க வேண்டுமானால், நாம் இந்த ஜீவனின் உணர்வுக்கு அக்கறை செலுத்தி அதை நன்றாக அறியவேண்டும். ஜீவனின் அனுபவத்தையுடைய எல்லாரும் ஜீவனின் உணர்வுக்கும் ஜீவனின் அனுபவத்துக்கும் இடையேயுள்ள ஆழமான உறவை அறிவார்கள். ஆகையால் ஜீவனின் அறிவு என்ற கருப்பொருளை ஆய்வுசெய்ய விரும்பினால், ஜீவனின் உணர்வு என்ற காரியத்தை நாம் கட்டாயம் பார்க்கவேண்டும்.

## I. வேதவாக்கிய ஆதாரம்

வேதாகமம் வெளிப்படையாக ஜீவனின் உணர்வை குறிப்பிட வில்லையென்றாலும், அது உண்மையாக இந்த காரியத்தைப் பற்றிப் பேசுகிறது. “மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்,” என்று ரோமர் 8:6 கூறுகிறது. இந்த வசனம் ஜீவனின் உணர்வைப்பற்றி நமக்கு மிகத்தெளிவாகப் பேசுகிறது, ஏனெனில் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சமாதானம் தெளிவாக ஓர் உணர்வின் காரியமாக இருக்கிறது. இந்தச் சமாதானம் வெளியார்ந்த சுற்றுப்புறச் சூழலைக் குறிக்கவில்லை. மாறாக உள்ளார்ந்த நிலைமையைக் குறிக்கிறது; ஆகையால் இது நிச்சயமாகவே உணர்வைப்பற்றிய காரியம்தான். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள சமாதானம் ஓர் உணர்வின் காரியமாக இருப்பதால், இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மரணமும் ஜீவனும்கூட ஓர் உணர்வின் காரியமாக இருக்கின்றன.

மரணத்தின் உணர்வு மரணத்தின் மூலக்கூறை நாம் உணரச் செய்கிறது. பெலவீனம், வெறுமை, மனஅழுத்தம், இருள், வலி போன்றவைகள் மரணத்தின் மூலக்கூறுகளாக இருக்கின்றன. மரணம் குறைந்தபட்சம் இந்த ஐந்து மூலக்கூறுகளை

உள்ளடக்கியிருக்கிறது, மேலும் இந்த மூலக்கூறுகளின் முழுமொத்தம் பெருமளவு மரணத்திற்குச் சமமானது. மரணம் மனிதர்களை பலவீனமடையச்செய்கிறது; மேலும் மனிதர்கள் மிகவும் பலவீனமடையும்போது அவர்கள் மரிக்கிறார்கள். மரணம் மனிதர்களை வெறுமையடையச் செய்கிறது, ஏனெனில் மரணம் எல்லாவற்றையும் முடிவுக்குக் கொண்டுவருகிறது. மரணம் மனிதர்களை மனஅழுத்தமும், இருதயத் தொய்வும் அடையச் செய்கிறது; மிக அதிகமாக மனஅழுத்தமடைந்து அமைதியாக இருப்பவர்கள் மரித்திருக்கிறவர்கள். மரணம் மனிதர்களை இருளடையச்செய்கிறது; ஆழமான இருளில் இருப்பவர்கள் மரணத்திற்குள் நுழைந்திருப்பவர்கள். அதே நேரத்தில், மரணம் மனிதர்களை வலி அனுபவிக்கச்செய்கிறது; மிக அதிகமாக வலி அனுபவிக்கிற ஒருவர் மரணத்திற்குள் விழுந்தவர். இவைகளெல் லாம் மரணத்தின் மூலக்கூறுகளாக இருக்கின்றன; ஆகையால் நாம் இவைகளை உணரும்போது மரணத்தை உணர்கிறோம்.

இந்த மரணத்தின் உணர்வுகள் நாம் மாம்சத்திற்கு அக்கறை செலுத்துவதின் விளைவுகளாகும். எப்போதெல்லாம் நாம் மாம்சத்திற்கு அக்கறைசெலுத்துகிறோமோ, அப்போ தெல்லாம் உடனே இந்த மரணத்தின் உணர்வுகளை நாம் கொண்டிருப்போம். எடுத்துக்காட்டாக, நீங்கள் கர்த்தருடைய நாளின் பிற்பகலில் மாம்சத்திற்கு சிறிதளவு அக்கறைசெலுத்தினால், நீங்கள் மாலையில் அப்பம்பிட்கும் கூட்டத்திற்கு வரும்போது உள்ளாக நீங்கள் பலவீனமாக உணர்வீர்கள். மேலும் உங்களால் எழுந்திருக்க முடியாது. அதே நேரத்தில் நீங்கள் வெறுமையை, மனஅழுத்தத்தை இன்னும்சொல்லப்போனால் இருளை, வலியை உணர்வீர்கள். இந்த உணர்வுகளெல்லாம் மரணத்தின் உணர்வுகளாயிருக்கின்றன. சில நேரங்களில் நீங்கள் ஒன்றை மற்றதைவிடப் பலமாக உணர்கிறீர்கள்; சில நேரங்களில் எல்லா வற்றையும் சமமாகவே உணர்கிறீர்கள். இருந்தபோதிலும், நாம் மாம்சத்துக்கு அக்கறை செலுத்துவதினால்தான் நாம் மரணத்தை உணர்கிறோம்.

ஜீவனின் உணர்வு மரணத்தின் உணர்வுக்கு நேர் எதிரானது. மரணத்தின் உணர்வு நம்மை பலவீனமாகவும் வெறுமையாகவும் உணரச்செய்கிறது, ஆனால் ஜீவனின் உணர்வு நம்மை பலமாகவும் திருப்தியாகவும் உணரச்செய்கிறது. மரணத்தின் உணர்வு நம்மை மனஅழுத்தமாகவும் இருளாகவும் வலியாகவும் உணரச்செய்கிறது. ஜீவனின் உணர்வு நம்மை உயிரோட்ட மாகவும் பிரகாசமாகவும் ஆறுதலாகவும் உணரச்செய்கிறது. ஜீவனின் உணர்வு நம்மை பலமாகவும் திருப்தியாகவும் உயிரோட்டமாகவும் பிரகாசமாகவும் ஆறுதலாகவும் உணரச்செய்வதால், அது நம்மை சமாதானத்தின் உணர்வையும்

கொண்டிருக்கச்செய்கிறது, அதாவது நலமாகவும் அமைதியாகவும் உணரச்செய்கிறது.

ரோமர் 8:6-ல் குறிப்பிடப்பட்டுள்ள காரியங்களெல்லாம் ஒன்றுக்கொன்று முரணானவைகள் என்று நாம் உணரவேண்டும். மாம்சம் ஆவிக்கு முரணாக இருக்கிறது, மேலும் மரணம் ஜீவனுக்கும் சமாதானத்துக்கும் முரணாக இருக்கிறது. மரணம் ஜீவனுக்கு மட்டுமல்ல, சமாதானத்துக்கும் எதிரானது. ஆகையால் பலவீனம், வெறுமை, மனஅழுத்தம், இருள் ஆகியவைகளை மட்டும் மரணம் உள்ளடக்கவில்லை, மரணம் வலியையும் உள்ளடக்கியிருக்கிறது. பலவீனம், வெறுமை, மனஅழுத்தம், இருள் ஆகியவைகள் ஜீவனுக்கு முரணானவைகள், ஆனால் வலி சமாதானத்துக்கு முரணாக இருக்கிறது.

மரணத்தின் உணர்வு நாம் மாம்சத்திற்கு அக்கறை செலுத்து வதால் ஏற்படுகிறது, ஆனால் ஜீவன் மற்றும் சமாதானத்தின் உணர்வு நாம் ஆவிக்கு அக்கறைசெலுத்துவதால் ஏற்படுகிறது. நாம் ஆவியில் வாழ்ந்து ஆவியைப் பின்தொடர்ந்து ஆவிக்கு அக்கறைசெலுத்தும்போது, நாம் நம்முள் பலமாகவும் திருப்தி யாகவும் உணர்கிறோம்; அதேநேரத்தில் நாம் உயிரோட்டமாகவும் பிரகாசமாகவும் ஆறுதலாகவும் அமைதியாகவும் உணர்கிறோம். எடுத்துக்காட்டாக, பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு ஓர் உணர்வைத் தந்தால், நீங்கள் அதற்கு அக்கறைசெலுத்தி கீழ்ப்படிந்தால் நீங்கள் உங்களுக்குள் பலமாகவும், திருப்தி யாகவும் உணர்வீர்கள்; அதே நேரத்தில் நீங்கள் உயிரோட்ட மாகவும் பிரகாசமாகவும் ஆறுதலாகவும் அமைதியாகவும் உணர்வீர்கள், இவ்வாறு நீங்கள் ஆவிக்கு அக்கறைசெலுத்துவதால் நீங்கள் ஜீவன் மற்றும் சமாதானத்தின் உணர்வைக் கொண்டிருப் பீர்கள்.

ரோமர் 8:6 ஜீவனின் உணர்வை குறிப்பிடுவதற்கான காரணம், இது ஆவியானவர், ஜீவன், ஜீவவிதி ஆகிய மூன்று காரியங்களை முன்னதாகவே குறிப்பிட்டுள்ளது என்பதேயாகும். ஆவியானவர் நம்மில் இருக்கிறார், நம் ஆவியோடு ஒரே ஆவியாகிவிட்டார்: ஜீவன் ஆவியானவரின் உள்ளடக்கமாக ஆவியானவரில் உள்ளடங்கியிருக்கிறது; மேலும் விதி, ஜீவனின் இயல்பான ஆற்றலும், செயல்பாடுமாக இருக்கிறது. இந்த மூன்றும் ஒன்றாக இணைந்து ஜீவனுடைய ஆவியின் விதியாகிறது; இது எந்த நேரத்திலும், எந்த இடத்திலும் நமக்கு ஒரு குறிப்பிட்ட உணர்வைத் தந்து, நம்மில் ஜீவனின் எல்லாக் காரியங்களுக்கும் பொறுப்பாக இருக்கிறது. நாம் ஆவிக்கு அக்கறைசெலுத்தி ஆவியின்படி செயல்பட்டு வாழும்போதெல்லாம், இந்த விதி ஜீவன் மற்றும் சமா தானத்தின் உணர்வை நமக்குத் தருகிறது. ஜீவனை உணர்வ

தென்றால், பலமாகவும் திருப்தியாகவும் உயிரோட்டமாகவும் பிரகாசமாகவும் பசுமையாகவும் உணர்வதாகும். சமா தானத்தை உணர்வதென்றால், ஆறுதலாகவும் அமைதலாகவும் நலமாகவும் இயல்பாகவும் உணர்வதாகும். நாம் மாம்சத்திற்கு அக்கறை செலுத்தி மாம்சத்தின்படி செயல்பட்டு வாழ்ந்தால், இந்த விதி மரணத்தின் உணர்வை நமக்குத் தரும், அதாவது நாம் பலவீன மாகவும் வெறுமையாகவும் மன அழுத்தமாகவும் இருளாகவும் வலியாகவும் உணர்வோம்.

ஆகையால் ரோமர் *8:6* முழுவதும் உணர்வைப்பற்றிய காரியத்தைப் பேசுகிறது. இந்த உணர்வு ஜீவனுடைய ஆவியின் விதியால் நமக்குத் தரப்படுகிறது. ஜீவ ஆவியின் விதி ஜீவனுக்குரியதாக இருப்பதால், அது தருகிற உணர்வும் கூட ஜீவனுக்குரியதாக இருக்கிறது. ஆகையால் ரோமர் *8:6*-ல் குறிப்பிடப்பட்டுள்ள உணர்வு, இந்த விதியால் நமக்குத் தரப்படுவதால் அது ஜீவனின் உணர்வுக்குரியதாக இருக்கிறது.

ஜீவனின் உணர்வைப்பற்றிய காரியத்தைக்குறித்து வேத வாக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டாவது இடம் எபேசியர் *4:19* ஆகும். புறவினத்தார் "உணர்வில்லாதவர்க ளாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும் படி தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக் கிறார்கள்," என்று அது கூறுகிறது. உலகத்திலுள்ள மக்கள் எல்லா உணர்வு களையும் உதறித்தள்ளிவிட்டதே அவர்கள் விருப்பத்தோடு பாவம்செய்து, ஒழுக்கக்கேட்டை நடப்பிப் பதற்கான காரணம் என்று இது நமக்குச் சொல்லுகிறது. நிச்சயமாக மனிதன் பாவம்செய்து ஒழுக்கக்கேட்டை நடப்பிக்கிறபோது, அவனுக்குள் உள்ள உணர்வுகளை அவன் ஏற்கெனவே உதறித்தள்ளியிருக்க வேண்டும். ஒரு மனிதன் பாவம்செய்து, ஒழுக்கக்கேட்டை நடப்பிக்கும்போது அவனுக்கு எந்த உணர்வும் இல்லை என்று நாம் கூறமுடியாது, ஆனால் குறைந்தது அவன் தன் உணர்வுகளை ஒதுக்கிவைத்து விட்டான் என்று நாம் கூறமுடியும். ஒருவன் உணர்வுகளை ஒதுக்கிவைக்காவிட்டால், அதாவது ஒருவன் உள்ளான உணர்வுகளால் மட்டுப்படுத்தப்பட்டால், அப்போதுகூட அவன் பாவம்செய்து ஒழுக்கக்கேட்டை நடப்பிக்கமுடியும் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? பாவம்செய்து ஒழுக்கக் கேட்டை நடப்பிக்கிறவர்கள் எல்லாரும் தங்கள் உணர்வுகளை ஒதுக்கிவைத்தவர்களே. பாவம்செய்து ஒழுக்கக்கேட்டை நடப்பிக்கிற எவனும் தன் உணர்வுகளை ஒதுக்கிவைத்தே ஆகவேண்டும். ஏமாற்றுதல், திருடுதல், மற்றவர்களை அடித்தல், மற்றவர்களைக் கொள்ளையிடுதல் அல்லது வேறு எந்தவித கெட்ட, தீய செயல்களை யாராவது ஒருவன் செய்யும்போது, அவன் தன்

உணர்வுகளை ஒதுக்கி வைத்தேயாக வேண்டும். ஒருவன் எவ்வளவு அதிகமாகப் பாவம்செய்து ஒழுக்கக்கேட்டை நடப்பிக்கிறானோ, அவ்வளவு அதிகமாக அவன் உள்ளான உணர்வை ஒதுக்கிவைக்கவேண்டும். ஆகையால் ஒரு தீய, ஒழுக்கக்கேடான மனிதன் உணர்வுகளற்றவனாக இருக்கிறான், ஆனால் ஒரு நல்ல, ஒழுக்கமான நபர் உணர்வில் செழிப்பாக இருக்கிறார்.

இப்போது ஒரு கிறிஸ்தவனின் உணர்வா, ஒரு புறவினத்தானின் உணர்வா யாருடைய உள்ளான உணர்வு பலமானது? நாம் கிறிஸ்தவர் களையும் அவிசுவாசிகளையும் ஒப்பிடுவோமானால் நம் உணர்வு பலமானதா, அவர்களுடைய உணர்வு பலமானதா? நம் உணர்வுகள் மிகப்பலமான வைகள் என்று நாம் பதிலளிக்க வேண்டும், ஏனென்றால் அவர்களிடம் உள்ள உணர்வுகளுடன் கூடுதலாக அவர்களிடம் இல்லாத ஜீவனின் உணர்வுகளும் நம்முள் இருக்கின்றன. ஆகையால் நாம் பாவம்செய்து ஒழுக்கக்கேட்டை நடப்பித்தால் நாம் அவர்களைவிட மிகக்கடுமையாக நம் உணர்வுகளை ஒதுக்கிவைத்திருக்க வேண்டும். இந்தக் காரணத்தினால்தான் புறவினத்தார் செய்கிறது போல நாமும் எல்லா உணர்வுகளையும் ஒதுக்கிவைக்கக்கூடாது என்று வேதவாக்கியம் நமக்கு அறிவுரைகூறுகிறது. இவ்வாறு நாம் நம் உள்ளான உணர்வுக்கு அக்கறைசெலுத்த வேண்டுமென்று வேதவாக்கியம் நம்மை உற்சாகப்படுத்துகிறது. நிச்சயமாக இது ஜீவனின் உள்ளான உணர்வுக்குச் செவிகொடுப்பதை வலியுறுத்துகிறது. எல்லா உணர்வுகளையும் ஒதுக்கி வைக்கிற அவிசுவாசிகளைப்போல இருக்கக்கூடாது என்று நமக்கு எபேசியர் 4 அறிவுரைகூறியபிறகு, நாம் பழைய மனிதனை கழற்றிப்போட்டு, புதிய மனிதனை அணிந்துகொள்ள வேண்டும் என்று தொடர்ந்து கூறுகிறது. இந்தப் புதிய மனிதன் ஆவியானவரிலுள்ள ஜீவனுக்குரியவன். இந்தப் புதிய மனிதனில் வாழ்வதற்கு ஆவியானவரிலுள்ள ஜீவனில் நாம் வாழவேண்டும். ஆகையால் அவிசுவாசிகளைப்போல நாமும் எல்லா உணர்வு களையும் உதறித்தள்ளாமல் இந்தப் புதிய மனிதனில் வாழவேண்டும் என்று எபேசியர் 4 நமக்கு அறிவுரை கூறுகிறது. ஆவியானவரிலுள்ள ஜீவனில் நாம் வாழ்ந்து, ஆவியானவரிலுள்ள ஜீவனின் உணர்வுக்கு அக்கறைசெலுத்தி, ஜீவனின் இந்த உணர்வின்படி வாழவேண்டும் என்பதே இதன் அர்த்தமாகும்.

மேலும் ஏறக்குறைய அப்போஸ்தலர்களின் எல்லா நிருபங்க ளிலும் கிருபை, சமாதானம் என்று குறிப்பிடப் பட்டிருக்கிற ஆசீர்வாதம் மற்றும் வாழ்த்துதலின் வார்த்தைகள் இருக்கின்றன. நம்மால் ஆதாயப்படுத்தப்படும் தேவனே கிருபை, தேவனை ஆதாயப்படுத்திக்கொண்டதின் உணர்வே சமாதானம். நம் ஜீவனாக

மாறுவதற்கும், நாம் அனுபவித்து மகிழ்வதற்கும் நம்மால் ஆதாயப்படுத்தப்படும் தேவனே கிருபை. இந்தக் கிருபை நமக்குள் சமாதானத்தை விளைவிக்கிறது; இது நமக்குள் சமாதானத்தின் உணர்வை கொண்டிருக்கச் செய்கிறது. அனுதினமும் தேவனை அனுபவமாக்குகிற, தேவனுடைய ஜீவனை அனுபவித்துமகிழ்கிற, தேவனுடைய ஜீவனின் வல்லமையை ருசிபார்க்கிற ஒரு நபர் தனக்குள் சமாதானத்தைக் கொண்டிருந் தேயாகவேண்டும். இந்த சமாதானம் அவன் கிருபையை அனுபவிக்கும்போது கொண்டிருக் கிற உணர்வாகும். ஆகையால் நாம் நம்முள் சமாதானத்தைக் கொண்டிருக்கவில்லையென்றால் அல்லது சமாதானத்தை உணரவில்லையென்றால், நாம் கிருபையில் குறைவுபட்டிருக்கி றோம் என்பதையே இது நிரூபிக்கிறது. நாம் கிருபையில் குறைவுபடுகிறபோது நாம் தேவனில் குறைவுபடுகிறோம் என்று அர்த்தமாகும். நம்முள் போதுமான அளவுக்கு தேவனை ஆதாயப்படுத்திக்கொள்ளாததாலும், தேவனுடைய ஜீவனின் போதுமான நிரப்பீட்டைப் பெற்றுக்கொள்ளாததாலும், தேவனுடைய ஜீவனின் வல்லமையை போதுமான அளவுக்கு அனுபவமாக்காத தாலும் நாம் நம்முள் சமாதானத்தில் குறைவுபடுகிறோம். நாம் நம்முள் போதுமான அளவுக்கு தேவனை ஆதாயப்படுத்தி யிருந்தால், போதுமான அளவுக்கு தேவனையும் தேவனுடைய ஜீவனையும் அனுபவமாக்கியிருந்தால், நாம் நம்முள் போதுமான அளவுக்கு சமாதானத்தைக் கொண்டிருப்போம். இந்தச் சமாதானம் சுற்றுப்புறச்சூழலில் உள்ள சமாதானமல்ல, மாறாக உள்ளான சமாதானத்தின் ஒரு நிலைமையாகும். அப்போஸ்தலர்களின் வாழ்த்துதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள சமாதானம் இந்த வகையான உள்ளான சமாதானம் என்று நாம் விசுவாசிக்க வேண்டும். உள்ளான சமாதானம் என்பது உணர்வைப்பற்றிய காரியமாகும். மக்கள் சமாதானத்தைக் கொண்டிருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் வாழ்த்தினபோது, மக்கள் உள்ளான உணர்வின் சமாதானத்தை அல்லது உள்ளான சமாதானத்தைக் கொண்டிருக்கவேண்டுமென்று அவர்கள் வாழ்த்தினார்கள் என்று அர்த்தமாகும். சமாதானத்தின் உள்ளான உணர்வு ஜீவனின் உணர்வாகும். ஆகையால் மக்கள் உள்ளான சமாதானத்தின் உணர்வைக் கொண்டிருக்கவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் வாழ்த்தியபோது, மக்கள் ஜீவனின் உள்ளான உணர்வுக்குக் கவனம்செலுத்தவேண்டும் என்று அப்போஸ்தலர்கள் விரும்பி னார்கள்.

## II. ஜீவனின் உணர்வின் ஊற்று

நாம் பேசிக்கொண்டிருக்கிற ஜீவனின் உணர்வு எங்கிருந்து வருகிறது? அது எதிலிருந்து உற்பத்திசெய்யப்படுகிறது? அது

மறுபிறப்பின்மூலம் நாம் ஆதாயப்படுத்திக்கொண்ட தேவனுடைய ஜீவன், ஜீவவிதி, பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்து, தேவன் ஆகியவர்களிலிருந்து உற்பத்திசெய்யப்படுகிறது. தேவனுடைய ஜீவன், ஜீவவிதி, பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்து, தேவன் ஆகியவர்கள் ஓர் உணர்வை நம்முள் ஏற்படுத்துகிறார்கள். இந்த உணர்வைத்தான் நாம் ஜீவனின் உணர்வு என்று அழைக்கிறோம்.

ஒவ்வொரு ஜீவனுக்கும் அதனதன் உணர்வுகள் இருக் கின்றன. மேலும் ஜீவன் எவ்வளவு பலமாக இருக்கிறதோ அவ்வளவு கூர்மையாக அதன் உணர்வுகளும் இருக்கிறது. தேவனுடைய ஜீவனே மிகப்பலமான ஜீவன்; ஆகையால் நம்மிலுள்ள இந்த ஜீவன் வெறுமனே உணர்வுகளை மட்டுமல்ல, பலமான உணர்வு களையும் ஏற்படுத்துகிறது.

ஜீவவிதி ஜீவனிலிருந்து வருவதால், அதற்கும் உணர்வுகள் இருக்கின்றன. ஆகையால் நம்மிலுள்ள இந்த விதி விசேஷமாக நாம் அதற்குக் கீழ்ப்படியாதபோது உணர்வுகளை ஏற்படுத்துகிறது. எடுத்துக் காட்டாக, நம் உடல் சாதாரணமாக இருக்கும்போது, எந்த விசேஷ உணர்வும் அதில் இல்லை. ஆனால் அது நோய்வாய்ப்படும்போது அதில் பலமான உணர்வு இருக்கிறது, மேலும் இந்தப்பலமான உணர்வு உடலுக்குள் இருக்கிற விதிக்கு நாம் கீழ்ப்படியாதபோது நிகழ்கிறது. அதைப்போல, நாம் ஜீவவிதிக்குக் கீழ்ப்படியும்போது அது அதிக உணர்வை நமக்குத் தருவதில்லை, ஆனால் நாம் அதற்குக் கீழ்ப்படியாதபோது அது மிகவும் வேறுபட்ட உணர்வுகளைத் தருகிறது.

பரிசுத்த ஆவியானவர் தைலமாக நம்மில் அபிஷேகித்து அசைகிறார்; கிறிஸ்து செயல்பாடுடன் நம்மில் வாழ்கிறார்; மேலும் தேவன் நம்மில் வேலைசெய்கிறார். மூவரும் செயல் பாட்டோடும் நடவடிக்கையோடும் நம்மில் இருக்கிறார்கள். அவர்கள் அமைதி யாகவும் இல்லை, அசைவற்றவர்களாகவும் இல்லை; ஆகையால் அவர்கள் எல்லாரும் நம்மில் உணர்வுகளை ஏற்படுத்துகிறார்கள்.

இவ்வாறு அது நம்முள் இருக்கிற தேவனுடைய ஜீவனோ, ஜீவவிதியோ, பரிசுத்த ஆவியானவரோ, கிறிஸ்துவோ, தேவனோ யாராக இருந்தாலும் அவர்கள் நமக்கு உணர்வுகளை ஏற்படுத்துகிறார்கள். மேலும் அவர்கள் நமக்கு உணர்வுகளைத் தருவதில் ஒன்றாக கலந்திணைந்திருக்கிறார்கள். ஆகையால் இந்த ஐந்து காரியங்களிலிருந்து வருகிற உணர்வுகள் ஐந்து வகையான உணர்வுகள் அல்ல, மாறாக ஒரே உணர்வு, அதாவது நாம் பேசுகிற ஜீவனின் உணர்வாகும்.

தேவனுடைய ஜீவன், ஜீவவிதி, பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்து, தேவன் ஆகிய இந்த ஐந்திலிருந்தும் வருகிற உணர்வுகள் ஒரே வகையான உணர்வாக இருப்பது ஏன்? மேலும் இந்த

உணர்வு ஜீவனின் உணர்வாக இருப்பது ஏன்? இது ஏனென்றால், பரிசுத்த ஆவியானவரும் கிறிஸ்துவும் தேவனும் மூவொரு தேவனாக இருக்கிறார்கள்; தேவனுடைய ஜீவன் தேவனே; இந்த ஜீவவிதி தேவனுடைய ஜீவனிலிருந்து வருகிறது. ஆகையால் கண்டிப்பாகப் பேசுவதானால் இந்த ஐந்தும் ஒன்றே. ஆகையால் இவர்கள் நம்மிலிருக்கும்போது, நமக்குத் தருகிற உணர்வுகள் ஒரே வகையான உணர்வாகவே இருக்கிறது. இது ஜீவனின் மூவொரு தேவனிலிருந்தும் தேவனுடைய ஜீவனிலிருந்தும் ஜீவவிதியிலிருந்தும் வருவதே, இந்த உணர்வு ஜீவனின் உணர்வாக இருப்பதின் காரணமாகும். நம் ஜீவனாவதே நம்மிலுள்ள மூவொரு தேவனுடைய பிரதான குறிக்கோளாகும். மேலும் இந்த ஜீவன் ஜீவவிதியையும் உள்ளடக்கியிருக்கிறது. ஆகையால் இவர்கள் நமக்கு ஏற்படுத்துகிற உணர்வுகள் ஜீவனிலிருந்து வருகின்றன, ஜீவனுக்குரியதாக இருக்கின்றன; எனவே, இவைகள் ஜீவனின் உணர்வாக இருக்கின்றன. இந்த உணர்வு ஒன்றுதான், ஆனால் இதற்கு ஐந்து அம்சங்கள் இருக்கின்றன. இது தேவனுடைய ஜீவனிலிருந்து வருகிறது, மேலும் இது தேவனுடைய ஜீவவிதியிலிருந்து வருகிறது; ஆகையால் இதற்கு தேவனுடைய ஜீவனின் சுபாவமிருக்கிறது, இதைப்போல தேவனுடைய ஜீவவிதியின் செயல்பாடும் இருக்கிறது. அதே நேரத்தில், இந்த உணர்வு பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்து, தேவன் ஆகியோரிடமிருந்தும் வருகிறது; ஆகையால் இது நம்மில் பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தின் மூலக்கூறையும், நம்மில் வாழ்கிற கிறிஸ்துவின் மூலக்கூறையும், நம்மில் அவருடைய சித்தத்தை உருவாக்குகிற, நிறை வேற்றுகிற, தேவனுடைய மூலக்கூறையும் உள்ளடக்கியிருக்கிறது. இந்த பல்வேறு அம்சங்களினால், இந்த உணர்வு வளமாகவும் பலமாகவும் கூர்மையாகவும் இருக்கிறது; இது அவிசுவாசிகளிடையே உள்ள மிகச்சிறந்த உணர்வைவிட இன்னும் வளமாகவும் பலமாகவும் கூர்மையாகவும் இருக் கிறது. அவிசுவாசிகள் கொண்டிருக்கக்கூடிய மிகச்சிறந்த உணர்வுகள் மனிதர்களிலுள்ள படைக்கப்பட்ட நன்மையின் உணர்வேயாகும். ஆனால், படைக்கப்பட்ட நன்மையின் உணர்வோடுகூட, இந்த ஜீவனின் உணர்வு மறுபிறப்பின் மூலம் நாம் ஆதாயப்படுத்திக் கொண்ட காரியங்களால் நமக்குள் கூட்டிச்சேர்க்கப்பட்ட ஒரு தெய்வீக உணர்வாகும்.

## III. ஜீவனின் உணர்வின் செயல்பாடு

அப்படியானால் இந்த ஜீவனின் உணர்வின் செயல்பாடு அல்லது உபயோகம்தான் என்ன? நாம் எங்கு வாழ்கிறோம்

என்பதை தொடர்ச்சியாக நாம் அறிந்துகொள்ளும்படிச் செய்வதே ஜீவனின் உணர்வின் செயல்பாடு அல்லது உபயோகமாகும். நாம் இயற்கையான ஜீவனில் வாழ்கிறோமா ஆவியானவரின் ஜீவனில் வாழ்கிறோமா? நாம் மாம்சத்தில் வாழ்கிறோமா ஆவியில் வாழ்கிறோமா? இதைத்தான் ஜீவனின் உணர்வு நமக்கு தொடர்ச்சியாக தெரியப்படுத்துகிறது, மேலும் இதற்காகத்தான் நம்மிடம் ஜீவனின் உணர்வு இருக்கிறது. ஆகையால், நம்மில் ஜீவனின் உணர்வு நம்மை வழிநடத்தி நம்மை சோதித்தறிகிறது. நாம் ஜீவனின் உணர்வைப் பின்தொடர்ந்தால் தேவன் நமக்குக் கொடுக்கிற வழி நடத்துதலை நாம் பின்தொடர்கிறோம், மேலும் அதேநேரத்தில் நாம் எங்கு வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதைப்பற்றிய சரிபார்த்தலையும் பெறுகிறோம்.

நாம் கூறியதை இப்போது பிரயோகிப்போம். மரணத்தின் உணர்வு நாம் ஆவியில் வாழவில்லை, மாம்சத்தில் வாழ்கிறோம் என்பதை நமக்குத் தெரியப்படுத்துகிறது. நாம் மரணத்தின் உணர்வைக் கொண்டிருக்கும்போது, நாம் ஆவியில் இல்லை, மாம்சத்தில் இருக்கிறோம் என்பதை நாம் அறியவேண்டும். பலவீனம், வெறுமை, மனஅழுத்தம், இருள், வலி ஆகியவைகளை மரணத்தின் உணர்வு உள்ளடக்கியிருக்கிறது. இப்படிப்பட்ட உணர்வுகளை நாம் கொண்டிருக்கும்போது, நாம் ஏற்கெனவே சரியாக இல்லை, அதாவது நாம் ஏற்கெனவே ஆவியில் வாழாமல் மாம்சத்தில் வாழ்கிறோம் என்பதை நம்மிலுள்ள ஜீவனின் உணர்வு நமக்குத் தெரியப்படுத்துகிறது என்பதே இதன் அர்த்தமாகும்.

அப்படியானால் நாம் தேவனுக்குமுன்பாக சரியாக இருக்கிறோம், மேலும் ஆவியில் வாழ்கிறோம் என்று நாம் அறிவதற்கு, ஜீவனின் உணர்வு எந்த உணர்வைத்தான் தருகிறது? அது ஜீவன் மற்றும் சமாதானத்தின் உணர்வை நமக்குத் தருகிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால், அது பலமாகவும் திருப்தியாகவும் உயிரோட்டமாகவும் பிரகாச மாகவும் ஆறுதலாகவும் நம்மை உணரச்செய்கிறது. நாம் எப்போதெல்லாம் பலமாகவும் திருப்தியாகவும் உயிரோட்ட மாகவும் பிரகாசமாகவும் ஆறுதலாகவும் நம்முள் உணர்கிறோமோ, அப்போதெல்லாம் நாம் தேவனுக்குமுன்பாக சரியாக இருக்கிறோம் என்பதற்கும், நாம் ஆவியில் வாழ்கிறோம் என்பதற்குமான உள்ளார்ந்த நிரூபணம் நம்மிடம் இருக்கிறது.

ஆகையால், நம்முள் ஜீவனின் உணர்வுக்கு மிகப்பெரிய செயல்பாடு இருக்கிறது. இது தொடர்ச்சியாக நம்மை வழிநடத்தி, நாம் எங்கு வாழவேண்டும் என்பதை நமக்குத் தெரியப்படுத்து கிறது; மேலும் நாம் இப்போது எங்கு வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை இது நமக்குத் தொடர்ச்சியாக நிரூபித்துக்காட்டுகிறது.

ஜீவனில் நம்மை தொடர்ந்து வழிநடத்துவதும் இந்த உணர்வுதான்; ஜீவனில் நம் நிஜமான நிலைமையை நமக்கு தொடர்ச்சியாக நிரூபித்துக்காட்டி, வெளிப்படுத்துவதும் இந்த உணர்வுதான். எனவே இது நம்முள் நம் வழிகாட்டியாகவும் சாட்சியாகவும் இருக்கிறது. இது உள்ளார்ந்த ஜீவனையும் சமாதானத்தையும் நம்மை உணரச்செய்யும்போதெல்லாம், ஜீவனில் நமக்கு எந்தப் பிரச்சனையும் இல்லையென்று நிரூபிக்கிறது. ஜீவனும் சமாதானமும் இல்லாததாக அது நம்மை உணரச்செய்யும் போதெல்லாம், ஜீவனில் நமக்கு ஏதோவொரு பிரச்சினை இருக்கிறது என்று நிரூபித்துக்காட்டுகிறது.

உங்களுக்குள் ஜீவன் மற்றும் சமாதானம் இருப்பதின் உணர்வு இல்லையென்றோ, ஜீவன் மற்றும் சமாதானம் இல்லாததின் உணர்வும் இல்லையென்றோ நீங்கள் சொல்லக்கூடும், அதாவது பலமாக, திருப்தியாக, உயிரோட்டமாக, பிரகாசமாக அல்லது ஆறுதலாக இருப்பதின் உணர்வும் உங்களுக்கு இல்லை, மேலும் பலமாக, திருப்தியாக, உயிரோட்டமாக, பிரகாசமாக அல்லது ஆறுதலாக இல்லாததின் உணர்வும் உங்களுக்கு இல்லை என்று நீங்கள் சொல்லக்கூடும். இப்படிப்பட்ட நிலைமையில் இருப்பது, நீங்கள் ஒரு பிரச்சினையில் இருக்கிறீர்கள் என்பதை நிரூபிக்கிறது. நேர்மறையாக, நமக்கு ஜீவன் மற்றும் சமாதானத்தின் உணர்வு இருக்கவேண்டும். நாம் உள்ளே பலமாகவும் திருப்தியாகவும் உயிரோட்டமாகவும் பிரகாசமாகவும் ஆறுதலாகவும் அமைதி யாகவும் உணரவேண்டும்; அப்போது எல்லாம் நன்றாக இருக்கிறது. சிலவேளைகளில், தேவன் நம்மை நம் உணர்ச்சிகளை விட்டு வெளியே நடத்திச்சென்று, ஒரு குகைக்குள் நம்மை நுழைவதுபோல செய்யவிரும்பினாலும், அந்தக் குகையில்கூட நம் மிக ஆழமான பகுதியில் நமக்கு ஜீவன் மற்றும் சமாதானத்தின் உணர்வு இன்னும் இருக்கிறது. வெளியார்ந்த உணர்ச்சிகள் போய்விட்டபோதிலும், மிக ஆழமான பகுதியில் ஜீவன் மற்றும் சமாதானத்தின் உணர்வு இன்னும் இருக்கிறது.

ஜீவனும் சமாதானமும், ஜீவனின் உணர்வு நமக்குள்ளே தருகிற நேர்மறையான உணர்வுகளாகும், இது ஜீவனில் நம் நிலைமை இயல்பாக இருக்கிறது என்று நிரூபிக்கிறது. பலவீனமும் அமைதியின்மையும், ஜீவனின் உணர்வு நமக்குள்ளே தருகிற எதிர்மறையான உணர்வுகளாகும், இது ஜீவனில் நாம் ஏதோ பிரச்சினையைக் கொண்டிருக்கிறோம் என்று நிரூபிக்கிறது. பலவீனமும் அமைதியின்மையும் ஆகிய உணர்வுகள் மரணத்தின் உணர்வாக இருக்கின்றன. மரணத்தின் உணர்வு நிச்சயமாக நாம் மாம்சத்திற்கு அக்கறை செலுத்துவதிலிருந்தும், தேவனுக்குப் புறம்பான எந்தக் காரியத்தைத் தொடுவதிலிருந்தும் வருகிறது.

மரணத்தின் ஒவ்வொரு உணர்வும் நாம் ஏறக்குறைய மாம்சத்திற்கு அக்கறைசெலுத்துகிறதையும், தேவனுக்கு புறம்பான காரியங் களை ஓரளவிற்குத் தொட்டுவிட்டதையும் நிரூபிக்கிறது. ஆகையால் நாம் மாம்சத்திற்கு அக்கறைசெலுத்துகிறோமா, ஆவியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா, தேவனைத் தொட்டுக் கொண்டிருக்கிறோமா என்பவையெல்லாம் நம்முள் இருக்கும் ஜீவனையும் சமாதானத்தையும் அல்லது பலவீனத்தையும் அமைதியின்மை யையும் சார்ந்திருக்கிறது. ஜீவனும் சமாதானமும் உள்ளே இருந்தால் அது நாம் ஆவியில் வாழ்ந்துகொண்டிருக்கிறோம், நாம் தேவனைத் தொட்டுக்கொண்டிருக்கிறோம் என்பதை நிரூபிக்கிறது. நாம் உள்ளே பலவீனமாகவும் அமைதியின்மை யாகவும் உணர்ந்தால் அது நாம் மாம்ச சிந்தையுடையவர்களாய் இருக்கிறோம் என்றும், தேவனுக்குப் புறம்பான காரியங்களைத் தொட்டுக்கொண்டிருக்கிறோம் என்றும் நிரூபிக்கிறது.

ஒரு கிறிஸ்தவன் ஒருபோதும் பலவீனமாக உணரக்கூடாது என்பது அவசியமில்லை, ஆனால் அவன் பலவீனமாக உணரும்போதுகூட, இன்னும் அவன் பலமாக இருப்பதாக உணரவேண்டும். அவன் பலவீனமாக உணர்வது ஏனென்றால் அவன் தன்னையே அறிந்துகொண்டான்; அவன் பலமாக உணர்வது ஏனென்றால் அவன் கிறிஸ்துவைத் தொட்டு கிறிஸ்துவை தன் ஜீவனாக அறிகிறான். நாம் தொடர்ந்து பலவீனத்தை மட்டுமே உணர்ந்து ஒருபோதும் பலமாக உணரவில்லையென்றால், ஏதோ தவறு இருக்கிறது. தான் பலவீனமாக இருக்கிறபோதெல்லாம் தான் பலமாக இருப்பதாக அப்போஸ்தலன் கூறினார் (*2 கொரி. 12:10*). பலமான ஒரு நபர் தன் சொந்த பலவீனத்தை உணரும்போது, அந்தப் பலவீனத்தை பொருட்படுத்துவதில்லை. நாம் எப்போதுமே நம் பலவீனத்தை சிந்தித்து பலமாக இருக்கமுடியாவிட்டால், நமக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது என்று இது நிரூபிக்கிறது. நாம் ஏறக்குறைய மாம்சத்திலேயே இருந்துகொண்டிருக்கக்கூடும், ஏனென்றால் பலவீனம் மரணத்தின் ஓர் உணர்வாகும், மேலும் மரணத்தின் உணர்வு எப்போதுமே மாம்சத்திற்கு அக்கறைசெலுத்துவதிலிருந்தே வருகிறது.

ஒரு கிறிஸ்தவன் பலவீனமாக இருந்தால்கூட பலமாக உணரக்கூடும். அவன் வலியை உணர்ந்தால்கூட சமாதானத்தின் உணர்வைக்கொண்டிருக்கக்கூடும். அவன் வலியை உணர்வது ஏனென்றால், வெளியே இருந்து வரும் உபத்திரவத்தை சந்திக்கிறான்; அவன் சமாதானத்தின் உணர்வைக் கொண் டிருப்பது ஏனென்றால், தன் உள்ளிலிருந்து கர்த்தரைச் சந்திக்கிறான், கர்த்தரைத் தொடுகிறான். நாம் வெளியே இருந்து

உபத்திரவத்தை சந்தித்தும் உள்ளார்ந்தரீதியில் நமக்கு சமாதானம் இல்லையென்றால் ஏதோ தவறு இருக்கிறது. உலகத்தில் நமக்கு உபத்திரவம் இருக்கிறது, ஆனால் தம்மில் சமாதானம் இருக்கிறது என்று கர்த்தர் கூறுகிறார் (யோவான் *16:33*). கர்த்தரில் வாழ்கிற ஒருவன் அல்லது ஆவியில் வாழ்கிற ஒருவன், வெளியிலிருந்து அதிக உபத்திரவத்தைச் சந்திக்கக்கூடும், இருப்பினும் அவனுக்கு இன்னும் உள்ளார்ந்தரீதியில் சமாதானம் இருக்கிறது; இல்லாவிட்டால், அவன் ஆவியில் வாழவில்லை என்று அது நிரூபிக்கிறது. உபத்திரவத்தில் இருக்கும்போது, நமக்கு உள்ளார்ந்த சமாதானம் குறைவுபட்டால், நாம் ஆவியில் வாழவில்லை என்று அது நிருபிக்கிறது; எந்த உபத்திரவமும் இல்லாமல் இருக்கும்போதும் நமக்கு உள்ளார்ந்த சமாதானம் இல்லை யென்றால், நாம் ஆவியில் வாழவில்லை என்பதற்கு அது இன்னும் அதிகமான நிரூபணமாகும்.

ஆகையால், ஜீவனில் நம் நிலைமையைப் பொறுத்தவரை, நாம் மாம்சத்திற்கு அக்கறைச்செலுத்துகிறவர்கள் அல்லது ஆவிக்கு அக்கறைசெலுத்துகிறவர்கள், நாம் மாம்சத்தில் வாழ்கிறோம் அல்லது ஆவியில் வாழ்கிறோம் என்பது ஜீவனின் உணர்வின் மூலம் நமக்கு நிரூபிக்கப்பட்டு, தெரியப் படுத்தப்படுகிறது. இவ்விதமான நிரூபித்தல்மூலமாகத்தான் ஜீவனின் உணர்வு நமக்குள்ளிருந்து வழிகாட்டுதலைத்தருகிறது. நாம் இவ்விதமான நிரூபித்தலின் வழிகாட்டுதலைப் பின்தொடர்ந்தால் தான் நாம் ஜீவனில் வாழமுடியும். ஆகையால், நாம் ஜீவனில் தொடர்ந்து செல்ல விரும்பினால், இந்த ஜீவனின் உணர்வு உள்ளிருந்து நமக்குத் தருகிற நிரூபித்தலுக்கும் வழிநடத்துதலுக்கும் நாம் கவனம்செலுத்த வேண்டும்.

### அத்தியாயம் ஆறு

## ஜீவனின் ஐக்கியம்

இரண்டு காரியங்களை நிறைவேற்றும் நம்பிக்கையுடன், இந்தப் புத்தகத்தில் ஜீவனின் காரியத்திற்கு நம் கவனத்தைத் திருப்புகிறோம்: முதலாவது நாம் இங்கு குறிப்பிடுகிற ஜீவனின் அனுபவம் ஒவ்வொரு சகோதரனுக்கும் சகோதரிக்கும் இருக்கிறதா இல்லையா என்பதை அவனோ அவளோ அறிந்து கொள்ள உதவுவதாகும்; இரண்டாவது, அவர்கள் மற்ற இடங்களுக்குச் சென்று ஆவியில் இதைப் பேசும்படி ஜீவனின் வழியை முற்றும்முடிய புரிந்துகொள்வதற்கு சகோதர சகோதரிகளை வழிநடத்துவதாகும். இந்தப் புத்தகம் பொதுவான போதனைக்காக இல்லை, ஆனால் ஒரு விசேஷமான ஆய்வுசெய்தலாக இருக்கிறது. ஜீவனின் எல்லாக் காரியங்களும் உங்களிடம் இருக்கிறதா என்பதைப் பார்ப்பதற்கு இந்த எல்லாக் காரியங்களையும் உங்களிடம் நாங்கள் கொண்டுவர விரும்புகிறோம். நீங்கள் அவைகளைக் கொண்டிருந்தால் அவைகளை உங்களால் பேசமுடியுமா? மற்றவர்களுடைய உணர்வுகளைத் தொடும்படி உங்களால் பேச முடியுமா? அவைகளை உபதேசமாக மட்டுமல்ல அனுபவ மாகவும் உங்களால் பேசமுடியுமா? இந்தக் காரணத்தினால் தான், ஜீவனின் ஒவ்வொரு பதமும் குறிக்கிற காரியங்கள் நம்மிடம் இருக்கிறதா இல்லையா என்பதை பரிசோதித்துப் பார்க்க மட்டுமல்ல, ஒவ்வொரு பதத்தின் வரையறையையும் உபயோகத்தையும் கண்டுபிடிக்கவும் நாம் விரும்புகிறோம்.

இன்று ஒவ்வொரு சபைக்கும் ஜீவனின் காரியங்களே மிகவும் தேவையானது என்ற மிகக் கனமான பாரம், மிக ஆழமான உணர்வு எனக்குள் இருக்கிறது. நம் எல்லா வேலையும் நடவடிக்கையும் ஜீவனிலிருந்தே வரவேண்டும். நாம் அதிகமான வேலையிலும் நடவடிக்கையிலும் ஈடுபடக் கூடாது என்பதல்ல இதன் அர்த்தம். நம் வேலையும் நடவடிக்கையும் பின்னாளில் அதிகரிக்கலாம், மேலும் இன்னும் அதிகமாக இன்றைவிட அதிதீவிரமாக்கப்படலாம். அது ஜீவனிலிருந்து வெளிவராதவரை, நம் வேலையும் சேவையும் நீடித்திருக்காது அல்லது அதற்கு அதிகக் கனம் இருக்காது. நம் வேலை மிகுதியான, நிலைத்திருக்கக்கூடிய கனிகொடுக்க வேண்டும் என்று நாம் விரும்பினால், நமக்கு ஜீவனில் அஸ்திவாரம் இருக்கவேண்டும். நாம் ஜீவனில் கர்த்தரைத் தொடவேண்டும், மற்றவர்களை ஜீவனில் கர்த்தரைத் தொடுவதற்கு நடத்தவேண்டும். அப்போது

மட்டுமே தேவன் இந்த யுகத்தில் செய்யவிரும்பும் வேலைக்கு நாம் பொருத்தமாக இருக்கமுடியும்.

நம் வேலையின் எல்லா விளைவுகளும் ஜீவனால் அளக்கப்படவேண்டும். ஜீவனிலிருந்து வருபவை மட்டுமே தேவனால் அங்கீகரிக்கப்படும். சிலர் சுவிசேஷத்தை பிரசங்கிக் கிறார்கள் சிலர் பிசாசுகளைத் துரத்துகிறார்கள், இருப்பினும் அவர்கள் அவரால் அங்கீகரிக்கப்படவில்லை என்று மத்தேயு 7-ல் கர்த்தர் கூறுகிறார் (வ. 22-23). மேலும் சிலர் பொறாமையினால் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கிறார்கள் என்று பிலிப்பியர் 1-ல் அப்போஸ்தலன் கூறுகிறார் (வ. 15). சந்தேகமேயில்லாமல் இப்படிப்பட்ட வேலைகள் ஜீவனி லிருந்து வரவில்லை, ஆனால் மனித செயல்களிலிருந்து வருகின்றன. நாம் இப்படிப்பட்ட வேலையைச் செய்ய முடியாது, செய்யவும்கூடாது. நாம் கர்த்தருடைய ஜீவனில் வாழவும், அவருடைய வேலையைச் செய்வதற்கு நம்மை நடத்த அவருடைய ஜீவனை அனுமதிக்கவும் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் ஏதோவொரு மாபெரும் வேலையை அல்லது வேலையில் எதையோ சாதிப்பதற்கு வாஞ்சிக்கக்கூடாது. கர்த்தருடைய ஜீவனை அதிகமாக அறிந்து அனுபவ மாக்குவது, மற்றவர்களும் ஏதோவொன்றைப் பெற்றுக் கொள்ளும்படி நாம் அறிந்துகொண்டு அனுபவமாக்கியதை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுவது என்ற ஒரேவொரு விருப்பம் மட்டுமே நமக்கு இருக்கவேண்டும். நாம் வேலைசெய்யும்போது ஒரு வேலையை நிறுவக்கூடாது; ஒரு நிறுவனத்தை ஏற்படுத்தவும்கூடாது. கர்த்தருடைய ஜீவனை விடுவிப்பது மட்டுமே, அதாவது மற்றவர்களுக்கு கர்த்தருடைய ஜீவனைப் பகிர்ந்தளிப்பதும் வழங்குவதுமே நம் வேலையாக இருக்கவேண்டும். மனிதன் அவருடைய ஜீவனை ஆதாயப்படுத்தி, அவருடைய ஜீவனில் வளர்ந்து முதிர்ச்சியடைவதே இந்த யுகத்தில் தேவனுடைய மைய வேலை என்பதைப் பார்ப்பதற்கு கர்த்தர்தாமே நம்மேல் இரக்கமாயிருந்து நம் கண்களைத் திறப்பாராக. அவருடைய ஜீவனிலிருந்து வருகிற வேலை மட்டுமே, அவருடைய நித்திய தரத்தை எட்டி அவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

முந்தைய அத்தியாயத்தில், ஜீவனின் உணர்வை நாம் பார்த் திருக்கிறோம். ஜீவனின் உணர்வுக்கு நெருக்கமாகத் தொடர்புடையதே ஜீவனின் ஐக்கியமாகும். எனவே, நாம் இப்போது ஜீவனின் ஐக்கியத்தைப் பார்ப்போமாக.

## I. ஜீவனின் ஐக்கியத்தின் ஊற்று

ஜீவனின் ஐக்கியம் எங்கிருந்து வருகிறது? அதன் காரணி என்ன? மேலும் அது எதிலிருந்து வருகிறது? “எங்களுக்கு

(அப்போஸ்தலர்கள்) வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை...நீங்களும் (விசுவாசிகள்) எங்களோடு ஐக்கியமுள்ளவர் களாகும்படி...உங்களுக்கும் அறிவிக்கிறோம்; எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது" என்று 1 யோவான் 1:2-3 கூறுகிறது. நாம் "ஐக்கியம்" கொள்ளும்படி அப்போஸ்தலர்கள் "நித்திய ஜீவனை" நமக்கு அறிவித்தார்கள் என்று இந்த வசனங்கள் காட்டு கின்றன. நித்திய ஜீவன் தேவனுடைய ஜீவனாக இருக்கிறது, மேலும் நமக்குள் நுழைகின்ற தேவனுடைய ஜீவன் ஐக்கியம் கொள்ளும்படி நமக்குத் திறனளிக்கிறது. இந்த ஐக்கியம் தேவனு டைய ஜீவனிலிருந்து வருவதால், இது ஜீவனின் ஐக்கியமாக இருக்கிறது. ஆகையால் ஜீவனின் ஐக்கியம் தேவனுடைய ஜீவனிலிருந்து வருகிறது; அதன் இருத்தல் தேவனுடைய ஜீவனா லானது; அது தேவனுடைய ஜீவனிலிருந்து வருகிறது; மேலும் அது தேவனுடைய ஜீவனால் நம்மிடம் கொண்டுவரப்படுகிறது. நம்முள் தேவனுடைய ஜீவனை நாம் பெற்றுக்கொண்ட உடனே, நாம் ஜீவனின் ஐக்கியத்தைப் பெறுவதற்கு இந்த தேவனுடைய ஜீவன் நமக்குத் திறனளிக்கிறது. ஆகையால் தேவனுடைய ஜீவனே ஜீவனின் ஐக்கியத்தின் ஊற்றாகும்.

## II. ஜீவனின் ஐக்கியத்தின் ஊடகம்

தேவனுடைய ஜீவன் தேவனுடைய பரிசுத்த ஆவியில் இருக்கிறது, மேலும் தேவனுடைய பரிசுத்த ஆவியின்மூலம் தான் தேவனுடைய ஜீவன் நமக்குள் நுழைந்து நம்மில் வாழ்கிறது. ஆகையால் தேவனுடைய ஜீவனால் நமக்குக் கொண்டுவரப்படுகிற ஐக்கியம் தேவனுடைய ஜீவனிலிருந்து வந்தாலும், அது தேவனுடைய பரிசுத்த ஆவி என்னும் ஊடகத்தால்தான் வருகிறது. எனவே வேதாகமம் இந்த ஐக்கியத்தை "பரிசுத்த ஆவியின் ஐக்கியம்" என்றும் அழைக்கிறது (2 கொரி. 13:14, "அந்நியோந்நியம்" என்பது மூலப்படிவத்தில் "ஐக்கியம்" ஆகும்).

பரிசுத்த ஆவியானவர்தான் தேவனுடைய ஜீவனின் அனுபவத்தை நமக்குக் கொடுக்கிறவர்; ஆகையால் பரிசுத்த ஆவியானவர்தான் தேவனுடைய ஜீவனில் ஐக்கியம்கொள்ள நமக்குத் திறனளிக்கிறவர். நம் ஜீவனின் எல்லா ஐக்கியமும் பரிசுத்த ஆவியானவரில் இருக்கிறது, மேலும் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படுகிறது. எனவேதான், "...ஆவியின் யாதொரு ஐக்கியம்" என்று பிலிப்பியர் 2:1 கூறுகிறது.

தேவனுடைய ஜீவனிலிருந்து வருகிற ஐக்கியத்தை நாம் கொண் டிருப்பதற்கு, தேவனுடைய பரிசுத்த ஆவி நமக்குள் அசைகிறார், கோருகிறார், உந்தித்தள்ளுகிறார். ஆகையால் நாம் ஜீவனின்

ஐக்கியத்தை கொண்டிருக்க விரும்பினால் நாம் தேவனுடைய ஜீவனை கொண்டிருப்பது மட்டுமல்ல, தேவனுடைய பரிசுத்த ஆவியானவரிலும் வாழ வேண்டும். தேவனுடைய ஜீவனே ஜீவனின் ஐக்கியத்தின் ஊற்று, மேலும் தேவனுடைய பரிசுத்த ஆவியே ஜீவனின் ஐக்கியத்தின் ஊடகம். தேவனுடைய ஜீவன் ஜீவனின் ஐக்கியத்தை நமக்குத் தந்தாலும், தேவனுடைய பரிசுத்த ஆவியே இந்த ஜீவனின் ஐக்கியத்தை நடைமுறையில் நாம் அனுபவித்துமகிழச்செய்கிறவர். நாம் பரிசுத்த ஆவியில் வாழ்ந்து பரிசுத்த ஆவிக்கு அக்கறைசெலுத்தி நடக்கும்போது மட்டுமே, தேவனுடைய ஜீவனின் ஐக்கியத்தை நடைமுறையில் நாம் அனுபவித்துமகிழ முடியும்.

## III. ஜீவனின் ஐக்கியத்தின் அர்த்தம்

நாம் ஜீவனின் ஐக்கியத்தை வரையறுப்பதற்குமுன்பு, ஒரு காரியம் தெளிவாக்கப்பட வேண்டும். ஆரம்பத்தில் தேவனுடைய ஜீவன் தேவனில் இருந்தது, அதன்பின்பு அது தேவனுக்கு சொந்தமானவர்களாகிய நமக்குள் நுழைந்தது. அப்படியானால், நமக்குள் நுழைந்த இந்த தேவனுடைய ஜீவன் ஒரு பகுதியா அல்லது முழுமையானதா? அது பகுதியானதும் அல்ல, முழுமை யானதும் அல்ல, மாறாக அது பாய்ந்தோடுகிறது என்பதே நம் இறுதித் தீர்ப்பாகும்.

ஒரு ஒளிவிளக்கில் உள்ள மின்சாரத்தை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். அது பகுதியான மின்சாரமா, மின்உற்பத்தி நிலையத் திலிருந்து வருகிற முழுமையான மின்சாரமா? இரண்டுமே இல்லை என்பதுதான் பதில்; ஏனென்றால் மின்உற்பத்தி நிலையத்தி லிருக்கிற அதே மின்சாரம்தான் இந்த ஒளிவிளக்குகளிலும் இருக்கிறது. இது ஒரு தொடர்ச்சியாக பாய்ந்தோடிக்கொண்டிருக்கிற மின்சார ஓட்டமாகும். மின்சாரஓட்டம் நின்றுவிட்டால் இந்த ஒளிவிளக்குகள் ஒளி தருவதை நிறுத்திவிடுகின்றன.

இன்னொரு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்: என் கையிலிருக்கும் இரத்தம், அந்தப் பகுதியின் இரத்தமா அல்லது முழு உடலின் இரத்தமா? அது அந்தப்பகுதியின் இரத்தமாக இருந்தால் அது எந்தத் தொடர்பையும் கொண்டிருக்காது. அது முழு உடலின் இரத்தமாக இருந்தால் அதுவும் எந்தத் தொடர்பையும் கொண்டிருக்காது. ஆனால் அது சுற்றி ஒடுகிற இரத்தம், அதாவது பாய்ந்தோடுகிற இரத்தம். அது தொடர்ச்சியாகச் சுற்றி ஓடுகிற, இடைவிடாமல் பாய்ந்தோடுகிற முழு உடலின் இரத்தமாக இருக்கிறது. அது முழுமையாகவும் இருக்கிறது, பகுதியாகவும் இருக்கிறது; அது பகுதியாகவும் இருக்கிறது, முழுமையாகவும் இருக்கிறது.

நம்முள் இருக்கிற தேவனுடைய ஜீவனும் அப்படியே இருக்கிறது. அது தேவனிலிருந்து பாய்ந்தோடியது, மேலும் அது நம்மையும் சேர்த்து ஆயிரக்கணக்கான பரிசுத்தவான்க ளுக்குள் பாய்ந்தோடியது. இந்தப் பாய்ந்தோடுகிற ஜீவன் தேவனிலிருந்து வருகிறது; அது தேவன்மூலமாகக் கடந்து செல்லுகிறது, மேலும் அது நம்மையும் சேர்த்து ஆயிரக்கணக்கான பரிசுத்தவான்கள் மூலமாகக் கடந்துசெல்லுகிறது. இவ்வாறு அது தேவனோடும், ஆயிரக்கணக்கான பரிசுத்தவான்களோடும் ஐக்கியத்தை ஏற்படுத்துகிறது.

அது பிரகாசிக்கிற மின்சார விளக்கைப்போலவே இருக்கிறது. அதில் உள்ள மின்சாரம் தொடர்ச்சியாகப் பாய்ந்தோடி, அதை மின்உற்பத்தி நிலையத்தோடும், பிரகாசிக்கிற மற்ற அநேக ஒளிவிளக்குகளோடும் உள்ள தொடர்பில் வைக்கிறது. அதனுள் இருக்கிற மின்சாரத்தின் ஓட்டத்தை இந்தத் தொடர்பு சார்ந்திருக்கிறது. இதைப்போல நம்மிலுள்ள ஜீவனின் ஐக்கியமும் நம்முள் இருக்கிற ஜீவனின் பாய்ந்தோடுதலைச் சார்ந்தே இருக்கிறது. நம்முள் இருக்கிற தேவனுடைய ஜீவன், ஜீவனின் ஒரு பாய்ந்தோடுதலைக் கொண்டுவருகிறது; இவ்வாறு நாம் ஜீவனின் ஐக்கியத்தைக் கொண்டிருக்கிறோம். ஜீவனின் ஐக்கியம் தேவனோடும், ஆயிரக்கணக்கான விசுவாசிகளோடும் தொடர்பிலிருக்க நமக்குத் திறனளிக்கிறது. ஆகையால் ஜீவனின் ஐக்கியத்தின் அர்த்தம் ஜீவனின் *பாய்ந்தோடுதல்* ஆகும். ஜீவனின் இந்தப் பாய்ந்தோடுதல் ஜீவனிலிருந்து பிரிக்கப்பட்டதல்ல; மாறாக இது ஜீவன்தானே பாய்ந்தோடுவதின் ஐக்கியமாகும். ஜீவனுடைய பாய்ந்தோடுதலின் இந்த ஐக்கியம், நாம் தொடர்ச்சியாக அதைப் பின்தொடர்ந்து, அதற்கு விட்டுக்கொடுத்து நடக்கவும் வாழவும் வேண்டும் என்று கோருகிறது. நாம் அதைப் பின்தொடராமல் அல்லது அதற்கு விட்டுக்கொடுக்காமல் இருக்கும்போதெல்லாம், அது பாய்ந்தோடுவதை நிறுத்திவிடுகிறது. இவ்வாறு நமக்கும் தேவனுக்குமிடையே உள்ள ஐக்கியம் துண்டிக்கப்படுகிறது; மேலும் நமக்கும் பரிசுத்தவான்களுக்கும் இடையேயுள்ள ஐக்கியமும் போய்விடுகிறது.

## IV. ஜீவனின் ஐக்கியத்தின் செயல்பாடு

ஜீவனின் ஐக்கியத்தின் செயல்பாடு அல்லது உபயோகம் என்ன? அது, தேவனுடைய ஜீவனில் அல்லது தேவனில் உள்ள எல்லாவற்றையும் உள்ளார்ந்தரீதியில் நமக்கு வழங்குவதாகும். தேவனில் உள்ள பரிபூரணமெல்லாம் ஜீவனின் ஐக்கியத்தின் மூலமாக நமக்கு வழங்கப்படுகிறது. நாம் எவ்வளவு அதிகமாக ஜீவனின் பாய்ந்தோடுதலை நம்மில் பாய்ந்தோட அனுமதிக்கி

றோமோ, அவ்வளவு அதிகமாக தேவனுடைய பரிபூரணத்தைக் கொண்டு உள்ளார்ந்தரீதியில் நிரப்பப்படுகிறோம். ஜீவனின் ஐக்கியத்தின் இப்படிப்பட்ட நிரப்பீடு, உடலின் நிரப்பீடாகிய இரத்தவோட்டத்தைப்போலவும், விளக்குகளின் நிரப்பீடாகிய மின்னோட்டத்தைப்போலவும் இருக்கிறது.

நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோமா இல்லையா என்பதை ஜீவனின் உணர்வு நிரூபித்துக்காட்டுகிறது. மேலும் ஜீவனின் ஐக்கியம் ஜீவனின் காரியங்களை நமக்குத் தொடர்ச்சியாக வழங்குகிறது. உங்களுக்கான ஜீவனின் நிரப்பீடு துண்டிக்கப் படும்போதெல்லாம், ஜீவனின் உங்கள் ஐக்கியம் தடை செய்யப்படுகிறது என்று அர்த்தம். ஜீவனின் ஐக்கியத்தில் தொடர்ச்சியாக நாம் வாழ்ந்தால், நமக்கான ஜீவனின் நிரப்பீடு தொடர்ச்சியாகவும் இடைவிடாமலும் வரும்.

ஜீவனின் ஐக்கியமும் ஜீவனின் உணர்வும் ஒன்றோடொன்று தொடர்புடையது. ஜீவனின் ஐக்கியம் தடைசெய்யப்பட்டவுடனே, ஜீவனின் நிரப்பீட்டை நாம் இழந்துவிட்டோம் என்று ஜீவனின் உணர்வு நம்மை உணரச்செய்கிறது. ஜீவனின் ஐக்கியம் தடைசெய்யப்படாதபோது, ஜீவனின் நிரப்பீட்டை நாம் கொண்டிருக்கிறோம் என்று ஜீவனின் உணர்வு நம்மை உணரச்செய்கிறது. ஆகையால் நாம் ஜீவனின் ஐக்கியத்தில் வாழ்ந்துகொண்டிருக்கிறோமா, நாம் ஜீவனின் நிரப்பீட்டைக் கொண்டிருக்கிறோமா என்பவை ஜீவனின் உணர்வு எதைச் சுட்டிக்காட்டுகிறதோ அதையே முழுவதும் சார்ந்திருக்கிறது. நாம் எவ்வளவு அதிகமாக ஜீவனின் ஐக்கியத்தில் வாழ்கிறோமோ, நம் ஜீவனின் உணர்வு அவ்வளவு கூர்மையாக இருக்கிறது, மேலும் அவ்வளவு அதிகமாக ஜீவனைக்கொண்டு நிரப்பப்படுகிறோம்.

ஜீவனின் ஐக்கியத்தைப் பொறுத்தவரை, இந்த அளவுக்கு கூறியது போதுமானது. ஜீவனின் உணர்வு எப்போதும் நம்மைப் பரீட்சிக்கிறது மற்றும் நிரூபிக்கிறது; ஆனால் ஜீவனின் ஐக்கியம் எப்போதும் நமக்கு நிரப்பீட்டை வழங்குகிறது என்பதை நாம் நினைவில்கொள்ளவேண்டும். கர்த்தருக்கு முன்பாக உள்ள நம் நிலைமை ஜீவனின் உணர்வினால் தீர்மானிக்கப்படுகிறது; நம் ஆவிக்குரிய வாழ்க்கைக்கான நிரப்பீடு ஜீவனின் ஐக்கியத்தின்மூலம் பெறப்படுகிறது.

அத்தியாயம் ஏழு

# ஆவியின் உணர்வும் ஆவியை அறிதலும்

நாம் இப்போது ஆவியின் உணர்வும், ஆவியை அறிதலும் என்ற ஏழாவது முக்கியமான குறிப்பைப் பார்க்கலாம். ஜீவனின் ஒவ்வாரு அனுபவமும் ஆவியில் இருப்பதால், ஆவியை அறிவதே ஜீவனின் அனுபவத்திலுள்ள ஒரு அடிப்படை விளைவாகும்.

உண்மையாகவே ஆவி என்று அழைக்கப்படுகிற இந்தக் காரியம் என்ன? ஆவியை நாம் எவ்வாறு அறியமுடியும்? ஆவியை நாம் எப்படித் தொடமுடியும்? இப்படிப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிப்பது எளிதான தல்ல என்று நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆவி எப்படிப்பட்டது என்பதை விளக்குவது கடினம். உடலைப் பற்றிப் பேசுவது மிகவும் எளிது, ஏனென்றால் நாம் அதைப் பார்க்கமுடியும், தொடமுடியும். ஆத்துமாவைப்பற்றிப் பேசுவதும் கடினமல்ல, ஏனென்றால் ஆத்துமா புலனாகாததாக இருந்தாலும், சிந்தித்தல், பரிசீலித்தல், தீர்மானித்தல், முடிவெடுத்தல், பிரியப்படுதல், கோபப்படுதல், துக்கப்படுதல், களிகூருதல் போன்ற அதன் செயல்பாடுகளாலும், செயல்களாலும் நாம் அதை உணரவும் அறியவும்முடியும். ஆவியைப்பற்றிப் பேசுவது தான் உண்மையில் கடினமானது. ஆவியைப் புரிந்துகொள்வதுகூட எளிதானதல்ல; ஆவியைப்பற்றிப் பேசுவது அதைவிடக் கடினமான தாகும். இருப்பினும் நாம் அதைப்பற்றி பேச முயற்சிசெய்வோம்.

ரோமர் 8 ஆவியைப்பற்றிப் பேசுகிறது. ஆவியில் நம் நிலைமையைப்பற்றி இதைப்போல தெளிவாகப் பேசுகின்ற வேறொரு பகுதியை வேதாகமத்தில் பார்ப்பது கடினம். ஆகை யால் நாம் ஆவியை அறியவிரும்பினால் இந்தப்பகுதிக்கு நாம் கவனம் செலுத்தவேண்டியது தவிர்க்கமுடியாததாகும்.

## I. நான்கு காரியங்கள்

ஆவியைப்பற்றிப் பேசுவதில் அப்போஸ்தலன் நான்கு காரியங் களைப் பயன்படுத்துகிறார்:

### A. ஜீவன்

"ஜீவனுடைய ஆவி" என்று வசனம் 2-ல் அவர் கூறுகிறார். இவ்வாறு கூறுகையில், அவர் இங்கே பேசுகிற ஆவி ஜீவனின் ஆவியானவர், அதாவது ஜீவனோடு தொடர்புடையதும் ஜீவனை அடக்கியதும் ஜீவனுக்குரியதுமான ஆவியே என்று அவர் நமக்குக் காட்டுகிறார். பின்பு "ஆவியின் சிந்தையோ ஜீவன்" என்று வசனம் 6-ல் அவர் கூறுகிறார். ஜீவன் ஆவியின் கனி என்றும் ஆவியே

ஜீவனின் ஊற்று என்றும் இதன் அர்த்தமாகும்; ஆகையால் நாம் ஆவியைத் தொடுவதால் ஜீவனைத்தொடுகிறோம். ஜீவனும் ஆவியும் ஒன்றோடொன்று தொடர்புடையவை; எனவே நாம் ஜீவன் மூலம் ஆவியை அறியமுடியும். ஆவியை அறிவது கடினமான தாக இருந்தாலும், ஜீவனை உணர்ந்துகொள்வது அதைவிட எளிதானதாகும்.

## B. விதி

வசனம் 2-ல், "ஜீவனுடைய ஆவியைப்"பற்றி மட்டு மல்லாமல் "ஜீவனுடைய ஆவியின் பிரமாணத்தைப்"பற்றியும் அப்போஸ்தலன் பேசுகிறார். அவர் இங்கே பேசுகிற ஆவி ஜீவனுக்குரியது மட்டுமல்ல அதற்கு ஒரு விதியும் இருக்கிறது என்று இது நமக்குச் சொல்லுகிறது. ஆகையால் அவர் ஆவியைப்பற்றிப் பேசும்போது ஜீவனைப்பற்றிப் பேசுகிறார், அதைப்போல விதியைப்பற்றியும் பேசுகிறார். ஜீவன், ஆவி, விதி, ஆகிய மூன்றையும் ஒன்றாக இணைக்கிறார். ஜீவனும் ஆவியும் பிரிக்கப்பட முடியாதவை. அதைப்போல விதியும் ஆவியும் பிரிக்கப்பட முடியாதவை. ஜீவன் ஆவியின் உள்ளடக்கமும் விளைவுமாகும். ஆனால் விதி ஆவியின் செயல்பாடும் செயலுமாகும். ஜீவனைத் தொடர்புகொள்வதால் நாம் ஆவியைத் தொடுகிறோம்; விதியை உணர்வதால் நாம் ஆவியையும் உணர்கிறோம். ஆவி கண்டுபிடிக்கக் கடினமான தாக இருந்தாலும் விதி தேடுவதற்குக் கடினமானதல்ல. ஆகை யால் விதியினால் நாம் ஆவியைக் கண்டுபிடிக்கமுடியும்.

## C. சமாதானம்

வசனம் 6-ல், "ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமா தானமுமாம்," என்று அப்போஸ்தலன் கூறுகிறார். ஆவியின் மேல் மனதைப் பொருத்துவதின் விளைவு ஜீவன் மட்டுமல்ல, சமாதானமும்கூட என்பது இதன் அர்த்தமாகும். ஆகையால் ஜீவன் ஆவியின் கனியாக இருக்கிறது சமாதானமும் ஆவியின் கனியாக இருக்கிறது. நாம் ஆவியைத் தொடும்போது ஜீவனைத் தொடுகி றோம், அதுபோல சமாதானத்தையும் தொடுகிறோம். ஜீவனால் நாம் ஆவியை அறியமுடியும் என்பதுபோல, சமாதானத்தி னாலும் நாம் ஆவியை உணரமுடியும்.

## D. மரணம்

வசனம் 6-ல், ஆவியின் சிந்தையோ ஜீவனும், சமாதானமுமாம் என்று அப்போஸ்தலன் கூறுவதற்குமுன்பு, "மாம்ச சிந்தை மரணம்," என்று கூறுகிறார். இங்கே அவர் நேர்மறையான ஒன்றை வெளிச்சம்போட்டுக் காட்ட எதிர்மறை யான ஒன்றைப் பயன் படுத்துகிறார். மாம்சமும் ஆவியும் எதிரானவைகள்போல,

மரணமும் ஜீவனும் எதிரானவைகள். ஜீவன் ஆவியின் கனியாகவும் ஆவியிலிருந்து வருகிறதாகவும் இருக்கிறது. மரணம் மாம்சத்தின் கனியாகவும் மாம்சத்திலிருந்து வருகிறதாகவும் இருக்கிறது. ஜீவன், ஆவியிலிருந்து வரும் காரியங்களை நாம் அறியச்செய்து நேர்மறையான பக்கத்திலிருந்து ஆவியை அறிய நமக்குத் திறனளிக்கிறது. மரணம், மாம்சத்திலிருந்து வரும் காரியங்களை நாம் அறியச்செய்து எதிர்மறையான பக்கத்திலிருந்து ஆவியைத் திரைநீக்கிக் காண்பிக்கிறது. ஆகையால் நேர்மறையான பக்கத்தி லிருந்து ஆவியை அறிய ஜீவன் நமக்குத் திறனளிப்பதுபோல, எதிர்மறையான பக்கத்திலிருந்து ஆவியைப் புரிந்துகொள்ள மரணம் நமக்குத் திறனளிக்கிறது. ஆவியை அறிவதற்கு நாம் ஜீவனை அறியவேண்டும், மேலும் ஜீவனுக்கு எதிரான மரணத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு ஜீவன், விதி, சமாதானம், மரணம் ஆகிய இந்த நான்கு காரியங்களைக்குறித்து அப்போஸ்தலன் கூறுகிறபடி, அவைகள் நேர்மறையாகவும், எதிர்மறையாகவும் ஆவிக்கு நெருக்கமான தொடர்புடையவை. இந்த நான்கு காரியங்களையும் முற்றும்முடிய புரிந்துகொண்டால், இவைகளோடு மிகத்தீர்க்கமாக தொடர்புடைய ஆவியை நாம் தெளிவாக அறிந்துகொள்ளமுடியும். இந்த நான்கு காரியங்களும் ஒரு குறிப்பிட்ட வகையான உணர்வைக் கொண்டிருக்கின்றன அல்லது தெரிவிக்கின்றன.

## II. உணர்வு

மிகத் தாழ்வான தாவர ஜீவனைத்தவிர, ஒவ்வொரு ஜீவனுக்கும் ஒரு குறிப்பிட்ட உணர்வு நிச்சயமாக இருக்கிறது. ஒரு ஜீவன் எவ்வளவு உயர்வாக இருக்கிறதோ, அதன் உணர்வும் அவ்வளவு வளமாக இருக்கிறது. இங்கே பேசப்படுகிற ஜீவ ஆவியினுடைய ஜீவன், அதி உன்னத ஜீவனாகிய தேவனுடைய ஜீவனே ஆகும்; ஆகையால் உணர்வில் அது மிகவும் வளமானது. நம்முள் இருக்கும் இந்த ஜீவன் நம்மை ஆவிக்குரிய உணர்வு நிறைந்த வர்களாக இருக்கச்செய்து, ஆவியையும் ஆவியின் காரியங் களையும் உணர்வதற்கு நமக்குத் திறனளிக்கிறது.

உணர்வற்ற ஒரு பொருளின் விதி உணர்வின் மண்டலத்திற்கு ரியதாக இல்லையென்றாலும், உணர்வுள்ள ஜீவனின் விதி உணர்வின் மண்டலத்திற்குரியதாக இருக்கிறது. எடுத்துக்காட்டாக, நான் ஒரு சகோதரனை அடித்தால் உடனடியாக அவர் வலியை உணர்கிறார்; நான் என் கரத்தை அவருடைய கண்களுக்குமுன் நீட்டினால், அவருடைய இமைகள் உடனடியாக மூடிவிடும். அவரை இவ்வாறு செயல்பட வற்புறுத்துகிற ஒரு ஜீவனின் விதி அவருடைய உடலில் இருப்பதால், அவர் இவ்வாறு செயல்படு கிறார். நான் அவரை அடித்த அந்தக் கணமே அவர் வலியை

உணர்கிறார்; இது ஒரு விதி. நான் என் கரத்தை அவரை நோக்கி நீட்டிய கணமே அவருடைய கண்கள் இமைக் கின்றன; இதுவும் ஒரு விதி. இவைகள் விதிகளாக இருப்பினும் அவைகள் என்ன என்று நீங்கள் அவரிடம் கேட்டால், அவைகள் உணர்வின் ஒரு காரியம் என்று அவர் கூறுகிறார். பௌதீக ஜீவனின் விதி உணர்வின் ஒழுங்கிற்குரியது என்று இது நிரூபிக்கிறது. ஜீவ ஆவியினுடைய ஜீவன், உணர்வில் வளமிக்க தேவனுடைய ஜீவனாக இருப்பதால், ஜீவஆவியின் விதியும் இயல்பாகவே உணர்வினால் நிறைந்திருக்கும்.

இங்கே பேசப்படுகிற சமாதானம் நிச்சயமாக நம்முள் இருக்கும் சமாதானம். உள்ளிருக்கும் சமாதானம் முற்றும் முடிய உணர்வின் ஒரு காரியமாகும். நாம் உள்ளே சமா தானத்தைக் கொண்டிருந்தும் அதை உணராமல் இருப்பது சாத்திய மில்லை, ஆகையால் இங்கே பேசப்படுகிற சமாதானமும் உணர்வின் ஒரு காரியமாகும்.

மேலும் இங்கே பேசப்படுகிற மரணம்கூட உணர்வின் காரியம். மரணம் ஒரு மனிதனை உணர்விழக்கச்செய்கிறது. மனிதன் மரிக்கும்போது தன் உணர்வை இழந்துவிடுகிறான். மனிதன் உணர்வில்லாமலிருப்பது அவனுக்குள் மரணம் வேலை செய்துகொண்டிருப்பதின் நிரூபணம்; அவன் முழுமையாக மரிக்கவில்லையென்றாலும் ஏறக்குறைய மரித்துவிட்டான்.

ஆவிக்குரிய காரியங்களில் மரணம் ஜீவனின் உணர்வை நாம் இழக்கச்செய்வது மட்டுமல்ல, அது மரணத்தின் உணர்வையும் ஏற்படுத்துகிறது. நம் மனதை மாம்சத்தின்மேல் வைக்கும்போது மரணம் நம்மில் சுறுசுறுப்பாகிவிடுகிறது. ஒருபக்கத் தில் அது நமக்குள் ஜீவனின் உணர்வை இழக்கச்செய்கிறது, மறுபக்கத்தில் அமைதியின்மை, ஆறுதலின்மை, மனஅழுத்தம், பெருந்துயரம், இருள், வெறுமை போன்ற உணர்வைக் கொண் டிருக்கச்செய்கிறது. இந்த வகையான அமைதியற்ற, ஆறுதலற்ற, அழுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, இருள்நிறைந்த, வெறுமையான உணர்வு, மரணத்தின் உணர்வாக இருக்கிறது, மேலும் மரணத்தை நாம் உணரச்செய்கிறது.

இவ்வாறு ஜீவன், விதி, சமாதானம், மரணம் ஆகிய இந்த நான்கும் அவைகளோடு தொடர்புடைய ஓர் உணர்வைக் கொண்டிருக்கின்றன. இந்தக் காரியங்களின் உணர்வு, ஆவியின் உணர்வைத் தொடுவதற்கும் அதன்மூலம் ஆவியை அறிவதற்கும் நமக்குத் திறனளிக்கிறது. நாம் இந்த நான்கு காரியங்களின் உணர்வை ஆராய்வதற்குக் கொஞ்ச நேரம் செலவிட வேண்டும்.

## III. ஜீவனின் உணர்வு

இங்கு பேசப்பட்டுள்ள ஜீவன், ஜீவ ஆவியினுடைய ஜீவனைக் குறிக்கிறது. ஆகையால் இது ஆவியினுடையதும் ஆவியிடமிருந்து

வருகிறதும் ஆவியுடன் இருக்கிறதுமான ஜீவனாகும். இந்த ஜீவனை யுடைய இந்த ஆவி தேவனுடைய ஆவி மட்டுமல்ல, நம் ஆவியாகவும் இருக்கிறது. தேவனுடைய ஆவி *மற்றும்* நம் ஆவி ஒரே ஆவியாகக் கலந்திணைந்திருப்பதே இந்த ஆவியாகும். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் தேவ ஆவியானவர் மனிதர்கள்மேல் மட்டுமே வந்திறங்கினார், இதனால் மனிதர்கள் வெளியிலிருந்து தேவனுடைய வல்லமையைப் பெற்றார்கள். உள்ளிருந்து தேவனுடைய ஜீவனை மனிதன் பெறும்படி அவர் மனித னுக்குள் நுழையவில்லை. இவ்வாறு பழைய ஏற்பாட்டுக் காலங்களில் தேவ ஆவியானவர் வல்லமையின் ஆவியாக மட்டுமே இருந்தார்; அவர் இன்னும் ஜீவனின் ஆவியாக வில்லை. புதிய ஏற்பாட்டுக் காலம்வரை உள்ளிருந்து தேவனுடைய ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படி ஜீவனின் ஆவியாக தேவ ஆவியானவர் மனிதனுக்குள் நுழையவில்லை. இன்று புதிய ஏற்பாட்டுக் காலத்தில் தேவ ஆவியானவர் வல்லமையின் ஆவியாக மட்டுமல்ல, ஜீவனின் ஆவியாகவும் இருக்கிறார். மனிதன் தேவனு டைய வல்லமையை வெளியார்ந்தரீதியாக பெற்றுக்கொள்ளச் செய்ய, அவர் மனிதன் மேல் வந்திறங்குவதும், மனிதன் தன் பாவத்தை அறிந்து, அறிக்கைசெய்து, மனந்திரும்பி, கர்த்தரில் விசுவாசிக்கும்படிச்செய்ய, அவர் மனிதனை ஏவுகிறதும் மட்டுமல்ல, தேவனுடைய ஜீவனை மனிதன் உள்ளார்ந்தரீதியாகப் பெற்றுக்கொள்ளும்படி அவர் மனிதனுக்குள் நுழைகிறார்; மேலும் ஜீவனின் ஆவியாக அவர் மனிதனுக்குள் குடியிருக்கிறார். நாம் அவரால் ஏவப்பட்டு, மனந்திரும்பி, விசுவாசித்து, கர்த்தராகிய இயேசுவை நம் இரட்சகராகப் பெற்றுக்கொள்ளும் போது, அவர் நமக்குள் நுழைந்து, தேவனுடைய ஜீவனை நம்மில் வைக்கிறார். இந்த நேரத்தில் அவர் ஜீவனின் ஆவியாக, அதாவது தேவனுடைய ஜீவனின் ஆவியாக நமக்குள் நுழைகிறார். தேவனுடைய ஜீவன் அவரில் இருக்கிறது; இவ்வாறு அவர் தேவனுடைய ஜீவனாக இருக்கிறார்; ஆகையால் அவர் நமக்குள் நுழையும்போது தேவனுடைய ஜீவன் நமக்குள் நுழைகிறது. அவர் ஜீவனின் ஆவியாக தேவனுடைய ஜீவனோடு நமக்குள் நுழைகிறார். அவர் நுழையும்போது அவர் *நம் ஆவிக்குள்* நுழைகிறார், நம் மனம், உணர்ச்சி, சித்தத்திற்குள் அல்ல. அவர் நம் ஆவிக்குள் நுழைந்து, தேவனுடைய ஜீவனை நம் ஆவியில் வைத்து, நம் ஆவியில் குடியிருக்கிறார்; இவ்வாறு ஜீவனின் ஆவி நம் ஆவியோடு கலந் திணைந்துள்ளது. இப்போது அவரும், தேவனுடைய ஜீவனும், நம் ஆவியும் ஆகிய மூன்றும் ஒன்றாகக் கலந்திணைந்து, ஒருபோதும் பிரிக்கப்பட முடியாதபடி, தேவனுடைய ஆவி தேவனுடைய ஜீவனோடுகூட (அவரே தேவனுடைய ஜீவன்)

நம் ஆவியில் குடியிருக்கிறார்.

ஆரம்பத்தில், தனக்குள் வெறும் தண்ணீரை மட்டும் கொண்ட ஒரு கோப்பையை ஓர் எடுத்துக்காட்டாக நாம் பயன்படுத்தலாம். பின்னர், அது தண்ணீர்-சர்க்கரை-சாறு என்ற ஒன்றில்-மூன்று பானத்தை உடைய ஒரு கோப்பையாக மாறும்படி, அதனுள் சர்க்கரை சேர்ந்த, திடமான பழச்சாறை நாம் கலக்கிறோம். தண்ணீர் நம் ஆவியை அடையாளப்படுத்துகிறது, திடமான பழச்சாறு தேவனுடைய ஆவியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது, மேலும் சர்க்கரை தேவனுடைய ஜீவனைக் குறிக்கிறது. தேவனுடைய ஜீவனை உள்ளடக்கிய தேவனுடைய ஆவி நம் ஆவியோடு கலந்து, தேவனுடைய ஆவி, தேவனுடைய ஜீவன், நம் ஆவி ஆகிய இம்மூன்றையும் ஒன்றில்-மூன்று ஜீவனின் ஆவியாக ஆக்குகிறது. இதையே ரோமர் 8:2 பேசுகிறது.

இவ்வாறு நாம் இங்கே பேசிக்கொண்டிருக்கிற ஜீவ ஆவியினுடைய ஜீவன் குடியிருக்கும் ஆவி, தேவனுடைய ஆவியையும், நம் ஆவியையும் உள்ளடக்கியது. இது, நம் ஆவியோடு தேவனுடைய ஆவியின் கலந்திணைதலாகிய ஓர் ஆவியாகும். வேதாகம மொழிபெயர்ப்பாளர்கள் ரோமர் 8-ல் குறிப்பிடப்பட்டுள்ள இந்த ஆவியை பரிசுத்த ஆவியானவர் என்று புரிந்துகொண்டார்கள்; ஆகையால் அவர்கள் ஆவி என்று எழுதும் போது தேவனுடைய ஆவி என்ற பொருளில் எழுதியிருக்கிறார்கள். வேதாகமத்தை வாசிக்கிற அநேகரும் கூட இங்கே குறிப்பிடப் பட்டுள்ள ஆவி பரிசுத்த ஆவியானவரையே குறிக்கிறது என்று எண்ணுகிறார்கள். இருப்பினும் ஆவிக்குரிய உண்மையும் ஆவிக்குரிய அனுபவமும் இங்கே குறிப்பிடப்பட்டுள்ள ஆவி நம் ஆவியோடு பரிசுத்த ஆவியானவரின் கலந்திணைதலாகும் என்று சொல்லுகின்றன. இந்த அதிகாரத்தின் 16-ம் வசனத்தில் இந்த ஆவிக்குரிய உண்மையை (இது நம் ஆவிக்குரிய அனுபவமும்கூட) அப்போஸ்தலன் கூறுகிறார். "ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார்," என்று அவர் கூறுகிறார். இந்தவிதத்தில் பேசுவதால், அவர் முன்பு குறிப்பிட்ட ஆவி "ஆவியானவர் தாமே நம்முடைய ஆவியுடனேகூட" கலந்திணைந்துள்ள ஒரே ஆவியாக இருக்கிறது என்று தெளிவாகக் கூறுகிறார். இந்த ஆவியை பரிசுத்த ஆவியானவர் என்று கூறுவது சரிதான், மேலும் இது நம் ஆவி என்று சொல்வதிலும் தவறில்லை. இது திடமான பழச்சாறோடு கோப்பையி லுள்ள தண்ணீரைப்போன்றது. இதைப் பழச்சாறு என்று நீங்கள் சொல்லலாம், தண்ணீர் என்றும் நீங்கள் சொல்லலாம். இது ஏனென்றால், இவை இரண்டும் ஒன்றாகக் கலந்திணைந்துவிட்டன. அதுபோல, பரிசுத்த ஆவியும் நம்

ஆவியும் ஒரே ஆவியாக கலந்திணைந்துவிட்டன. இவை இரண்டின் கலந்திணைதலாக இருக்கும் இந்த ஒரே ஆவிக்குள் தேவன் நமக்கு அருளுகிற ஜீவன் இருக்கிறது; இவ்வாறு இது ஜீவனின் ஆவியாகிறது. எளிமையாகப் பேசுவதனால், தேவனுடைய ஜீவன் தேவனுடைய ஆவியில் இருக்கிறது, மேலும், தேவனுடைய ஆவி நம் ஆவிக்குள் நுழைகிறார்; இவ்வாறு, இவை மூன்றும் ஒன்றாகக் கலந்திணைந்து ஜீவனின் ஆவியாகின்றன.

ஆரம்பத்தில், நம் ஆவி மனித ஆவியாக மட்டுமே இருந்தது, மேலும் அது மரித்ததாயிருந்தது. இப்போது தேவனுடைய ஆவி நுழையும்போது, அவர் நம் ஆவியை உயிர்ப்பிப்பதோடு மட்டுமல்லாமல், நம் ஆவிக்குள் தேவனுடைய ஜீவனைக் கூட்டிச்சேர்க்கவும் செய்கிறார். இப்போது நம் ஆவி உயிரோடிருப்பது மட்டுமல்ல, அது தேவனுடைய ஜீவனையும் கொண்டிருக்கிறது; அது ஓர் ஆவி மட்டுமல்ல, அது ஜீவனின் ஆவியாகவும் இருக்கிறது. இந்த ஆவியிலுள்ள ஜீவனின் எல்லா உணர்வும் இந்த ஆவியை நாம் அறிவதற்குத் திறனளிக்கிறது. நாம் நம் மனதை இந்த ஆவியின்மேல் பொருத்தி நடக்கும்போதும், நம் செயல்களும், செய்கைகளும் இந்த ஆவிக்கு ஏற்றபடி இருக்கும்போதும், இந்த ஆவியிலுள்ள ஜீவன் இந்த ஜீவனின் உணர்வை நாம் கொண்டிருக்கச்செய்யும். இந்த ஜீவன் தேவனுடையதாகவும், பசுமையாகவும் உயிரோட்டமாகவும், வல்லமையோடு பலமான தாகவும், பிரகாசமாகவும் பரிசுத்தமாகவும், நிஜமாகவும் வெறுமை யில்லாததாகவும் இருப்பதால், இந்த ஜீவனின் உணர்வு நிச்சயமாக நாம் தேவனுடைய பிரசன்னத்தை உணரச் செய்யும்; இவ்வாறு நாம் பசுமையாகவும் உயிரோட்டமாகவும், வல்லமையோடு பலமானதாகவும், பிரகாசமாகவும் பரிசுத்தமாகவும், நிஜமாகவும் வெறுமையில்லாததாகவும் உணர்வோம். நாம் இப்படிப்பட்ட உணர்வுகளைக் கொண்டிருக்கும்போது, நாம் ஆவிக்கு அக்கறைசெலுத்துகிறோம், ஆவிக்கேற்றபடி நடக்கிறோம், ஆவியில் வாழ்கிறோம் என்று நாம் அறிகிறோம். இப்படிப்பட்ட உணர்வுகள் நமக்குள்ளிருந்து ஆவிக்கேற்றபடி நடக்கவும் ஆவியின்படி வாழவும் நம்மை வழிநடத்துகிற நம் ஆவியில் உள்ள ஜீவனின் உணர்வு அல்லது ஜீவனுடைய நம் ஆவியின் உணர்வாகும். நாம் இப்படிப்பட்ட உணர்வுகளைத் தொடும் போது, நாம் ஆவியைத் தொடுகிறோம். நாம் இப்படிப்பட்ட உணர்வுகளுக்குச் செவிகொடுக்கும்போது ஆவிக்குச் செவி கொடுக்கிறோம். ஆவியில் ஜீவனின் இப்படிப்பட்ட உணர்வுகளை நாம் எளிதாக உணரமுடியும், ஆனால் நேரடியாக ஆவியையே நாம் உணர்வது இதைவிடக் கடினம். இப்படிப்பட்ட உணர்வுகளை நாம் நெருக்கமாகப் பின்தொடர்ந்தால், நாம் ஆவியை அறிந்து ஆவியில் வாழமுடியும்.

நம் ஆவியில் உள்ள தேவனுடைய ஜீவன் தேவனே என்று சொல்லமுடியும்; ஆகையால் இந்த ஜீவனின் உணர்வு நிச்சயமாக நம்மை தேவனையே உணரச்செய்யும். நாம் ஆவியில் வாழ்ந்து ஆவிக்கு அக்கறைசெலுத்தி நடந்தால் இந்த ஜீவனின் உணர்வு, நாம் தேவனோடு தொடர்பில் இருக்கிறோம், நம் ஜீவனாகவும் நம் வல்லமையாகவும் நம் எல்லாமுமாகவும் நம்மில் தேவன் இருக்கிறார் என்று நாம் உணரும்படிச்செய்யும்; இவ்வாறு நாம் சந்தோஷமாகவும் ஒய்வாகவும் வசதியாகவும் திருப்தியாகவும் இருப்போம். ஜீவனின் உள்ளான உணர்வில் நாம் இவ்வாறு தேவனைத் தொடும்போது, நாம் ஜீவனைத் தொடுகிறோம்; இவ்வாறு நாம் ஆவியில் வாழ்கிறோம், ஆவியின்மேல் மனதைப் பொருத்துகிறோம் என்று அறிவோம்.

ஜீவ ஆவியினுடைய ஜீவன் குடியிருக்கும் ஆவி, நம் ஆவியுடன் தேவனுடைய ஆவியின் கலந்திணைதலாக இருப்பதால், ஜீவனின் இந்த உணர்வு எதையெல்லாம் நம்மை உணரச்செய்கிறதோ அவையெல்லாம் நம் ஆவியில் தேவனுடைய ஆவியின் வரலாறாக இருக்கவேண்டும். நம் ஆவியில் தேவனுடைய ஆவி நமக்கு கிறிஸ்துவை வெளிப்படுத்தி, கிறிஸ்து வில் தேவனை நமக்குள் பகிர்ந்தளித்து, நாம் கிறிஸ்துவை அனுபவ மாக்கி ஆவியில் தேவனை தொடர்புகொள்ளவும் செய்கிறார். இவ்வாறு, இது நாம் கிறிஸ்துவை அனுபவமாக்கச்செய்கிறது, அதாவது தேவனை நம் ஜீவனாக அனுபவமாக்கச்செய்கிறது; நாம் ஜீவனை, அதாவது நம் ஆவியிலுள்ள தேவனுடைய ஜீவனை அனுபவ மாக்கச்செய்கிறது என்பதும் இதன் அர்த்தமாகும். இவ்வாறு நாம் இந்த ஜீவனை அனுபவமாக்கும்போது இது ஜீவனின் திருப்தியையும் ஜீவனின் வல்லமையையும் ஜீவனின் பிரகாசத்தையும் ஜீவனின் பசுமையையும் ஜீவனின் உயிரோட் டத்தையும் ஜீவனின் மேம்பாட்டையும் நாம் உணரும்படிச் செய்கிறது. நம்முள் ஜீவனின் இப்படிப்பட்ட உணர்வைக் கொண்டிருக்கும்போது, நாம் ஆவியில் வாழ்கிறோம், ஆவியைத் தொடுகிறோம் என்று அறிகிறோம்.

## IV. ஜீவ ஆவியின் விதியின் உணர்வு

நம்முள் இருக்கும் ஜீவனின் ஆவியில், தேவனுடைய ஜீவன் மட்டுமல்ல, ஒரு விதியும் இருக்கிறது. இந்த விதி தேவனுடைய ஜீவனின் விதி. ஒவ்வொரு ஜீவனுக்கும் அதன் விதி உண்டு. நம் உடலிலுள்ள ஜீவனுக்கு, நம் உடலுக்குள் அதன் விதி இருக்கிறது. அதன் சுபாவத்திற்கு பொருந்துகிறவைகளை அதன் விதி அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறது; இதற்கு முரணான எதையும், அதன் விதி எதிர்த்து மறுத்து விடுகிறது. அதுபோல நம் ஆவியிலுள்ள தேவனுடைய ஜீவன் அதன் விதியைக்

கொண்டுள்ளது. அது ஆவியி னுடையதும் ஆவியோடு இருப்பதுமாகும்; ஆகையால், அதன் சுபாவம் முற்றும்முடிய, முழுமையாக ஆவிக்குரியதாகும். நாம் என்னவாக இருக்கிறோமோ நாம் என்ன செய்கிறோமோ அது, அதன் ஆவிக்குரிய சுபாவத்தோடுகூட ஒத்திருந்தால், நம் ஆவியிலுள்ள இந்த விதி அதை அங்கீகரித்து ஏற்றுக் கொள்கிறது; இல்லாவிட்டால், இந்த விதி எதிர்த்து நிராகரித்துவிடுகிறது. அது அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிற யாவும் நிச்சயமாக ஆவியிலிருந்து வருகிறது, ஏனென்றால் ஆவியிலிருந்து வருவது மட்டுமே அதன் ஆவிக்குரிய தன்மையோடு ஒத்திருக்கமுடியும். ஆகையால் நாம் என்னவாக இருக்கிறோமோ, நாம் என்ன செய்கிறோமோ அவையெல்லாம் ஆவியிலிருந்து வருவதாகவும் ஆவியிலிருப்பதாகவும் இருக்க வேண்டும். அப்போது நம் ஆவியிலுள்ள ஜீவவிதி அதை அங்கீகரித்து அதை ஏற்றுக்கொள்ளும்.

நம் ஆவியிலுள்ள இந்த ஜீவவிதி உணர்விற்குரியதாகவும், தன் சொந்த உணர்வையுடையதாயும் இருக்கிறது. அது அங்கீ கரித்து ஏற்றுக்கொள்வது அல்லது எதிர்த்து நிராகரிப்ப தெல்லாம், அது என்ன உணர்கிறது என்பதாலும், நாம் என்ன உணர வேண்டும் என்று அது விரும்புகிறது என்பதாலும் தெரியப் படுத்தப்படுகிறது. நாம் என்னவாக இருக்கிறோமோ, நாம் என்ன செய்கிறோமோ அது ஆவியிலிருந்து நம்மிலுள்ள ஜீவனின் ஆவியின் சுபாவத்தோடு பொருத்தமாக இருந்தால், இந்த விதி அதை அங்கீகரித்து ஏற்றுக்கொள்கிறது என்பதை நாம் உணரச் செய்யும்; இல்லையென்றால் இந்த விதி எதிர்த்து நிராகரிக்கிறது என்று நாம் உணரும்படிச்செய்யும். இவ்வாறு இந்த விதியின் உணர்வால் நாம் ஆவியில் வாழ்ந்துகொண்டிருக்கி றோமா இல்லையா, ஆவியில் நடந்துகொண்டிருக்கிறோமா இல்லையா என்று நாம் அறியமுடியும். இந்த விதி நம்மில் ஜீவ ஆவியின் விதியாக இருப்பதால், இந்த விதியின் உணர்வு நம்மிலுள்ள ஜீவனின் ஆவியின் உணர்வாகும்; ஆகையால் இந்த விதியின் உணர்வு நமக்குள் இருக்கும் ஆவியை நாம் அறியும்படிச்செய்யும்.

விதி இயல்பான ஒரு காரியம். ஆகையால் அது நமக்குத் தருகிற விதியும் இயல்பானது. எடுத்துக்காட்டாக ஒரு கோப்பை பழச்சாறை நாம் பருகும்போது அது இனிப்பாக இருக்கிறது என்று நாம் இயல்பாகவே உணர்கிறோம். இது ஏனென்றால் இயல்பாகவே நம்மை உணரச்செய்கிற ஒரு பௌதீக ஜீவனின் விதி நம் உடலில் இருக்கிறது. இந்தச் சாறை நம் உதடுகள் தொட்டவுடனே, நாம் இனிமையை உணர்கிறோம். இந்த இயல்பான உணர்வு நம் உடலின் ஜீவவிதியாகும். இந்த விதி அந்தச் சாறின் நறுமணச் சுவையை நாம் இயல்பாகவே உணரச் செய்கிறது. நம் ஆவியிலுள்ள ஜீவவிதியும் இதைப் போன்ற

தேயாகும். நாம் கிறிஸ்தவர்களாக இருப்பதும், செய்வதும், ஆவியில் இருக்கிறதா, நாம் ஆவிக்கு கவனம்செலுத்தி தேவனைப் பிரியப்படுத்துகிறோமோ என்று நமக்கு மற்றவர்கள் சொல்ல வேண்டியதில்லை; நம் ஆவியிலுள்ள ஜீவவிதி ஒரு குறிப்பிட்ட உணர்வை நமக்குத் தந்து நம் நிலையை இயல்பாகவே அறிந்துகொள்ளச் செய்கிறது. இந்த ஜீவவிதியால் நமக்குக் கொடுக்கப்படுகிற இந்த இயல்பான உணர்வு நம்மிலுள்ள ஜீவ ஆவியின் ஒரு இயல்பான செயல்பாடாகும். இதனால் நாம் ஆவியில் வாழ்கிறோமா இல்லையா என்பதை நாம் எளிதாகப் பகுத்துணரலாம்.

இந்த ஜீவவிதி நமக்குக் கொடுக்கும் உணர்வு மட்டும் இயல்பான தல்ல, மாறாக அது நம்மையும் இயல்பானவர்க ளாக ஆக்குகிறது. எவ்வளவு அதிகமாக நாம் நம் ஆவியில் வாழ்கிறோமோ, மேலும் எவ்வளவு அதிகமாக நாம் இருப்பதும் செய்வதும் நம்முள் இருக்கும் ஜீவ ஆவியின் சுபாவத்துடன் ஒத்துப்போகிறதோ, அவ்வளவு அதிகமாக நம் ஆவியிலுள்ள இந்த ஜீவவிதி நம்மை இயல்பாக உணரச்செய்கிறது. கிறிஸ்தவர்களாகிய நாம் இயல்பாக இல்லையென்றால் நமக்கு ஏதோ பிரச்சினை இருக்கிறது, நாம் நம் ஆவியில் வாழவில்லை என்று இது நிரூபிக்கிறது. நம்மிலுள்ள ஜீவனின் ஆவி, ஆவியின் இயல்பான விதியாக இருப்பதால், நம் வாழ்க்கையும் வேலையும் அதன் ஆவிக்குரிய சுபாவத்திற்கு ஒத்திருக்கும்போது மட்டுமே, நாம் உள்ளே இயல்பாக உணரமுடியும். உள்ளே நாம் இயல்பாக உணரும்போது நம் ஆவியிலுள்ள ஜீவவிதிக்கேற்ப நாம் வாழ்கிறோம் என்பதை இது நிரூபிக்கிறது. நம்மிலுள்ள இந்த ஜீவவிதி நமக்குத் தருகிற இந்த இயல்பான உணர்வு நாம் ஆவியில் வாழ்கிறோம், ஆவிக்கேற்றபடி நடக்கிறோம் என்பதை நாம் அறியச்செய்கிறது. இவ்வாறு நம் ஆவியிலுள்ள ஜீவவிதியைப் பின்தொடர்ந்தால் அல்லது இந்த ஜீவவிதியால் நமக்குத் தரப்படுகிற இயல்பான உணர்வை நாம் பின் தொடர்ந்தால், நம்முள் ஜீவனின் ஆவியை நாம் பின்தொடர் கிறோம் என்று அர்த்தமாகும். இதை எளிமையாகக் கூறினால், ஆவியிலுள்ள ஜீவவிதியின் உணர்வைப் பின்தொடர்வது ஆவியைப் பின்தொடர்வதாகும், ஏனென்றால் ஆவியிலுள்ள ஜீவவிதியின் உணர்வு ஆவியின் உணர்வாகவே இருக்கிறது.

## V. சமாதானத்தின் உணர்வு

நம்மிலுள்ள ஜீவனின் ஆவி, தேவனுடைய ஆவியும் தேவனுடைய ஜீவனும் குடியிருக்கிற இடம் மட்டுமல்ல, இது புதிய மனிதன் இருக்கிற இடமாகவும் இருக்கிறது. மேலும்

நம்மிலுள்ள ஆவி அதாவது தேவனுடைய ஜீவனோடு கலந்திணைந்திருக்கிற ஆவி நம்முள் புதிய மனிதனாகவும் இருக்கிறது. நம் வெளியார்ந்த செயலிலும் நடத்தையிலும் நம்முள்ளிருக்கும் ஜீவனின் ஆவிக்கு நாம் கவனம்செலுத் தினால், நம்முள்ளிருக்கும் ஆவிக்குரிய புதிய மனிதனால் நாம் வாழ்கி றோம். இந்த வழியில் நம் உள்ளான மனிதனும் வெளியார்ந்த செயல்களும் ஒத்திருக்கின்றன. எனவே நாம் இயல்பாகவும் சமாதானமாகவும் உணர்கிறோம். இயல்பாகவும் சமாதானமாகவும் இருக்கிற இந்த உணர்வு ஜீவ ஆவியின் விதியின் உணர்வினால் ஏற்படுகிற விளைவு என்று நாம் கூறமுடியும். நம்முள்ளிருக்கும் ஜீவ ஆவிக்கு நாம் கவனம்செலுத்தினால், நம்முள்ளிருக்கும் ஜீவ ஆவியின் விதிக்கேற்ப நாம் இயல்பாக நடக்கிறோம், வாழ்கிறோம். நாம் உள்ளே இயல்பாக உணரவும் சமாதனத்தின் உணர்வைக் கொண்டிருக்கவும் இதுசெய்கிறது. சமாதானத்தின் இந்த உணர்வும் ஜீவனின் உணர்வும் ஒன்றோ டொன்று கைகோர்த்துச் செல்லு கின்றன. ஜீவனின் உணர்வு பசுமை யாகவும் உயிரோட்டமாகவும் இருக்கிறது; சமாதானத்தின் உணர்வு இயல்பாகவும் அமைதி யாகவும் இருக்கிறது. ஜீவனின் உணர்வு திருப்தியாகவும் நிறைந்த வீரியமுள்ளதாகவும் இருக்கிறது; சமாதானத்தின் உணர்வு இளைப்பாறுதலாகவும் ஆறுதலாகவும் இருக்கிறது. நாம் ஆவிக்குக் கவனம்செலுத்தி ஆவியால் நடக்கவும் வாழவும் செய்தால், பசுமையாக, உயிரோட்டமாக, திருப்தியாக, வீரியமுள்ளதாக, உணரும் ஜீவனின் உணர்வை மட்டுமல்ல, இயல்பாக, இளைப் பாறுதலாக, ஆறுதலாக, அமைதலாக உணரும் சமாதானத்தின் உணர்வையும் கொண்டிருப்போம். இப்படிப்பட்ட உணர்வும் ஆவியின் உணர்வாகும். இப்படிப்பட்ட உணர்வு நமக்கு இருக்கும்போது, ஆவியில் வாழ்கிறோம் என்று அறிந்துகொள்ள லாம். இப்படிப்பட்ட உணர்வை நாம் பின்தொடர்கிறபோது நாம் ஆவியின் உணர்வைப் பின்தொடர்கிறோம்; இதன் அர்த்தம் நாம் ஆவியைப் பின்தொடர்கிறோம் என்பதாகும். இப்படிப்பட்ட உணர்வு ஆவியை அறிவதற்கும், ஆவியை உணர்ந்தறிவதற்கும் நமக்குத் திறனளிக்கிறது. அதிகமாக ஆவியின்படி நடந்து ஆவியில் வாழும்போது அதிகமாக இந்த விதமான உணர்வு நம்முள் வளமாகவும் ஆழமாகவும் ஏற்படுகிறது.

## VI. மரணத்தின் உணர்வு

ரோமர் 8:6-ல் ஒரு மாறுபட்ட காட்சி இருக்கிறது. மாம்சத்திற்கு கவனம்செலுத்துவதின் விளைவு மரணம், ஆவிக்கு கவனம் செலுத்துவதின் விளைவு ஜீவனும் சமாதானமும் என்று அப்போஸ் தலன் கூறுகிறார். மாம்சம் ஆவிக்கு எதிராக இருப்பதுபோல, மாம்சத்திற்கு கவனம் செலுத்துவதால் ஏற்படும் மரணம் என்ற

விளைவு, ஆவிக்குக் கவனம்செலுத்துவதால் ஏற்படும் ஜீவனும் சமாதானமும் என்ற விளைவுகளுக்கு எதிரானது என்று இந்த வார்த்தை வெளிப்படுத்துகிறது. இவ்வாறு மரணம் ஜீவனுக்கு மட்டும் விரோதமானதல்ல, சமாதானத்துக்கும்கூட எதிரானது என்று அப்போஸ்தலன் நமக்குச் சொல்லுகிறார். ஆகையால் மரணத்தின் உணர்வு ஜீவனின் உணர்வுக்கு எதிரானது மட்டுமல்ல, சமாதானத்தின் உணர்வுக்கும் எதிரானது. ஜீவனின் உணர்வு பசுமையாகவும், உயிரோட்டமாகவும், திருப்தியாகவும், வீரியமுள்ளதாகவும் நம்மை உணரச்செய்கிறது; மரணத்தின் உணர்வு இவைகளுக்கு எதிராக பழமையாகவும் மனஅழுத்தமாகவும் வெறுமையாகவும் சத்தியற்றதாகவும் நம்மை உணரச்செய்கிறது. சமாதானத்தின் உணர்வு நம்மை இயல்பாகவும் இளைப்பாறுதலாகவும் ஆறுதலாகவும் அமைதலாகவும் உணரச்செய்கிறது. மரணத்தின் உணர்வு நம்மை இவைகளுக்கு எதிராக இயல்பற்றதாகவும் இளைப்பாறுதலற்றதாகவும் ஆறுதலற்றதாகவும் அமைதலற்றதாகவும் உணரச் செய்கிறது. இவ்வாறு நாம் தனிமை, மனஅழுத்தம், வெறுமை, வறட்சி, பலவீனம் மற்றும் சக்தியின்மை, இருள் மற்றும் மந்தம், அல்லது அமைதியின்மை, பாதுகாப்பின்மை, ஆறுதலின்மை, இசைவின்மை, போராட்டம், இயல்பின்மை, வருத்தம், கட்டு ஆகியவைகளை எப்போதெல்லாம் உள்ளார்ந்தரீதியாக உணர்கிறோமோ, அப்போதெல்லாம் நாம் ஆவியில் வாழ வில்லை என்பதை அறியவேண்டும்; மாறாக, ஆவிக்கு எதிராக, அதாவது மாம்சத்தில் நாம் வாழ்கிறோம்.

அப்போஸ்தலன் இங்கு பேசுகிற மாம்சம் என்பது நம் மாம்சத்தின் இச்சைகளை மட்டுமல்ல, நம் முழு பழைய மனிதனையும் குறிப்பிடுகிறது. நம் உள்ளார்ந்த புதிய மனிதனுக்கு உரியதெல்லாம் ஆவிக்கு உரியது; அதுபோல நம் வெளியார்ந்த பழைய மனிதனுக்கு உரியதெல்லாம் மாம்சத்துக்கு உரியது. ஆவியிலிருந்து வராத, ஆவிக்கு உரியதல்லாத எதுவும் மாம்சத்திலிருந்து வருகிறதும், மாம்சத்துக்கு உரியதுமாக இருக்கிறது. ஆத்துமா மாம்சத்திலிருந்து வேறுபட்டாலும்கூட ஆத்துமா ஏற்கெனவே வீழ்ந்துபோய் மாம்சத்துக்கு சிறைபட்டிருப்பதால், ஆத்துமாவிலிருந்து வருவதும் ஆத்துமாவுக்கு உரியதுமாகிய யாவும் மாம்சத்திலிருந்து வருகிறதும் மாம்சத்துக்கு உரியது மாக இருக்கிறது. இவ்வாறு, நாம் ஆத்துமாவினால் வாழ்ந் தால், நாம் மாம்சத்தினால் வாழ்கிறோம். நாம் மாம்சத்திற்கு கவனம்செலுத்தினாலும், ஆத்துமாவிற்கு கவனம்செலுத்தினாலும் நாம் மாம்சத்திற்கே கவனம்செலுத்துகிறோம். மாம்சத்துக்கு கவனம் செலுத்துவதின் விளைவு மரணம். இந்த மரணத்தின் உணர்வு நம்மை மனஅழுத்தத்தையும் வெறுமையையும், அல்லது அமைதியின்மையையும் பாதுகாப்பின்மையையும் உணரச்

செய்கிறது. இப்படிப்பட்ட உணர்வு இருக்கும்போது நாம் மாம்சத்துக்கு கவனம்செலுத்துகிறோம், மாம்சத்திலோ ஆத்துமாவிலோ வாழ்கிறோம் என்றுஅறியவேண்டும். இப்படிப் பட்ட உணர்வு நம்மை ஆவிக்கு எதிரானதை, அதாவது மாம்சத் தை அறியவும் உணர்ந்தறியவும் செய்கிறது. இவ்வாறு மாம்சத் திற்கு எதிரானதை அறிவதால் ஆவியையே அறிந்துகொள்ளலாம்.

சரி அல்லது தவறு, ஆவிக்குரியது அல்லது ஆவிக்குரிய தல்லாதது, என்று நினைத்து நாம் செய்கிற எதுவாக இருந்தாலும், நாம் இளைப்பாறுதலின்மை, பாதுகாப்பின்மை, வெறுமை, மனஅழுத்தம் ஆகியவைகளை நம்முள் ஆழமாக உணர்ந்தால், நாம் மாம்சத்தினால் நடக்கிறோம், ஆவியில் வாழவில்லை என்று இது நிரூபிக்கிறது. மற்ற காரியங்கள் அல்லது நன்மை இல்லாத காரியங்களைச் செய்வதில் மட்டுமல்ல, ஜெபத்திலும் மற்றும் பிரசங்கிப் பதிலும்கூட, உள்ளாக நாம் வெறுமையாகவோ, மனஅழுத்தமாகவோ, திருப்தியற்றோ, கவலையாகவோ உணர்ந்தால், நாம் ஆவியிலல்ல, மாறாக மாம்சத்தினால் ஜெபிக்கிறோம், பிரசங்கிக்கிறோம் என்பதற்கு இது நிரூபணமாக இருக்கிறது. அநேக நேரங்களில், நம் மனதினால் அல்லது மாம்சத்தினால் (ஏனென்றால், அது ஆவியிலில்லை) ஒரு புத்தகத்திலிருந்து ஒப்புவிப்பதைப்போல நாம் ஜெபிக்கிறோம். நாம் எவ்வளவு அதிகமாக ஜெபிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக எந்தவித நீர்ப்பாய்சுதலும் மகிழ்ச்சியும் இல்லாமல், வறட்சியையும் மனஅழுத்தத்தையும் உணர்கிறோம். ஜெபித்தபிறகு, நாம் வெறுமையை மட்டும் உணர்கிறோம், நாம் திருப்திகரமாக உணர்வதில்லை. நம் தலையிலிருந்து வரும் இப்படிப்பட்ட ஜெபம், ஜீவ நிரப்பீட்டைப் பெறுவதற்கு நம் ஆவியை திறனற்றதாக்கு கிறது; இதற்கு மாறாக, அது மரணத்தின் உணர்வை மட்டுமே தொடுகிறது. நாம் ஜெபித்தது மிகவும் பொருத்தமானதாக இருந்திருந்தாலும்கூட, அது ஆவியில் இல்லை; ஆகையால் நாம் ஜீவன் மற்றும் சமாதானத்தின் நீர்ப்பாய்ச்சுதலையும் மகிழ்ச்சி யையும் தொடமுடியவில்லை, மாறாக மரணத்தின் வறட்சியையும் மனஅழுத்தத்தையும் மட்டுமே உணர்ந்தோம். அநேக நேரங்களில், நம் பிரசங்கித்தலும் இதைப்போலவே இருக்கிறது. நாம் ஆவிக் கேற்றபடி இல்லாமல் நம் தலையால் பிரசங்கிக்கும்போது, நம்முள் வெறுமையையும் வறட்சியையும் உணர்கிறோம் அல்லது மரணத்தை உணர்கிறோம்; நாம் திருப்தியை அல்லது நீர்ப்பாய்ச்சுதலை உணரவில்லை. மேலும் ஜீவனின் உணர்வும் நம்மிடமில்லை. நாம் ஆவியில் இருந்திருந்தால், ஆவியினால் பேசியிருந்தால், நாம் உள்ளே திருப்தியாகவும் இளைப்பாறுத லாகவும், அதாவது நாம் ஜீவனையும் சமாதானத்தையும் உணர்ந்திருப்போம். இவ்வாறு, இப்படிப்பட்ட ஓர் உணர்வினால்,

நாம் செய்வது மாம்சத்தில் இருக்கிறதா ஆவியில் இருக்கிறதா என்பதை நாம் அறிமுடியும். இப்படிப்பட்ட ஓர் உணர்வு, நாம் மாம்சத்தை அறியச் செய்கிறது, மேலும் மாம்சத்தை அறிவதால் ஆவியையும் அறியச்செய்கிறது.

மனஅழுத்தம், வெறுமை, அமைதியின்மை, சந்தோஷ மின்மை, ஆகிய உணர்வுகளை மரணம் நமக்கு ஏற்படுத்துவது மட்டுமல்ல, மாறாக நம்மை ஜீவனின் உணர்வையும் இழக்கச்செய்கிறது. இப்படிப்பட்ட மரணத்தின் உணர்வுகள் நமக்கு எச்சரிக்கைகளாக இருக்கின்றன, மாம்சத்திலிருந்து விடுதலையாகவும், ஆவியில் வாழவும் நம்மைத் தூண்டுகின்றன. இப்படிப்பட்ட மரணத்தின் உணர்வை நாம் கொண்டிருந்து, மாம்சத்தின் ஜீவனால் தொடர்ந்து செயல்பட்டு நடந்தால், குறிப்பிட்ட காலத்திற்கு பிறகு மரணம் நம் ஆவியை உள்ளே உணர்விழக்கச்செய்து, மரத்துப்போகச் செய்கிறது. நம் ஆவி உள்ளே மரத்தும் உணர்வற்றும் இருந்தால், இதற்குக் காரணம் மரணத்தினால் நம் ஆவி சேதப்படும் அளவிற்கு ஒரு நீண்ட காலம் நாம் மாம்சத்தில் வாழ்ந்திருக்கிறோம் என்பதேயாகும். இவ்வாறு நாம் நம் ஆவியை எவ்வாறு கையாளுகிறோம் என்றும், நம் ஆவியில் வாழ்கிறோமா இல்லையா என்றும், நாம் அறியவும் முடியும், அறியவும் வேண்டும்.

## VII. ஆவியின் உணர்வினால் ஆவியை அறிதல்

நாம் பேசியிருக்கிற இந்த உணர்வுகள் எல்லாம் நம்முள் இருக்கும் ஜீவனின் ஆவி நமக்குத் தருகிற உணர்வுகளாகும்; ஆகையால் அவைகளை ஆவியின் உணர்வுகள் என்று நாம் கூறலாம். நாம் நேரடியாக ஆவியை அறிந்துகொள்ள விரும்பினால் அது சற்று கடினமாகும், ஆனால் அதோடு ஒப்பிட்டுப்பார்க்கும்போது ஆவியின் இப்படிப்பட்ட உணர்வு களால் நாம் ஆவியை அறிவது எளிதானதாகும். ஆவி உண்மையில் எது என்பதை நேரடியாகப் புரிந்துகொள்வது முற்றிலும் நம்மால் முடியாது. ஆனால் ஆவியின் உணர்வி னால் இதை அறிந்துகொள்வது நமக்குக் கடினமானதல்ல. நாம் ஆவியின் உணர்வை நெருக்கமாகப் பின்தொடர்ந்து நடக்கவும் வாழவும் செய்தால் அப்போது நாம் ஆவியைப் பின்தொடர்கிறோம், மேலும் ஆவிக்கு கவனம்செலுத்து கிறோம். நாம் ஜீவ ஆவியின் விதியின் இயல்பான தன்மையைப் பின்தொடர்ந்து, ஜீவன் மற்றும் சமாதானத்தின் உணர்வுக்கு அக்கறைசெலுத்தி, மரணத்தின் உணர்வு நமக்குத் தரும் எச்சரிக்கைக்கு செவிகொடுத்து, இந்த உணர்வுகளின்படி வாழ்ந்தால் அப்போது நாம் ஆவியில் வாழ்கிறோம். இந்த உணர்வுகள் ஆவியிலிருந்து வருகின்றன; ஆகையால் அவைகள் ஆவியைத் தொட்டு அதனால் நாம் ஆவியை அறியச்செய்கின்றன.

அத்தியாயம் எட்டு

# ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் உள்ள வேறுபாடு

ஆவியின் உணர்வையும் ஆவியை அறிதலையும்பற்றி நாம் பார்த்திருக்கிறோம்; இப்போது, நாம் ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் உள்ள வேறுபாட்டைப் பார்ப்போம்.

## I. ஆவியையும் ஆத்துமாவையும் வேறுபிரித்தல்

உளவியலாளர்கள் என்று அழைக்கப்படுகிறவர்கள் மனிதனை பகுத்தாய்ந்து, அவனை பௌதீகம் சாராத பகுதி மற்றும் பௌதீகம் சார்ந்த பகுதி என இரண்டாகப் பிரிக் கின்றனர். பௌதீகப் பகுதி உடலைக் குறிக்கிறது, பௌதீகம் சாராத பகுதி உளத்தைக் குறிக்கிறது, அது வேதாகமத்தில் பேசப்பட்டுள்ள ஆத்துமாவாகும். மனிதனுடைய உடலுக்குள், உளம் அதாவது ஆத்துமா மட்டுமே இருக்கிறது என்று அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் வேதாகமம் மனிதனுக்குள் ஆத்துமாவைத்தவிர ஆவியும் இருக்கிறது என்று நமக்குக் கூறுகிறது. *1 தெசலோனிக்கேயர் 5:23* "ஆத்துமா" என்று மட்டும் கூறவில்லை, மாறாக "ஆவியும் ஆத்துமாவும்" என்று கூறுகிறது. ஆவியும் ஆத்துமாவும் இரண்டு காரியங்கள் மற்றும் வேறுபாடானவைகள். இவ்வாறு *எபிரேயர் 4:12* ஆத்துமாவையும் ஆவியையும் பிரிப்பதைப்பற்றிப் பேசுகிறது.

நாம் ஜீவனில் உண்மையான ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெற விரும்பினால், ஆவியும் ஆத்துமாவும் வேறுபாடான இரண்டு காரியங்கள் என்பதை அறியவேண்டும், மேலும் ஆவி என்றால் என்ன, ஆத்துமா என்றால் என்ன என்பதையும், ஆவிக்குரியது எது, ஆத்துமாவுக்குரியது எது என்பதையும் பகுத்துணரக் கூடியவர்களாக நாம் இருக்கவேண்டும். ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் உள்ள வேறுபாட்டை நம்மால் பகுத்துணர முடிந்தால், அப்போது நாம் நம் ஆத்துமாவை மறுதலித்து, ஆத்துமாவிலிருந்து விடுவிக்கப்பட்டு தேவனுக்கு முன்பாக ஆவியில் வாழமுடியும்.

### A. ஆத்துமா எதிர் ஆவி

*1 கொரிந்தியர் 2:14-15* இரண்டு வகையான மனிதனைப் பற்றிப் பேசுகிறது: ஒன்று ஆத்துமாவுக்குரிய மனிதன் ("ஜென்ம சுபாவமான மனிதன்" என்பதற்கான மூலப்படிவம் "ஆத்துமாவுக்குரிய மனிதன்"), மற்றொன்று ஆவிக்குரிய மனிதன். ஆத்துமா அல்லது ஆவி ஆகிய இந்த வேறுபாடான இரண்டு

காரியங்களுள் ஏதாவது ஒன்றினால் மனிதன் வாழவும், அதற்கு உரியவனாக இருக்கவும்முடியும் என்று இது நமக்குக் காட்டுகிறது. மனிதன் ஆத்துமாவால் வாழ்ந்து ஆத்துமாவுக்குரியவனாக இருக்கமுடியும், இதனால் ஆத்துமாவுக்குரிய மனிதனாக மாறுகிறான்; அல்லது ஆவியினால் வாழ்ந்து ஆவிக்குரியவனாக இருக்கமுடியும், இதனால் ஆவிக்குரிய மனிதனாக மாறுகிறான். ஒரு மனிதன் ஆவிக்குரியவனாக இருந்தால், தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களைப் பகுத்துணர்ந்து அவைகளைப் பெற்றுக் கொள்ளமுடியும்; இருப்பினும் அவன் ஆத்துமாவுக்குரிய வனாக இருந்தால் இப்படிப்பட்ட காரியங்களை அவன் பெற்றுக்கொள்ளமுடியாது, மேலும் அவைகளை அவன் அறியவும் முடியாது. ஆத்துமா ஆவியிலிருந்து மாறுபட்டது என்பதை இது தெளிவாக்குகிறது. ஆவி தேவனோடு தொடர்புகொண்டு தேவனு டைய ஆவிக்குரிய காரியங்களைப் பகுத்துணரமுடியும். தேவனுடைய ஆவிக்குரிய காரியங்கள் ஆத்துமாவுக்கு முரணாகவும், பொருத்தமற்றும் இருக்கின்றன. ஆவி தேவனுடைய காரியங்களைப் பாராட்டுவதிலும் பெற்றுக்கொள்வதிலும் களிகூறு கிறது, ஆனால் ஆத்துமா அப்படி இல்லை; அது, இப்படிப்பட்ட காரியங்களைப் பெற்றுக்கொள்ளாதது மட்டுமல்ல அது அவைகளை முட்டாள்தனம் என்றும் கருதுகிறது.

வேதாகமத்தில் மாம்சம் ஆவிக்கு எதிரானது என்று காட்டுகிற ரோமர் 8 மட்டுமல்ல, ஆத்துமாவும் ஆவிக்கு எதிரானது என்று காட்டுகிற 1 கொரிந்தியர் 2-ம் இருக்கிறது. மனிதன் மாம்சத்தால் வாழும்போது, அவன் ஆவிக்குரியவ னாக இல்லாமல் மாம்சத்துக் குரியவனாக இருக்கிறான்; அதுபோல மனிதன் ஆத்துமாவினால் வாழும்போது, அவன் ஆவிக்குரியவனாக இல்லாமல் ஆத்துமாவுக் குரியவனாக இருக்கிறான். ரோமர் 8 மாம்சத்தைப்பற்றிப் பேசும்போது, அது பாவத்தோடு அதற்குள்ள உறவை வலியுறுத்து கிறது; ஆகையால் பாவம்செய்யும் எல்லாரும் மாம்சத்திற் குரியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் ஆத்துமா நேரடியாக பாவத்தோடு தொடர்புடையதாக இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. பல நேரங்களில் மனிதன் (மனிதனுடைய பார்வையில்), பாவம்செய்யாமலும், மாம்சத்துக்குரியவனாக இல்லாமலும் இருக்கக்கூடும், இருப்பினும், இன்னும் அவன் ஆவிக்குரியவனாக இல்லாமல் ஆத்துமாவுக்குரியவனாக இருக்கிறான். (கண்டிப்பாக பேசினால் மனிதன் ஆத்துமாவுக் குரியவனாக இருக்கும்போது, அவன் மாம்சத்துக்குரியவனாகவும் இருக்கிறான், ஏனென்றால் மனிதனுடைய ஆத்துமா மாம்சத்தின்கீழ் வீழ்ந்துபோனது. ஆனால், ஆத்துமாவைப்பற்றி நாம் பேசும்போது, ஆத்துமாவுக்குரியவனாக இருப்பதற்கும் மாம்சத்துக்குரியவனாக

இருப்பதற்கும் இடையே ஒரு வித்தியாசம் இருக்கிறது.) இவ்வாறு நாம் பாவம்செய்யாமல் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு மனிதனுடைய பார்வையில் மாம்சத்துக்குரியவனாக இல்லாமலிருந்தாலும், நாம் ஆத்துமாவுக்குரியவர்களாக இல்லாமல் அவசியம் ஆவிக்குரிய வர்களாக இருக்கிறோம் என்பது இதன் அர்த்தமல்ல; தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களை நிச்சயமாக நாம் புரிந்துகொள்ள முடியும் என்பதோ, தேவனுடைய காரியங்களைப் புரிந்துகொண்டு, பாராட்டி, பெற்றுக்கொள்ள முடியும் என்பதோகூட இதற்கு அர்த்தமல்ல. நாம் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு, மாம்சத்தில் கட்டுப்பாடில்லாமல் ஓடுவதை நிறுத்திவிட்டாலே, நாம் ஆவிக்குரியவர்களாக மாறி தேவனோடு தொடர்புகொண்டு, தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொண்டு விடலாம் என்று நாம் பலமுறை நினைக்கிறோம். இல்லை, அது அவ்வளவு நிச்சயமல்ல. நாம் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு மாம்சத்தில் கட்டுப்பாடில்லாமல் ஓடவில்லை என்பதுபோல் தோன்றினாலும், இன்னும் நாம் நம் ஆவியினால் வாழாமல் ஆத்துமாவினால் வாழ்வதற்கு முற்றிலும் சாத்தியமிருக்கிறது.

கர்த்தருடைய இரட்சிப்பு நம்மை பாவத்திலிருந்தும் மாம்சத்திலிருந்தும் மட்டுமல்ல ஆத்துமாவிலிருந்தும் விடுவிக்கிறது. கர்த்தருடைய இரட்சிப்பின் குறிக்கோள் நாம் பாவத்திலும் மாம்சத்திலும் இருக்கக்கூடாது என்பது மட்டுமல்ல; மாறாக, ஆத்துமாவில் இல்லாமல் ஆவியில் இருக்கவேண்டும் என்பதுமாகும். அவருடைய இரட்சிப்பு, நாம் ஒரு ஒழுக்கமான மனிதனாக மாற, ஒழுக்கத்தின் தரத்திற்கு மட்டுமல்ல; இன்னும் அதிகமாக, நாம் ஒரு ஆவிக்குரிய மனிதனாகும்படி ஆவிக்குரிய தரத்திற்கும் நம்மை இரட்சிக்கிறது. நல்லொழுக்கங்களுடைய ஒரு மனிதன் அவசியம் ஒரு ஆவிக்குரிய மனிதனாகத்தான் இருப்பான் என்பதில்லை; மாறாக, அவன் ஆத்துமாவுக்குரிய ஒரு மனிதனாக அதாவது, ஆத்துமாவினால் வாழ்கிற ஒரு மனிதனாக இருப்பது முற்றிலும் சாத்தியமே. இவ்வாறு ஒரு சகோதரனோ ஒரு சகோதரியோ, மிக நல்லொழுக்கம் உடையவராகவும் மிகவும் நல்லவராகவும் இருக்கலாம்; ஆனாலும், தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களைப் பொறுத்தவரை அவனோ, அவளோ பிரகாசிக்கப் படாமலும், அவைகளை விருப்பப்படாமலும், பாராட்டாமலும், அவைகளைப் பெற்றுக்கொள்ளா மலும்கூட இருக்கமுடியும். ஏனென்றால், அவனோ, அவளோ ஆத்துமாவில் வாழ்கிறவ ராகவும், ஆத்துமாவுக்குரியவராகவும் இருக்கிறார்.

## B. ஆவிக்குரிய காரியங்களில் ஆத்துமாவின் ஆற்றலின்மை

“ஜென்மசுபாவமான (ஆத்துமாவுக்குரிய) மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளமாட்டான்; ...அவைகளை அறியவும்மாட்டான்” என்று 1 கொரிந்தியர் 2:14 கூறுகிறது. தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களைப் பொறுத்த வரை ஆத்துமாவின் நிலைமையைப்பற்றி இந்த வார்த்தைகள் தெளிவாகவும் ஆழமாகவும் பேசுகின்றன. ஆத்துமா தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களை “பெற்றுக்கொள்ளவும் முடியாது”, “அவைகளை அறிந்துகொள்ளவும் முடியாது”. ஆத்துமா தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களை விரும்புவதுமில்லை, அது அவைகளைப் பெற்றுக்கொள்ளவும் முடியாது; அது அவைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பினாலும்கூட அதனால் முடியாது, ஏனெனில் அது அவைகளை அறியவோ, புரிந்துகொள்ள வோ முடியாது. ஆத்துமாவின் சுபாவம் தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களுடன் ஒத்திருக்கவில்லை; ஆகையால் அது தேவனுடைய காரியங்களை விரும்புவதோ பெற்றுக் கொள்வதோ இல்லை. மேலும் தேவனுடைய காரியங்களை அறிந்துகொள்வதற் கான ஆற்றல் அதற்கு இல்லை. ஆகையால் தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களைப் பொறுத்தவரை, ஆத்துமாவினால் வாழ்கிற ஒரு மனிதனுக்கு எந்த உணர்வோ, எந்த ஈடுபாடோ, எந்த விருப்பமோ இருப்பதில்லை; அவன் அவைகளைத் தேடுவதும் இல்லை, அவைகளைப் பெறுவதும் இல்லை, அவைகளைப் புரிந்துகொள்ளவதும்கூட இல்லை. இதன் காரணமாகத்தான் நாம் ஆத்துமாவினால் வாழாதபடிக்கு தேவன் நம்மை ஆத்துமாவிலிருந்து விடுவிக்கவேண்டும்; அப்போது நாம் அவருடைய ஆவிக்குரிய காரியங்களை நேசித்து புரிந்துகொண்டு பெற்றுக்கொள்ளும்படி அவர் செய்கிறார்.

ஆவிக்குரிய காரியங்களில் ஆத்துமாவின் ஆற்ற லின்மையைப்பற்றி நாம் தெளிவாக இருக்கவேண்டும். மேலும் இதை ஒரு முக்கியமான காரியமாகக் கருதவேண்டும். ஆத்துமா தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களைப் பெற்றுக்கொள்ளவோ, அவைகளை அறியவோ முடியாது. ஆத்துமாவினால் வாழ்கிற ஒரு சகோதரனோ சகோதரியோ, மிகவும் நல்லவராக, நன்னடத்தையுள்ளவராக, நற்குணசாலியாக இருக்கமுடியும்; ஆனால் அவனோ அவளோ நிச்சயமாக ஆவிக்குரிய காரியங்களை அறிய முடியாது, மேலும் ஆவிக்குரிய காரியங்களுக்காக தாகமாக இருக்கவும் மாட்டார்கள். நான் இப்படிப்பட்ட அநேக சகோதர சகோதரிகளைச் சந்தித்திருக்கிறேன். அவர்கள் தங்கள் நடத்தையில் மிகவும் கவனமாக இருக்கிறார்கள். மேலும் அவர்கள் நடத்தை பிழையற்றதாக இருக்கிறது என்றும்கூட சொல்லலாம். எனினும் ஆவிக்குரிய காரியங்களைப் பொறுத்தவரை அவர்களுடைய

மனதில் அடைப்பு இருக்கிறது, மேலும் அவர்கள் அவைகளைத் தேடமாட்டார்கள். நல்லது கெட்டது, சரி தவறு என்ற மனித ஒழுக்கத்தின் தரத்தினால் அவர்கள் தங்களையும் மற்றவர்களையும் மதிப்பிடுகிறார்கள். மேலும் எல்லாக்காரியங்களிலும் அவர்கள் தேவனுடைய ஆவியின் உணர்விலும் உள்ளான பார்வையிலும் குறை வுள்ளவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் தங்கள் மனதில் தெளிவாகவும் தங்கள் அறிவாற்றலில் பலமாகவும் இருக்கலாம், ஆனால் அவர்கள் தங்கள் ஆவியில் பிரகாசிக்கப் படுவதில்லை; மேலும் அவர்களுடைய ஆவியின் உணர்வும் கூர்மையாய் இருப்பதில்லை. நீங்கள் அவர்களை *நல்ல* கிறிஸ்தவர்கள் என்று அழைக்கலாம், ஆனால் நீங்கள் அவர்களை ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் என்று அழைக்க முடியாது. அவர்களுடைய நடத்தையைப் பொறுத்தவரை அவர்கள் நிஜமாகவே நல்லவர்கள். எவ்வாறு நடப்பது, எவ்வாறு காரியங்களைக் கையாளுவது என்று அவர்கள் அறிந்திருக்கிறார்கள்; அவர்கள் அறிவாற்றலும் விழிப்பும், கவனமும் திறமையும் உள்ளவர்கள். ஆனால் அவர்கள் தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களைத் தொட்டவுடனே குழப்பமடைந்துவிடுகிறார்கள். அவர்கள் எந்த உணர்வோ, புரிந்துகொள்ளும்திறனோ அற்ற மரம் அல்லது கல்லைப்போல இருக்கிறார்கள். மேலும் ஆவிக்குரிய காரியங்களைப் பொறுத்த வரையில், அவர்கள் இருதயத்தில் அடிக்கடி குளிர்ந்துவிடுகிறார்கள்; அவர்கள் புரிந்துகொள்வதில் மந்தமானவர்களாக மட்டுமல்ல, தேடுவதிலும் சோம்பலானவர்களாக இருக்கிறார்கள்.

எனவே நல்ல கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில்லை. ஆவிக்குரிய கிறிஸ்தவர்கள் வெறுமனே தங்கள் நடத்தையில் நல்லவர்கள் மட்டுமல்ல; அவர்கள் தங்கள் ஆவியில் வாழ்ந்து ஆவியின் உணர்வைக் கொண்டிருந்து, ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொண்டு, உள்ளிருந்து தேவனுக்குரிய வழியை அறிந்து ஆவிக்குரிய காரியங்களில் தேர்ச்சிபெற்றவர்களாக இருக் கிறார்கள். நன்மைத் தன்மையும், ஆவிக்குரியதன்மையும் மிகவும் வித்தியாசமான வைகள். அநேக சகோதர சகோதரிகள் நல்லவர்களாக இருக்கிறார் கள், ஆனால் ஆவிக்குரியவர்களாக இல்லை; அவர்கள் நல்ல வர்கள், ஆனால் அவர்கள் ஆவியில் வாழவில்லை. நீங்கள் அவர்களில் நன்மையைக் காணலாம், ஆனால் நீங்கள் ஆவியைக் காணமுடியாது. நீங்கள் அவர்களில் மனித நற்பண்புகளைப் பார்க்கலாம், ஆனால் நீங்கள் தேவ னுடைய வாசனையை நுகர முடியாது. ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தில், அவர்கள் மாம்சத்தில் இல்லாதவர்களைப்போல் தோன்றுகிறார்கள், இருப்பினும் அவர்கள் நிச்சயமாக ஆத்துமாவில் இருக்கிறார்கள். அவர்கள் மாம்சத்திற்கு ஆளுகையைக் கொடுக்காவிட்டாலும்,

அவர்கள் ஆவியில் வாழ்வதில்லை; அவர்கள் பாவக்காரியங்களை அங்கீகரிக்காவிட்டாலும்கூட அவர்கள் ஆவிக்குரிய காரியங்கள் மேல் தாகமாயிருப்பதில்லை; அவர்கள் மாம்சத்தின்படி பாவம்செய்யாவிட்டாலும் ஆத்துமாவாகிய சுயத்தினால் வாழ்கிறார்கள். ஆத்துமாவே அவர்களுடைய வாழ்க்கையின் ஊற்றாக இருக்கிறது, மேலும் அது, அவர்களுடைய வாழ்க்கையின் வழிவகைகளாகவும் இருக்கிறது. அவர்கள் ஆத்துமாவுக்குரிய மக்கள், அதாவது ஆத்துமாவிலும், ஆத்துமாவினாலும் வாழ்கிற வர்கள்; ஆகையால் அவர்கள் ஆவிக்குரிய காரியங்களை விரும்பு வதுமில்லை, அவர்களால் அவைகளைப் புரிந்துகொள்ளவும் முடியவில்லை.

## C. ஆத்துமாவின் உள்ளடக்கம்

ஆத்துமா என்பது நம் தனிப்பட்ட ஆளுமை அதாவது நம் நான் என்ற முனைப்பு; ஆகையால் ஆத்துமா நம் சுயமாக இருக்கிறது. பகுப்பாய்வு முறையில் பேசினால், மனம், உணர்ச்சி, சித்தம், ஆகிய இந்த மூன்று பகுதிகளையும் ஆத்துமா உள்ளடக்கி யிருக்கிறது. மனம் என்பது மனிதனுடைய சிந்திக்கும் உறுப்பாகும். இதைத்தான் நாம் வழக்கமாக மூளை என்று பேசுகிறோம் (உயிரியல்ரீதியாக இது மூளையாக இருக்கிறது, மனோரீதியாக இது மனமாக இருக்கிறது). இது நம் ஆத்துமாவின் பிரதானமான பகுதியாகும். மனிதனின் சிந்தித்தல், தியானித்தல், பரீசிலித்தல், நினைவில் வைத்தல் போன்ற இவையெல்லாம் ஆத்துமாவிலுள்ள மனதின் செயல்பாடுகளாக இருக்கின்றன. மனிதனின் வீழ்ச்சிக்குப்பின்பு, விசேஷமாக இன்றைய மனிதன் பெரும்பாலும் மனதில் வாழ்கிறான், மேலும் மனதின் எண்ணங்க ளால் இயக்கப்படுகிறான். மனிதன் எப்படி சிந்திக்கிறானோ அப்படியே நடக்கிறான். மனிதனின் செயல் எப்போதும் மனிதனின் எண்ணத்தோடு பிணைக்கப்பட்டிருக்கிறது. தன் எண்ணத்தில் வாழாத ஒருவனைப் பார்ப்பது மிகவும் அரிது. ஆகவே, இன்று யாரைப்பற்றி அல்லது எதைப்பற்றி பரீசிலிப் பதாக இருந்தாலும், மனிதனின் மனதை வெற்றி கொள்வதற்கு நாம் மனித எண்ணத்தைக்கொண்டு தொடங்கவேண்டும். இன்றைய நாட்களில் அநேக தத்துவங்கள், கல்விக் கொள்கைகள், கல்விமுறைகள் இருக்கின்றன. மேலும் மனிதனின் மனதை வெற்றி கொள்ள மனித எண்ணத்தோடு இடைபடவேண்டும் என்ற ஒரு குறிக்கோள் மட்டுமே அவைகளுக்கு இருக்கின்றன. நீங்கள் மனித எண்ணத்தால் அவனுடைய மனதை வென்றுவிட்டால் அப்போது நீங்கள் அவனை வென்றுவிடமுடியும், ஏனென்றால் மனிதன், மனதில் அதாவது மூளையில் வாழ்கிறான். மேலும் அவன் மனதின்

எண்ணத்தால் இயக்கப்படுகிறான்.

ஆத்துமாவிலுள்ள உணர்ச்சி என்பது மனிதனுடைய அன்பு, கோபம், துக்கம், மகிழ்ச்சி, ஆகியவற்றின் உறுப்பாகும். மனிதன் நேசிக்கிறான், வெறுக்கிறான், மகிழ்ச்சியடைகிறான், துக்கமடைகிறான், பரவசப்படுகிறான், அழுத்தப்படுகிறான், இவைகளெல்லாம் மனிதனுடைய ஆத்துமாவிலுள்ள உணர்ச்சியின் செயல்பாடுகளாக இருக்கின்றன. உணர்ச்சிவசப்படுபவர்கள் அநேகர் இருக்கிறார்கள், அவர்கள் உணர்ச்சியில் வளமாக இருக்கிறார்கள், மேலும் மிகவும் எளிதில் தூண்டப்படுகிறார்கள். அவர்கள் அடிக்கடி தங்கள் உணர்ச்சியினால் காரியங்களோடு இடைபடுகிறார்கள். இப்படிப்பட்ட மக்களோடு எண்ணத்தில் அவர்களிடம் விளக்கிக்கூறும்போது அவர்களை மேற்கொள்வது கடினம்; ஆனால் நீங்கள் மிகஎளிதாக அவர்களுடைய உணர்ச்சியை அசைக்கமுடியும். மனதில் அவர்களை எளிதாக இணங்க வைக்க உங்களால் முடியாது, ஆனால் உணர்ச்சியில் எளிதாக அவர்களை அசைக்கமுடியும்.

ஆத்துமாவிலுள்ள சித்தம் என்பது மனிதனின் தீர்மானிக்கிற உறுப்பாயிருக்கிறது. மனிதன் முடிவெடுக்கிறான், தீர்மானிக்கிறான், தீர்ப்புசெய்கிறான், தெரிந்தெடுக்கிறான், பெற்றுக்கொள்கிறான், மறுதலிக்கிறான், இவைகளெல்லாம் மனிதனின் ஆத்துமாவிலுள்ள சித்தத்தின் செயல்பாடுகளாக இருக்கின்றன. சில மக்கள் மனதில் இருக்கிறார்கள், சிலர் உணர்ச்சியில் இருக்கிறார்கள், இன்னும் சிலர் சித்தத்தில் இருக்கிறார்கள். மனம் அல்லது உணர்ச்சியில் இருக்கிறவர்கள், தங்கள் மனம் அல்லது உணர்ச்சியில் வாழ்கிறதைப்போல, சித்தத்தில் இருக்கிறவர்களும் தங்கள் சித்தத்தில் வாழ்கிறார்கள். மனம் அல்லது உணர்ச்சியில் இருப்பவர்களுக்கு முறையே அவைகள் அவர்களுடைய பலமான பகுதியாக இருப்பதுபோல, சித்தமும் இருக்கிறது. சித்தத்தில் இருக்கிற ஒருவன் நிச்சயமாக தன் தீர்மானத்தில் மிகவும் உறுதியாக இருக்கிறான். ஒரு காரியத்தை செய்யவேண்டுமென்று அவன் தீர்மானித்துவிட்டால், அவனை மாற்றுவதற்கு உங்களுக்கு எந்த வழியுமில்லை. நீங்கள் அவனிடம் விளக்கிக்கூறலாம், ஆனால் அவன் அந்த விளக்கத்தைக்குறித்து அக்கறைப்படமாட்டான்; நீங்கள் உணர்ச்சியைக்கொண்டு அவனிடம் முறையிடலாம், ஆனால் அவன் உணர்ச்சியைப் பொருட்படுத்துவதில்லை. அவன் தன் சித்தத்தினால் செயல்படுகிறவனாகவும், தன் சித்தத்தில் இருக்கிறவனாகவும் இருக்கிறான்.

ஆத்துமாவில் மனம், உணர்ச்சி, சித்தம், ஆகிய மூன்று பகுதிகள் இருக்கின்றன. இந்த மூன்று பகுதிகளும் ஒவ்வொரு மனிதனிலும் ஒரே நேரத்தில் இருக்கின்றன. ஒவ்வொரு

மனிதனுக்கும் எண்ணம், உணர்ச்சி, சித்தம், இருக்கிறது. இருப்பினும் சிலர் மனதில் அதிகமாக இருக்கிறார்கள், சிலர் உணர்ச்சியில் வளமாக இருக்கிறார்கள், மற்றவர்கள் சித்தத்தில் பலமாக இருக்கிறார்கள்.

சிலர் தங்கள் சிந்தனையில் மிகத் தெளிவாக இருக்கிறார்கள். உணர்ச்சியினால் நீங்கள் அவர்களை அசைப்பதற்கு எவ்வளவுதான் முயற்சித்தாலும் அது முடியாத காரியம். நீங்கள் அவர்களை வெற்றிக்கொள்ள விரும்பினால், நீங்கள் விளக்கத்தைப் பயன்படுத்த வேண்டும். அவர்கள் மனதில் அல்லது மூளையில் வாழ்கிறார்கள்; அவர்கள் அறிவாற்றலுடையவர்கள்.

சிலர் விசேஷமாக உணர்ச்சி மிகுந்தவர்கள். அவர்கள் மூளையில்லாமல், சிந்திக்காமல், உணர்ச்சியை மட்டுமே கொண்டிருப்பதைப்போல தோன்றுகிறது. இப்படிப்பட்ட மக்கள் தங்கள் உணர்ச்சியினால் அடிக்கடி காரியங்களைக் குழப்புகிறார்கள். நீங்கள் அவர்களுக்கு விளக்கிக்கூறினாலும் அவர்கள் எப்போதும் அக்கறைப்படுவதோ புரிந்துகொள்வதோ இல்லை. மேலும் தங்கள் இருதயத்தில் அசைக்கப்படுவதுமில்லை. உணர்ச்சியைக்கொண்டு நீங்கள் அவர்களோடு இடைபட்டால், அவர்களுடைய உள்ளார்ந்த பகுதியைத் தொடுவது மிகவும் எளிதாக இருக்கும். அவர்களைப் பொறுத்தவரை ஆயிரமாயிரம் விளக்கங்களைவிட ஒருசில கண்ணீர்த்துளிகள் சக்திவாய்ந்ததாக இருக்கிறது. சில நேரங்களில் நீங்கள் அவர்களுக்கு எப்படி விளக்கிக் கூறினாலும்சரி, நீங்கள் அவர்களை சமரசப்படுத்த முடியாது. எனினும் நீங்கள் ஒருசில துளிகள் கண்ணீர் சிந்தினால் போதும் அவர்களை வென்றுவிடமுடியும். அவர்கள் உணர்ச்சிக்கு மட்டுமே அக்கறைசெலுத்துகிறார்கள் விளக்கத்திற்கல்ல. இது ஏனென்றால், அவர்கள் அறிவாற்றலில் இல்லை. ஆனால் உணர்ச்சியில் இருக்கிறார்கள்.

சில மக்களுடைய சித்தம் விசேஷமாக பலமாக இருக்கிறது. அவர்கள் ஒவ்வொரு காரியத்திலும் சில கருத்து அல்லது யோசனையைக் கொண்டிருக்கிறார்கள். மேலும் அவர்கள் ஒரு முடிவெடுத்துவிட்டால், அவர்கள் மிக உறுதியாக இருக்கிறார்கள், மேலும் அவர்களை எளிதாக மாற்றமுடியாது. வழக்கமாக இப்படிப்பட்ட மக்கள் மிகவும் திடமாகவும் பிடிவாதமாகவும் இருக்கிறார்கள், இவர்கள் உணர்ச்சிக்கோ, விளக்கத்திற்கோ அக்கறைசெலுத்துவதில்லை. ஒவ்வொரு காரியத்திலும் தங்களுடைய வளைந்துகொடுக்காத சித்தத்தினால் யோசனைகளை முன்வைத்து, கொள்கைகளை வகுக்கிறார்கள். நீங்கள் அவர்களுக்கு விளக்கிக்கூறுகிறீர்கள், ஆனால் அவர்கள் புரிந்துகொள்வதில்லை. நீங்கள் அவர்களோடு உங்கள் உணர்ச்சியைப் பயன்படுத்துகிறீர்கள், ஆனால்

அவர்கள் அசைவதில்லை. அவர்கள் அறிவாற்றலி லோ, உணர்ச்சியிலோ, இல்லை. மாறாக சித்தத்தில் இருக்கிறார் கள்.

## II. ஆத்துமாவுக்குரிய மனிதனும் ஆவிக்குரிய மனிதனும்

### A. ஆத்துமாவுக்குரிய மனிதன்

ஒரு மனிதன் மனதில் இருந்தாலும், உணர்ச்சியில் இருந்தாலும், சித்தத்தில் இருந்தாலும் அவன் ஆத்துமாவுக்குரியவன். ஒரு மனிதன் மனதில் வாழ்ந்தாலும், உணர்ச்சியில் வாழ்ந்தாலும், சித்தத்தில் வாழ்ந்தாலும், அவன் ஆத்துமாவில் வாழ்கிறான். ஒரு மனிதன் மனதினால் வாழ்ந்தாலும், உணர்ச்சியினால் வாழ்ந்தாலும், சித்தத்தினால் வாழ்ந்தாலும், அவன் ஆத்துமாவினால் வாழ்கிறான். ஆகையால் ஒரு மனிதன் ஆத்துமாவுக்குரியவன் என்று தீர்ப்பு கூறுவது நமக்கு மிகவும் எளிது. அவன் மனம், உணர்ச்சி, சித்தத்தினால் செயல்படுகிறானா இல்லையா, மற்றும் அவன் மனம், உணர்ச்சி, சித்தத்தில் வாழ்கிறானா இல்லையா என்பதை மட்டுமே நாம் பார்க்கவேண்டும். அவன் இந்த மூன்றில் ஏதாவது ஒன்றினால் செயல்பட்டு, நடக்கிறவரை அல்லது இந்த மூன்றில் ஏதாவது ஒன்றில் அவன் வாழ்கிறவரை, அவன் ஒரு ஆத்துமாவுக்குரிய மனிதனாக இருக்கிறான்.

ஒரு ஆத்துமாவுக்குரிய மனிதனை "ஒரு நல்ல மனிதன்" என்று மனிதன் அழைக்கிறான். அவன் அடிக்கடி மனிதனின் பார்வையில் குற்றமற்றவனாக இருக்கிறான். தெளிவான சிந்தனை, அதனால் செயல்படுகிறவர்களுக்கு எப்போதும் மனிதனின் புகழ்ச்சியைக்கொண்டு வருகிறது. மிதமான உணர்ச்சி, அதில் வாழ்கிறவர்களுக்கு எப்போதும் மனிதனின் அங்கீகாரத்தைக் கொண்டுவருகிறது. ஒரு உறுதியான சித்தம்கூட, அதைச் சார்ந்து கொள்ளுகிறவர்களுக்கு அடிக்கடி மனிதனின் பாராட்டுதலைக் கொண்டுவருகிறது. ஆனால் மனிதன் இவைகளில் வாழும்போது அவன் பாவத்தில் வாழாவிட்டாலும்கூட, அவன் ஆவியிலும் வாழாமல் இருக்கிறான். மனிதனுக்கு முன்பாக அவன் பாவமற்றவனாகவும், குற்றமற்றவனாகவும் காணப்பட்டாலும், தேவனுக்கு முன்பாக அவனுடைய ஆவி அடைக்கப்பட்டிருக்கிறது, மேலும் அவனுடைய ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதல் மந்தமாக இருக்கிறது.

ஒருமுறை ஒரு குறிப்பிட்ட இடத்தில், நான் ஒரு உடன் வேலையாளைச் சந்தித்தேன். அவருடைய நடத்தை உண்மையாகவே நல்லதாக இருந்தது. ஆனால் அவர் மிக அதிகமாக மனதில் அல்லது மூளையில் வாழ்ந்துகொண்டிருந்தார்; ஆகையால் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்வதற்கு அல்லது உணர்ந்துகொள்வதற்கு அவருக்கு கடினமாக இருந்தது.

தேவனைச் சேவிப்பதைப்பற்றிய காரியங்களை நான் அவரோடு பேசும்போதெல்லாம், அவருடைய கண் விழிகள் திரும்பிவிடுமோ என்று நான் பயந்தேன். நான் பேசும்போது, ஏறக்குறைய குறிப்பைப் பிடித்துக்கொள்ளும்வரை அவர் கவனித்துக் கொண்டிருப்பார், பின்பு அவருடைய கண் விழிகள் திரும்பிவிடும், மீண்டும் அவர் குழப்பமடைந்துவிடுவார். அவருடைய கண் விழிகள் சுற்றிக்கொண்டிருக்கும்போது, அவருடைய மனம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்று அர்த்தம். அவர் பரிசீலனைசெய்வ தற்கு தன் மனதை மட்டுமே பயன்படுத்தினார்; ஆவிக்குரிய காரியங்களை உணர்ந்துகொள்வதற்கு தன் ஆவியைப் பயன்படுத்தவில்லை; ஆகையால், ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்வதும், உணர்ந்துகொள்வதும் அவருக்கு மிகவும் கடினமாகவே இருந்தது.

சிந்தனை செய்வது, ஆவிக்குரிய காரியங்களில் சகோதரர் களுக்கு அடிக்கடி கடினமாகவும் தடையாகவும் இருக்கிறது. அநேக சகோதரர்கள் ஆவிக்குரிய காரியங்களுடன் இடைபடுவதற்கு சிந்தனை செய்வதை அடிக்கடிப் பயன்படுத்துகிறார்கள். தங்கள் மனதைப் பயிற்சிசெய்வதின்மூலம், ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்ளமுடியும் என்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆத்துமாவின் ஒரு பகுதியாக இருக்கிற மனம் ஆவியைப் புரிந்து கொள்ளமுடியாது என்பதை அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள். மனதில் வாழ்கிற ஒரு மனிதன் ஆத்துமாவில் வாழ்கிறான்; மேலும் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றலில்லாத ஆத்துமா வுக்குரிய மனிதனாக நிச்சயமாக மாறிவிடுகிறான்.

ஆவிக்குரிய காரியங்களில் சகோதரர்களுக்கு மனம் கடினமாக இருப்பதுபோல, சகோதரிகளுக்கு உணர்ச்சி அடிக்கடி தடையாக இருக்கிறது. அநேக சகோதரிகள் உணர்ச்சியில் மிக அதிகமாக இருப்பதுதான் அவர்கள் ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்து கொள்ளவோ, உணர்ந்து கொள்ளவோ முடியாமல் இருப்பதற்குக் காரணமாகும். பல்வேறு இடங்களில் உள்ள சபைகளில் உற்சாகமும், அன்புமுடைய தங்கள் நடத்தையில் கவனமுடைய அநேக சகோதரிகளை நான் பார்த்திருக்கிறேன். மேலும் அவர்களுடைய நடத்தை தன்னடக்கமுள்ளதாக இருக்கிறது; ஆனால் ஆவிக்குரிய காரியங்களுக்கு வரும்போது அவர்கள் உணர்வில் குறைவுள்ளவர்களாகவும், அதைப் புரிந்துகொள்ள முடியாதவர் களாகவும் இருக்கிறார்கள். இது ஏனென்றால், அவர்கள் அதிகமாக தங்கள் உணர்ச்சியில் வாழ்ந்து, அதிகமாக தங்கள் உணர்ச்சி யினால் செயல்படுகிறார்கள். மேலோட்டமாக உணர்ச்சி என்பது பாவமல்ல, ஆனால் உணர்ச்சி ஆவியில் வாழ்வதிலிருந்து, தங்கள் ஆவியினால் தேவனுடைய காரியங்களைத் தொடுவதிலிருந்து,

எந்த ஆவிக்குரிய உணர்வுகளையும் கொண்டிருப்பதிலிருந்து, ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்வதிலிருந்து அவர்களைத் தடைசெய்கிறது. உணர்ச்சி என்பது அவர்களுடைய படுகுழி; இது ஆத்துமாவுக்குரிய மண்டலத்தில், ஆத்துமாவினால் வாழ்வதில், ஆத்துமாவுக்குரிய நபராக இருப்பதில், அவர்களைத் தக்கவைத்துக்கொள்கிறது.

அநேக சகோதரர்களுக்கு, சித்தம்கூட ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்வதற்கு கடினமாகவும், தடை யாகவும் இருக்கிறது. சில சகோதரிகளுக்கும் இந்தப் பிரச்சினை இருக்கிறது. அவர்கள் அதிகமாக தங்கள் சித்தத்தினால் காரியங்களைத் தீர்ப்புச் செய்கிறார்கள் முடிவெடுக்கிறார்கள்; எனவே அறியாமலேயே ஆவிக்குரிய காரியங்களில் எந்த ஆவிக்குரிய உணர்வோ புரிந்து கொள்ளுதலோ இல்லாமல் அவர்கள் ஆத்துமாவில் வாழ்கிறார்கள்.

ஒரு நபர் ஆத்துமாவின் எந்தப் பகுதியில் இருக்கிறானோ, அவன் மிகச்சுலபமாக அந்தப் பகுதியினால் செயல்படு கிறான், மேலும் அந்தப் பகுதியில் வாழ்கிறான். மனதிலிருக்கும் ஒருவன் எந்தவொரு காரியத்தையும் எதிர்கொள்ளும்போதெல்லாம், அவன் இயல்பாகவே அந்தக் காரியத்தை மீண்டும் மீண்டும் சிந்திப்பான், அதாவது அதை பல கோணங்களிலிருந்து பரிசீலித்துப்பார்ப்பான். உணர்ச்சியில் இருக்கிற ஒருவன் மற்றவர்களோடு இடைபடு வதிலும் காரியங்களைக் கையாளுவதிலும் உணர்ச்சிகளுக்கு தன்னை அறியாமலேயே அதிக அக்கறைசெலுத்துவான். ஒரு பலமான சித்தத்தையுடையவன் மனிதனோடும் காரியங்களோடும் இடைபடுவதில், அதாவது உறுதியான தீர்மானங்களையும் மாற்றமுடியாத முடிவுகளையும் எடுப்பதில் மிகச்சுலபமாக தன் சித்தத்தைச் சாய்ந்துகொள்ளுகிறான். ஆத்துமாவின் எந்தப் பகுதியில் ஒரு நபர் சுலபமாகவும் இயல்பாகவும் வாழ்கிறானோ நிச்சயமாக அவன் அந்தப் பகுதிக்கு உரியவனாக இருக்கிறான். ஒவ்வொரு காரியத்தையும் மிக இயல்பாக சிந்திக்கிற, பரிசீலனை செய்கிற, மதிப்பிடுகிற, அளவிடுகிற ஒரு நபரை நீங்கள் பார்த்தால், அவன் அறிவாற்றலால் செயல்படுகிறவ னாகத்தான் இருக்கமுடியும் என்று நீங்கள் உறுதியாகக் கூறமுடியும்; ஆகையால் அவன் மனதில் இருக்கிற ஒருவன். ஒரு நபர் காரியங்களை எதிர்கொள்ளும்போது சுலபமாக தூண்டப்படு கிறவனாக, அதாவது சீக்கிரமாக சிரித்து அழுகிறவனாக, ஒரு கணம் சந்தோஷமாகவும் மறுகணம் துக்கப்படுகிறவனாகவும் இருந்தால், அவன் உணர்ச்சியில் அதிகமானவனாகவும் உணர்ச்சிவசப்படுகிறவனாகவும் இருக்கவேண்டும் என்பதை நீங்கள் அறிவீர்கள். எப்போதெல்லாம் நீங்கள் காரியங்களை எதிர்கொள்கிறீர்களோ, அப்போ தெல்லாம் நீங்கள் எந்த முயற்சியும்

இல்லாமல் திட்டமிடுகிறீர்கள் முடிவெடுக்கிறீர்கள், மேலும் நீங்கள் எந்தவித விசேஷமான பயிற்சியும் செய்யாமலேயே உங்கள் சித்தம் இடைபடுவதற்கும் செயல்படுவதற்கும் முன்வருகிறது, அப்போது சந்தேகமேயில்லாமல் நீங்கள் சித்தத்தில் பலமுள்ள வராகவும் சித்தத்தில் இருப்பவர்களாகவும் இருக் கிறீர்கள். ஒரு நபரில் ஆத்துமாவின் எந்தப் பகுதி பலமாகவோ, நிறைவாகவோ இருக்கிறதோ, அந்தப் பகுதிதான் அவன் எந்தக் காரியத்தை எதிர்கொள்ளும்போதும், அதோடு இடைபடுகிறபோதும் எப்போதும் முன்னுக்கு நிற்கிறது. ஒரு நபருடைய ஆத்துமாவின் எந்தப் பகுதி காரியங்களோடு இடைபடுவதில் முன்னின்று நடத்துகிறதோ, அவன் அந்தப் பகுதியில்தான் இருக்கிறான் என்பதற்கு அது நிரூபணமாகும், மேலும் அவன் ஆத்துமாவுக்குரிய மனிதனாக இருக்கிறான் என்பதற்கும் அது நிரூபணமாக இருக்கிறது.

## B. ஆவிக்குரிய மனிதன்

எந்த வகையான நபர் ஆத்துமாவுக்குரியவன் என்பதை நாம் கண்டுணரமுடியுமானால், எந்த வகையான நபர் ஆவிக்குரியவன் என்பதை நாம் உணர்ந்தறிவது கடினமல்ல. ஒரு ஆத்துமாவுக்குரிய நபர் மனம், உணர்ச்சி, சித்தத்தினால் வாழ்வதால், ஒரு ஆவிக்குரிய நபர் இவைகளினால் வாழாத ஒருவனாக இருக்கவேண்டும். ஒரு ஆத்துமாவுக்குரிய நபர் ஆத்துமாவினால் வாழ்ந்து ஆவியினால் வாழாமல் இருக்கிறான், அப்படியென்றால் ஒரு ஆவிக்குரிய நபர் ஆவியில் வாழ்ந்து ஆத்துமாவில் வாழாதவனாக இருக்க வேண்டும். ஆவிக்குரிய நபர்கள் ஆத்துமாக்களைக் கொண்டிருந்தாலும், சாதாரண ஆத்துமாவுக் குரிய நபர்களைக்காட்டிலும் அவர்கள் ஆத்துமாவிலுள்ள மனம், உணர்ச்சி, சித்தம் மிகப்பலமாகவும் நிறைவாகவும் இருந்தாலும், அவர்கள் இந்த ஆத்துமாவுக்குரிய உறுப்புகளினால் வாழ்வது மில்லை, அவர்கள் அவைகளில் வாழ்வதுமில்லை. அவர்கள் ஆவியினாலும் ஆவியிலும் வாழ்கிறார்கள், மேலும் தங்களுடைய எல்லா செயலுக்கும் நடத்தைக்கும் எஜமானாகவும் ஊற்றாகவும் இருக்க ஆவியை அவர்கள் அனுமதிக்கிறார்கள். அவர்களிடத்தில் இருக்கிற ஆவி முதன்மையான இடத்தை ஆக்கிரமித்துக் கொள்கிறது; அவர்களுடைய நடத்தையின் ஊற்றாகவும், அவர்களுடைய செயலின் ஆரம்பமாகவும் ஆவி இருக்கிறது. அவர்களில் இருக்கிற ஆத்துமா பணிந்தடங்குதலின் நிலையில் இருக்கிறது. அவர்களுடைய ஆத்துமாக்களில் இருக்கிற மனம், உணர்ச்சி, சித்தம் ஆகியவைகள் செயல்பட்டாலும்கூட அவைகளெல்லாம் ஆவியின் ஆளுகைக்குக் கீழ்ப்படுத்தப்பட்டிருக் கின்றன மற்றும் ஆவியினால் வழிநடத்தப்படுகின்றன. அவர்கள்

தங்கள் மனம், உணர்ச்சி, சித்தத்தைப் பயன்படுத்தினாலும், ஆத்துமாவிலுள்ள இந்த உறுப்புகளைப் பயன்படுத்தும்போது அவர்கள் எப்போதும் ஆவியின் உணர்வைப் பின்தொடர்கிறார்கள். அவர்கள் எல்லாக் காரியங்களிலும் ஆத்துமாவை எஜமானாக இருக்க அனுமதிக்கிற, ஆத்துமாவிலுள்ள மனம், உணர்ச்சி, சித்தத்தை முன்னின்று நடத்தவும் செயல்படவும் அனுமதிக்கிற, ஆத்துமாவுக்குரிய நபர்களைப் போன்றவர்க ளல்ல. அவர்கள் ஆத்துமாவின் முதன்மையைப் புறக்கணித்து மனம், உணர்ச்சி, சித்தத்தின் நடத்துதலை மறுதலிக்கிறார்கள். ஆகவே அவர்கள் ஆவியை தங்களில் எஜமானாக இருக்கும்படி அனுமதிக்கிறார்கள்; அவர்கள் ஆவியின் உணர்வைப் பின்தொடர்ந்துசெல்லும்படி தங்கள் முழு ஆள்தத்துவத்தையும் வழிநடத்த ஆவியை அனுமதிக் கிறார்கள். எப்போதெல்லாம் அவர்கள் ஏதோவொன்றை எதிர்கொள்கிறார்களோ, அப்போதெல்லாம் அதோடு தொடர்பு கொள்வதற்கும் இடைபடுவதற்கும் ஆத்துமாவிலுள்ள மனம், உணர்ச்சி, சித்தத்தை அவர்கள் முதலில் பயன்படுத்தமாட்டார்கள்; மாறாக அதைத் தொடவும் உணரவும் அவர்கள் தங்கள் ஆவியை முதலில் பயன்படுத்துகிறார்கள், அதாவது இந்த விஷயத்தைப் பொறுத்தவரை கர்த்தருடைய உணர்வுக்காக முதலில் ஆவியில் தேடுகிறார்கள். அவர்கள் தங்கள் ஆவியில் கர்த்தருடைய உணர்வைத் தொட்டுவிட்ட பின்பு, ஆத்துமாவிலுள்ள மனதை ஆவியின் உணர்வைப் புரிந்துகொள்வதற்கும், ஆத்துமாவிலுள்ள உணர்ச்சியை அதை வெளிப்படுத்துவதற்கும், ஆத்துமாவிலுள்ள சித்தத்தை அதை நிறைவேற்றுவதற்கும் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் ஆத்துமாவின் உறுப்புகளை பயன்படுத்தினாலும்கூட அவர்கள் ஆத்துமாவுக்குரியவர்கள் அல்ல, மேலும் அவர்கள் ஆத்தும ஜீவனால் வாழவில்லை. அவர்கள் ஆவிக்குரியவர்கள், அதாவது ஆவியின் ஜீவனால் வாழ்கிறவர்கள், மேலும் ஆத்துமா அவர்களுக்கு ஒரு வேலைசெய்யும் உறுப்பாக மட்டும் இருக்கிறது.

## III. ஓர் இயல்பற்ற நிலைமை

ஒரு வீழ்ந்துபோன மனிதன் தன் ஆவியில் மரித்தவனாக இருப்பதால், ஆத்துமாவினால் மட்டுமே வாழமுடியும் என்பதை நாம் பார்த் திருக்கிறோம். ஆனால் இரட்சிக்கப்பட்டு உயிர்ப்பிக்கப்பட்ட ஆவியையுடைய நாம் ஆவியினால் வாழமுடியும். மேலும் நாம் ஆவிக்குத் திரும்பி ஆவியினால் வாழும்படி தேவன் நம்மை இரட்சிக்கிறார். மனிதனுடைய வீழ்ச்சி ஆவியிலிருந்து ஆத்துமாவுக்குள் மனிதனை விழச்செய்தது, எனவே மனிதன் ஒருபோதும் ஆவியினால் வாழாமல் ஆத்துமாவினால் வாழ்கிறான். மனிதன் ஆத்துமாவினால் வாழாமல் ஆவியினால்

வாழும்படி, தேவனுடைய இரட்சிப்பு மனிதனை ஆத்துமா விலிருந்து ஆவிக்கு இரட்சிக்கிறது. ஆயினும் இரட்சிக்கப்பட்ட அநேகர் இன்னும் இந்த வழியில் வாழவில்லை. சிலர் ஆத்துமாவில் இருந்து ஆத்துமாவினால் வாழ்கிறார்கள், ஏனென்றால் ஆவிக்கும் ஆத்துமாவுக்குமுள்ள வேறுபாட்டையும், அதற்குள் உள்ளடங்கி யுள்ள காரியங்களையும் அவர்கள் அறியவில்லை. மேலும் அவர்கள் ஆத்துமாவிலிருந்து விடுவிக்கப்பட்டு ஆவியில் வாழ வேண்டும் என்பதே தேவனுடைய விருப்பம் என்று அவர்கள் அறியவில்லை. சிலர் தங்களுடைய ஆவி உயிர்ப்பிக்கப் பட்டிருக்கிறது, தங்கள் ஆத்துமா அதிலிருந்து வேறுபட்டது, தங்கள் ஆவியில் அவர்கள் வாழவேண்டு மென்று தேவன் விரும்புகிறார் என்று அறிந்திருந்தாலும், அவர்கள் தொடர்ந்து ஆத்துமாவில் இருந்து ஆத்துமாவினால் வாழ்கிறார்கள். இது ஏனென்றால், அவர்கள் ஆவியில் வாழாமல் ஆத்துமாவில் வாழ்வதையே வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள், மேலும் ஆவியில் வாழ்வது முக்கியம் என்று அவர்கள் கருதவில்லை. ஆவிக்கும் ஆத்துமாவுக்குமுள்ள வேறுபாட்டை அறியாமலும், நாம் ஆத்துமாவிலிருந்து விடுவிக்கப்பட்டு ஆவியில் வாழ்வதையே தேவன் விரும்புகிறார் என்று அறியாமலும் இருப்பவர்கள், ஆத்துமாவிலுள்ள மனம், உணர்ச்சி, சித்தத்தினால் வாழ்வது பொருத்தமானது மற்றும் அவசியமானது, மேலும் கவனமாகவும் குற்றமற்றவர்களாகவும் மட்டும் இருந்தாலே தாங்கள் சரியாக இருக்கிறோம் என்று நினைக்கிறார்கள். கிறிஸ்தவர்களைப் பொறுத்தவரை இது மிகவும் ஏழ்மையானது என்பதை அவர்கள் அறியவில்லை!

தேவன் நம்மை குற்றங்களில் இருந்து குற்றமற்ற நிலைமைக்கு விடுவிப்பதை மட்டும் விரும்பவில்லை; அவர் நம்மை ஆத்துமாவிலிருந்து ஆவிக்கும்கூட விடுவிக்க விரும்புகிறார்.

நாம் ஒரு குற்றமற்ற வாழ்க்கை வாழ்வதை மட்டுமல்ல, இன்னும் அதிகமாக ஒரு ஆவிக்குரிய வாழ்க்கையை, அதாவது ஆவிக்குரியரீதியில் குற்றமற்ற வாழ்க்கை வாழவேண்டும் என்றும் அவர் விரும்புகிறார். நாம் ஆத்துமாவினாலல்ல ஆவியினால் ஒரு குற்றமற்ற வாழ்க்கை வாழவேண்டுமென்று அவர் விரும்புகிறார். இருப்பினும் தங்கள் அறியாமையினால் அநேக கிறிஸ்தவர்கள் இன்னும் தங்கள் ஆத்துமாவினால் வாழ்கிறார்கள், மேலும் தங்கள் ஆத்தும ஜீவனால் குற்றமற்றவர்களாக இருப்பதற்கு அவர்கள் முயற்சிசெய்கிறார்கள், போராடுகிறார்கள். தங்களுடைய ஆவி ஏற்கெனவே உயிர்ப்பிக்கப்பட்டிருந்தாலும், தங்கள் ஆவியை பயன்படுத்த வேண்டுமென்றும், தங்கள் ஆவியில் வாழவேண்டு மென்றும் அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள்.

அவர்கள் தங்களையே பூரண மனிதர்களாக்க, அதாவது ஆத்துமாவின் சக்தியினால் மட்டுமே ஒரு திருப்திகரமான வாழ்க்கை வாழ விரும்புகிறார்கள். காரியங்களைப்பற்றிய அவர்களுடைய கண்ணோட்டமும் தீர்ப்பும், மேலும் அவர்களுடைய அன்பு மற்றும் பற்று எல்லாம் ஆவியில் இல்லாமல் ஆத்துமாவில் இருக்கின்றன. அவர்கள் நன்னடத்தையுள்ள கிறிஸ்தவர்களாகவும், அவர்களுடைய ஒழுக்கமும் நடத்தையும் குற்றமில்லாமல் இருந்தபோதிலும் இன்னும் அவர்கள் ஆவியில் வாழாமல் ஆத்துமாவில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய எண்ணங்கள் தூய்மையாக, அவர்களுடைய உணர்ச்சிகள் சமநிலையாக, அவர்களுடைய தீர்மானங்கள் துல்லியமாக இருப்பதாக வைத்துக்கொண்டாலும், இன்னும் அவர்கள் ஆத்துமாவுக்குரியவர்களாக இருக்கிறார்கள், ஆவிக்குரியவர்கள் இல்லை. கிறிஸ்தவர்கள் என்றமுறையில் அவர்களுடைய நிலைமை இயல்பற்றதாகவே இருக்கிறது. அவர்கள் இயல்பற்ற கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்கிறார்கள். அவர்கள் வெற்றிபெறக்கூடியவர்களாக இருந்தாலும் அவர்கள் தங்களை மட்டுமே திருப்திப்படுத்தமுடியும். சில நேரங்களில் சிலர் உண்மையாகவே தங்கள் வெற்றியினால் (அந்த வெற்றி உண்மை யாகவே சந்தேகத்துக்குரியது) திருப்தி அடைகிறார்கள்; ஆனால் அவர்கள் தேவனைப் பிரியப்படுத்த முடியாது, ஏனென்றால் மனிதன் ஆத்துமாவிலிருந்து விடுவிக்கப்பட்டு ஆவியினால் வாழ வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

ஆத்துமாவுக்கும் ஆவிக்குமுள்ள வேறுபாட்டைப்பற்றியும், நாம் ஆத்துமாவிலிருந்து விடுவிக்கப்பட்டு ஆவியில் வாழவேண்டு மென்ற தேவனுடைய விருப்பத்தைப்பற்றியும் கொஞ்சம் அறிவுடையவர்களாக இருந்தும், இன்னும் ஆத்துமாவில் வாழ்கிறவர்கள் ஓர் இயல்பற்ற கிறிஸ்தவ வாழ்க்கையையே வாழ்கிறார்கள். தங்கள் ஆவி ஏற்கெனவே உயிர்ப்பிக்கப்பட் டிருக்கிறது என்பதை அவர்கள் அறிந் திருந்தும், அவர்கள் அதனால் வாழவில்லை. ஆத்துமாவிலிருந்து விடுவிக்கப்பட்டு ஆவியில் வாழ தேவன் விரும்புகிறார் என்று அவர்கள் அறிந்திருந்தும் இன்னும் அவர்கள் ஆத்துமாவில் இருந்து ஆத்துமாவினால் வாழ் கிறார்கள். மனிதன் தேவனை ஆவியில் தொடர்புகொள்ள வேண்டுமென்று அவர்கள் அறிந்திருந்தும், இன்னும் அவர்கள் தேவனுடைய காரியங்களைத் தொடுவதற்கு ஆத்துமாவைப் பயன்படுத்து கிறார்கள். தங்களுக்கு ஓர் ஆவி இருக்கிறது என்று அவர்களுக்குத் தெரியும். எனினும் அவர்கள் தங்களுடைய ஆவியைப் பயன்படுத்துவதில்லை; தங்கள் ஆவியினால் வாழவேண்டுமென்று அவர்களுக்குத் தெரியும், எனினும் அவர்கள் ஆவியில் வாழ்வதில்லை. ஆத்துமாவிலுள்ள மனம், உணர்ச்சி, சித்தத்தைப்

பயன்படுத்துவது அவர்களுக்கு வசதியாக இருக்கிறது, மேலும் ஆவியைப் பயன்படுத்துவதை அவர்கள் வழக்கமாகக் கொள்ளவில்லை; எனவே அவர்கள் ஆவியினால் வாழ்வதைப் புறக்கணிக் கிறார்கள். ஏதோவொன்று சம்பவிக்கும்போதெல்லாம் அதோடு இடைபட தங்கள் மனம், உணர்ச்சி, சித்தத்தையே அவர்கள் எப்போதும் முதலில் பயன்படுத்துகிறார்கள். அவர்கள் அதைத் தொடர்புகொள்வதற்கு தங்கள் ஆவியை முதலில் பயன்படுத்து வதில்லை. அதிகபட்சம் அவர்கள் நல்ல, குற்றமற்ற கிறிஸ்தவர்களாக மட்டும் இருக்கமுடியும் (மேலும் இது உண்மையில் சந்தேகத்துக்குரியது); அவர்கள் ஆவிக்குரிய கிறிஸ்தவர்களாக இருக்கமுடியாது. அவர்கள் தங்களை மட்டுமே திருப்திப்படுத்தமுடியும்; அவர்கள் தேவனைப் பிரியப் படுத்தமுடியாது. அவர்கள் மனிதனால் மட்டுமே பாராட்டப் படமுடியும்; அவர்கள் தேவனுடைய புகழ்ச்சியைப் பெற முடியாது. அவர்களுக்கு இன்னும் தேவனுடைய விடுதலை தேவை, அதாவது பாவத்திலிருந்து விடுதலை மட்டுமல்ல, ஆத்துமாவிலிருந்தும் விடுதலை தேவை; மனிதனால் ஆக்கினைக்குள்ளாக்கப்படும் அசுத்தமான மாம்சத்திலிருந்து விடுதலை மட்டுமல்ல, மனிதனால் பாராட்டப்படும் சுத்த ஆத்துமாவிலிருந்தும் விடுதலை தேவை. இல்லையெனில் அவர்கள் தேவனுடைய ஆவியின் காரியங்களுக்கு அந்நியர்களாகவும் புறம்பானவர்களாகவும் இன்னும் இருக்கிறார்கள்.

## IV. ஆத்துமாவிலிருந்து விடுதலை பெற வழி

நாம் எவ்வாறு ஆத்துமாவிலிருந்து விடுவிக்கப்பட முடியும்? இதற்கு இரண்டு கண்ணோட்டத்திலிருந்து வெளிப்பாடு தேவைப்படுகிறது: ஒன்று ஆத்துமாவைப் பற்றியது, மற்றொன்று சிலுவையைப்பற்றியது. தேவனுடைய காரியங்களில் ஆத்துமா ஆற்றலற்றது, மேலும் ஆவிக் குரிய காரியங்களில் மதிப்பற்றது என்பதையும் நாம் பார்க்க வேண்டும். நம் ஆத்துமாவிலுள்ள எந்தப் பகுதியும், எவ்வளவு சிறந்ததாகவும் பலமாகவும் இருந்தாலும் அது இன்னும் தேவனுடைய காரியங்களை உணர்ந்து கொள்ளவோ, ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்ளவோ முடியாது. எவ்வளவுதான் நம் மனம் தூய்மையாக இருந்தாலும், எவ்வளவுதான் நம் உணர்ச்சி சமநிலையாக இருந்தாலும், எவ்வளவுதான் நம் சித்தம் நேர்த்தியாக இருந்தாலும், அவைகள் ஒருபோதும் நம்மை ஆவிக்குரியவர்களாக்காது. நம் ஆத்துமாவும் அதற்குரிய எல்லாக்காரியங்களும் ஏற்கெனவே கிறிஸ்துவின் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். கலாத்தியர் *2:20*-ல் "(நான்) கிறிஸ்துவுடனே

கூடச் சிலுவையில் அறையப்பட்டேன்” என்று அப்போஸ்தலன் கூறும்போது, “நான்” என்று அவன் குறிப்பிடுவது ஆத்துமா வையே. தேவனுடைய மதிப்பீட்டில் ஆத்துமா, மரணத்திற்கு மட்டுமே தகுதியுடையது. நம் ஆத்துமா கிறிஸ்துவின் சிலுவையின் மூலமாக தேவனால் ஏற்கெனவே பொறுப்பெடுக்கப்பட்டுவிட்டது. எனவே நம் ஆத்துமாவின் காரியங்களுக்கு நாம் மதிப்பளிக்கக் கூடாது; மாறாக ஆத்துமா மரிக்கவேண்டும், அது மரிப்பதற்கு மட்டுமே தகுதியுடையது, அது ஏற்கெனவே மரித்துவிட்டது என்று நாம் ஒப்புக்கொண்டுதான் ஆகவேண்டும். ஆத்துமாவை ஆக்கினைக்குள்ளாக்க, ஆத்துமாவை மறுதலிக்க, ஆத்துமாவைப் புறக்கணிக்க, எல்லாக்காரியங்களிலும் ஆத்துமா முன்னின்று நடத்துவதைத் தடுக்க, ஒவ்வொரு காரியத்திலும் ஆத்துமாவிற்கு எந்தத் தளமும் கொடுக்காமலிருக்க, இப்படிப்பட்ட வெளிப்பாடும், தரிசனமும் நமக்குத் திறனளிக்கிறது. பரிசுத்த ஆவியானவரால் நாம் ஆத்துமாவை மரணத்திற்குள்ளாக்குகிறோம்; நம் ஆத்தும ஜீவனை மரணத்திற்குள்ளாக்கவும் சிலுவையினால் ஆத்துமாவின் நடவடிக்கையோடு இடைபடவும் நாம் பரிசுத்த ஆவியானவரை அனுமதிக்கிறோம்.

தேவனுக்கு முன்பாக ஆத்துமா எவ்வளவாய் சக்தியற்றது, அதாவது எவ்வளவாய் தேவனுடைய காரியங்களை உணர்ந்து கொள்ளமுடியாமல், தேவனைப் பிரியப்படுத்த முடியாமல் இருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். ஆத்துமாவைப் பற்றிய தேவனுடைய மதிப்பிடுதலையும், எவ்வாறு அவர் ஆத்துமாவோடு இடைபடுகிறார் என்பதையும் நாம் பார்க்கவேண்டும். அப்போது மட்டுமே நாம் ஆத்துமாவை மறுதலித்து, ஆத்துமாவைப் புறக்கணித்து, ஆத்துமாவிலிருந்து விடுவிக்கப்பட முடியும். ஆகையால் நம் ஆத்துமாவின் ஆற்றலின்மையை மட்டுமல்ல, ஆத்துமாவுடன் சிலுவையின் இடைபடுதலையும் நாம் பார்க்கும்படி கர்த்தரிடம் கேட்க வேண்டும்; இவ்வாறு ஒவ்வொரு காரியத்திலும் ஆத்துமாவைப் புறக்கணிக்கவும், ஆத்துமாவி னால் வாழாமல் இருக்கவும் நாம் கற்றுக்கொள்வோம். மனதில் இருக்கும் ஒருவன் எல்லா ஆவிக்குரிய காரியங்களிலும் தன் அறிவாற்றலை மறுதலிக்கவேண்டும்; அவன் சிந்திப்பது, பரிசீலிப்பது ஆகிய இப்படிப்பட்ட செயல்பாடுகளை முழுமையாக ஒதுக்கிவைத்துவிட்டு ஆவிக்குத் திரும்ப வேண்டும், அதாவது தேவனுடைய உணர்வை உணர்வதற்கு ஆவியைப் பயன்படுத்தவேண்டும். அவன் வேதத்தை வாசிக்கும்போது, ஆவிக்குரிய காரியங்களைப்பற்றி ஜெபிக்கும்போது அல்லது பேசும்போது, அவன் தன் சிந்தனை, கற்பனை, தத்துவம், புலனாய்வு ஆகியவைகளை மறுதலித்து,

மாறாக தன் ஆவியிலுள்ள உணர்வை நெருக்கமாகப் பின்தொடர்ந்து, தேவனுடைய ஐக்கியத்தில் அசைய வேண்டும். அதிகமான உணர்ச்சியுள்ள ஒருவன் ஒவ்வொரு காரியத்திலும் தன் உணர்ச்சியை மறுதலிக்கவேண்டும்; தன் உணர்ச்சி நடத்தவோ, இயக்கவோ அவன் அனுமதிக்கக் கூடாது, ஆனால் தன் உணர்ச்சியோடு இடைபட பரிசுத்த ஆவியானவரை அனுமதிக்கவேண்டும்; இவ்வாறு அவன் ஆவியில் தேவனுடைய சித்தத்தை உணரமுடியும். பாவத்திற்கு பயப்படுவதைப்போல தன் உணர்ச்சிக்கும் அவன் பயப்பட வேண்டும், மேலும் தன் உணர்ச்சியினால் இயக்கப்படாமல் அல்லது ஆதிக்கம் செலுத்தப்படாமல் ஆவியில் பயத்துடனும் நடுக்கத்துடனும் வாழவேண்டும். சித்தத்தில் இருக்கிற ஒருவன், தேவனுடைய காரியங்களில் தன் சித்தம் தேவனுக்கு எதிராக இருக்கிறது, அதாவது ஆவிக்கு எதிராக இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும். அப்போது அவன் தன் சித்தத்தை ஆக்கினைக்குள்ளாக்கி, மறுதலித்து, வெறுப்பான். தன் உறுதியான, பலமான சித்தத்தினால் தேவனுக்கு முன்பாக வாழாமல், தன் ஆவியின் உணர்வினால் வாழும்படி, சிலுவையினால் தன் சித்தத்தை உடைப்பதற்கு பரிசுத்த ஆவியானவரை அவன் அனுமதிக்கவேண்டும்.

ஆத்துமாவின் எந்தப் பகுதியில் நாம் இருந்தாலும், அந்தப்பகுதியை நாம் ஆக்கினைக்குள்ளாகவும் மறுதலிக்கவும் வேண்டும். அது நம் மனம், உணர்ச்சி, சித்தம் ஆகிய எதுவாக இருந்தாலும், அவையெல்லாம் உடைக்கப்படவும் இடைபடுத்தப்படவும் வேண்டும். தேவனுடைய காரியங்கள் எல்லாவற்றிலும் மனம், உணர்ச்சி, சித்தம், ஆகியவைகளின் வழிநடத்துதலை நாம் மறுதலிக்கவேண்டும். மாறாக, நம் மனம், உணர்ச்சி, சித்தம், ஆகியவற்றை ஆளுகைசெய்யவும், நடத்தவும், வேலைவாங்கவும், ஆவிக்கு நாம் முதலிடம் கொடுக்கவேண்டும். இந்த வழியில் நாம் ஆத்துமாவிலிருந்து விடுவிக்கப்படமுடியும். அப்போது ஒருபக்கம், நம் ஆவியினால் ஆத்துமாவிலுள்ள எல்லா உறுப்புக்களிடமும் வேலைவாங்க நம்மால் முடியும். மறுபக்கத்தில் நாம் ஆத்துமாவினால் வாழமாட்டோம்; எனவே நாம் ஆத்துமாவுக் குரியவர்களாக இல்லாமல் ஆவிக்குரியவர்களாக இருப்போம்.

அத்தியாயம் ஒன்பது

# மூன்று ஜீவன்களும் நான்கு விதிகளும்

நாம் இப்போது ஜீவனின் அறிவைப்பற்றிய ஒன்பதாவது முக்கியமான குறிப்பாகிய மூன்று ஜீவன்களையும் நான்கு விதிகளையும் பார்க்கலாம். இது வேதாகமத்திலுள்ள மிக முக்கியமான சத்தியமாகும். நம் உள்ளான ஆவிக்குரிய ஜீவனின் நிலைமையை நாம் தெளிவாக அறிய விரும்பினால், அல்லது பாவங்களிலிருந்து விடுபட்டு மேற்கொள்ளும் ஒரு வாழ்க்கையை நாம் வாழ விரும்பினால், இந்த அடிப்படை யான சத்தியத்தைப் பற்றிய முழுமையான புரிந்துகொள்ளுதல் அவசியமானதாகும்.

## I. மூன்று ஜீவன்கள்

### A. மூன்று ஜீவன்களின் வரையறை

இங்கு பேசப்பட்டுள்ள மூன்று ஜீவன்கள், இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவனுக்குள்ளும் இருக்கிற மனிதனுடைய ஜீவன், சாத்தானுடைய ஜீவன், தேவனுடைய ஜீவன் ஆகிய மூன்று ஜீவன்களாகும்.

மனிதனுக்குள் ஒரு ஜீவன், அதாவது பெற்றோர்களிட மிருந்து பெறப்பட்ட மனித ஜீவன் மட்டுமே இருக்கிறது என்று சாதாரணமாக மனிதர்கள் நினைக்கிறார்கள். ஆனால் மனிதனுடைய வீழ்ச்சியின்காரணமாக, மனித ஜீவனைத்தவிர, சாத்தானுடைய ஜீவனும் மனிதனுக்குள் இருக்கிறது என்று வேதாகமம் காண்பிக்கிறது. ஆகையால் மனிதனில், அதாவது மனிதனின் மாம்சத்தில் பாவம் குடியிருக்கிறது என்று ரோமர் 7:18, 20 சொல்லுகிறது. இங்கு பாவம் என்பது சாத்தானுடைய ஜீவனைக் குறிக்கிறது. சாத்தானுடைய ஜீவனை அடக்கியுள்ள இந்த மாம்சம், கலாத்தியர் 5:17-ன்படி, மனிதன் இரட்சிக்கப் பட்டபிறகும் மனிதனுக்குள் இருக்கிறது, மேலும் அது அடிக்கடி ஆவியானவருக்கு எதிராக இச்சிக்கிறது. ஆகையால் ஒரு நபர் இரட்சிக்கப்பட்டபின்பு, அவன் இன்னும் தனக்குள் சாத்தானுடைய ஜீவனைக் கொண்டிருக்கிறான்.

மேலும் “குமாரனிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் நித்திய ஜீவனை உடையவனாயிருக்கிறான்,” என்று யோவான் 3:36 கூறுகிறது. “குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்,” அதாவது தேவனுடைய ஜீவனை உடையவன் என்று 1 யோவான் 5:12-ம் கூறுகிறது. தேவனுடைய குமாரனில் விசுவாசித்து இரட்சிக்கப்பட்ட ஒருவன் தன் சொந்த இயற்கையான

மனித ஜீவனையும் வீழ்ச்சியின்மூலம் பெற்ற சாத்தானுடைய ஜீவனையும் மட்டுமல்ல, தேவனுடைய நித்திய ஜீவனையும் கொண்டிருக்கிறான் என்று இது காண்பிக்கிறது.

## B. மூன்று ஜீவன்களின் பிறப்பிடம்

தேவன் ஆதாமைப் படைத்தபோது, அவர் அவனுடைய மூக்கிற்குள் ஜீவசுவாசத்தை ஊதினார் என்று வேதாகமம் கூறுகிறது; இவ்வாறு, ஆதாம் மனிதனுடைய படைக்கப்பட்ட ஜீவனைப் பெற்றான். அதன்பின், தேவன் மனிதனை ஏதேன் தோட்டத்தில் உள்ள ஜீவமரம், நன்மை-தீமையுள்ள அறிவுமரம் என்ற இரண்டு மரங்களுக்கு முன்பாக நிறுத்தினார். வேதாகமத்தில் பிற்பாடு கொடுக்கப்பட்டுள்ள வெளிப்பாடுகளின்படி, ஜீவமரம் தேவனை அடையாளப்படுத்துகிறது, நன்மை-தீமையுள்ள அறிவுமரம் சாத்தானை அடையாளப்படுத்துகிறது, ஆதாம் மனித இனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறான். எனவே அந்த நாளில் ஏதேன் தோட்டத்தில், அதாவது பிரபஞ்சத்தில் மனிதன், தேவன், சாத்தான் ஆகிய மூன்று சாரார்கள் சம்பந்தப்பட்ட ஒரு சூழ்நிலை உருவானது.

சாத்தான் தேவனுடைய எதிராளி, மேலும் தேவனுடனான அவனுடைய போராட்டத்தின் குவிமையம் மனிதன். சாத்தான் மற்றும் தேவன் ஆகிய இருவருக்கும் மனிதன் தேவைப் பட்டான். தேவன் தம் சித்தத்தை நிறைவேற்றுவதற்காக மனிதனை விரும்பினார், ஆனால் சாத்தான் தன் தீய விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக மனிதனை விரும்பினான். மனிதனை ஆதாயப்படுத்துவதில் சாத்தான், தேவன் ஆகிய இருவருடைய முறையும் ஜீவனின்மூலமே ஆகும். மனிதன் ஜீவமரத்தின் கனியைச் சாப்பிட்டு, இவ்வாறு தேவனுடைய படைக்கப்படாத ஜீவனைப் பெற்று, அவரோடு இணைக்கப்படவேண்டும் என்பதே அவருடைய நோக்கமாக இருந்தது. ஆயினும், நன்மை-தீமையுள்ள அறிவுமரத்தின் கனியைச் சாப்பிட, சாத்தான் மனிதனை மயக்கி, இதனால் தன் வீழ்ந்துபோன ஜீவனை மனிதன் பெற்று, தன்னோடு கலந்துவிடும்படிச் செய்தான்.

அந்த நாளில், ஆதாம் சாத்தானால் வஞ்சிக்கப்பட்ட படியால், நன்மை-தீமையுள்ள அறிவுமரத்தின் கனியைச் சாப்பிட்டான். அதுமுதல், சாத்தானுடைய ஜீவன் மனிதனுக்குள் நுழைந்து, அவன் சீரழிந்து போகும்படிச் செய்தது. இவ்வாறு மனிதன் தன் சொந்த இயற்கையான படைக்கப்பட்ட ஜீவனோடுகூட, சாத்தானுடைய வீழ்ந்துபோன ஜீவனையும் பெற்றுக்கொண்டான்.

புதிய ஏற்பாட்டுக் காலத்தில், மனிதன் தேவனுடைய குமாரனில் விசுவாசித்து, அவரைப் பெற்றுக்கொள்வதின்மூலம், அவருடைய

ஜீவனைப் பெறும்படி, மனிதர்களிடையே வெளிப்பட தேவன் தம் ஜீவனைத் தம் குமாரனில் வைத்தார். இவ்வாறு நம் இயற்கையான படைக்கப்பட்ட மனித ஜீவனையும் வீழ்ச்சியின் மூலம் பெற்றுக்கொண்ட சாத்தானுடைய ஜீவனையும் தவிர, தேவனுடைய ஜீவனையும் நாம் பெறுகிறோம்.

ஆகையால் இரட்சிக்கப்பட்டவர்களாகிய நமக்குள் இருக்கிற மூன்று ஜீவன்களும் முறையே படைப்பு, வீழ்ச்சி, இரட்சிப்பு ஆகியவைகளின்மூலம் பெறப்படுகின்றன. படைக்கும் தேவனிடமிருந்து படைக்கப்பட்ட மனித ஜீவனை நாம் பெற்றோம். ஆதாம்மூலமாக வீழ்ந்துபோனவர்களாக மாறி, சாத்தானுடைய வீழ்ந்துபோன ஜீவனை நாம் பெற்றோம். கிறிஸ்துவுக்குள்ளாகி இரட்சிக்கப்பட்டு, தேவனுடைய படைக்கப்படாத ஜீவனை நாம் பெறுகிறோம்.

## C. மூன்று ஜீவன்களின் இருப்பிடம்

வேதவாக்கிய வெளிப்பாடுகளின்படி, மனிதன், சாத்தான், தேவன் ஆகியவர்களுடைய மூன்று வெவ்வேறு ஜீவன்களும் முறையே நம் ஆள்தத்துவத்தின் மூன்று பகுதிகளாகிய ஆத்துமா, உடல், மனித ஆவி ஆகியவைகளுக்குள் நுழைந்தன. தேவன் பூமியின் மண்ணினால் மனிதனை உருவாக்கி, அவர் ஜீவசுவாசத்தை அவனுக்குள் ஊதினார், "மனிதன் ஜீவாத்துமாவானான்" (ஆதி. 2:7). படைப்பின்மூலம் பெற்ற மனித ஜீவன் மனிதனின் ஆத்துமாவில் இருக்கிறது என்பதே இதன் அர்த்தம். மனிதன் சாத்தானால் மயக்கப்பட்டு வீழ்ச்சியடைந்தபோது, சாத்தானை அடையாளப்படுத்துகிற நன்மை-தீமையுள்ள அறிவுமரத்தின் கனியை தன் உடலுக்குள் அவன் விழுங்கினான். ஆகையால் வீழ்ச்சியின்மூலம் மனிதன் பெற்ற சாத்தானுடைய ஜீவன் மனித உடலில் இருக்கிறது. மனிதன் கர்த்தராகிய இயேசுவை இரட்சகராகப் பெற்று இரட்சிக்கப்படும்போது, தேவ ஆவியானவர் தேவனுடைய ஜீவனைத் தம்மோடு கொண்டுவந்து, மனித ஆவிக்குள் நுழைகிறார். ஆகவே இரட்சிப்பின்மூலம் மனிதன் பெற்ற தேவனுடைய ஜீவன் மனித ஆவியில் இருக்கிறது. இவ்வாறு இரட்சிக்கப்பட்ட ஒரு நபர் தன் ஆவியில் தேவனுடைய ஜீவனையும், தன் ஆத்துமாவில் மனித ஜீவனையும், தன் உடலில் சாத்தானுடைய ஜீவனையும் கொண்டிருக்கிறான்.

மூன்று ஜீவன்களின் இருப்பிடமான மூன்று பகுதிகளை மிகத் தெளிவாகப் புரிந்துகொள்ள, இந்த மூன்று பகுதிகளின் உணர்வைப்பற்றி ஆராய்வதற்கு நாம் சிறிது நேரம் செலவழிக்கலாம். நம் புறம்பான, பௌதீகப் பகுதியான உடல் காணக்கூடியதும் தொடக்கூடியதுமாக இருக்கிறது; இது நம்

உடலின் எல்லா உறுப்புகளையும் உள்ளடக்கி யிருக்கிறது; மேலும், பௌதீக உலகத்தைத் தொடர்புகொள்ள, பார்த்தல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், தொடுதல் என்ற ஐம்புலன்களைக் கொண்டிருக்கிறது. ஆகையால் உடலின் உணர்வு, உலக உணர்வு அல்லது பௌதீக உணர்வு என்று அழைக்கப்படுகிறது.

நம்முடைய உள்ளான, ஆழமான பகுதியாகிய ஆவி, மனச்சாட்சியையும், உள்ளுணர்வையும், ஐக்கியத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. மனச்சாட்சி என்பது சரியையும், தவறையும் பகுத்தறிவதற்கான உறுப்பாகும்; சரி, தவறு என்னும் கோட்பாட்டின்படி, தேவனுடைய பார்வையில் சரியானதும், ஏற்புடையதும் எது, மேலும் தேவனுடைய பார்வையில் தவறானதும், தள்ளப்படுவதும் எது என்பதை நாம் உணரும்படிச் செய்கிறது. உள்ளுணர்வு, எந்தவொரு வழிவகையின் தேவையும் இல்லாமல், நேரடியாக தேவனுடைய சித்தத்தை உணர நமக்குத் திறனளிக்கிறது. ஐக்கியம் என்ற பகுதி தேவனோடு தொடர்பு கொள்ளவும், ஐக்கியங்கொள்ளவும் நமக்குத் திறனளிக்கிறது. ஐக்கியம் என்ற பகுதி தேவனைத் தொடர்புகொள்ள நமக்கு ஏதுவாயிருந்தாலும், மனச்சாட்சி, உள்ளுணர்வு ஆகிய இரண்டும்தான் தேவனையும், ஆவிக்குரிய காரியங்களையும் நாம் உணர, அதாவது ஆவிக்குரிய உலகத்தைத் தொடர்புகொள்ள நமக்கு ஏதுவாயிருக்கின்றன; இந்த இரண்டு பகுதிகளினுடைய உணர்வு ஆவியின் உணர்வாகும்; எனவே, இது ஆவிக்குரிய உணர்வு அல்லது தேவனுடைய உணர்வு என்று அழைக்கப் படுகிறது.

ஆவிக்கும் உடலுக்கும் இடையேயுள்ள ஆத்துமா, நம் உள்ளான, உளவியல்ரீதியான பகுதி; மேலும், இது மனம், உணர்ச்சி, சித்தம் ஆகியவைகளை உள்ளடக்கியிருக்கிறது. மனம் என்பது சிந்திப்பதற்கும், பரிசீலிப்பதற்குமான உறுப்பு; உணர்ச்சி என்பது இன்பம், கோபம், துக்கம், மகிழ்ச்சி ஆகியவைகளுக்கான உறுப்பு; சித்தம் என்பது அபிப் பிராயத்தை உருவாக்குவதற்கும், தீர்மானங்களை எடுப்பதற்குமான உறுப்பு. ஆத்துமா மூன்று பகுதிகளைக் கொண்டிருந்தாலும், மனம், உணர்ச்சி என்ற இரண்டு பகுதிகளுக்கு மட்டுமே உணர்வு இருக்கிறது. மனதின் உணர்வு பகுத்தறிவை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது, ஆனால் உணர்ச்சியின் உணர்வு, விருப்பு வெறுப்புகளை ஆதாரமாகக் கொண்டிருக்கிறது. நம் ஆத்துமாவிலுள்ள இரண்டு உணர்வுகள், மனிதனின் உளவியல்ரீதியான பகுதியை, அதாவது மனித னுடைய நான் என்னும் முனைப்பை அல்லது சுயத்தை உணரவும், உளவியல்ரீதியான உலகத்தைத் தொடர்புகொள்ளவும் நமக்குத் திறனளிக்கிறது; எனவே அவைகள் உளவியல்ரீதியான உணர்வுகள்

அல்லது சுய-உணர்வு என்று அழைக்கப்படுகின்றன.*

## D. மூன்று ஜீவன்களின் சுபாவமும் நிலைமையும்

நாம் நம்முள் பெற்ற மூன்று வெவ்வேறு ஜீவன்கள் ஒவ்வொன்றுக்கும், அதனதன் சொந்த பிறப்பிடம் இருப்பதாலும், நம் ஆள்தத்துவத்தின் மூன்று வெவ்வேறு பகுதிகளுள் ஒன்றில் தனித்தனியாக குடியிருப்ப தாலும், இந்த மூன்று ஜீவன்களின் சுபாவமும், நம்முள் அவைகள் ஒவ்வொன்றின் நிலைமைகளும்கூட வெவ்வேறாகவும், சிக்கலாகவும்தான் இருக்கவேண்டும். மனிதன் தேவனால் படைக்கப்பட்டபோது, தேவனுடைய பார்வையில் அவன் “மிகவும் நன்றாயிருந்தான்” (ஆதி. *1:31*), “செம்மை யானவனாக” இருந்தான் (பிர. *7:29*). ஆகையால் மனிதனின் படைக்கப்பட்ட ஜீவன் ஆரம்பத்தில் நன்றாகவும், செம்மையாகவும் இருந்தது; அது பாவமில்லாமல் இருந்தது மட்டுமல்ல, பாவத்தின் அறிவும் வெட்கத்தின் உணர்வும் இல்லாமலும் இருந்தது; அது அப்பாவித்தனமாகவும், எளிமையாகவும் இருந்தது.‡

ஆதாம் பாவஞ்செய்து வீழ்ச்சியடைந்தபின்பு, பாவமுள்ள சூழ்நிலையை விளைவித்த நடத்தையினால் தேவனை மனிதன் புண்படுத்தியது மட்டுமல்ல, இன்னும் மோசமாக, தன் ஜீவன் அசுத்தமாகவும் கெட்டழிந்தும் போகும் அளவிற்கு ஜீவனில் சாத்தானால் விஷமேற்றப்பட்டான். உதாரணமாக வீட்டில் கரும்பலகை அழிப்பானோடு விளையாடக்கூடாது என்று என் பிள்ளைகளுக்கு நான் அறிவுரை கூறுகிறேன் என்று வைத்துக்கொள்வோம். நான் வீட்டைவிட்டுச் சென்றபின்பு, தங்கள் ஆர்வத்துடிப்பினால் அவர்கள் அழிப்பானோடு விளையாடு கிறார்கள்; நான் திரும்பிவந்தபோது அவர்கள் தவறுசெய்து விட்டார்கள் என்பதை நான் பார்க்கிறேன். இந்தத் தவறான செயல் வெறுமனே குடும்ப சட்டதிட்டங்களை மீறுவதாகும்; அவர்களுக்குள் எதுவும் செல்லவில்லை. இருப்பினும் அடுத்தமுறை ஒரு விஷமருந்து குப்பியை வீட்டில் வைத்துவிட்டு, “இதை ஒருபோதும் குடிக்காதீர்கள்” என்று பிள்ளைகளிடம் சொல்லிவிட்டு செல்லுகிறேன் என்று வைத்துக்கொள்வோம். நான் வீட்டைவிட்டுச்

* சாதாரணமாக, “மனிதனுடைய உணர்வு” என்று நாம் கூறும்போது, ஆத்துமாவின் உணர்ச்சியிலுள்ள விருப்பு வெறுப்புகளின் உணர்வை நாம் குறிப்பிடுகிறோம். இந்த உணர்வு, ஆத்துமாவின் மனதினாலும், உடலின் ஐம்புலன்களாலும், ஆவியின் மனச்சாட்சியினாலும், அல்லது ஓர் ஆவிக்குரிய மனிதனைப்பொறுத்தவரை, சற்று ஆவியின் உள்ளுணர்வினாலும்கூட பாதிக்கப்படமுடியும் என்றாலும், அது பிரதானமாக ஆத்துமாவின் உணர்ச்சியில் உள்ள விருப்பு வெறுப்புகளின் உணர்வினாலேயே கட்டியமைக்கப்பட்டிருக்கிறது.

சென்றபின், அவர்கள் அந்தக் குப்பியை விளையாட்டுப் பொருளாக பார்க்கிறார்கள்; ஐயோ, அவர்கள் விஷமுள்ள மருந்தைக் குடிக்கிறார்கள். அந்த நேரத்தில், என் கட்டளைக்கு கீழ்ப்படியாமல், குடும்ப சட்டதிட்டத்தை அவர்கள் மீறுவது மட்டுமல்ல, இன்னும் மோசமாக அவர்களுக்குள் விஷம் சென்றுவிட்டது. இதுதான் ஆதாம் அறிவுமரத்தின் கனியை சாப்பிட்ட நாளிலும் சம்பவித்தது. அவன் தேவன் விலக்கியதற்கு கீழ்ப்படியாமல் போனது மட்டுமல்ல, மேலும் சாத்தானுடைய ஜீவனையும் தனக்குள் எடுத்துக்கொண்டான். அதுமுதல் மனிதன் உள்ளார்ந்தரீதியில் சிக்கலானவனாக மாறினான்; அவன் இயற்கையான செம்மையும் நன்மையுமான மனித ஜீவனை மட்டுமல்ல, மேலும் தீமையும் கெட்டழிந்ததுமான சாத்தானுடைய ஜீவனையும் உடையவனானான்.

எல்லா வகையான பாவங்களாலும் நிறைந்திருப்பதைப் போன்று சாத்தானுடைய ஜீவன் தீமையின் எல்லா கெட்டழிவுகளையும், காரணிகளையும் கொண்ட வித்தை அடக்கியிருக்கிறது. சாத்தான் மனிதனுக்குள் வாழ்கிறான், மேலும் அவன் இச்சைகளைக் கொண்டிருக்கவும் (*யோவான் 8:44*), பாவங்களைச் செய்யவும் (*1 யோவான் 3:8*) தூண்டுகிறான். ஆகையால் அவனுடைய ஜீவன் பாவங்களின் வேராக இருக்கிறது, இது பாவம் செய்வதற்கு மனிதனைத் தூண்டுகிறது. மனிதனால் செய்யப்படுகிற பல்வேறு வகையான பாவங்கள், அவனுக்குள் இருக்கிற சாத்தானுடைய ஜீவன் அல்லது பிசாசினுடைய ஜீவனிலிருந்து வருகின்றன. இந்த பிசாசுத்தனமான ஜீவன் மனிதனுக்குள் நுழைந்ததுமுதல், சில நேரங்களில் தன் மனித ஜீவனின்படி கொஞ்சம் மனித நன்மையை வாழக்கூடியவனாக அவன் இருந்தாலும், அநேக நேரங்களில் பிசாசுத்தனமான ஜீவனின்படி அவன் பிசாசுத் தனமான தீமைகளையே வாழ்கிறான். சில நேரங்களில், மனிதன் மிகவும் பண்புள்ளவனாக இருக்கமுடியும்; உண்மை யாகவே ஒரு மனிதனைப்போல அவன்

‡ வீழ்ச்சிக்குப்பிறகு வெட்கத்தின் உணர்வை மனிதன் கொண்டிருக்கும்படி தேவன் செய்தார். இந்த உணர்வுக்கு இருமடங்கு செயல்பாடு உண்டு: ஒருபக்கத்தில், நம்மிடம் பாவம் உண்டு என்பதை இது நிரூபிக்கிறது, மறுபக்கத்தில், பாவஞ்செய்வதிலிருந்து நம்மை இது தடுக்கிறது. ஒரு நபரிடம் வெட்கத்தின் உணர்வு இல்லையென்றால், அவன் விருப்பம்போதெல்லாம் பாவஞ்செய்யலாம். எவன் ஒருவனிடம் வெட்கத்தின் உணர்வு அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவு அதிகமாக அவன் பாவங்கள் செய்வதிலிருந்து காக்கப்படுவான். பெண்கள் வெட்கமற்றவர்களாக இருக்கக்கூடாது என்கிற ஒரு பழமொழி நமக்கு இருக்கிறது. வெட்கத்தின் உணர்வு இல்லாத ஒருவன் நிச்சயமாக கீழ்த்தரமான நபராக இருக்கிறான்.

நடக்கமுடியும், மேலும் ஒரு உண்மையான மனிதனுக்குரிய வாசனையை வீசமுடியும். ஆனால் மற்ற நேரங்களில், அவன் கோபப்படும்போது, உண்மையாகவே அவன் ஒரு பிசாசைப்போல இருக்கிறான், மேலும் பிசாசுத்தனமான துர்நாற்றத்தினால் நிறைந்திருக்கிறான். மனிதன் குடிபோதையிலும் வெறியாட்டத் திலும் திளைக்கும்போதும், விபச்சாரிகளை சந்திக்கும்போதும், சீட்டாட்டம் மற்றும் பல்வேறு வகையான பாவங்களைச் செய்யும்போதும், அவன் பிசாசுத்தனமான தோற்றத்தைக் கொண்டிருக்கிறான். மேலும் பிசாசுத்தனமான துர்நாற்றத் தினால் நிறைந்திருக்கிறான். மனிதன் பிசாசுத்தனமான ஜீவனை வாழ்ந்துகாட்டுவது, தன் சொந்த சித்தத்தினாலல்ல; மாறாக அவனுக்குள் இருக்கிற பிசாசின் ஜீவன் அவனை ஏமாற்றி, இதன்மூலம் அவனை பிசாசுத்தனமான மனிதனாக மாற்றுகிறது, மேலும் மனிதனும் பிசாசும் கலந்த வாழ்க்கையை வாழவைக்கிறது.

இதுவே இன்று உலகத்து மக்களின் உண்மையான உள்ளான நிலைமையாகும். மனிதன் மற்றும் சாத்தான் ஆகிய இருவரின் ஜீவன்களையும் மனிதன் கொண்டிருக்கிறான்: ஒன்று சுபாவத்தில் நல்லது மற்றொன்று தீயது; இந்த காரணத்தினால், ஒருபக்கம் நல்லவனாகவும் செம்மையானவனாகவும் இருக்கவேண்டுமென்ற விருப்பம் அவனிடம் உள்ளது; மறுபக்கம் கெட்டழிவோடும் தீமையோடும் அவனுக்கு ஒரு பற்று இருக்கிறது. எனவே தலைமுறைகள் தோறும் மனித சுபாவத்தைப் படிப்பதில் ஈடுபட்டுள்ள தத்துவஞானிகள் இரண்டு வித்தியாசமான கருத்துக்களை முன்வைக்கிறார்கள்: ஒன்று மனிதன் சுபாவத்தில் நல்லவன், மற்றொன்று மனித சுபாவம் தீமையானது. உண்மை யில், நம்முள் இந்த இரண்டு சுபாவங்களும் இருக்கின்றன. ஏனென்றால், நம்முள் நன்மையான ஜீவனும் தீமையான ஜீவனும் இருக்கின்றன.

ஆனால் இன்று இரட்சிக்கப்பட்டிருக்கிற நம்மிடம் மனித ஜீவனும் பிசாசின் ஜீவனும் மட்டுமல்ல, தேவனுடைய ஜீவனும் இருப்பதற்காக கர்த்தருக்கு நன்றி. சாத்தான் தன் கெட்டழிவின் மூலமாக தன் ஜீவனை நமக்குள் உட்செலுத் தினான், மேலும் நாம் அவனோடு ஒன்றாயிருக்கவும், அவனால் ஆதாயம்பண்ணப் படவும், அவனுடைய சுபாவத்தின் எல்லா தீமைகளையும் சுதந்தரிக்கவும் செய்தான், அதுபோல தேவனும் தம் விடுதலையின்மூலமாக தம் ஜீவனை நமக்குள் வைக்கிறார், மேலும் நாம் அவரோடு ஒன்றா யிருக்கவும், அவரால் ஆதாயம்பண்ணப் படவும், அவருடைய சுபாவத்தின் எல்லா தெய்வீக நன்மை களையும் சுதந்தரிக்கவும் செய்கிறார். ஆகையால் வீழ்ச்சியின் மிகமுக்கியமான கருத்து ஜீவனாக இருந்ததுபோல, இரட்சிப்பின்

முக்கியமான கருத்தும் ஜீவனாக இருக்கிறது. நாம் கர்த்தருடைய பந்திக்கு வரும்போது, முதலாவது ஜீவ அப்பத்தை பிட்கிறோம். பின்பு மன்னிப்பின் பாத்திரத்தை பருகுகிறோம். கர்த்தருடைய இரட்சிப்பை நாம் அனுபவமாக்கும்போது, முதலாவது இரத்தத்தையும் பின்பு ஜீவனையும் நாம் பெற்றிருந்தாலும், அவருடைய இரட்சிப்பில் ஜீவன் அடையாளப்படுத்துகிற அப்பமே முக்கியமான உருவகமாகும் என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது. இரத்தம் அடையாளப்படுத்துகிற பாத்திரம் இரண்டாவதானது, எனவே முதலாவது நாம் அப்பத்தையும், பின்பு நாம் பாத்திரத் தையும் எடுக்கிறோம்.

தேவனுடைய ஜீவன் நமக்குள் நுழைகிறபோது, உலகப் பிரகாரமான மக்களைவிட நாம் உள்ளாக மிகவும் சிக்கலான வர்களாகிறோம். நம்மிடம் மனிதனுடைய செம்மையான ஜீவனும், சாத்தானுடைய தீய ஜீவனும், தேவனுடைய தெய்வீகமான நல்ல ஜீவனும் இருக்கின்றன. நம்மிடம் மனிதன், சாத்தான், தேவன் ஆகியோர் இருக் கிறார்கள் என்பது இதன் அர்த்தம். மனிதன், தேவன், சாத்தான் ஆகிய முப்பகுதி சூழ்நிலை ஏதேன் தோட்டத்தில் அந்த நாளில் இருந்ததைப்போல, இன்று நம்மிலும் இருக்கிறது. நமக்குள் மனிதன், தேவன், சாத்தான் ஆகிய மூவர்களுடனான ஏதேன் தோட்டத்தின் ஒரு சிற்றுரு இருக்கிறது என்று நாம் கூறமுடியும். ஆகையால், ஏதேன் தோட்டத்தில் மனிதனுக்காக தேவனுடனான சாத்தானுடைய போராட்டம் இன்று நம்மிலும் நடைபெறுகிறது. சாத்தான், நம்மை ஆக்கிரமிக்கும் தன் தீய நோக்கத்தை நிறைவேற்றும்படி, நாம் அவனோடு ஒத்துழைக்க வேண்டுமென்ற விருப்பத்துடன் இன்று நம்முள் அசைகிறான்; தேவனும் தம் நல்லின்பத்தை நிறைவேற்ற, நாம் அவரோடு ஒத்துழைக்கவேண்டுமென்ற விருப்பத்துடன் நம்முள் அசைகிறார். நாம் நம்முள்ளிருக்கிற சாத்தானுடைய ஜீவனின்படி வாழ்ந்தால், நாம் சாத்தானுடைய தீமைகளை வாழ்ந்துகாட்டுவோம், இதன்மூலம் நம்மிடம் தன் தீய நோக்கத்தை அவன் நிறைவேற்றமுடியும். நாம் நம்முள் ளிருக்கிற தேவனுடைய ஜீவனின்படி வாழ்ந்தால், நாம் தேவனுடைய தெய்விக நன்மையை வாழ்ந்துகாட்டுவோம், இதன்மூலம் நம்மில் அவருடைய நல்லின்பத்தை அவர் நிறைவேற்ற முடியும். சில நேரங்களில், நாம் சாத்தானுடைய ஜீவனின்படியோ, தேவனுடைய ஜீவனின்படியோ வாழாமல், நம் மனித ஜீவனின்படி மட்டும் வாழ்ந்து நாம் சுயாதீனமாக இருப்பதுபோல் தோன்றினாலும், உண்மையில் நாம் சுயாதீன மாக இருக்கமுடியாது; ஒன்று நாம் தேவனுடைய ஜீவனின்படி வாழ்கிறோம் அல்லது சாத்தானுடைய ஜீவனின்படி வாழ்கிறோம்.

இதன் விளைவாக, ஒரு கிறிஸ்தவன் மூன்று வித்தியாசமான

நபர்களாக செயல்படமுடியும், மேலும் மூன்று வித்தியாசமான ஜீவன்களை வாழமுடியும். காலையில், மிகச் சுமூகமாக இருக்கிற ஒரு சகோதரன் உண்மையாக ஒரு மனிதனைப்போல காட்சியளிக்கிறான்; மத்தியானத்தில், அவன் தன் மனைவியுடன் கோபப்படுகிறபோது, அவன் பேயைப்போல் இருக்கிறான்; இரவில், தன் ஜெப நேரத்தில் தன் மனைவியுடன் தவறாக நடந்துகொண்டதை உணர்ந்து, தேவனுக்கு முன்பாகவும், தன் மனைவியிடமும் அறிக்கைசெய்கிறபோது அவன் தேவனைப்போல தோன்றுகிறான். இவ்வாறு ஒரே நாளில் அவன் மூன்று வித்தியாசமான நபர்களைப்போல செயல்படுகிறான், அதாவது மூன்று வித்தியாசமான நிலைமைகளை வாழ்ந்துகாட்டுகிறான். காலையில் மனிதனைப்போல அவன் சுமூகமாக இருக்கிறான், மத்தியானத்தில் பேயைப்போல அவன் கோபப்படுகிறான், இரவில் அவனுடைய பாவத்துடன் இடைப்பட்டபிறகு, அவன் தேவனுடைய சாயலை வெளிப்படுத்துகிறான். ஒரே நாளில் மனிதன், பிசாசு, தேவன் ஆகிய எல்லாரும் அவனுடைய வாழ்க்கையில் வெளிப்படுத்தப்படுகிறார்கள். மனிதன், பிசாசு, தேவன் ஆகிய மூன்று பேருடைய ஜீவன்கள் அவனுக்குள் இருப்பதே அவன் இப்படிப்பட்ட வழியில் செயல்படுவதற்கான காரணமாகும். அவன் மனித ஜீவனின்படி வாழ்கிற போது, அவன் ஒரு மனிதனைப்போல இருக்கிறான்; அவன் பிசாசுத்தனமான ஜீவனின்படி நடக்கிறபோது, அவன் பிசாசைப்போல இருக்கிறான்; மேலும் அவன் தேவனுடைய ஜீவனின்படி செயல்படுகிறபோது, அவன் தேவனுடைய சாயலை வெளிப்படுத்துகிறான். எப்படிப்பட்ட ஜீவனாக இருந்தாலும் சரி, எந்த ஜீவனின்படி நாம் வாழ்கிறோமோ, அந்த ஜீவன் நாம் வாழ்ந்துகாட்டுவதை தீர்மானிக்கிறது.

எனவே, இரட்சிக்கப்பட்ட ஒரு நபருக்குள் படைக்கப்பட்ட மனித ஜீவன், வீழ்ச்சியடைந்த சாத்தானின் ஜீவன், படைக்கப் படாத தேவனுடைய ஜீவன் ஆகிய மூன்று வித்தியாசமான ஜீவன்கள் இருக்கின்றன என்பதை நாம் தெளிவாகப் பார்க்கவேண்டும். நம்முள் இந்த மூன்று ஜீவன்கள் இருந் தாலும், மூன்று வித்தியாசமான நிகழ்வுகளின் காரணமாக மூன்று வித்தியாசமான நேரத்தில் நாம் அவைகளைப் பெறுகிறோம். முதலாவது, படைக்கப்பட்ட நேரத்திலும் படைப்பின்மூலமாகவும், நாம் படைக்கப்பட்ட மனித ஜீவனைப் பெற்றோம். இரண்டாவது, வீழ்ச்சியின்போது நாம் சாத்தானையும், நன்மை-தீமையுள்ள அறிவுமரத்தையும் தொடர்புகொண்டதால், நாம் வீழ்ச்சியடைந்த சாத்தானுடைய ஜீவனைப் பெற்றோம். மூன்றாவது, நாம் இரட்சிக்கப்பட்ட நேரத்தில் நாம் தேவனுடைய குமாரனை

விசுவாசித்து அவரைப் பெற்றுக்கொண்டதால், அவருடைய படைக்கப்படாத ஜீவனைப் பெற்றோம். படைப்பு, வீழ்ச்சி, இரட்சிப்பு, ஆகிய இந்த மூன்று சம்பவங்களும் நம்மில் நிகழ்ந்ததின் காரணமாக, மனிதன், சாத்தான், தேவன் ஆகிய மூன்று நபர்களின் ஜீவன்களை நாம் பெற்றோம்; ஒவ்வொரு ஜீவனும் சுபாவத்தில், மற்றதிலிருந்து வித்தியாசமானது. இதைப் பார்த்தும், அறிந்தும் இருக்கிறபடியால், ஜீவனின் வழியைப்பற்றி நாம் தெளிவாக இருக்கமுடியும். மனிதன், சாத்தான், தேவன் ஆகிய மூன்று நபர்களுடைய வித்தியாசமான ஜீவன்களும் ஒரே நேரத்தில் நம்மில் இருப்பதால், நாம் எந்த ஜீவனின்படி வாழவேண்டும்? மனித ஜீவனின் படியா? தேவனுடைய ஜீவனின்படியா? சாத்தானுடைய ஜீவனின்படியா? நாம் எந்த ஜீவனின்படி வாழ்கிறோமோ அந்த ஜீவனை நாம் வாழ்ந்து காட்டுவோம். இங்குதான் ஜீவனின் வழி இருக்கிறது.

## II. நான்கு விதிகள்

இரட்சிக்கப்பட்டிருக்கிற நம்முள் இருக்கும் மூன்று ஜீவன்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு விதி இருக்கிறது. ஆகையால் நம்முள் மூன்று ஜீவன்கள் மட்டுமல்ல, மூன்று ஜீவன்களுக்குரிய விதிகளும் இருக்கின்றன. இவைகளோடுகூட நமக்கு வெளியே தேவனுடைய விதியும் இருக்கிறது. ஆகையால் நமக்குள்ளும், புறம்பும் மொத்தமாக நான்கு விதிகள் இருக்கின்றன. இது ரோமர் 7 மற்றும் 8-ல் நமக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது.

### A. நான்கு விதிகளின் வரையறை

ரோமர் 7 மற்றும் 8-ம் அதிகாரங்களின் மையக்கருத்து விதி என்பதாகும். முன்பு "நீங்கள் நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ளமாட்டாது" என்று ஆறாம் அதிகாரத்தில் அப்போஸ்தலன் கூறுகிறார். நாம் விதியின்கீழ் இல்லையென்பதே, பாவம் நம்மை மேற்கொள்ள முடியாது என்பதற்கான ஒரே காரணம். ஆகையால் "நாம் நியாயப்பிரமாணத்தின்கீழ் இல்லை" என்ற அறிக்கையை விளக்குவதற்கு அதிகாரம் 7 மற்றும் 8-ல் விதியைப்பற்றி அப்போஸ்தலன் தொடர்ந்து பேசுகிறார். "நியாயப் பிரமாணத்தை அறிந்திருக்கிறவர்களுடனே பேசுகிறேன். சகோதரரே, ஒரு மனுஷன் உயிரோடிருக்குமளவும் நியாயப் பிரமாணம் அவனை ஆளுகிறதென்று அறியாமலிருக்கிறீர்களா?" என்று கூறுவதோடு அதிகாரம் ஏழு ஆரம்பிக்கிறது. மேலும் "நம்மைக் கட்டியிருந்த நியாயப்பிரமாணத்திற்கு நாம் மரித்தவர்களாகி அதிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்"

(வ. 6). பின்னர் "பாவம் இன்னதென்று நியாயப் பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றபடி அறியவில்லை" (வ. 7) என்று அவர் கூறுகிறார். மீண்டும் "உள்ளான மனுஷனுக்கேற்றபடி தேவனுடைய நியாயப்பிரமாணத்தின்மேல் பிரியமாயிருக்கிறேன்" (வ. 22) என்று அவர் கூறுகிறார். இவை யாவும் பழைய ஏற்பாட்டிலுள்ள விதியைக் குறிக்கின்றன. இறுதியாக "ஆகிலும், என் மனதின் பிரமாணத்திற்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணத்திற்கு என்னைச் சிறையாக்கிக்கொள்ளுகிறது" (வ. 23) என்று கூறுகிறார். மீண்டும் "ஆதலால், நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்" (வ. 25) என்று கூறுகிறார். பின்னர் எட்டாம் அதிகாரத்தில் "கிறிஸ்து இயேசுவி னாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவை களின் பிரமாணத்தினின்று விடுதலையாக் கிற்றே" (வ. 2) என்று அவர் கூறுகிறார். இந்த வசனங்களில், தனிப்பட்ட ரீதியில் நம்மோடு தொடர்புடைய நான்கு வித்தியாசமான விதிகளைப்பற்றி மொத்தமாக அப்போஸ்தலன் பேசுகிறார்.

முதலாவது "தேவனுடைய நியாயப்பிரமாணம்" (7:22, 25), அதாவது நம்மேலுள்ள தேவனுடைய கோரிக்கைகள் எல்லாவற்றையும் சொல்லுகின்ற பழைய ஏற்பாட்டின் விதி. இரண்டாவது நம் மனதிலுள்ள "மனதின் பிரமாணம்" (7:23), நன்மை செய்யும் விருப்பத்தை நமக்குத் தருகிறது; ஆகையால், இதனை நம் மனதிலுள்ள நன்மை விதி என்றும் அழைக்கலாம். மூன்றாவது "அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணம்" (7:23), நம்மை பாவம்செய்யத் தூண்டுகிறது. நம்மை பாவம்செய்யத் தூண்டுகிற இந்த விதியின் செயல்பாடு, நம் உடலின் உறுப்புகளில் வெளிப்படுத்தப்படுவதால், இது "அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப் பிரமாணம்" என்று அழைக்கப்படுகிறது. நான்காவது "ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்" (8:2), தேவனுடைய ஜீவனில் நம்மை வாழச்செய்கிறது. இந்த விதி எந்த ஆவியிலிருந்து வருகிறதோ அது ஜீவனுடைய ஆவி, அதாவது தேவனுடைய ஆவி, தேவனுடைய ஜீவன், மேலும் நம் மனித ஆவி ஆகியவைகளால் தொகுக்கப்பட்ட ஒரு கலந்திணைந்த ஆவி. ஆகையால் இது "ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்" என்று அழைக்கப்படுகிறது. மேலும் இந்த ஆவி ஜீவனைக் கொண்டிருப்பதாலும், ஜீவனுக்குரியதாலும், ஜீவனாக இருப்பதாலும், இந்த ஆவியின் விதி "ஜீவனுடைய பிரமாணம்"

என்று அழைக்கப்படுகிறது. நான்கு விதிகளைப் பொறுத்தவரை, ஒன்று நமக்கு வெளியே இருக்கிறது, அது தேவனுடைய விதி; மற்ற மூன்றும் நமக்குள் இருக்கின்றன, அவை மனதிலுள்ள நன்மைவிதி, உடலிலுள்ள பாவவிதி, நம் ஆவியிலுள்ள ஜீவ ஆவியின் விதி ஆகும்.

## B. நான்கு விதிகளின் பிறப்பிடம்

நான்கு விதிகளின் ஒவ்வொன்றின் பிறப்பிடமும் வேறுபடுகிறது. கற்பலகைகளில் எழுதப்பட்ட தேவனுடைய விதி, தேவனால் மனிதர்களுக்கு மேசேயின்மூலமாக பழைய ஏற்பாட்டுக் காலத்தில் கொடுக்கப்பட்டது. மற்ற மூன்று விதிகளும் நாம் முன்பு குறிப்பிட்ட மூன்று ஜீவன்களிலிருந்து வருகின்றன. ஒவ்வொரு ஜீவனுடனும் ஒரு விதி இருப்பதை நாம் அறிவோம். ஒரு விதி எப்போதும் ஒரு ஜீவனிலிருந்து வராவிட்டாலும், ஒரு ஜீவனுக்கு எப்போதுமே ஒரு விதி உண்டு. நம்முள் மூன்று வேறுபட்ட ஜீவன்கள் இருப்பதால், இந்த மூன்று வேறுபட்ட ஜீவன்களுக்குப் பொருத்தமான மூன்று விதிகள் நமக்கு இருக்கின்றன.

மனதிலுள்ள நன்மை விதி நாம் இரட்சிக்கப்பட்ட போதல்ல, மாறாக பிறந்தபோது பெற்றுக்கொண்ட படைக்கப்பட்ட நல்ல ஜீவனிலிருந்து வருகிறது. இது தேவனுடைய படைப்பிலுள்ள இயற்கையான பரிசு, தேவனுடைய இரட்சிப்பிலுள்ள கொடையல்ல. நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு, நம்மையே சீரமைக்கும் நம்பிக்கையோடும், முன்னேறிச்செல்லும் தீர்மானத்தோடும், நன்மைசெய்ய, நம் பெற்றோரைக் கனப்படுத்த, மனிதர்களுக்கு இரக்கம் அல்லது கனிவுகாட்ட, ஒரு இயல்பான பற்று அல்லது விருப்பம், நம் மனதிலும் எண்ணத்திலும் வழக்கமாக இருந்தது. நன்மை செய்யவேண்டும், முன்னேறிச் செல்ல வேண்டும் என்ற இந்த எண்ணங்கள் நம் மனதிலுள்ள நன்மை விதியிலிருந்து வருகின்றன. நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பே, இந்த நன்மை விதி நம்முள் ஏற்கெனவே இருந்தது என்பதை இவைகள் நிரூபிக்கின்றன.

சில மக்கள், ரோமர் 7:18-ஐ ("என்னிடத்தில்...நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்") ஆதாரமாகக் கொண்டு நாம் இரட்சிக்கப்படுவதற்குமுன்போ, இரட்சிக்கப்பட்ட பின்போ நன்மையானது ஒன்றும் நம்முள் இல்லை, ஆகையால் நம் மனதிலுள்ள நன்மை விதி, நம் படைக்கப்பட்ட இயற்கையான ஜீவனிலிருந்து வரமுடியாது என்பதினால் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு அது இருப்ப தற்கான சாத்தியமே இல்லை என்ற முடிவுக்கு வருகிறார்கள். எனினும்

ரோமர் 7:18-ஐ நாம் கவனமாக வாசித்தால், இந்த முடிவு சரியானதல்ல என்பதை நாம் பார்க்கிறோம், ஏனென் றால் நன்மையானதொன்றும் நம்முள் இல்லையென்று பவுல் கூறும்போது, அவர் நம் மாம்சத்திலுள்ள நிலைமையைக் குறிப்பிடுகிறார். மேலும் இங்கு பேசப்பட்டுள்ள மாம்சம், வசனங்கள் 21, 23, 24-ன் இடஅமைப்பின்படி, நம் வீழ்ச்சி யடைந்த, தரங்கெட்ட உடலைக் குறிக்கிறது. நம் வீழ்ச்சியடைந்த தரங்கெட்ட உடலில், அதாவது நம் மாம்சத்தில் நன்மையானது ஒன்றும் குடியிருக்கவில்லை. இதற்கு அர்த்தம் வீழ்ச்சியடைந்தவர்க ளாகிய நம்மில் எந்த நன்மையுமே இல்லை என்பதல்ல. மாறாக வீழ்ச்சியடைந்தவர்களாகிய நம்முள் நன்மை செய்யவேண்டு மென்ற சித்தமும் நம் மனதில் நன்மை விதியும் இருக்கிறது என்று இந்த அதிகாரத்தின் பின்பகுதியில் நமக்கு தெளிவாக சொல்லப்பட்டிருக்கிறது. சித்தம், மனம் ஆகிய இரண்டும் நம் ஆத்துமாவின் பகுதிகளாகும். ஆகையால் நம் வீழ்ச்சியடைந்த, தரங்கெட்ட உடலில் நன்மையானதொன்றும் இல்லையென்றாலும், வீழ்ச்சிக்குப்பிறகும்கூட நம் ஆத்துமாவிலுள்ள மனம், சித்தம் ஆகிய இரண்டிலும் ஒரு நன்மையின் மூலக்கூறு இருக்கிறது. இந்த நன்மையின் மூலக்கூறு, இயற்கையாகவே நம் படைக்கப்பட்ட நல்ல ஜீவனுக்குரியது. ஆகையால் நம் மனதிலுள்ள நன்மை விதி, நம் இயற்கையான படைக்கப்பட்ட ஜீவனுக்குரியது, மேலும் நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பே, அதாவது நம் பிறப்பிலிருந்தே இருக்கிறது.

நம் படைக்கப்பட்ட நல்ல ஜீவன், வீழ்ச்சியின்மூலமாக சாத்தானால் கெடுக்கப்பட்டு, தன் நன்மையின் மூலக்கூறை இழந்து விட்டது என்று சிலர் கூறலாம். இதுவும் சரியானதல்ல. எடுத்துக் காட்டாக ஒரு தேன்-தண்ணீர் கோப்பைக்குள் ஒரு புளிப்பு மூலக்கூறைச் சேர்ப்பது, இனிப்புச்சுவையை சேதப்படுத்துகிறது, ஆனால் இனிப்பு மூலக்கூறை நீக்கிவிடாது. மனிதன் சாத்தானால் சேதப்படுத்தப்பட்டிருந்தாலும், அவனுடைய நன்மையின் மூலக்கூறு இன்னும் இருக்கிறது. மனிதனில் படைக்கப்பட்ட நன்மையின் மூலக்கூறு சாத்தானால் கெடுக்கப்பட்டு, குணப்படுத்தப்பட முடியாததாக மாறிவிட்டது என்பது உண்மை. ஆனாலும் அது இல்லாமல் போகும் அளவிற்கு கெடுக்கப்பட்டு விட்டது என்று நாம் கூறமுடியாது. ஒரு கண்ணாடியை நீங்கள் நொறுக்கினால், அது துண்டுதுண்டாகிவிடும், ஆனால் அதன் மூலக்கூறு அப்படியே இருக்கிறது. ஒரு துண்டு தங்கக்கட்டி, அசுத்தமான குளத்திற்குள் எறியப்படலாம், ஆனால் தங்கத்தின் மூலக்கூறு அப்படியே இருக்கிறது. பெற்றோர்களுக்கான மதிப்பு, சகோதர அன்பு, நம்பகத்தன்மை, உண்மைத்தன்மை, நேர்மை,

ஒழுக்கம், தன்னடக்கம், நாணம் ஆகிய நம் மூலக்கூறுகள் தூய்மையற்றதாகவும், கலப்படமாகவும் இருந்தாலும், இவைகள் உண்மையானவை. ஆகையால் நம் நல்ல மூலக் கூறுகள் களங்கப்படுத்தப்பட்டிருந்தாலும், அவை கெட்டழிவுக்குப்பிறகும் இன்னும் இருக்கின்றன என்ற முடிவுக்கு நாம் வரலாம்; அவைகள் மிகவும் பலவீனமாக இருந்தாலும், அவைகள் இன்னும் இருக்கின்றன. இந்த காரணத்தினால்தான், சீன துறவிகளும், தத்துவவாதிகளும் மனிதனுக்குள் சில "சிறப்பான நற்பண்புகள்", "உள்ளியல்பான உணர்வு" போன்றவை இருக்கின்றன என்று கண்டுபிடித்து, மனித சுபாவம் நன்மையானது என்ற முடிவுக்கு வந்திருக்கிறார்கள். மனித சுபாவத்தைக்குறித்த, இந்த தத்துவவாதிகளின் கண்டுபிடிப்பு உண்மையில் சரியானது, ஏனென்றால் வீழ்ச்சியடைந்த நம்முள் நன்மையின் மூலக்கூறும், நன்மை செய்யவேண்டும் என்ற ஆசையை நமக்கு இயல்பாகவே தருகிற விதியும் இன்னும் இருக்கின்றன.

நம் உறுப்புகளிலுள்ள பாவவிதி, சாத்தானின் வீழ்ச்சி யடைந்த தீய ஜீவனிலிருந்து வருகிறது. நன்மை-தீமையுள்ள அறிவுமரத்தின் கனியை சாப்பிட்டு பாவம்செய்ததின்மூலம் ஆதாமின் வீழ்ச்சியினால், சாத்தானுடைய ஜீவன் மனித னுக்குள் நுழைந்தது என்று நான் முன்பே கூறியிருக்கிறோம். சாத்தானுடைய இந்த ஜீவனுக்குள் தீயவிதி, அதாவது உறுப்புகளிலுள்ள பாவவிதி அடங்கியிருக்கிறது. சாத்தா னுடைய ஜீவன் தீமையாக இருப்பதால், அவனுடைய ஜீவனிலிருந்து வருகின்ற விதி மனிதனை பாவம்செய்யவும் தீமைசெய்யவும் இயல்பாகவே தூண்டுகிறது.

ஜீவ ஆவியின் விதி, நம் ஆவியிலுள்ள ஜீவ ஆவியி லிருந்தும் தேவனுடைய படைக்கப்படாத தெய்வீக ஜீவனி லிருந்தும் வருகிறது. நாம் கர்த்தரைப் பெற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்ட போது, ஜீவ ஆவியாக மாறும்படி தேவ னுடைய ஆவி தேவனுடைய ஜீவனுடன் நம் ஆவிக்குள் நுழைந்து, நம் ஆவியோடு கலந்திணைந்தது. ஜீவ ஆவியின் இந்த ஜீவனில் ஒரு விதி உள்ளடங்கியிருக்கிறது, அது ஜீவ ஆவியின் விதி அல்லது ஜீவவிதி ஆகும்.

ஆகையால் நாம் இரட்சிக்கப்பட்டபோது, தேவன் நன்மை விதியை நம்மில் வைக்கவில்லை என்பதை நாம் தெளிவாகப் பார்க்கவேண்டும்; மாறாக அவர் ஜீவவிதியை நம்மில் வைத்தார். நம்மில் தேவனுடைய குறிக்கோள் ஜீவன் நன்மையல்ல. தேவன் நம்மை இரட்சிக்கும்போது ஜீவ விதியை அவர் நம்மில் வைக்கிறார். நன்மை விதி தேவ னுடைய இரட்சிப்பின்மூலமாக அல்ல, மாறாக அவருடைய படைப்பின்மூலமாக நமக்கு

கொடுக்கப்படுகிறது. நம்மிலிருக்கும் நன்மைசெய்யும் மூலக்கூறு இயல்பானதாகும். ஆனால் தேவன் நம்மை இரட்சிக்கும்போது அவர் தம் ஜீவனை நம்மில் வைக்கிறார். இந்த ஜீவனில் ஜீவவிதி, அதாவது ஜீவ ஆவியின் விதி உள்ளடங்கியுள்ளது. இந்த விதி, நம் இரட்சிப்பின் நேரத்தில் பெற்றுக்கொள்ளப்படுகிறது, மேலும் தேவனுடைய ஜீவனின் இரட்சிப்பிலிருந்து வருகிறது.

தேவனிடமிருந்து வருகிற தேவனுடைய விதி தேவனிடமிருந்து தோன்றுகிறது; மனித ஜீவனிலிருந்து வருகிற, மனதிலுள்ள நன்மை விதி, மனிதனிடமிருந்து தோன்றுகிறது. சாத்தானுடைய ஜீவனிலிருந்து வருகிற உறுப்புகளிலுள்ள பாவவிதி, சாத்தானிடமிருந்து தோன்றுகிறது. மேலும் ஜீவ ஆவியிலிருந்து வருகிற ஜீவ ஆவியின் விதி, ஆவியிலிருந்து தோன்றுகிறது என்று இந்த நான்கு விதிகளின் பிறப்பிடத்தைப் பற்றி நாம் கூறமுடியும்.

## C. நான்கு விதிகளின் இருப்பிடம்

நான்கு விதிகளைப்பற்றிய ஒரு துல்லியமான அறிவைக் கொண்டிருக்க, அவற்றின் இருப்பிடங்களைப்பற்றி நாம் தெளிவாக இருக்கவேண்டும்.

தேவனுடைய விதி கற்பலகைகளின்மேல் எழுதப்பட்டிருக்கிறது; எனவே இது நமக்கு வெளியே இருக்கிறது.

நன்மை விதி நம் மனதில், அதாவது நம் ஆத்துமாவில் இருக்கிறது. நன்மை செய்கிற ஜீவன் நம் ஆத்துமாவில் இருப்பதால், இந்த ஜீவனிலிருந்து வருகிற விதியும் நிச்சயமாக நம் ஆத்துமாவில்தான் இருக்கிறது. இந்த விதியின் செயல்பாடு விசேஷமாக, நம் ஆத்துமாவிலுள்ள மனதில் வெளிப்படுத்தப்படுகிறது; எனவே இந்த விதி "மனதினுடையது" என்று அழைக்கப்படுகிறது. ஆகையால் நம் ஆத்துமாவில், மனித ஜீவன், இப்படிப்பட்ட ஜீவனிலிருந்து வருகிற நன்மை விதி, மனிதனின் நல்ல சுபாவம் ஆகியவைகளை நாம் கொண்டிருக்கிறோம்.

பாவவிதி நம் உறுப்புகளில் இருக்கிறது, அதாவது நம் உடலில் இருக்கிறது. மனிதனுடைய வீழ்ச்சியின்போது, அவன் அறிவுமரத்தின் கனியை தன் உடலுக்குள் எடுத்துக் கொண்டான்; எனவே சாத்தானுடைய தீய ஜீவன் நம் மனித உடலுக்குள் நுழைந்தது. இவ்வாறு சாத்தானுடைய ஜீவனி லிருந்து வருகிற பாவவிதியும் நம் உடலில் இருக்கிறது. இந்த விதி நம் உடலில் இருப்பதாலும் உடல் உறுப்புகளால் தொகுக்கப்பட்டிருப்பதாலும், இந்த விதி நம் உறுப்புகளில் இருக்கிறது. இவ்வாறு நம் உடலில் சாத்தான், சாத்தானுடைய ஜீவன், சாத்தானுடைய ஜீவனிலிருந்து வருகிற பாவவிதி, சாத்தானின் தீய சுபாவம் ஆகியவைகளை

நாம் கொண்டிருக்கிறோம். சாத்தானும், அவனுடைய தீய காரியங்களும் நம் உடலுக்குள் நுழைந்து, அதனோடு கலந்துவிட்டதால், அது தரங்கெட்டு, கெடுக்கப்பட்ட மாம்சமாக மாறிவிட்டது.

ஜீவ ஆவியின் விதி நம் ஆவியில் இருக்கிறது. ஜீவ ஆவி தேவனுடைய ஜீவனோடு சேர்ந்து நம் ஆவியில் குடியிருப்பதால், ஜீவ ஆவியிலிருந்து வருகிற விதியும் நம் ஆவியில் இருக்கிறது. இந்த விதி தேவனுடைய ஆவியிலிருந்து வருகிறது, மேலும் நம் ஆவியில் இருக்கிறது; ஆகையால் அதின் பிறப்பிடம் மட்டும் ஆவியல்ல, அதின் இருப்பிடமும் ஆவிதான். எனவே இது முழுவதும் ஆவிக்குரியது; இது உடலுக்குரியதோ, ஆத்துமாவுக் குரியதோ அல்ல. இவ்வாறு நம் ஆவியில் தேவன், தேவனுடைய ஜீவன், தேவனுடைய ஜீவனின் ஆவியிலிருந்து வருகிற விதி, அவரின் ஜீவ சுபாவம் ஆகியவைகளை நாம் கொண்டிக்கிறோம்.

## D. நான்கு விதிகளின் சுபாவமும் செயல்பாடும்

நமக்கு உள்ளும் புறமும் இருக்கிற நான்கு விதிகளின் சுபாவமும் செயல்பாடுகளும் என்ன? தேவனுடைய விதி தேவனுடைய சட்டங்களால் தொகுக்கப்பட்டிருக்கிறது. மேலும் இதன் சுபாவம் பரிசுத்தம், நீதி, நன்மை ஆகும். இந்த விதி, நமக்கு வெளியே இருந்து தேவன் எதனை ஆக்கினைக்குள்ளாக்கு கிறார், எதனை நீதிப்படுத்துகிறார் என்பதை நாம் அறியச்செய்கிறது; தேவனுடைய பரிசுத்தம், நீதி, நன்மை ஆகிய சட்டங்களுக்கு இணங்கும்படி தேவன் எதனை ஆக்கினைக்குள்ளாக்குகிறாரோ அதனை நாம் புறக்கணிக்கவும் தேவன் எதனை நீதிப்படுத்து கிறரோ அதனைச்செய்யவும் அது நம்மைக் கோருகிறது.

நம் படைக்கப்பட்ட நல்ல ஜீவனிலிருந்து வருகிற நம் மனதிலுள்ள நன்மை விதி, மனிதனின் நல்ல சுபாவத்தை அடக்கியுள்ளது, மேலும் நமக்கு வெளியேயுள்ள தேவனுடைய விதியின் சுபாவத்திற்கு மிகச்சரியாகப் பொருந்துகிறது. இந்த விதி நம்மில், அதாவது நம் மனதில் நன்மைசெய்யும் ஆசையை தூண்டுகிறது, விசேஷமாக நமக்கு வெளியேயுள்ள தேவனுடைய விதி நாம் நல்லவனாக இருக்க வேண்டுமென்று நம்மைக் கோரும்போது, நம்மிலுள்ள இந்த நன்மை விதி நன்மைசெய்வதற் கான பற்றைக் நமக்குக் கொடுக்கிறது. ஆகையால் நம்மிலுள்ள மனம் நமக்கு வெளியேயுள்ள தேவனுடைய விதிக்கு கீழ்ப்படிவதில் பெருமகிழ்ச்சியடைகிறது. இதையே அப்போஸ்தலன் "நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு ஊழியம்செய்கிறேன்" (ரோமர் 7:25) என்று கூறுகிறார்.

நம் மாம்சத்திலுள்ள தீயதும், வீழ்ச்சியடைந்ததுமாகிய

சாத்தானின் ஜீவனிலிருந்து வருகிற, நம் உறுப்புகளிலுள்ள பாவவிதி, சாத்தானின் தீய சுபாவத்தை அடக்கியிருக்கிறது. சாத்தானின் தீய ஜீவனே நம் மாம்சத்தில் இருக்கும் "தீமையும்", நம்முள் குடியிருக்கிற "பாவமும்" ஆகும் (ரோமர் 7:21, 20). இந்த தீய ஜீவனிலிருந்து வருகிற விதி, நம்மை பாவம்செய்யத் தூண்டுகிறது, ஏனென்றால் இது ஒரு "பாவப்பிரமாணம்" ஆகும். இந்த விதி, தீமைசெய்யும் தன் இயல்பான வல்லமையை, நம் மாம்சத்திலிருந்து காட்சியாக்குகிறது. மேலும் நம் மனதின் நன்மை விதிக்கு எதிராகப் போரிடுகிறது. நம் மனதின் நன்மை விதி, நன்மைசெய்யும் விருப்பத்தை நமக்குக் கொடுக்கும்போது, இந்தப் பாவவிதி அதற்கு எதிராக போரிட எழுந்து நம்மைச் சிறைப்படுத்துகிறது (ரோமர் 7:23). எனவே நன்மை செய்யவேண்டுமென்ற நம் விருப்பத்தை நிறைவேற்றவோ, தேவனுடைய விதியின் நல்ல கோரிக்கையை திருப்திப்படுத்தவோ நம்மால் முடியவில்லை என்பது மட்டுமல்ல, மாறாக எல்லா வகையான பாவங் களையும் செய்து, மரணத்தைப்பெற்று, ரோமர் 7:21-24-ல் விவரிக்கப்பட்டுள்ளது போலவே, நம் உறுப்புகளிலுள்ள பாவவிதிக்கு கீழ்ப்படிகிறோம். ஆகையால் நாம் நம் சொந்த தெரிந்தெடுப்பினாலோ விருப்பத்தினாலோ அல்ல, மாறாக உள்ளிருந்து நம்மைத் தூண்டுகிற பாவவிதியினால் நாம் பாவம் செய்கிறோம்.

எனவே வீழ்ச்சியடைந்த நம்முள் இரண்டு முரண்பட்ட விதிகள் இருக்கின்றன என்று இங்கு நாம் பார்க்கிறோம். ஒன்று படைக்கப்பட்ட நல்ல ஜீவனிலிருந்து வருகிறது, அது நம் ஆத்துமாவிலுள்ள மனதில் வேலைச்செய்து, நன்மை செய்ய வேண்டுமென்ற விருப்பத்தை நமக்குத் கொடுக்கிறது. மற்றொன்று சாத்தானுடைய வீழ்ச்சியடைந்த தீய ஜீவனிலிருந்து வருகிறது, இது நம் உடலின் உறுப்புகளில் வேலை செய்து, பாவம் செய்வதற்கு நம்மைத் தூண்டுகிறது. இந்த இரண்டு எதிரான விதிகள், நம் மனதிலும், நம் உறுப்பு களிலும், முரண்பாடான வேலைகளைச்செய்து, நம்முள் ஒன்றிற்கு எதிராக மற்றொன்று போர் செய்கிறது. பாவவிதி வழக்கமாக நன்மை விதியை மேற்கொள்வதே இதன் விளைவாகும்; எனவே, நாம் செய்ய விரும்புகிற நன்மையை செய்வதில் தோல்வியடைந்து, நாம் விரும்பாத தீமையைச்செய்ய கட்டாயப்படுத்தப்படுகிறோம். இதுவே பகுத்தறிவிற்கும், இச்சைக்கும் இடையிலான போர் என்று சீனர்கள் அழைப்பதாகும். பகுத்தறிவு என்பது நம் படைக்கப்பட்ட ஜீவனின் இயல்பாக இருக்கின்ற நன்மைசெய்யும் மூலக் கூறாகும்; இச்சை என்பது நம் வீழ்ச்சியடைந்த உடலில் குடியிருக்கும் பாவம் அல்லது நம் மாம்சத்தில் இருக்கும் தீமையாகும்.

பகுத்தறிவின் ஒரு பகுதி, நம் மனித மனசாட்சியிலிருந்து வருவதாக இருந்தாலும், அது நம் மனதில் வேலைசெய்கிறது; எனவே "பகுத்தறிவின்" புறச்செயல்களிலிருந்து விளைகிற நன்மை, அறிவாற்றலில் இருந்து வருகிறது அல்லது அதன்மூலமாக கடந்துசெல்கிறது. இச்சை என்பது வீழ்ச்சியடைந்த நம்முடைய மனித சுபாவத்தோடு தொடர்புடையதாக இருந்தாலும், அது நம் உடலின் உறுப்புகளில் வேலைசெய்கிறது; எனவே இச்சையின் புறச்செயலாகிய தீமை, இச்சையிலிருந்து வருகிறது. இந்த காரணத்தினால்தான் அறிவாற்றலில் வலிமையுள்ள ஒருவர் நன்மை செய்வதற்கு அதிக திறமைவாய்ந்தவராகவும், எளிதில் உணர்ச்சிவசப்படுகிற ஒருவர் எளிதாக தீமைசெய்கிறவராகவும் இருக்கிறார். வேறுவார்த்தைகளில் சொன்னால், மனிதர்கள் செய்யும் நன்மைகளெல்லாம் மனதின் அறிவாற்றலில் இருந்து தோன்றுகின்றன, அல்லது அதன்மூலம் கடந்துசெல்கின்றன, அப்படியிருக்க, மனிதர்கள் செய்யும் தீமைகளெல்லாம் உறுப்புகளிலுள்ள இச்சைகளிலிருந்து வரும் புறச்செயல்களாகும். நம் மனதிலுள்ள பகுத்தறிவு, அனுகூலமான நிலையைப்பெறும்போது, அது மனிதனை நன்மைசெய்யத் தூண்டுகிறது; உறுப்புகளிலுள்ள இச்சை மேலோங்கும் நிலையைக் கைப்பற்றும்போது, அது மனிதனை தீமைசெய்யத் தூண்டுகிறது.

இந்த வகையான போரும், கலாத்தியர் 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள போராட்டமும் ஒன்றுதான் என்று சிலர் நினைக்கிறார்கள். இது சரியல்ல. நம் மாம்சம் ஆவிக்கு எதிராக போராடுவதைப்பற்றி கலாத்தியர் 5 பேசுகிறது; இது நாம் இரட்சிக்கப்பட்டு பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்டபிறகு மட்டுமே நிகழ்கிறது. ஆனால் இரண்டு விதி களுக்கு இடையே நடக்கும் போர், சாத்தானுடைய வீழ்ச்சியடைந்த தீய ஜீவனுக்கும், படைக்கப்பட்ட நல்ல ஜீவனுக்குமிடையே நடக்கும் போரோடு தொடர்புடையது, மேலும் இந்தப் போர் நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பே இருக்கின்றது. ஆகையால் இது நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பே இருக்கும் ஓர் உள்ளான போர் ஆகும். இது உலகப் பிரகாரமான மக்கள் எல்லாரிலும் இருக்கும், நன்மைக்கும் தீமைக்குமிடையே நடக்கும் ஒரு போராகவும் இருக்கிறது.

பாவவிதி பாவத்திலிருந்து வருகிறது, இந்தப் "**பாவம்**" சாத்தானுடைய ஜீவனாகும். ஆகையால், அது உயிரோடு இருக்கிறது. இங்கு பெரிய எழுத்துக்களில் காட்டப்பட் டிருக்கின்ற "**பாவம்**", அது ஆளுருவமாக்கப்பட்டிருக்கிறது என்றும், தனித்தன்மைவாய்ந்தது என்றும் அடையாளப் படுத்துகிறது. இப்பிரபஞ்சத்தில், ஒரேவொரு தேவன் மட்டுமே இருக்கிறார், மேலும் ஒரேவொரு **பாவம்** மட்டுமே இருக்கிறது. **பாவம்** என்பது

ஒரு விசேஷமான பதமும், ஒரு தனித்தன்மைவாய்ந்த பொருளுமாகும்; **பாவம்** என்பது சாத்தானின் மற்றொரு பெயராகும். ஆகையால் ரோமர் 5 முதல் 8 வரை **பாவம்** நம்மேல் ஆளுகைசெய்யமுடியும், நம்மை மேற்கொள்ளமுடியும், தேவனுக்கு எதிராக அவனுக்கு நம்மை அடிமைப்படுத்தமுடியும், நம்மில் குடியிருக்க முடியும், நம்மேல் அதிகவல்லமை செலுத்தி நாம் விரும்பாத தீமையை செய்யும்படி நம்மைத் தூண்டமுடியும் என்று நமக்குச் சொல்லுகிறது. நமக்கு வெளியில் இருக்கும் அநேகப் பாவங்கள் நமக்குள் இருக்கும் தனித்தன்மைவாய்ந்த **பாவத்தின்** வேலையிலிருந்து விளைகிற செயல்களாகும். இந்த தனித்தன்மைவாய்ந்த **பாவமே** எல்லாப் பாவங் களுக்கும் வேரும், தாயுமாகும்.

பாவம் புறம்பாக பாவம்செய்ய நம்மை எவ்வாறு தூண்டுகிறது? பாவம் நம் உடலில் குடியிருக்கிறது என்பதை நாம் பார்த்திருக்கிறோம். எனினும், உடல் அல்ல மாறாக, சித்தமே உந்தித்தள்ளும் உறுப்பு ஆகும். மனித ஆத்துமா வுக்கு சொந்தமான சித்தம் பாவத்தினால் கட்டுப்படுத்தப்பட்டு பாவத்தின் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து பாவம் செய்வதற்கு மனித உடலைத் தூண்டுகிறது. எனவே, பாவம் நம் உடலில் குடியிருந்தாலும், அதன் சேதப்படுத்தும் வேலை சுற்றுவட்டத்திலிருந்து மையத்திற்கு முன்னேறிச் செல்கிறது. உடலை ஆதாரமாகக்கொண்டு நம் முழு ஆள்தத்துவமும் கெடுக்கப் படும்வரை நம் ஆத்துமாவையும், ஆவியையும் சேதப்படுத்த பாவத்தின் விஷத்தைக் கடத்துகிறது. ஆகையால் "எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளது" என்று எரேமியா 17 கூறுகிறது. மேலும் எல்லாவகையான பாவங்களும் மனிதனுக்குள் இருக்கின்றன என்று ரோமர் 1 மற்றும் மாற்கு 7 கூறுகின்றன. மனிதன், உள்ளாக தனக்குள் முழுவதும் பாவத்தினால் கெடுக்கப்பட்டு பாவங்களால் நிறைந்திருக்கிறான் என்று இந்த வேதவாக்கியங்கள் நிரூபிக்கின்றன. எனவே இன்று மனிதனின் ஆத்துமாவில், அவனுடைய மனம் தீமையாக, அவனுடைய உணர்ச்சி அசுத்தமாக, அவனுடைய சித்தம் கலகமாக இருக்கிறது. மேலும் அவனுடைய ஆவியும் இருளடைந்துபோய் இருக்கிறது. இவைகளே, மனிதனிலுள்ள பாவத்தின் வேலையின் விளைவுகளாகும்.

ஆனால் இரட்சிக்கப்பட்டவர்களாகிய நம்மில் மனித னுடைய மற்றும் சாத்தானுடைய நன்மை மற்றும் தீமை ஆகிய இரண்டு விதிகள் மட்டுமல்ல, தேவனுடைய ஜீவனில் ஆவியின் விதியும் நம்மில் இருப்பதற்காக நாம் கர்த்தருக்கு நன்றிசெலுத்த வேண்டும். இந்த விதி தேவனுடைய ஜீவனின் ஆவியிலிருந்து வருவதால்,

இது தேவனுடைய படைக்கப்படாத தெய்வீக ஜீவனிலிருந்து வருகிறது. சுபாவத்தைப் பொறுத்தவரை, பிரபஞ்சத்தில் ஜீவன்கள் என்று அழைக்கப் படுகிறவைகளில், தெய்வீகமும் நித்தியமும் ஆகிய இரண்டையும் உடைய தேவனுடைய ஜீவன் மட்டுமே "ஜீவன்" (*ஜீவன் என்றால் என்ன?* என்ற முதலாம் அத்தியாயத்தில் விரிவாக விவரிக்கப்பட்டிருக்கிறது). ஆகையால் தேவனுடைய ஜீவனின் சுபாவம் "ஜீவனே". ஜீவனுடைய ஆவியின் விதி தேவனுடைய ஜீவனிலிருந்து வருவதால், தேவனுடைய ஜீவனின் சுபாவம் "ஜீவனாக" இருப்பதைப்போல, அதின் சுபாவமும் "ஜீவனாக" இருக்கிறது. இது "நன்மை தீமை" என்று இதற்குமுன்பு குறிப்பிடப் பட்டுள்ள இரண்டு விதிகளைப் போன்றதல்ல, ஏனென்றால் அவைகள் ஜீவனிலிருந்து வருகின்றன.

வேதவாக்கியங்களின் வெளிப்பாட்டின்படி, ஜீவனும் நன்மையும் வித்தியாசமானவைகள், இங்கு நமக்கு மூன்று முக்கியமான குறிப்புகள் இருக்கின்றன: முதலாவது ஜீவன் என்பது தேவனுடைய ஜீவனின் சுபாவம், ஆனால் நன்மை என்பது மனிதனுடைய ஜீவனின் சுபாவம்; இரண்டவாது ஜீவன் என்பது நன்மையாக இருக்கிறது, ஆனால் நன்மை என்பது, ஜீவனாகத்தான் இருக்கவேண்டும் என்ற அவசியமில்லை; மூன்றாவது, ஏதேன் தோட்டத்திலுள்ள ஜீவமரம் மற்றும் நன்மை-தீமையுள்ள மரம், ஜீவனும் நன்மையும் நிச்சயமாகவே வித்தியாசமானவைகள் என்று நமக்குக் காட்டுகின்றன; ஜீவன் என்பது நன்மையுமல்ல, தீமையுமல்ல. ஜீவன், நன்மை, தீமை ஆகியவைகள் மூன்று வித்தியாசமான மற்றும் தனிப்பட்ட காரியங்களாகும்.

ஜீவனும், நன்மையும் ஒரே மாதிரியானவைகள் அல்ல என்பது மட்டுமல்ல, நன்மை நன்மையிலிருந்து வேறுபடுகிறது என்பதை நாம் உணரவேண்டும். தேவனுடைய நன்மை இருக்கிறது, மனிதனுடைய நன்மையும் இருக்கிறது. தேவனுடைய நன்மை தேவனுடைய ஜீவனிலிருந்து வருகிறது, மேலும் தேவனுடைய ஜீவனின் சுபாவத்தை அடக்கியிருக்கிறது. மனிதனுடைய நன்மை மனிதனுடைய ஜீவனிலிருந்து வருகிறது, மேலும் மனித ஜீவனின் நல்ல சுபாவத்தை மட்டும் அடக்கியிருக்கிறது. எபேசியர் 2:10 மற்றும் 2 தீமோ. 2:21-ல் குறிப்பிடப்பட்டுள்ள நன்மை தேவனுடைய ஜீவனின்மூலமாக நாம் வாழ்ந்துகாட்டும் நன்மையாகும்; எனவே இது தேவனுடைய ஜீவனிலிருந்து வருகிற நன்மையும், தேவனுடைய நன்மையுமாகும். மத்தேயு 12:35, ரோமர் 7:18, 19, 21; 9:11, ஆகியவைகளில் குறிப்பிடப்பட்டுள்ள நன்மை நம் சொந்த ஜீவனின்படி நாம் வாழ்ந்துகாட்டும் நன்மையாகும்; எனவே, இது மனித ஜீவனிலிருந்து வருகிற நன்மையும், மனித நன்மையுமாகும். மனித ஜீவனிலிருந்து வரும்

நன்மை "ஜீவனின்" சுபாவமோ, தேவனுடைய மூலக்கூறோ இல்லாத வெறும் மனித நன்மையாகும். தேவனுடைய ஜீவனிலிருந்து வருகிற தேவனுடைய நன்மை மட்டுமே, நன்மையாக மட்டுமல்லாமல் "ஜீவனின்" சுபாவத்தையும், சாட்சாத்து தேவனுடைய மூலக்கூறையும் உடையதாக இருக்கிறது. ஆகையால் ஜீவனும் நன்மையும் வித்தியாசமானது என்று நாம் கூறும்போது, *தேவனுடைய ஜீவனும் மனிதனுடைய நன்மையும் வித்தியாச*மானவை என்ற பொருள்பட நாம் கூறுகிறோம். தேவனுடைய ஜீவ சுபாவத்தின் எதனையும் கொண்டிராத, மனித ஜீவனிலிருந்து வருகிற மனிதனுடைய நன்மை இயல்பாகவே, தேவனுடைய ஜீவனிலிருந்து வித்தியாசமானது. இருப்பினும், தேவனுடைய நன்மை தேவனுடைய ஜீவனிலிருந்து வருவதாலும், தேவனுடைய ஜீவ சுபாவத்தை உள்ளடக்கியுள்ளதாலும், அது தேவனுடைய ஜீவனிலிருந்து வித்தியாசமானது என்று நாம் கூறமுடியாது.

இவ்வாறு தேவனுடைய "ஜீவ" சுபாவத்தை அடக்கியுள்ள ஜீவ ஆவியின் விதி நம்மை தேவனுடைய ஜீவனை வாழ்ந்து காட்ட, அதாவது தேவனுடைய நன்மையை வாழ்ந்துகாட்டச் செய்கிறது என்பதை நாம் பார்க்கிறோம்.

மேலும் நம்முள்ளிருக்கும் இந்த மூன்று வித்தியாசமான விதிகளும், தங்களுடைய வலிமையின் அளவிலும் வித்தியாசப்படுகின்றன. விதிகள், முறையே தங்களின் பிறப்பிடங்களாகிய பொருட்களின் வலிமையின் அளவிற்கு ஏற்ப தங்கள் வலிமையில் வித்தியாசப்படும் என்று நமக்குத் தெரியும். நன்மைவிதி, மனிதனுடைய ஜீவனிலிருந்து வருகிறது, மேலும் மனித ஜீவனே மிகமிகப் பலவீனமானது; எனவே நன்மை விதியின் நன்மை செய்வதற்கான வலிமையும் மிகமிகப் பலவீனமாக இருக்கிறது. பாவவிதி சாத்தானுடைய வலிமையான ஜீவனிலிருந்து வருகிறது; எனவே இந்த ஜீவனின் பாவம்செய்யும் வல்லமை, நன்மை விதியின் நன்மைசெய்யும் வல்லமையைவிட வலிமையானதாகும்; இது நம்மை நன்மைசெய்யத் திறனற்றவர்களாக்குவது மட்டுமல்ல, நம்மை பாவம் செய்யவும், தீமை செய்யவும் தூண்டுகிறது. ஜீவ ஆவியின் விதி, அதிவலிமையான ஜீவனாகிய தேவ னுடைய ஜீவனிலிருந்து வருகிறது; எனவே இந்த விதியின் வல்லமையும் அதிவலிமையானது; இது பாவம் செய்ய பாவ விதிக்கு கீழ்ப்படிவதிலிருந்து நம்மைக் காப்பது மட்டுமல்லாமல், தனக்கு கீழ்ப்படிய நமக்குத் திறனளித்து தேவனுடைய ஜீவனை இயல்பாக வாழ்ந்துகாட்டவும் செய்கிறது.

தத்துவவாதிகள் தலைமுறைகள்தோறும் ஒழுக்கத்தை உருவாக்குவதற்கும் நடத்தையை மேம்படுத்துவதற்குமான பல்வேறு வழிகளை பரிந்துரைத்திருக்கிறார்கள். உண்மையில் மனிதனுடைய

இயல்பான நன்மையை மறுசீரமைக்கவும் மீண்டும் தூண்டிவிடவும், ஏற்கெனவே கெடுக்கப்பட்டுள்ள உடல் மற்றும் ஆத்துமாமீது மனித அறிவாற்றல் சுய-சித்தம், சுய-முயற்சியின்மூலம் வேலைசெய்வதையே அவர்கள் பரிந்துரைக்கிறார்கள். இவை எதுவும் பாவவிதியின் இயல்பான வல்லமையை மேற்கொள்ளமுடியாது. மனித வலிமை வரம்புக்குட்பட்டது, ஆனால் விதியின் வல்லமை நீடித்துநிலைப்ப தாகும்; மனிதனின் முயற்சி சுய-முயற்சியாகும், ஆனால் விதியின் வல்லமை தன்னிச்சையானது. மனிதன் தன் சொந்த முயற்சியைப் பயன்படுத்தி சிறிதுநேரம் தன்னையே நிலைநிறுத்திக்கொள்ள முடியும். ஆனால் தன் வலிமை தீர்ந்தவுடனேயே, விதியின் வல்லமை மறுபடியும் தன்னையே வெளிக்காட்டும். ஆகையால் தேவனுடைய விடுவிக்கும் வழி நம்மைச் சுற்றியிருக்கும் பாவத்தோடு இடைபடுவதால், நம் வெளியார்ந்த உடலின்மீது வேலைசெய்வதோ, நன்மைசெய்ய நம் சித்தத்தை பலப்படுத்துவதால் நம் உடலுக்கும், நம் ஆவிக்கும் இடையேயுள்ள ஆத்துமாவின்மீது வேலை செய்வதோ அல்ல. மாறாக தேவன் நம் மையத்தில், அதாவது நம் ஆவியில் ஒரு புதிய மூலக்கூறைச் சேர்க்கிறார், அது தன்னோடு ஜீவனின் வலிமையான வல்லமையைக் கொண்டு வருகிறது. பின்னர், அவர் பாவவிதியின் பாவம்செய்யும் வல்லமையை மேற்கொள்ள, ஒரு விதியை கீழ்ப்படுத்த வேறொரு விதியைப் பயன்படுத்தி, நம் ஆள்தத்துவத்தின் எல்லா பாகங்களினூடாக ஊடுருவிப்பரவி, நம் மையத்திலிருந்து சுற்றுவட்டத்திற்கு முன்னேறிச்செல்கிறார். மேலும் நன்மை விதியின்மூலமாக, முன்பு நம்மால் வாழ்ந்துகாட்டமுடியாத, தேவனுடைய விதி கோருகிற நன்மையை வாழ்ந்துகாட்ட நாம் திறனளிக்கப்படுகிறோம். இன்னும் அதிகமாக ஜீவ ஆவியின் விதியிலிருந்து வருகிற ஜீவனின்மூலம், தேவன் விரும்புகிற வாழ்க்கையை நம்மால் வாழ்ந்துகாட்ட முடிகிறது.

ஆகையால் நம்மோடு தொடர்புடைய நான்கு விதிகள் இருக்கின்றன என்று வேதாகமம் நமக்குக் காட்டுகிறது: ஒன்று நமக்கு வெளியே இருக்கிறது, மேலும் மூன்று நமக்குள்ளே இருக்கின்றன. நமக்கு வெளியே இருக்கும் ஒன்று தேவனுடைய விதி. நமக்குள்ளே இருக்கும் மூன்றில், ஒன்று நம் ஆத்துமாவில், ஒன்று நம் உடலிலும், மேலும் ஒன்று நம் ஆவியிலும் இருக்கிறது. படைக்கப்பட்ட நல்ல மனித ஜீவனி லிருந்து வருகிற நம் ஆத்துமாவிலுள்ள விதி, நன்மை யானதும், நன்மைசெய்ய நமக்கு விருப்பதைக்கொடுக்கிறது மாகவும் இருக்கிறது; சாத்தானின் வீழ்ச்சியடைந்த தீமையான ஜீவனிலிருந்து வருகிற, நம் உடலிலுள்ள விதி தீமையானதும் பாவம்செய்ய நம்மைத்

தூண்டுகிறதாகவும் இருக் கிறது. தேவனுடைய படைக்கப்படாத தெய்வீக ஜீவனிலிருந்து வருகிற நம் ஆவியிலுள்ள விதி தெய்வீகமானதும், தேவனுடைய தெய்வீக ஜீவனை நாம் வாழ்ந்து காட்டச் செய்கிறதாகவும் இருக்கிறது.

நமக்கு வெளியேயுள்ள தேவனுடைய விதி, பரிசுத்தம், நீதி மற்றும் நன்மை ஆகியவைகளின் கோரிக்கைகளை நமக்குத் தருவதில், தேவனைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. நம் ஆத்துமா விலுள்ள நன்மை விதி, தேவனுடைய விதியின் பரிசுத்தமும், நன்மையுமான கோரிக்கைகளைத் தொட்டவுடன், அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற விரும்பவும், தீர்மானிக் கவும் செய்கிறது. ஆனால் நம் உறுப்புகளிலுள்ள பாவவிதி, ஆத்துமாவிலுள்ள நன்மைவிதி நமக்கு வெளியேயுள்ள தேவ னுடைய விதியின் பரிசுத்தமும், நன்மையுமான கோரிக்கைகளை நிறைவேற்ற விரும்புவதை உணர்ந்தவுடன் நிச்சயமாக, நம் ஆத்துமாவிலுள்ள நன்மைவிதியை எதிர்த்து, தடுத்து வழக்கமாக அதனை மேற்கொண்டுவிடுகிறது. இவ்வாறு நாம் தேவனுடைய விதியை நிறைவேற்றுவதற்கான திறனை இழப்பதோடு மட்டுமல்லாமல், அதற்குப் பதில் நமக்கு வெளியே இருக்கும் தேவனுடைய விதியின் பரிசுத்தமும் நன்மையுமான கோரிக்கைகைளை மீறவும் செய்கிறோம். இது ஏனென்றால், நம் உடலிலுள்ள பாவவிதி, நம் ஆத்துமாவிலுள்ள நன்மைவிதியை விட வலிமையானது. இருப்பினும், நம் ஆவியிலிருக்கும் ஜீவ ஆவியின் விதி நம் உடலிலுள்ள பாவவிதியைவிட வலிமையானது. ஆகையால் நாம் நம் ஆவிக்குத் திரும்பி நம் ஆவிக்கு ஏற்றபடி வாழ்ந்தால், நம் ஆவியிலிருக்கும் ஜீவ ஆவியின் விதி, நம் உடலில் இருக்கும் பாவவிதியிலிருந்து நம்மை விடுவித்து தேவனுடைய தெய்வீக ஜீவனை வாழ்ந்துகாட்டச் செய்கிறது. இவ்வாறு தேவனுடைய பரிசுத்தமும் நன்மையுமான கோரிக்கை களை நிறைவேற்ற நமக்குத் திறன் இருப்பது மட்டுமல்லாமல், தேவனின் தெய்வீக தரத்தை எட்டவும் நம்மால் முடியும்.

எடுத்துக்காட்டாக, வெளியேயிருக்கும் தேவனுடைய விதி, நாம் இச்சிக்கக்கூடாது என்று கோருகிறது. நம் ஆத்துமாவில் இருக்கும் நன்மைவிதி தேவனுடைய விதியின் இந்த கோரிக்கையைத் தொட்டவுடனே, அதை நிறைவேற்ற விரும்பு கிறது. மேலும் இனி இச்சிக்கக்கூடாது என்று தீர்மானிக்கிறது. ஆனால் அந்த நேரத்தில் நம் உடலிலுள்ள பாவவிதி உடனடியாக எதிராக எழுந்து நம்மை உள்ளார்ந்தரீதியில் இச்சிக்கச்செய்கிறது; இவ்வாறு இச்சிக்கக்கூடாது என்று கோருகிற தேவனுடைய விதியை நிறைவேற்ற நம்மால் இயலவில்லை. இந்த நேரத்தில், நாம் எவ்வளவு அதிகமாக விருப்பமும் தீர்மானமும்

உடையவர்களாக இருந்தாலும், நம்மால் இச்சிக்கும் இருதயத்தை நம்மிலிருந்து வெளியேற்ற முடியாது. இதற்கு மாறாக, இச்சையை நம்மிலிருந்து வெளியேற்ற நாம் எவ்வளவு அதிகமாக தீர்மானிக்கவும் போராடவும் செய்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அது நம்முள் வளர்கிறது. எப்போதெல்லாம் தேவனுடைய விதியின் புறம்பான கோரிக்கையால் நம் ஆத்துமாவின் நன்மைவிதி நன்மை செய்ய விரும்புகிறதோ, அப்போதெல்லாம் நம் உடலிலுள்ள பாவவிதி உடனடியாக நம்மிலுள்ள தீமையை இயக்கி நம் நல்ல எண்ணத்துக்கு எதிராக போர்செய்கிறது. மேலும், நம் ஆத்துமாவிலுள்ள நன்மைவிதி, நம் உடலிலுள்ள பாவவிதிக்கு எவ்வளவேனும் நிகரானதல்ல. பெரும்பாலும் ஒவ்வொருமுறை மோதும்போதும் அது நம் உடலிலுள்ள பாவவிதியிடம் தோல்விய டைகிறது. ஆனால் கர்த்தரைத் துதியுங்கள், நம் ஆவியிலிருக்கும் ஜீவ ஆவியின் விதி, நம் உடலிலுள்ள பாவவிதியைவிட வலிமையானது; மேலும் பாவவிதியிலிருந்து நம்மை விடுவிக்கவும், நமக்கு விடுதலைதரவும் திறனுள்ளதாக இருக்கிறது. நாம் நம் ஆத்துமாவிலிருக்கும் நன்மைவிதியின்மூலமாக போராடு வதையும், முயற்சிப்பதையும் நிறுத்திவிட்டு, அதற்குபதில் ஜீவஆவியின் விதியின்படி நடந்தால், நம் உடலிலுள்ள பாவவிதியால் தூண்டப் படும் இச்சையின் விருப்பத்திலிருந்து நாம் விடுவிக்கப்படுவோம். இச்சிக்கக்கூடாது என்ற தேவனுடைய புறம்பான விதியின் கோரிக்கையை நிறைவேற்றவும், தேவனுடைய விஞ்சுகிற பரிசுத்தத்தை வாழ்ந்துகாட்டவும் திறனுள்ளவர்களாக இருப்போம்.

எனவே, தேவனுடைய புறம்பான விதி சில கோரிக் கைகளை நம்மீது வைக்கிறது என்றும் நம் ஆத்துமாவிலுள்ள நன்மைவிதி உடனடியாக அவைகளை நிறைவேற்ற விரும்புகிறது என்றும் நாம் தெளிவாக பார்க்கமுடிகிறது. ஆனால் நம் ஆத்துமாவிலுள்ள நன்மைவிதி தேவனுடைய புறம்பான விதியின் கோரிக்கையை நிறைவேற்ற விரும்புவதை நிறைவேற்ற முடியாதபடி, தேவனுடைய புறம்பான விதிக்கும், நம் ஆத்துமாவிலிருக்கும் நன்மைவிதிக்கும் இடையே இருக்கும் பாவவிதி, இடையூறு செய்கிறது, தடுக்கிறது. நம் உடல் நம் ஆத்துமாவை சுற்றியிருப் பது போலவே, உடலிலுள்ள பாவவிதி நம் ஆத்துமாவிலுள்ள நன்மைவிதியை சுற்றியும் அதைவிடப் பலமானதாகவும் இருக்கிறது. ஆகையால் நம் ஆத்துமாவிலுள்ள நன்மைவிதிக்கு நம் உடலிலுள்ள பாவவிதியை மேற்கொள்வதும், அதன் சுற்றுச்சூழலை உடைத்தெறிவதும், தேவனுடைய புறம்பான விதியின் கோரிக்கையை நிறைவேற்றுவதும் மிகக் கடின மானதாகும். எனினும், நம் ஆவியிலுள்ள ஜீவ ஆவியின் விதி எல்லாவற்றையும்விட வலிமையானது; எனவே இது நம்

உடலிலுள்ள பாவவிதியை மேற்கொள்ளவும், அந்த விதியின் முற்றுகையிலிருந்து நம்மை விடுவிக்கவும்முடியும், இவ்வாறு தேவனுடைய விதியின் கோரிக்கையை முழுவதுமாக நிறைவேற்ற நமக்கு திறனளிக்கிறது.

நம்மிடமிருக்கிற இந்த நான்கு விதிகளுக்கும் இடையே யுள்ள உறவை விவரிப்பதற்கு நாம் மற்றுமொரு எடுத்துக்காட்டைப் பயன்படுத்தலாம். தேவனுடைய புறம்பான விதி ஒரு மரியாதைக்குரிய மனிதன் நம்மிடம் 'திருமணம்செய்து கொள்கிறாயா' என்று கேட்பதுபோல் இருக்கிறது. ஆனால் நம் மனதிலுள்ள நன்மைவிதி, ஒரு நற்குணமுடைய பெண் அதற்கு 'ஆம்' என்று கூறுவதுபோல் இருக்கிறது. இருப்பினும், நம் உறுப்புகளிலுள்ள பாவவிதி, எப்போதும் அந்தப் பெண்ணைப் பின்தொடர்ந்து சென்று, அந்தப் பெண்ணுக்கும், அந்த மனிதனுக்கும் இடையே பிரச்சினைகளை உருவாக்குகிற ஒரு போக்கிரியைப்போல இருக்கிறது. எப்போதெல்லாம் இந்தப் பெண் அந்த மனிதனுடைய விருப்பத்துக்கு 'ஆம்' என்று கூறுவதை அந்தப் போக்கிரி பார்க்கிறானோ அப்போதெல்லாம் அவளுடைய சொந்த சித்தம் அல்லது அவளுடைய சொந்த விருப்பத்திற்கு மாறாக செயல்படு வதற்கு அவளை கடத்திச்சென்று, பலவந்தம் பண்ணுகிறான். அந்த கணத்தில், நம் ஆவியிலுள்ள ஜீவ ஆவியின் விதி, பரலோகத்திலிருந்து வருகிற ஒரு தேவதூதனைப்போல வந்து, அந்தப் பெண்ணை போக்கிரியிடமிருந்து காப்பாற்றி அந்த மனிதனுடைய விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அவளுக்கு திறனளிக்கிறது; இவ்வாறு அவளுடைய விருப்பம் நிறை வேற்றப்படுகிறது. இதன் விளைவாக, பரலோகத்திலிருந்து வந்த இந்த தேவதூதன் அந்த மனிதனை பிரதிநிதித்துவப் படுத்துகிற ஒருவன் என்பதை அவள் கண்டுபிடிக்கிறாள். ஆகையால் இந்த தேவதூதன் அந்த மனிதனுடைய விருப்பத்தை நிறைவேற்ற அவளுக்கு உதவிசெய்வதின்மூலம் தன் சொந்த விருப்பத்தை நிறைவேற்ற அந்தப் பெண்ணுக்கு திறனளிக்கிறான்.

தேவனுடைய புறம்பான விதி நம்மிடம் கோரிக்கைகளை வைத்தாலும்கூட, அதின் கோரிக்கைகளை நிறைவேற்ற அது நமக்கு உதவமுடியாது என்பதை இந்த எடுத்துக்காட்டிலிருந்து நாம் காணலாம். நம் மனதிலுள்ள நன்மைவிதி புறம்பான தேவனுடைய விதியின் கோரிக்கைகளை நிறைவேற்ற விரும்பு கிறது, ஆயினும் நம் உறுப்புகளிலுள்ள பாவவிதியை மேற்கொள்வதற்கு அதற்கு எந்த வலிமையும் இல்லை. மேலும் பாவவிதி எப்போதும் நன்மைவிதியை எதிர்க்கிறது. மேலும் நன்மைவிதி தேவனுடைய விதியின் கோரிக்கைகளை நிறைவேற்ற முயற்சிப்பதை அது பார்க்கிறபோது, அதன் விருப்பத்தை

நிறைவேற்றுவதிலிருந்து அதை கட்டாயமாக தடுத்து நிறுத்துகிறது. ஆனால் நம் ஆவியிலுள்ள ஜீவ ஆவியின் விதி, தேவனுடைய ஜீவனின் மாபெரும் வல்லமையுடன் தேவனிலிருந்து வருகிற நம் விடுதலை, பாவவிதியி லிருந்து நம்மை விடுதலைசெய்கிறது. இவ்வாறு தேவனுடைய விதியின் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவதற்கும், தேவனுடைய தெய்வீக ஜீவனை வாழ்ந்துகாட்டுவதற்கும் நமக்குத் திறனளிக்கிறது. நாம் ஜீவ ஆவியின் விதிக்கேற்றபடி வாழ்ந்தால், நம் உறுப்புகளிலுள்ள பாவவிதியிலிருந்து விடுவிக்கப்படுகிறோம், மேலும் தானாகவே ஒரு வெற்றியுள்ள கிறிஸ்தவனாக மாறுகிறோம்.

## முடிவுரைகள்

இப்போது நம்மால் பல்வேறு முடிவுரைகளைக் கூற முடியும்: முதலில் தேவனுடைய விடுதலை என்பது மனித மறுசீரமைப்பி லிருந்து வேறுபடுகிறது. முதலாவதாக, அடிப் படை வித்தியாச மானது. மனித மறுசீரமைப்பு, மனிதனுடைய இயற்கையான நன்மையை ஆதாரமாகக்கொண்டது. ஆனால் தேவனுடைய விடுதலை, தேவனுடைய ஜீவன் மற்றும் தேவனுடைய ஆவி, அதாவது ஜீவனின் ஆவியை ஆதாரமாகக்கொண்டது. அடுத்ததாக, முறைகள் வேறுபடுகிறது. மனித மறுசீரமைப்பு என்பது மனித வலிமையை செயல்படுத்தும் வழியினால், அதாவது, நம் மனித உடலை கடுமையாக வறுத்தி, உணர்ச்சிகளைக் கீழ்ப்படுத்துவதால், மனிதனில் நன்மையை கொண்டுவருவதாகும். தேவனுடைய விடுதலை என்பது அவருடைய ஆவியையும் அவருடைய ஜீவனையும் நம் ஆவிக்குள் வைப்பதால், நம் ஆவியை உயிர்ப்பிப்பதாகும். அப்போது புதிதாக்கும் வேலையை நம் ஆவியிலிருந்து ஆரம்பித்து, முதலில் நம் ஆவியின் பல்வேறு பகுதிகளையும், பின்பு நம் ஆத்துமாவின் பல்வேறு பகுதிகளையும், இறுதியாக நம் பௌதீக உடலையும் புதிதாக்குவதாகும். கடைசியாக, முடிவுகள் வித்தியாசமானவைகளாக இருக்கின்றன. மனித மறுசீரமைப்பின் முடிவு மிகஉயர்ந்த மனித மேன்மை யாகும். இது, தேவனுடைய சுபாவத்தின் தெய்வீக தரத்தை வாழ்ந்துகாட்ட மனிதனுக்கு உதவமுடியாது. தேவனுடைய விடுதலையின் விளைவாக நாம் தேவ-மனிதர்களாக மாறி தேவனுடைய தெய்வீக ஜீவனை வாழ்ந்துகாட்ட முடிகிறது.

இரண்டாவதாக, தேவனுடைய விடுதலை நம்மை நல்ல மனிதர்களாக ஆக்குவதற்கல்ல, மாறாக ஜீவ-மனிதர்களாக ஆக்குவதற்காகவே இருக்கிறது. மொத்தத்தில் இப்பிரபஞ் சத்தில் தேவ-மனிதர்கள், நல்ல மனிதர்கள், தீய மனிதர்கள் ஆகிய மூன்றுவகை மனிதர்கள் இருக்கிறார்கள். தேவனுடைய விடுதலை

நம்மை தீய மனிதர்களாகவோ, நல்ல மனிதர்க ளாகவோ ஆக்குவதற்கல்ல, மாறாக ஜீவ-மனிதர்களாக ஆக்குவதற்காகவே இருக்கிறது.

மூன்றாவதாக, தேவனால் விடுதலையாக்கப்பட்டவர்க ளாகிய நாம் தேவனில் வாழவேண்டும். தேவன் ஜீவனாக இருக்கிறார், மேலும் தேவனுடைய விடுதலை நாம் ஜீவ-மனிதர்களாக மாறுவதற் காகவே இருக்கிறது. ஜீவன் என்பது தேவன்; ஜீவ-மனிதனாக இருப்பதென்றால் தேவ-மனிதனாக இருப்பதாகும். இப்படிப்பட்ட மனிதர்களாகுவதற்கு நாம் தேவனில் வாழவேண்டும். தேவனில் வாழ்வது என்பது ஒரு தெளிவில்லாத போதனை. நாம் தேவனில் வாழ விரும்பினால், நாம் ஜீவ ஆவியின் விதியில் வாழவேண்டும். இது ஆவியில் வாழ்வதற்கு நம்மைக் கோருகிறது, ஏனென்றால் ஜீவ ஆவியின் விதி ஆவியில் இருக்கிறது. இது ஜீவனின் உணர்வில் வாழ்வதற்கும் நம்மைக் கோருகிறது. ஏனென்றால் ஜீவனின் உணர்வு ஜீவஆவியின் விதியினுடைய உணர்வாக இருக்கிறது. நாம் ஜீவனின் உணர்வுக்குக் கீழ்ப்படிந்தால், நாம் ஆவிக்கு அக்கறைசெலுத்தி ஆவியில் வாழ்கிறோம். நாம் ஆவிக்கு அக்கறைசெலுத்தினால், ஜீவ ஆவியின் விதியில் வாழ்கிறோம். நாம் ஜீவ ஆவியின் விதியில் வாழும்போது, நாம் தேவனில் வாழ்கிறோம். இதன் விளைவாக நாம் வாழ்ந்துகாட்டுவது தேவனாக வே இருக்கிறது. தேவன் ஜீவனாக இருக்கிறார்; ஆகையால் நாம் வாழ்ந்துகாட்டுவது ஜீவனாக இருக்கிறது, மேலும் நாம் ஜீவ-மனிதர்களாக மாறுகிறோம்.

நான்காவது, தேவனும் மனிதனும் இணைவதே தேவ னுடைய விடுதலையின் இலக்காகும். நாம் ஜீவ ஆவியின் விதிக்குக் கீழ்ப்படிந்து தேவனில் வாழும்போது, தேவனும் நம்மில் வாழ்கிறார். மேலும் அவரும் நாமும் முற்றும்முடிய ஒன்றாக இணைக்கப்படும்வரை ஒரு நடைமுறைக்குரிய வழியில் நாம் கலந்திணைகிறோம்.

மேலும் உள்ளார்ந்த பக்கத்தில் இரண்டு குறிப்புகள் இருக்கின்றன. முதலாவது நாம் உள்ளான உணர்வைத் தொட வேண்டும், இதற்கு அர்த்தம் உள்ளான உணர்வுக்குக் கீழ்ப்படிவ தாகும். இரண்டாவதாக, நாம் ஐக்கியத்தில் வாழவேண்டும். ஐக்கியம் என்பது ஜீவனின் பாய்ந்தோடுதல். ஐக்கியத்தில் வாழ்வதென்றால், ஜீவனின் ஓட்டத்தில் வாழ்வது. இந்த இரண்டு குறிப்புகளும் நடைமுறை வழியில் ஜீவனை அனுபவமாக்க நமக்குத் திறனளிக்கிறது. நம்மை இந்தக் குறிப்புக்கு கொண்டுவருவதே, மூன்று ஜீவன்களும் நான்கு விதிகளும் என்ற இந்தப் பாடத்தின் குறிக்கோளாகும். நாம் ஒரு நடைமுறை வழியில் உள்ளான உணர்வைத் தொட்டு ஐக்கியத்தில் வாழ்ந்தால், நாம்

தானாகவே, *(1)* பாவத்திலிருந்து விடுதலையடையவும், *(2)* நம்மால் செய்யமுடியாத நல்ல கிரியைகளைச்செய்யவும் *(3)* தேவனுடைய விதியை நிறைவேற்றவும் *(4)* தேவனுடைய ஜீவனை வாழ்ந்துகாட்டவும் முடியும். இறுதியாக, நாம் தேவ-மனிதர்களாகி தேவனுடைய ஜீவனை வெளிப்படுத்துகிறோம். இதுவே தேவனுடைய இரட்சிப்பின் இலக்காகும். மேலும் இது ஜீவனுக்குரிய எல்லாக் காரியங்களையும் உள்ளடக்கியிருக்கிறது.

### அத்தியாயம் பத்து

## ஜீவவிதி

முந்தைய அத்தியாயத்தில் மூன்று ஜீவன்களையும் நான்கு விதிகளையும்பற்றி நாம் பார்த்திருக்கிறோம். இப்போது விசேஷமாக நாம் ஜீவவிதியைப்பற்றிப் பார்க்கலாம். இது முந்தைய அத்தியாயத்தில் ஜீவ ஆவியின் விதி என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. நான்கு விதிகளுள் ஜீவவிதி மட்டுமே தேவனுடைய ஜீவனின் இயல்பான திறமையாகும். இது இயல்பாகவே தேவனுடைய ஜீவனை வாழ்ந்துகாட்டுவதற்கு நமக்குத் திறனளிக்கிறது; ஆகையால் நாம் ஜீவனின் வழியைத் தொட விரும்பினால், ஜீவவிதியைப்பற்றிய தெளிவான அறிவு நம்மிடம் இருக்கவேண்டும்.

### I. வேதவாக்கிய ஆதாரம்

முழு வேதாகமத்திலும், கீழ்க்கண்ட ஐந்து பகுதிகள் மட்டுமே, ஜீவவிதியைப்பற்றி நேரடியாக அல்லது மறைமுகமாக குறிப்பிடுகிறது என்று நம்மால் கூறமுடியும்:

A. *ரோமர் 8:2, "...ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்..."*

இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிற ஜீவ ஆவியின் பிரமாணம் என்பது ஜீவவிதியாக இருக்கிறது. இந்தப் பிரமாணம் எதிலிருந்து வருகிறதோ அந்த ஆவி ஜீவனை உள்ளடக்கி யிருக்கிறது அல்லது அது ஜீவனாகவே இருக்கிறது என்று கூறலாம்; ஆகையால் விதி என்பது ஆவியின் விதியாகும். மேலும் இது ஜீவவிதியாகவும் இருக்கிறது.

B. *எபிரேயர் 8:10, "அந்த நாட்களுக்குப்பின் நான் இஸ்ரவேல் குடும்பத்தாரோடே பண்ணும் உடன்படிக்கை யாவது: என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்; நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்."*

C. *எபிரேயர் 10:16, "அந்த நாட்களுக்குப்பின் நான் அவர்களோடே பண்ணும் உடன்படிக்கையாவது: நான் என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய இருதயங் களில் வைத்து அவைகளை அவர்களுடைய மனதிலே எழுதுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

மேலே குறிப்பிடப்பட்டுள்ள எபிரேயர் 8 மற்றும் 10 ஆகிய இரண்டு பகுதிகளும், முதலாவது "வைத்து" பின்பு "எழுதி" என்று குறிப்பிடுகிறது. மேலும் இரண்டும் மனதையும்,

இருதயத்தையும்பற்றிப் பேசுகிறது; ஆகையால், இவை இரண்டும் ஒரே காரியத்தைப்பற்றி பேசுகிறது. இவை எரேமியா *31:33*-லிருந்து மேற்கோள் காட்டப்பட்டிருக்கிறது.

D. *எரேமியா 31:33, "அந்நாட்களுக்குப் பிற்பாடு நான் இஸ்ரவேல் குடும்பத்தோடே பண்ணப்போகிற உடன் படிக்கையாவது; நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து, அதை அவர்கள் இருதயத்திலே எழுதி, நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமா யிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்."*

E. *எசேக்கியேல் 36:25-28, "அப்பொழுது நான் உங்கள்மேல் சுத்தமான ஜலம் தெளிப்பேன்; நான் உங்க ளுடைய எல்லா அசுத்தங்களையும் உங்களுடைய எல்லா நரகலான விக்கிரகங் களையும் நீக்கி உங்களைச் சுத்த மாக்குவேன், நீங்கள் சுத்தமா வீர்கள். உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். உங்கள் உள்ளத்திலே என் ஆவியை வைத்து, உங்களை என் கட்டளைகளில் நடக்கவும் என் நியாயங்களை கைக்கொள்ளவும் அவைகளின்படி செய்யவும் பண்ணுவேன். உங்கள் பிதாக்களுக்கு நான் கொடுத்த தேசத்திலே நீங்கள் குடியிருப்பீர்கள்; நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள், நான் உங்கள் தேவனாயிருப்பேன்."*

இந்த சில வசனங்கள் குறைந்தது ஐந்து காரியங்களைப் பற்றி பேசுகிறது: (1) சுத்தமான தண்ணீரால் சுத்திகரித்தல், (2) நமக்கு ஒரு புதிய இருதயம் கொடுக்கப்படுதல், (3) ஒரு புதிய ஆவி கொடுக்கப்படுதல், (4) நம் கல்லான இருதயம் எடுக்கப்பட்டு சதையான இருதயம் கொடுக்கப்படுதல், (5) நம்முள் தேவனுடைய ஆவி வைக்கப்படுதல். இந்த ஐந்தையும் ஒன்றாக சேர்ப்பதின் விளைவாக நாம் தேவனுடைய சட்டங்களில் நடக்கவும் அவருடைய கட்டளைகளைக் கைக்கொண்டு அதைச் செய்யவும் ஏவப்படுகிறோம். நாம் அவருடைய மக்களாயிருப்போம் அவர் நம் தேவனாயிருப்பார். தேவ னுடைய சித்தத்தைச் செய்யவும், தேவனை பிரியப்படுத்தவும், ஒரு புதிய வலிமையை பரிசுத்த ஆவியானவர் நம்முள் தருகிறார் என்பதே இதன் அர்த்தமாகும். இதனால் அவர் நம் தேவனாயிருக்கமுடியும், நாம் அவருடைய மக்களாயிருக்க முடியும். இவ்வாறு இங்கு குறிப்பிடப்பட்டிருக்கிற விளைவு, எரேமியா *31:33*-ல் குறிப்பிடப்பட்டிருக்கிற விளைவைப் போன்றதே ஆகும்.

## II. ஜீவவிதியின் ஆரம்பம்—மறுபிறப்பு

ஜீவவிதியின் ஆரம்பத்தைப்பற்றி நாம் பேச விரும்பினால், நாம் மறுபிறப்பிலிருந்து தொடங்கவேண்டும், ஏனெனில் மறுபிறப்பு நம் ஆவிக்குள் தேவனுடைய ஜீவனை பெற்றுக் கொள்வதாகும். நாம் மறு பிறப்படைந்தபோது நம் ஆவியில் தேவனுடைய ஜீவனைப் பெற்றோம்; தேவனுடைய ஜீவன் நம்மிடம் இருக்கும்போது இயல்பாகவே தேவனுடைய ஜீவனிட மிருந்து வருகிற ஜீவவிதியும் நம்மிடமிருக்கிறது.

## A. மனிதனின் படைப்பு

மறுபிறப்பைப்பற்றிப் பேசும்போது, மனிதனின் படைப் புடன் நாம் ஆரம்பிக்க வேண்டும். மனிதன் தேவனால் படைக்கப்பட்ட போது அவனிடம் நல்ல, நேர்மையான, மனித ஜீவன் மட்டும் இருந்தது; தேவனுடைய தெய்வீகமும், நித்தியமுமான ஜீவன் அவனிடமில்லை. எனினும் தேவன் மனிதனைப் படைத்தபோது, தம் ஜீவனை மனிதனுடன் இழைந்திணைத்து, மனிதனோடு சேர்ந்திணைந்து, தேவன், மனிதன் ஆகியோரின் ஒருமை என்ற இலக்கை அடைவதே தேவனுடைய மையக் குறிக்கோளாக இருந்தது. ஆகையால் தேவன் மனிதனைப் படைத்தபோது, மனித னுடைய உடல் மற்றும் ஆத்துமாவுடன் அவர் மனிதனுக்காக ஒரு ஆவியையும் விசேஷமாகப் படைத்தார். இந்த ஆவிதான் மனிதன் தேவனுடைய ஜீவனைப் பெறுவதற்கான உறுப்பாக இருக்கிறது. ஆவியாக இருக்கிற தேவனைத் தொடர்புகொள்ள இந்த ஆவியை நாம் பயன்படுத்தும்போது அவருடைய ஜீவனைப் பெறமுடியும். மேலும் அவரோடு சேர்ந்திணைந்து தேவனுடைய மையக் குறிக்கோளை நிறைவேற்றுகிறோம்.

## B. மனிதனின் வீழ்ச்சி

ஆனால் தேவனுடைய ஜீவனைப் பெறுவதற்கு முன்பே மனிதன் வீழ்ச்சியடைந்தான். மனித வீழ்ச்சியின் மிக முக்கியமான காரணி, அது மனிதனைப் பாவம்செய்யவும், தேவனைப் புண்படுத்தவும் செய்தது என்பதல்ல, மாறாக அது அவனுடைய ஆவியை மரிக்கச்செய்தது அல்லது தேவனுடைய ஜீவனை மனிதன் பெறும் உறுப்புக்குள் மரணத்தைக் கொண்டுவந்தது என்பதேயாகும். ஆவி மரித் திருக்கிறது என்று சொன்னால், ஆவி இல்லாமல் போய் விட்டது என்று அர்த்தமல்ல, மாறாக தேவனோடு தொடர்பு கொள்ளும் அதன் செயல்பாட்டை அது இழந்துவிட்டது, தேவனிடமிருந்து பிரிந்துவிட்டது என்று அர்த்தமாகும்; இவ்வாறு மனிதன் ஒருபோதும் தேவனோடு ஐக்கியம்கொள்ள முடியாதவனானான். இதுமுதல் தேவனைத் தொடர்புகொண்டு அவருடைய ஜீவனைப் பெற மனிதனால் தன்

ஆவியைப் பயன்படுத்த முடியவில்லை.

இந்த நேரத்தில், இரண்டு பக்கங்களில் மனிதனுக்கு தேவை இருந்தது: ஒருபக்கத்தில் வீழ்ச்சியின் விளைவாக அவன் செய்த பாவத்தோடு தேவன் இடைபடவேண்டிய தேவை இருந்தது; மறுபக்கத்தில், அவன் தேவனுடைய ஜீவனைப் பெற்று மனிதனைப் படைத்ததில் தேவனுடைய மையக் குறிக்கோளை நிறைவேற்ற, அவனுடைய மரித்த ஆவிக்குள் ஜீவனைக் கொடுப்பதால், தேவன் இன்னும்கூட அவனை மறுபடிபிறப்பிக்கவேண்டிய தேவை இருந்தது.

## C. தேவனுடைய விடுதலையின் வழி

இந்தத் தேவைகளின் நிமித்தமாக, தேவனுடைய விடுதலையின் வழி எதிர்மறையான, நேர்மறையான இரண்டு அம்சங்களைக் கொண்டிருக்கின்றன. எதிர்மறையான பக்கத்தில், சிலுவையில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து சிந்தின அவருடைய இரத்தத்தின்மூலம் மீட்பு நிறைவேற்றப்பட்டது, மனிதனுடைய பாவப்பிரச்சினை தீர்க்கப்பட்டது. நேர்மறையான பக்கத்தில், கர்த்தராகிய இயேசுவின் மரணத்தின்மூலம் தேவனுடைய ஜீவன் விடுவிக்கப்பட்டது; பின்பு, கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதல்மூலம் தேவனுடைய ஜீவன் பரிசுத்த ஆவியானவரில் வைக்கப்பட்டது; இறுதியாக, இந்தப் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் நுழைந்து, தேவனுடைய தெய்வீகமும் நித்தியமுமான ஜீவனை நாம் பெறச்செய்கிறார்.

இவ்வாறு பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஜீவனை நாம் பெறச்செய்கிறார் என்பதற்கு அர்த்தம் அவர் நம்மை மறுபடி பிறப்பிக்கிறார் என்பதாகும். ஆனால் பரிசுத்த ஆவியானவர் எப்படி நம்மை மறுபடிபிறப்பிக்கிறார்? இது தேவனுடைய வார்த்தையினால் நடைபெறுகிறது. பரிசுத்த ஆவியானவர் முதலில் தேவனுடைய சுவிசேஷத்தின் வார்த்தைகளைக் கேட்க நம் சுற்றுச்சூழலில் நமக்காக ஒரு சந்தர்ப்பத்தை ஆயத்தப்படுத்துகிறார். பின்பு வார்த்தைகளினால், நம்மில் அவர் பிரகாசித்து நம்மை அசைக்கிறார்; நம் பாவங்களை நாம் அங்கீகரித்து நம்மை நாமே கண்டித்து மனந்திரும்பி விசுவாசிக்கும்படிச் செய்கிறார், இதனால் தேவனுடைய வார்த்தைகளை ஏற்றுக்கொண்டு தேவனுடைய ஜீவனைப் பெற்றுக்கொள்கிறோம். தேவனுடைய வார்த்தை களில் தேவனுடைய ஜீவன் மறைந்திருக்கிறது, மேலும் தேவனுடைய வார்த்தைகள் "ஜீவனாயும் இருக்கிறது" (யோவான் 6:63). நாம் தேவனுடைய வார்த்தைகளைப் பெறுவதால் தேவனுடைய ஜீவன் நமக்குள் நுழைகிறது, மேலும் நம்மை மறுபடிபிறப்பிக்கிறது.

ஆகையால் மறுபிறப்பு என்பது மனிதன் தன் சொந்த ஜீவனுடன் தேவனுடைய ஜீவனையும் பெற்றுக்கொள்கிறான்

என்பதைத் தவிர வேறொன்றுமில்லை. இவ்வாறு நாம் தேவனுடைய ஜீவனைப் பெறும்போது, நாம் தேவனுடைய பிள்ளைகளாகும்படி ஓர் அதிகாரத்தையும் பெறுகிறோம் (யோவான் *1:12*). அதிகாரம் தேவனுடைய ஜீவனாகவே இருக்கிறது; ஆகையால் இந்த ஜீவன் நம்மிடம் இருக்கும்போது, தேவனுடைய பிள்ளைகளாக இருப்பதற்கான அதிகாரம் நம்மிடமிருக்கிறது.

நாம் தேவனுடைய ஜீவனைக் கொண்டிருந்து தேவனுடைய பிள்ளைகளாகும்போது, இயல்பாகவே தேவனுடைய சுபாவம் நம்மிடம் இருக்கிறது (*2 பேதுரு 1:4*). நாம் இந்த ஜீவனாலும், இந்த ஜீவனிலுள்ள சுபாவத்தாலும் வாழ்ந்தால் நாம் தேவனைப் போல மாறமுடியும், தேவனுடைய சாயலை வாழ்ந்துகாட்ட முடியும்.

தேவனைப்போல நம்மை மாற்றுவதற்கு நம்முள்ளிருக்கும் அவருடைய ஜீவன் எப்படி வேலைசெய்கிறது? அது மையத்திலிருந்து சுற்றுவட்டத்திற்கும் அல்லது ஆவியிலிருந்து ஆத்துமாவிற்கும், பின்பு உடலுக்கும் வேலைசெய்து அதனுடைய வெளியார்ந்த விரிவாக்கத்தை நிறைவேற்றுகிறது. தேவனுடைய ஜீவன் நமக்குள் நுழைகிறபோது, அது முதலாவது நம் ஆவிக்குள் நுழைகிறது, நம் மரித்த ஆவியை உயிர்ப்பிக்கிறது, மேலும் அதை உயிர்த்துடிப்புடையதாக, பசுமையானதாக, வலிமையானதாக, வீரியமுள்ளதாக, ஆக்குகிறது, மேலும் தேவனைத் தொட்டு, தேவனை உணர்ந்து, தேவனோடு இனிமையான ஐக்கியம் கொள்ளச்செய்கிறது. பின்பு இது நம் ஆவியிலிருந்து படிப்படியாக நம் ஆத்துமாவிலுள்ள ஒவ்வொரு பகுதிகளுக்குள்ளும் பரவுகிறது, மேலும் நம் எண்ணங்கள், உணர்ச்சிகள், தீர்மானங்கள், ஆகியவைகளைப் படிப்படியாக தேவனுக் குரியவைகளைப்போல மாற்றுகிறது, அதாவது தேவனுடைய வாசனையைக் கொண்டிருக்கச்செய்கிறது; நம் கோபத்தில்கூட, தேவனுடைய சாயலுக்குரிய ஏதோவொன்று, அதாவது தேவனுடைய வாசனைக்குரிய ஏதோவொன்று இருக்கிறது. ஆ, இது என்னே ஆச்சரியமான மாற்றம்!

நம் உடல்கூட ஜீவ மூலக்கூறைக் கொண்டிருக்கும்படி, இந்த ஜீவன் நம் உடலுக்குள் விரிவடைகிறவரை, தொடர்ச்சி யாக வேலைசெய்யும். இதைத்தான் நம்மில் குடியிருக்கிற தேவனுடைய ஆவி, நம் சாவுக்கேதுவான உடல்களை உயிர்ப்பிக்க முடியும் என்று ரோமர் *8:11* பேசுகிறது.

நம்முள் இருக்கிற தேவனுடைய ஜீவன், நம் ஆவி, ஆத்துமா, உடல் அல்லது நம் முழு ஆள்தத்துவமும், தேவனுடைய சுபாவத்தாலும் தேவனுடைய மூலக்கூறாலும் தேவனுடைய வாசனையாலும் முழுவதுமாக நிரப்பப்படும் வரை, நாம்

எடுத்துக்கொள்ளப்பட்டு உருமாற்றமடையும்வரை, நாம் மகிமைக்குள் நுழைந்து அவரைப்போல முழுவதுமாக மாறும்வரை, நம்முள் வேலைசெய்து அதிகமதிகமாக விரிவடைகிறது.

தேவனுடைய ஜீவன் நம்மைப் புறக்கணித்துவிட்டு கட்டாயத்தின் பேரில் நம்முள்ளாக தொடர்ந்து வேலைசெய்து விரிவடைவதில்லை. மாறாக அது நம் உணர்ச்சியின் சார்ந்து கொள்ளுதலையும் நம் மனதின் ஒத்துழைப்பையும் நம் சித்தத்தின் பணிந்தடங்குதலையும் கோருகிறது. நாம் அதன் வேலைசெய்தலை மறுதலித்தால், அதாவது நாம் அதை நெருக்கமாகப் பின்தொடர்ந்து அதோடு ஒத்துழைக்காவிட்டால், அதன் வல்லமையைக் காட்டுவதற்கு அல்லது அதன் செயல்பாட்டை வெளிப்படுத்துவதற்கு அதற்கு எந்த வழியும் இருக்காது. மனிதன் உணர்ச்சி, மனம், சித்தம் ஆகியவைகளையுடைய ஜீவிக்கிற நபராக இருப்பதால், அவன் ஒத்துழைப்பானா அவனால் ஒத்துழைக்கமுடியுமா என்ற கேள்வி ஒரு பிரச்சினையாகவே இருக்கிறது. எனவே தேவன் நம்மை மறுபடிபிறப்பிக்கிறபோது, அவருடைய ஜீவனை நமக்குத் தருவதோடு ஒரு புதிய இருதயத்தையும் நமக்குத் தருகிறார், மேலும் ஒரு புதிய ஆவியையும் நம்முள் வைக்கிறார் (எசே. 36:26); இவ்வாறு நாம் விரும்புகிறவர்களாகவும், ஒத்துழைக்கக்கிறவர்களாகவும் ஆக்கப்படுகிறோம்.

இருதயம் நம் விருப்பத்தோடு தொடர்புடையது, ஆனால் ஆவி திறமையைப்பற்றி காரியம். நம் இயற்கையான இருதயம் தேவனுக்கு எதிராக கலகம்செய்ததால், கடினமாக அல்லது பழமையாக மாறிவிட்டது; ஆகையால் அது "கல்லான இருதயம்" அல்லது "பழைய இருதயம்" என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பழைய இருதயம் தேவனுக்கு எதிரானது, தேவனை விரும்பாதது, மேலும் அது தேவனோடு ஒத்துழைக்க விருப்பமில்லாதது. இப்போது தேவன் நமக்கு ஒரு புதிய இருதயத்தை தருகிறார். அது நம் பழைய இருதயத்தோடு கூடுதலாக, வேறொரு இருதயத்தை நமக்குத் தருகிறார் என்பதல்ல, மாறாக பரிசுத்த ஆவியானவர் மறுபிறப்பின்மூலம், நம் கல்லான இருதயத்தை மிருதுவாக்கி "சதையான இருதயமாக" மாற்றுகிறார், இவ்வாறு அது புதிதாகி புதிய இருதயமாக மாறுகிறது. இந்தப் புதிய இருதயம் தேவனைச் சார்ந்துகொள்கிறது, தேவனுக்காகவும், தேவனுடைய காரியங்களுக்காகவும் பிரியம் கொண்டிருக்கிறது. இது தேவனைச் சார்ந்துகொள்வதற்கும், தேவனை நேசிப்பதற்குமான ஒரு புதிய உறுப்பாயிருக்கிறது; இது தேவனோடு ஒத்துழைக்க நம்மை விருப்பமுள்ளவர்களாக்குகிறது. மேலும் தேவனுடைய ஜீவன் உள்ளிருந்து வெளியே விடுதலையோடு விரிவடைந்து வேலை செய்ய அனுமதிக்க நம்மை விருப்பமுள்ளவர்களாக்குகிறது.

இயற்கையாகவே, நம்மிடமிருந்த ஆவி தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டதால், அது மரித்து பழையதாக மாறியது; ஆகையால் அது "பழைய ஆவி" என்று அழைக்கப்படுகிறது. இந்தப் பழைய ஆவி தேவனோடு ஐக்கியம்கொண்டு, தேவனைத் தொடர்பு கொள்ளும் தன் ஆற்றலை இழந்துவிட்ட தால், இயல்பாகவே தேவனோடு ஒத்துழைக்க அதற்கு எந்த வழியுமில்லை. இப்போது தேவன் நமக்கு ஒரு "புதிய ஆவி"யைத் தருகிறார், இதற்கு அர்த்தம் நம் பழைய ஆவியோடுகூட வேறொரு ஆவியை நமக்குத் தருகிறார் என்பதல்ல, மாறாக பரிசுத்த ஆவியானவரின் மறுபிறப்பின்மூலம் நம் மரித்த ஆவியை ஜீவிக்கிற ஆவியாக உயிர்ப்பிக்கிறார், இவ்வாறு அதை ஒரு புதிய ஆவியாக புதுப்பிக்கிறார். இந்தப் புதிய ஆவி, தேவனோடு தொடர்புகொள்ள முடியும், தேவனையும் ஆவிக்குரிய காரியங்களையும் புரிந்துகொள்ள முடியும். இது தேவனைத் தொடர்புகொள்வதற்கான ஒரு புதிய உறுப்பு; இது தேவனோடு ஒத்துழைக்கவும் தேவனோடு ஐக்கியம்கொள்வதின்மூலம், நம்முள் இருக்கிற தேவனுடைய ஜீவன் புறம்பாக விரிவடைந்து, வேலைசெய்ய, அனுமதிக்கவும் நமக்குத் திறனளிக்கிறது.

ஒரு புதிய இருதயத்துடன் தேவனோடு ஒத்துழைக்க நாம் *விரும்புகிறோம்,* மேலும் ஒரு புதிய ஆவியுடன் தேவனோடு ஒத்துழைக்க நம்மால் *முடியும்.* எனினும் ஒரு புதிய இருதயமும், ஒரு புதிய ஆவியும் தேவன்மேல் தாகங்கொண்டு, தேவனைத் தொடர்புகொண்டு, நம்முள் இருக்கிற தேவனுடைய ஜீவன் விடுதலையோடு புறம்பாக விரிவடைந்து வேலைசெய்ய அனுமதிக்க மட்டுமே நமக்குத் திறனளிக்கிறது; அவைகள் தேவன் என்ற தெய்வீகத் தரத்தை நாம் சென்றடைகிற நம்மீதான தேவனுடைய எல்லையற்ற கோரிக்கைக்குப் பதிலளிக்கமுடியாது. ஆகையால் தேவன் நம்மை மறுபடிபிறப்பிக்கிறபோது, கூடுதலாக ஒரு மிக மகிமையான மேலோங்கும் காரியத்தையும் அவர் செய்கிறார்: அவர் தம் சொந்த ஆவியை, அதாவது பரிசுத்த ஆவியை நம் புதிய ஆவிக்குள் வைக்கிறார். இந்த பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் ஊனுருவாக இருக்கிறார், மேலும் கிறிஸ்து தேவனுடைய ஊனுருவாக இருக்கிறார். ஆகையால் பரிசுத்த ஆவியானவர் நமக்குள் நுழைவது, மூவொரு தேவன் நமக்குள் நுழைவதாகும். இந்த வழியில் படைப்பவரும், படைப்பும் இணைக்கப்பட்டிருக்கிறார்கள். ஆ, இது உண்மை யாகவே நம் பாராட்டுக்குரியது. மேலும் தேவனுடைய ஆவியானவர், நித்திய ஆவியானவர், வரம்பற்ற ஆவியானவர், எல்லையற்ற செயல்பாடு களையும் மேலோங்கும் வலிமையையும் கொண்டிருக்கிறார். எனவே அவர் நம் புதிய ஆவியில் குடியிருக்கிறபோது, நம்மை

அபிஷேகித்து நிரப்புவதற்கும், நம்முள் வேலைசெய்து அசைவதற்கும், தம் எல்லையற்ற வல்லமையை அவர் பயன்படுத்த முடியும்; இவ்வாறு நம்மேலுள்ள தேவனுடைய எல்லையற்ற கோரிக்கைக்கு பதிலளிக்க நமக்கு அவர் திறனளிக்கிறார், அதனால் நம் ஆவியிலிருந்து நம் ஆத்துமாவின்மூலமாக, நம் உடலுக்குள் தொடர்ந்து தேவனுடைய ஜீவன் விரிவடைய அனுமதிக்கப் படுகிறது. இறுதியாக அவர் முழுவதும் தேவனைப்போலவே இருக்கும் மகிமையான நிலையை நாம் வந்தடையச் செய்கிறார்! அல்லேலுயா!

ஒரு காரியம் இங்கு நமக்கு மிகத்தெளிவாக வெளிப் படுத்தப்பட்டிருக்கிறது: தேவனுடைய விடுதலையின் வழியும், மனிதனுடைய சுய-முன்னேற்றமும் அடிப்படையில் வித்தியாச மானவைகள். மனித னுடைய சுய-முன்னேற்றம் என்பது மனிதனிடம் இயற்கையாக இருக்கிற, அதாவது அதன் திறமைக ளோடுகூடிய அவனுடைய ஆத்துமா மற்றும் அவனுடைய உடலின்மேல் செய்யப்படுகிற ஒரு வேலையாகும். முன்னேற்றம் வெற்றிகரமாக இருந்தாலும், அது இன்னும் மிகவும் எல்லைக்குட் பட்டிருக்கிறது, ஏனென்றால் மனிதனின் வல்லமை எல்லைக்குட் பட்டிருக்கிறது. ஆனால் தேவனுடைய விடுதலையைப் பொறுத்தவரை அது நம் ஆத்துமாவின் ஒவ்வொரு பகுதியினூடாகக் கடந்துசென்று, ஒவ்வொரு பகுதியையும் படிப்படியாகப் புதுப்பித்து, உடலுக்குள் வந்தடைந்தாலும் தேவனுடைய ஆவியானவர் தம்மோடுகூட தேவனுடைய ஜீவனைக் கொண்டு வந்து நம் ஆவிக்குள் கூட்டிச்சேர்க்கிறார் என்பதே முக்கியமான குறிப்பாகும். தெய்வீக, எல்லையற்ற வல்லமையைக் கொண்டிருப் பதால், அது தேவனுடைய எல்லையற்ற கோரிக்கைக்கு முழுவதும் பதிலளிக்கக்கூடியதாக இருக்கிறது. இது ஒரு கூட்டிச்சேர்த்தல், ஒரு முன்னேற்றமல்ல. முன்னேற்றத் திற்கு முயற்சிசெய்வ தென்றால் நம்மிடம் ஏற்கெனவே இருக்கிற காரியங்களை முன்னேற்றுவது, மேலும் இது எல்லைக்குட்பட்டது; ஆனால் தேவனுடைய ஏதோவொன்றைச் சேர்ப்பது எல்லையற்றது.

நாம் இப்போது சொன்னது, மறுபிறப்பு தேவனுடைய ஜீவனை நாம் பெற்றுக்கொள்ளச்செய்கிறது என்பதை நாம் தெளிவாகப் பார்க்கச்செய்ய வேண்டும். இந்த ஜீவனில் ஒரு இயல்பான செயல்பாடு அடங்கியிருக்கிறது. மேலும் இந்த ஜீவனுடைய இந்த இயல்பான செயல்பாடு "ஜீவவிதி" ஆக இருக்கிறது. இவ்வாறு தேவனுடைய ஜீவன் இந்த ஜீவ விதியின் ஊற்றாகவும், மறுபிறப்பு இந்த ஜீவவிதியின் ஆரம்பமாக இருக்கிறது. இந்த ஜீவவிதி தேவனுடைய ஜீவனிலிருந்து வந்தாலும் மறுபிறப்பின் மூலமாகத்தான் அது நமக்குள் நுழைகிறது.

## III. ஜீவவிதியின் அர்த்தம்

ஜீவவிதியின் அர்த்தத்தை நாம் அறியவேண்டுமானால், விதி என்றால் என்ன என்பதை நாம் அறியவேண்டும். ஒரு விதி என்பது ஒரு இயல்பான ஒழுங்குமுறை, அதாவது ஒரு நிலையான மாறாத சட்டம். ஒரு விதி அவசியம் ஜீவனி லிருந்துதான் வரவேண்டும் என்பதல்ல, ஆனால் ஒரு ஜீவன் நிச்சயமாக ஒரு விதியோடு இணைந்து செல்கிறது. ஜீவனோடு இணைந்து செல்லுகிற இந்த விதி, ஜீவவிதி என்று அழைக்கப் படுகிறது. ஒரு குறிப்பிட்ட ஜீவனின் விதி, அந்த குறிப்பிட்ட ஜீவனுடைய இயல்பான குணாதிசயமாகவும், உள்ளான செயல்பாடாகவும் இருக்கிறது. உதாரணமாக, பூனைகள் எலிகளைப் பிடிக்கமுடியும். நாய்கள் இரவில் காவல்காக்க முடியும், அல்லது நம் காது கேட்கமுடியும், நம் மூக்கு நுகர முடியும், நம் நாக்கு சுவைக்க முடியும், நம் வயிறு ஜீரணிக்க முடியும். இந்த எல்லா ஆற்றல் களும் ஒரு ஜீவனுடைய இயல்பான குணாதிசயங்களும், உள்ளான செயல்பாடுகளுமாகும். எந்த ஒரு குறிப்பிட்ட ஜீவன் இருந்து, அது விடுதலையோடு இருக்கும்வரை, அது இயல்பாகவே, தன் குணாதிசயங்களை அபிவிருத்திசெய்யவும், தன் ஆற்றல்களை வெளியாக்கவும் முடியும். மனித போதனையோ, தூண்டுதலோ அதற்குத் தேவையில்லை; மாறாக எந்தவித முயற்சியு மில்லாமல் மிக இயல்பாகவே அது அபிவிருத்தியடைகிறது. ஜீவனிலுள்ள இப்படிப்பட்ட இயல்பான குணாதிசயங்களும், உள்ளியல்பான திறமைகளும் அந்த ஜீவனின் விதியைக் கட்டியமைக்கிறது.

தேவனுடைய ஜீவன் என்பது மிக உயர்வான ஜீவன்; இது மேன்மை யான ஜீவனாகும்; ஆகையால் இந்த ஜீவனின் குணாதிசயங்களும் திறமைகளும் நிச்சயமாக மிக உயர்வான தாகவும் மேன்மையான தாகவும்தான் இருக்கவேண்டும். இந்த உயர்வான, மேன்மையான குணாதிசயங்களும் திறமைகளும் தேவனுடைய ஜீவவிதியைக் கட்டியமைப்பதால், இந்த விதி இயல்பாகவே மிக உயர்வானதாகவும் மேன்மையானதாகவும் இருக்கிறது. மறுபிறப்பினால் நாம் தேவனுடைய ஜீவனைப் பெற்றுக்கொண்டதால், இந்த ஜீவனின் மிக உயர்வானதும் மேன்மையானதுமான விதியை, தேவனுடைய ஜீவனிலிருந்து இயல்பாக நாம் பெற்றுக்கொண்டோம்.

*ஜீவன் என்றால் என்ன* என்ற முதல் அத்தியாயத்தில், தேவனுடைய ஜீவன் மட்டுமே ஜீவன் என்று நாம் கூறினோம்; ஆகையால் இப்போது நாம் பேசுகிற இந்த ஜீவவிதி, விசேஷ மாக தேவனுடைய ஜீவனின் விதியைக் குறிப்பிடுகிறது.

ஜீவவிதி என்பது விசேஷமாக, புதிய உடன்படிக்கையில்

தேவன் நமக்குத் தருகிற ஒன்றாகும். இது சீனாய் மலையில் தேவனால் கொடுக்கப்பட்ட விதிகளிலிருந்து மிகவும் வித்தியாசமானது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில், மனிதனுக்கு வெளியே கற்பலகைகளின்மேல் எழுதப்பட்ட ஒரு விதியை தேவன் கொடுத்தார். அந்த விதி ஒரு புறம்பான விதி, அதாவது எழுத்துக்களாலான ஒரு விதி. அது வெளியார்ந்த ரீதியில் சட்டத்திற்குப்பின் சட்டமாக மனிதன் எதைச்செய்ய வேண்டும், எதைச்செய்யக்கூடாது என்று கோருகிற, மனிதன் மேல் சுமத்தப்பட்ட நிபந்தனையாக இருந்தது. ஆனால் அதன் விளைவு ஒன்றுமில்லை; ஒருவரும் அதைக் கடைபிடிக்க முடியவில்லை; விதி நன்மையானதாக இருந்தாலும், மனிதன் தீமையாகவும், மரித்தும் இருந்ததால், அந்த விதியின் கோரிக்கைகளை நிறைவேற்றும் ஜீவனின் வல்லமை அவனிடத்தில் இல்லை. மாறாக அவன் விதியினுடைய ஆக்கினைத் தீர்ப்பின்கீழ் வீழ்ந்தான். ரோமர் *8:3* “...மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததை...” என்று கூறும்போது இதைக் குறிப்பிடுகிறது.

புதிய ஏற்பாட்டு யுகத்தில், தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலம் நம்மை மறுபடிபிறப்பிக்கிறபோது, ஜீவவிதியோடு இணைந்து செல்லுகிற தம் சொந்த ஜீவனை அவர் நமக்குள் வைக்கிறார். இந்த ஜீவவிதி உள்ளார்ந்த விதி, இது புதிய ஏற்பாட்டுக் காலத்தில் நமக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய விசேஷமான கொடையாகும். இது பழைய ஏற்பாட்டில் “...நான் என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் உள்ளத்திலே வைத்து...” *(எரே. 31:33)* என்ற தேவனால் எழுதப்பட்ட வாக்குத்தத்தத்தை நிறைவேற்றுகிறது.

இந்த ஜீவவிதி நம்முள் வைக்கப்பட்டிருக்கிறது; ஆகை யால் இதன் இருப்பிடத்தைப் பொறுத்தவரை, இது ஓர் உள்ளார்ந்த விதி. இது மனிதனுக்கு வெளியே புறம்பான விதியாக இருந்த பழைய ஏற்பாட்டின் விதியைப்போன்ற தல்ல. மேலும் இந்த ஜீவவிதி தேவனுடைய ஜீவனிலிருந்து வருகிறதாகவும், தேவனுடைய ஜீவனுக்கு உரியதாகவும் இருக்கிறது; ஆகையால் இதன் சுபாவத்தின்படி, இது ஒரு ஜீவவிதியாகும்; எனவே இது தேவையை நிரப்பமுடியும். இது எழுத்துக்களாலானதும், தேவையை நிரப்பமுடியாத கோரிக்கையை மட்டும் உடையதுமான, பழைய ஏற்பாட்டு விதியைப் போன்றதல்ல. நம்மிலுள்ள இந்த ஜீவவிதி, அதாவது தேவனுடைய ஜீவனின் இயற்கையான குணாதிசயத்தையும், திறமையையும் உடைய இந்த விதி, தேவ னுடைய ஜீவனுக்குள் உள்ள எல்லா உள்ளடக்கத்தையும், ஒவ்வொரு காரியமாக மிக இயல்பாகவே சீரமைக்கக்கூடியதாக இருக்கிறது. இந்தச் சீரமைத்தலின் விளைவு, தேவனுடைய புறம்பான விதியின்

கோரிக்கைக்கு சரியாக பதிலளிக்கிறது.

ஜீவவிதி எவ்வாறு செயல்படுகிறது என்பதை விளக்க, இரண்டு எடுத்துக்காட்டுகளை நாம் இப்போது உபயோகிக் கலாம். வாடிப்போன ஒரு மாமரத்தை பரிசீலிக்கலாம். "நீ பச்சை இலைகளைத் தரவேண்டும், வெள்ளை மலர்களை மலர்ந்திட வேண்டும், கனிகளைக் கொடுக்க வேண்டும்" என்று கோருகிற சில விதிகளை நாம் அதற்கு முன் வைக்கிறோம் என்று வைத்துக் கொள்வோம். வருடத்தின் ஆரம்பத்திலிருந்து வருடத்தின் முடிவுவரை இப்படிப்பட்ட கோரிக்கைகளை வைத்தாலும், அவைகள் முற்றும்முடிய பயனற்றதும் வீணானதுமாகும் என்று நமக்குத் தெரியும், ஏனென்றால் அந்த மரம் வாடிப்போயிருப்பதால், இப்படிப்பட்ட புறம்பான விதிகளின் கோரிக்கைகளுக்கு பதிலளிக்கிற ஜீவனின் வல்லமை அதற்கு இல்லை. ஆனால் அதற்குள் ஜீவனை உட்செலுத்தி அதற்கு ஜீவன் வரும்படி மறுசீரமைத்தால், அதனிடம் வெளியார்ந்தரீதியில் எந்தக் காரியத் தையும் கோராவிட்டாலும், அந்த ஜீவன் இயல்பான திறமையைக் கொண்டிருக்கும், அந்தப் புறம்பான விதி கோருகிறதற்கும் அதிகமாக, அந்த மரம் பச்சை இலைகளையும், மலர்களையும், பருவத்தில் கனிகளையும் கொடுக்க அதற்குத் திறனளிக்கிறது. இதுவே ஜீவவிதியின் செயல்பாடாகும்.

இப்போது ஒரு மரித்த மனிதனைப் பார்த்து "நீ சுவாசிக்க வேண்டும்; நீ சாப்பிட வேண்டும்; நீ தூங்க வேண்டும்; நீ அசைய வேண்டும்" என்று நாம் கோருவதாக வைத்துக் கொள்வோம். இந்த மரித்த மனிதன்மீதான இப்படிப்பட்ட விதிகளின் கோரிக்கைகளுக்கு எந்தப் பலனும் இருக்காது என்று நமக்குத் தெரியும்; அவைகளில் ஒன்றும் நிறை வேற்றப்பட முடியாது. ஆனால் அவனுக்குள் உயிர்த்தெழுந்த ஜீவனை நாம் வைத்து, அவனை உயிரோடு கொண்டுவந்தால், அவன் மிக இயல்பாகவே சுவாசிக்க, சாப்பிட, தூங்க, அசைய, விரும்புவான். இது ஜீவவிதியின் செயல்பாட்டினால் ஏற்படுகிறது.

இந்த இரண்டு உதாரணங்களிலிருந்து, தேவனுக்கு முன்பாக நம் முழு ஆவிக்குரிய வாழ்க்கையை, நம் சொந்த முயற்சியினாலும் நிறைவேற்ற முடியாது, மிகவும் முயற்சிசெய்து சுய-முன்னேற்றத்தினாலும் சாதிக்க முடியாது என்பதை நாம் தெளிவாகப் பார்க்கமுடியும். மாறாக இது நாம் ஏற்கெனவே நமக்குள் பெற்றுக்கொண்ட தேவனுடைய ஜீவனின் பொறுப்பாகும். இந்த ஜீவவிதியோடு இணைந்து சென்ற தேவனுடைய ஜீவன் நம் ஆவியில் குடியிருக்கிறது. நம் ஆவியிலுள்ள இந்த ஜீவவிதியின்படி நாம் வாழ்ந்து செயல்பட்டால், இந்த ஜீவவிதி தேவனுடைய ஜீவனுக்குள் இருக்கிற எல்லா உள்ளடக்கத்தையும்,

ஒவ்வொரு காரியமாக மிகவும் இயல்பாகவே நம்முள்ளிருந்து வெளியே சீரமைக்க முடியும். இது தேவனுடைய புறம்பான விதியின் கோரிக் கைக்கு மிகவும் ஒத்திருக்கும், மேலும் எந்தப் பற்றாக்குறையுமில்லாமல் இன்னும் இது அதற்கு அதிகமாக இருக்கும். *"மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மி டத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்"*என்று ரோமர் *8:4* இதைப்பற்றிப் பேசுகிறது.

நம்முள்ளிருக்கிற இருதயப்பலகையின்மேல் எழுதப்பட்ட இந்த ஜீவவிதி ரோமர் *8:2*-ல் *"ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்"* என்று அழைக்கப்படுகிறது. இதற்கு அர்த்தம் இந்த விதி தேவனுடைய ஜீவனிலிருந்து வருவதும், தேவ னுடைய ஜீவனுக்குரியதும் மட்டுமல்ல, இது தேவனுடைய ஆவியை சார்ந்திருக்கிறதும், தேவனுடைய ஆவிக்கு உரியதாகவும் இருக்கிறது. இது ஏனென்றால், தேவனுடைய ஜீவன் தேவனுடைய ஆவியைச் சார்ந்திருக்கிறது, மேலும் தேவனுடைய ஆவி தேவனுடைய ஜீவனாகவும் இருக்கிறது என்று கூறமுடியும். நாம் தேவனுடைய ஜீவனைப்பற்றிப் பேசும்போது, நாம் அதை தேவனுடைய ஜீவன் என்றே வலியுறுத்துகிறோம்; நாம் தேவனுடைய ஆவியைப்பற்றிப் பேசும்போது, தேவனுடைய ஜீவனை செயல்படுத்துகிறவர் என்பதை வலியுறுத்துகிறோம். வேறு வார்த்தைகளில் சொன்னால், தேவனுடைய ஜீவன் என்பது ஒரு நபரல்ல, ஆனால் தேவனுடைய ஆவி என்பது ஒரு நபர். நபராக இல்லாத இந்த ஜீவன், நபராயிருக்கிற ஆவியானவருக் குரியது. மேலும் நபராயிருக்கிற ஆவியானவரிலிருந்து இது பிரிக்கப்பட முடியாதது. நபராயிருக்கிற இந்த ஆவியானவர், நமக்குள் தேவனுடைய ஜீவனைக் கொண்டுவருகிறார்; மேலும் இந்த ஜீவன், ஒரு விதியோடு, அதாவது ஜீவவிதியோடு அல்லது ஜீவ ஆவியின் விதியோடு இணைந்துசெல்லுகிறது. இந்த விதி தன் ஊற்றாகிய தேவனுடைய நித்திய ஜீவனை கொண்டிருக்கிறது, மேலும் இந்த விதி, மாபெரும் வல்லமையுடனான நபராயிருக்கிற தேவனுடைய ஆவியானவரை தன் செயல்படுத்துகிறவராகக் கொண்டிருக்கிறது. ஆகையால் இந்த ஜீவ ஆவியின் விதி தேவனுடைய எல்லையற்ற கோரிக்கைக்கு பதிலளிக்க நித்தியமும் எல்லையற்றதுமான வல்லமையைக் கொண்டிருக்கிறது.

இவ்வாறு பழைய ஏற்பாட்டிலுள்ள விதி என்பது கற் பலகைகளின்மேல் எழுதப்பட்ட எழுத்துக்களாலான விதி என்பதை நாம் பார்த்திருக்கிறோம். அது மனிதன்மேல் அநேக கோரிக்கைகளை வைத்தாலும், அதன் விளைவு ஒன்றுமில்லை. புதிய ஏற்பாட்டு விதி என்பது நம் இருதயப்பலகையின்மேல் எழுதப்பட்ட ஜீவவிதியாகும். இது நம்மிடம் எதையும் கோரா

விட்டாலும்கூட, முடிவில் இது இயல்பாகவே தேவனுடைய ஐசுவரியங்களையெல்லாம், நம்மிலிருந்து வெளியே சீரமைக்க முடியும், இவ்வாறு தேவனுடைய கோரிக்கைகள் எல்லா வற்றிற்கும் பதிலளிப்பதற்கும் மேலாக நமக்குத் திறனளிக்கிறது. என்னே ஆச்சரியமானது இது! என்னே மகிமையானது இது! இதுவே புதிய உடன்படிக்கையில் தேவன் நமக்குத் தருகிற மையக் கிருபை! நாம் எவ்வளவாய் அவருக்கு நன்றிசெலுத்தி புகழ வேண்டும்!

## IV. ஜீவவிதியின் இருக்கை

### A. ஜீவவிதியின் வேலையின் இருக்கை

ஜீவவிதியை விளைவிக்கிற இந்த ஜீவன், தேவனுடைய ஜீவனாக இருக்கிறது. நம் மறுபிறப்பின்போது, முதலாவது நாம் இந்த ஜீவனைப் பெற்றோம், நம்முள்ளிருக்கிற இந்த ஜீவன் ஜீவாதாரரீதியாக முழுமையானதாக இருந்தாலும், நம் முழு ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு தனிப்பட்ட பகுதியிலும் அது வளர்ந்து, முதிர்ச்சியடையவில்லை. இது ஒரு மரத்தி லுள்ள கனியைப்போன்றது. இந்தக் கனியினுடைய ஜீவன் முதலாவது வெளிப்படும்போது அது முழுமையானதாக இருந்தாலும், அது ஜீவாதாரரீதியில் மட்டும் முழுமையானதாக இருக்கிறது. அது ஒவ்வொரு பகுதியிலும் முழுமையாவதற்கு, அது வளர்ந்து முதிர்ச்சியடையும்வரை காத்திருக்கவேண்டும். அதைப்போல மறுபிறப்பின்போது நாம் பெற்ற தேவனுடைய ஜீவன், ஜீவாதாரரீதியாக மட்டுமே முழுமையானதாக இருக்கிறது. இந்த ஜீவன் முதிர்ச்சியின் முழுமையைக் கொண்டிருக்க நாம் விரும்பி னால், அது நம் முழு ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதியிலும் படிப்படியாக வளர்ந்து முதிர்ச்சியடையவும் வேண்டும். இந்த ஜீவனின் வளர்ச்சியும் முதிர்ச்சியும் நம் முழு ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதியிலும் ஜீவவிதி வேலைசெய்வதால் ஏற்படுகிறது. ஜீவவிதி வேலைசெய்கிற இடம், நம் ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதியாக இருக்கிறது என்பதை இது வெளிப்படுத்துகிறது. இதைத்தான் எரேமியா *31:33* நம் “உள்ளத்திலே” என்று குறிப்பிடுகிறது.

### B. உள்ளார்ந்த பகுதிகளும் விதிகளும்

நம் உள்ளார்ந்த பகுதிகள் எவை? இவை நம் ஆவி, ஆத்துமா, இருதயம் என்ற பகுதிகளாகும். இந்த இருதயம் *உடல்ரீதியான* இருதயமல்ல, மாறாக *மனோரீதியான* இருதயம். மனிதர்களாகிய நம்முள், ஆவியும் ஆத்துமாவும் தனிப்பட்ட பகுதிகளாகும். ஆனால் இருதயம் கலந்த தன்மையுடையது. வேதாகமத்தில்

பதிவுசெய்யப்பட்டுள்ளபடி, இருதயம் குறைந்தது கீழ்க்கண்டவைகளை அடக்கியிருக்கிறது:

1. மனம். எடுத்துக்காட்டாக: "உங்கள் இருதயங்களில் பொல்லாதவைகளை சிந்திக்கிறதென்ன" (மத். 9:4), "இருதயத்தின் நினைவுகள்" (எபி. 4:12).

2. சித்தம். எடுத்துக்காட்டாக: "மனநிர்ணயமாய்" (அப். 11:23), "இருதயத்தின் நினைவுகள்" (எபி. 4:12).

3. உணர்ச்சி. எடுத்துக்காட்டாக: "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக" (யோவான் 14:1), "உங்கள் இருதயம் சந்தோஷிப்படும்" (யோவான் 16:22).

4. மனச்சாட்சி. எடுத்துக்காட்டாக: "துர்மனச்சாட்சி நீங்க தெளிக்கப்பட்ட இருதயமுள்ளவர்களாயும்" (எபி. 10:22), "நம்முடைய இருதயமே நம்மை குற்றவாளிகளாக தீர்க்கு மானால்" (1 யோவான் 3:20).

இருதயம் என்பது ஆத்துமாவின் மூன்று பகுதிகளாகிய மனம், சித்தம், உணர்ச்சி, மற்றும் ஆவியின் ஒரு பகுதியாகிய மனச்சாட்சி ஆகியவைகளை அடக்கியிருக்கிறது என்று இந்த மேற்கோள்கள் நமக்குக் காட்டுகின்றன. இவ்வாறு இருதயம் இந்தப் பகுதிகளை அதன் ஆக்கக்கூறுகளாகக் கொண்டிருக் கிறது. இவ்வாறு இருதயம் என்பது ஆவியின் ஒரு ஆக்கக் கூறையும் ஆத்துமாவின் எல்லா ஆக்கக்கூறுகளையும் உள்ளடக்கியது மட்டுமல்ல, இது உண்மை யாகவே ஆவியையும் ஆத்துமாவையும் சேர்த்திணைக்கிறது.

நம்முள் இருக்கிற பல்வேறு பகுதிகளுள், ஆவியின் பகுதிகளாகிய உள்ளுணர்வும் ஐக்கியமும் தேவனோடு அதிக மாகத் தொடர்புடையது, மேலும் தேவனுக்காக இருக்கின்றன; சரி, தவறு ஆகியவைகளுக்கு இடையேயுள்ள வித்தியாசத்தை பகுத்துணரும் வல்லமையைக் கொண்டிருக்கிற, ஆவியிலுள்ள மனச்சாட்சி என்ற பகுதி, மனிதனோடு அதிகமாகத் தொடர்புடை யது, மேலும் அது மனிதனுக்காக இருக்கிறது. ஆத்துமாவிலுள்ள மனம், சித்தம், உணர்ச்சி மனிதனின் ஆளுமையின் இருக்கையாக இருக்கின்றன, இவைகள் அதிகம் மனிதனுக்காகவும், மனிதனுடைய பக்கத்தோடு தொடர்புடையதாகவும் இருக்கின்றன. இருதயம் என்பது மனம், உணர்ச்சி, சித்தம், மனச்சாட்சி ஆகியவைகளை அடக்கியிருப்பதால், இது மனிதனுடைய இந்தப் பல்வேறு பகுதிகளை ஒன்றுசேர்த்துக் கலந்த ஒரு பகுதியை கொண்டு வருகிறது. இதை மனிதனுடைய முதன்மையான பிரதிநிதி யாகக் கருதமுடியும்.

நம்முள் இருக்கிற ஜீவவிதி இந்தப் பல்வேறு உள்ளார்ந்த பகுதிகளில் தொடர்ச்சியாக வேலைசெய்கிறது. அதன் வேலை எந்தப் பகுதியை சென்றடைகிறதோ, அது அந்தப் பகுதியின்

விதியாக மாறுகிறது. அதன் வேலை மனதைச் சென்றடைகிற போது, அது மனதின் விதியாக மாறுகிறது. அதன் வேலை சித்தத்தைச் சென்றடைகிறபோது, அது சித்தத்தின் விதியாக மாறுகிறது. அதன் வேலை உணர்ச்சியைச் சென்றடைகிற போது, அது உணர்ச்சியின் விதியாக மாறுகிறது. அதன் வேலை மனச்சாட்சியைச் சென்றடைகிறபோது, அது மனச்சாட்சியின் விதியாக மாறுகிறது. இந்த வழியில் அது நம் உள்ளார்ந்த பகுதிகளின் ஒவ்வொன்றுக்கும் ஒரு விதியாக மாறுகிறது. இவ்வாறு எபிரேயர் *8:10*-ம் *10:16*-ம் இந்த விதியை, "பிரமாணங்கள்" என்று அழைக்கின்றன. "இந்தப் பிரமாணங்கள்" உண்மையில் ஜீவவிதி அல்லது எரேமியா *31:33*-ல் பிரமாணம் என்று தேவன் பேசுகிற ஒரே உள்ளார்ந்த விதியாக இருக்கிறது; ஆனால் இது நம்முள் பல்வேறு "பகுதிகளில்" வைக்கப்பட்டிருக்கிறது.

எரேமியாவில் இந்த ஜீவவிதி "பிரமாணம்" என்று அழைக்கப்படுகிறது, ஆனால் இது எபிரேயரில் "பிரமாணங்கள்" என்று அழைக்கப்படுகிறது; ஒன்று ஒருமை, மற்றொன்று பன்மை. இது ஏனென்றால், விதியைக்குறித்துப் பேசும்போது ஒன்று மட்டுமே இருக்கிறது; ஆகையால், அது ஒருமை. இந்த விதியின் வேலைகளின் விளைவுகளைப்பற்றிப் பேசுகிறபோது, அது நம் முழு ஆள்தத்துவத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள அதன் திறமைகளையும், செயல்பாடுகளையும் வெளிப்படுத்துகிறது; ஆகையால் அது பன்மை. எரேமியா அதை ஒருமை விதி என்று அழைத்தாலும், அல்லது எபிரேயர் அதை பன்மை விதி என்று அழைத்தாலும், அவை இரண்டும் உண்மையில் இந்த ஒரே விதியைத்தான் குறிக்கின்றன.

## C. இருதயத்திற்கும் ஜீவவிதிக்கும் இடையேயுள்ள உறவு

ஜீவவிதி வேலைசெய்கிற இடம் நம் பல்வேறு உள்ளார்ந்த பகுதிகள் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். இந்தப் பல்வேறு பகுதிகளுள் இருதயமே முதன்மையானது. இது ஏனென்றால், இருதயம் என்பது மனிதனின் உள்ளார்ந்த பகுதிகளின் கூட்டிணைப்பாகும், மேலும் இது மனிதனுடைய முதன்மைப் பிரதிநிதியாக இருக்கிறது. ஆகையால் இருதயம் என்பது ஜீவவிதியோடு மிகவும் நெருக்கமாக தொடர்புடையது, இது நம் பல்வேறு உள்ளார்ந்த பகுதிகளில் வேலைசெய்து இதன் மூலம் பல்வேறு விதிகளாக மாறுகிறது. இந்தக் காரணத்தினால் நாம் இருதயத்தின் நிலையைப்பற்றி தெளிவாகப் பேசலாம்.

### *1. இருதயம் ஜீவனின் நுழைவாயிலும் வெளிவாயிலும்*

இருதயம் ஆவியையும் ஆத்துமாவையும் இணைக்கிறது

என்பதை நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம்; ஆகையால் இருதயம் ஆவிக்கும் ஆத்துமாவுக்கும் இடையில் இருக்கிறது. ஜீவன் ஆவிக்குள் நுழையவேண்டுமானால், அது இருதயத்தினூடாகக் கடந்துசென்றுதான் ஆகவேண்டும்; ஜீவன் ஆவியிலிருந்து வெளியேறிச்செல்ல வேண்டுமானாலும், அது இருதயத்தினூடாகக் கடந்துசென்றுதான் ஆகவேண்டும். இவ்வாறு இருதயம் என்பது ஜீவன் கடந்துசெல்லவேண்டிய பாதையாக இருக்கிறது. இதை ஜீவனின் நுழைவாயிலும், வெளிவாயிலும் என்று கூறமுடியும். எடுத்துக்காட்டாக, ஒருவர் கர்த்தருடைய சுவிசேஷத்தைக் கேட்டு பாவத்தினுடைய வலி மற்றும் துக்கம் அல்லது தேவனுடைய அன்பின் இனிமையை உணரும்போது, அவனுடைய இருதயத்தின் உணர்ச்சி தொடப்படுகிறது, அவனுடைய மனச்சாட்சி விசனமடைகிறது, அவனுடைய மனம் மனந்திரும்புகிறது, அவனுடைய சித்தம் விசுவாசிப்பதற்கு தீர்மானிக்கிறது. அப்போது அவனுடைய இருதயம் கர்த்தருக்குத் திறக்கப்பட்டு அவன் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்கிறான், மேலும் இதன்மூலம் தேவனுடைய ஜீவன் அவனுடைய ஆவிக்குள் நுழைகிறது. இதற்கு மாறாக, அவனுடைய இருதயம் உடன்படாமலும் திறந்துகொடுக்காமலும் இருந்தால் அவனுக்கு நீங்கள் எவ்வளவுதான் பிரசங்கித்தாலும், தேவனுடைய ஜீவன் அவனுடைய ஆவிக்குள் நுழைவதற்கு வேறெந்த வழியும் இல்லை. இதன் காரணமாகத்தான், மாபெரும் பிரிட்டிஷ் சுவிசேகர் திரு. ஸ்பர்ஜன், மனிதனின் ஆவியை அசைப்பதற்கு மனிதனின் இருதயத்தை அசைக்கவேண்டும் என்று ஒருமுறை கூறினார். இந்த அறிக்கை நிஜமாகவே உண்மையானது; இருதயம் அசையும்போது மட்டுமே ஆவி தேவனுடைய ஜீவனைப் பெறமுடியும்.

இதைப்போல, மனிதன் இரட்சிக்கப்பட்டபிறகு தேவனுடைய ஜீவன் அவனுக்குள்ளிருந்து வெளிவரவேண்டுமானால், அது இருதயத்தினூடாகக் கடந்துசெல்ல வேண்டும், மேலும் இருதயத்தின் ஒத்துழைப்பைப் பெறவேண்டும். இருதயம் உடன்படும்போது, ஜீவன் கடந்துசெல்லமுடியும். இருதயம் உடன்படாதபோது ஜீவன் கடந்துசெல்ல முடியாது. சிலநேரங்களில், இருதயம் ஓரளவுக்கு உடன்படுகிறது. ஒருவேளை மனச்சாட்சி மட்டுமே உடன்பட்டு மற்ற பகுதிகள் உடன்படாமல் இருக்கலாம், அல்லது இருதயத்தின் மனம் மட்டுமே உடன்பட்டு உணர்ச்சி உடன்படாமல் இருக்கலாம். எனவே அப்போதும் ஜீவன் கடந்துசெல்ல முடியாது. இவ்வாறு, இருதயம் நிஜமாகவே ஜீவனின் நுழைவாயிலாகவும், வெளிவாயிலாகவும் இருக்கிறது. ஜீவனைப் பெற்றுக்கொள்வது இருதயத்திலிருந்து ஆரம்பிக்கிறதைப் போல, ஜீவனை வாழ்ந்து காட்டுவதும் இருதயத்திலிருந்தே

ஆரம்பிக்கிறது.

## *2. இருதயம் ஜீவனின் திருப்பான்*

இருதயம் என்பது ஜீவனின் நுழைவாயிலாகவும் வெளிவாயிலாகவும் இருக்கிறது; ஜீவன் உள்ளே வருவதும் ஜீவன் வெளியே செல்வதும் இருதயத்தையே சார்ந்திருக்கிறது. மேலும் இருதயம் ஜீவனின் திருப்பானாகவும் இருக்கிறது. இருதயம் மூடப்பட்டிருந்தால், ஜீவன் நுழையவும் முடியாது, வெளியேறவும் முடியாது. இருப்பினும், இருதயம் திறக்கப்பட்டவுடனே ஜீவன் உள்ளே நுழையவும், விடுதலையோடு வெளியேறவும் முடியும். இருதயத்தின் எந்தப்பகுதி மூடப்பட்டிருக்கிறதோ, அந்தப் பகுதிக்கு தேவனுடைய ஜீவன் செல்லமுடியாது; இருதயத்தின் எந்தப் பகுதி திறந்திருக்கிறதோ, அந்தப் பகுதிக்கு தேவனுடைய ஜீவன் செல்ல முடியும். இவ்வாறு இருதயமே உண்மையில் ஜீவனின் திருப்பானாக இருக்கிறது. ஜீவனுக்கு மாபெரும் வல்லமை இருந்தாலும், அதன் மாபெரும் வல்லமை நம் சிறிய இருதயத்தால் கட்டுப்படுத்தப்படுகிறது. ஜீவன் வெளியே வேலைசெய்ய முடியுமா என்பது நம் இருதயம் திறந்திருக்கிறதா என்பதையே முழுவதும் சார்ந்திருக்கிறது. இது மின்உற்பத்தி நிலையத்தின் மின்சார சக்தியைப் போன்றது, மின்சாரம் சக்திமிக்கதாக இருந்தாலும், அது நம் அறையில் உள்ள விளக்கிற்கான சிறிய திருப்பானால் கட்டுப்படுத்தப்படுகிறது; திருப்பானை அழுத்தாவிட்டால், மின்சாரம் நுழையமுடியாது.

நம்மிடம் ஒரு நேர்த்தியான இருதயம் இருக்கும்வரை அது போதுமானது என்பதல்ல இதன் அர்த்தம். இருதயம், நாம் தேவனை நேசிக்கவும், தேவன்மேல் பற்றுதலாக இருக்கவும் மட்டுமே செய்யமுடியும்; நாம் தேவனைத் தொடவும், ஐக்கியம் கொள்ளவும் அது செய்யமுடியாது. ஆவிதான் நாம் தேவனைத் தொடவும், தேவனோடு ஐக்கியம் கொள்ளவும்செய்கிறது. இதனால் தான், அநேக சகோதர சகோதரிகள் கர்த்தரை அதிகமாக நேசித்தாலும், ஜெபத்தில் தேவனைத் தொடமுடியவில்லை. அவர்களுக்கு ஓர் இருதயம் இருக்கிறது, ஆனால் அவர்கள் ஆவியைப் பயன்படுத்துவதில்லை. இதே காரணத்தினால்தான், அநேக மறுமலர்ச்சியாளர்கள் தங்கள் வேலையில் தோல்வியடைகிறார்கள். அவர்கள் மனிதனுடைய உணர்ச்சியை அசைக்கிறார்கள், மனிதனுடைய சித்தத்தைக் கிளரிவிடுகிறார்கள், மனிதர்கள் தேவனை நேசிக்கவும், விருப்பம்கொள்ளவும்செய்கிறார்கள்; அவர்கள் தேவனோடு ஐக்கியம்கொள்வதற்குத் தங்கள் ஆவியைப் பயிற்சிசெய்ய மனிதனை வழிநடத்துவதில்லை.

ஆவிக்குரிய காரியங்களைப் புரிந்துகொள்ள நாம்

இருதயத்தின் மனதைப் பயன்படுத்த வேண்டும் என்பது உண்மைதான், எனினும் இப்படிப்பட்ட காரியங்களைத் தொடர்பு கொள்ள நாம் முதலாவது ஆவியைப் பயன் படுத்தவேண்டும், ஏனென்றால் ஆவியே ஆவிக்குரிய உலகத்தோடு தொடர்பு கொள்ளும் உறுப்பாக இருக்கிறது. நாம் முதலாவது ஆவியினால் எல்லா ஆவிக்குரிய காரியங்களையும் தொடர்புகொண்டு, பின்பு இருதயத்தின் மனதைக்கொண்டு அவைகளை கிரகித்துக் கொள்ளவும், புரிந்துகொள்ளவும் வேண்டும். இது கேட்கிற ஒலியைப்போன்றது; இது முதலாவது செவியோடு தொடர்பு கொள்கிறது, பின்பு மனதினால் கிரகித்துக்கொள்ளப்படுகிறது. இது ஒரு குறிப்பிட்ட வண்ணத்தை பார்ப்பதைப்போன்றது; இது முதலாவது கண்களால் தொடர்புகொள்ளப்படவேண்டும், பின்பு மனதினால் பகுத்துணரப்பட வேண்டும். ஆகையால், நாம் மனிதர்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்போது, நம் ஆவி பலவீனமாக இருந்தால், மக்களைத் தங்கள் மனதினால் கிரகித்துக்கொள்ளவும் புரிந்துகொள்ளவும் மட்டுமே நாம் வார்த்தைகளைப் பயன்படுத்துகிறோம்; பின்னர் ஆவியானவரைத் தொட நாம் அவர்களை வழிநடத்துகிறோம். இருப்பினும், நம் ஆவி வலிமையாக இருக்கும்போது, சுவிசேஷத்தின் வார்த்தைகளால் மனிதனுடைய ஆவிக்குள் நேரடியாக தேவனுடைய இரட்சிப்பை அனுப்புகிறோம். மனிதர்கள் சுவிசேஷத்தை கேட்டவுடனே, ஆவியைத் தொட்டு இரட்சிக்கப் படுகிறார்கள். அதற்குப்பின்பு உணர்ந்துகொள்வ தற்கும், புரிந்து கொள்வதற்கும் நாம் அவர்களுடைய மனதைப் படிப்படியாக வழிநடத்துகிறோம்.

தேவனையும், ஆவிக்குரிய காரியங்களையும் தொடர்பு கொள்வதில் ஆவியை இயக்குவதே முக்கியமான செயல்பாடாக இருந்தாலும், மனிதனுடைய இருதயம் மெத்தனமாக இருந்தால், அப்போது ஆவி அவனுக்குள் சிறைப்படுத்தப்பட்டு, அதன் ஆற்றலை வெளிப்படுத்த முடியாமல் போய்விடுகிறது. தேவன் அவனோடு ஐக்கியப்படவும், உறவாடவும் விரும்பினாலும், அது சாத்தியமில்லை. ஆகையால் தேவனையும் ஆவிக்குரிய காரியங்களையும் தொடர்புகொள்ள நாம் ஆவியைப் பயன்படுத்த வேண்டும், மேலும் நாம் பற்றுள்ள இருதயத்தைக் கொண்டிருக்கவேண்டும். ஆவி என்பது தேவனுடைய ஜீவனைத் தொடர்புகொள்ளும் உறுப்பு. இருதயம் என்பது திறவுகோல், திருப்பான், அதாவது தேவனுடைய ஜீவன் கடந்துசெல்வதை அனுமதிக்கிற முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும்.

### *3. இருதயம் ஜீவனின் வேலையைத் தடைசெய்தல்*

இருதயம் ஜீவனுடைய நுழைவாயிலாகவும், வெளிவாயிலாகவும், திருப்பானாகவும் இருப்பதால், அதற்கு ஜீவன்மேல் மாபெரும் ஆதிக்கம் இருக்கிறது; அதன் சிறிதளவு பிரச்சினை கூட ஜீவனின் வேலையை முழுவதும் தடைசெய்யமுடியும். இருதயத்தின் எந்தெந்தப் பகுதியில் பிரச்சினை இருக்கிறதோ, அந்தந்தப் பகுதியில் ஜீவன் தடைசெய்யப்பட்டு நின்றுவிடுகிறது, மேலும் ஜீவவிதி மேற்கொண்டு எதையும் சீரமைக்க முடியாது.

அனுதின வெளிப்பாட்டையும் பலமுறை வெளிச்சத்தையும் பெற்றுக்கொள்ளும்படி நம்முள்ளிருக்கிற தேவனுடைய ஜீவன் விடுதலையோடு வேலைசெய்யவும் வளரவும் வேண்டும். இது இயல்பானதும் பொருத்தமானதுமாகும். ஆனால் உண்மையில் இது இப்படி இருப்பதில்லை. அநேக சகோதர சகோதரிகளுடைய ஆவிக்குரிய ஜீவன் வளரவு மில்லை, ஆவிக்குரிய வாழ்க்கை இயல்பானதாகவும் இல்லை. இது ஏனென்றால், அவர்களிலுள்ள தேவனுடைய ஜீவன் நிஜமில்லை என்பதாலோ, அவர்களுக்குள் இருக்கிற தேவ னுடைய ஜீவனில் ஏதோ பிரச்சினை இருக்கிறது என்பதாலோ அல்ல; அவர்களுடைய இருதயத்தில் பிரச்சினை இருக்கிறது என்பதே காரணமாகும். அவர்களுடைய இருதயம் தேவன் பக்கம் போதுமான அளவுக்குத் திரும்பவில்லை, அது போதுமான அளவு கர்த்தரை நேசிக்கவுமில்லை, அது போது மான அளவு கர்த்தரைத் தேடவுமில்லை, அது போதுமான அளவு சுத்தமாகவுமில்லை, அது போதுமான அளவு திறக்கப் படவுமில்லை. இது இருதயத்தில் சில இடர்பாடு அல்லது பிரச்சினை இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது. ஆக்கினைத்தீர்ப்பின் உணர்விருந்து அது இடைபடுத்தப் படாமல் இருக்கிற மனச்சாட்சியுடனான சில பிரச்சினை, அல்லது கரிசனை, கவலை, தீயஎண்ணம், வாக்குவாதம், சந்தேகம் போன்றவை களைப்பற்றிய மனதுடனான பிரச்சினை, அல்லது பிடிவாதமும், வணங்காக்கழுத்துடன் இருக்கிற சித்தத்துடனான பிரச்சினை, அல்லது மாம்சப்பிரகாரமான ஆசைகளையும் இயற்கையான பற்றுதலையும் கொண்டிருக்கிற உணர்ச்சியுடனான பிரச்சினை ஆகிய, இருதயத்திலுள்ள இந்த எல்லாக் காரியங்களும் நமக்குள் ஜீவன் வேலைசெய்வதற்கு ஒரு தடையாக மாறி, சீரமைக்கும் ஜீவவிதியை செயல்படாமல் ஆக்குகிறது. ஆகையால் நாம் ஜீவனில் வளரவிரும்பினால், நாம் முதலில் இருதயத்தோடு இடைபட வேண்டும், பின்பு ஆவியைப் பயிற்சிசெய்யவேண்டும். நம் இருதயம் இடைபடுத்தப்படவில்லை யென்றால், ஆவியைக் குறிப்பிடுவதில் எந்த அர்த்தமும் இல்லை. அநேக சகோதர சகோதரிகளின் பிரச்சினை ஆவியில் இல்லை, இருதயத்தில் இருக்கிறது. இருதயம் சரியாக இல்லையென்றால் ஆவியிலுள்ள

ஜீவன் தடைசெய்யப்படுகிறது, மேலும் ஜீவவிதி விடுதலையோடு வேலைசெய்ய முடியாது. நாம் ஜீவனைத் தேடி, ஜீவனின் பாதையில் நடக்க விரும்பினால், நம் இருதயத்தில் எந்தப் பிரச்சினையும் இருக்கக்கூடாது; அப்போது ஜீவவிதி விடுதலை யோடு வேலைசெய்து, எந்தத் தடையுமில்லாமல் அசையமுடியும், இதன்மூலம் ஜீவவிதி நம் ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதியையும் சென்றடைய முடியும்.

## 4. இருதயத்துடன் இடைபடுவது எப்படி

இருதயம் ஜீவனோடு இன்றியமையாத முறையில் தொடர்பு கொண்டிருப்பதால், அவருடைய ஜீவன் நம்மிலிருந்து வெளியே சீரமைக்க நம் இருதயத்தோடு இடைபடுவதைத்தவிர தேவனுக்கு வேறெந்த வழியுமில்லை. தேவனைப் பொறுத்தவரை, நம் இருதயத்தில் கடினத்தன்மை, தூய்மையின்மை, அன்பின்மை, சமாதானமின்மை ஆகிய நான்கு மாபெரும் பிரச்சினைகள் இருக்கின்றன. கடினத்தன்மை சித்தத்தைப்பற்றிய காரியம், தூய்மையின்மை மனதையும் உணர்ச்சியையும்பற்றிய காரியம், அன்பின்மை உணர்ச்சியைப்பற்றிய காரியம், சமாதானமின்மை மனச்சாட்சியைப்பற்றிய காரியம். தேவன் நம் இருதயத்தோடு இடைபடும்போது, நம் இருதயம் மிருதுவாகவும் தூய்மையாகவும் அன்பாகவும் சமாதானமாகவும் இருக்கும்படி, அவர் இந்த நான்கு காரியங்களோடும் இடைபடுகிறார்.

முதலாவதாக நம் இருதயம் மிருதுவாக இருக்கவேண்டு மென்று தேவன் விரும்புகிறார். மிருதுவாக இருப்பதின் அர்த்தம் தேவனைப்பொறுத்தவரை, இருதயத்தின் சித்தம் பணிந் தடங்குகிறது, இணங்குகிறது, மற்றும் வணங்காகழுத்துள்ள தாக இல்லை, கலகம்செய்யவில்லை என்பதாகும். நம் இருதயம் மிருதுவாக இருக்கும்படி தேவன் நம் இருதயத்தோடு இடைபடும் போது அவர் நம் மாம்சத்திலிருந்து கல்லான இருதயத்தை எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை நமக்குத் தருகிறார் (எசே. 36:26). இதன் அர்த்தம் அது சதை யான மிருதுவான இருதயமாக மாறும்படி அவர் நம் கடின மான கல்லான இருதயத்தை மிருதுவாக்குகிறார் என்பதாகும்.

நாம் புதிதாக இரட்சிக்கப்படுகிறபோது, இருதயம் எப்போதும் மிருதுவாக்கப்படுகிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, சிலருடைய இருதயம் பழைய நிலைக்குத் திரும்பி மீண்டும் கடினமாகிவிடுகிறது. கர்த்தருக்குப் பணிந்தடங்காமலும், கர்த்தருக்குப் பயப்படாமலும், கர்த்தருடைய பிரசன்னத்திலிருந்து அவர்கள் படிப்படியாக வீழ்ச்சியடை கிறார்கள். எப்போதெல்லாம் நம் இருதயம் கடினமாகிறதோ, அப்போதெல்லாம் தேவனுக்கு

முன்பாக நமக்குப் பிரச்சினை இருக்கிறது. தேவனுக்கு முன்பாக நம் ஆவிக்குரிய வாழ்க்கையின் நிலைமை சரியானதாக இருக்க நாம் விரும்பினால், நம் இருதயம் கடினப்படக்கூடாது; மாறாக அது தொடர்ந்து மிருதுவாக்கப்படவேண்டும். உண்மையில், இந்தக் காரியத்துக்கும் அந்தக் காரியத்துக்கும் நாம் பயப்படவேண்டாம், ஆனால் தேவனைப் புண்படுத்துவதற்கு நாம் பயப்பட வேண்டும். நாம் வானத்திற்கும் பயப்படவேண்டாம், பூமிக்கும் பயப்படவேண்டாம்; தேவனைப் புண்படுத்துவதற்கு மட்டும் பயப்படவேண்டும். இந்த அளவுக்கு மிருதுவாகும்வரை, நம் இருதயம் இடைபடுத்தப்பட வேண்டும்; அப்போது எல்லாம் சரியாக இருக்கும். அநேக சகோதர சகோதரிகள் அநேகக் காரியங்களில் மிருதுவாக இருக்கிறார்கள்; ஆயினும் தேவனும் தேவனுடைய சித்தமும் குறிப்பிடப்படும்போது, கடினப்பட்டு விடுகிறார்கள் என்பது உண்மையில் துக்க கரமானது. "நான் இந்த வழியில் தான் இருப்பேன்; தேவன் என்னதான் செய்வார் என்று பார்க்கலாம்" என்று இன்னும் அவர்கள் சொல்லக்கூடும். இது எவ்வளவு பயங்கரமானது! எல்லாவற்றிலும் கடினமாக இருக்கிற சகோதர சகோதரிகள் இருக்கிறார்கள்; ஆயினும் தேவனும் தேவனுடைய சித்தமும் குறிப்பிடப்படும்போது, அவர்கள் மிருதுவாகிவிடுகிறார்கள். இப்படிப்பட்ட மக்கள் மிருதுவான இருதயங்களை உடையவர்கள். நம் இருதயத்தையும் இதைப்போல மிருதுவாக்கும்படி நாம் தேவனிடம் கேட்கவேண்டும்.

தேவன் எவ்வாறு நம் இருதயத்தை மிருதுவாக்குகிறார்? சில நேரங்களில், நம்மை அசைப்பதற்கு அவர் தம் அன்பைப் பயன்படுத்துகிறார், சில நேரங்களில் நம்மை அடிப்பதற்கு அவர் சிட்சையைப் பயன்படுத்துகிறார். நம்மை அசைப்பதற்கு தேவன் முதலாவது தம் அன்பையே பலமுறை பயன்படுத்துகிறார்; அன்பு நம்மை அசைக்கமுடியாவிட்டால், நம் இருதயம் மிருதுவாகும் வரை, நம்மை அடிக்க அவர் தம் கரத்தை சூழ்நிலையின்மூலம் பயன்படுத்துகிறார். நம் இருதயம் மிருதுவாக்கப்பட்டவுடனே, அவருடைய ஜீவன் நம்முள் வேலைசெய்ய முடியும்.

இரண்டாவதாக, நம் இருதயம் தூய்மையானதாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஒரு தூய்மையான இருதயம் என்பதின் அர்த்தம் இருதயம் அதன் மனதை குறிப்பாக தேவன்மேல் பொருத்துகிறது என்பதாகும். அது தேவனைப் பொறுத்தவரை மிகவும் தூய்மையும் எளிமையுமான உணர்ச்சியை யுடைய இருதயமாகவும் இருக்கிறது (2 கொரி. 11:3 பார்க்க). அது தேவனை மட்டுமே நேசிக்கிறது, தேவனை மட்டுமே விரும்புகிறது; தேவனைத்தவிர, அதற்கு வேறெந்த அன்போ, பற்றுதலோ, ஆசையோ இல்லை. "இருதயத்தில் சுத்தமுள்ள

வர்கள்...தேவனைத் தரிசிப்பார்கள்" என்று மத்தேயு 5:8 கூறுகிறது. ஆகவே இருதயம் தூய்மையாக இல்லையென்றால் நாம் தேவனைப் பார்க்கமுடியாது. நம் எண்ணம் கொஞ்சம் தேவனுக்கு புறம்பான காரியங்களைக்குறித்து கவலைப்பட்டாலோ, நம் உணர்ச்சி தேவனுக்கு புறம்பான காரியங்கள்மீது கொஞ்சம் அன்பு வைத்தாலோ, நம் இருதயம் ஒருபோதும் தூய்மையாக இல்லை; நம் ஆவியிலுள்ள ஜீவனும் இந்தக் காரணத்தால் தடுக்கப்படுகிறது. ஆகையால் "சுத்த இருதயத்தோடே கர்த்தரைத் தொழுதுகொள்ளு கிற வர்களுடனே" (2 தீமோ. 2:22) நாம் ஆசையாய்ப் பின்தொடர வேண்டும். மேலும் சுத்த இருதயத்துடனே கர்த்தரை நேசிக் கிறவர்களாகவும், தேவனை விரும்புகிறவர்களாகவும் இருக்க வேண்டும். அப்போது தேவனுடைய ஜீவன் நம்முள் விடுதலை யோடு வேலைசெய்ய நாம் அனுமதிக்கமுடியும்.

மூன்றாவதாக, நம் இருதயம் நேசிக்கிறதாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஒரு நேசிக்கிற இருதயம் என்பதின் அர்த்தம் அந்த இருதயத்திலுள்ள உணர்ச்சி தேவனை நேசிக்கிறது, தேவனை விரும்புகிறது, தேவன்மேல் தாகமா யிருக்கிறது, தேவனுக்காக ஏங்குகிறது, தேவன்மேல் பாசம் கொண் டிருக்கிறது என்பதாகும். வேதாக மத்தில், கர்த்தர்மேலுள்ள பரிசுத்த வான்களின் அன்பைப்பற்றி பேசுகிற ஒரு குறிப்பான புத்தகம் இருக்கிறது, அது பழைய ஏற்பாட்டிலுள்ள உன்னதப்பாட்டு. கர்த்தருடைய மக்கள் என்றமுறையில், ஒரு பெண் தன் பிரிய மானவனை நேசிக்கிறதைப்போல, நாம் கர்த்தரை நேசிக்க வேண்டும் என்று அது கூறுகிறது. இந்த நேசம் மிகவும் ஆழமான தும், மாறாததுமாக இருக்கிறது. மேலும் அது மரணத்திலும் வலியதாக இருக்கிறது (8:6-7). இந்தப் புத்தகம் கர்த்தர்மேலுள்ள நம் அன்பைப்பற்றிப் பேசுவதால், கர்த்தருடைய ஜீவனிலுள்ள நம் வளர்ச்சியையும் விசேஷமாக எடுத்துக்காட்டுகிறது. பின்பு புதிய ஏற்பாட்டில் யோவான் இருபத்தி-ஒன்றாம் அதிகாரத்தில், "நீ என்னை நேசிக்கிறாயா?" என்று கர்த்தர் பேதுருவிடம் மூன்றுமுறை கேட்டார். இதன் அர்த்தம் கர்த்தருக்காக ஒரு நேசிக்கும் இருதயத்தை அவன் கொண்டிருக்க முடியும் என்ற அளவிற்கு கர்த்தரை நேசிக்க பேதுருவின் உணர்ச்சியை கர்த்தர் தூண்ட விரும்பினார் என்பதாகும். அவருடைய ஜீவன் வேலைசெய்வ தற்கும், வளர்வதற்கும் ஒரு வாய்ப்பை பேதுரு தரவேண்டுமென்று அவர் விரும்பியதால், கர்த்தர் இதைச்செய்தார். இந்தச் சம்பவம் யோவான் சுவிசேஷத்தில் புதிவுசெய்யப்பட்டிருக்கிறது, இந்தப் புத்தகம் நாம் எவ்வாறு கர்த்தரை ஜீவனாகக் பெற்றுக்கொள்வது, எவ்வாறு இந்த ஜீவனில் வாழ்வது என்று பேசுகிறது. நம் இருதயம் கர்த்தர்மேல் இப்படிப்பட்ட ஒரு அன்பைக் கொண்டிருந்தால்,

நம்முள் இருக்கிற கர்த்தருடைய ஜீவன், மென்மையாக அசையமுடியும், மேலும் அது விரும்புகிறதைச் செய்யமுடியும்.

நான்காவதாக, நம் இருதயம் சமாதானமாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார். ஒரு சமாதானமான இருதயம் என்பதின் அர்த்தம் அந்த இருதயத்திலுள்ள மனச்சாட்சி எந்த குற்றங்களையோ (அப். 24:16), எந்த ஆக்கினைத்தீர்ப்பையோ, அவதூறையோ கொண்டிருக்கவில்லை, அது பத்திரமாகவும், பாதுகாப்பாகவும் இருக்கிறது என்ப தாகும். நம்முள்ளிருக்கிற மனச்சாட்சி நம்மை ஆளுகைசெய்ய தேவனைப் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. நம் மனசாட்சி நம்மைக் குற்றவாளிகளாகத் தீர்க்குமானால், தேவன் நம் மனச்சாட்சியிலும் பெரியவராயிருந்து சகலத்தையும் அறிந்திருக்கிறார் (1 யோவான் 3:20); அவர் இன்னும் அதிகமாக நம்மை குற்றவாளியாகத் தீர்ப்பார். ஆகவே நாம் எல்லாக் குற்றங்களோடும் ஆக்கினைத்தீர்ப்போடும் அவதூறோடும் தெளிவாக இடைபடவேண்டும்; எனவே "நம்முடைய இருதயத்தை அவருக்கு முன்பாக நிச்சயப்படுத்திக்கொள்ள லாம்" (1 யோவான் 3:19). நம் இருதயம் சமாதானமாக இருக்கும்போது, தேவன் அதனூடாக கடந்துசெல்லமுடியும், மேலும் தேவனுடைய ஜீவவிதி நம்முள் தொடர்ந்து வேலைசெய்யமுடியும்.

நம் இருதயம் மிருதுவாக, தூய்மையாக, நேசிக்கிறதாக, சமாதானமாக இருந்தால், அப்போது அது நேர்மையானதாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒரு நேர்மையான இருதயம் மட்டுமே ஜீவவிதிக்கு பொருத்தமான மறுபாதியாக இருக்கிறது. அது நமக்குள்ளிருந்து விடுதலையோடு வெளியே சீரமைக்க தேவனுடைய ஜீவனை அனுமதிக்கமுடியும். எத்தனை தடவை நம் இருதயம் தேவனைநோக்கி "இது நேர்வழி அல்ல" என்ற ஒரு அடையாளத் தைக் காட்டுவதுபோலிருக்கிறது; ஆகவே தேவன் கடந்துசெல்ல முடியாதபடி செய்கிறோம்; தேவனுடைய ஜீவன் தடைப்பட்டு ஓரிடத்தில் நின்றுவிடச் செய்கிறோம், இதனால் நமக்குள்ளிருந்து வெளியே விடுதலையோடு வேலைசெய்வதற்கும் விரிவடை வதற்கும் அதனால் இயலாமல் போய்விடுகிறது.

இந்த வார்த்தைகள் மிகவும் ஆற்றல்மிக்கதாகவும் ஞான மாகவும் இல்லாதிருந்தாலும், உடலைப் பரிசோதனை செய்வதைப் போல, இவைகள் நம் இருதயத்தின் எல்லா நிலைமைகளையும், நம்மை கவனமாக பரிசோதனைசெய்கிறதாக இருக்கவேண்டும். நம் இருதயத்தின் சித்தம் உண்மையாகவே தேவனைத் தெரிந்துகொள்கிறதா? அது தேவனுக்கு முன்பாக பணிந்தடங்கு கிறதாக, சரணடைகிறதாக இருக் கிறதா? அல்லது அது வணங்கா கழுத்துள்ளதாகவும், கலகம் செய்கிறதாகவும் இருக்கிறதா? என்று கட்டாயம் நம்மை நாம் கேட்கவேண்டும். மேலும் நம்

இருதயத்தின் மனம் தேவனுக்குமுன்பாக தூய்மையாயிருக்கிறதா? அல்லது கோணலாக இருக்கிறதா? நம் எண்ணங்கள், நம் கரிசனை, போன்றவைகள் தூய்மையாக தேவனுக்காகவே இருக்கிறதா? அல்லது தேவனுக்கு புறம்பே நாம் மிக ஆழமாக கவலைப் படுகிறதும், நம் இருதயத்தை ஆக்கிரமிக்கிறதுமான ஒரு நபர், ஒரு காரியம், ஒரு பொருள் ஆகியவை இருக்கிறதா? பின்பு நம் இருதயத்தின் உணர்ச்சி தேவனுக்கென்று ஒற்றையாக இருக்கிறதா? அது தேவனை நேசித்து முழுவதும் தேவனையே விரும்புகிறதா? அல்லது அதற்கு தேவனுக்கு புறம்பே வேறு சில அன்பு, வேறு சில பற்று, வேறு சில ஈடுபாடு இருக்கிறதா? என்று நாம் கேட்கவேண்டும். மேலும் தேவனுக்குமுன்பாக நம் மனச்சாட்சி எப்படி இருக்கிறது? அது குற்றமில்லாமல் இருக்கிறதா? அதற்கு நிச்சயமிருக்கிறதா? அல்லது அது ஆக்கினைத்தீர்ப்பையும் அவதூறையும் கொண்டிருக்கிறதா? என்று நாம் கேட்கவேண்டும். நாம் இந்த எல்லாக் காரியங்களையும் கவனமாக பரிசீலனை செய்ய வேண்டும். மேலும் அவைகளோடு கவனமாக இடைபட வேண்டும், இதனால் நம் இருதயம் மிருதுவான இருதயமாக, தூய்மையான இருதயமாக, நேசிக்கிற இருதயமாக, சமாதான இருதயமாக மாறும். வேறுவார்த்தைகளில் சொன்னால், ஒரு நேர்மையான இருதயமாக மாறும். இப்படி இருந்தால், நம் ஆவியிலுள்ள ஜீவன் வெளியே செல்வதற்கு நிச்சயமாக ஒரு வழி இருக்கும். மேலும் ஜீவவிதி நம்முள்ளிருந்து நிச்சயமாக சீரமைக்கமுடியும்.

இவ்வாறு நம் இருதயத்தின் எந்தெந்தப் பகுதி இடை படுத்தப்படுகிறதோ, அந்தந்தப் பகுதியில் தேவனுடைய ஜீவன் வேலை செய்யவும் முடியும், தேவனுடைய ஜீவவிதி சீரமைக்கவும் முடியும். நம் இருதயத்தின் எல்லாப் பகுதிகளும் பரிசோதிக்கப் பட்டு இடைபடுத்தப்படும்போது, தேவனுடைய ஜீவவிதி நம் ஆவியிலிருந்து நம் இருதயத்தின்மூலம், நம் ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் கடந்துசெல்லமுடியும். எனவே நம் முழு ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதியும் இந்த ஜீவவிதியின் திறமைகளை வெளிப்படுத்தமுடியும், மேலும் தேவனுடைய ஜீவனின் மூலக்கூறைக்கொண்டு நிரப்பப்படவும்முடியும். இதன்மூலம், தேவனும் மனிதனும் இணைகிற மகிமையான முடிவைச் சென்றடைகிறோம்.

## V. ஜீவவிதியின் கோரிக்கைகள்

ஜீவவிதியின் இருக்கையை நாம் பார்த்திருப்பதால், இந்த ஜீவவிதி நம் முழு ஆள்தத்துவத்தின் பல்வேறு உள்ளார்ந்த பகுதிகளில் வேலைசெய்கிறது என்பதை அறிந்திருக்கிறோம்.

ஆனால் நடைமுறைப் பயிற்சியில் ஜீவவிதி நம் பல்வேறு உள்ளார்ந்த பகுதிகளில் வேலைசெய்ய வேண்டுமானால், நாம் இரண்டு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

## A. தேவனில் அன்புகூருதல்

முதல் கோரிக்கை தேவனில் அன்புகூருவதாகும். யோவான் சுவிசேஷம் விசேஷமாக ஜீவனைப்பற்றிப் பேசுகிறது; மேலும் அது விசுவாசத்தைப்பற்றியும், அன்பைப்பற்றியும் அழுத்தமான முறையில் பேசுகிறது. விசுவாசிப்பதென்றால் ஜீவனை எடுத்துக்கொள்வது, ஆனால் அன்புகூருவதென்றால் ஜீவனைப் பாய்தோடச்செய்வது. நாம் ஜீவனைப் பெற விரும்பினால் நாம் கட்டாயம் விசுவாசிக்க வேண்டும். நாம் ஜீவனை வாழ்ந்துகாட்ட வேண்டுமானால், நாம் கட்டாயம் அன்புகூர வேண்டும். விசுவாசம் மட்டுமே ஜீவன் உள்ளே நுழைய அனுமதிக்க முடியும். மேலும் அன்பு மட்டுமே ஜீவன் பாய்ந்தோட அனுமதிக்க முடியும். ஆகையால் அன்புதான் ஜீவவிதி வேலைசெய்ய திறனளிக்கிற தேவையான நிலைமையாகும்.

நாம் தேவனை நம் முழு இருதயத்தோடும், நம் முழு ஆத்துமாவோடும், நம் முழு மனதோடும், நம் முழுப் பலத் தோடும் அன்புகூரவேண்டுமென்று வேதாகமம் கோருகிறது என்று வேறொரு இடத்தில் நாம் பார்க்கிறோம் (மாற்கு 12:30). நம்முள் இருக்கிற இந்த அநேகப் பகுதிகளைச் சென்றடைவதற்கு தேவனுக்கான நம் அன்பை நாம் அனுமதிக்கிறோம் என்ற இப்பேர்ப்பட்ட அளவுக்கு நாம் தேவனில் அன்புகூரும்போது, தேவனுடைய ஜீவன் நம்முள் இருக்கிற இந்த எல்லாப் பகுதிகளுக்குள்ளும் செயல்படவும் சீரமைக்கவும் ஆரம்பிக் கிறது. ஆகவே இந்தப்பகுதிகள் படிப்படியாக தேவனைப்போல மாறுகின்றன.

இவ்வாறு தேவன் முதலாவது நம்முள் அவருடைய ஜீவனை விதைக்கிறார்; பின்பு அவர் நம் இருதயத்தின் உணர்ச்சியை அசைப்பதற்கு அன்பைப் பயன்படுத்துகிறார். மேலும் நம் இருதயம் அவரில் அன்புகூரவும், அவரை நோக்கித் திரும்பி அவரோடு இணைக்கப்படவும் செய்கிறார். இந்தமுறையில் நம்முள் இருக்கிற திரை எடுத்துப்போடப்படுகிறது (2 கொரி. 3:16 பார்க்க). மேலும் நாம் வெளிச்சத்தைப் பார்த்து, வெளிப்பாட்டைப் பெற்று, தேவனையும் தேவனுடைய ஜீவனையும் அறியமுடியும். மேலும் நம் முழு இருதயத்தோடு நாம் தேவனில் அன்புகூரும்போது, நாம் இயல்பாகவே தேவனுக்கு பணிந்தடங்கச் சித்தமாயிருந்து, தேவனோடு ஒத்துழைக்கிறோம். இந்த வழியில் நம்முள் விடுதலையோடு வேலைசெய்யவும், தேவனுடைய ஜீவனின் எல்லா

ஐசுவரியங்களைக் கொண்டு நம் முழு ஆள்தத்துவத்தின் ஒவ்வொரு பகுதிக்கும் நிரப்பீட்டை வழங்கவும், நாம் தேவனுடைய ஜீவவிதியை அனுமதிக்கிறோம். எந்தெந்தப் பகுதி தேவனுடைய அன்பைக் கொண்டு நிரப்பப்படுகிறதோ, அந்தந்தப் பகுதியில் தேவனுடைய ஜீவவிதி சீரமைக்கிறது. நம் முழு ஆள்தத்துவமும் தேவனில் அன்புகூர்ந்தால், தேவனுடைய ஜீவவிதி நம் முழு ஆள்தத்துவத்திலும் வேலைசெய்கிறது. அப்போது நம் முழு ஆள்தத்துவமும் உள்ளும், புறம்பும் தேவனைப்போல மாறி தேவனுடைய ஜீவனின் ஐசுவரியங்களைக்கொண்டு நிரப்பப்படும்.

## B. ஜீவனின் முதல் உணர்வுக்குக் கீழ்ப்படிதல்

இரண்டாவது கோரிக்கை ஜீவனின் முதல் உணர்வுக்குக் கீழ்ப்படிவதாகும். *ஆவியின் உணர்வும் ஆவியை அறிதலும்* என்ற ஏழாம் அத்தியாயத்தில், ஜீவவிதி உணர்வுக்குரியது என்று குறிப்பிட்டிருந்தோம்; அது நமக்கு ஓர் உணர்வைத் தரமுடியும். நாம் மறுபடிபிறப்பிக்கப்பட்டு, தேவனுடைய ஜீவனைப்பெற்ற உடனே நமக்குள்ளே இருக்கிற இந்த ஜீவ விதி நிச்சயமாக ஒரு குறிப்பிட்ட உணர்வைக் கொண்டிருக்கச் செய்கிறது. இந்த ஜீவவிதியின் உணர்வுக்கு கீழ்ப்படிந்து, இவ்வாறு இந்த ஜீவவிதி நம்முள் விடுதலையோடு வேலைசெய்ய அனுமதிப்பதே நம்முடைய பொறுப்பாகும்.

இருந்தபோதிலும், ஆரம்பத்தில் இந்த ஜீவவிதியின் உணர்வு பலவீனமாகவும், அடிக்கடி நிகழாததாகவும் இருக்கக் கூடும். ஆயினும் முதல் உணர்வு பலவீனமாக இருந்தாலும் கூட நாம் அதற்குக் கீழ்ப்படிய சித்தமாயிருந்தால் மட்டுமே, அதைத் தொடர்ந்து வருகிற உணர்வுகள் மேலும் மேலும் வலிமையடையும். இந்த முதல் பலவீனமான உணர்வுக்குப் பணிந்தடங்கத் தொடங்கவேண்டும், மேலும் தொடர்ந்து பணிந்தடங்க வேண்டும். இந்த முறையில் நம் முழு ஆள்தத்துவத்தின் பல்வேறு உள்ளார்ந்த பகுதிகளைச் சென்றடையும்வரை ஜீவவிதி நம்முள் இடைவிடாமல் வேலை செய்யமுடியும். இவ்வாறு நமக்குள் இருக்கிற ஜீவன் மிக இயல்பாக புறம்பாக விரிவடையவும் ஆழத்திலும் உயரத்திலும் பெருக்கமடையவும் முடியும்.

முதல் உணர்வுக்கு கீழ்ப்படிந்தபிறகு, அடுத்தது நாம் என்ன செய்வது? என்று சிலர் கேட்கக்கூடும். நம் பதில் இதுதான்: நாம் முதல் உணர்வுக்கு கீழ்ப்படிவதற்குமுன்பு, அதற்கு அடுத்து நாம் என்ன செய்யவேண்டும் என்பதைப் பற்றி கவலைப்படவேண்டியதில்லை. தேவன் ஒரே நேரத்தில் ஒரு நாளை நமக்குத் தருகிறதைப்போல, ஒரே நேரத்தில் ஓர் உணர்வை மட்டும் நமக்குத் தருகிறார். நாம் தினம் தினம் வாழ்வதைப்போல, நாம்

உணர்வுகளுக்கு ஒன்றன்பின் ஒன்றாக கீழ்ப்படிகிறோம். தேவன் நமக்கு ஓர் உணர்வைத் தருகிறபோது, அந்த ஓர் உணர்வுக்கு நாம் கீழ்ப்படிகிறோம். நாம் இந்த முதல் உணர்வுக்கு கீழ்ப்படிந் திருக்கும்போது, தேவன் இயல்பாகவே இரண்டாவது உணர்வை நமக்குத் தருவார். தேவன் ஆபிரகாமை அழைத்தபோது, "நீ உன் தேசத்தையும், உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப் புறப்பட்டு...போ" (ஆதி. 12:1) என்ற முதல்படியை மட்டுமே அவர் அவனிடம் சொன்னார். இவைகளைவிட்டு புறப்பட்டபின்பு அவன் என்ன செய்யவேண்டும், அவன் எங்கே போகவேண்டும் என்பது அவனுக்கு காண்பிக்கப்படும். "நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப் போ" (ஆதி. 12:1) என்று தேவன் கூறினார். கர்த்தராகிய இயேசு பிறந்து, ஏரோது இராஜா அவரை அழிக்கத் தேடியபோது, எகிப்துக்கு தப்பித்துப்போ என்ற முதல் படியை மட்டுமே தேவன் யோசேப்பிடம் கூறினார்; தேவன் அடுத்த படிக்கான வார்த்தையைக் கொண்டுவருகிற வரை அவன் அங்கேயே இருக்க வேண்டியிருந்தது (மத். 2:13).

நாம் அவரை படிப்படியாக நோக்கிப் பார்க்கவும், ஒவ்வொரு கணமும் அவரைச் சார்ந்துகொள்ளவும், இதன் மூலம் அவருக்குப் பணிந்தடங்கவும் வேண்டுமென்று அவர் விரும்புவதே, தேவன் ஒரே நேரத்தில் ஓர் உணர்வை மட்டுமே நமக்குத் தருவதற்கான காரணம் என்பதை இது நமக்குக் காட்டுகிறது. ஆகையால், ஜீவவிதியின் உணர்வு ஜீவமரத்தின் அதே கோட்பாட்டில், அதாவது சார்ந்துகொள்ளுவதின் கோட்பாட்டில் இருக்கிறது. அது நாம் தேவனை சார்ந்து கொள்ளும்படிச் செய்கிறது, அதாவது ஓர் உணர்வுக்குபின் மற்றொரு உணர்வை நமக்குத் தருவதற்கு தேவனைச் சார்ந்துகொள்ளும்படிச் செய்கிறது. ஒரேவொரு முறை மட்டுமே அவரைச் சார்ந்துகொள்வதல்ல, அவரைத் தொடர்ச்சியாக சார்ந்துகொள்வதாகும். இது தேவனிடமிருந்து தனித்துவமா யிருக்கிற நன்மை-தீமையுள்ள அறிவுமரத்தின் கோட்பாட்டைப் போன்றதல்ல. இவ்வாறு ஜீவவிதியினால் வாழ விரும்புகிற நாம் ஒவ்வொருவரும் ஜீவனின் முதல் உணர்வை முக்கியமானதாகக் கருதி, அதற்குக் கீழ்ப்படிந்து, பின்பு தொடர்ச்சி யாகக் கீழ்ப்படியவேண்டும்.

ஜீவவிதி சில நேரங்களில் எதிர்மறையான உணர்வு களையும் நமக்குத் தருகிறது. தேவனுடைய ஜீவனோடு இசைந்துபோகாத தேவனுக்கு எதிரான சில செயல்களை நாம் செய்யும்போது, ஜீவவிதி நம்மை அமைதியின்மை யையும், பாதுகாப்பின்மை யையும் உணரச்செய்கிறது, மேலும் மரணத்தின் சுவையைக் கொண்டிருக்கச் செய்கிறது. இது நம்முள்ளிருக்கிற தேவனால் "தடைபண்ணப்பட்டு", "போகவொட்டாதிருந்தார்" என்பதாகும்

(அப். 16:6-7). நாம் என்ன செய்யவிரும்பினாலும் அல்லது நாம் என்ன செய்துகொண்டிருந்தாலும், நம்முள் தடைசெய்யப்படுகிற ஓர் உணர்வை நாம் பெற்றவுடனே, நாம் நிறுத்திவிட வேண்டும். நம்முள் இருக்கிற ஜீவவிதியின் உணர்வின்படி நாம் அசைய அல்லது நிறுத்த முடிந்தால், இந்த ஜீவவிதி தடையில்லாமல் உள்ளே வேலைசெய்ய முடியும்; அதாவது நம்முள் இருக்கிற ஜீவன் வளரவும் தொடர்ச்சியாக விரிவடையவும் முடியும். ஆகை யால் ஜீவவிதியின் உணர்வுக்கு குறிப்பாக முதல் உணர்வுக்குக் கீழ்ப்படிதல் என்பது, ஜீவவிதி நம்முள் வேலைசெய்வதற்கான இன்றியமையாத நிபந்தனையாகவும் இருக்கிறது. தேவன் நம்முள் வேலைசெய்யவேண்டும் என்ற காரணத்திற்காக, நாம் பயத்தோடும், நடுக்கத்தோடும் கீழ்ப்படிய வேண்டுமென்று பிலிப்பியர் 2-ல் அப்போஸ்தலன் விரும்புகிறார் (வ. 12-13). தேவன் நம்முள் வேலைசெய்வதற்கு கீழ்ப்படிதலால் வருகிற நம் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது; ஆகையால் நம் கீழ்ப்படிதல் தேவன் வேலைசெய்வதற்கான ஒரு கோரிக்கையாக மாறுகிறது.

## VI. ஜீவவிதியின் செயல்பாடு

அன்பும் கீழ்ப்படிதலுமே ஜீவவிதி வேலைசெய்வதற்கான இரண்டு கோரிக்கைகள் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். அவைகள் ஜீவ விதியோடுள்ள தொடர்பில், நம் இரண்டு பொறுப்பு களாகவும் இருக்கின்றன. நாம் அன்புகூருகிறவர்க ளாகவும் கீழ்ப்படிய விருப்பமுள்ளவர்களாகவும் இருந்தால், ஜீவவிதி நம்முள் இருக்கிற பல்வேறு பகுதிகளில் தானாகவே வேலைசெய்யவும், அதன் இயல்பான செயல்பாட்டை வெளிப்படுத்தவும் முடியும்.

ஜீவவிதிக்கு இந்த இரண்டு வகையான செயல்பாடுகள் இருக்கின்றன. ஒன்று எடுத்துப்போடுவது அல்லது கொல்லுவது, மற்றொன்று கூட்டிச்சேர்ப்பது அல்லது நிரப்பீடளிப்பது. ஒருபக்கம் அது நம்மில் இருக்கக்கூடாதவைகளை எடுத்துப் போடுகிறது, மறுபக்கம் அது நம்மில் இருக்கவேண்டி யவைகளை கூட்டிச்சேர்க்கிறது. நம்மில் எடுத்துப்போடப்படுவது ஆதாமின் மூலக்கூறு, மற்றும் நம்மில் கூட்டிச்சேர்க்கப்படுவது ஜீவன்-தரும் ஆவியானவராக கிறிஸ்துவின் மூலக்கூறு. பழையது எடுத்துப் போடப்படுகிறது, புதியது கூட்டிச்சேர்க்கப் படுகிறது. மரித்தது எடுத்துப்போடப்படுகிறது, ஜீவனுள்ளது கூட்டிச்சேர்க்கப்படுகிறது. ஜீவவிதி நம்முள் வேலைசெய்கிறபோது, அது நம்முள் வெளிப்படுகிற இந்த இரண்டு வகையான செயல்பாடுகளையும் கொண்டுள்ளது: ஒன்று நம் எல்லா பழைய படைப்பையும் படிப்படியாக எடுத்துப்போடுகிறது, மற்றொன்று தேவனுடைய எல்லா புதிய படைப்பையும் படிப்படியாக கூட்டிச்சேர்க்கிறது.

இந்த வழியில், நம்முள் இருக்கிற ஜீவன் படிப்படியாக முன்னேறுகிறது.

ஜீவவிதி நம்முள் இந்த இரண்டு வகையான செயல்பாடு களைக் கொண்டிருப்பதற்கான காரணம், ஜீவனிலிருந்து வருகிற விதி இரண்டு விசேஷமான மூலக்கூறுகளைக் கொண்டிருப்பதே யாகும்: ஒன்று மரணத்தின் மூலக்கூறு, மற்றொன்று ஜீவனின் மூலக்கூறு. மரணத்தின் மூலக்கூறு என்பது சிலுவையில் கர்த்தராகிய இயேசுவின் ஆச்சரியமான மரணம், அதாவது சகலத்தையும் உள்ளடக்குகிற, சகலத்தையும் முடிவுக்குக் கொண்டுவருகிற மரணமாகும். ஜீவனின் மூலக்கூறு என்பது கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதல் அல்லது கர்த்தருடைய உயிர்த்தெழுந்த ஜீவனின் வல்லமையாகும்; எனவே இது உயிர்த்தெழுதலின் மூலக்கூறு என்றும் அழைக்கப்படுகிறது.

ஜீவவிதியில் உள்ள எடுத்துப்போடுகிற செயல்பாடு, ஜீவனில் அடங்கியுள்ள கர்த்தருடைய சகலத்தையும் உள்ளடக்கிய மரணத்தின் மூலக்கூறிலிருந்து வருகிறது; ஆகையால் சிலுவையில் கர்த்தருடைய மரணம் மனிதனில் தேவன் கண்ட எல்லா இடையூறுகளையும் ஒழித்துவிட்டதைப்போல, இன்றும் ஜீவவிதி வேலைசெய்வதின்மூலம், அவருடைய மரணம் நம்முள் செயல்படுத்தப்படுகிறது. தேவனோடு இசைந்துபோகாததும், தேவனுக்குப் புறம்பே இருக்கிறதுமான பாவத்தின் மூலக்கூறு, உலகத்தின் மூலக்கூறு, மாம்சத்தின் மூலக்கூறு, இச்சையின் மூலக்கூறு, பழைய படைப்பின் மூலக்கூறு, இயற்கையான கட்டமைப்பின் மூலக்கூறு போன்றவைகளை எல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக அது கொல்லுகிறது, எடுத்துப்போடுகிறது. ஜீவவிதியி லுள்ள கூட்டிச்சேர்க்கும் செயல்பாடு, ஜீவனில் அடங்கியுள்ள கர்த்தருடைய உயிர்த்தெழுதலின் மூலக்கூறிலிருந்து வருகிறது; ஆகையால் கர்த்தருடைய உயிர்த்தெழுதல் மனிதனை தேவ னுக்குள் கொண்டுசென்று, தேவனுக்குரிய எல்லாவற்றிலும் பங்கு பெறுவதற்கு மனிதர்களுக்குத் திறனளிக்கிறதைப்போல, இன்றும் ஜீவவிதியின் வேலையின்மூலம் அவருடைய உயிர்த் தெழுதல் நம்முள் பிரயோகிக்கப்படுகிறது. தேவத்துவத்தின் சகல பரிபூரணத் தைக் கொண்டும் நாம் நிரப்பப்படுமாறு, தேவனுடைய வல்லமை, தேவனுடைய பரிசுத்தம், தேவனுடைய அன்பு, தேவனுடைய பொறுமை, மேலும் தேவனுக்குரிய எல்லா மூலக்கூறு, அல்லது புதிய படைப்பின் மூலக்கூறு போன்றவைகளை அது நம்முள் கூட்டிச்சேர்க்கிறது, மேலும் நமக்கு நிரப்பீடளிக்கிறது என்பதே இதன் பொருளாகும்.

இது, நாம் எடுத்துக்கொள்கிற மருந்தைப்போன்றது; அவை களில் சிலவற்றில் இரண்டு வகையான மூலக்கூறுகள் அடங்கி

யுள்ளன: கிருமிகளைக் கொலைசெய்யும் மூலக்கூறு, மற்றும் போஷாக்களிக்கிற மூலக்கூறு. கொல்லுகிற மூலக்கூறின் செயல்பாடு, நம்மிடம் இருக்கக்கூடாத வியாதியை எடுத்துப் போடுகிறது; போஷாக்களிக்கிற மூலக்கூறின் செயல்பாடு, நமக்குத் தேவையான ஜீவ மூலக்கூறுகளை வழங்குகிறது.

மேலும் இது நம் உடலிலுள்ள இரத்தத்தைப் போன்றது: இது இரத்த வெள்ளை அணுக்கள், இரத்த சிவப்பு அணுக்கள் ஆகிய இரண்டு வகையான மூலக்கூறுகளை அடக்கியிருக்கிறது. இரத்த வெள்ளை அணுக்களுக்கு கிருமிகளைக் கொல்லும் ஒரு செயல்பாடு இருக்கிறது; இரத்தச் சிவப்பு அணுக்களுக்கும் ஒரு போஷாக்கு அளிக்கிற செயல்பாடு இருக்கிறது. இரத்தம் நமக்குள் சுற்றியோடுகிற போதும் பாய்ந்தோடுகிறபோதும் இரத்த வெள்ளை அணுக்கள் நம் உடலைத் தாக்கியிருக்கிற கிருமிகளைக் கொன்று சுத்தம் செய்கிறது, அதேநேரத்தில் இரத்த சிவப்பு அணுக்கள் நம் முழு உடலிலுள்ள ஒவ்வொரு பகுதிக்கும் தேவையான போஷாக்கை வழங்குகிறது. இதைப்போல, தேவனுடைய ஜீவவிதி நம்முள் வேலைசெய்கிறபோது, அல்லது தேவனுடைய ஜீவன் நம்முள் வேலைசெய்கிறபோது, தேவனுடைய ஜீவனில் அடங்கியுள்ள, ஜீவன் மரணம் ஆகிய இரண்டு மூலக்கூறுகள், நம்முள் கொல்லுகிற மற்றும் நிரப்பீடளிக்கிற செயல்பாடுகளையும் கொண்டிருக்கிறது, அதாவது உலகம் மாம்சம் ஆகிய இப்படிப்பட்ட நம் ஆவிக்குரிய கிருமிகளைக் கொல்லுகிறது, மற்றும் தேவனுடைய எல்லா ஐசுவரியங்களையும் உள்ளடக்கிய ஆவிக்குரிய போஷாக்கை நமக்கு வழங்குகிறது.

இவ்வாறு ஜீவனின் வளர்ச்சியை ஆசையாய்ப் பின்தொடர்வதற்கான ஒரு சரியான வழி இங்கு இருக்கிறது என்பதை நாம் பார்க்கவேண்டும். நாம் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய ஜீவனைப் பெற்றவுடனே, நம்மில் இருக்கிற தேவனுடைய ஜீவவிதி, ஒரு குறிப்பிட்ட உணர்வை நாம் கொண்டிருக்கும்படிச் செய்கிறது. நாம் ஜீவனின் வளர்ச்சியைத் தேட விரும்பினால், மனச்சாட்சியோடு இடைபடுவதற்கும், நம் உணர்ச்சி, எண்ணங்கள் மற்றும் சித்தத்தோடு இடைபடுவதற்கும், நாம் தேவனை நேசிக்கவும், இந்த உணர்வுக்கு கீழ்ப்படியவும் வேண்டும். இத்தகைய இடைபடுதல்களைக் கொண்டிருப்பதின்மூலம், நம் ஆவியிலுள்ள தேவனுடைய ஜீவன், ஒரு குறிப்பிட்ட உணர்வை நமக்குத் தொடர்ச்சியாகக் கொடுக்கும். நாம் இத்தகைய உணர்வுகளுக்குக் கீழ்ப்படியும்போது, ஜீவவிதி நம்முள் சீரமைத்து அதின் இரண்டு செயல்பாடுகளை வெளிப்படுத்துகிறது: அதாவது தேவனுக்குப் புறம்பே இருக்கிறவைகளை எடுத்துப்போடுகிறது மற்றும் தேவனில் இருக்கிற எல்லாவற்றையும் கூட்டிச்சேர்க்கிறது. இந்த வழியில்

நாம் தேவனுடைய ஜீவனில் படிப்படியாக வளர்ந்து முதிர்ச்சியடைய முடியும். இவைகளே மிகவும் நிஜமான நடைமுறையிலான அனுபவங்களாகும். நாம் பேசிக்கொண்டிருக்கிற ஜீவனின் வழி இங்குதான் இருக்கிறது!

## VII. ஜீவவிதியின் வல்லமை

மேலே குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு செயல்பாடுகளுடன்கூட, ஜீவவிதிக்கு வல்லமையும் இருக்கிறது. பழைய ஏற்பாட்டின் விதி என்பது மனிதனுக்கு வெளியே எழுதப்பட்டிருந்த விதி, மரித்துப் போயிருந்த விதி, எழுத்துக் களாலான விதி என்று நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தோம். அது மனிதனிடம் கோரிக்கைகளை மட்டுமே வைக்கிறது; அதன் கோரிக்கைகளுக்கு அவன் பதிலளிக்கும்படி மனிதனுக்கு நிரப்பீட்டை வழங்கும் வல்லமை அதற்கு இல்லை. ஆகையால் அது "செய்யக்கூடாததை" (ரோமர் *8:3*), "ஒன்றையும் பூரணப்படுத்தவில்லை" (எபி. *7:19*). ஆனால், புதிய ஏற்பாட்டின் விதி நம் உள்ளார்ந்த பகுதிகளில் எழுதப்பட்ட விதி, ஜீவிக்கிற விதி, ஜீவவிதி. இந்த ஜீவன் "வல்லமை" உடைய தேவனுடைய "அழியாத ஜீவன்" (எபி. *7:17*). இவ்வாறு இந்த ஜீவனிலிருந்து வருகிற விதி வல்லமையையும் கொண்டிருக்கிறது. மேலும் அது எல்லாக் காரியங்களிலும் நமக்குத் திறனளிக்க முடியும்.

ஜீவவிதியின் வல்லமை என்பது தேவனுடைய ஜீவனின் வல்லமை, மேலும் இந்த ஜீவனிலிருந்து விதி வருகிறது என்பதை நாம் இங்கு பார்க்கவேண்டும். இந்த வல்லமைதான் கர்த்தராகிய இயேசுவை மரணத்திலிருந்து எழுப்பி, எல்லா வற்றிற்கும் மேலாக பரலோகத்திற்கு பரமேறிச்செல்ல திறன ளித்தது. மேலும் இந்த வல்லமைதான் ஒவ்வொரு நாளும் நம்முள் சீரமைக்க நாடுகிறது. மேலும் நாம் வேண்டிக் கொள்ளுகிற, நினைக்கிற எல்லாவற்றிற்கும்மேலாக மிக அதிகமாக கிரியைசெய்கிறது (எபே. *1:19; 3:20*). இந்த வல்லமை நமக்குள் கீழ்க்கண்ட காரியங்களை நிறைவேற்ற முடியும்.

### A. இது நம் இருதயம் தேவனை சார்ந்திருக்கும்படிச்செய்கிறது

முதலாவது, இந்த வல்லமை நம் இருதயம் தேவனைச் சார்ந்திருக்கும்படிச்செய்கிறது. ஜீவவிதிக்கும், இருதயத்திற்கும் உள்ள உறவைப்பற்றி நாம் பேசியபோது, ஜீவவிதி இருதயத்தால் தடைசெய்யப்படமுடியும் என்பதை நாம் குறிப்பிட்டோம். நம் இருதயம் தேவனைச் சார்ந்திருக்கவில்லையென்றால், தேவனுடைய ஜீவன் கடந்துசெல்லமுடியாது. ஆனால் அவருடைய ஜீவன்

நம்முள் அப்படியே நின்றுவிடாது என்பதற்காக தேவனுக்கு ஸ்தோத்திரம். தேவனைச் சார்ந்திராத நம் இருதயத்தை, தேவனைச் சார்ந்திருக்கச்செய்யும் அளவுக்கு அது நம்முள் தொடர்ந்து வேலைசெய்யும். "ராஜாவின் இருதயம் கர்த்தரின் கையில் நீர்க்கால் களைப் போலிருக்கிறது; அதைத் தமது சித்தத்தின்படி அவர் திருப்புகிறார்" என்று நீதிமொழிகள் *21:1* கூறுகிறது. ஆகவே, "என் இருதயம் பொருளாசையைச் சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும்" (*சங். 119:36*) என்று தேவனிடம் நாம் கேட்க முடியும். நாம் இந்த வழியில் கேட்க விருப்பமாயிருக்கும் போது, தேவனுடைய ஜீவவிதியின் வல்லமை நம் இருதயத்தை மிக இயல்பாக திருப்பவும், நம் இருதயம் முழுவதுமாக தேவனை சார்ந்திருக்கவும் செய்கிறது.

## B. இது நம்மை தேவனுக்குப் பணிந்தடங்கச்செய்கிறது

இரண்டாவது இந்த வல்லமை நம்மை தேவனுக்குப் பணிந்தடங்கச் செய்கிறது. ஜீவவிதியின் கோரிக்கைகளைப் பற்றி நாம் பேசியபோது, நம்மில் ஜீவவிதி வேலைசெய்ய அதோடு ஒத்துப்போகும் நம் பணிந்தடங்குதல் தேவைப் படுகிறது என்று நாம் குறிப்பிட்டோம். ஆயினும் எத்தனை முறை நாம் பணிந் தடங்க முடியவில்லை என்பது மட்டுமல்ல, மாறாக நாம் பணிந் தடங்க விரும்பவுமில்லை. இப்படிப்பட்ட நேரங்களில், ஜீவவிதி யின் வல்லமை நம்மைப் பணிந்தடங்கச் செய்யும்படி நம் நிலைமையோடு முழுவதும் இடைபடக்கூடியதாக இருக்கிறது.

நாம் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய ஜீவனைக் கொண்டிருந்து, சில நேரங்களில் பின்வாங்கி நம் இருதயம் கடினப்பட்டு தேவனுக்கு கீழ்ப்படிய இயலாததாகிவிட்டாலும், நம்முள்ளிருக்கும் அவருடைய ஜீவன் அதன் சீரமைக்கும் வேலையை நிறுத்திவிடாமல் இருக்க தேவன் நம்மேல் இரக்கமாயிருக்கிறார். அவருடைய வல்லமையால், அவர் நம் உணர்ச்சியைச் சீரமைத்து, நம் சித்தத்தையும் சீரமைக்கிறார்; இவ்வாறு, முன்னும் பின்னும் சீரமைத்து அவருக்கு மீண்டும் கீழ்ப்படிவதற்கு அவர் நமக்குத் திறனளிக்கிறார்.

தேவனுக்கு முன்பாக நம் சித்தம் என்ற காரியம் இருப்பதற்கான காரணம் தேவன் வேலைசெய்வதே என்று பிலிப்பியர் *2:13* கூறுகிறது. ஆகவே நம் சித்தத்தின் பணிந் தடங்குதலும்கூட நம்முள் இருக்கிற தேவனுடைய ஜீவவிதியின் வல்லமை யினுடைய வேலைசெய்தலின் விளைவாக இருக்கிறது. இந்த வல்லமை நம் கீழ்ப்படியாத சித்தத்தை தேவனுக்கு கீழ்ப்படியும் சித்தமாகத் திருப்பமுடியும்.

உண்மையாகவே தன்னால் கீழ்ப்படியமுடியாது என்று

உணர்ந்த ஒரு சகோதரி இருந்தாள். அவளுடைய மனம் மட்டும் குழப்ப மடையவில்லை அவளுடைய மனச்சாட்சியும் குற்றப் படுத்துதலினால் வாதிக்கப்பட்டது. பின்பு தன்னை விடுவிக்கும்படி அவள் தேவனிடத்தில் கேட்டாள். அவள் தேவனிடம் கதறியபோது, தேவன் அவளுக்கு பிலிப்பியர் 2:13-ல் உள்ள வெளிச்சத்தை காண்பித்தார். அப்போது அவள் தன்னை கீழ்ப்படியச்செய்ய தேவன் வேலைசெய்ய முடியும் என்று அறிந்துகொண்டாள். இவ்வாறு அவள் மகிழ்ச்சியையும் இளைப்பாறுதலையும் கண்டாள்.

## C. இது தேவன் நமக்காக நியமித்த நற்கிரியையை நடப்பிக்கச்செய்கிறது

மூன்றாவது, இந்த வல்லமை நாம் நற்கிரியைகளில் நடக்கும்படியாக (எபே. 2:10) தேவன் முன்னதாகவே ஆயத்தப் படுத்தியவைகளை நடப்பிக்கச்செய்கிறது. இப்படிப் பட்ட நன்மை தேவனிலிருந்து வருகிறது. மேலும் தேவனுடைய ஜீவனிலிருந்து பாய்ந்தோடுகிறது; ஆகையால் இப்படிப்பட்ட நற்கிரியைகளைச் செய்வது, தேவனையே வாழ்ந்துகாட்டுவதாகும். இப்படிப்பட்ட நன்மை மனித நன்மைக்கு மிகத்தூரமானது, மனித ஜீவனால் ஒருபோதும் வாழ்ந்துகாட்ட முடியாதது. ஆனால் நம்முள் இருக்கும் தேவனுடைய ஜீவன் அவருடைய வல்லமையைக்கொண்டு நம்மைச் சீரமைத்து, இப்படிப்பட்ட அசாதாரணமான நன்மையை நாம் வாழ்ந்துகாட்டும்படிச் செய்கிறது.

## D. இது நம் முழு இருதயத்தோடும் நம் முழுப் பலத்தோடும் நம்மைப் பிரயாசப்படச்செய்கிறது

நான்காவது, இந்த வல்லமை நம் முழு இருதயத்தோடும் முழுப் பலத்தோடும் கர்த்தருக்காக நம்மை வேலைசெய்யச் செய்கிறது. தான் மற்ற அப்போஸ்தலர்களைவிட அதிகமாக பிரயாசப்பட்டதற்கான காரணம் தன்னால் அல்ல, மாறாக தனக்குக் கொடுக்கப்பட்ட தேவனுடைய கிருபை அல்லது தன்னோடிருந்த தேவனுடைய ஜீவனின் கிருபையே என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறினார் (1 கொரி. 15:10). மேலும் அவர் நான் எனக்குள்ளே "வல்லமையாய்க்" கிரியை நடப்பிக்கிற பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன் என்று கூறினார் (கொலோ. 1:29). "வல்லமை" என்ற வார்த்தையை "பேராற்றல் வாய்ந்த" என்றும் மொழிபெயர்க் கலாம். அவருடைய வேலை தன் சொந்த ஆத்துமாவுக்குரிய வல்லமையைச் சார்ந்ததல்ல, மாறாக அவருக்குள் குடியிருந்த தேவனுடைய ஜீவனின் பேராற்றலுடைய வல்லமையைச் சார்ந்திருந்தது என்பதே இதன் பொருளாகும். கடந்த எல்லாத் தலைமுறைகளிலும் கர்த்தரால் பயன்படுத்தப்

பட்டவர்கள் கர்த்தருடைய வேலையில் தொடர்ச்சியாக உழைத்து, தொடர்ச்சியாகப் பாடுபட்டார்கள். அவர்கள் தங்கள் தனிப்பட்ட முயற்சியிலிருந்தல்ல, அவர்கள் தேவனை நேசித்ததாலும், தேவனைச் சார்ந்துகொண்டதாலும் உழைத்தார்கள். இதனால், தங்களுக்குள் வேலைசெய்வதற்கும், அதாவது தங்களுக்குள் சீரமைப்பதற்கும், மேலும் தங்களுக்குப் புறம்பே ஒரு நடவடிக்கையை சீரமைப்பதற்கும், அதாவது ஒரு வேலையை விடுவிப்பதற்கும், அவர்கள் தேவனுடைய ஜீவனை அனுமதித்தார்கள். இந்த வெளிக்கொண்டுவரும் நடவடிக்கை அல்லது விடுவிக்கப்பட்ட வேலை தேவனுடைய ஜீவனின் பேராற்றல் வாய்ந்த வல்லமையின் கிரியைசெய்தலாக இருக்கிறது. இந்த தேவனுடைய ஜீவனின் பேராற்றல்வாய்ந்த வல்லமை மனிதனுக்குள் இருந்து சீரமைக்கிறபோது, ஒருவரும் மந்தமாக இருக்க முடியாது. தேவனுடைய ஜீவவிதியின் பேராற்றல்வாய்ந்த வல்லமையை தங்களுக்குள் கிரியைசெய்ய அனுமதிக்கிற ஒவ்வொருவரும் நிச்சயமாக தன் முழுப்பலத்தோடு அதாவது, எந்தப் பிரயாசத்திலும் தன் சொந்த ஜீவனை கணக்கில் கொள்ளாமல் வேலைசெய்வார்கள்.

சீன-ஜப்பான் யுத்தத்திற்குபிறகு, பல்வேறு உள்ளூர் சபைகளில் வேலைசெய்வதற்குச் சென்றோம். நாங்கள் முழுவதுமாக ஆசீர்வதிக்கப்பட்டோம். அதிகமான கனியும் கிடைத்தது. நாங்கள் ஷங்காயிக்கு திரும்பிவந்தபோது, சகோதரர் நீ என்னிடம்: "சகோதரனே, நாம் 'தொந்தரவு செய்கிறவர்கள்'. சற்று முன்பு நாம் மற்ற சபைகளில் வெறுமனே தொந்தரவு செய்திருக்கிறோம், இப்போது ஷங்காயில் உள்ள சபைகளில் தொந்தரவு செய்யப் போகிறோம்" என்று கூறினார். இவைகள் நகைச்சுவையான வார்த்தைகளாக இருந்தாலும், கருத்தாழமாகப் பேசுவதானால், தேவனுடைய ஜீவனில் வாழ்கிறவர்களும், தேவனுடைய ஜீவவிதி வேலைசெய்ய அனுமதிக்கிறவர்களும், நிச்சயமாக "தொந்தரவு செய்கிறவர்களாக" இருக்கிறார்கள். இது ஏனென்றால், அவர்களுக்குள் இருக்கிற தேவனுடைய ஜீவன் முடிவில்லாத வல்லமையான ஜீவன் மற்றும் நேர்மறையான உந்தித்தள்ளுகிற ஜீவன், அதாவது பேராற்றல்வாய்ந்த வல்லமையை உடைய ஜீவன். எப்போதெல்லாம் இந்த ஜீவன் வேலைசெய்து தங்களுக்குள் சீரமைக்கிறதோ, அப்போதெல்லாம் அவர்கள் உள்ளுக்குள் வெடித்துவிடுவார்கள்; அவர்கள் பேராற்றல்வாய்ந்த வல்லமையையுடைய வேலையை நிறைவேற்றுவார்கள். இதன் விளைவாக அவர்கள் இயல்பாகவே, தொந்தரவுசெய்கிற வர்களாக மாறுவார்கள். மாறாக எப்போதெல்லாம் ஒரு நபர் எந்தக் கிளர்ந்தெழுதலையும் ஏற்படுத்தாமலும் கர்த்தருடைய வேலை ஒலியோ வாசனையோ இல்லாமலும் கர்த்தருடைய வேலையைச்

செய்கிறாரோ, அப்போதெல்லாம் அவனுக்குள் இருக்கிற ஜீவன் கட்டாயம் மட்டுப்படுத்தப்பட்டிருக்கிற வேண்டும், மேலும் ஜீவவிதி அவன் மூலமாய் வேலைசெய்யமுடியாது என்று சொல்ல அதை ஆராய வேண்டிய தேவையேயில்லை.

நீங்கள் என்னைத் தவறாகப் புரிந்துகொள்ளவில்லையென்றால், நான் ஒரு சாட்சியைக் கூறட்டும். அதாவது பலவேளைகளில் நான் ஜெபத்தில் நேரம் செலவுசெய்யத் துணிவதில்லை. ஒவ்வொரு நாளும் அரைமணி நேரம் நான் ஜெபித்தாலே, ஜீவ சக்கரம் சுழலத் தொடங்குகிறது, ஜீவவிதி சீரமைக்கத் தொடங்குகிறது, மேலும் என்னால் வேலைக்குச் செல்லாமல் இருக்கமுடியாது என்பதுவரை, உந்தித்தள்ளும் வல்லமை எனக்குள் உந்தித்தள்ள ஆரம்பிக்கிறது. அங்கே நான் சாகவேண்டியிருந்தாலும்கூட, நான் வேலைசெய்தேயாக வேண்டும். நான் வேலைசெய்யாவிட்டால் பாடுபடுகிறேன்; நான் வேலைசெய்தால் திருப்தியடைகிறேன். ஆ, வேலையின் உந்தித்தள்ளுகிற வல்லமை இங்குதான் இருக்கிறது!

## E. இது நம் சேவையை உயிருள்ளதாகவும் பசுமையாகவும் இருக்கச்செய்கிறது

ஐந்தாவது, இந்த வல்லமை நாம் உயிருள்ளதும், பசுமையானதுமான சேவையைக் கொண்டிருக்கும்படிச் செய்கிறது. பழைய ஏற்பாட்டுச் சேவை எழுத்தின்படியானது. அது பழமையானதாக இருப்பதால் மரித்திருக்கிறது, மேலும் அது மனிதனை மரித்தவனாக்குகிறது. புதிய ஏற்பாட்டுச் சேவை ஆவியின் படியானது; இது பசுமையானது, ஆகையால் இது ஜீவனுள்ளதும், மனிதனை உயிருள்ளவனாகவும் ஆக்குகிறது. பழைய ஏற்பாட்டுச் சேவை புறம்பான மரித்த சட்ட திட்டங்களை அடிப்படையாகக் கொண்ட ஓர் நடவடிக்கை; ஆகையால், இது மனிதனுக்கு ஜீவ நிரப்பீட்டைத் தரமுடியாது. புதிய ஏற்பாட்டுச் சேவை ஆவியிலுள்ள ஜீவவிதியின் சீரமைத்தலின் விளைவாக இருக்கிறது. இது ஜீவனிலிருந்து வருகிறது; ஆகையால் இது மனிதனுக்கு ஜீவனைத் தரவும், அவன் உயிருள்ள நிரப்பீட்டை பெறவும்செய்கிறது. கூட்டங் களில் நமக்கு உள்ள நடவடிக்கைகளை உதாரணமாக எடுத்துக்கொள்வோம். நம்முள் இருக்கிற ஜீவவிதி அசைந்து கொண்டிருக்குமேயானால், ஒரு சில வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வதோ, ஒரு சாட்சிகொடுப்பதோ, ஒரு அறிவிப்பு செய்வதோ கூட உயிருள்ளதாக இருக்கமுடியும், அதாவது மனிதன் ஜீவ நிரப்பீட்டைப் பெற்றுக்கொள்ளச் செய்யமுடியும்.

நாம் நம் சொந்தத் திறமையினாலோ, பேச்சாற்றலினாலோ, கல்வியினாலோ அல்ல, மாறாக தேவனுடைய ஆவியானவராலும் *(2 கொரி. 3:5-6)*, "தேவனுடைய கிருபையின் வரத்திற்கு"

ஏற்றபடியும் (எபே. 3:7), ஜீவிக்கிற சேவையுடன் புதிய ஏற்பாட்டின் தகுதியான ஊழியர்களாக மாறுகிறோம். இப்படிப்பட்ட வரம் அந்நிய பாஷைகளில் பேசுதல், தரிசனங்களைப் பார்த்தல், சுகமாக்குதல், பிசாசுகளைத் துரத்துதல், போன்ற இயற்கைக்கு அப்பாற்பட்ட வரங்களைக் குறிக்கவில்லை. மாறாக தேவனுடைய வல்லமையின் கிரியைசெய்தலுக்கு ஏற்றபடி நமக்குக் கொடுக்கப் படுகிறதும், தேவனால் நமக்கு இலவசமாக கொடுக்கப்பட்ட ஜீவனில் அடங்கிய வல்லமை தொடர்ச்சியாக கிரியைசெய்வதால் நம்மால் ஆதாயப்படுத்தப்படுகிறதுமான கிருபையின் வரத்தைக் குறிக்கிறது. ஆகையால் கிறிஸ்துவின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்களை பிரசங்கிப்பதற்கும், எல்லாவற்றையும் படைத்த தேவனில் யுகங்கள்தோறும் மறைந்திருந்த இரகசியத்தை, எல்லா மனிதர்களும் பார்க்கும்படிச்செய்யவும் இந்தக் கிருபையின் வரம் தனக்கு திறனளிக்க முடியும் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார் (எபே. 3:8, 11). ஆ, என்னே மாபெரும் வரம் இது! எனினும், இப்படிப்பட்ட மாபெரும் வரம் தேவனுடைய ஜீவவிதியின் வல்லமை கிரியைசெய்வதற்கு ஏற்றபடி அவருக்கு கொடுக்கப்பட்டது. ஆகையால் தேவனுடைய ஜீவவிதியின் வல்லமை கிரியைசெய்வதால், நாம் பெறுகிற கிருபையின் வரம் உயிருள்ளதும் பசுமையானதுமான வழியில் தேவனை சேவிக்க முழுமையாக நமக்குத் திறனளிக்கிறது.

## VIII. ஜீவவிதியின் விளைவு

தேவனுடைய ஜீவவிதி என்றும்-விரிவடைகிற மண்டலங் களில் நம்மில் தடையில்லாமல் வேலைசெய்வதற்கு நாம் அனுமதிக்கும் போது, நம்முள்ளிருக்கிற தேவனுடைய ஜீவன் நம்மில் "கிறிஸ்து...உருவாகுமளவும்" பரவமுடியும் (கலா. 4:19). இவ்வாறு கிறிஸ்து நம்மில் படிப்படியாக உருவாக்கப் படும்போது, இறுதியில் நாம் முழுமையாக "அவருக்கு ஒப்பாக" (1 யோவான் 3:2) மாறும்வரை படிப்படியாக கர்த்தருடைய சாயலுக்கு மறுசாயலாக்கப்படுகிறோம் (2 கொரி. 3:18) மேலும் தேவனுடைய குமாரனின் சாயலைக் கொண்டிருக்கிறோம் (ரோமர் 8:29). இதுவே நம்முள் இருக்கிற ஜீவவிதி வேலைசெய்வதின் மகிமையான விளைவாகும்.

கிறிஸ்து நம்மில் உருவாக்கப்படுவதின் அர்த்தம் என்ன? நாம் ஒரு எளிய உதாரணத்தைப் பயன்படுத்தலாம். ஒரு முட்டைக்குள் ஒரு கோழியினுடைய ஜீவன் இருக்கிறது. ஆயினும் முதல் சில தினங்களில் கோழிக்குஞ்சு உருவாகும் போது, ஒரு மின்சார விளக்கைப் பயன்படுத்தி அந்த முட்டையினூடாகப் பார்க்கும் போது, அதன் எந்தப் பகுதி தலை என்பதையும், எந்தப் பகுதி

கால் என்பதையும் நாம் வேறுபடுத்திப் பார்க்கமுடியாது. அடைகாக்கும் காலம் முடிந்து உள்ளிருக்கிற கோழிகுஞ்சு ஓட்டை உடைத்துக்கொண்டு வெளியே வருவதற்கு தயாராக இருக்கும் நேரத்தில், நாம் மீண்டும் மின்சார விளக்கைப் பயன்படுத்திப் பார்த்தால், அந்த ஓட்டுக்குள் ஒரு கோழிக்குஞ்சினுடைய முழுமை யான உருவத்தை நாம் பார்க்கலாம். இந்தக் கோழிக்குஞ்சு முட்டைக்குள் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதே இதன் அர்த்தமாகும். இதைப்போல கிறிஸ்து நம்மில் உருவாக்கப்படுகிற போது, கிறிஸ்துவின் வடிவம் நம்முள் முழுமையாக்கப் பட்டிருக்கிறது என்பதே இதன் அர்த்தம். மறுபிறப்பின்மூலம் கிறிஸ்துவின் ஜீவனை நாம் பெற்றுக்கொண்டபோது, கிறிஸ்து நம்மில் பிறந்தார், அவர் ஜீவாதாரரீதியில் முழுமையாக இருக்கிறார், ஆனால் வடிவத்தில் முழுமையடையவில்லை. பின்பு நம் உள்ளார்ந்த பகுதிகளில் இந்த ஜீவவிதி திரும்பத் திரும்ப வேலை செய்யும்போது, இந்த ஜீவனுடைய மூலக்கூறு நம் பல்வேறு பகுதிகளில் படிப்படியாகப் பெருகுகிறது; இவ்வாறு அவருடைய ஜீவன் நம்முள் முழுமையாக உருவாகும்வரை கிறிஸ்து நம்மில் வளருகிறார்.

கிறிஸ்து நம்மில் படிப்படியாக உருவாக்கப்படும்போது நாமும் படிப்படியாக மறுசாயலாக்கப்படுகிறோம். கிறிஸ்து நம்மில் எந்த அளவு உருவாக்கப்படுகிறாரோ அந்த அளவிற்கு நாம் மறுசாயலாக்கப்படுகிறோம். கிறிஸ்துவின் உருவாகு தலும், நம் மறுசாயலாகுதலும், உள்ளேயும் வெளியேயும் ஒரே நேரத்தில் நடைபெறுகிறது. நம் பல்வேறு பகுதிகளில் கிறிஸ்துவின் மூலக்கூறு உள்ளிருந்து வெளியே பெருகுவதே கிறிஸ்துவின் உருவாகுதலாக இருப்பதைப்போல, நாம் கிறிஸ்துவைப்போல படிப்படியாக மாறுகிறவரை, உள்ளிருந்து வெளியே இந்தப் பல்வேறு பகுதிகளில் நம் மறுசாயலாகுதலும் இருக்கிறது. இவ்வாறு மறுசாயலாகுதல் ஆவியிலிருந்து புரிந்துகொள்ளு தலுக்கும் (அல்லது ஆத்துமா வுக்கும்), பின்பு நடத்தைக்கும் (அல்லது உடலுக்கும்) தொடர்ந்து நடைபெறுகிறது. மறுபிறப்பின்மூலம் நம் ஆவி உயிர்ப்பிக்கப்பட்டபோது, அது புதுப்பிக்கப்படுவதால் மறுசாயலாக்கப்படுகிறது (புதிய ஆவியைப்பற்றி பக்கம் 42-43-ஐ பார்க்க). பின்பு ஜீவவிதி வேலைசெய்வதால் ஆத்துமாவி லுள்ள புரிந்துகொள்ளுதலும் புதிதாக்கப்படுவதால் மறுசாய லாக்கப்படுகிறது. பின்பு தேவனுடைய ஜீவஒளி பிரகாசிப்பதால் நாம் நம் சுயத்தை அடையாளம்கண்டு நம் சுயத்தை எதிர்த்து நிற்கிறோம். மேலும் பரிசுத்த ஆவியானவரால் நம் சுயத்தை சிலுவையில் அறைந்து நம்மிலிருந்து வாழ்வதற்கு தேவனுடைய ஜீவனை மட்டுமே

அனுமதிக்கிறோம். இவ்வாறு நம் ஆவிக்குரிய அனுபவங்களில், நம் நடத்தையில் நாம் அதிகமதிகமாக பழைய மனிதனை கழற்றிப்போட்டு புதிய மனிதனை அணிந்துகொள்கிறோம்; ஆகையால், நம் புறம் பான நடத்தையும் படிப்படியாக புதிதாக்கப்பட்டு மறுசாயலாக்கப்படுகிறது. இவ்வாறு நம் சுபாவம் கர்த்தருடைய சாயலாக மறுசாயலாக்கப்படுகிறது என்பதே கிறிஸ்து நம்மில் உருவாக்கப்படுகிறார் என்பதின் அர்த்தமாகும். நாம் ஆவியிலிருந்து புரிந்துகொள்ளுதலினூடாக நடத்தைக்கு மறுசாயலாக்கப்படுகிறபோது நம் சாயல் கர்த்தருடைய சாயலுக்கு மறுசாயலாக்கப்படுகிறது என்பது இதன் அர்த்தமாகும். இப்படிப்பட்ட மறுசாயலாகுதலின் விளைவு எப்போதும் நம்மை கர்த்தராகிய இயேசுவைப்போல, வேறுவார்த்தைகளில் சொன்னால் கர்த்தருடைய மகிமையான மனித சுபாவத்தைப்போல இருக்கச்செய்கிறது. இதுவே ரோமர் 8:29-ல் குறிப்பிடப்பட்டுள்ள அவருடைய குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதாகும். இது தேவனுடைய குமாரனின் அச்சிலிருந்து வார்க்கப்பட்டதைப்போல இருக்கிறது. இவ்வாறு மறுசாயலாகுதல் என்பது வழிமுறையாக இருக்கிறது, மேலும் கர்த்தரைப்போல இருப்பதும், கர்த்தருடைய அதே சாயலையும், சுபாவத்தையும் கொண்டிருப்பதுமே மறுசாயலாகுதலின் முடிவான விளைவாகும். இதுவே கர்த்தர் நம்மிடத்தில் செய்கிற "மகிமையிலிருந்து மகிமையடைகிற" வேலை. கர்த்தரை நாம் எவ்வளவாய் புகழவேண்டும்!

நம்மை கர்த்தரைப்போல ஆக்குவது அல்லது கர்த்தருடைய அதே சாயலையும் சுபாவத்தையும் நாம் கொண்டிருக்கச்செய்வது மட்டுமல்ல, அதற்கும் மேலாக நம்மை முற்றும்முடிய "அவரைப்போலவே" ஆக்குவதே மறுசாயலாகுதலின் இலக்கு என்பதை நாம் உணரவேண்டும். இதுவே ரோமர் 8:23-ல் பேசப்பட்டுள்ள "நம்முடைய சரீரத்தின் மீட்பு" ஆகும். கர்த்தர் மீண்டும் வந்து நமக்குத் தோன்றும்போது, "அவர் எல்லாவற்றையும் தமக்குக் கீழ்ப்படுத்திக்கொள்ளத்தக்க தம்முடைய வல்லமையான செயலின்படியே, நம்முடைய அற்பமான சரீரத்தைத் தம்முடைய மகிமையான சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்" (பிலி. 3:21). இவ்வாறு, அவர் நம் ஆவியின் சுபாவத்திலும், நம் ஆத்துமா மற்றும் நம் நடத்தையின் வடிவத்திலும், நம்மை அவரைப்போல் ஆக்குவது மட்டுமல்ல, அதற்கும் மேலாக உடலிலும் முற்றும்முடிய அவரைப்போலவே நம்மை ஆக்குகிறார், இந்த உடல் மகிமையானதும், அழிவில்லாததும், ஒருபோதும் வாடாததுமாய் இருக்கும். இதுவே நம்முள் இருக்கிற தேவனுடைய ஜீவவிதி வேலைசெய்வதின் இறுதியான விளைவாகும். ஆ, என்னே ஆச்சரியம்! என்னே மகிமை!

ஆகையால் அவர்மேல் இப்படிப்பட்ட நம்பிக்கை வைத்திருக்கிறவனெவனும், அவர் சுத்தமுள்ளவராயிருக்கிறது போல தன்னையும் சுத்திகரித்துக்கொள்ளுகிறான் (1 யோவான் 3:3). தேவனுடைய ஜீவனின் ஒளியினால், நம்மையும், தேவனுக்கு புறம்பே இருக்கிற எல்லாவற்றையும் நாம் அறியவேண்டும். மேலும் நாம் தூய்மையாக அதாவது கலப்படமில்லாமல் இருக்கும்படி நம் பாவம், உலகம், மாம்சம், பழைய படைப்பிற்குரிய எல்லாவற்றோடும் நாம் அனுதினம் இடைபடவேண்டும். அப்போது தேவன் தம் மகிமையான குறிக்கோளை சீக்கீரமாக அடையமுடியும். மேலும் நாமும் கர்த்தரோடு சீக்கிரமாக மகிமையை அனுபவித்துமகிழமுடியும்.

## IX. தேவன் ஜீவவிதியில் தேவனாக இருக்க விரும்புகிறார்

"என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன்" என்று தேவன் கூறியபிறகு "நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" என்று எபிரேயர் 8:10-ல் தேவன் கூறினார். இந்த ஜீவவிதியில் அவர் நம் தேவனாக இருக்கவிரும்புவதாலும், இந்த ஜீவவிதியில் நாம் அவருடைய மக்களாக இருக்கும்படி அவர் விரும்புவதாலும், தேவன் நம்முள் தம் ஜீவவிதியை வைக்கிறார் என்று இது காட்டுகிறது. இது தேவனுடைய நோக்கத்தை அல்லது தேவனுடைய குறிக்கோளை முன்வைக் கிறது. மேலும் இது மிக முக்கியமான காரியமாகவும் இருக்கிறது; ஆகையால் இதை ஆராய்ந்து பார்ப்பதை நாம் புறக்கணிக்க முடியாது.

### A. தேவன் மனிதனுக்கு தேவனாயிருக்க விரும்புதல்

தேவன் ஏன் மனிதனைப் படைத்தார்? சாத்தான் ஏன் மனிதனைத் திருடினான்? இந்தக் காரியங்கள் வேதாகமத்தின் தொடக்கத்தில் விளக்கமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. தேவன் சீனாய் மலையில் பத்துக் கட்டளைகளை அறிவிக்கும் வரை, மனிதனில் தேவனுடைய நோக்கம் தெளிவாக வெளிப்படுத்தப்படவில்லை. முதல் மூன்று கட்டளைகளில் அவர் மனிதனுக்கு தேவனாயிருக்க விரும்புவதை நாம் பார்க்கலாம். சாத்தான் வனாந்தரத்தில் கர்த்தரை சோதித்து, கர்த்தர் தன்னை ஆராதிக்கும்படி விரும்பியபோது, மனிதனைத் திருடிய சாத்தானின் நோக்கம் வெளிப்படுத்தப்பட்டது; அதாவது சாத்தான் தேவனுடைய ஸ்தானத்தை அபகரிக்கவும், மனிதன் தன்னை தேவனாக ஆராதிக்கவும் விரும்புகிறான். மனிதனுக்கு யார் தேவனாயிருப்பது, மனிதனுடைய ஆராதனையை யார் பெற்றுக்கொள்வது என்ற

காரியத்தில்தான் சாத்தானுக்கும் தேவனுக்கும் இடையே போராட்டம் இருக்கிறது என்பதை இது நமக்கு தெளிவாகக் காட்டுகிறது. தேவன் மட்டுமே தேவனாக இருக்கிறார்; அவர் மட்டுமே மனிதனுக்கு தேவனா யிருக்கவும் மனிதனுடைய ஆராதனையைப் பெற்றுக்கொள்ளவும் பாத்திரராயிருக்கிறார். பழைய ஏற்பாட்டுக் காலங்களில் அவர் இஸ்ரயேல் மக்களிடையே அவர்களுடைய தேவனாக வாழ்ந்தார். புதிய ஏற்பாட்டில் மனித மாம்சமாகுதல் மூலம் அவர் மனிதர்களிடையே வாழ்ந்தார், தாம் தேவன் என்று பறைசாற்றினார், பின்பு பரிசுத்த ஆவியானவர்மூலம் அவர் சபையில் வாழ்கிறார், சபையிலுள்ள மனிதர்களுக்கு தேவனாக இருக்கிறார். எதிர்காலத்தில், இராஜ்ஜியத்தின் யுகத்தில் முழு இஸ்ரயேல் குடும்பத்தாருக்கும் அவர் தேவனாக இருப்பார்; மேலும் அவர் நித்தியமாக புதிய வானத்திலும் புதிய பூமியிலும் மனிதர்களிடையே குடியிருப்பார், மனிதர்களுக்கு நித்தியமான தேவனாயிருப்பார்.

## B. தேவன் பிதாவாகவும் பின்பு தேவனாகவும் இருத்தல்

மனிதனுக்கு தேவனாகயிருக்க மட்டுமல்ல, அதற்கும் மேலாக மனிதனுக்கு பிதாவாகவும் இருக்க தேவன் விரும்பு கிறார். மனிதன் தம்மை தேவனாக எடுக்கவேண்டுமென்று மட்டுமல்ல, அதற்கும் மேலாக மனிதன் தம் ஜீவனைக் கொண்டிருக்கவேண்டு மென்றும் அவர் விரும்புகிறார். அவர் மனிதனுக்கு பிதாவாக இருக்கவிரும்புகிறார், இதன்மூலம் தம் ஜீவனில் மனிதனுக்கு தேவனாயிருக்கிறார். மனிதன் அவருடைய ஜீவனைக் கொண் டிருந்து அவருடைய குமாரனாக மாறும்போது மட்டுமே மனிதன் உண்மையாகவே அவர் தேவனாக இருக்கிறாரென்று அறிய முடியும், மேலும் உண்மையாகவே தேவனாக இருக்க அவரை அனுமதிக்க முடியும்.

கர்த்தராகிய இயேசு உயிர்த்தெழுந்த காலையில் "நான் என் பிதாவினிடத்திற்கும் உங்கள் பிதாவினிடத்திற்கும், என் தேவனிடத் திற்கும் உங்கள் தேவனிடத்திற்கும் ஏறிப் போகிறேன்" என்று அவர் மகதலேனா மரியாளிடம் கூறினார் (யோவான் *20:17*). இங்கு கர்த்தர் முதலாவது பிதாவையும் பின்பு தேவனையும் குறிப்பிட்டார்; தேவன் நம் பிதாவா யிருக்கவேண்டும்; அப்போது அவர் நம் தேவனாயிருக்க முடியும் என்பதே இதன் அர்த்தம். கர்த்தராகிய இயேசு தம் கடைசி இரவு ஜெபத்தில், நாம் தேவனுடைய நித்திய ஜீவனை கொண்டிருக்கும்போது மட்டுமே ஒன்றான மெய்த் தேவனாகிய அவரை அறியமுடியும் என்று தெரிவித்தார் (யோவான் *17:3*). ஆகையால் நாம் தேவனை ஜீவனில் பிதாவாக அனுபவமாக்கவேண்டும்; அப்போது நாம்

தேவனை தேவனாக அறியமுடியும். எவ்வளவு அதிகமாக நம்மில் வேலைசெய்வதற்கு பிதாவின் ஜீவனை அனுமதிக்கிறோமோ, அவ்வளவு அதிகமாக இந்த மகிமையான தேவனை நாம் ஆராதிக்கிறோம், சேவிக்கிறோம்! இந்த பிதாவினுடைய ஜீவனில் அவர் நம் தேவனாக இருக்கவிரும்புவதால், தேவன் நமக்குப் பிதாவாக இருக்கிறார். தம் ஜீவன் வேலைசெய்வதிலும் அவர் நம் தேவனாக இருக்கவிரும்புகிறார் என்பதும் இதன் அர்த்தமாகும்.

## C. தேவன் ஜீவவிதியில் தேவனாக இருத்தல்

நமக்கு அவருடைய ஜீவன் இருப்பதால் தேவன் நம் பிதாவாக இருக்கிறார். அவருடைய ஜீவன் நமக்குள் நுழைந் திருப்பதால், அது நமக்குள் இந்த ஜீவனின் விதியையும் கொண்டுவருகிறது. விதி வேலைசெய்கிறபோது, இது நம்மிலிருந்து வெளியே தேவனையே சீரமைக்கிறது. ஆகவே தேவன் இந்த ஜீவவிதியில் நம் தேவனாக இருக்க விரும்புகிறார்.

முகமதியர்கள் பரலோகத்திலுள்ள தேவனை ஆராதிக் கிறார்கள். அதைவிட அதிகமாக யூத மதத்தில் உள்ளவர்களும் பரலோகத்தில் உள்ள தேவனை ஆராதிக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு அனுபவம் சாராத தேவனை, அதாவது எல்லாவற்றுக்கும் மேலாக உயர்ந்திருக்கிற தேவனை மட்டுமே ஆராதிக்கிறார்கள்; அவர்கள் தங்களுடைய தேவனாயிருக்கும்படி தேவனை தங்களுக்குள் அனுமதித்திருக்கவில்லை. இன்று கிறிஸ்தவர்களிடையேயும்கூட, அநேகர் ஒரு அனுபவம் சாராததும் எல்லாவற்றிற்கும்மேலாக உயர்ந்த தேவனை ஆராதிக்கிறார்கள். அவர்கள் சில புறம்பான போதனைகள் அல்லது எழுத்தின்படியான சட்டதிட்டங்களின்படி தங்களுக்கு வெளியேயிருக்கிற தேவனை மட்டும் ஆராதிக்கிறார் கள். தங்களுக்குள் இருக்கிற ஜீவனில் ஜீவிக்கிற தேவனாயிருக்கும் படி தேவனை அவர்கள் அனுமதித்திருக்க வில்லை. ஆனால் தேவனை ஆராதித்து தேவனை நம் தேவனாக இருக்கும்படி அனுமதிக்கும்போது, நாம் உபதேசங்களை அல்லது எழுத்துக்களின்படியான விதிகளை பின்பற்றக்கூடாது; மாறாக அதை தேவனுடைய ஜீவனில் அல்லது தேவனுடைய ஜீவவிதியில் செய்ய வேண்டும் என்பதில் நாம் தெளிவாக இருக்கவேண்டும். இந்த விதி தேவனுடைய ஜீவனால் வெளிப்படுத்தப்படுகிற செயல்பாடாக இருக்கிறது. தேவனுடைய ஜீவனின் இந்த விதி நம்முள் சீரமைக்கிறபோது, அல்லது தேவன் நம்முள் வேலைசெய்கிறபோது, தேவன் இந்த விதியில் அதாவது அவருடைய வேலைசெய்தலில் நம் தேவனாக இருக்கிறார்.

இன்று நாம் தேவனை சேவிக்கும்போது இந்த ஜீவ விதியில், அதாவது அவருடைய வேலைசெய்தலில் நாம் அவரை சேவிக்க

வேண்டும். எப்போதெல்லாம் நம்முள் இந்த ஜீவன் வேலை செய்யவும், இந்த ஜீவவிதி நம்முள் சீரமைப் பதற்கும் அனுமதிக்கிறோமோ, அப்போதெல்லாம் நம் சேவை ஜீவனின் சேவையாக, அதாவது ஆவிக்குரிய சேவையாக அல்லது ஜீவிக்கிற சேவையாக இருக்கிறது. இவ்வாறு அவருடைய ஜீவவிதியில் நம் தேவனாயிருக்கும்படி தேவனை அனுமதிக்கும்போது, நாம் ஆராதிக்கிற தேவன் உபதேசத்தில் அல்லது சிந்தனையில் தேவனாக இல்லாமல், ஜீவிக்கும் தேவனாக, நடைமுறையின் தேவனாக, தொடக்கூடிய தேவனாக இருக்கிறார். நம் ஜீவனின் அனுபவங்களில், நம் அனுதின வாழ்க்கையில், நம் வேலையின் நடவடிக்கைகளில், உண்மையாகவே நம் தேவன் ஜீவிக்கிற தேவனாக, அதாவது நாம் தொடக்கூடிய, சந்திக்கக்கூடிய தேவனாக இருக்கிறார். அவர் நம்பிக்கையில் நம் தேவனாகவோ, சட்டதிட்டங்களில் நம் தேவனாகவோ இல்லை, மாறாக ஜீவனுடைய ஜீவிக்கும் விதியில், அதாவது ஜீவனின் ஜீவிக்கும் செயல்பாட்டில் அவர் நம் தேவனாயிருக்கிறார்.

ஆனால் சில நேரங்களில் நம் இருதயத்திலுள்ள சில பிரச்சினையின் காரணமாக நாம் அவரை நேசிப்பதுமில்லை, நம்மை சீரமைக்க அவருடைய ஜீவவிதியை அனுமதிப்பது மில்லை. அப்போது, நம்மிடம் தேவனிருந்தாலும், தேவன் உபதேசத்தில் அல்லது நம்பிக்கையில் மட்டுமே தேவனாக இருக்கிறார். அவரோடுள்ள நம் முதல் அன்பை நாம் மீட்டுத்திருப்பி, அவருடைய ஜீவ சக்கரம் சுழல்வதால் நம்முள் சீரமைக்க அவரை நாம் மீண்டும் அனுமதிக்கும்போது, அவருடைய ஜீவ சக்கரத்தின் செயல்பாடு மீண்டும் வெளிப் படுகிறது. மேலும் அவருடைய ஜீவவிதி தொடர்ச்சியாக அசைந்து நம்முள் சீரமைக்கும் தன் வேலையை மீண்டும் செய்கிறது. இந்த நேரத்தில் மீண்டும் நடைமுறை அர்த்தத்தில் அவர் நம் தேவனாக மாறுகிறார்; இனி ஒருபோதும், அவர் ஒரு பெயராகவோ, உபதேசமாகவோ இல்லாமல் ஜீவிக்கிற தேவனாக இருக்கிறார்.

எனவே நாம் தேவனிடம் நம்மை ஒப்படைத்து, நம்மை சீரமைக்க தேவனுடைய ஜீவவிதியை அனுமதிக்கவேண்டும், அப்போது நாம் உண்மையாகவே தேவனை நம் தேவனாக கொண்டிருக்கமுடியும். எப்போதெல்லாம் நம்மை சீரமைப்ப தற்கு இந்த ஜீவவிதியை நாம் அனுமதிக்கவில்லையோ, அப்போதெல் லாம் தேவன் நம் தேவனாகவும் இருக்கமுடியாது, நாம் அவருடைய மக்களாகவும் இருக்கமுடியாது. நடைமுறை வழியில் அவர் நம் தேவனாயிருக்கவும், நாம் அவருடைய மக்களாயிருக்க வும் வேண்டுமானால், நாம் நம்மைச் சீரமைப்ப தற்கு அவருடைய ஜீவவிதியை அனுமதிக்கவேண்டும். மேலும் அவருடைய

ஜீவவிதியில் நம் தேவனாக இருக்கும்படி, அவரை அனுமதிக்க வேண்டும்.

தேவன் தம் ஜீவவிதியில் நம் தேவனாக இருக்கவேண்டும், நாம் அவருடைய ஜீவ விதியில் அவருடைய மக்களாக இருக்க வேண்டும், ஏனென்றால் தேவனோடுள்ள நம் உறவு ஜீவிக்கிறதாக இருக்கவேண்டும். அவருடைய ஜீவன் நம்முள் அசைந்து சீரமைக்கிறபோது, அவருடைய ஜீவவிதி அவரை நம்மிடத்தில் கொண்டுவருகிறது, நம்மை அவரிடத்தில் கொண்டுசெல்கிறது. அவருடைய ஜீவவிதி வேலைசெய்வதால் தான், நாம் அவரைப் பெற்றுக்கொள்ளமுடியும், அவர் நம்மைப் பெற்றுக் கொள்ள முடியும். எப்போதெல்லாம் நம்முள் இருக்கிற அவருடைய ஜீவவிதி சீரமைப்பது நின்றுவிடுகிறதோ, அப்போதெல்லாம் அவர் நம் தேவனாகவும், நாம் அவருடைய மக்களாகவும் இருக்கிற இந்த ஜீவிக்கிற உறவும் நின்று விடுகிறது. ஆகையால் நம்மை சீரமைக்க தேவனுடைய ஜீவவிதியை நாம் அனுமதிக்கவேண்டும்; அப்போது மட்டுமே ஒரு வெளிப்படுத்துகிற ஜீவிக்கிற வழியில் தேவன் நம் தேவனாகவும், நாம் அவருடைய மக்களாகவும் இருக்கமுடியும்.

இவ்வாறு பழையஏற்பாட்டில் மனிதனுக்கு தேவன் தேவனாயிருப்ப தற்கும், புதியஏற்பாட்டில் மனிதனுக்கு தேவன் தேவனாயிருப்பதற்கும் மிகப்பெரிய வித்தியாசம் இருக்கிறது என்பதை நாம் தெளிவாகப் பார்க்கமுடியும். பழைய ஏற்பாட்டில் விதியின் சட்டதிட்டங்களுக்கு ஏற்றபடி, அவருடைய சிங்காசனத் தில்மேல் எல்லாவற்றுக்கும் மேலாக உயர்ந்தவராக தேவன் இஸ்ரயேல் மக்களுக்கு தேவனா யிருந்தார். இந்த சட்டதிட்டங் களின்படி, இஸ்ரயேல் மக்களும் அவருடைய மக்களாயிருக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். ஆகையால் அவர்கள் இந்த சட்டதிட்டங்களை மட்டும் பின்பற்றியிருந்தால், தேவனுக்கு முன்பாக அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருந்திருக்காது. ஆனால் புதியஏற்பாட்டில் நம் ஜீவனாக இருக்கும்படி, தேவன் நமக்குள் நுழைகிறார், மேலும் இந்த ஜீவனின் விதியில் அவர் நம் தேவனாகவும், நாம் அவருடைய மக்களாகவும் இருக்கிறோம். ஆகையால் நாம் இந்த ஜீவனின் விதியில் வாழவேண்டியது அவசியமாக இருக்கிறது.

## முடிவுரை

ஜீவவிதியின் ஒவ்வொரு அம்சத்தின் முக்கியமான குறிப்பு களைப் பார்ப்பதின்மூலம் நம் ஆவிக்குரிய வாழ்க்கையின் அனுபவத்திற்கு இந்த ஜீவனின் விதி எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அறிகிறோம். ஆகையால் இந்தக் கருப்பொருளைப் பற்றிய ஒவ்வொரு முக்கிய குறிப்பையும் நாம் முழுவதுமாக

தெளிவாகப் பார்க்கவும் புரிந்துகொள்ளவும் வேண்டும்; அப்போது நாம் ஜீவனில் நிஜமான அனுபவத்தைக் கொண்டிருக்கமுடியும். எனவே திரும்பிப் பார்ப்பதற்குத் தயங்காமல் இவைகளைப்பற்றிய ஒரு ஆழமான பாதிப்பைக் கொண்டிருக்கும்படி, இந்த எல்லா முக்கியமான குறிப்புகளை மீண்டும் நாம் திரும்ப சுருக்கமாகப் பார்க்கலாம்.

நாம் மறுபடிபிறக்கிறபோது தேவனுடைய ஜீவனைப் பெறுகிறோம். அந்த நேரத்தில், நம்மில் தேவனுடைய ஜீவன் இருந்தாலும், இந்த ஜீவன் ஜீவாதாரரீதியில் மட்டுமே முழுமை யானது; அது முழுமையான வளர்ச்சியையும், முதிர்ச்சியையும் அடையவில்லை. இதற்காக வளர்ச்சியும் முதிர்ச்சியுமாகிய அவருடைய பூரணமான இலக்கை அடைய, தொடர்ச்சியாகவும் இடைவிடாமலும் இந்த ஜீவனின் வல்லமை வேலைசெய்ய நாம் கட்டாயம் அனுமதிக்க வேண்டும். இந்த ஜீவனின் வேலைசெய்தல், இந்த ஜீவனின் இயல்பான செயல்பாட்டிலிருந்தும், குணாதிசயத்தி லிருந்தும் வருகிறது; வேறுவார்த்தைகளில் சொன்னால் இது இந்த ஜீவனின் விதியிலிருந்து வருகிறது.

ஜீவனின் இந்த விதி அதின் உள்ளடக்கங்களை நம்மி லிருந்து வெளியே சீரமைக்க வேண்டுமானால், அது நம் இருதயத்தி னூடாகக் கடந்துசெல்லவேண்டும்; ஆகையால் நமக்குள்ளிருக்கிற ஜீவனின் இந்த விதி வேலைசெய்ய நம் இருதயத்தின் ஒத்துழைப்பு தேவையாக இருக்கிறது. நம் இருதயம் ஒத்துழைக்கிறபோது ஜீவனின் இந்த விதி நம்முள் விடுதலையோடு சீரமைக்க ஒரு வாய்ப்பு கிடைக்கிறது. இதன் விளைவாக உள்ளே ஒரு குறிப்பிட்ட உணர்வை நாம் கொண்டிருக்கச்செய்கிறது. நம்மிடம் இந்த உணர்வு இருக்கும்போது, இந்த ஜீவ வல்லமையால் நாம் அதற்குக் கீழ்ப்படியவேண்டும். நாம் எப்போதெல்லாம் கீழ்ப்படி கிறோமோ, அப்போதெல்லாம் நம்மைச் சீரமைக்க அதாவது வேறொரு உணர்வைத் தந்து கீழ்ப்படிவதில் நாம் தொடர்ந்து முன்னேறிச் செல்லும்படிச்செய்ய இந்த விதிக்கு நாம் மற்றுமொரு வாய்ப்பளிக்கிறோம். நாம் அதிகமாகக் கீழ்ப் படிந்தால் அவர் வேலைசெய்வதற்கு அதிகமான வாய்ப்பை நாம் அவருக்குத் தருகிறோம். இப்படிப்பட்ட தொடர்ச்சியான காரணமும் விளைவும் நம்முள் வேலைசெய்வது ஜீவனில் அடங்கியுள்ள மரணம் மற்றும் உயிர்த்தெழுதல் ஆகிய இரண்டு மூலக்கூறுகளினுடைய செயல்பாடு களின் இடைவிடாத வெளிப்படுதலை விளைவிக்கிறது. மரணத்தின் செயல்பாடு நம்முள் இருக்கக்கூடாத எல்லாவற்றையும் எடுத்துப்போடுகிறது. உயிர்த்தெழுதலின் செயல்பாடு தேவ னுடைய ஜீவனுக்குரிய எல்லாவற்றையும் நம்மில் கூட்டிச் சேர்க்கிறது. மேலும் இந்த விதியின் வேலைசெய்தலும், மரணம்

மற்றும் உயிர்த்தெழுதலின் இரண்டு செயல்பாடு களும், தேவனுடைய வரம்பற்ற கோரிக்கைக்கு பதிலளிக்கவும், தேவனுடைய ஜீவனிலுள்ள எல்லாவற்றையும் வாழ்ந்துகாட்டவும் நமக்குத் திறனளிக்கிற வல்லமையால் நிறைந்திருக்கிறது. இவ்வாறு தேவனுடைய ஜீவன் நம்முள் படிப்படியாக வளரவும், முதிர்ச்சி யடையவும் நாம் அனுமதிக்கிறோம்.

அதே நேரத்தில், இந்த ஜீவன் நம்முள் வேலைசெய்கிற போது, அதாவது நம்மை தொடர்ச்சியாகச் சீரமைக்கிறபோது, தேவனோ டுள்ள நம் பற்று, தேவனுக்கு பணிந்தடங்குதல், தேவனுக்கு செய்யும் சேவை ஆகியவை இயல்பாகவும், எளிமையாகவும், ஜீவிக்கிறதாகவும், பசுமையாகவும் மாறுகிறது. இந்த ஜீவிக்கிற விதியில்தான் தேவன் நம் ஜீவிக்கிற தேவனாக மாறுகிறார், மேலும் நாம் அவருடைய ஜீவிக்கிற மக்களாக மாறுகிறோம். இந்தத் தேவனோடுள்ள நம் உறவெல்லாம் இந்த ஜீவவிதியில்தான் இருக்கிறது என்று நாம் சொல்லலாம். இது நிஜமாகவே நம் ஆழமான கவனத்திற்குரியது!

அத்தியாயம் பதினொன்று

# உள்ளார்ந்த அறிவு

இப்போது நாம் ஜீவனைப்பற்றிய பதினோறாவது முக்கிய மான குறிப்பைப் பார்க்கலாம், இது ஜீவனின் உள்ளார்ந்த விதியாலும், அபிஷேகத்தின் போதனையினாலுமான உள்ளார்ந்த அறிவு அல்லது தேவனை அறிதல். உள்ளிருந்து தேவனை எந்த அளவுக்கு நாம் அறிகிறோம் என்பது நாம் தேவனை எவ்வளவு கொண்டுள்ளோம் என்பதையும், அவரை நம் ஜீவனாக எவ்வளவு அனுபவமாக்குகிறோம் என்பதையும் தீர்மானிக்கிறது. இவ்வாறு உள்ளார்ந்த அறிவும், ஜீவனின் வளர்ச்சியும் முற்றிலும் தொடர்புடையவைகள். ஜீவன் வளரும்படி, நாம் ஜீவனை அறிய விரும்பினால், உள்ளார்ந்த அறிவை விவரமாக ஆராயவேண்டும்.

## I. தேவனை அறிவதின் முக்கியத்துவம்

மனிதன் தேவனை அறிவதில் அவர் களிகூறுகிறார்; ஆகையால் மனிதன் அவரை “அறியும்படி தொடர்ந்துபோக” அவர் விரும்புகிறார் (*ஓசியா. 6:6, 3*). புதிய ஏற்பாட்டில் அவர் செய்கிறதெல்லாம் நாம் அவரை அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவே இருக்கிறது (*எபி. 8:10-11*). நாம் மறுபடிபிறப்பிக்கப்படுகிறபோது, உள்ளிருந்து அவரை அறிகிற திறமையை நாம் கொண்டிருக்கும்படி, அவருடைய ஜீவனை அடக்கிய அவருடைய ஆவியானவர் நமக்குள் நுழைகிறார். ஒரு பக்கத்தில் அவரைப்பற்றிய இந்த அறிதல், நம் ஜீவனின் உள்ளார்ந்த வளர்ச்சியுடன் படிப்படியாக அதிகரிக்கிறது; மறுபக்கத்தில், அது நம்முள்ளிருக்கும் ஜீவனை வளரச்செய்கிறது. தேவன் தம் ஜீவனை நமக்குத் தந்திருப்பதால், நாம் அவரை அறியமுடியும். எவ்வளவாக அவருடைய ஜீவன் நம்முள் வளர்கிறதோ, அவ்வளவாக நாம் அவரை அறிகிறோம். எவ்வளவாக நாம் அவரை அறிகிறோமோ அவ்வளவாக நாம் அவரை நம் ஜீவனாக அனுபவமாக்குகிறோம், அனுபவித்துமகிழ்கிறோம், மேலும் நம்மூலமாக வாழ்ந்துகாட்ட அவரை அனுமதிக்கிறோம். இவ்வாறு நம் ஆவிக்குரிய ஜீவனின் வளர்ச்சியெல்லாம் நாம் தேவனை அறிகிற அறிவைச் சார்ந்திருக்கிறது என்று சொல்லலாம். நாம் அவரை உண்மையாக அறியும்படியும், “தேவனை அறிகிற அறிவில் விருத்தியடையும்படியும்” (*கொலோ. 1:10*), தேவன் நமக்கு ஞானம் மற்றும் வெளிப்பாட்டின் ஆவியைத் தரும்படி (*எபே. 1:17*) நாம் ஜெபிப்போமாக.

## II. தேவனை அறிவதின் மூன்று படிகள்

“அவர் தமது வழிகளை மோசேக்கும், தமது கிரியைகளை இஸ்ரவேல் புத்திரருக்கும் தெரியப்பண்ணினார்” என்று சங்கீதம் *103:7* கூறுகிறது. இஸ்ரயேல் புத்திரர் தேவனுடைய செயல்களை அறிந்தார்கள், ஆனால் மோசே அவருடைய வழிகளை அறிந்தான் என்று இது நமக்குச் சொல்லுகிறது. “என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து...சிறியவர்கள் முதற்கொண்டு பெரியவன் வரைக்கும் எல்லாரும் என்னை அறிவார்கள்” என்று எபிரேயர் *8:10-11*-ம் கூறுகிறது. புதிய ஏற்பாட்டின்படி, உள்ளார்ந்த விதியைப் பெறுகிற எல்லாரும் தேவனை அறிந்துகொள்ளமுடியும் என்று நாம் இந்த வசனத்தின்மூலம் பார்க்கிறோம். தேவனைப் பற்றிய மனிதனின் அறிவு மூன்று படிகளில் பெறப்படுகின்றன என்று வேதாகமத்தின் இந்த இரண்டு பகுதிகளும் நமக்குக் காட்டுகின்றன: முதலாவதாக, தேவனுடைய செயல்களை அறிதல்; இரண்டாவதாக, தேவனுடைய வழிகளை அறிதல்; மூன்றாவதாக, தேவனையே அறிதல்.

### A. தேவனுடைய செயல்களை அறிதல்

தேவன் எதைச் செய்கிறாரோ, எதைச் செயல்படுத்துகிறாரோ அவைகள்மூலம் மனிதன் தேவனுடைய செயல்களை அறிகிறான். எடுத்துக்காட்டாக, எகிப்தில் எகிப்தியர்களை அடிக்க தேவன் அனுப்பிய பத்து வாதைகளை இஸ்ரயேல் புத்திரர் பார்த்தனர். சிவந்த சமுத்திரத்தில் அவர்கள் கடந்துசெல்லும்படி தேவன் தண்ணீரைப் பிரித்ததை அவர்கள் பார்த்தனர். வனாந்தரத்தில் அவர்களுடைய தாகத்தைத் தீர்க்க தண்ணீரைப் பாய்ந்தோடச் செய்யும்படி தேவன் பாறைக்கு கட்டளையிட்டதை அவர்கள் பார்த்தனர். மேலும் அவர்களுக்கு உண வளிக்கும்படி தேவன் வானத்திலிருந்து மன்னாவை தினமும் அனுப்பினார். தேவனுடைய இப்படிப்பட்ட அற்புதங்களை அவர்கள் கண்டபோது, தேவனுடைய செயல்களை அவர்கள் அறிந்தார்கள். எடுத்துக்காட்டாக மீண்டும் கர்த்தராகிய இயேசு, ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும்கொண்டு ஐந்தாயிரம் பேருக்கு உணவளித்தது, புயலையும் கடலையும் அமைதியாக்கியது, நோயுற்றவர்களைக் குணமாக்கியது, பிசாசுகளைத் துரத்தியது, இறந்தவர்களை உயிரோடெழுப்பியது போன்ற அற்புதங்களை திரளானவர்கள் கண்டபோது அவர்கள் அவருடைய செயல்களை அறிந்தார்கள், அல்லது எடுத்துக்காட்டாக நாம் நோயுற்றிருந்து தேவனால் குணமாக்கப்படும்போதும், நாம் ஆபத்தை சந்திக்கும்போது தேவனால் பாதுகாக்கப்படும்போதும், நமக்குத் தேவைகளிருந்து அவைகள் தேவனால் நிரப்பப்படும்போதும் நாம் தேவனுடைய

செயல்களை அறிந்து கொள்ளுகிறோம். இவ்வாறு தேவனுடைய செயல்களை நாம் அறியும்போது, இது தேவனை அறிவதின் நம் முதல்படியாக இருக்கிறது. இப்படிப்பட்ட அறிவு மேலோட்டமானதும், வெளியார்ந்ததுமாகும், ஏனெனில் தேவனுடைய செயல்களை நாம் பார்க்கும்வரை, தேவன் எதைச் செய்திருக்கிறார் என்பதை நாம் அறிவதில்லை.

## B. தேவனுடைய வழிகளை அறிதல்

தேவனுடைய வழிகளை அறிவது என்பது அவர் காரியங்களைச் செய்யும் கோட்பாடுகளை அறிவதைக் குறிக் கிறது. ஆபிரகாம் சோதோமிற்காக முறையிட்டபோது, தேவன் நீதியுள்ளவர், அவர் தம் நீதிக்கு முரணாக ஒருபோதும் செயல்பட மாட்டார் என்று அவன் உணர்ந்தான். ஆகையால் ஆபிரகாம் தேவனுடைய நீதிக்கு ஏற்றபடி தேவனிடம் பேசினான் (ஆதி. *18:23-32*). தேவன் காரியங்களைச் செய்யும் வழிகளை அவன் அறிந்தான் என்பதே இதன் அர்த்தமாகும். கோராவும் அவன் கூட்டாளிகளும் கலகம்செய்து விழுங்கப்பட்ட பின்பு இஸ்ரயேல் புத்திரர் தொடர்ந்து முறுமுறுத்தபோது, மோசே யெகோவாவின் மகிமை தோன்றினதைப்பார்த்து, ஆரோனை நோக்கி "நீ தூபகலசத்தை எடுத்து, பலிபீடத்திலிருக்கிற அக்கினியை அதில் போட்டு, அதின்மேல் தூபவர்க்கம் இட்டு, சீக்கிரமாய் சபையினிடத்தில் போய், அவர்களுக்காக பாவநிவிர்த்திசெய், கர்த்தருடைய சந்நிதியிலிருந்து கடும்கோபம் புறப்பட்டது. வாதை தொடங்கிற்று என்றான்" (எண். *16:46*). மோசே தேவனுடைய வழிகளை அறிந்தான் என்று இது காட்டுகிறது. மனிதன் ஒரு குறிப்பிட்ட வழியில் செயல்படும்போது, தேவன் அதற்கேற்ப செயல் படுவார் என்பதை அவன் அறிந்தான்.

சாமுவேல் சவுலிடம்: "பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக்கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவிகொடுத்தலும் உத்தமம்" என்று கூறினான் (1 சாமு. *15:22*). தாவீதும் "நான் இலவசமாய் வாங்கி, என் தேவனாகிய கர்த்தருக்கு சர்வாங்க தகனபலியை செலுத்தமாட்டேன்" என்று சொன்னான் (2 சாமு. *24:24*). அவர்கள் தேவனின் வழிகளை அறிந்தார்கள் என்று இது காட்டுகிறது.

கர்த்தருடைய வார்த்தையை நாம் விடுவிக்கும்போது, அது வெறுமையாயிராது, கர்த்தர் விரும்புகிறதை நிறைவேற்றும் என்று நாம் ஆழமாக நம்புகிறோம் (ஏசா. *55:10-11*). மேலும் நாம் ஆவிக்கென்று விதைத்தால், ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்போம் என்று நாம் அறிகிறோம் (கலா. *6:8*). இதுவும் நாம் தேவனுடைய வழிகளை அறிவதினாலாகும்.

தேவன் காரியங்களைச்செய்யும் வழிகளை நாம் அறியும் போது, தேவனை அறிவதின் இரண்டாவது படியில் இருக்கி றோம். இப்படிப்பட்ட அறிவு தேவனுடைய செயல்களை அறிவதிலிருந்து ஒரு படி மேலானதாகும். தேவனுடைய செயல்கள் நிறைவேற்றப் படுவதற்குமுன், அவர் என்ன செய்வார் என்பதையும், அதை எப்படிச்செய்வார் என்பதையும் நாம் அறிகிறோம். இப்படிப்பட்ட அறிவு ஜெபத்தில் நம் விசுவாசத்தை அதிகரிக்கச்செய்யமுடியும், மேலும் தேவனோடு பேரம்பேச நமக்கு திறனளிக்கவும் முடியும். ஆயினும் இப்படிப்பட்ட அறிவு நல்லதாக இருப்பினும், அது இன்னும் போதுமான அளவு ஆழமாகவும், உள்ளார்ந்ததாகவும் இல்லை.

## C. தேவனை அறிதல்

தேவனை அறிதல் என்பது தேவனுடைய சுபாவத்தை அறிவ தாகும். நாம் மறுபடிபிறப்பிக்கப்பட்டு தேவனுடைய ஜீவனைப் பெற்ற உடனே, நாம் தேவனுடைய சுபாவத்தைக் கொண்டிருக் கிறோம். நம்முள்ளிருக்கும் தேவனுடைய ஜீவன் மூலம், நாம் தேவனுடைய சுபாவத்தைத் தொடமுடியும். நாம் தேவனுடைய சுபாவத்தைத் தொடும்போது, நாம் தேவனையே தொடுகிறோம்; வேறுவார்த்தைகளில் சொன்னால், நாம் தேவனை அறிகிறோம். இப்படிப்பட்ட அறிவு தேவனுடைய செயல்களையும் அவருடைய வழிகளையும் புறம்பாக அறியும் முதல் இரண்டு படிகளிலிருந்தும் வித்தியாசமானது. இது தேவனை உள்ளிருந்து அறிவதாகும்.

எடுத்துக்காட்டாக குணப்படுத்த முடியாத நோயுற்றிருந்து, தேவனால் குணப்படுத்தப்பட்ட ஒரு சகோதரனைப் பரிசிலிக்கலாம். அவன் "தேவனுக்கு நன்றி, அவர் என்மீது உண்மையாக அக்கறை கொண்டார்!" என்று சந்தோஷத்தோடு ஆச்சரியப்படுகிறான். இதிலிருந்து அவன் தேவனுடைய செயல்களை சிறிது அறிந்தான். பின்னர் அவன் மறுபடியும் நோயுற்றான். இந்தமுறை அவன் தன்னிடம் சில தவறு உள்ளதால் தேவன் தன்னை தண்டித்துத் திருத்துகிறார், ஒழுங்குபடுத்துகிறார் என்று அறிந்தான். இவ்வாறு அவன் தன் தவறோடு இடைபட்டான். அவன் இதைச் செய்து முடித்தபோது, தேவன் தன்னைக் குணப்படுத்துவார் என்று அறிந்தான் *(1 கொரி. 11:30-32)*. இதன் விளைவாக தேவன் உண்மையாக அவனைக் குணமாக்கினார். ஆனால் குண மாக்கப்படும்முன்பே தேவன் தன்னைக் குணமாக்குவார் என்று அவன் ஏற்கெனவே அறிந்தான். இது ஏனென்றால் அவன் தேவ னுடைய வழிகளை அறிந்தான். இந்த முறை தேவனைப் பற்றிய தேவனுடைய செயல்களை அறிவதிலிருந்து தேவனுடைய வழிகளை அறிவதற்கு அவனுடைய அறிவு

முன்னேறியிருந்தாலும்கூட, அது இன்னும் உள்ளிருந்து தேவனைப்பற்றிய அனுபவப்பூர்வமான அறிவாக இல்லாமல் வெளிப்புறமாக தேவனைப்பற்றிய புறம்பான அறிவாகவே இருக்கிறது, பின்னர் இந்தச் சகோதரன் தேவனுடைய பரிசுத்த சுபாவத்திற்குப் பொருந்தாத சில குறிப்பான காரியங்கள் தன்னிடம் இருப்பதை உள்ளிருந்து உணர்ந்தான்; எனவே அவன் அவைகளோடு இடைபட்டு அவைகளைத் தீர்த்துக்கட்டினான். இத்தகைய உணர்வும், இத்ததைய அறிதலும் அவனுக்கு வெளியே ஏதோவொன்றிலிருந்து வரவில்லை; ஆனால் உள்ளார்ந்த தேவனுடைய ஜீவனால் அவனுக்குத் தரப்பட்ட உணர்விலிருந்து வந்தது. எனவே இந்தமுறை அவன் உள்ளிருந்து தேவனையே அறிந்துகொண்டான்; தேவனைப்பற்றிய அனுபவப்பூர்வமான அறிவைப் பெற்றுக்கொண்டான்.

இன்னொரு சகோதரனைப் பரிசீலிப்போம்; இவன் கடுமை யான கஷ்டத்தின் ஆரம்பத்தில் தேவனிடம் ஜெபித்தான், தேவன் அவனை அதனூடாக நடத்திச்சென்றார். அவன் இவ்வாறு தேவனுடைய செயல்களை அறிந்தான். பின்பு அவன் மீண்டும் ஒரு கஷ்டத்தை சந்தித்தபோது, அதனூடாக தான் தேவனால் வழிநடத்தப்படும்படி, எவ்வாறு செயல்பட வண்டும் என்று அறிந்தான். அவன் தேவனுடைய வழிகளை அறிந்தான் என்பதை இது சுட்டிக்காட்டுகிறது. இறுதியில் அவன் மீண்டும் ஒரு கஷ்டத்தை சந்தித்தபோது, அவனுக்குள் ஒரு விநோதமான உணர்வு இருந்தது. தேவன் நிச்சயமாக இதனூடாக வெற்றிகரமாக தன்னைக் கடந்துபோகச்செய்வார் என்பதை அவன் உணர்ந்தான். இந்த உணர்வு அல்லது அறிதல் வெளியிலிருந்து தேவனுடைய சில செயல்களைப் பார்ப்பதாலோ, காரியங்களைச் செய்வதில் தேவனுடைய கோட்பாடுகளை அறிவதாலோ வரவில்லை. இது உள்ளில் அவன் தேவனையே தொட்டுவிட்டதால் ஏற்பட்டது; ஆகை யால் இந்த உணர்வு அல்லது அறிவு அவனிடம் இருந்தது. தேவனைப்பற்றிய இப்படிப்பட்ட அறிவே மிக உயர்ந்தது, மிக ஆழமானது, மிக உள்ளார்ந்தது என்று கூறமுடியும்.

பழைய ஏற்பாட்டுக்காலங்களில், தேவன் தம் செயல் களையும் தம் வழிகளையும் மட்டுமே மனிதர்களுக்கு வெளிப்படுத்தினார். ஆகையால் அந்த நேரத்தில் மனிதன் தேவனை அறிவதின் முதல் இரண்டு படிகளை மட்டுமே பெறமுடிந்தது. இப்போது புதிய ஏற்பாட்டுக் காலம் வந்துவிட்டதால், நாம் இன்னும் தேவனுடைய செயல்களையும் வழிகளையும் அறியவேண்டுமென்றாலும், நம் ஜீவனாகும்படி ஆவியானவரில் தேவன்தாமே நம்முள் குடியிருக்கிறார் என்பதே அதிமுக்கியமானதும், மகிமையானதுமான காரியமாகும். இது தேவனை நேரடியாகத் தொடவும், உள்ளிருந்து

அவரை அறியவும் நமக்குத் திறனளிக்கிறது. தேவனை அறிவதின் இந்த மூன்றாவது படியாகிய தேவனையே அறிதல், புதிய உடன்படிக்கையில் இரட்சிக்கப்பட்டிருக்கிற நமக்குரிய ஒரு விசேஷமான ஆசீர்வாதமாகும்.

## III. தேவனைப்பற்றிய இரண்டு வகையான அறிவு

தேவனைப்பற்றிய நம் அறிவில் மூன்று படிகள் இருந்தாலும், உண்மையில் வெளியார்ந்த அறிவு, உள்ளார்ந்த அறிவு என்ற இரண்டு வகையான அறிவு மட்டுமே இருக்கின்றன. தேவனுடைய செயல்களையும் வழிகளையும் அறிகிற இரண்டும் வெளியார்ந்த தன்மையுடைய அறிவு. அறிவின் இந்த இரண்டு படிகளும் ஆழத்தின் அளவில் வேறுபட்டிருப்பினும், இவை இரண்டும் நமக்கு வெளியிலிருந்து தேவனுடைய செயல்கள் மற்றும் வழிகளிலிருந்து பெறப்பட்ட தேவனைப்பற்றிய அறிவாகும். ஆகையால் அவை அனுபவம்சாராததும், வெளியார்ந்ததுமாகும். இருப்பினும் தேவனையே அறிவது ஒரு உள்ளார்ந்த வகை அறிவாகும். இந்த வகையான அறிவு, உள்ளிருக்கிற அவருடைய ஜீவனால் நாம் தேவனையே தொடுவதால் வருகிறது, இதன்மூலம் நாம் அவரை அனுபவப்பூர்வமாகவும், உள்ளார்ந்த வழியிலும் அறிகிறோம்.

வேதாகமத்தின் மூலப்படிவத்தில் உள்ளார்ந்த மற்றும் வெளியார்ந்த அறிவை விளக்குவதற்கு இரண்டு வேறுபட்ட வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. எபிரேயர் *8:11* நாம் கர்த்தரை அறிவதைப்பற்றிப் பேசுகிறது. “அறிதல்” என்ற வார்த்தை இந்த வசனத்தில் இரண்டு முறை பயன்படுத்தப் பட்டுள்ளது, எனினும் மூலப்படிவத்தில், இரண்டு வேறுபட்ட அர்த்தங்களைக் கொடுக்கும் இரண்டு வேறுபட்ட வார்த்தைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதல் “அறிதல்” நம் பொதுவான, வெளியார்ந்த அறிவைக் குறிக்கிறது, இதற்கு நமக்கு மனிதனின் போதனை தேவை. இரண்டாவது “அறிதல்” நம் உள்ளார்ந்த உணர்வின் அறிவைக் குறிக்கிறது, இதற்கு நமக்கு மனிதனின் போதனை தேவையில்லை. தேவனைப்பற்றிய வெளியார்ந்த மற்றும் உள்ளார்ந்த அறிவு நிச்சயமாகவே வேறுபட்டவை என்பதை இது சுட்டிக்காட்டுகிறது.

எடுத்துக்காட்டாக சிறிது மென்மையான வெண்மையான சர்க்கரையை, சிறிது மென்மையான வெண்மையான உப்பின் அருகே வைக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். புறம்பான தோற்றத்தில் அவை இரண்டும் வெண்மையாகவும், மென்மை யாகவும் இருக்கின்றன, மேலும் ஒன்றிலிருந்து மற்றொன்றை வேறுபிரிப்பது கடினம். எது சர்க்கரை, எது உப்பு என்று நமக்குச்

சொல்லும்படி நாம் வேறொருவரை கேட்கக்கூடும், ஆனால் இந்த அறிவு மற்றவரின் போதனையிலிருந்து வருகிறது, மற்றும் இது வெளியார்ந்தது, அனுபவம்சாராதது, பொதுவானதாகும். இது தவறாக இருக்கக்கூடும். இருப்பினும் நாம் அவைகளை சுவைத்துப் பார்த்தால், உடனடியாக இது இனிப்பாக இருக்கிறது ஆகவே சர்க்கரை என்றும், இது உவர்ப்பாக இருக்கிறது ஆகவே உப்பு என்றும் நாம் சுவைத்துணரமுடியும். மற்றவர்கள் நமக்குச் சொல்ல வேண்டிய தேவையில்லை. இந்த அறிதல் உள்ளான உணர்வி லிருந்து வருகிறது; எனவே இது அனுபவபூர்வமானதும், உள்ளான உணர்விற்குரியதுமாக இருக்கிறது.

எப்போதெல்லாம் நாம் தேவனை உள்ளிருந்து சுவைக் கிறோமோ, அப்போதெல்லாம் வெளியிலிருந்து வரும் தேவனு டைய செயல்கள் அல்லது வழிகளின்படியான தேவனைப்பற்றிய அறிவினால் பெறமுடியாத ஒரு அனுபவ மகிழ்ச்சியையும் சுவையையும் நாம் கொண்டிருக்கிறோம். சங்கீதம் *34:8* "கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்" என்று கூறுகிறது. தேவனுக்கு நன்றி, அவர் சுவைக்கப்படத்தக்கவர்! மேலும் "ஏனெனில் ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப்பெற்றும், தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும்," என்று எபிரேயர் *6:4-5* கூறுகிறது. இது தேவனை சுவைக்கமுடியும் என்பது மட்டுமல்ல, தேவனுடைய காரியங்களை, அதாவது ஆவியானவரின் காரியங்களையும்கூட சுவைக்கமுடியும் என்று நமக்குக் காட்டுகிறது. இந்த சுவைத்தல் நம்மை உள்ளிருந்து அறியச்செய்கிறது. ஒருமுறை நாம் தேவனையும், தேவனுடைய காரியங்களையும் உள்ளிருந்து "சுவைத்தால்", உள்ளான உணர்விலிருந்து வருகிற ஒரு குறிப்பிட்ட துல்லியமான அறிவு இயல்பாகவே நம்மிடம் இருக்கும், மேலும் மற்றவர்கள் நமக்கு போதிக்கவேண்டிய தேவை யில்லை. இது உண்மையாகவே புதிய உடன்படிக்கையில் ஒரு மகிமையான ஆசீர்வாதமாகும்!

## IV. உள்ளார்ந்த அறிவு

புதிய ஏற்பாட்டில், உள்ளான அறிவைப்பற்றித் தெளிவாகப் பேசும் நான்கு இடங்கள் இருக்கின்றன. முதல் இரண்டும் எபிரேயர் *8:11* மற்றும் *1* யோவான் *2:27*-ல் இருக்கின்றன. மற்றவர்கள் நமக்குப் போதிக்கத் தேவை யில்லை; ஆனால் நாம் தேவனை உள்ளிருந்து அறியமுடியும் என்று இவை இரண்டும் கூறுகின்றன. இருப்பினும் அவை இதனை வித்தியாசமாகக் கூறுகின்றன. தேவனுடைய ஜீவனின் இயல்பான செயல்பாடாகிய தேவனுடைய ஜீவவிதி, நாம் தேவனை அறியும்படிச் செய்கிறது என்று எபிரேயர்

*8* கூறுகிறது. பரிசுத்த ஆவியானவருடைய வெளிப்படுத்தும் அசைவாகிய அபிஷேகத்தின் போதனை, தேவனை நாம் அறியும்படிச்செய்கிறது என்று *1* யோவான் *2* கூறுகிறது. ஜீவவிதியால் தேவனை அறிவதென்றால் அவருடைய ஜீவனால் அவரை அறிவதாகும். அபிஷேகத்தின் போதனை யால் அவரை அறிவதென்றால் அவருடைய ஆவியானவரால் அவரை அறிவதாகும்.

உள்ளார்ந்த அறிவைப்பற்றிப் பேசுகிற யோவான் *17:3* மற்றும் எபேசியர் *1:17* ஆகியவைகளே மற்ற இரண்டு இடங்கள். தேவனுடைய நித்திய ஜீவனை உடையவர்களே தேவனை அறிந்தவர்கள் என்று யோவான் *17:3* கூறுகிறது. உள்ளிருக்கும் தேவனுடைய ஜீவன் நாம் தேவனை அறியும்படிச்செய்கிறது என்பது இதன் அர்த்தம். நாம் தேவனை அறிந்துகொள்ளும்படி தேவன் நமக்கு ஞானம் மற்றும் வெளிப்பாட்டின் ஆவியைத் தருகிறார் என்று எபேசியர் *1:17* கூறுகிறது. இங்கே குறிப்பிட்டுள்ள ஆவி தேவனுடைய ஆவியோடு தொடர்புடைய நம் மனித ஆவியாகும். தேவனுடைய ஆவியோடுகூடிய நம் ஆவி நம்மை உள்ளிருந்து தேவனை அறியச்செய்யமுடியும் என்பதே இதன் அர்த்தமாகும்.

வேதாகமத்திலுள்ள இந்த நான்கு பகுதிகளும், தேவனைப் பற்றிய நம் உள்ளார்ந்த அறிவு இரண்டு வழிகளாலானது என்று நமக்குக் காட்டுகின்றன: ஒன்று தேவனுடைய ஜீவனி லிருந்து வருகிற ஜீவவிதியினாலானது, மற்றொன்று தேவ னுடைய பரிசுத்த ஆவியிலிருந்து வருகிற அபிஷேகத்தின் போதனையாலானது. நம்முள் தேவனை அறிய இந்த இரண்டு வழிகள் நமக்கு இருப்பதால், தேவனைப்பற்றிய நம் அறிவு இரண்டு நிலைகளில் இருக்கமுடியும். ஜீவவிதி, முக்கியமாக தேவனுடைய ஜீவனின் குணாதிசயமாகிய தேவனுடைய சுபாவத்தை நாம் அறியும்படிச் செய்கிறது. இந்த குணாதிசயத்தை வெளிப்படுத்த எப்போதெல்லாம் அவருடைய ஜீவன் நம்மில் வேலைசெய்து செயல்படுகிறதோ, அப்போதெல்லாம் அது இயல்பாகவே தேவனுடைய சுபாவத்தை நமக்கு வெளிப்படுத்தி அதனை நாம் அறியும்படிச் செய்கிறது. அபிஷேகத்தின் போதனை முக்கியமாக தேவனையே நாம் அறியும்படிச்செய் கிறது. இது ஏனென்றால், அபிஷேகத்தின் போதனை பரிசுத்த ஆவியானவரிலிருந்து வருகிறது. மேலும் பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஊனுருவாக இருக்கிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மில் அபிஷேகித்து வேலைசெய்யும்போது, அவர் எப்போதும் தேவனை நமக்குள் அபிஷேகிக்கிறார், இதனால் நாம் தேவனையே அறியும்படிச் செய்கிறார். ஜீவவிதியும், அபிஷேகத்தின் போதனையும் தேவனுடைய சுபாவத்தையும்,

தேவனையும், உள்ளிருந்து நாம் அறியும்படிச்செய்கிறது. இதனையே நாம் இங்கு உள்ளார்ந்த அறிவு என்று அழைக்கிறோம்.

## V. விதியும் தீர்க்கதரிசிகளும்

தேவனுடைய சுபாவத்தையும், தேவனையும்பற்றிய அறிவின் இரண்டு நிலைகளைக்குறித்த ஒரு நிழலை நாம் பழைய ஏற்பாட்டில் பார்க்கமுடியும். விதி மற்றும் தீர்க்க தரிசிகள்மூலமாக தம் சுபாவத்தையும் தம்மையும் இஸ்ரயேல் புத்திரர் அறிந்து கொள்ளும்படியாக, தேவன் அவைகளைக் கொடுத்தார். இந்த அறிவு வெளியிலிருந்து வந்தது.

விதியும் தீர்க்கதரிசிகளும் பழைய ஏற்பாட்டின் குணாதி சயங்களாகும். தேவன் விதியைக் கொடுத்து தீர்க்கதரிசிகளை ஏற்படுத்தியதற்குக் காரணம், தம் மக்கள் தம்மை அறிந்து கொள்வதற்காகவே. இவ்வாறு விதியும், தீர்க்கதரிசிகளும் இஸ்ரயேல் மக்கள் தம்மை அறிந்து கொள்வதற்கு தேவன் பயன் படுத்திய இரண்டு வழிவகைகளாகும். இந்த இரண்டு வழிவகை களால் அவர்கள் தேவனைப்பற்றிய அறிவை இரண்டு நிலைகளில் பெற்றிருக்கமுடியும்.

தம் சுபாவத்தை அறிந்துகொள்ள, இஸ்ரயேலர்களை வழிநடத்துவதற்காக தேவன் விதியைக் கொடுத்தார். விதி தேவனுடைய சுபாவத்திலிருந்து வருகிறது, ஏனெனில் தேவன் எதை விரும்புகிறார், எதை விரும்பவில்லை என்பதைப்பற்றி இது பேசுகிறது. தேவனுடைய சுபாவம் விரும்புகிற எல்லாவற்றையும் அவர்கள் செய்யவேண்டும் என்று அவர் விரும்பினார். தேவனுடைய சுபாவம் வெறுக்கிற எல்லாவற்றையும் அவர்கள் செய்வதை அவர் தடைசெய்தார். எடுத்துக்காட்டாக: தேவன் வைராக்கியமுள்ள தேவன்; ஆகையால் அவர்கள் சிலைகளை வழிபடுவதை அவர் தடைசெய்தார். தேவன் அன்பானவர்; ஆகையால் அவர்கள் கொலைசெய்வதை அவர் தடைசெய்தார். தேவன் பரிசுத்தமானவர்; ஆகையால் அவர்கள் பரிசுத்தமாக இருக்கவேண்டுமென்று அவர் விரும்பினார். தேவன் நேர்மை யானவர்; ஆகையால் அவர்கள் நேர்மையாக இருக்கவேண்டு மென்று அவர் விரும்பினார். அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட விதியின் தன்மை, தேவன் கொண்டிருக்கும் சுபாவத்தின் தன்மைக்கு ஏற்றதாக இருந்தது. இவ்வாறு விதி முழுவதும் தேவனுடைய சுபாவத்தை அவர்களுக்குக் காட்டியது. சில காரியங்கள் தேவனுடைய பிரகாசத்தையும், மற்றவை தேவனுடைய பரிசுத்தத்தையும் நல்ல தன்மை யையும், இன்னும் சில தேவனுடைய அன்பைப்பற்றியும் பேசுகின்றன. தேவன் தம் சுபாவத்தின் ஒவ்வோர் அம்சத்தையும் அறிய இஸ்ரயேல் மக்களை

வழிநடத்த, கோருவதும் தடைசெய்வதுமாகிய விதியின் ஒவ்வொரு பகுதியையும் அவர் பயன்படுத்தினார்.

தம்மை அறிந்துகொள்ள இஸ்ரயேல் புத்திரரை வழிநடத்த தேவன் தீர்க்கதரிசிகளையும் ஏற்படுத்தினார்; ஏனெனில் தேவனை, அதாவது அவரது நபரை பிரதிநிதித்துவப்படுத்தும்படி பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசிகள் அவரால் ஏற்படுத்தப்பட்டார்கள். அவர்கள் பேசிய வார்த்தைகள் தம் சுய சித்தத்தின்படி தேவனால் கொடுக்கப்பட்ட வெளிப்பாடும் வழிநடத்துதலும் ஆகும். எடுத்துக்காட்டாக மோசே தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு தீர்க்கதரிசி (உபா. 18:15). ஆசரிப்புக் கூடாரத்தைக் கட்டுவதைப் பற்றி அவன் இஸ்ரயேல் புத்திரருக்குப் பேசிய வார்த்தைகள் அந்தக் காரியத்தைக் குறித்து அவர்களுக்கு தேவனுடைய வெளிப்பாடாகும். வனாந்தரத்தில் நடக்க அவன் அவர்களை வழிநடத்தியபோது, அது வனாந்தரத்தில் நடக்க தேவன் அவர்களை வழி நடத்தியதாகும். இவ்வாறு தேவன் தம்மை அதாவது தம்முடைய நபரை அறிய இஸ்ரயேல் புத்திரரை வழிநடத்த தீர்க்கதரிசிகள்மூலம் எல்லா வகையான வெளிப்பாட்டையும் வழி நடத்துதலையும் தேவன் பயன்படுத்தினார்.

விதி தேவனுடைய சுபாவத்திலிருந்து வருவதால் அதின் குணம் நிலையானதும் மாறாததுமாக இருக்கிறது. ஒருவன் தன் பெற்றோரை மதிக்கவேண்டும், கொலைசெய்யக்கூடாது, விபச்சாரம்செய்யக்கூடாது, திருடக்கூடாது என்று விதி கூறுகிறது. இவை யாவும் நிலையான சிறிதும் வளைந்து கொடுக்காத சட்டங்கள், இவற்றை மாற்றமுடியாது. ஒரு நபருக்குப் பொருந்துவதுபோலவே மற்றொருவருக்கும் அல்லது எருசலேமில் வாழும் ஒருவருக்குப் பொருந்துவதுபோலவே சமாரியாவில் வாழும் ஒருவருக்கும் பொருந்தும். நபர், நிகழ்ச்சி, நேரம், இடம் ஆகியவைகளின் மாற்றத்தால் இவைகளை மாற்றமுடியாது. இஸ்ரயேல் புத்திரர் இந்த சட்டங்களின் தரத்தை ஏற்றுக்கொள்ள சித்தமுடையவர்க ளாக இருந்திருந்தால் அவர்கள் தேவனுடைய நித்தியமும் மாற்ற முடியாததுமான சுபாவத்தை அறிந்திருப்பார்கள் என்பது மட்டுமல்ல அவர்களுடைய வாழ்க்கையின் பாணி, குணம், சுவை அந்த சுபாவத்திற்கு பொருந்துவதாகவும் இருந்திருக்கும்.

இன்னொரு பக்கத்தில் தீர்க்கதரிசிகள் தேவனை பிரநிதித் துவப்படுத்தி ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான தேவனுடைய சித்தத்தைப் பேசியதால், அவர்களுடைய செயல்பாடு வளைந்து கொடுப்பதும் மாறுகிறதாகவும் இருந்தது. அது வரம்பிற்குட் பட்டதும் நிலையானதுமாக இருக்கவில்லை. இது ஏனென்றால், தேவன் எல்லாக் காரியங்களையும் தம் சுய சித்தத்தின்படிச் செய்கிறார், மேலும் அவர்தாமே வளைந்து கொடுக்கிறவரும்

வரம்பிற்குட்படுத்த முடியாதவராகவும் இருக்கிறார். தீர்க்கதரிசிகள் ஒரு நேரத்தில் மக்களுக்கு ஒரு வகையான வெளிப்பாட்டையும் மற்றொரு நேரத்தில் வேறு வகையான வெளிப்பாட்டையும் கொடுக்கலாம். இங்கே அவர்கள் மக்களுக்கு இந்த வகையான வழி நடத்துதலையும், அங்கே அவர்கள் அந்த வகையான வழிநடத்துதலையும் கொடுக்கலாம். இவ்வாறு மனிதர்களுக்குக் கொடுக்கப்பட்ட விதியின் தரம் நிலையானதும், வரம்புக்குட் பட்டதுமாயிருந்தது. ஆனால் தீர்க்கதரிசிகள் அவர்களுக்குக் கொடுத்த வெளிப்பாடும் வழிநடத்துதலும் வளைந்துகொடுப்பதும், வரம்பிற்குட்படாததுமாயிருந்தது. இஸ்ரயேலர்கள் தீர்க்க தரிசிகளின் வெளிப்பாட்டையும் வழிநடத்துதலையும் பின்பற்ற சித்தமுள்ளவர்களாக இருந்திருந்தால் அவைகளால் அவர்கள் தேவனை அவருடைய நபராகவே அறிந்திருக்க முடியும், மேலும் அந்த நேரத்திற்கான அவருடைய சித்தத்தை அவர்கள் அறிந்திருக்கமுடியும். செயலில் அல்லது ஓய்வில், வேலையில் அல்லது யுத்தத்தில் அவர்கள் தங்களை தேவனோடும் அவருடைய சித்தத்தோடும் பொருத்திக்கொள்ள முடிந்திருக்கும்.

## VI. ஜீவவிதியும் அபிஷேகத்தின் போதனையும்

விதியும் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளும் இஸ்ரயேல் மக்களை தேவனை அறியும்படிச்செய்தாலும் அவையாவும் வெளியார்ந்த அறிவாயிருந்தது, உள்ளார்ந்த அறிவல்ல, ஆகையால் புதிய ஏற்பாட்டுக் காலத்தில், தேவன் தம் ஜீவனுடன் தம் ஆவியை நம்மில் வைத்தார். இவ்வாறு அவரைப்பற்றிய ஒரு உள்ளார்ந்த அறிவைக் கொண்டிருக்க நமக்குத் திறனளித்தார். அவருடைய ஜீவனிலிருந்து வருகிற ஜீவவிதி பழையஏற்பாட்டு விதியின் இடத்தை எடுத்துக் கொள்கிறது, மேலும் அவருடைய சுபாவத்தை உள்ளிருந்து அறிந்துகொள்ள நமக்குத் திறனளிக்கிறது. அபிஷேகத்தின் போதனை பழையஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகளின் இடத்தை எடுத்துக்கொள்கிறது, மேலும் தேவனையும் அவருடைய சித்தத்தையும் உள்ளிருந்து அறிந்துகொள்ள நமக்குத் திறனளிக் கிறது.

### A. ஜீவவிதி

ஜீவவிதி ஜீவனின் இயல்பான குணாதிசயமும், செயல்பாடுமாக இருக்கிறது; ஜீவனின் இந்த குணாதிசயமே ஜீவனின் சுபாவமாகும். ஆகையால் நம்மிலிருக்கும் தேவனுடைய ஜீவவிதி தன் செயல்பாட்டை வெளிப்படுத்தும்போதும், நம்மைச் சீரமைக்கும் போதும், இது எப்போதுமே தேவனுடைய சுபாவத்தை நமக்கு வெளிப்படுத்துகிறது. ஆகையால் இது தேவனுடைய சுபாவத்தை

அறிய நமக்குத் திறனளிக்கிறது. இப்படிப்பட்ட அறிதலுக்கு வெளியார்ந்த அறிவின் போதனையோ மற்றும் எழுத்துக்களாலான விதி மற்றும் சட்டதிட்டங்களின் வெளியார்ந்த சீரமைத்தல்களோ தேவையில்லை, ஆனால் இது உள்ளார்ந்த ஜீவவிதியால் நமக்கு கொடுக்கப்படும் இயல்பான உணர்வினாலானது. எடுத்துக்காட்டாக, ஒரு குழந்தையின் வாயில் காடியை வைத்தால், அவன் அதைத் துப்பிவிடுவான். ஆனால் அவனுடைய வாயில் சர்க்கரையை வைத்தால், அவன் அதை விழுங்குவான். புளிப்பையும் இனிப்பையும் வேறுபடுத்துகிற அந்தக் குழந்தையின் திறன் போதனையை அடிப்படையாகக் கொண்டதல்ல, மாறாக ஜீவனின் இயல்பான செயல்பாட்டை அடிப்படையாகக்கொண்டதாகும். அதுபோலவே, இப்போதுதான் இரட்சிக்கப்பட்டு தேவனுடைய ஜீவனைப் பெற்றுக்கொண்ட ஒருவன் பாவம்செய்ய விரும்பு வதில்லை. இது அவன் பாவத்தின் தண்டனைக்குப் பயப்படுகிறான் என்பதினாலல்ல, மாறாக அவனுக்குள்ளிருக்கும் தேவனுடைய ஜீவனின் பரிசுத்தமான சுபாவம் பாவத்தின்மீது ஒரு அருவருக்கும், அறவேவெறுக்கும், பொறுத்துக்கொள்ளமுடியாத, உணர்வை அவனுக்கு இயல்பாகவே தருகிறது. இப்படிப்பட்ட உணர்வு மனச்சாட்சியின் குற்றப்படுத்துதலைவிட ஆழமானதாகும். பாவத்தை அறவேவெறுக்கும் இப்படிப்பட்ட ஒரு உணர்வி லிருந்துதான் நாம் தேவனுடைய பரிசுத்த சுபாவத்தை அறிந்துகொள்கிறோம்.

பவுல் கொரிந்துவிலுள்ள பரிசுத்தவான்களிடம் "எங்கள் கைகளினாலே வேலைசெய்து, பாடுபடுகிறோம்; வையப்பட்டு, ஆசீர்வதிக்கிறோம்; துன்பப்பட்டு, சகிக்கிறோம். தூஷிக்கப்பட்டு, வேண்டிக்கொள்ளுகிறோம்" *(1 கொரி. 4:12-13)* என்று சொன்னான். பவுல் இப்படி நடந்துகொண்டது, அவனிலுள்ள தேவனுடைய ஜீவன் இப்படி அவனை உருவாக்கியதால் மட்டுமல்ல, அவனிலுள்ள தேவனுடைய சுபாவமும் அவனை இப்படி உருவாக்கினதாலாகும். இப்படி அவன் தேவனுடைய ஜீவனில் வாழ்ந்தபோது, அவன் தேவனுடைய சுபாவத்தைத் தொட்டான்; வேறு வார்த்தைகளில் சொன்னால், அவன் தேவனுடைய சுபாவத்தை அறிந்து கொண்டான்.

பரிசுத்தம், அன்பு, நேர்மை, பிரகாசம் போன்ற தேவனுடைய ஜீவனின் சுபாவம், காலம் மற்றும் இடத்தின் மாற்றத்தால் பாதிக்கப்படாமல் நித்தியத்திலிருந்து நித்தியம் வரை எப்போதுமே மாறாதது. ஆகையால் அவருடைய ஜீவவிதியின் குணமும் நிலை யானதும், மாறாததுமாகும். காலத்தையும் நேரத்தையும் பொருட் படுத்தாமல், தேவனுடைய ஜீவன் எப்போதெல்லாம் வேலை செய்கிறதோ, அப்போதெல்லாம் அது நம்மை தேவனுடைய

சுபாவத்தைத் தொட நமக்குத் திறனளிக்கிறது; இந்த சுபாவம் நிரந்தரமானதும் மாறாததுமாகும்.

தேவனுடைய ஜீவன் நம்மில் வேலைசெய்து தேவனுடைய சுபாவத்தை அறிந்துகொள்ள நமக்குத் திறனளிக்கும்போது, நம் முழு வாழ்க்கையின் நடத்தை, குணம், சுவை, ஆகியவைகளை தேவனுடைய சுபாவத்திற்கு ஒத்திருக்கச்செய்வது இதன் விளைவாகும். இது, மனிதனுடைய வெளியார்ந்த வாழ்க்கை தேவனுடைய சுபாவத்தோடு ஒத்திருக்கவேண்டும் என்று கோருகிற ஒரு வெளியார்ந்த விதிமுறையாகிய பழையஏற்பாட்டின் எழுத்துக்களாலான விதியைப்போன்றதல்ல. இது, உள்ளிருக்கும் இந்த ஜீவனின் வேலையால் தேவனுடைய சுபாவத்தை நம் சுபாவத்தோடு கலந்திணைக்கும் புதிய ஏற்பாட்டின் ஜீவவிதியாகும். இவ்வாறு இது நம் சுபாவம் தேவனுடைய சுபாவத்தின் மூலக்கூறைக் கொண்டிருக்கவும், படிப்படியாக தேவனுடைய சுபாவத்தைப்போல மாறும்படியும் செய்கிறது. தேவனுடைய சுபாவம் எதையெல்லாம் நேசிக்கிறதோ வெறுக்கிறதோ, அதையெல்லாம் நம் சுபாவம் அதுபோலவே நேசிக்கும் அல்லது வெறுக்கும். இப்போது கடந்தகாலத்திற்குரிய இருளும், அசுத்தமுமான காரியங்களை எப்போதெல்லாம் நாம் செய்கிறோமோ, செய்யவிரும்புகிறோமோ, அப்போ தெல்லாம் உள்ளிருக்கும் ஜீவவிதி நம்மை அசௌகரிய மாகவும், இயல்புக்கு அப்பாற்பட்டதாகவும், சமாதானம் இல்லாமலும் உணரும்படிச் செய்கிறது. மாறாக எவ்வளவு அதிகமாக பிரகாசமும், பரிசுத்தமும், தேவனுடைய சுபாவத்திற்கு ஒத்திருக்கும் காரியங்களை நாம் செய்கி றோமோ, அவ்வளவு அதிகமாக நாம் உள்ளாக ஜீவனையும் சமாதானத்தையும் உணர்கிறோம். இந்த வழியில், உள்ளிருந்து தேவனுடைய சுபாவத்துடன் ஒத்திருக்க நம் வாழ்க்கை இயல்பாகவே மாற்றப்படுகிறது.

## B. அபிஷேகத்தின் போதனை

வேதவாக்கியங்களில், *1 யோவான் 2:27* மட்டுமே "அபிஷேகத்தின் போதனையைப்" பற்றிப் பேசுகிறது. அபிஷேகம் என்பது தைலத்தின் செயல்பாட்டை, அதாவது தைலத்தின் அசைதலையும் வேலையையும் குறிக்கிற தொழிற்பெயராகும் என்று நாம் யாவரும் அறிவோம். பழைய ஏற்பாட்டின் மாதிரியின்படியும், புதிய ஏற்பாட்டின் நிறைவேறுதலின்படியும் வேதவாக்கியத்தில் தைலம் அல்லது எண்ணெய் பரிசுத்த ஆவியைக் குறிக்கிறது (ஏசா. *61:1*; லூக். *4:18*). தைலம் அல்லது எண்ணெய் பரிசுத்த ஆவியைக் குறிப்பதால், "அபிஷேகம்" பரிசுத்த ஆவியின் இந்த வேலைசெய்தலைக் குறிக்கவேண்டும்.

நம்மில் பரிசுத்த ஆவியின் வேலைசெய்தல் தைலத்தின் அபிஷேகித்தலைப் போன்றது. ஆகையால் வேதவாக்கியம் பரிசுத்த ஆவியின் இந்த வேலைசெய்தலை "அபிஷேகம்" என்று அழைக்கிறது.

அபிஷேகம் என்பது நம்மில் பரிசுத்த ஆவியின் வேலை செய்தலாக இருப்பதால், இது தேவனையும் தேவனுடைய சித்தத்தையும் நாம் அறியும்படி, ஒரு உள்ளான உணர்வைக் கொண்டிருக்கச்செய்கிறது. அபிஷேகம் தேவனையும் தேவ னுடைய சித்தத்தையும் இந்த வழியில் நம்மை அறியச் செய்யும் போது, இது உள்ளிருந்து நமக்குப் போதிக்கிறது. இவ்வாறு இந்தப் போதனையை, வேதவாக்கியம் "அபிஷேகத்தின் போதனை" என்று அழைக்கிறது.

அபிஷேகம் என்பது நம்மில் பரிசுத்த ஆவியின் வேலைசெய்த லாக இருப்பதால், இது தேவனே நம்மில் வேலைசெய்வதாகும், ஏனென்றால் பரிசுத்த ஆவி நம்முள் தேவனுடைய ஊனுருவாக இருக்கிறார். தேவன் எல்லை யற்றவர்; ஆகையால் நம்முள் வேலைசெய்வதிலிருந்தும், அபிஷேகிப்பதிலிருந்தும் அவர் நமக்குத் தருகிற போதனையின் குணமும் எல்லைக்குட்படுத்தப்பட முடியாதது. சில நேரங்களில் அவர் நமக்கு இந்த விதமான போதனையைத் தருகிறார்; சில நேரங்களில் அவர் நமக்கு அந்த விதமான போதனையைத் தருகிறார். இது நிலையானதும் மாறாதது மான குணத்தை உடைய அவருடைய ஜீவவிதியைப்போன்றதல்ல. அவருடைய ஜீவவிதி அவருடைய ஜீவனின் நிலையான சுபாவத்திலிருந்து வருகிறது, இது அவருடைய ஜீவனின் நிலையான சுபாவத்தை நாம் தொடும்படிச்செய்கிறது; ஆகை யால் நம்முள் இந்த ஜீவனின் செயல்பாடு நிலையானதாகும். ஆனால் பரிசுத்த ஆவியின் வேலைசெய்தல் அவருடைய எல்லைக்குட்படாத நபரிலிருந்து வருகிறது, இது எல்லைக்குட் படாத அவரையே நாம் தொடும்படிச் செய்கிறது; ஆகையால் உள்ளிருந்து இந்த வேலைசெய்தல் நமக்குத் தருகிற போதனையும் எல்லைக்குட்படாததாகும். இது நாம் அவருடைய வெளிப்பாட் டைப் பார்க்கவும், அவருடைய வழி நடத்துதலைப் பெறவும் செய்யமுடியும், இதனால் அவருடைய வரம்பற்ற நபரையும், அவருடைய எல்லையற்ற சித்தத்தையும் நாம் அறியும்படிச்செய்கிறது.

அபிஷேகத்தின் போதனை தேவனுடைய வரம்பற்ற நபரைக்கொண்டு நமக்கு வெளிப்பாட்டையும் வழிநடத்து தலையும் தருவதால், இது நம் நடத்தை, செயல், அசைவு, தெரிந்தெடுப்பு ஆகிய எல்லாவற்றையும் தேவனுடைய சித்தத்துடன் ஒத்திருக்கச் செய்யமுடியும். இது வெளியே யிருந்து மற்றவர்களுக்கு

உபதேசித்து, அவர்களுடைய செயல் தேவனுடைய சித்தத்திற்கு ஒத்திருக்க வேண்டும் என்று கோரிய பழையஏற்பாட்டு தீர்க்கதரிசிகளைப் போன்றதல்ல. இது தேவனுடைய மூலக்கூறை நமக்குள் அபிஷேகித்து, தேவனையே தொட்டுவிட்டதால் நமக்குள்ளிருந்து தேவனுடைய சித்தத்தை அறிந்துகொள்ள நமக்குத் திறனளிக்கும் தைலமாக நம்மில் இருக்கிற பரிசுத்த ஆவியாகும். இது நம் செயல் மட்டுமல்ல, நம் ஆள்தத்துவம் முழுவதும் தேவ னுடைய மூலக்கூறால் நிறைந்திருக்கவும், அவருடைய சித்தத்தோடு ஒத்திருக்கவும் செய்வதே இதன் விளைவாகும்.

இவ்வாறு ஜீவவிதி தேவனுடைய ஜீவனின் சுபாவத்தை நாம் தொடும்படிச் செய்கிறது. இது நம்முள்ளிருந்து தேவனுடைய ஜீவ சுபாவத்தின்படி சீரமைக்கிறது. ஆனால் அபிஷேகம் நாம் தேவனைத் தொடச்செய்கிறது, அதாவது அவருடைய நபரைத் தொடச்செய்கிறது, மேலும் அவருடைய சாட்சாத்து சாராம்சத்தையே நமக்குள் அபிஷேகிக்கிறது. ஜீவவிதி நம்மிடமிருப்பதாலும், அபிஷேகம் நம்மில் தொடர்ச்சியாக வேலைசெய்து போதிப்ப தாலும் எல்லா வற்றிலும் நாம் தேவனை அறியமுடியும், மற்றவர் கள் நமக்குப் போதிக்கவேண்டிய தேவையில்லை. எப்போதெல்லாம் வாழ்க்கையின் நடத்தையையும் சுவையையும் குறித்த கேள்வியை நாம் தொடுகிறோமோ, அப்போதெல்லாம் இந்தக் காரியங்களில் ஜீவவிதி தேவனுடைய சுபாவத்தை நமக்குத் தெரியப்படுத்துகிறது. மேலும் எப்போதெல்லாம் செயல் அல்லது தெரிந்தெடுப்பு குறித்த கேள்வியை நாம் தொடுகிறோமோ, அப்போதெல்லாம் அபிஷேகத் தின் போதனை இந்தக் காரியங்களைக்குறித்து தேவன்தாமே எவ்வாறு உணர்கிறார் என்பதை நாம் புரிந்துகொள்ளும்படிச் செய்கிறது.

எடுத்துக்காட்டாக நாம் சில உடைகளை வாங்க விரும்பு கிறோம் என்று வைத்துக்கொள்வோம். நாம் அவைகளை வாங்குகிறோமா இல்லையா என்பது செயலில் பரிசுத்த ஆவியால் வழிநடத்தப்படுவதைப்பற்றிய ஒரு கேள்வியாகும். இவ்வாறு அபிஷேகம் நமக்குப் போதிக்கும், நம்மை வழிநடத்தும். நாம் கடைக்குள் சென்றவுடன், நம் தெரிந்தெடுக்கும் பாணியும், நிறமும் தேவனுடைய சுபாவத்தின் சுவைக்குத் தொடர்புடைய காரியங்களாகும். எந்தப் பாணியும், நிறமும் தேவனுடைய சுபாவத்தோடு ஒத்திருக்கின்றன என்பதை ஜீவவிதி நம்மை உணரும்படிச்செய்யும். நாம் கடைக்குச்சென்று உடைகள் வாங்கவேண்டுமா இல்லையா என்ற வழிநடத்துதல் நிலையான ஒன்றல்ல. இந்தமுறை நாம் போகவேண்டும் அடுத்தமுறை நாம் போகக்கூடாது என்பது சாத்தியம். இருப்பினும் நாம் எந்தப் பாணியை, நிறத்தை தெரிந்தெடுக்க வேண்டும் என்ற சுவை

ஒருபோதும் மாறாது; நாம் போகும் ஒவ்வொரு முறையும் அது ஒரேமாதிரியாகவே இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, திருமணம் செய்துகொள்ள விரும்பும் ஒரு சகோதரனையும் சகோதரியையும் பரிசீலிப்போம். எந்த நாளில் அவர்கள் திருமணம்செய்துகொள்ளவேண்டும் என்பது செயலில் வழிநடத்தப்படுவதைக்குறித்த கேள்வி, அது தேவனுடைய சுபாவத் தோடு தொடர்புடையதல்ல. முதலாவது நாள் அல்லது பதினைந் தாவது நாள் தேவனுடைய சுபாவத்துடன் ஒத்திருக்கும், மற்ற நாட்கள் ஒத்திருக்காது என்பதல்ல. இது செயலில் வழிநடத்தப் படுதலின் காரியமாக இருப்பதால், இது பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அல்லது வேலைசெய்தலால் தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும் திருமணத்தின்போது உடைகளின் பாணி, இடத்தின் அமைப்பு, கூட்டத்தின் ஏற்பாடு, மேலும் குணமும், சுவையும், பாணியும் சபையோடு ஒத்திருக்கிறதா, பரிசுத்த வான்களுக்கு உகந்ததாக இருக்கிறதா என்பவையெல்லாம் தேவனுடைய சுபாவத்தோடு தொடர்புடைய காரியங்களாகும். ஆகையால் அவைகள் அபிஷேகத்தினால் போதிக்கப்படவில்லை, ஆனால் ஜீவவிதியால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.

## C. இவை இரண்டிற்குமுள்ள இணைப்பு

ஜீவவிதியும், அபிஷேகத்தின் போதனையும் வேறுபட்ட செயல்பாடுகளைக் கொண்டிருந்து ஒன்றாக இல்லாம லிருந்தாலும், அவைகள் மிகவும் நெருக்கமான தொடர்புடையவைகளாக இருக்கின்றன. ஒன்றின்மீது மற்றொன்று பரஸ்பரமாகக் கொண்டிருக்கும் காரணமும் விளைவும் பிரிக்கப்படமுடியாதது.

ஜீவவிதி தேவனுடைய ஜீவனிலிருந்து உற்பத்தியாகிறது, மேலும் தேவனுடைய ஜீவன் தேவனுடைய ஆவியில் இருக்கிறது, அதில் அடங்கியிருக்கிறது. ஆகையால் இந்த விதி "ஜீவனுடைய ஆவியின் பிரமாணம்" (ரோமர் 8:2) என்று அழைக்கப்படுகிறது, மேலும் இது பரிசுத்த ஆவியின் ஒரு விதியாகவும் இருக்கிறது. இந்த விதி தேவனுடைய ஜீவனிலிருந்து வருகிறதும், தேவனு டைய ஜீவனில் இருப்பதாக இருந்தாலும் அது தேவனுடைய பரிசுத்த ஆவியால் செயல்படுத்தப்படுகிறது; மேலும் பரிசுத்த ஆவியின் இந்த வேலைசெய்தலே அபிஷேகமாகும். ஆகையால் இந்த விதியின், செயல்பாடு கட்டாயமாக அபிஷேகத்தில் வெளிப் படுகிறது. எப்போதெல்லாம் அபிஷேகம் நின்றுவிடுகிறதோ அப்போதெல்லாம் இந்த விதியின் செயல்பாடு நிச்சயமாக மறைந்துவிடுகிறது. அபிஷேகமும், ஜீவவிதியின் செயல்பாடும் உண்மையில் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன, இவை பிரிக்கப்படமுடியாதவை என்று இது நிரூபிக்கிறது.

மேலும் அபிஷேகத்தின் போதனை ஜீவவிதியை நாம் புரிந்துகொள்வதோடும் தொடர்புடையது. ஜீவவிதி ஜீவனின் இயல்பான செயல்பாடாக இருப்பதால், நம்முள் இந்த விதியின் வேலைசெய்தல் ஜீவ உணர்விற்குரியதாகும். இந்த ஜீவனின் விதியைக்கொண்டு ஒரு தூண்டுதலை அல்லது தடைசெய்தலை அதாவது விரும்புதலை அல்லது வெறுத்தலை உணரச்செய்யும் ஓர் உணர்வை மட்டுமே நம் ஆள்தத்துவத்தின் மிக ஆழமான பகுதியில் நாம் கொண்டிருக்கமுடியும். இருப்பினும் நாம் இன்னும் அந்த உணர்வின் அர்த்தத்தைப் புரிந்துகொள்ளமுடியாது. அந்த உள்ளான உணர்வின் அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ள, அபிஷேகத்தின் போதனை நமக்குத் தேவை. அபிஷேகம் நமக்குப் போதிக்கும்போது மட்டுமே ஜீவவிதி நமக்குக் கொடுக்கிற உணர்வின் அர்த்தத்தை நாம் புரிந்துகொள்ளமுடியும். எடுத்துக் காட்டாக சர்க்கரையையும் உப்பையும் முதல்முறையாக சுவைக்கும் ஒரு குழந்தை தனக்குள் இருக்கும் ஜீவனின் இயல்பான திறனைக் கொண்டு சுவையின் வேறுபாட்டை உணரமுடியும்; இருப்பினும் இவை இரண்டும் என்ன என்பதை அவன் இன்னும் அறியவில்லை. ஆயினும் இனிப்பானது சர்க்கரை என்றும் உப்புச்சுவையை உடையது உப்பு என்றும் அழைக்கப்படுகிறது என்பதை அவன் தாய் அவனுக்குக் கூறும்போது, இவை இரண்டும் வித்தியாச மானவை என்பதை மட்டுமல்ல, இந்த இரண்டு காரியங்களும் என்ன என்பதையும் அவன் அறிந்துகொள்கிறான்.

இதைப்போலவே ஒரு சகோதரன் இரட்சிக்கப்படும்போது அவன் தனக்குள் தேவனுடைய ஜீவனைக் கொண்டிருக்கிறான். ஆகையால் அவன் திரைப்படங்களுக்குச்சென்றால், மது அருந்தினால் அல்லது புகைத்தால், இந்தக் காரியங்களெல்லாம் அவனில் இருக்கும் தேவனுடைய ஜீவனின் சுபாவத்தோடு இசைவாக இல்லாததால், இந்த ஜீவனின் சுபாவம் இந்தக் காரியங்களையெல்லாம் அவன் ஒழித்துவிடும்வரை அசௌகரியமான உணர்வையும், சமாதானமின்மையையும் அவனுக்கு ஏற்படுத்துகிறது. இதுவே அவனுக்கு தெரியப்படுத்தப்படுகிற தேவனுடைய ஜீவனின் உள்ளியல்பான உணர்வாகும். இருப்பினும் இந்தக் காரியங்களைச் செய்வதில் அவன் அசௌகரியமாக உணர்ந்தாலும், அவன் ஏன் அசௌகரியமாக உணர்கிறான் என்று அவன் இன்னும் புரிந்துகொள்வதில்லை. இந்தக் காரியங்களெல்லாம், அவனிலிருக்கும் தேவனுடைய பரிசுத்த ஜீவனின் சுபாவத்தோடு ஒத்திருக்கவில்லை என்று வேதவாக்கியங்களின் போதனையின்மூலம் அபிஷேகம் அவனுக்குத் தெரியப்படுத்தாதவரை இந்த அசௌகரியத் திற்கான காரணத்தை அவன் அறிந்துகொள்வதில்லை. இந்தநேரத்தில்

தேவனுடைய ஜீவனின் உள்ளியல்பான உணர்வு அவனுக்குக் கொடுக்கும் உணர்வை மட்டுமல்ல, அவன் புரிந்துகொள்ளும்படிச் செய்கிற அபிஷேகத்தின் போதனையையும் கொண்டிருக்கிறான். இவ்வாறு அபிஷேகத்தால் ஜீவவிதியின் செயல்பாடு வெளிப் படுத்தப்படுவது மட்டுமல்லாமல் அபிஷேகத்தின் போதனையின் மூலம் ஜீவவிதியின் உணர்வின் அர்த்தமும் வெளிப்படுத்தப் படுகிறது.

மறுபக்கத்தில் ஜீவவிதியின் வேலைசெய்தல் அபிஷே கத்தின் போதனையை நாம் புரிந்துகொள்வதோடும் தொடர்புடையது. அபிஷேகத்தின் போதனையைப் புரிந்துகொள்ளுதல் ஜீவனின் வளர்ச்சியைச் சார்ந்திருக்கிறது என்பதை நம் அனுபவத்திலிருந்து நாம் அறிவோம். நம் ஜீவனின் வளர்ச்சி யின் அளவு அபிஷேகத் தின் போதனையை நாம் எந்த அளவு புரிந்துகொள்கிறோம் என்பதை தீர்மானிக்கிறது. எடுத்துக்காட்டாக, சர்க்கரையையும் உப்பையும் சுவைத்த குழந்தை மிக இளையவனாக இருந்தால் இனிப்பாக இருப்பது சர்க்கரை, உப்புச்சுவையோடு இருப்பது உப்பு என்று அவனுடைய தாய் அவனுக்குக் கூறினாலும், அவன் இன்னும் அதைப் புரிந்துகொள்ளமுடியாது. அவனுடைய ஜீவன் ஒரு குறிப் பிட்ட நிலைக்கு வளரும்வரை காத்திருப்பது அவசியம்; அப்போது அவன் புரிந்துகொள்ளமுடியும். அபிஷேகத்தின் போதனையை நாம் புரிந்துகொள்ள விரும்பினால் இதே கோட்பாடு பொருந்தும். ஜீவனின் வளர்ச்சி போதுமான அளவு இருக்க வேண்டும். அபிஷேகத்தின் போதனையை அதிகமாகப் புரிந்துகொள்ள நாம் விரும்பினால், நம் ஜீவனின் வளர்ச்சியும் இன்னும் அதிகரிக்கவேண்டும். ஜீவனின் வளர்ச்சியின் அதிகரிப்பு ஜீவவிதியின் வேலைசெய்வதிலிருந்து வருகிறது. ஜீவவிதி நம்மில் எவ்வளவு அதிகமாக வேலைசெய்கிறதோ, அவ்வளவு அதிகமாக நம் ஜீவவளர்ச்சியும் அதிகரிக்கும், மேலும் அவ்வளவு அதிகமாக அபிஷேகத்தின் போதனையை நாம் புரிந்துகொள்ள முடியும். இவ்வாறு ஜீவவிதியின் வேலைசெய்தல் அபிஷேகத்தின் நம் புரிந்துகொள்ளுதலை அதிகரிக்கச்செய்யமுடியும்.

ஆகையால் ஜீவவிதியும் அபிஷேகமும் ஒன்றோடொன்று தொடர் புடையவை மட்டுமல்ல, அவை ஒன்றின் மீது ஒன்று பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதையும் நாம் நினைவில் வைத்துக்கொள்வோமாக. இவை இரண்டின் தொடர்பும் பாதிப்பும், நாம் தேவனை முழுமையாகவும், ஐசுவரியமாகவும் அறிந்து கொள்ளும்வரை தேவனைப்பற்றிய நம் உள்ளார்ந்த அறிவை மேலும் மேலும் வளரும்படிசெய்கின்றன.

## D. இவை இரண்டின் ஒப்பீடு

ஜீவவிதியும், அபிஷேகத்தின் போதனையும் எப்படி வித்தியாசப்படுகின்றன, அவை எப்படி பரஸ்பரமாகவும், பரிமாற்றமாகவும் தொடர்புடையவை என்பதை நாம் ஏற்கெனவே பார்த்திருக்கிறோம். இவை இரண்டால் கொடுக்கப்படும் தேவனைப்பற்றிய அறிவின் எளிமையும் தெளிவுமான ஒரு ஒப்பீட்டை இப்போது நாம் பார்க்கலாம், இது நம்மை இன்னும்கூட தெளிவாக்கும்.

ஜீவவிதி தேவனுடைய ஜீவனின் இயல்பான செயல்பாடாக இருப்பதால், அது நமக்குக் கொடுக்கும் தேவனைப்பற்றிய அறிவு ஒரே வகையானது; அதாவது இது தேவனுடைய ஜீவனின் சுபாவத்தை நாம் அறியும்படிச்செய்கிறது.

இருப்பினும், அபிஷேகத்தின் போதனை தேவனுடைய ஆவியின் வேலைசெய்தலாக இருப்பதால் இது நமக்குக் கொடுக்கும் தேவனைப்பற்றிய அறிவு குறைந்தது மூன்று வகைகளாக இருக்கின்றன:

முதலாவது, இது தேவனையே நாம் அறியும்படிச் செய்கிறது. நாம் தேவனைத் தொடுகிறோம், அதனால் அவரை அனுபவமாக்கி ஆதாயமாக்குகிறோம் என்பது இதன் அர்த்தமாகும்.

இரண்டாவது, இது தேவனுடைய சித்தத்தை நாம் அறியும்படிச் செய்கிறது. நம் செய்கைகளில் தேவன் நமக்குக் கொடுக்கும் வழிநடத்ததுதலை நாம் புரிந்துகொள்ளுகிறோம் என்பது இதன் அர்த்தம். இது பொதுவான வழிநடத்துதல் மற்றும் விசேஷமான வழிநடத்துதல் என்று இரண்டாகப் பிரிக்கப்படமுடியும். பொதுவான வழிநடத்துதல் நம் அன்றாட வாழ்க்கைக்காக இருக்கிறது. விசேஷமான வழிநடத்துதல் கர்த்தருடைய வேலையின் திட்டத்திற்காக இருக்கிறது. நாம் முன்பு சொல்லியிருக்கிறபடி, ஒரு குறிப்பிட்ட உடையை நாம் வாங்கவேண்டுமா கூடாதா, ஒரு திருமணத்தை எந்த நாளில் நடத்தவேண்டும் போன்றவையெல்லாம் நம் வாழ்க்கையின் பொதுவான வழிநடத்துதலின் எடுத்துக்காட்டுகள். மறுபக்கத்தில் சகோதரன் ஹட்சன் டெய்லர் கர்த்தரின் சுவிசேஷத்தை சீனாவின் உட்பகுதிக்குக் கொண்டுசெல்ல வேண்டும் என்று உணர்ந்தபோது, அது கர்த்தருடைய வேலையின் விசேஷமான வழிநடத்துதலாக இருந்தது.

மூன்றாவது, இது சத்தியத்தை நாம் அறியும்படிச் செய்கிறது, சத்தியத்தைக்குறித்த வெளிப்பாட்டை நாம் பெற்றுக்கொள்கிறோம் என்பது இதன் அர்த்தம். இதுவும் பொதுவானது மற்றும் விசேஷமானது என்று பிரிக்கப்படுகிறது. பொதுவானது நம் மனித நடத்தையோடு தொடர்புடையது: உதாரணமாக "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக"

*(2 கொரி. 6:14)* என்பதை அல்லது நாம் என்ன செய்தாலும் "எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்" *(1 கொரி. 10:31)* என்பதைப் பார்ப்பது. மறுபக்கத்தில், விசேஷமான வெளிப்பாடு என்பது கிறிஸ்துவில் தேவனுடைய இரகசியத்தையும் *(கொலோ. 2:2)*, கிறிஸ்துவோடு உள்ள தொடர்பில் சபையின் செயல்பாட்டையும் *(எபே. 1:23)* பார்ப்பதுபோன்ற தேவனுடைய திட்டத்தோடு தொடர்புடையது.

இந்தக் குறிப்புகளைப் பார்த்தபின்பு, ஜீவவிதி மற்றும் அபிஷேகத்தின் போதனையால் நமக்குக் கொடுக்கப்படும் உள்ளான அறிவு உண்மையிலேயே ஐசுவரியமானது என்பதை நாம் உணர்கிறோம். இது நம்முள் ஏறக்குறைய தேவனுடைய எல்லா வேலைசெய்தல்களையும் உள்ளடக்கியது, மேலும் இவ்வாறு தேவனைப்பற்றிய ஒரு முழுமையான, ஐசுவரிய மான, பூரணமான அறிவைப் பெற்றுக்கொள்ள நமக்குத் திறனளிக்கிறது.

## VII. வேதவாக்கியங்களின் நிரூபணம்

ஜீவவிதி மற்றும் அபிஷேகத்தின் போதனையால் நமக்குக் கொடுக்கப்படும் உள்ளான உணர்வு தேவனை அறிந்துகொள்ள நமக்குத் திறனளிக்கிறது. எனினும், இந்த உள்ளான உணர்வு முற்றும் முடிய நிஜமும் உண்மையுமாக இருந்தாலும், அது இன்னும் வேதவாக்கியங்களின் போதனையாலும் கோட்பாடு களாலும் நிரூபிக்கப்படவேண்டும். நாம் உள்ளே கொண்டிருக்கும் உணர்வு வேதவாக்கியங்களின் போதனை மற்றும் கோட்பாடு களோடு ஒத்திருக்கவில்லையென்றால், அதை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது. இந்த வழியில் ஏமாற்றப்படுதல் அல்லது மட்டுமீறிச் செல்வதிலிருந்து நாம் பாதுகாக்கப்படமுடியும், மேலும் நாம் துல்லியமாகவும், நிலையாகவும் இருக்கமுடியும்.

உள்ளான உணர்வு நம் ஆவியிலுள்ள ஜீவவிதியிலிருந்து வந்தாலும் அல்லது அபிஷேகமாக பரிசுத்த ஆவியிலிருந்து வந்தாலும், இது வேதவாக்கியங்களிலுள்ள சத்தியத்தோடு ஒத்திருக்கவேண்டும். நம்முள் நாம் உணரும் உணர்வு வேதவாக்கியங்களின் சத்தியத்துடன் ஒத்திருக்கவில்லை யென்றால், இது ஜீவவிதியிலிருந்து அல்லது அபிஷேகத்தின் போதனை யிலிருந்து நிச்சயமாக வந்திருக்கமுடியாது. உள்ளே உணர்வு ஜீவிப்பதாக இருந்தாலும், வேதவாக்கியங்களிலுள்ள சத்தியம் துல்லியமாகவும், பாதுகாப்பானாதாகவும் இருக்கிறது. வேதவாக் கியங்களின் சத்தியம் மட்டுமே ஜீவிக்கிறதாக இல்லாமல் துல்லிய மாகவும் பாதுகாப்பானதாகவும் இருந்தாலும், சிலசமயங்களில் உள்ளான உணர்வு மட்டுமே துல்லியமாகவும் பாதுகாப்பான தாகவும் இல்லாமல் ஜீவிக்கிறதாக இருக்கமுடியும். இது

முன்னோக்கிச்செல்லும் ஒரு இரயில் வண்டியைப்போன்றது: உள்ளே சக்தி மட்டுமல்ல வெளியே தண்டவாளங்களும் இருக்கவேண்டும். நிச்சயமாக வெளியே தண்டவாளங்கள் மட்டும் இருந்து உள்ளே சக்தி இல்லையென்றால், இரயில் அசையமுடியாது. ஆனால் உள்ளே சக்தி மட்டும் இருந்து வெளியே தண்டவாளங்கள் இல்லையென்றால், இரயில் அசைந்தாலும் அது நிச்சயமாக பேரழிவிற்குள் தீவிரமாகச்செல்லும். ஆகையால் உள்ளே ஜீவிக்கிற உணர்வு மட்டுமல்ல, வெளியே துல்லியமான சத்தியமும் நமக்குத் தேவை. உள்ளான ஜீவிக்கிற உணர்வு, ஜீவவிதியிலிருந்தும் அபிஷேகத்தின் போதனையிலிருந்தும் வருகிறது; வெளியே துல்லியமான சத்தியம் வேதவாக்கியங் களிலுள்ள எழுதப்பட்ட வார்த்தைகளின் போதனையையும், அதன் கோட்பாடுகளின் வெளிச்சத்தையும் சார்ந்திருக்கிறது.

இஸ்ரயேல் மக்கள் வனாந்தரத்தில் நடந்தபோது, பகலில் மேகத்தூண் அவர்களின் வழிகாட்டியாகவும், இரவில் அக்கினித்தூண் அவர்களின் வழிநடத்துதலாகவும் இருந்தது. அதுபோல, மேகத்தூணால் அடையாளப்படுத்தப்படும் பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலுடன் நம் ஆவிக்குரிய நிலைமை பட்டப்பகலைப்போல இருக்கும்போது, அதாவது உள்ளாக நாம் நடுப்பகலைப்போலப் பிரகாசமாகவும், நம் உள்ளான உணர்வு தெளிவாக மற்றும் துல்லியமாக இருக்கும்போது, தேவனுடைய சரியான பாதையில் நாம் நடக்கமுடியும். ஆனால் சில சமயங் களில் நம் ஆவிக்குரிய நிலைமை இரவின் மங்கியதன்மைபோல இருக்கிறது; உள்ளாக நாம் நள்ளிரவைப்போல இருளாக இருக்கி றோம், நம் உள்ளான உணர்வு மங்கலாகவும், தெளிவற்றதாகவும் இருக்கிறது. அப்போது, தேவனுடைய நேர்மையான வழியில் நடக்கும்படி நம்மை வழிநடத்த, நம் கால்களுக்குத் தீபமாகவும் நம் பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கும்படி, அக்கினித்தூணால் அடையாளப்படுத்தப்படுகிற வேதவாக்கியங்கள் நமக்குத் தேவை.

ஆகையால் ஜீவன், சத்தியம் என்ற பாதுகாப்பான வழியில் நாம் நடக்க விரும்பினால், உண்மையான வல்லமை மற்றும் பாதுகாப்பான பெலத்தின் போதனையாலும் கோட்பாடுகளாலும் நம் ஒவ்வொரு உணர்வு, வழிநடத்துதல், வெளிப்பாடு ஆகியவை களை சரிபார்க்கவும் நிரூபிக்கவும் வேண்டும். இந்த சமநிலை மட்டுமே ஒருபக்கமும் சாயாமல் முன்னோக்கிச்செல்ல நமக்குத் திறனளிக்கிறது.

## VIII. வெளியார்ந்த "போதனை"

ஒருபக்கம், நாம் நமக்குள் ஜீவவிதியையும், அபிஷேகத்தின் போதனையையும் கொண்டிருப்பதால், நாம் தேவனை

அறியமுடியும், மற்றவர்கள் நமக்குப் போதிக்கவேண்டிய தேவையில்லை என்று வேதவாக்கியம் சொன்னாலும், மறுபக்கம் மனிதனின் போதனையைப்பற்றிப் பேசும் பல இடங்கள் வேதவாக்கியத்தில் இருக்கின்றன. உதாரணமாக, *1 கொரிந்தியர் 4:17; 14:19; 1 தீமோத்தேயு 2:7; 3:2; 2 தீமோத் தேயு 2:2, 24* போன்ற பகுதிகள், அப்போஸ்தலனாகிய பவுல் மனிதருக்குப் போதித்ததையும், எவ்வாறு மற்றவர்களும் மனிதருக்கு போதிக்கக் கற்றுக்கொள்ளவேண்டும் என்று அவர் விரும்பியதையும்பற்றிக் கூறுகின்றன. இதற்கு மூன்று முக்கிய காரணங்கள் உள்ளன.

முதலாவது, ஜீவவிதியாலும் அபிஷேகத்தின் போதனை யாலும் நமக்குக் கொடுக்கப்படுகிற உள்ளான உணர்வு தேவனை நாம் அறியும்படிச்செய்யப் போதுமானதாக இருக் கிறது, இதனால் மனிதரின் போதனை நமக்குத் தேவையில்லை என்றாலும், பலமுறை நாம் இப்படிப்பட்ட உணர்வைக் கவனிப்பதுமில்லை, அதற்குச் செவிகொடுப்பதுமில்லை. விசேஷமாக, தேவனுடைய வார்த்தைகளுக்குச் செவிகொடுப்பதில் நாம் பலவீனமா யிருக்கிறோம். சிலசமயங்களில் நாம் செவிகொடுப்பதில்லை, மேலும் சிலசமயங்களில் செவிகொடுக்க நாம் விரும்புவதில்லை. தங்கள் மனங்களிலே நோயுற்றிருப்பவர்கள், தங்களுக்குள்ளேயே இருப்பவர்கள், தங்கள் சொந்தக் கருத்துக்களை வலியுறுத்து கிறவர்கள், வேண்டுமென்றே தங்களை மூடிக்கொள்ளுகிறவர்கள் ஆகியவர்களால் அநேகமாக செவிகொடுக்கமுடியாது. கர்த்தரை நேசிக்காதவர்கள், விலைசெலுத்தாதவர்கள், கர்த்தரைப் பின்பற்றாதவர்கள் செவிகொடுக்க விரும்புவதில்லை. அவர்கள் செவிகொடுக்க விரும்பாததால், இயல்பாகவே அவர்களால் செவிகொடுக்க முடியாது. அவர்கள் செவிகொடுக்காததால், அவர்களால் அதிகமாகக் கேட்கமுடியாது. ஆகையால் அநேக நேரங்களில், தேவன் பேசுவதில்லை, அவருடைய ஜீவன் ஒழுங்குப்படுத்துவதில்லை அல்லது அவருடைய அபிஷேகம் போதிப்பதில்லை என்பதல்ல, மாறாக நாம் செவிகொடுப்ப தில்லை என்பதேயாகும். "தேவன் ஒருவிசை சொல்லியிருக்கிற காரியத்தை இரண்டாம்விசை பார்த்துத்திருத்துகிறவரல்லவே" என்று யோபு *33:14* கூறுகிறது. இதைவிட மோசமான நிலைமைகள் நம்மிடம் உள்ளன. தேவன் ஐந்து, பத்து, அல்லது இருபதுமுறை பேசும்போதும், நாம் இன்னும் செவிகொடுப்பதில்லை. ஆனால் தேவனுக்கு நன்றி, அவர் மன்னிக்கிறார், நீடிய பொறுமையாக இருக்கிறார். அவர் உள்ளாக எதைக் கூறுகிறாரோ அதற்கு நாம் செவிகொடுக்காவிட்டால், அதனை மீண்டும் கூற வெளியிலிருந்து மனிதர்களுடைய போதனையை அவர் பயன்படுத்துகிறார். அவர் ஏற்கெனவே நம்முள் பேசிவிட்டார், ஆனால் நாம் செவிகொடுக்

காததால், அவர் ஏற்கனவே நமக்குள் கூறி யிருப்பதை மீண்டும் கூற, மனிதர்கள்மூலம் வெளியேயிருந்து அவர் நமக்குப் போதிக்கிறார்.

புதிய ஏற்பாட்டில், அதிகமான போதனை மீண்டும் கூறுகிற இந்தக் கோட்பாட்டைப் பின்பற்றுகிறது. நிருபங்களில், "நீங்கள் அறியீர்களா" என்ற கூற்று அடிக்கடி இடம்பெறுகிறது. நீங்கள் ஏற்கெனவே கேள்விப்பட்டு அறிந்திருக்கிறீர்கள், ஆனால் கவனித்து செவிகொடுப்ப தில்லை என்பது இதன் அர்த்தமாகும்; ஆகையால் உங்களுக்கு மறுபடியும் போதிக்க தேவன் மனிதர்களைப் பயன் படுத்துகிறார். இவ்வாறு அநேக நேரங்களில், தேவன் வேதத்தின் வார்த்தைகளையோ, தம் வேலைக்காரனையோ நமக்குப் போதிக்கப் பயன்படுத்தும்போது, நம்முள் அவருடைய போதனையை இடமாற்றம்செய்வதற்காக அல்ல, ஆனால் அவர் ஏற்கெனவே நம்முள்ளே போதித்திருக்கிறதை மீண்டும் கூறும்படியே அவர் அதைச் செய்கிறார். வெளியார்ந்த வழிநடத்துதலும், உள்ளார்ந்த போதனையும் ஒன்றுக்கொன்று பரஸ்பரமான உதவியாக இருந் தாலும், வெளியார்ந்தது உள்ளார்ந்ததின் இடத்தை எடுத்துக் கொள்ள முடியாது. இது உள்ளார்ந்ததின் மீண்டும் கூறுதல் மட்டுமே ஆகும்.

இவ்வாறு இன்று ஆவிக்குரிய காரியங்களில் மற்றவர்களுக்கு நாம் உதவும்போது, அனுபவம்சாராத வழியில் இவ்விதமாக அல்லது அவ்விதமாக நடந்துகொள்ள அவர்களுக்குப் போதிக்கும்படி நாம் அவர்களுக்கு பத்துக்கட்டளைகளைக் கொடுக்கக்கூடாது. இவ்வாறு உள்ளிருந்து தேவன் பேசுகிற வார்த்தைகளுக்குச் சாட்சிகொடுத்து, உள்ளிருந்து அவர்களுக்கு ஏற்கெனவே தேவன் என்ன போதித்திருக்கிறாரோ அதை மீண்டும் கூறி, கோட்பாட்டில் தேவன் என்ன நியமித்திருக்கிறார் என்பதை மட்டுமே நாம் விளக்கமுடியும். விவரமாக இந்த வழியிலோ, அந்த வழியிலோ அனுபவம்சாராத விதத்தில் மனிதர்களுக்கு நாம் போதிக்கக் கூடாது. இதுதான் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் செய்ததாகும். கோட்பாட்டில் தேவன் என்ன நியமித்திருக்கிறார் என்பதை விளக்கும் சபைக்கான தீர்க்கதரிசிகள் மட்டுமே புதிய ஏற்பாட்டில் இருக்கிறார்கள். விவரமாக காரியங்களைக் குறித்து முடிவெடுக்கும் தனிநபர்களுக்கான தீர்க்கதரிசி யாரும் இல்லை. ஜீவவிதி மற்றும் அபிஷேகத்தின் போதனையால் ஒவ்வொரு மனிதனுக்கும் உள்ளிருந்து தேவன் தெரியப்படுத்துவதே விவரங்களின் தீர்வாகும். இதுவே புதிய ஏற்பாட்டின் கோட்பாடு. இவ்வாறு மற்றவர்களிடமிருந்து போதனையைப் பெற்றுக்கொள்ள நாம் தாழ்மையாக இருக்கவேண்டும் என்றாலும், நமக்கு உள்ளிருந்து ஜீவவிதி என்ன சீரமைத்திருக்கிறதோ அல்லது

அபிஷேகம் ஏற்கெனவே என்ன போதித்திருக்கிறதோ, அதுவே நம்மை ஆளுகைசெய்வதாகும். இல்லையென்றால் அது புதிய ஏற்பாட்டு கோட் பாட்டிற்கு ஒத்ததாக இருக்காது.

புதிய ஏற்பாட்டில் மனிதனுடைய போதனைக்கான இரண்டாவது காரணம், ஜீவவிதியும் அபிஷேகமும் நாம் தேவனை அறியும்படிச் செய்யமுடியும் என்றாலும், அவை நமக்குக் கொடுக்கும் உணர்வு, போதனை யாவும் நம் ஆவியில் இருக்கிறது. வெளியேயிருந்து போதுமான போதனையை நாம் பெறவில்லையென்றால், ஜீவவிதி மற்றும் அபிஷேகத்தினால் நம் ஆவியில் கொடுக்கப்படும் உணர்வு மற்றும் போதனையை நம் மனம் புரிந்துகொள்வது கடினமாகும். உள்ளிருந்து ஜீவவிதி மற்றும் அபிஷேகத்தால் நமக்குக் கொடுக்கப்படும் உணர்வு மற்றும் போதனையை நம் மனம் புரிந்துகொள்ளவேண்டுமானால், வெளியேயிருந்து மனிதர்கள் தேவனுடைய வழியை நமக்குப் போதிக்க வேண்டியது தேவை. எவ்வளவு அதிகமாக இப்படிப்பட்ட வெளியார்ந்த போதனையை நாம் பெற்றுக்கொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாய் உள்ளிருந்து ஜீவவிதி மற்றும் அபிஷேகத்தி லிருந்து வரும் உணர்வு மற்றும் போதனையை நம் மனம் புரிந்துகொள்கிறது. மேலும் எவ்வளவு அதிகமாக இப்படிப்பட்ட வெளியார்ந்த போதனையை நாம் பெற்றுக் கொள்கிறோமோ, அவ்வளவு அதிகமாக அது நம் ஆவி வளரும்படி உதவுகிறது, இதனால் ஜீவவிதிக்கும் அபிஷேகத் திற்கும் அவைகளுடைய செயல்பாடுகளை வெளிப்படுத்தவும், மற்றும் ஆழமான உணர்வையும் போதனையையும் நமக்குக் கொடுக்கவும், இன்னும் அதிகமான தளத்தையும் வாய்ப்பையும் கொடுக்கிறது. ஆகையால் ஜீவவிதியும் அபிஷேகமும் உள்ளிருந்து நமக்கு உணர்வையும் போதனையும் கொடுத்தாலும், நமக்கு இன்னும் வெளியே இருந்து மனிதர்களின் போதனை தேவைப்படுகிறது. இருப்பினும் வெளியேயிருந்து வரும் இந்தப்போதனை உள்ளிருந்து வரும் ஜீவவிதி மற்றும் அபிஷேகத்தின் உணர்வையும், போதனையையும் இடமாற்றம் செய்யமுடியாது, இடமாற்றம் செய்யக்கூடாது. இது உள்ளான உணர்வையும் போதனையையும் புரிந்து கொள்ள நமக்கு உதவுவதற்காகவும், நமக்கு இன்னும் ஆழமான உணர்வையும் போதனையையும் தருவதற்கு ஜீவவிதிக்கும் அபிஷேகத்திற்கும் வாய்ப்புத் தருவதற்காகவும் இருக்கிறது. வெளியேயிருந்து வரும் மனிதர்களின் போதனைக்கு, ஜீவவிதி மற்றும் அபிஷேகத்தால் கொடுக்கப் பட்டிருக்கிற உள்ளிருந்து வரும் உணர்வு மற்றும் போதனை யிலிருந்து எப்போதுமே ஒரு "ஆமென்" அல்லது "எதிரொலி" இருக்கவேண்டும். அப்போது இது புதிய ஏற்பாட்டு கோட் பாட்டோடு ஒத்ததாக இருக்கிறது.

உள்ளிருந்தும், வெளியி லிருந்தும் வரும் போதனையும் வழிநடத்துதலும் ஒன்றுக்கொன்று பதிலாக முடியாது, ஆனால் ஒரு பரஸ்பர பிரதிச் செயலைக் கொண்டிருக்கலாம்.

மூன்றாவது, ஜீவவிதியும் அபிஷேகத்தின் போதனையும் எல்லாக் காரியங்களிலும் நாம் தேவனை அறியும்படிச் செய்ய முடியுமென்றாலும், தேவனுடைய ஆழமான காரியங்களின் சத்தியத்தையும், ஆவிக்குரிய வாழ்க்கையின் அடிப்படையான அறிவையும்பற்றி, நாம் அறிந்து கொள்ளும்படி நமக்குப் போதிக்க தேவனுடைய வெளிப்பாட்டின் வார்த்தைகளின் ஊழியத்தையுடைய மற்றவர்கள் இன்னும் பலமுறை நமக்குத் தேவை. உள்ளிருந்து அபிஷேகம் மற்றும் ஜீவவிதியிலிருந்து வரும் அகம்சார்ந்த அறிவு நமக்குத் தேவை, இருப்பினும் பலமுறை மற்றவர்களின் புறம்சார்ந்த போதனை இல்லாமல் உள்ளிருந்து வரும் அகம்சார்ந்த அறிவை நாம் பெற்றுக்கொள்ளமுடியாது. நிச்சயமாக புதிய ஏற்பாட்டில், வெளியார்ந்த புறம்சார்ந்த போதனை உள்ளார்ந்த அகம்சார்ந்த அறிவின் இடத்தை எடுத்துக்கொள்ளமுடியாது; ஆனால் பலமுறை உள்ளார்ந்த அகம்சார்ந்த அறிவு வெளியார்ந்த புறம்சார்ந்த போதனையால் கிடைக்கிறது.

மேற்சொன்ன மூன்று காரணங்களால், ஆவிக்குரிய அறிவும் தேவனுக்கு முன்பாக அனுபவமும் உள்ளவர்களை தேவன் பலமுறை எழுப்புகிறார், நமக்குப் போதிக்கவும் வழிகாட்டவும் அவர்களை ஏற்படுத்துகிறார். ஒரு பக்கத்தில், உள்ளிருந்து ஜீவவிதி மற்றும் அபிஷேகத்தின்மூலம் தேவன் நமக்குப் போதிப்பதை நாம் கனப்படுத்துவோம் என்றும், மறுபக்கத்தில் வெளியேயிருந்து மனிதர்கள்மூலமாக நமக்கு தேவன் தரும் போதனையை நாம் புறக்கணிக்கமாட்டோம் என்றும் நாம் நம்புவோமாக. வெறுமனே உள்ளே ஜீவவிதி மற்றும் அபிஷேகத்தின் போதனையை நாம் கொண்டிருப்பதால், வெளியேயிருந்து வரும் மனிதர்களின் போதனையை நாம் மறுத்துவிடக்கூடாது. ஜீவவிதி மற்றும் அபிஷேகத்தின் போதனையை நமக்குத் தந்திருப்பதற்காக நாம் தேவனுக்கு நன்றிகூறுகிறோம், ஆனாலும் இன்னும் மனிதர்கள்மூலமாக தேவன் நமக்குத் தரும் போதனையையும், வழிநடத்துதலையும் பெற்றுக்கொள்ள நம்மையே தாழ்த்தவும், வெறுமையாக்கவும் வேண்டும். புதியஏற்பாட்டில், உள்ளிருந்து நமக்குப் போதிக்கும்படி ஜீவவிதியையும், அபிஷேகத்தையும் மட்டும் தேவன் நமக்குக் கொடுக்காமல் வெளியே இருந்து நமக்குப் போதிக்க மற்றும் வழிகாட்டத்தக்கவர்களையும் அவர் நமக்குக் கொடுக்கிறார் என்பதை நாம் நினைவில் வைத்துக் கொள்வோமாக.

# IX. ஆவியில் அறிதலும் மனதில் புரிதலும்

## A. ஆவியில் அறிந்துகொள்ளுதல்

உள்ளார்ந்த அறிவு, ஜீவவிதியிலிருந்தும் அபிஷேகமாக தேவனுடைய ஆவியின் போதனையிலிருந்து வருவதாலும் இரண்டும் நம் ஆவியில் இருப்பதாலும், உள்ளிருந்து வரும் இந்த அறிவு நிச்சயமாக நம் ஆவியில் நமக்குத் தெரியப் படுத்தப்படுகிறது. நம் ஆவியிலுள்ள மனச்சாட்சி என்னும் பகுதியால் தீர்மானிக்கப்படும் சரியா, தவறா என்ற கேள்விகளைத் தவிர, ஆவியில் உள்ள இந்த அறிதல் நம் ஆவியில் உள்ளுணர்வு என்னும் பகுதியின் பொறுப்பு என்று நாம் கூறமுடியும். ஆகையால் உள்ளார்ந்த அறிவை நாம் புரிந்துகொள்ள விரும்பினால், ஆவியின் உள்ளுணர்வு என்றால் என்ன என்பதை நாம் அறியவேண்டும்.

மனிதனின் உடல் மற்றும் ஆத்துமா இரண்டிற்குமே உணர்வுகள் இருக்கின்றன. உடல் பார்த்தல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், தொடுதல் ஆகிய உணர்வுகளையும், ஆத்துமா சந்தோஷம், கோபம், கவலை, மகிழ்ச்சி போன்ற உணர்வுகளையும் கொண்டிருப்பதுபோல, மனிதனின் ஆவி மனச்சாட்சியின் உணர்வையும், உள்ளுணர்வின் உணர் வையும் கொண்டிருக் கிறது. சரியா, தவறா என்ற கேள்வி களால் மனச்சாட்சியின் உணர்வு ஏற்படுகிறது; உள்ளுணர்வின் உணர்வு எந்தக் காரணமும் இல்லாமல் நேரடியாக ஏற்படுகிறது. ஆவி "உற்சாகமுள்ளதாக" இருக்கமுடியும் (மத். 26:41), அது மனிதனின் இருதயத்தின் எண்ணங்களை "அறிய" முடியும் (மாற்கு 2:8), அது "பெருமூச்சுவிட" முடியும் (மாற்கு 8:12), அது நிருணயம்பண்ணமுடியும் (அப். 19:21), அது "வைராக்கியமாக" "அனலுள்ளதாக" "ஆறுதலடைகிறதாக" இருக்கமுடியும் (அப். 17:16; 18:25; 2 கொரி. 7:13) போன்றவைகளை வேதவாக்கியங்கள் நமக்குக் காட்டுகிறது. இவைகளெல்லாம் ஆவியின் உள்ளுணர்வினுடைய உணர்வுகளாக இருக்கின்றன. ஆத்துமாவில் அநேக உணர்வுகள் இருக்கிறது போல, ஆவியின் உள்ளுணர்வும் அநேக உணர்வுகளைக் கொண் டிருக்கிறது என்று நாம் சொல்லலாம்.

இருப்பினும் ஆவியின் உள்ளுணர்வு ஆத்துமாவின் உணர்விலிருந்து வித்தியாசப்படுகிறது. ஆத்துமாவின் உணர்வு ஒரு காரணத்திலிருந்து வருகிறது, ஆனால் ஆவியின் உள்ளுணர்வு எந்தக் காரணமும் இல்லாமல் வருகிறது என்பது முக்கியமான வித்தியாசம். ஆத்துமாவின் உணர்வின் காரணம் மனிதர்கள், நிகழ்வுகள், புறம்பான காரியங்கள். ஒரு மனிதனோ, ஒரு நிகழ்வோ, ஒரு காரியமோ எதுவானாலும் அது நம்மை ஓர்

ஆத்துமாவுக்குரிய உணர்வைக் கொண்டிருக்கச்செய்கிறது. இது களிகூர்ந்தால் நாம் மகிழ்கிறோம்; இது துக்கமடைந்தால் நாம் கவலைப்படுகிறோம். வெளியார்ந்த பாதிப்புகளால் ஏற்படும் ஆத்துமாவின் இப்படிப்பட்ட உணர்வுகள் ஒரு காரணத் தோடுள்ள உணர்வுகள். எனினும் ஆவியின் உள்ளுணர்வு எந்தக் காரணத் தாலும் ஏற்படுவதில்லை, அதாவது எந்த வழிமுறையினாலும் அது ஏற்படவில்லை என்று அர்த்தம், ஆனால் அது நேரடியாக ஆவியின் மிகஆழமான பகுதியில் இருக்கிறது. அது வெளியிலிருந்து மனிதர்கள், நிகழ்வுகள், காரியங்கள் ஆகியவைகளால் பாதிக்கப்படுவதில்லை என்பது மட்டுமல்ல, அது ஆத்துமாவின் உணர்வினாலும் பாதிக்கப் படுவதில்லை. உண்மையில் அது பலமுறை ஆத்துமாவின் உணர்விற்கு முரணாகவே நடக்கிறது.

எடுத்துக்காட்டாக சில நேரங்களில் நாம் ஒரு குறிப்பிட்ட காரியத்தைச் செய்யவிரும்புகிறோம். நம் காரணங்கள் போதுமானதாக இருக்கின்றன, நம் இருதயமும் மிக சந்தோஷ மாக இருக்கிறது, மேலும் அதை நிறைவேற்ற நாம் சித்தம் கொண்டுள்ளோம். இருப்பினும், பேசப்பட முடியாத ஒரு நிலைமை ஏன் நம் ஆவியில் இருக்கிறது என்று நமக்குத் தெரியவில்லை. நம் மனம் சிந்திப்பதையும், நம் உணர்ச்சி விரும்புவதையும், நம் சித்தம் முடிவெடுத்திருப்பதையும் ஆவி எதிர்ப்பதுபோல, நாம் மிகப் பாரமாகவும் அழுத்தமாகவும் உணர்கிறோம். நாம் திட்டமிட்டிருப்பதை நிறைவேற்றக்கூடாது என்று நம் ஆவி கூறுவதுபோலத் தோன்றுகிறது. இப்படிப்பட்ட உணர்வு ஆவியின் உள்ளுணர்வின் தடைசெய்தலாகும். சில நேரங்களில் ஒரு குறிப்பிட்ட காரியத்தை ஆதரிக்க எந்தக் காரணமும் இருப்ப தில்லை; அது நம் விருப்பங்களுக்கு முரணாக இருக்கிறது, மேலும் அதை நிறைவேற்ற நமக்குச் சித்தமும் இல்லை. இருப் பினும் நமக்கு ஏன் என்று தெரியாவிட்டாலும் நாம் அதை நிறைவேற்ற விரும்பும்படிசெய்கிற ஒருவித உந்துதலையும் அசைவையும் நாம் ஆவியில் தொடர்ச்சியாக உணர்கிறோம். நாம் அதைச்செய்தவுடன் உள்ளாக ஆறுதலாக உணர்கிறோம். இப்படிப் பட்ட உணர்வே ஆவியிலுள்ள உள்ளுணர்வின் உந்துதலாகும்.

ஆவியிலுள்ள உள்ளுணர்வின் இப்படிப்பட்ட தடை அல்லது உந்துதல் எந்தக் காரணமும் இல்லாமல் ஏற்படுகிறது. இது ஜீவவிதியின் வேலைசெய்தலாலும் அபிஷேகத்தினாலும் ஏற்படும் ஒரு மிக ஆழமான உணர்வாகும். இதன் காரணமாக, நாம் நேரடியாக தேவனைத் தொடமுடியும் தேவனை அறியமுடியும், மேலும் அவருடைய சித்தத்தை அறியமுடியும். ஆவியின் உள்ளுணர்விலுள்ள இப்படிப்பட்ட அறிதலையே வேதவாக்கியம்

“வெளிப்பாடு” என்று பேசுகிறது. இவ்வாறு வெளிப்பாடு என்பது ஒரு குறிப்பிட்ட நிகழ்வை நாம் தெளிவாக அறிந்துகொள்ளும்படி, அதன் நிஜத்தை நம் ஆவியில் உள்ள பரிசுத்த ஆவியானவர் நமக்குக் காட்டுவதைத்தவிர வேறொன்றும் இல்லை. இப்படிப்பட்ட அறிவே தேவனைப்பற்றி நமக்குள் இருக்கும் மிக ஆழமான அறிவு என்று சொல்லமுடியும். இது நாம் பேசுகிற உள்ளார்ந்த அறிவுமாகும்.

## B. மனதில் புரிந்துகொள்ளுதல்

உள்ளார்ந்த அறிவு நம் ஆவியின் உள்ளுணர்விலே இருந் தாலும், அது இன்னும் நம் ஆத்துமாவின் மனதினால் புரிந்து கொள்ளப்பட வேண்டும். இது ஏனென்றால், மனம் புரிந்து கொள்ளுவதற்கும், கிரகித்துக்கொள்வதற்குமான உறுப்பு. ஆகையால் உள்ளார்ந்த அறிவு ஆவியினால் அறிந்து கொள்ளப் பட்டால் மட்டும் போதாது, மனதினால் கிரகித்துக் கொள்ளப் படவும் வேண்டும். கிரகித்துக்கொள்வதற்காக, ஆவியின் உள்ளுணர்வின் அறிதலோடு மனதின் புரிந்துகொள்ளுதலும் சேர்க்கப்படவேண்டும். மனதின் புரிந்துகொள்ளுதல் என்பது ஒரு வகையில் ஆவியின் உள்ளுணர்வுக்கு மனம் அர்த்தம் கூறுவதாகும். எப்போதெல்லாம் நாம் நம் ஆவியில் ஒரு உள்ளுணர்வை உணர்கிறோமோ, அப்போதெல்லாம் அதைப் புரிந்துகொள்ளவும், அர்த்தம் கூறவும் நம் மனம் தேவை. ஆவியின் இந்த உள்ளுணர்வின் உணர்வோடு தொடர்புடைய மனிதர்கள், நிகழ்வுகள், காரியங்களை எடுத்து நாம் பரிசோதித்துப் பார்க்கிறோம் என்று அர்த்தமாகும். ஆவி எதிரொலிக்கும் வரை பரிசோதிக்கிறோம். பின்பு நாம் பரிசுத்த ஆவியானவரின் குறிக்கோளை அறிந்துகொண்டு அதன்படி செயல்படுகிறோம்.

எடுத்துக்காட்டாக, நாம் கர்த்தரிடம் வந்து உள்ளே ஆழத்தில் உள்ளுணர்வில் ஒரு பாரத்தை உணரும்போது, தேவனுடைய வழி நடத்துதல் நம்மிடம் வந்திருக்கிறது என்று நாம் அறிகிறோம். இதுவே ஆவியில் அறிதல். இருப்பினும், தேவனிடமிருந்து வரும் இந்த வழிநடத்துதல் நாம் சுவிசேஷம் பிரசங்கிப்பதற்காகவா, அல்லது ஒரு சகோதரனை சந்திப்பதற்காகவா என்று நாம் தெளிவில்லாமல் இருக்கக்கூடும். அது ஒரு சகோதரனை சந்திப்பதாக இருந்தால் எந்தச் சகோதரனை நாம் சந்திக்கவேண்டும்? இவையெல்லாவற்றைக்குறித்தும் புரிந்துகொள்ள மனம் தேவை. நாம் செய்யவேண்டிய எல்லாக் ாரியங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக நம் மனதில் தேவனுக்குமுன்பாக வைத்து, உள்ளே உள்ளுணர்வோடு பரிசோதிக்கவேண்டும். சகோதரர்களைச் சந்திக்கச்செல்லும் காரியம் வரும்போது, உள்ளே ஒரு மறுமொழி

இருந்தால், அப்போது நாம் சில சகோதரர்களைச் சந்திக்கவேண்டு மென்று தேவன் விரும்புகிறார் என்று நாம் புரிந்துகொள்கிறோம். பின்பு தேவனோடுள்ள இந்த ஐக்கியத்தில் நாம் சந்திக்கவேண்டிய பல சகோதரர்களை ஒவ்வொருவராகக் கொண்டுவந்து, ஆவியின் உள்ளுணர்வைக் கொண்டு பரிசோதிக்கவேண்டும். தேவையோடு உள்ள ஒரு சகோதரனைப்பற்றி நாம் பரிசோதிக்கும்போது ஆவியில் எந்த மறுமொழியும் இல்லாமல் இருக்கக்கூடும். வியாதியோடு இருக்கிற ஒரு சகோதரனை நாம் பரிசோதிக்கும் போது, ஆவியில் எந்த மறுமொழியும் இல்லாமல் இருக்கக்கூடும். பிரச்சினைக்குள் சிக்கிக்கொண்ட இன்னொரு சகோதரனைப்பற்றி நாம் பரிசீலிக்கும்போது, ஆவியிலுள்ள உள்ளுணர்வு மறுமொழிகொடுக்கிறது, மேலும் இது நம் உள்ளான முழு ஆள்தத்துவமும் “ஆமென்!” என்று கூறுவதைப்போல இருக்கிறது. நாம் தவறாக இருக்கக்கூடும் என்று பயந்தால், சந்திக்கப்பட வேண்டிய மற்ற சகோதரர்களையும் பரிசோதித்துப் பார்க்கலாம். அவர்கள் யாருக்கும் ஆவி மறுமொழிகொடுக்கவில்லையென்றால், நாம் சந்திக்கச்செல்லும்படி தேவன் விரும்பும் நபர், பிரச்சினைக்குள் சிக்கிக்கொண்ட சகோதரனே என்று நாம் புரிந்து கொள்ளுகிறோம். இதுவே ஆவியில் அறியப்பட்டிருப்பதைப் புரிந்துகொள்ள மனதைப் பயன்படுத்துவது, அல்லது ஆவியிலுள்ள உணர்வுக்கு அர்த்தம்கூற மனதைப் பயன்படுத்துவதாகும்.

இன்னொரு எடுத்துக்காட்டு, சகோதர சகோதரிகளுக்கு ஏதோவொன்றை நீங்கள் கூற தேவன் விரும்புகிறார் என்று உணர்கிற ஒரு பாரத்தை ஜெபத்தில் நீங்கள் பெற்றிருக்கக் கூடும். இந்தப் பாரம் உள்ளுணர்வில் அறிதலாகும். இருப்பினும் நீங்கள் என்ன கூறவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதில் நீங்கள் தெளிவாக இல்லை. இதற்கு நீங்கள் ஒவ்வொரு செய்தியாக உங்கள் மனதில் கொண்டுவந்து உங்கள் ஆவியிலுள்ள பாரத்தோடு பரிசோதிக்க வேண்டியது தேவையாகும். மாம்சத்தோடு இடைபடுகிற காரியத்தை நீங்கள் பரிசோதிக்கும்போது ஆவி மறுமொழி கொடுக்கிறது. அப்போது இந்தக் கருப்பொருளில் நீங்கள் பேச தேவன் விரும்புகிறார் என்பதைப் புரிந்துகொள்ளு கிறீர்கள். இந்த புரிந்துகொள்ளுதல் மனதின் கிரகித்துக் கொள்ளுத லாகும். இவ்வாறு ஆவியின் உள்ளுணர்விலுள்ள பாரம் நீங்கள் ஏதோவொன்றை செய்யவேண்டும் என்று தேவன் விரும்புகிறார் என்பதை உங்களுக்குத் தெரியப்படுத்துகிறது; மேலும் ஆத்துமாவின் மனதிலுள்ள புரிந்துகொள்ளுதல் நீங்கள் செய்யவேண்டும் என்று தேவன் விரும்புகிற காரியம் என்ன என்பதை கிரகித்துக்கொள்ள உங்களுக்குத் திறனளிக்கிறது.

கர்த்தருடைய நாளிலே வழக்கம்போல, காணிக்கையாக நீங்கள்

பணம் கொடுக்க விரும்பலாம். ஆனால் உங்கள் ஆவியில் ஒரு பாரம் இருக்கிறது, அதாவது நீங்கள் ஒரு விசேஷமான காணிக்கையைக் கொடுக்க தேவன் விரும்புறார் என்ற ஒரு உணர்வு இருக்கிறது. ஆனால் நீங்கள் எவ்வளவு காணிக்கை, எந்தக் காரியத்திற்காக, எந்த நபருக்காக கொடுக்க தேவன் விரும்புகிறார் என்பதை மனதில் புரிந்துகொள்ள வேண்டும். இந்த வழியில், தேவனுடைய பாரத்தை நீங்கள் உள்ளுணர்வில் மட்டும் கொண்டிருக்காமல், தேவனுடைய குறிக்கோளை மனதிலும் புரிந்துகொள்ளுகிறீர்கள். இதுவே உள்ளார்ந்த அறிவாகும்.

இவ்வாறு காரியங்களைச்செய்வது நேர்த்தியாக இல்லாததைப் போல தோன்றலாம். இருப்பினும் ஒரு மனிதன் ஆவியின் உணர்வைத் தன் மனதைக்கொண்டு அர்த்தம்கூற கற்றுக் கொள்ள ஆரம்பிக்கும்போது, அவன் இதை இந்த வழியில் நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு வழக்கமாகச் செய்யக் கற்றுத்தேர்ந்த பின்னர், ஆவியில் உணர்வோ அறிதலோ வந்தவுடனே, மனம் உடனடியாக கிரகித்துக் கொள்ளவும், புரிந்துகொள்ளவும்முடியும்.

## X. உள்ளார்ந்த அறிவைப் பெற்றுக்கொள்ளும் வழி

உள்ளார்ந்த அறிவின் ஒவ்வோர் அம்சத்தையும் நாம் பார்த்து விட்டதால், இப்போது இந்த உள்ளார்ந்த அறிவைப் பயிற்சிசெய்கிற வழியை, அல்லது இதைப்பெறுகிற வழியை நாம் பார்க்கவேண்டும். உள்ளார்ந்த அறிவைப்பெறுவதற்கு, நாம் ஆவியைப் பயிற்சிசெய்ய வேண்டும், புரிந்து கொள்ளுதலை புதிதாக்கவேண்டும், மேலும் இருதயத்தோடு இடைபடவேண்டும்.

### A. ஆவியைப் பயிற்சிசெய்தல்

உள்ளார்ந்த அறிவு நம் ஆவியின் உள்ளுணர்வில் இருப்பதால், இப்படிப்பட்ட அறிவைப் பெற்றுக்கொள்ள நாம் விரும்பினால், நம் ஆவி உயிரோட்டமாகவும் வலிமை யாகவும் இருக்கும்படி நாம் அதிகமாக அதனைப் பயிற்சி செய்யவும் பயன்படுத்தவும்வேண்டும். ஆவி உயிரோட்ட மாகவும் பலமாகவும் இருக்கும்போது மட்டுமே, நம் ஆவியின் உள்ளுணர்வு உணர்வுள்ளதாகவும், விழிப்பாகவும் இருக்கிறது, இவ்வாறு உள்ளிருந்து தேவனை அறிந்துகொள்ள நமக்குத் திறனளிக்கும்.

ஆவியைப் பயிற்சிசெய்வதற்கு, முதலாவது நாம் ஆவிக்குத் திரும்ப கற்கவேண்டும். நாம் தொடர்ச்சியாக வெளியார்ந்த மனிதனில் வாழ்ந்தால், நம் ஆவியின் உள்ளுணர்வில் தேவனை அறிவதற்கு நமக்கு எந்த வழியு மில்லை. வெளியார்ந்த பரபரப்பான செயல்களையும் சிக்கல் களையும் ஒதுக்கிவிட நாம்

கற்கவேண்டும். வெளியார்ந்த ரீதியில் பரபரப்பாக இருப்பதை மட்டுமல்ல, நம் எண்ணத்தை காட்டுத்தனமாக ஓட அனுமதிப்பதையும் நாம் தடுக்க வேண்டும். அதற்குப்பதிலாக, ஆவியிலுள்ள அசைவுக்கு, அதாவது உள்ளே ஆழத்தில் இருக்கிற உணர்வுக்கு நாம் கவனம்செலுத்தவேண்டும். கர்த்தருக்கு ஊழியம்செய்து கொண்டிருந்த சிறுவன் சாமுவேல் அவருடைய குரலைக் கேட்கமுடிந்தது; கர்த்தருடைய பாதத்தில் அமைதியாக அமர்ந் திருந்த மரியாள் கர்த்தருடைய வார்த்தைகளைப் புரிந்து கொள்ளமுடிந்தது. இவ்வாறு தேவனுக்கு அருகில் இருக்கும்படி ஆவிக்கு நாம் திரும்பினால், ஆவியிலுள்ள தேவனின் உணர்வைத் தொட்டு, இதன்மூலம் தேவனை அறியமுடியும்.

மேலும் நம் அன்றாட வாழ்க்கையில் நாம் ஆவியைப் பயிற்சி செய்யவும், பயன்படுத்தவும் வேண்டும். மக்களோடு இடைபடுவது, அலுவல்களை மேலாண்மைசெய்வது, காரியங்களைக் கையாளுவது அல்லது கூட்டங்களில் கர்த்தரைச் சேவிப்பது, தேவனுடைய வார்த்தையை ஊழியம்செய்வது, அல்லது மற்றவர்க ளோடு உரையாடுவது, வியாபாரம்செய்வது போன்ற எல்லாக் காரியங்களிலும் நம் ஆத்துமாவை மறுதலித்து ஆவியை வழிநடத்த அனுமதிக்க வேண்டும். நம் மனம், உணர்ச்சி, சித்தம் வழிநடத்த நாம் அனுமதிக்கக் கூடாது, ஆனால் எல்லாக் காரியங்களிலேயும், முதலில் ஆவியின் ஆழத்திலுள்ள உணர்வைத்தொட முயற்சிக்க வேண்டும். அதாவது ஆவியில் குடியிருக்கிற கர்த்தர் என்ன சொல்லவிருக்கிறார் என்பதைக் கேட்க முதலில் நாம் முயற்சி செய்யவேண்டும். இந்த வழியில் தொடர்ந்து நாம் பயிற்சி செய்தால், ஆவியிலுள்ள உணர்வு நிச்சயமாக விழிப்பாக இருக்கும், மேலும் அப்போது உள்ளார்ந்த அறிவு அதிகரிப் பதும் ஆழமாவதும் எளிமையான காரியமாக இருக்கும்.

ஆவியைப் பயிற்சிசெய்வதில் மிகச்சிறந்த பயிற்சி ஜெப மாகும், ஏனென்றால் வேறெந்த நடவடிக்கையையும்விட ஜெபத்திற்கு அதிகமாக ஆவியை இயக்கவேண்டிய தேவை இருக்கிறது. நாம் அடிக்கடி வீண்பேச்சை நேசிக்கிறோம், ஆனால் நாம் ஜெபிப்பதோ, துதிப்பதோ இல்லை; ஆகையால் நம் ஆவி அடிக்கடி சுருங்கிவிடுகிறது. தினமும் ஒரு மணிநேரமோ அதிகமாக வோ நாம் ஜெபத்தில் கேட்பதற்கல்ல, ஆனால் ஆராதிக்க, ஐக்கியப் பட, துதிக்க செலவிடமுடிந்தால், சீக்கிரமாகவே நம் ஆவி நிச்சய மாக வளர்ந்து வலிமையாக மாறிவிடும். சங்கீதக்காரன், தான் தினமும் கர்த்தரை ஏழுமுறை துதித்ததாகக் கூறினார் (*சங். 119:164*). குத்துச்சண்டை பயிற்சிசெய்கிறவர்கள், தினமும் ஒருமணி நேரம் பயிற்சிசெய்தால், ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப்பின் அவர்களு டைய கைமுட்டிகள் மிக வலிமையாக இருக்கும். அதைப்போலவே,

ஜெபிப்பதற்கு நம் ஆவியை தினமும் பயிற்சிசெய்தால், நம் ஆவி நிச்சயமாக வலிமையானதாக மாறும். ஆவி வலிமையாக இருக்கும்போது, உள்ளுணர்வு நிச்சயமாக விழிப்பாக இருக்கும். அப்போது ஒரு விழிப்பான உள்ளுணர்வோடு, தேவனைப்பற்றிய அதிகமான அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## B. புரிந்துகொள்ளுதலைப் புதிதாக்குதல்

உள்ளார்ந்த அறிவிற்கு ஆவியிலுள்ள அறிதல் மட்டுமல்ல, மனதின் புரிந்துகொள்ளுதலும் தேவை என்று நாம் ஏற்கெனவே குறிப்பிட்டிருக்கிறோம். ஆகையால், இந்த உள்ளார்ந்த அறிவைப் பெற்றுக்கொள்ள நாம் விரும்பினால், நாம் நம் ஆவியைப் பயிற்சி செய்யவும், நம் மனதின் புரிந்துகொள்ளுதலைப் புதிதாக்கவும் வேண்டும். மனமே காரியங்களைப் புரிந்துகொள்வதற்கான உறுப் பாகும்; புரிந்துகொள்ளுதலே அதன் முக்கியமான திறமையாகும்.

புரிந்துகொள்ளுதலைக் கொண்டுள்ள மனம் புதிதாக்கப்பட்டு மறுசாயலாக்கப்படும்போது மட்டுமே நாம் "தேவனுடைய நன்மையும், பிரியமும், பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்துணர" முடியும் என்று ரோமர் *12:2* நமக்குக் காட்டுகிறது. "ஆவிக்குரிய விவேகத்தைக்" கொண்டு நாம் "அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்பட" முடியும் என்று கொலோசெயர் *1:9*-ம் நமக்குக்காட்டுகிறது. ஆகையால் தேவனை அறிகிற காரியத்தில் மனதின் புரிந்துகொள்ளுதலைப் புதிதாக்குவது அவசியமாகும்.

நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு நம் மனம் உட்பட, நம் முழு ஆள்தத்துவமும் வீழ்ச்சியடைந்திருந்தது. நம் இருத யத்தின் நினைவுகளின் ஒவ்வொரு கற்பனையும் பொல்லாததாக இருந்தது (ஆதி. *6:5*), மேலும் நம் சிந்தனையும் புரிந்துகொள்ளுதலும்கூட உலகத்தின் வாசனை நிறைந்ததாக இருந்தது. நம் மனம் அப்படிப்பட்ட நிலையிலிருந்ததால், நம் புரிந்துகொள்ளுதல் மங்கிப்போனது. ஆகையால் நாம் ஆவிக்குரிய காரியங்களை கிரகித்துக்கொள்ள முற்றிலும் இயலாதவர்களாக இருந்தோம். நாம் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்ளுவதில் அதைவிடக் குறைவாக இருந்தோம். நாம் இரட்சிக்கப்பட்டபோது, பரிசுத்த ஆவியால் புதிதாக்கப்பட்டோம் (தீத்து *3:5*). பரிசுத்த ஆவியின் இந்தப் புதிதாக்கும் வேலை, முதலில் நம் ஆவியில் ஆரம்பிக்கிறது, பின்னர் ஆவியின் காரியங்களை நாம் அறிந்துகொள்ள, நம் மனதின் புரிந்துகொள்ளுதலை புதிதாக்க நம் ஆத்துமாவுக்கு விரிவடைகிறது. எவ்வளவு அதிகமாக பரிசுத்த ஆவியால் நம் மனதின் புரிந்துகொள்ளுதல் புதிதாக்கப்படுகிறதோ, அவ்வளவு அதிக மாக ஆவிக்குரிய காரியங்களை நாம் கிரகித்துக்கொள்ளவும்,

தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்ளவும் முடியும்.

மனதின் புரிந்துகொள்ளுதலின் இந்தப் புதிதாக்குதலை பரிசுத்த ஆவியானவரே செய்தாலும், நாம் இரண்டு பொறுப்புகளைச் சுமக்கவேண்டும்:

முதலாவது நாம் நம்மை சமர்ப்பிக்க வேண்டும். ரோமர் 12-ல் மனம் புதிதாக்கப்பட்டு மறுசாயலாக்கப்படுவதற்குமுன், நம் உடல்களை ஜீவபலியாக சமர்ப்பிக்கும்படி நாம் கேட்டுக்கொள்ளப் படுகிறோம். மனதின் புரிந்துகொள்ளுதலின் புதிதாக்குதல், நம் சமர்ப்பணத்தை அடிப்படையாகக்கொண்டது என்று இது காட்டுகிறது. நாம் நம்மை தேவனுக்கு சமர்ப்பிக்கவும் கொடுக்கவும் உண்மையிலேயே சித்தமுள்ளவர்களாக இருந்தால், தேவனுடைய பரிசுத்தஆவி தம் புதிதாக்கும் வேலையை நம் ஆத்துமாவுக்குள் விரிவடையச்செய்யவும், அதனால் நம் மனதின் புரிந்துகொள்ளு தலைப் புதிதாக்கவும் முடியும்.

இரண்டாவது கடந்தகால பழைய வாழ்க்கையை அப்புறப் படுத்துவதற்கு சிலுவையின் இடைபடுதல்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். நம் முந்தைய வாழ்க்கைமுறையின் பழைய மனிதனை நாம் அப்புறப்படுத்தும்போது மட்டுமே, நம் புரிந்து கொள்ளுதலைக் கொண்டுள்ள நம் மனம் புதிதாக்கப் பட முடியும் என்று எபேசியர் 4:22-23 நமக்குக் காட்டுகிறது. நாம் இரட்சிக்கப் படுவதற்குமுன்பு, நம் பழைய வாழ்க்கை முறை நம் மனதின் புரிந்துகொள்ளுதலை ஏற்கெனவே இருளாக்கிவிட்டது. நாம் இரட்சிக்கப்பட்டபின்பு, சிலுவையில் கர்த்தருடைய மரணத்தால், கடந்தகால பழைய வாழ்க்கையை நாம் அப்புறப்படுத்துகிறோம். இது பழைய வாழ்க்கைமுறை எல்லாவற்றையும், ஒன்றன்பின் ஒன்றாக ஒழித்துக்கட்ட, கர்த்தரின் சிலுவையின் கொல்லுதலை அனுமதிக்கிறது. அதன் பின்பு மட்டுமே நம் மனதின் புரிந்து கொள்ளுதல் புதிதாக்கப் படமுடியும். இவ்வாறு நம் மனதின் புரிந்துகொள்ளுதல் புதிதாக்கப்படும்படியாக சிலுவையின் இடைபடுதல்களை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும். நம் பழைய வாழ்க்கையை ஒழித்துக் கட்ட சிலுவையை நாம் எந்த அளவுக்கு அனுமதிக்கிறோமோ, அந்த அளவுக்கு நம் மனதின் புரிந்து கொள்ளுதல் புதிதாக்கப்படமுடியும்.

"உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி" என்று எபேசியர் 4:23 கூறுகிறது. மனம் ஆத்துமாவின் முக்கிய மான பகுதி என்பது நமக்குத்தெரியும். ஆரம்பத்தில், அது ஆவியோடு தொடர்புடையதாக இல்லை, ஆனால் இப்போது ஆவி "மனதின் ஆவி"யாக மாறிவிட்டது; ஆகையால் அது மனதோடு இணைக்கப்பட்டிருக்கிறது. இது ஏனென்றால், நாம் இந்த ஆவியில் புதிதாக்கப்படுமாறு, அதாவது நம் மனம் ஆவியோடு

இணைக்கப்படுவதால், நம் மனம் புதிதாக்கப்படுமாறு ஆவி விரிவடைந்திருக்கிறது, மேலும் நம் ஆத்துமாவின் மனதை வந்தடைந்திருக்கிறது. எனவே இந்தப் புதிதாகுதல் ஆவியிலிருந்து மனதுக்கு விரிவடைந்திருக்கிறது.

உள்ளிருக்கும் ஆவியானவரின் வேலை மையத்திலிருந்து சுற்றுவட்டத்திற்குச் செல்கிறது, அதாவது உள்ளான ஆவியிலிருந்து புறம்பான ஆத்துமாவிற்குச் செல்கிறது என்று அர்த்தமாகும். ஆவியானவர், முதலில் நம் உள்ளான ஆள்தத்துவத்தின் மையமாகிய நம் ஆவியைப் புதிதாக்குகிறார். பின்னர், நாம் நம்மை அவருக்கு சமர்ப்பித்து சிலுவையின் இடைபடுதல்களை ஏற்றுக்கொள்வோமானால், அவர் நம் ஆவியிலிருந்து புறம்பான சுற்றுவட்டமாகிய ஆத்துமாவுக்கு விரிவடைவார். இது நம் ஆத்துமாவின் ஒவ்வொரு பகுதியையும் புதிதாக்கும். நம் ஆத்துமா ஆவியானவரின் ஆளுகைக்குப் பணிந்தடங்கி நம் ஆவியோடு இணைக்கப் படும்போது, அது புதிதாக்கப்படுகிறது. ஆகையால் மனதின் புரிந்துகொள்ளுதலும் புதிதாக்கப்படுகிறது.

நம் ஆவியில் பரிசுத்த ஆவியானவரின் மறுபிறப்பை நாம் பெற்றபிறகு, நாம் நம்மை தேவனுக்கு அர்ப்பணித்து, நம் பழைய வாழ்க்கையை அப்புறப்படுத்த சிலுவையின் மூலமாக பரிசுத்த ஆவியானவரின் இடைபடுதல்களை ஏற்றுக்கொள்வோமானால், அப்போது பரிசுத்தஆவியானவர் நம்முள் தம் விரிவாக்கும் வேலையை தொடர்ந்து செய்யமுடியும், அதாவது ஆத்துமாவிலுள்ள நம் மனதின் புரிந்துகொள்ளுதலை புதிதாக்கமுடியும். இப்படிப்பட்ட புதிதாக்கப்பட்ட புரிந்துகொள்ளுதல் மட்டுமே ஆவியின் உள்ளுணர்வுக்குப் பொருத்தமாக இருக்கமுடியும். எப்போதெல்லாம் தேவன் ஏதோவொன்றை நம் ஆவியின் உள்ளுணர்வில் நமக்குப் தெரியப்படுத்துகிறாரோ, அப்போதெல்லாம் மனதின் புரிந்துகொள்ளுதல் உடனடியாகப் புரிந்துகொள்ளமுடியும். ஒரு வலிமையான, விழிப்பான ஆவி கூட்டல் ஒரு புதிதாக்கப்பட்ட, தெளிவான புரிந்துகொள்ளுதல் நம்மிடம் இருக்கும் பாது, தேவனுடைய சுபாவத்தைப்பற்றியும், அவருடைய வழிநடத்துதல் மற்றும் வெளிப்பாட்டைபற்றியும் ஒரு முழுமையான உள்ளார்ந்த அறிவு நம்மிடம் இருக்கமுடியும்.

## C. இருதயத்தோடு இடைபடுதல்

இருதயம் மனிதனின் கூட்டு முழுமொத்தமாகும்; ஆகை யால் இருதயத்தில் பிரச்சினைகளிருந்தால், ஆவியின் அனைத்து நடவடிக்கைகளும், நம்முள்ளிருக்கும் ஜீவனும் தடையையும், மட்டுப்படுத்து தலையும் சந்திக்கும். நம் ஆவி விழிப்பாகவும் நம் புரிந்துகொள்ளுதல் புதிதாக்கப்பட்டும் இருந்தாலும், நம்

இருதயத்தில் பிரச்சினைகளிருந் தால், நாம் இன்னும் தேவனைப்பற்றிய உள்ளார்ந்த அறிவைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஆகையால் நம் இருதயம் மிருதுவாகவும், தூய்மையாகவும், தேவனை நேசிக்கவும், தேவனை விரும்பவும், தேவனுக்குக் கீழ்ப்படியவும் நாம் இருதயத்தோடு இடைபட வேண்டும்.

தேவன் ஆவிக்குரிய காரியங்களை ஞானிகளுக்கும் கல்விமான் களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தியிருக்கிறார் என்று மத்தேயு *11:25*-ல் கர்த்தர் கூறுகிறார். "ஞானிகளும், கல்விமான்களும்" என்பவர்கள் தங்கள் இருதயத்தில் சுயநீதியாய், சுயதிருப்தியாய் மற்றும் பிடிவாதமாய் இருப்பவர்கள்; ஆகையால் அவர்கள் தேவனுடைய ஆவிக்குரிய காரியங்களைப் பார்க்கமுடியாது. "பாலகர்" என்பவர்கள் தங்கள் இருதயங்களில் தாழ்மையாக, மிருதுவாக இருப்பவர்கள்; ஆகையால் அவர்கள் தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்றுக்கொள்ள முடியும். இதனால் நம் இருதயம் தாழ்மையாகவும் மிருதுவாகவும் ஆகும்வரை அது இடைபடுத்தப்பட வேண்டும். அது தன் சுயதிருப்தி, பிடிவாதத் தன்மை ஆகியவற்றிலிருந்து விடுவிக்கப் படும் போதுமட்டுமே உள்ளான வெளிப்பாட்டையும் தேவனைப் பற்றிய அறிவையும் நாம் பெறமுடியும்.

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்று மத்தேயு *5:8*-ல் கர்த்தர் கூறுகிறார். தேவனைத் தவிர வேறு பற்றுகளையும் விருப்பங்களையும் நாம் கொண்டிருந்து நம் இருதயம் தூய்மையாக இல்லையென்றால், தேவனைத் தெளிவாகப் பார்ப்பதிலிருந்து நம்மை மறைக்கிற ஒரு திரை நமக்குள் இருக்கிறது. இருப்பினும் எப்போதெல்லாம் நம் இருதயம் தேவனிடம் திரும்புகிறதோ, அப்போதெல்லாம் அந்தத்திரை நீக்கப்படுகிறது (*2* கொரி *3:16*). இவ்வாறு நாம் நம் இருதயத்தோடு இடைபடவேண்டும். நம் இருதயம் தூய்மையாக இருக்க வேண்டும், "இருமனமுள்ளதாக" இருக்கக்கூடாது (யாக். *4:8*); அப்போது ஒளியையும் வெளிப்பாட்டையும் ஆவியில் பெற்று, மனதில் கிரகித்து, புரிந்து, இவ்வாறு தேவனை அறிகிறோம்.

"என்னிடத்தில் அன்பாயிருக்கிறவன்...அவனுக்கு என்னை வெளிப்படுத்துவேன்" என்று யோவான் *14:21*-ல் கர்த்தர் கூறுகிறார். மகதலேனா மரியாள், கர்த்தர்மேல் கொண்ட கூர்மையான அன்பின் காரணமாக, உயிர்த்தெழுந்த நாளின் காலையில் அவரைத் தேடினாள். உயிர்த்தெழுதலுக்குப்பின் கர்த்தர் தம் சீஷர்களுக்கு அளித்த முதல் வெளிப்பாட்டை அவள் பெற்றாள், மேலும் உயிர்த்தெழுந்த கிறிஸ்துவை அறிந்த முதல் நபரானாள் (யோவான் *20*). ஒருவர் தேவனை அறிய விரும்பினால், அன்புதான்

ஒரே வழி என்று சகோதரன் லாரன்ஸ் கூறினார். நம் இருதயம் தேவனை நேசிக்க வேண்டும், தேவனைத் தேடவேண்டும்; அப்போது தேவனுடைய வெளிப்பாட்டைப் பெற்று அவரை அறியமுடியும்.

"அவருடைய சித்தத்தின்படி செய்ய மனதுள்ளவ னெவனோ அவன்...அறிந்துகொள்ளுவான்" என்று யோவான் 7:17-ல் கர்த்தர் கூறுகிறார். நம் இருதயம் தேவனையும் அவருடைய சித்தத்தையும் விரும்பவேண்டும் என்பதை இது வெளிப்படுத்துகிறது; அப்போது நாம் தேவனை அறியமுடியும், மேலும் தேவனுடைய சித்தத்தை அறியமுடியும்.

தேவனே சித்தத்தையும் செய்கையையும் நம்மில் உண்டாக்குகிறார் என்று பிலிப்பியர் 2:13-ல் அப்போஸ்தலன் கூறுகிறார். நம் இருதயம் நம்முள் தேவனுடைய வேலைக்கு பணிந்தடங்காமல் அல்லது பணிந்தடங்கச் சித்தமில்லாமல் இருந்தால், தேவன் நம்மில் வேலைசெய்யமுடியாது; ஆகவே அவரைப்பற்றிய அறிவில் அவருடைய வேலைசெய்தல் நமக்குக் கொடுக்கும் உணர்வை நாம் பெறமுடியாது. எனவே நம் இருதயம் தேவனுக்கு பணிந்தடங்கமுடியும் என்கிற வரையில் மட்டுமல்ல, அது தேவனுக்குப் பணிந்தடங்க சித்தமாக இருக்கும் வரைக்கும்கூட அது இடைபடுத்தப்பட வேண்டும். அப்போது நம்முள் தேவன் வேலை செய்வதின்மூலமாக வருகிற உணர்வையும் அறிவையும் நாம் பெறமுடியும்.

ஆகையால் (1) ஆவி வலிமையாகவும், விழிப்பாகவும் மாறும்வரை நாம் அதனை பயிற்சிசெய்யவும், பயன்படுத்தவும் வேண்டும், (2) ஆவியானவரால் நம் புரிந்துகொள்ளுதல் புதிதாக்கப்பட வேண்டும், (3) நம் இருதயம் மிருதுவாக மற்றும் தூய்மையாக, தேவனை நேசிப்பதாக, தேவனை விரும்புவதாக, தேவனுக்குப் பணிந்தடங்குதவதாக ஆகும்வரை அதனோடு நாம் இடைபடவேண்டும்; அப்போது தேவனைப்பற்றிய உள்ளார்ந்த அறிவை நாம் பெற்றிருக்க முடியும்.

## XI. முடிவுரை

மனிதன் தேவனை அறிந்துகொள்ள வேண்டும் என்பதில் தேவன் மகிழ்ச்சியடைவதால், அவன் அவரை அறியும்படி அநேக வழிகள் மற்றும் வழிமுறைகளை அவர் மனிதனுக்குக் கொடுத்திருக்கிறார். பழையஏற்பாட்டுக் காலங்களில் மனிதர்கள் அவரை அறிந்துகொள்ளும்படி அவர் தன் செயல்களையும், தன் வழிகளையும் அவர்களுக்கு வெளிப்படுத்தினார். ஆனால் அந்தச் செயல்கள் மற்றும் வழிகளால் மனிதன் பெற்றிருந்த அறிவு வெறுமனே வெளியார்ந்தது, அனுபவம் சாராதது, மேலோட்டமானது,

முழுமையாகாதது. ஆகையால் புதியஏற்பாட்டுக் காலத்தில், அவர் தம்மை நமக்கு தெரியப்படுத்த இன்னும் தம் செயல்களையும் வழிகளையும் பயன்படுத்தினாலும், நம் ஜீவனாக இருக்கும்படி அவரே ஆவியானவராக நமக்குள் நுழைந்திருக்கிறார் என்பதே அதிமுக்கியமும், மகிமையுமான காரியமாகும். இது அவரைப் பற்றிய ஒரு உள்ளார்ந்த, அனுபவம்சார்ந்த, ஆழமான, முழுமை யான அறிவைப்பெற நமக்குத் திறனளிக்கிறது.

தேவன் ஜீவனாக நம்மில் இருக்கும்போது, ஒரு தெய்வீக ஜீவவிதியை நாம் உள்ளாகக் கொண்டிருக்கச்செய்கிறார், இது உள்ளிருந்து தொடர்ச்சியாக நம்மைச் சீரமைக்கிறது, அதாவது அவருடைய ஜீவனின் சுபாவத்தை அறிய வைக்கிறது. இந்த ஜீவனின் விதி, ஒரு விதியாக இருப்பதால், ஒரு நபரல்ல; அது நிலையானதும் மாறாததுமாகும். இது தேவனுடைய ஜீவனின் சுபாவத்திற்கு ஏற்றபடி நிலையானதாக நம்மை உள்ளாகச் சீரமைக்கிறது. இது நம் வாழ்க்கையின் முறை, சுபாவம், சுவை ஆகியவை தேவனுடைய சுபாவத்திற்கு ஒத்ததாக இருக்கும்படிச் செய்கிறது என்பதே இதன் விளைவாகும்.

தைலமாக நம்மில் குடியிருக்கிற தேவனுடைய ஆவி, அவரை அறிந்துகொள்ள நம்மை அபிஷேகிக்கிறார், நமக்குப் போதிக்கிறார். இந்தத் தைலம் தேவனாகவே இருப்பதால், இது ஒரு நபர், மேலும் இது எல்லையற்றதும், வளைந்து கொடுக்கக்கூடியதுமாகும். நம்மி லுள்ள இந்தத் தைலம் வரம்பில்லா தேவனையே தொடர்ச்சியாக நம்முள் அபிஷேகிக் கிறது. நம் முழு நபர், நடவடிக்கை, நடத்தை ஆகியவை தேவனுடைய சாராம்சத்தைக்கொண்டு நிரப்பப்படவும், தேவனுடைய சித்தத்தோடு ஒத்திருக்கவும் இது செய்கிறது என்பதே இதன் விளைவாகும்.

ஜீவவிதியும் அபிஷேகமுமாக தேவன் முதலில் நம் ஆவியில் ஆரம்பித்து, பின்னர் நம் மனம் கிரகித்துக்கொள்ளவும் புரிந்துகொள்ளவும் நம் ஆத்துமாவுக்கு விரிவடைகிறார். ஆகையால் ஆவியிலுள்ள உள்ளுணர்வு விழிப்பாக இருக்கும்படி, நாம் ஆவியைப் பயிற்சிசெய்யவேண்டும். நம் மனதின் புரிந்துகொள்ளுதல் தெளிவாக இருக்கும்படி, நம் மனம் புதிதாக்கப் படுவதும் நமக்குத் தேவையாகும். இதோடுகூட, நம் இருதயம் மிருதுவாக மற்றும் தூய்மையாக, தேவனை நேசிப்பதாக, தேவனை விரும்புவதாக, தேவனுக்குப் பணிந்தடங்குவதாக இருக்கும்படி நாம் அதனோடு இடைபடவேண்டும். இந்த வழியில், நமக்குள் ஜீவவிதியும் அபிஷேகமும் அசையும்போது, நம் ஆவியிலுள்ள உள்ளுணர்வு உடனே அறிந்துகொள்ளும், நம் மனதின் புரிந்துகொள்ளுதலும் உடனே கிரகித்து கொள்ளும், மேலும் எந்த நேரத்திலும் தேவனைப்பற்றிய உள்ளார்ந்த அறிவை

நாம் பெற்றுக்கொள்ளமுடியும்.

இப்படிப்பட்ட உள்ளார்ந்த அறிவை நாம் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடாது, அல்லது தவறவிட்டுவிடக்கூடாது என்பதை நாம் பரிசோதிக்கவும் நிரூபிக்கவும் வெளியி லிருக்கும் வேதாக மத்தின் போதனையையும் கோட்பாடு களையும் தேவன் நமக்குத் தந்திருக்கிறார். அதோடுகூட, நாம் உள்ளிருந்து உணரும் உணர்வை, வெளியிலிருந்து அவருடைய அநேக வேலைக்காரர்கள் மூலமாக, தேவன் நமக்குப் போதிக்கிறார் அல்லது மறுபடி கூறுகிறார். ஆவியில் நாம் கொண்டிருக்கும் உணர்வை கிரகித்துக் கொள்ள, அவர் நம் மனதிற்குப் போதிக்கலாம், அல்லது தேவனு டைய ஆழமான காரியங்களையும் ஆவிக்குரிய வாழ்க்கையின் அடிப்படையான அறிவையும் அவர் நமக்குத் தெளிவாக்கலாம்.

உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் தேவனை அறிந்துகொள்ள அநேக வழிகளும் வகைகளும் நாம் கொண்டிருப்பதால், "...எல்லா ஞானத்தோடும், ஆவிக்குரிய விவேகத்தோடும் அவருடைய சித்தத்தை அறிகிற அறிவினாலே நிரப்பப்படவும், சகலவித நற்கிரியையுமாகிய கனிகளைத் தந்து, தேவனை அறிகிற அறிவில் விருத்தியடைந்து, கர்த்தருக்குப் பிரியமுண்டாக, அவருக்குப் பாத்திரராய் நடந்துகொள்ளவும்," *(கொலோ. 1:9-10)* முடியும். இந்த வழியில் நாம் தேவனை அறியும்போது நாம் தேவனுடைய சித்தத்தை முழுமையாக அறிந்துகொள்ளமுடியும் என்பது மட்டுமல்ல, தேவனுடைய ஜீவனில் நாம் வளரவும் முதிர்ச்சிய டையவும்கூட முடியும். எவ்வளவு அதிகமாக தேவனைப்பற்றிய அறிவில் நாம் வளர்கிறோமோ, அவ்வளவு அதிகமாக நாம் தேவனுடைய ஜீவனில், அவர் நம்மை முழுமையாக ஆட்கொள்ளும்வரை வளர்வோம். அப்போது தேவனுடைய சாராம்சம் நமக்குள் முழுவதுமாக உருவாக்கப்பட்டுவிடும், இது நம்மோடு ஒன்றாக கலந்திணைய வேண்டும் என்ற தேவனுடைய விருப்பத்தின் மகிமையான இலக்கை இவ்வாறு நிறைவேற்றிவிடும்.

அத்தியாயம் பன்னிரண்டு

# ஜீவனின் வளர்ச்சி என்றால் என்ன?

இப்போது நாம் ஜீவனின் அறிவைப்பற்றிய பன்னிரண் டாவது முக்கியமான குறிப்பாகிய ஜீவனின் வளர்ச்சியைப்பற்றிப் பார்க்கலாம். ஜீவனைப்பற்றிய கூடுதலான அறிவை நாம் கொண்டிருக்க விரும்பினால், ஜீவனின் வளர்ச்சி என்றால் என்ன என்பதையும் நாம் அறியவேண்டும். அநேக சகோதர சகோதரிகள், தங்கள் இருதயங்களில் கர்த்தர் மேலுள்ள அன்பின் உணர்ச்சிப் பெருக்கில் குறைவுபடுகிறார்கள் என்று கூறமுடியாது, மேலும் அவர்கள் செலுத்திய விலைக்கிரயம் போதுமானதல்ல என்றும் கருதமுடியாது, எனினும் ஜீவனின் உண்மையான வளர்ச்சி என்ன என்பதை அவர்கள் அறியாமல் இருப்பதால், அவர்கள் அநேகத் தவறான கண்ணோட்டங்களையும் நாட்டங்களையும் கொண்டிருக் கிறார்கள்; இவ்வாறு அவர்களில் ஜீவனின் உண்மையான வளர்ச்சி முற்றிலும் குறைவுபட்டிருக்கிறது. இது எவ்வளவு துரதிர்ஷ்ட மானது! ஆகையால் ஜீவனின் பாதையில் துல்லிய மான அறிவும், நேர்த்தியான நாட்டமும் நம்மிடம் இருக்கும்படி, ஜீவனின் வளர்ச்சி என்றால் என்ன என்பதைப்பார்க்க நாம் சிறிது நேரம் செலவிடலாம்.

இருப்பினும் ஜீவனின் வளர்ச்சி என்றால் என்ன என்பதை நாம் பார்ப்பதற்குமுன்பு, எது ஜீவனின் வளர்ச்சி இல்லை என்ற எதிர்மறையான பக்கத்தை நாம் பார்க்கலாம். இது மிக ஆழமான பாதிப்பை நமக்கு ஏற்படுத்தி, அதிக துல்லியமான அறிவைக் கொடுக்கும்.

## I. ஜீவனின் வளர்ச்சி நடத்தையின் முன்னேற்றமல்ல

நடத்தையின் முன்னேற்றம் என்றால் ஒரு நபரின் நடத்தையை கெட்டதிலிருந்து நல்லதிற்கும், தீமையிலிருந்து நற்பண்பிற்கும் மாற்றுவதாகும். இதனையே மனிதர்கள் பொதுவாக “தீய வழிகளை விட்டுவிட்டு நல்வழிக்குத் திரும்புவது” அல்லது “தீமையிலிருந்து விலகி நற்பண்பைப் பின்தொடர்வது” என்று அழைக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, ஒரு மனிதன் முன்பு மிக பெருமையுள்ளவனாக இருந்தான், இப்போது அவன் தாழ்மையுள்ளவனாக இருக்கிறான். அவன் அதிகமாக மற்றவர்களை வெறுத்தான், இப்போது அவன் மற்றவர்களை நேசிக்கிறான். அவன் வழக்கமாக சீக்கிரத்தில் எரிச்சலடைபவனாகவும் எளிதில் கோபப்படுபவனாகவும் இருந் தான், இப்போது அவனுடைய மனப்போக்கு மெதுவாகவும்

ஒருபோதும் சீக்கிரமாக எரிச்சலடையாதவனாகவும் இருக் கிறான். இவையெல்லாம் நடத்தையின் முன்னேற்றம் என்று கருதப் படமுடியும். இவ்வாறு மனிதனுடைய நடத்தை முன்னேற்றப் படும்போது, இது ஜீவனின் வளர்ச்சியா? இல்லை!

ஜீவனின் வளர்ச்சி என்றால் நடத்தையின் முன்னேற்றமல்ல என்று நாம் ஏன் கூறுகிறோம்? இது ஏனென்றால் நடத்தையும், ஜீவனும் நிச்சயமாக இருவேறு உலகங்களுக்குரியவைகளாக இருக்கின்றன.

தீமை ஜீவனிலிருந்து வேறுபடுகிறதைப்போல, நன்மையும் ஜீவனிலிருந்து வேறுபடுகிறது. தீமை ஜீவன் இல்லாததுபோல, நன்மையும் ஜீவனல்ல. தீமையும், நன்மையும் சுபாவத்தில் வேறுபட்டிருந்தாலும், இவை இரண்டும் ஒரே உலகத்தைச் சேர்ந்தவை; இவை இரண்டும் ஜீவனைத்தவிர வேறொன்று, இவை இரண்டும் ஜீவன் இல்லை. இவ்வாறு வேதாகமத்தில் நன்மையும் தீமையும் இரண்டு மரங்கள் அல்ல, ஆனால் ஒரே மரம்; ஜீவன் என்பது வேறொரு மரம், அதாவது வேறொரு உலகத்துக்குரிய, வேறொரு இராஜ்ஜியத்துக்குரிய ஏதோவொன்றாக இருக்கிறது (*ஆதி. 2:9*). ஒருபக்கம் நன்மையும் தீமையும், மறுபக்கம் ஜீவனும் நிச்சயமாக இரண்டு வேறுபட்ட வகைகளைச் சார்ந்தவை என்று நாம் கூறமுடியும். இவ்வாறு ஒரு மனிதன் தன் சொந்த உறுதி யினாலும் முயற்சியாலும் நடத்தையில் அதிகமாக முன்னேறக் கூடும், இருப்பினும் தேவனுடைய ஜீவனில் மிகவும் முதிர்ச்சி யடையாமலும், பலவீனமாகவும் இருக்கக்கூடும். இது ஏனென் றால், அவனுடைய முன்னேற்றம் முற்றிலும் ஜீவனுக்கு அப்பாற் பட்டதாகும்; அது அவனுடைய சொந்த வேலையினாலானது, ஜீவனாலானதல்ல. அதோடுகூட, அவன் எதனை முன்னேற்றி யிருக்கிறானோ, அது ஜீவனில் அவனுடைய வளர்ச்சியின் விளை வல்ல. ஆகையால் ஜீவனின் வளர்ச்சி என்பது நடத்தையின் முன்னேற்றமல்ல.

## II. ஜீவனின் வளர்ச்சி பக்தியின் வெளிப்படுத்துதலல்ல

பக்தியின் வெளிப்படுத்துதல் என்றால் என்ன? பக்தியின் வெளிப்படுத்துதல் நடத்தையின் முன்னேற்றத்திலிருந்து வேறு பட்டது. நடத்தையின் முன்னேற்றம் என்பது மனிதர்களோடு தொடர்புடையது, அதாவது மனிதர்களுக்கு முன்பாக ஒரு நபருடைய நடத்தையும் குணமும் முன்னேறியிருக்கிறது, முன்பைவிட சிறந்ததாக மாறியிருக்கிறது என்று அர்த்தமாகும். பக்தியின் வெளிப்படுத்துதல் என்பது தேவனோடு தொடர் புடையது, அதாவது தேவனுக்கு முன்பாக ஒரு நபருடைய மனப் பான்மை பக்திமிகுந்ததாகவும் உண்மையாகவும் இருப்பதுடன்,

மரியாதையாகவும், பயம் நிறைந்ததாகவும் இருக்கிறது என்று அர்த்தமாகும். இருப்பினும் நடத்தையின் முன்னேற்றமானாலும், பக்தியின் வெளிப்படுத்துதலானாலும், இரண்டுமே ஒன்றுபோல ஜீவனின் வளர்ச்சியல்ல. சில விசுவாசிகள் தேவனுக்குமுன்பு மிகவும் மரியாதையாகவும் பயபக்தியாகவும் இருக்கலாம்; அவர்கள் தங்கள் நடத்தை யிலும், செயலிலும் அவமரியாதை யாகவோ ஏனோதானோ வென்றோ இருக்கத் துணிவதில்லை. இந்த வெளிப்படுத்து தல்கள் நல்லதல்ல என்று நம்மால் கூற முடியாது, ஆனாலும் அவைகள் ஜீவனின் வளர்ச்சியல்ல. இது ஏனென்றால், இப்படிப்பட்ட விசுவாசிகள் தேவனை எல்லாவற் றிற்கும் மேலானவராக, அதாவது மரியாதைக்கும் பயத்துக்கும் உரியவராக மட்டுமே நோக்கிப்பார்க்கிறார்கள்; ஆகையால் அவர்கள் வணங்குகிற இருதயத்தையும் பக்தியின் வெளிப் படுத்துதலையும் கொண்டிருக்கிறார்கள். இருப்பினும், எவ்வாறு தேவன் கிறிஸ்துவில் மனிதனுடைய ஜீவனாக மனிதனுள் குடியிருக்கிறார், எவ்வாறு இந்த ஜீவனின் விதி வேலை செய்வ தால் மனிதனுக்கு தேவனாக இருக்கும்படி மனிதனுக் குள் இருக்கிறார் என்பதைப்பற்றி சிறிதளவு அறிவோ, சிறிதளவு அனுபவமோ அவர்களுக்கு இல்லாமலிருக்கலாம். அவர்களிடம் பக்தியின் வெளிப்படுத்துதல் இருந்தாலும், இப்படிப்பட்ட வெளிப் படுத்துதல் அவர்களுக்குள் இருக்கும் தேவனுடைய ஜீவனின் வளர்ச்சியினால் ஆனதல்ல; ஆகையால் அவர்கள் தங்களுக்குள் ஜீவனின் வளர்ச்சியைக் கொண்டிருக்கிறார்கள் என்பதற்கு இது ஒரு அறிகுறியல்ல. எனவே, ஜீவனின் வளர்ச்சி என்பது பக்தியின் வெளிப்படுத்துதலுமல்ல.

## III. ஜீவனின் வளர்ச்சி வைராக்கியமான சேவையல்ல

வைராக்கியமான சேவை என்றால் என்ன? முன்பு ஒரு விசுவாசி தேவனுடைய காரியங்களைப் பொறுத்தவரை மெத்தனமாகவும், குளிர்ச்சியாகவும் இருந்தான்; இப்போது அவன் தேவனைச் சேவிப்பதில் ஆர்வமாக முனைந்து செல்கின்றான் என்பது இதன் அர்த்தமாகும், அல்லது முன்பு அவன் அபூர்வமாகவே கூட்டங்களுக்கு வந்தான், ஆனால் இப்போது அவன் ஒவ்வொரு கூட்டத்திலும் இருக்கிறான். முன்பு அவன் சபையைக்குறித்து அக்கறைப்படவில்லை; இப்போது, அவன் சபையின் எல்லா வகையான சேவைகளிலும் பங்கெடுக்கிறான். இப்படிப்பட்ட உற்சாகப்பெருக்கான சேவை தேவனுக்கடுத்த காரியங்களில் ஒரு விசுவாசியின் உணர்ச்சிப் பெருக்கையும், கர்த்தரை சேவிப்பதில் அவனுடைய ஊக்கத்தை வெளிப்படுத்தினாலும், அது அடிக்கடி மனிதர்களால் புகழப்பட்டாலும், இப்படிப்பட்ட வைராக்கியம்

மனித கிளர்ச்சி, சுறுசுறுப்பு, ஆர்வம் ஆகியவைகளோடு கலந்திருக்க அதிக சாத்தியம் இருக்கிறது. இப்படிப்பட்ட சேவை மனிதனின் ஆத்தும வல்லமையின்படியும், மனிதனின் சக்தியைச்சார்ந்தும் இருப்பதற்கு முழுவதும் சாத்தியமே; இது பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலிருந்து வருவதல்ல; இது சிறிதும் கிறிஸ்துவின் ஜீவனைச் சார்ந்திருக்கவோ, தேவனோடு மிக ஆழமான சேர்ந்திணைதலைக் கொண்டிருக்க மனிதர்களுக்கு உதவி செய்யவோ இல்லை. எனவே இப்படிப்பட்ட வைராக்கியமான சேவை ஜீவனிலிருந்து வருவதுமில்லை, ஜீவனுக்குரியதுமில்லை; ஆகையால் இது ஜீவனின் வளர்ச்சியல்ல.

அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிக்கப்பட்டதற்குமுன்பு தேவனை வைராக்கியத்தோடு சேவித்தான் (அப். *22:3*) என்று நாம் வேதாகமத்தில் பார்க்கிறோம். அந்த நேரத்தில் அவன் தனக்குள் தேவனுடைய ஜீவனைப் பெற்றிருக்கவில்லை என்றாலும், தன் சுய கிளர்ச்சியாலும், சுய பெலத்தாலும் மிக வைராக்கியமான முறையில் அவனால் புறம்பான ரீதியில் தேவனை சேவிக்கமுடிந்தது. வைராக்கியமாக தேவனை சேவித்தல் முற்றிலும் ஜீவனுக்கு தொடர்பில்லாததாக இருக்கமுடியும் என்பதை இது நமக்குக் காட்டுகிறது. இது ஒரு நபருடைய ஜீவனின் நிலைமையை ஒரு இம்மிகூட சுட்டிக்காட்டவில்லை. ஆகையால் ஜீவனின் வளர்ச்சி என்பது வைராக்கியமான சேவித்தலுமல்ல.

## IV. ஜீவனின் வளர்ச்சி அறிவின் அதிகரிப்பல்ல

அதிகமான செய்திகளைக் கேட்பது, அதிகமான சத்தியங் களை அறிவது, வேதாகமத்தை அதிகமாகப் புரிந்துகொள்வது, ஆவிக்குரிய பதங்களை அதிகமாகக் கிரகித்துக்கொள்வது போன்றவைகள் மூலம் ஒரு விசுவாசியினுடைய ஆவிக்குரிய அறிவு அதிகரிப்பது ஒருவகையான வளர்ச்சியாக இருந்தாலும், அது இன்னும் ஜீவனின் வளர்ச்சியல்ல. இப்படிப்பட்ட அறிவு அவனுடைய மனம் முன்னேறுவதற்கும் தேர்ச்சியடைவதற்கும், அவனுடைய தலை அதிகமாக கிரகித்துக்கொள்ளுதலை, அல்லது கிரகித்துக்கொள்ளும் அதிக ஆற்றலை கொண்டிருக்கவும் செய்கிறது. இது நிஜமான அறிவிலும், கிறிஸ்துவை ஜீவனாக அனுபவமாக்குவதிலும் அவனுக்கு வளர்ச்சி இருக்கும்படி, பரிசுத்தஆவி அவனுக்குள் மாபெரும் வெளிப்பாட்டைக் கொடுத்திருக்கிறார் அல்லது அவனுக்குள் ஜீவன் அதிகமான இடத்தை ஆதாயப்படுத்தியிருக்கிறது என்பதல்ல. இப்படிப்பட்ட அறிவு மட்டும் அதிகரிப்பது வெறுமனே மனிதர்களை இறுமாப்படையச்செய்யும் (*1* கொரி. *8:1*). அது தேவனுக்கு முன்பாக ஒன்றுமில்லை (*1* கொரி *13:2*), மேலும் அதற்கு ஜீவனில் எந்த மதிப்புமில்லை. இவ்வாறு ஜீவனின்

வளர்ச்சி என்பது அறிவின் அதிகரிப்பல்ல.

## V. ஜீவனின் வளர்ச்சி வரங்களில் பெருகுவதல்ல

ஒரு விசுவாசி ஊழியம்செய்தல், குணமாக்குதல், பாஷைகளில் பேசுதல் போன்ற இப்படிப்பட்ட ஆற்றல்களாகிய ஆவிக்குரிய வரங்களில் பெருகுவது மிக விலையேறப்பெற்றது என்றாலும் இதுவும்கூட ஜீவனின் வளர்ச்சியல்ல. இது அதிகமாக இப்படிப்பட்ட வரங்களை ஒரு விசுவாசி கொண்டிருக்கச் செய்யும்படி, அவன்மேல் இறங்கும் பரிசுத்த ஆவியின் அற்புத வல்லமையே ஆகும். வரங்கள் வெளிப்படுத்தப்படுவது தேவனுடைய ஜீவன் அவனுக்குள்ளிருந்து வளர்ந்து முதிர்ச்சி அடைந்ததாலல்ல. ஒரு பக்கத்தில் பரிசுத்த ஆவியால் பயன்படுத்தப்படும் ஒரு மனிதன் அதிக வரங்களை வெளிப்படுத்தமுடியும் என்பது சாத்தியம்தான்; இருப்பினும் மறுபக்கத்தில் தேவனுடைய ஜீவன் அவனுக்குள் அதிகமாக வார்க்கப்பட பரிசுத்த ஆவியை அவன் அனுமதிக்காமல் இருக்கக்கூடும். இவ்வாறு வரங்களில் பெருகுவது, அவசியம் ஜீவனில் வளர்வதுதான் என்று அர்த்தமல்ல.

கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் எல்லா உபதேசத்திலும் எல்லா அறிவிலும் சம்பூரணமாயிருந்தார்கள், மேலும் எந்த வரத்திலும் குறைவில்லாதவர்களாயிருந்தார்கள் *(1 கொரி. 1:5, 7)*, இருப்பினும் அவர்கள் ஜீவனில் மிகவும் முதிர்ச்சியற்றவர்க ளாக இருந்தார்கள்; உண்மையில் மாம்சத்திற்குறியவர்களும் கிறிஸ்துவில் குழந்தைகளாகவும் இருந்தார்கள் *(1 கொரி. 3:1)*. ஜீவனின் வளர்ச்சி வரங்களில் பெருகுவதல்ல என்றும் இது நமக்குக் காட்டுகிறது.

## VI. ஜீவனின் வளர்ச்சி வல்லமையின் அதிகரிப்பல்ல

ஒரு விசுவாசி தேவனை சேவிப்பதில் முன்பைவிட அதிக வல்லமையுள்ளவனாக இருக்கலாம்; பிரசங்கிப்பதில் அல்லது சாட்சி கொடுப்பதில் முன்பைவிட அவன் அதிகமாக மனிதர்களை அசைக்க கூடியவனாக இருக்கலாம்; சபையை நிர்வகிப்பதில் அல்லது அலுவல்களை மேலாண்மைசெய்வதில் அவன் முன்பைவிட அதிக ஞானமுடையவனாக இருக்கலாம் என்பது சாத்தியமே. இவைகள் வல்லமையின் அதிகரிப்பு, ஆனால் இவைகள் இன்னும் ஜீவனின் வளர்ச்சியல்ல. இப்படிப்பட்ட வல்லமையின் அதிகரிப்பு அவன்மேல் அருளப்பட்ட பரிசுத்த ஆவியின் ஒரு புறம்பான வல்லமை மட்டுமே. இது பரிசுத்த ஆவி அவனுக்குள் ஜீவனைப் பின்னிப்பிணைப்பதல்ல, மேலும் இவ்வாறு அவனுடைய ஆவியின்மூலம் அவனுக்குள்ளிருந்து வெளிப்படுத்தப்பட்ட ஜீவனின் வல்லமையல்ல; ஆகையால் இது ஜீவனிலிருந்து வரவுமில்லை, ஜீவனுக்குரியதுமில்லை. இவ்வாறு இப்படிப்பட்ட

வல்லமையின் அதிகரிப்பும்கூட ஜீவனின் வளர்ச்சியல்ல.

ஆரம்பத்தில் கர்த்தரைப் பின்தொடர்ந்த பன்னிரண்டு சீஷர்களும் எல்லா வகையான பிசாசுகளைக் கீழ்ப்படுத்த, எல்லா வகையான நோய்களைக் குணமாக்க வல்லமையையும் அதிகாரத்தையும் கர்த்தரிடமிருந்து பெற்றுக்கொண்டார்கள் என்று லூக்கா 9-ம் அத்தியாயம் நமக்கு கூறுகிறது; இருப்பினும் அந்த நேரத்தில் அவர்களுடைய ஆவிக்குரிய ஜீவனின் நிலைமை மிகவும் முதிர்ச்சி யடையாமல் இருந்தது. வல்லமையின் அதிகரிப்பும் ஜீவனின் வளர்ச்சியல்ல என்பதைக் காட்ட இது நமக்குப் போதுமானதா யிருக்கிறது.

இந்த ஆறு எதிர்மறையான குறிப்புகளிலிருந்து நாம் ஜீவனில் வளர்ச்சியைப் பெறுவது, நம் நடத்தையை முன்னேற்றுவதால், தேவனுக்கு முன்பாக ஒரு பக்தியின் வெளிப்படுத்துதலைக் கொண்டிருப்பதால், தேவனை சேவிப்பதில் வைராக்கியமாக இருப்பதால், நம் ஆவிக்குரிய அறிவை அதிகரிப்பதால், புறம்பான வரங்களில் பெருகுவதால், வேலையில் நம் வல்லமை அதிகரிப் பதால், அல்ல என்று பார்க்கிறோம். இவைகளில் ஒன்றும் ஜீவனின் வளர்ச்சியல்ல. பெரும்பாலும் எல்லாக் கிறிஸ்தவர்களும் இன்று இவைகளையே ஜீவனின் வளர்ச்சிக்கான தரமாக எடுத்துக்கொள்கி றார்கள் என்பது பரிதாபமானதாகும். ஒரு கிறிஸ்தவனில் ஜீவனின் வளர்ச்சி இருக்கிறதா இல்லையா என்று அவனுடைய நடத்தை, பக்தி, வைராக்கியம், அறிவு, வரங்கள், வல்லமை ஆகியவைகளைப் பார்ப்பதால் தீர்மானிக் கிறார்கள். இந்த வழியில் காரியங்களை மதிப்பிடுவது சரியானதல்ல. செம்பு தங்கத்தைப்போலவே இருக்கிறது, இருப்பினும் அது தங்கமல்ல. அதைப்போலவே இந்த ஆறு குறிப்புகளும் ஓரளவு ஜீவனின் வளர்ச்சியைப்போலத் தோன்றினாலும், அவை ஜீவனின் வளர்ச்சியல்ல. நிச்சயமாக ஜீவனின் நிஜமான வளர்ச்சி இந்த ஆறுகுறிப்புகளையும் ஓரளவு வெளிப்படுத்தும்; இருப்பினும் வெறுமனே இந்த ஆறு குறிப்புகளைக்கொண்டு ஜீவனின் வளர்ச்சியை அளப்பது சரியானதல்ல.

இப்போது இவையெல்லாவற்றிற்குப்பிறகு, ஜீவனின் வளர்ச்சி என்றால் என்ன? இந்த முறை நேர்மறையான பக்கத்திலிருந்து, இந்தக் காரியத்தை நாம் மீண்டும் பரிசீலிக்கவேண்டிய தேவையிருக்கிறது.

## I. ஜீவனின் வளர்ச்சி தேவனுடைய மூலக்கூறின் அதிகரிப்பு

தேவனுடைய மூலக்கூறின் அதிகரிப்பு என்றால் தேவன் தாமே இன்னும் அதிகமாக நம்முள் இழைந்திணைக்கப்பட்டு, அதாவது

நம்மால் ஆதாயப்படுத்தப்பட்டு நம் மூலக்கூறாக மாறியிருக்கிறார் என்று அர்த்தமாகும். ஜீவன் என்றால் தேவனே, மேலும் ஜீவனை அனுபவமாக்குவது தேவனை அனுபவமாக்குவது என்று நாம் கூறியிருக்கிறோம்; ஆகையால் ஜீவனில் வளர்ச்சி என்பது தேவனுடைய முழுமையான வளர்ச்சிக்கென்று நிரப்பப்படும்படி (எபே. 3:19) தேவத்துவத்திலுள்ள சகலமும் நம்மில் பூரணமாக உருவாக்கப்படும்வரை தேவனுடைய மூலக்கூறு நம்மில் அதிகரிப்பதாகும்.

## II. ஜீவனின் வளர்ச்சி கிறிஸ்துவின் வளர்ச்சியின் அதிகரிப்பு

ஜீவன் தேவனாகவே இருக்கும்போது தேவன் நம் ஜீவனாக இருப்பது கிறிஸ்துவாகும்; ஆகையால் கிறிஸ்துவே நம் ஜீவனாக இருக்கிறார் என்று வேதாகமம் கூறுகிறது. நாம் மீண்டும் பிறப்பிக்கப்படுகிறபோது, நம் ஜீவனாக இருக்கும்படி கிறிஸ்து மீண்டும் நம்முள் பிறக்கிறார் என்று நாம் கூறமுடியும். ஆனால் முதலில் நாம் அதனைப் பெறுகிறபோது, அந்த ஜீவன் இன்னும் மிக இளையதாகவும் வளர்ச்சியடையாமலும் இருக்கிறது, இதற்கு நம்முள் கிறிஸ்துவின் வளர்ச்சி மிகச்சிறியதாக இருக்கிறது என்று அர்த்தமாகும். நாம் கிறிஸ்துவை நேசித்து, கிறிஸ்துவைத் தேடி, நம்முள் இன்னும் அதிகமாக வாழ கிறிஸ்துவை அனுமதித்து அதனால் அவர் நம்மை ஆதாயப்படுத்தும்போது, கிறிஸ்துவின் வளர்ச்சி படிப்படியாக நம்முள் அதிகரிக்கிறது. இதுவே ஜீவனின் வளர்ச்சி. இந்த ஜீவன் நம்மில் வாழும் கிறிஸ்துவாக இருப்பதால், இந்த ஜீவனின் வளர்ச்சி நம்முள் கிறிஸ்துவினுடைய வளர்ச்சியின் அதிகரிப்பாகும்.

## III. ஜீவனின் வளர்ச்சி பரிசுத்த ஆவியினுடைய தளத்தின் விரிவாக்கம்

ஜீவன் தேவன் மட்டுமல்ல, அது கிறிஸ்து, மேலும் பரிசுத்த ஆவியுமாகும் என்று நாம் குறிப்பிட்டிருக்கிறோம். ஜீவனை அனுபவமாக்குவது பரிசுத்த ஆவியை அனுபவமாக்குவது என்று நாம் சொல்லலாம்; ஆகையால் ஜீவனில் வளர்வது என்பதின் அர்த்தம் பரிசுத்த ஆவி நம்முள் அதிகமான தளத்தை ஆதாயப் படுத்த அனுமதிப்பது என்பதுமாகும். நம்முள் பரிசுத்த ஆவியின் வேலைசெய்தலை அவசரமாக நாம் நாடி அபிஷேகமாக நம்முள் இருக்கும் பரிசுத்த ஆவியின் போதனைக்குக் கீழ்ப்படிவதில் கவனமாயிருக்கும்போது, பரிசுத்த ஆவி தம் தளத்தை விசாலமாக விரிவாக்க முடியும்; இவ்வாறு நம்முள் இருக்கும் ஜீவன் ஒரு மாபெரும் அளவுக்கு வளரும். ஆகையால் ஜீவனுடைய

வளர்ச்சியின் அர்த்தம் பரிசுத்த ஆவியின் தளம் நம்முள் விரிவடைந் திருக்கிறது என்பதுமாகும்.

## IV. ஜீவனின் வளர்ச்சி மனித மூலக்கூறின் குறைவு

ஒரு விசுவாசிக்குள் தேவனுடைய மூலக்கூறு அதிகரித்தால், கிறிஸ்துவின் வளர்ச்சி அதிகரித்தால், பரிசுத்த ஆவியின் தளம் விரிவடைந்தால், அப்போது அவனுடைய ஜீவன் வளர்ந்திருக்கிறது என்று மேலேயுள்ள மூன்று குறிப்புகள் வெளிப்படுத்துகின்றன. இந்தக் குறிப்புகளெல்லாம் தேவனுடைய பக்கத்திலிருந்து பேசுகின்றன. இப்போது நம் பக்கத்திலிருந்து நாம் பேசுவோம். முதலாவதாக ஜீவனின் வளர்ச்சி என்பது மனித மூலக்கூறின் குறைவு. மனித மூலக்கூறின் குறைவு என்றால் மனிதனில் ஆதாம், அதாவது பழையபடைப்பின் குறைவு ஆகும்; இதன் பொருள் மனித வாசனையின் குறைவு மற்றும் தேவ வாசனையின் அதிகரிப்பு என்பதுமாகும். சில சகோதரர்கள் மிக ஆர்வமிகுதியாக இருக் கிறார்கள்; அதே வேளையில், சில சகோதரிகள் மிக மென்மையாக இருக்கிறார்கள்; புறம்பான தோற்றத்தில் இவர்கள் ஜீவனில் வளர்ச்சி அடைந்திருப்பதைப்போல தோன்றுகிறது; இருப்பினும் அவர்கள் மனித மூலக்கூறு, அதாவது மனித வாசனையினால் நிறைந்திருக்கிறார்கள்; தேவனுடைய மூலக்கூறை நீங்கள் தொடும்படி அல்லது தேவனுடைய வாசனையை உணரும் படிச்செய்ய அவர்களால் முடியாது. ஆகையால் ஒரு சகோதரனோ சகோதரியோ ஜீவனில் வளர்ந்திருக்கிறார்களா என்பதை நாம் பார்க்க விரும்பினால், அவர்கள் புறம்பாக எப்படி நடந்துகொள்ளுகிறார்கள், எவ்வளவு பக்தியாயும் வைராக்கியமாயும் இருக்கிறார்கள் அல்லது எவ்வளவு அறிவு, வரம், வல்லமையைக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மட்டும் நாம் கவனித்தால் போதாது. மாறாக இந்தக் காரியங் களில் தேவனுடைய மூலக்கூறின் அதிகரிப்பு இருக்கிறதா அல்லது மறுபக்கத்தில் மனித மூலக்கூறு இன்னும் அதிகமாக இருக்கிறதா என்று நாம் பகுத்துணர வேண்டும். மனித மூலக் கூறின் குறைவு தெய்வீக மூலக்கூறின் அதிகரிப்பாகும். ஒரு விசுவாசி உண்மையிலேயே ஜீவனில் வளர்ந்திருப்பானேயானால், அவனுடைய பேச்சு, செயல்கள், வாழ்க்கை, வேலை ஆகியவை களெல்லாம், தனக்கேற்றபடி இல்லாமல் தேவனுக்கேற்றபடி, தன் சொந்த அறிவுத்திறனால் இல்லாமல், தேவனுடைய கிருபையால் இருக்கிறது என்ற உணர்வைக் கொடுக்கவேண்டும். ஆகையால் அவைகள் மனிதனுடைய வாசனையைக் கொண்டிராமல், அதிகமாக தேவனுடைய வாசனையைக் கொண்டிருக்கிறது; இதன் அர்த்தம் மனித மூலக்கூறு குறைந்திருக்கிறது, தேவனுடைய மூலக்கூறு அதிகரித்திருக்கிறது என்பதுமாகும். இவ்வாறு, ஜீவனின்

வளர்ச்சி என்பது தேவனுடைய மூலக்கூறின் அதிகரிப்பு மட்டு மல்ல ஆனால் மனிதனுடைய மூலக்கூறின் குறைவுமாகும்.

இந்தக் குறிப்பு மிக முக்கியமாகும்; இருப்பினும் சகோதர சகோதரிகள் இதனைப் புரிந்துகொள்வது மிகக்கடினமாகும். வார்த்தையின் ஊழியத்தில் கர்த்தரை சேவிக்கிறவர்களாகிய நாங்கள் பத்து வருடங்களுக்கு மேலாக இந்த வழியில் தொடர்ந்து பேசிக்கொண்டிருந்தாலும், இன்னும் இந்தக் குறிப்பை சகோதர சகோதரிகளுக்குள் எங்களால் பேசமுடியவில்லை. கருத்தொற்று மையில் எல்லாரும் தங்கள் தலைகளை அசைக்கும்வரை சில நேரங்களில் நாங்கள் பேசியிருக்கிறோம்; இருப்பினும் நடைமுறை வழக்கத்திற்கு வந்தபோது, அந்த சகோதர சகோதரிகள் இன்னும் நடத்தையில் முன்னேற்றம், அல்லது சேவையில் வைராக்கியம் போன்றவைகளே ஜீவனில் வளர்ச்சி இருக்கிறதா என்பதை தீர்மானிப் பதற்கான தரங்களாகக் கருதினார்கள். ஒரு முறை ஒரு குறிப்பிட்ட இடத்திலுள்ள சபையின் பொறுப்புள்ள சகோதரர்கள் "உறுதியாகவும், மென்மையாகவும் பேசுகின்ற, நடக்கிற ஒரு சகோதரி இருக்கிறாள்; அவள் மிக அமைதியானவள், மென்மையானவள், உண்மையிலேயே ஆவிக்குரியவள், ஜீவன் நிறைந்தவள்" என்று ஒருமித்த குரலில் என்னிடம் கூறினார்கள். அப்போது நான் அவர்களிடம் "இது ஆவிக் குரியவர்களாயிருப்பது அல்லது ஜீவனைக்கொண்டிருப்பது என்று அழைக்கப்பட்டால், அதைவிட கத்தோலிக்க சபையிலுள்ள மரியாளின் சிலை அதிக ஆவிக்குரியதாகவும் ஜீவன் நிறைந்ததாகவும் இருக்கிறது, ஏனென்றால் அது அவளைவிட மிக மென்மையாகவும் அமைதியாகவும் இருக்கிறது" என்று கூறினேன். அவளுடைய அமைதியும், மென்மையும், மனித வாசனையும், மனித மூலக் கூறும் நிறைந்ததாக இருந்தது; அவை முற்றிலும் மனித முயற்சி யின் உற்பத்தியாக இருந்தது. ஜீவனில் ஒரு விசுவாசியின் நிலைமையைக் கண்டறிய நாம் விரும்பும்போது, அவன் புறம்பாக என்ன வெளிப்படுத்து கிறான் என்பதின்படி நாம் தீர்மானிக்க முடியாது; அவன் வெளிப்படுத்துவதிலுள்ள வாசனையையும் மூலக்கூறையும் நாம் உணர்ந்தறிய வேண்டும். அது தேவனுடைய வாசனையா, மனிதனுடைய வாசனையா? அது தேவனுடைய மூலக்கூறா, மனிதனுடைய மூலக்கூறா? அநேக நேரங்களில் நம் உணர்வு துல்லியமாக இல்லாமலிருக்கலாம், ஆனால் வாசனை துல்லியமாக இருக்கும். ஒரு துண்டுத் துணி மிக சுத்தமாக இருப்பதைப்போல் உங்களுக்குத் தோற்றமளிக்க வாய்ப்பு இருக்கிறது, ஆனால் அதை நீங்கள் எடுத்து முகர்ந்து பார்த்தால் அது துர்நாற்றத்தால் நிறைந்திருக்கிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்வாறு நீங்கள் ஒரு மனிதனுக்குள் இருக்கும்

ஜீவனின் நிலைமையை மதிப்பிட விரும்பினால், அது தேநீரை முன்சுவைத்து பார்ப்பதைப் போன்றதாகும்; சிறிது சுவைத்தவுடனே அதன் வாசனை என்ன என்பதை நீங்கள் சொல்லிவிட முடியும்.

## V. ஜீவனின் வளர்ச்சி இயற்கை ஜீவனின் உடைபடுதல்

ஒரு விசுவாசியின் இயற்கை ஜீவனின் உடைபடுதலும் ஜீவனில் அவனுடைய வளர்ச்சியைப்பற்றிய ஒரு நிரூபண மாகும். இயற்கை ஜீவனின் உடைபடுதல் என்பதின் அர்த்தம் நம் சொந்த வல்லமை, ஆற்றல், கண்ணோட்டம், முறை ஆகியவை உடைக்கப்படும்படியாக பரிசுத்த ஆவியாலும், சிலுவையாலும் கையாளப்படுகின்றன என்பதாகும். எடுத்துக் காட்டாக, முன்பு தன் நடத்தையில், செயலில், கர்த்தருக்கான தன் வேலையில், சபையைத் தான் நிர்வகிப்பதில், தன் சொந்த இயற்கையான வல்லமை, ஆற்றல், கண்ணோட்டம், முறை ஆகியவற்றைச் சார்ந்திருந்த ஒரு சகோதரனைப் பரிசிலிப் போம். எல்லாக் காரியங்களிலேயும் அவன் தன் சொந்த வல்லமையையும், திறமையையும் சார்ந்திருந்தான்; அவன் தன் சொந்தக் கருத்தையும், முறையையும் பயன்படுத்தினான். பின்னர், அவன் சூழ்நிலையின்மூலம் சிலுவையினால் கையாளப்பட்டு, பரிசுத்த ஆவியினால் ஒழுங்குபடுத்தப்பட்டான், இதனால் அவனுடைய இயற்கை ஜீவன் ஓரளவு உடைக்கப்பட்டது. இப்போது அவன் வேலைசெய்யும்போதும், காரியங்களை மேலாண்மைசெய்யும் போது, அவன் தன் சொந்த வல்லமை, ஆற்றல், கண்ணோட்டம், முறை ஆகியவற்றை நம்பமாட்டான். இயற்கை ஜீவன் உடைக்கப்பட்ட இத்தகைய ஒரு மனிதன், இனி ஒருபோதும் தன் இயற்கை ஜீவனின் வல்லமையைச் சார்ந்திருக்கக்கூடாது அல்லது தன் இயற்கை ஜீவனால் வாழக்கூடாது என்பதைக் கற்றுக் கொள்கிறான், மேலும் தேவனுடைய ஜீவனின் வல்லமையைத் தொடர்ச்சியாகச் சார்ந்திருந்து, தேவனுடைய ஜீவனால் வாழ்கிறான். இந்த வழியில் அவனுக்குள் இருக்கும் ஜீவன் வளரமுடியும். இவ்வாறு ஜீவனின் வளர்ச்சி என்பது இயற்கை ஜீவனின் உடைபடுதலாகும்.

## VI. ஜீவனின் வளர்ச்சி ஆத்துமாவின் ஒவ்வொரு பகுதியும் கீழ்ப்படுத்தப்படுதல்

பாவத்திலிருந்து விடுதலை என்றால் என்ன என்பதைப்பற்றி நாம் பேசும்போது, மாம்சம் சிலுவையில் அறையப்படுவதற்கு நாம் கவனம் செலுத்தவேண்டும்; ஜீவனின் வளர்ச்சி என்றால் என்ன என்பதைப்பற்றி நாம் பேசும்போது, ஆத்துமா கீழ்ப்படுத்தப் படுவதற்கு நாம் கவனம்செலுத்த வேண்டும். நேர்மறையாகப்

பேசுவதனால், ஜீவனின் வளர்ச்சி என்பது பரிசுத்த ஆவியின் தளம் விரிவடைவதாகும்; எதிர்மறையாகப் பேசுவதானால், அது ஆத்துமாவின் ஒவ்வொரு பகுதியும் கீழ்ப்படுத்தப்படுவதாகும். இயற்கை ஜீவனால் வாழும் ஒவ்வொருவரும் ஆத்துமாவால் வாழ்கிறார்கள். ஆத்துமாவுக்கு மனம், உணர்ச்சி, சித்தம் ஆகிய மூன்று பகுதிகள் இருக்கின்றன என்பது நம்மெல்லாருக்கும் தெரியும். ஆகையால் ஆத்துமாவால் வாழ்வதென்றால் மனதால், உணர்ச்சியால், சித்தத்தால் வாழ்வதாகும். மனிதனுடைய ஆத்துமாவின் எந்தப்பகுதி குறிப்பிட்ட விதத்தில் பலமாக மேலோங்கியதாக இருக்கிறதோ, அந்தப்பகுதியைக் கொண்டே அந்த மனிதன் வாழ்கிறான்; காரியங்களை எதிர்கொள்ளும்போது அவைகளோடு இடைபட அவன் நிச்சயமாக அந்தப் பகுதியைப் பயன்படுத்துகிறான். இது ஒரு மனிதன் கவனக்குறைவாக சுவற்றில் முட்டுவதைப்போன்றது என்று ஒருமுறை சகோதரன் நீ கூறினார். அவன் அவ்வாறு செய்யும்போது, அவனுடைய மூக்குதான் எப்போதும் முதலில் முட்டும். உடலில் எந்தப் பகுதி வெளியே நீண்டிருக்கிறதோ, அந்தப் பகுதியே சுவற்றில் முதலாவது முட்டும். நம் ஆத்துமாவின் நிலைமை இதைப்போலதான் இருக்கிறது. குறிப்பாக ஒரு மனிதனின் மனம் பலமாக இருந்தால், அவன் ஏதோவொன்றை எதிர்கொள்ளும்போதெல்லாம் அவனுடைய மனம் நிச்சயமாக முதலில் வரும். குறிப்பாக அவனுடைய உணர்ச்சி துடிப்புடன் இருந்தால், அவன் ஏதோவொன்றை எதிர்கொள்ளும்போதெல்லாம் அவனுடைய உணர்ச்சி முதலாவதாக அசையும். குறிப்பாக அவனுடைய சித்தம் பலமாக இருந்தால், அவன் ஏதோவொன்றை எதிர்கொள்ளும்போதெல்லாம் நிச்சயமாக அவனுடைய சித்தம் முன்னின்று நடத்தும்.

ஒரு மனிதன் சிலுவையின் இடைபடுதல்களைப் போதுமான அளவுக்குப் பெற்றிருந்தால், அவனுடைய ஆத்துமாவின் ஒவ்வொரு பகுதியும் கீழ்ப்படுத்தப்பட்டிருக்கும். அவனுடைய மனம், உணர்ச்சி, சித்தம் ஆகியவையெல்லாம் உடைக்கப்பட்டு, கீழ்ப்படுத்தப்பட்டிருக்கும்; அவை முன்புபோல் மேலோங்கி நிற்பதில்லை. ஏதோவொன்றை அவன் எதிர்கொள்ளும்போதெல்லாம், அவன் தன் மனதைப் பயன்படுத்த பயப்படுகிறான், தன் உணர்ச்சியைப் பயன்படுத்த பயப்படுகிறான், தன் சித்தத்தைப் பயன்படுத்த பயப்படுகிறான். மனம் முதலில் வருகிறதில்லை; ஆவியே முதலில் வருகிறது. உணர்ச்சி முதலில் அசைகிறதில்லை; ஆவியே முதலில் அசைகிறது. சித்தம் முன்னின்று நடத்துவதில்லை; ஆவியே முன்னின்று நடத்துகிறது. ஆத்துமா முன்னின்று நடத்துவதை நாம் அனுமதிக்கக்கூடாது, மாறாக ஆவியை தலையின் ஸ்தானத்தில் இருக்கவிடவேண்டும்

என்பது இதன் அர்த்தமாகும்; நாம் ஆத்துமாவால் வாழக்கூடாது, மாறாக ஆவியினால் வாழவேண்டும். அப்போது இப்படிப்பட்ட மக்கள் ஜீவனின் வளர்ச்சியைக் கொண்டிருக்கிறார்கள். இவ்வாறு ஜீவனில் வளர்வது என்பது ஆத்துமாவின் ஒவ்வொரு பகுதியையும் கீழ்ப்படுத்துவதாகும்.

ஜீவனின் வளர்ச்சி என்றால் என்ன என்பதைப்பற்றி இந்த பன்னிரண்டு குறிப்புகளைப் பார்த்த பின்னர், நிஜமான ஜீவனின் வளர்ச்சி என்றால் நம் பக்கத்தில் குறைக்கப்படுகிற, உடைக்கப் படுகிற மற்றும் கீழ்ப்படுத்தப்படுகிற காரியமென்றும், தேவனுடைய பக்கத்தில், அதிகரிக்கிற, வளர்கிற, மற்றும் விரிவடைகிற காரியமென்றும் நாம் அறிகிறோம். இவையெல்லாம் ஜீவனைப் பின்தொடர்வதில் நாம் கொண்டிருக்க வேண்டிய அடிப்படையான அறிவு என்று நாம் கூறலாம். இது வேறொரு திரட்டில்* நாம் பரிசீலித்திருக்கிற ஆவிக்குரிய அனுபவத்தோடு மிகவும் அதிகமாக தொடர்புடையதாகவும் இருக்கிறது. ஆகையால் இந்த எல்லாக் குறிப்புகளையும் முழுமையாக கிரகித்து, துல்லியமாக அறியவேண்டும்.

*ஜீவனின் அனுபவம், லிவிங் ஸ்ட்ரீம் மினிஸ்ட்ரீயின் வெளியீட்டாளர்களால் வெளியிடப்பட்டது.

அத்தியாயம் பதிமூன்று

# ஜீவனின் வடிகால்

இப்போது நாம் ஜீவனின் அறிவைப்பற்றிய பதிமூன்றாவது முக்கியமான குறிப்பாகிய ஜீவனின் வடிகாலைப்பற்றிப் பார்க்கலாம். நாம் ஜீவனின் வழியை அறிந்து ஜீவனின் வளர்ச்சியைப் பின்தொடர விரும்பினால், ஜீவனின் வடிகாலைப்பற்றி, அதாவது நம்முள்ளிருந்து எந்த வழியில் ஜீவன் வெளியேறுகிறது என்பதைக் குறித்து நாம் தெளிவாக இருக்கவேண்டும்.

இந்த அத்தியாயத்திலுள்ள ஒவ்வொரு முக்கியமான குறிப்பும் அநேகமாக முந்தைய அத்தியாயங்களில் ஏற்கெனவே குறிப்பிடப் பட்டுள்ளன. இப்போது நாம் மீண்டும் ஒவ்வொரு குறிப்பையும் தனித்தனியாகப் பரிசீலித்துப் பார்க்கலாம்.

## I. ஜீவன் இருக்கும் இடம்—ஆவி

தேவன் தம் ஆவியின்மூலம் நம்மை மறுபடிபிறப்பிக்கிறார், மேலும் இதன்மூலம் அவருடைய ஜீவன் நம் ஆவிக்குள் கொண்டு வரப்படுகிறது; ஆகையால் நம் ஆவியே ஜீவன் இருக்குமிடமாகும்.

தேவனுடைய ஆவியில் இருக்கிற தேவனுடைய ஜீவன் நம் ஆவிக்குள் நுழையும்போது, இவை மூன்றும் ஒன்றாகக் கலந்திணைந்து, ரோமர் 8:2 அழைக்கிற "ஜீவனின் ஆவியாக" மாறுகிறது. எனவே நம்முள்ளிருக்கிற இந்த ஒன்றில் மூன்றான ஜீவனின் ஆவியே ஜீவன் இருக்குமிடமாகும்.

## II. ஜீவனின் வெளிவாயில்—இருதயம்

*ஜீவவிதி* என்ற அத்தியாயத்தில், இருதயம் ஜீவனின் நுழைவாயிலாகவும், வெளிவாயிலாகவும், திருப்பானாகவும் இருக்கிறது என்று நாம் கூறினோம்; ஆகையால் இருதயம் ஜீவனின் வளர்ச்சியோடு மிக நெருக்கமாகத் தொடர்புடையது.

வேதாகமத்தில் இருதயம் ஜீவனின் வளர்ச்சியோடு தொடர்புடையது என்று தெளிவாகக் கூறுகிற இடம் மத்தேயு 13 ஆகும். ஜீவன் விதை என்றும் இருதயம் நிலம் என்றும் அங்கு கர்த்தர் நமக்குக் கூறுகிறார்; ஆகையால் இருதயமே ஜீவன் நம்முள்ளிருந்து வெளியே வளருகிற இடமாக இருக்கிறது. ஜீவன் நம்முள்ளிருந்து வெளியே வளரமுடியுமா இல்லையா என்பது முற்றிலும் நம் இருதயத்தின் நிலைமையைச் சார்ந்திருக்கிறது. இருதயம் சரியானதாக அல்லது நேர்மையானதாக இருந்தால் ஜீவன் வெளியே வளர முடியும். ஆனால் இருதயம் சரியில்லாமல் அல்லது

நேர்மை யற்றதாக இருந்தால் ஜீவன் வெளியே வளரமுடியாது. ஆகவே ஜீவன் நம்முள்ளிருந்து வெளியே வளரவேண்டுமென்று நாம் விரும்பினால், நம் இருதயத்தோடு இடைபட வேண்டும்.

"இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" என்று மத்தேயு 5:8 கூறுகிறது. நம் இருதயம் தூய்மையாக இருக்கவேண்டுமென்று இது நமக்குக் கூறுகிறது. நம் இருதயத்தோடு இடைபடுவதென்றால், நம் இருதயத்தின் தூய்மையோடு இடைபடுவதாகும், அதாவது நம் இருதயம் தேவனை விரும்பவும் தேவனை நேசிக்கவும் தேவனைத் தவிர வேறு எந்த அன்பையோ, விருப்பத்தையோ கொண்டிராமல் எளிமையில் தேவனைச் சார்ந்துகொள்ளவும் செய்வதாகும். நம் இருதயம் இடைபடுத்தப்பட்டு தூய்மையாகும்போது, அது சரியானதாகவும் நேர்மையானதாகவும் இருக்கிறது. இந்த முறையில் ஜீவன் வெளியே வளரமுடியும்.

## III. ஜீவன் செல்லும் பாதை

இருதயம் ஜீவனின் வடிகாலாக, அதாவது ஜீவன் வெளியே வளருகிற இடமாக இருந்தாலும், ஜீவன் இருதயத்திலிருந்து வெளியே வளரவேண்டுமானால், அது இருதயத்தின் நான்கு பகுதி களான மனச்சாட்சி, உணர்ச்சி, மனம், சித்தம் ஆகிய பகுதிகளினூ டாகக் கடந்துசெல்ல வேண்டும். ஆகையால் இந்த நான்கு பகுதிகளும் ஜீவன் கடந்துசெல்லுகிற இடங்களாக மாறுகின்றன. ஆகையால் இந்த நான்கு பகுதிகளின் ஒவ்வொன்றிற்கும் இடையே யுள்ள உறவையும், ஜீவனின் வெளிவளர்ச்சியையும் நாம் பார்க்கவேண்டும்.

### A. மனச்சாட்சி

ஜீவன் நம்முள்ளிருந்து வெளியே வளரும்போது, அது நம் மனச்சாட்சியினூடாகக் கடந்துசெல்லுகிறது. மனச்சாட்சி குற்ற மற்றதாக இருக்கவேண்டும். மனச்சாட்சியோடு இடை படுவதென்றால் மனச்சாட்சியை குற்றமற்றதாக வைத்துக் கொள்வதாகும்.

நாம் இரட்சிக்கப்படுவதற்கு முன்பு பாவிகளாக இருந்த போது, தேவனை பலமுறைப் புண்படுத்தினோம். மேலும் நம் நடத்தை யாலும் செயலாலும் மனிதர்களிடம் தவறாக நடந்துகொண்டோம். நம் இருதயம் அசுத்தமாகவும் வஞ்சிக்கிறதாகவும் இருந்தது. ஆகையால் மனச்சாட்சி இருளடைந்து குற்றங்களாலும் கசிவுகளாலும் நிறைந்து மிகவும் அசுத்தமாயிருந்தது. எனவே நாம் இரட்சிக்கப்பட்டவுடனே நம் மனச் சாட்சியோடு இடைபடவேண்டும். நாம் இரட்சிக்கப்பட்டவுடனே முதலாவது,

கடந்தகாலக் கடன்களைத் திருப்பிச் செலுத்துதல், நம் பழைய வாழ்க்கையை சுத்தம்செய்தல், ஆகியவைபோன்ற நாம் கற்றுக்கொண்ட பாடங்களின் பெரும்பகுதி, கர்த்தரைப் பின்தொடர ஆரம்பித்ததிலிருந்து மனச்சாட்சி சுத்தமாகவும், குற்றமில்லாமலும் இருப்பதற்கு, அதோடுகூட போதுமான அளவுக்கு இடைபட காரணமாயிருந்தது. அதன்பிறகு கர்த்தரைப் பின்தொடர்கிற நம் வாழ்க்கை முழுவதும் சில நேரங்களில் நாம் தோற்றுப்போய் பலவீனமடைந்து, பாவத்திலும் மாம்சத்திலும் விழுந்து அல்லது உலகத்தால் கறைபடுத்தப்பட்டும், ஆக்கிரமிக்கப்பட்டும், இவ்வாறு நம் மனச்சாட்சி குற்றங்களையும் கசிவுகளையும் மீண்டும் கொண்டிருப்பதற்கு காரணமாகியது. ஆகையால் குற்றங்களிலிருந்து தொடர்ச்சியாக விடுதலையாகி காக்கப்படும்படி நம் மனச்சாட்சியோடு நாம் தொடர்ச்சியாக இடைபடவேண்டும். *"நீ நல்மனச்சாட்சி உடையவனாயிரு, இந்த நல்மனச்சாட்சியை சிலர் தள்ளிவிட்டு விசுவாசமாகிய கப்பலைச் சேதப்படுத்தினார்கள்"* என்று *1 தீமோத்தேயு 1:18-19* கூறுகிறது. மனச்சாட்சியோடு இடைபடுவது அதிகமாக ஜீவனின் வளர்ச்சியோடு தொடர்புடையது என்று இது நமக்குக் காட்டுகிறது. எப்போதெல்லாம் நாம் மனச்சாட்சியை ஒதுக்கித்தள்ளி, மனச்சாட்சியை புறக்கணிக்கிறோமோ, அப்போதெல்லாம் ஜீவன் அடைபட்டு, சிறைபடுத்தப்படுகிறது. ஆகையால் நாம் ஜீவனில் வளர விரும்பினால், அதாவது நம்முள் ளிருக்கிற ஜீவன் ஒரு வடிகாலைக் கொண்டிருந்து நம் இருதயத்திலிருந்து வெளியே வளரவேண்டும் என்று விரும்பினால், நாம் மனச்சாட்சியோடு இடைபடுவது தவிர்க்க முடியாததாகும்.

மனச்சாட்சியோடு இடைபடுவதின் அர்த்தம் மனச்சாட்சியின் எல்லாக் குற்றங்களோடும், இளைப்பாறுதலற்ற, அமைதியற்ற உணர்வுகளோடும் இடைபடுவதாகும். தேவனுக்கு முன்பாக, நாம் பாவத்தினால் அநீதியுள்ளவர்களாக மாறினாலோ, உலகத்தின் ஒரு பகுதி நம் இருதயத்தை ஆக்கிரமித்ததால் அசுத்தமானாலோ, நம் மனச்சாட்சி நம்மை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறது. இவ்வாறு தேவனுக்கு முன்பாக குற்றங்கள், அமைதியின்மை போன்ற உணர்வுகளை ஏற்படுத்துகிறது. நம் மனச்சாட்சியோடு இடைபட விரும்பி னால், மனச்சாட்சியிலுள்ள இப்படிப்பட்ட உணர்விற்கு நாம் கவனம்செலுத்தவேண்டும். ஆகையால் மனச்சாட்சியோடு இடைபடுவதென்றால், மனச்சாட்சியிலுள்ள இந்த உணர்வுக ளோடு இடைபடுவதாகும். நாம் அவைகளோடு முற்றுமுடிய இடைபடுகிறபோது, நம் மனச்சாட்சி குற்றங்களையோ, குற்றப் படுத்தப்படுதலையோ கொண்டிராமல் மிகவும் சுத்தமாகவும் பாதுகாப்பாகவும் இருக்கமுடியும். இந்த வழியில் ஜீவன்

நம்முள்ளிருந்து இயல்பாக வெளியே வளரமுடியும்.

நம் உண்மையான அனுபவத்தில், மனச்சாட்சி முழுவதும் சுத்தமாகும்படி அதனோடு இடைபடும்போது அந்தக் காரியத்தை அளவுக்கு மீறி செய்கிற ஒரு சூழ்நிலை ஏற்படு கிறது. மனச்சாட்சி இடைபடுத்தப்பட்டு இதனால் மனச்சாட்சி அளவுக்கதிகமான உணர்வுள்ளதாகி ஏறக்குறைய பலவீன மாகும் அளவுக்குச் சென்றுவிடுகிறது. இந்தச் சூழ்நிலையில் அசையவோ, செயல்படவோ முடியாது. ஒவ்வொரு அசை வுடனும் ஒரு குற்ற உணர்வு வருகிறது. ஒவ்வொரு செயலு டனும் இளைப்பாறுத லின்மையின் உணர்வு வருகிறது. இது மனச்சாட்சியோடு இடைபடுவதில் வெகுதூரம் செல்வதைப்போல் தோன்றுகிறது. இருப்பினும் மனச்சாட்சியோடு இடைபடுவதைக் கற்றுக்கொள்கிற ஆரம்ப நிலையில் இது அவசியமாக இருக்கிறது.

என் மனச்சாட்சியோடு அதிதீவிரமாக இடைபட்ட காலம் 1935-ம் ஆண்டாகும். அந்த நேரத்தில் பித்துப்பிடித்தவனைப்போல் இருந்தேன். எடுத்துக்காட்டாக நான் மற்றவர்களுடைய வீடுகளுக்குச் செல்லும்போது, வாசலில் நுழைந்தபிறகு ஒருவரும் வந்து கதவைத் திறக்காவிட்டால், நான் கதவைத் திறந்து அதற்குள் நுழையத் துணியமாட்டேன். நான் அறைக்குள் நுழைந்தவுடனே ஒருவரும் உட்காரும்படி என்னை அழைக்காவிட்டால், நான் உட்காரத் துணியமாட்டேன். அப்படி உட்கார்ந்துவிட்டால், மற்றவர்களுடைய ஆளுமையை மீறிவிட்டதாக நான் எனக்குள் உணர்வேன். எனக்குமுன் செய்தித்தாள்கள் இருந்தாலும், ஒருவரும் அதை படிக்கும்படி என்னிடம் கூறாவிட்டால், நான் அவைகளைப் படிக்கத் துணியமாட்டேன். அப்படிச் செய்தால் நான் மற்றவர்க ளுடைய ஆளுமையை மீறிவிட்டதாக எனக்குள் உணர்வேன். அந்த நேரத்தில் நான் கடிதம் எழுதும்போது, அதை மூன்று அல்லது நான்கு முறையாவது எழுதவேண்டியிருக்கும். முதல் முறை எழுதும்போது, அதில் சில வார்த்தைகள் சரியாக இல்லை என்று நினைப்பேன், எனவே நான் அதைக் கிழித்து விட்டு மீண்டும் எழுதுவேன்; இரண்டாவதுமுறை எழுதியபிறகு, சில வார்த்தைகள் பொருத்தமாக இல்லை என்று நான் மீண்டும் நினைப்பேன், எனவே நான் அதை கிழித்துவிட்டு மூன்றாவது முறை எழுதுவேன். மற்றவர்களிடம் பேசவும் துணியமாட்டேன். ஒருவேளை பேசினால், நான் கூறியது சரியில்லை, அல்லது அதிகம் பேசிவிட்டேன் போன்ற சில தவறுகள் அதில் இருப்பதாக உணர்வேன். நான் அதோடு இடைபடாதவரை என்னால் அமைதியாக இருக்கமுடியாது.

ஒருமுறை ஷங்காயில் ஒரு சிறிய அறையில் வேறொரு சகோதரனோடு தங்கியிருந்தேன். நாங்கள் எங்கள் முகத்தைக்

கழுவுவதற்கு, எங்கள் அறைக்கு தண்ணீர்கொண்டுவந்துதான் கழுவவேண்டும். அந்த அறை மிகவும் குறுகியதாக இருந்தது; நாங்கள் மிகக் கவனமாயிருந்தாலும்கூட, தண்ணீர் கொண்டு வரும்போது மற்றவர்களுடைய படுக்கையின்மேல் சில துளிகள் தெறிக்காமல் கொண்டுவரமுடியாது. அந்த நேரத்தில், நான் பலமுறை அந்தச் சகோதரனுடைய படுக்கையின்மேல் தண்ணீரைத் தெளித்துவிடுவேன். கொஞ்ச நேரத்திற்குப்பிறகு அந்தத் தண்ணீர் உலர்ந்துவிடும், கண்டிப்பாகப் பேசினால், அதை ஒரு பாவமாகக் கருதமுடியாது. இருப்பினும் என் மனச்சாட்சி அமைதியாக இருக்காது மற்றும் ஒரு குற்ற உணர்வைக்கொண்டிருக்கும். அப்போது "சகோதரரே, உங்கள் படுக்கையின்மேல் சில துளி தண்ணீரைத் தெளித்துவிட்டேன், தயவுசெய்து என்னை மன்னித்து விடுங்கள்" என்று நான் அவரிடம் அறிக்கைசெய்து மன்னிப்புக் கேட்பேன். நான் இப்படி அறிக்கைசெய்தாலும், மீண்டும் என் மனச்சாட்சி அமைதியாக இருக்காது. நிச்சயமாக தெளித்தது மூன்று துளி தண்ணீர் மட்டும்தான்; ஆனால் நான் எவ்வாறு "சில துளிகள்தான்" என்று கூறமுடியும்? எனவே மீண்டும் அறிக்கை செய்வேன். அன்று மத்தியானத்தில், நான் கொஞ்சம் கவனக்குறை வாக இருந்து, அவருடைய படுக்கையின்கீழ் இருந்த அவருடைய காலணியை மிதித்துவிட்டேன். மீண்டும் என் மனச்சாட்சி என்னை விடவில்லை, நான் மீண்டும் அறிக்கைசெய்தேன். தினமும் காலையிலிருந்து இரவுவரை இந்த வகையான பாவங்களோடு இடைபட்டுக் கொண்டிருந்தேன். இறுதியாக அந்தச் சகோதரன் மிகவும் பொறுமையிழந்து விட்டார். நான் மேலும் அறிக்கை செய்வதற்கு சங்கடப்பட்டுக்கொண்டிருந்தேன். இருப்பினும் நான் அறிக்கையிடாவிட்டால், என்னால் அமைதியாக இருக்கமுடியாது. ஒரு நாள் மீண்டும் ஒரு தவறு நடந்துவிட்டது; நான் அவரிடம் அறிக்கைசெய்தால், அவர் தன் பொறுமையை இழந்துவிடுவாரோ என்று பயந்தேன்; நான் அறிக்கைசெய்யாவிட்டால் என்னால் அமைதியாக இருக்கமுடியாது. அன்று இரவு சாப்பாட்டிற்குப்பிறகு அவர் சற்று நடக்க விரும்பினார், நானும் அவரோடு நடந்து சென்றேன். அப்போது அவரிடம் சொல்லுவதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது, "நான் மீண்டும் தவறுசெய்துவிட்டேன் தயவுசெய்து என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கூறினேன். அப்போது "தவறுசெய்துவிட்டு அதை அறிக்கைசெய்யாதவன் மிகவும் மோசமான நபர். தவறு செய்யாமலும் அறிக்கைசெய்யாமலும் இருக்கிறவன் சிறந்த நபர். தவறுசெய்துவிட்டு அதை அறிக்கை செய்கிறவன் நல்லவனும் இல்லை, கெட்டவனும் இல்லை" என்று அந்த சகோதரன் கூறினார். அதை நான் கேட்டபிறகு, "கர்த்தாவே, என்மேல் இரக்கமாயிரும்! நான் மோசமான மனிதனாக இருக்க

விரும்பவில்லை, மேலும் என்னால் சிறந்த நபராகவும் இருக்க முடியாது; நல்லவனுமில்லை, கெட்டவனுமில்லை என்ற நபராகத் தான் நான் இருக்கமுடியும்" என்று என் இருதயத்தில் கூறினேன்.

அந்த நேரத்தில் நான் என் மனச்சாட்சியோடு மிகவும் அதிகமாகவே இடைபட்டேன். இருப்பினும் இப்போது நான் அதைத் திரும்பி பார்க்கும்போது, அது இன்னும் அவசியமாகத் தான் இருந்தது. உண்மையில் ஒருவன் ஜீவனில் உண்மையான வளர்ச்சியைப் பெறவிரும்பினால், இப்படிப் பட்ட ஒரு தீவிரமான வழியில் மனச்சாட்சியோடு இடைபடுகிற காலகட்டத்தினூடாகக் கடந்துசென்றுதான் ஆக வேண்டும். போதுமான அளவுக்கு மனச் சாட்சியோடு இடைபடாவிட்டால் ஜீவன் நேர்த்தியாக வளர முடியாது.

நம் மனச்சாட்சி இப்படிப்பட்ட தீவிரமான, முற்றும்முடிதான இடைபடுதல்களினூடாகக் கடந்துசெல்லுகிறபோது, அதன் உணர்வு இன்னும் அதிகமதிகமாக நுண்ணுணர்வுள்ளதாக இருக்கிறது. இது ஒரு ஜன்னலின் கண்ணாடியைப்போல இருக்கிறது: தூசியும் அழுக்கும் அதின்மேல்படிகிறபோது, ஒளி ஊடுருவிச்செல்ல முடியாது; ஆனால் நாம் அதைக் கொஞ்சம் துடைத்தால், அது கொஞ்சம் தெளிவாகிறது. நாம் அதை அதிகமாகத் துடைக்கும் போது, அது அதிகத்தெளிவாகி, அதனூடாக ஒளி கடந்துசெல்ல அது அனுமதிக்கிறது. மனச்சாட்சியோடு இடைபடுவதும் இதைப் போல இருக்கிறது. எவ்வளவு அதிகமாக மனச்சாட்சி இடைபடுகிற தோ அவ்வளவு அதிகமாக அது தெளிவாகவும் பிரகாசமாகவும் மாறி, அதன் உணர்வு அதிக நுண்ணுணர்வுள்ளதாக இருக்கிறது.

எவ்வளவு அதிகமாக மனச்சாட்சி நுண்ணுணர்வுள்ளதாக இருக்கிறதோ அவ்வளவு அதிகமாக இருதயம் மிருதுவாக இருக்கிறது; ஏனென்றால் ஒவ்வொரு மிருதுவான இருதயத் திலும் மனச்சாட்சி அதிகம் நுண்ணுணர்வுள்ளதாக இருக் கிறது. அங்கு கொஞ்சம் உணர்வு இருந்தாலும், உடனே மனச்சாட்சி அதை உணர்ந்துவிடுகிறது. ஒரு நுண்ணுணர்வுள்ள மனச்சாட்சி ஒரு மிருதுவான இருதயத்துக்குரியது என்று நாம் கூறலாம். இருதயக் கடினம் உள்ள எல்லாரும் மரத்துப்போன மனச்சாட்சியைக் கொண்டிருக்கிறார்கள். ஒரு நபருடைய மனச்சாட்சி எவ்வளவு அதிகமாக மரத்துபோய் இருக்கிறதோ அவ்வளவு அதிகமாக அவனுடைய இருதயமும் கடினப்பட்டு இருக்கிறது. ஆகையால் பரிசுத்த ஆவியானவர் நம் இருதயத்தை மிருதுவாக்க விரும்பும் போது, அவர் முதலாவது நம் மனச்சாட்சியைத்தான் எப்போதும் அசைக்கிறார். சுவிசேஷம் அறிவிக்கும்போது நாம் எப்போதும் பாவத்தைக்குறித்துப் பேசுகிறோம்; இது ஏனென்றால் மனிதன் தன்னிடம் அநேகத் தவறுகளும் குற்றங்களும் இருக்கிறது என்று

உணரும்படி அவனுடைய மனச்சாட்சியை அசைப்பதே நம் நோக்கமாகும். மனிதனுடைய மனச்சாட்சி அசைக்கப்படும்போது அவனுடைய இருதயமும் மிருதுவாக்கப்படுகிறது; அப்போது அவன் கர்த்தருடைய இரட்சிப்பைப் பெறுவதற்கு சித்தமுள்ளவனாக இருக்கிறான்.

ஒரு நுண்ணுணர்வுள்ள மனச்சாட்சி குற்றமற்றதாக இருந்து இருதயத்தை மிருதுவாக்குவதால், இயல்பாகவே நம்மிலிருந்து ஜீவன் வெளியே வளர அது அனுமதிக்கிறது. இவ்வாறு மனச்சாட்சி என்பது ஜீவன் வெளியே வளரும் போது அது கடந்துசெல்லுகிற முதலாவது இடமாக அல்லது ஜீவன் வெளியே வளர்வதற்கான வடிகாலின் முதலாவது பகுதியாக இருக்கிறது.

## B. உணர்ச்சி

நம்முள்ளிருந்து ஜீவன் வெளியே வளரும்போது அது கடந்து செல்லுகிற இரண்டாவது இடம் நம் இருதயத்தின் உணர்ச்சியாக இருக்கிறது. இருதயத்தின் உணர்ச்சியைப் பொறுத்தவரை, அது அன்பைக்குறித்த கேள்வியாகும். உணர்ச்சியோடு இடைபடுவ தென்றால் நம் உணர்ச்சி கர்த்தரை ஊக்கமாக நேசிக்கச்செய்வ தாகும்.

ஒரு மனிதன் எதைச்செய்தாலும், அவன் அதை நேசிக் கிறானா இல்லையா என்பதே மிக முக்கியமான கேள்வி என்று நமக்குத் தெரியும். அவன் அதை நேசித்தால், அதைச் செய்வதற்கு அவன் விருப்பமும் சந்தோஷமும் உள்ளவனாக இருக்கிறான்; அவன் அதை நேசிக்காவிட்டால், அதைச்செய்வதற்கு அவன் விருப்பமும் சந்தோஷமும் உள்ளவனாக இல்லை. கர்த்தருடைய ஜீவன் நம்முள்ளிருந்து விடுதலையோடு வெளியே வளர்வதற்கு நாம் அனுமதித்தால், நாம் அவரோடு ஒத்துழைப்பதில் சந்தோஷமும், அவரை வேலைசெய்ய அனுமதிப்பதில் விருப்பமும் உள்ளவர்க ளாக இருக்கவேண்டும். ஆகையால் தேவன் நம்மில் வேலைசெய்ய விரும்பும்போது, அவரோடு ஒத்துழைக்க நம்மை விருப்ப முள்ளவர்களாக்க, அவர் அடிக்கடி முதலாவது நம் உணர்ச்சியை அசைக்கிறார். கர்த்தரை நேசிப்பதைப்பற்றி வேதாகமம் அநேக இடங்களில் பேசுகிறது. அவைகளெல்லாம் நம் உணர்ச்சியை அசைக்கும் நோக்கத்துடன் குறிப்பிடப்பட்டிருக் கின்றன. எடுத்துக்காட்டாக, "இவர்களிலும் அதிகமாய் நீ என்னிடத்தில் அன்பாயிருக்கிறாயா?" என்று யோவான் 21-ல் கர்த்தர் பேதுருவிடம் கூறினார். கர்த்தர் பேதுருவின் உணர்ச்சியை அசைக்க விரும்பினார் என்பதே இதன் அர்த்தம், அவருடைய ஜீவன் அவனிலிருந்து வெளியாக ஒரு வழி உண்டாகும்படி பேதுரு அவரை முற்றும் நேசிக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்பி

னார்; "...நீங்கள் உங்கள் சரீரங்களை...ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிகொள்ளுகிறேன்...தேவனுடைய சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக..." என்று மீண்டும் ரோமர் 12:1-2ல் அப்போஸ்தலனாகிய பவுல் கூறுகிறார். தேவனுடைய இரக்கத்தைப்பற்றி இங்கு பேசுகிறபோது, இது நம் உணர்ச்சியை அசைப்பதற்காக, அதாவது நாம் கர்த்தரை நேசிக்க, கர்த்தரை விரும்ப, கர்த்தரைத் தேட, கர்த்தருக்கு அர்ப்பணிக்கச் செய்வதற்காக இருக்கிறது. அப்போது நாம் தேவனுடைய காரியங்களைப் புரிந்துகொள்ள முடியும். நம்முள் கர்த்தருடைய ஜீவன் ஒரு வடிகாலைக் கொண்டிருக்க நாம் விரும்பினால், குற்றமில்லாத மனச்சாட்சியுடன் கர்த்தரை ஊக்கமாக நேசிக்கிற ஓர் உணர்ச்சி நமக்குவேண்டும் என்று இந்த உதாரணங்கள் நமக்குக் காட்டுகின்றன.

உண்மையாகவே கர்த்தரை நேசிக்கிற உணர்ச்சி, நம் இருதயத்தோடும் நம் மனச்சாட்சியோடும் நெருக்கமாகத் தொடர்புடையது. "கற்பனையின் பொருள் என்னவெனில், சுத்தமான இருதயத்திலும் நல்மனச்சாட்சியிலும் மாயமற்ற விசுவாசத்திலும் பிறக்கும் அன்பே" என்று 1 தீமோ. 1:5 கூறுகிறது. இந்தப்பகுதி உணர்ச்சி, இருதயம், மனச்சாட்சி ஆகியவைகளை ஒன்றாகச் சேர்த்துப் பேசுகிறது. மனிதர்களின் அதிகமான பேச்சு கணக்கில்கொள்ளப்பட முடியாது, மாறாக அன்பு, அன்பு மட்டுமே எல்லாவற்றுக்கும் முடிவாக இருக்கிறது என்று தீமோத்தேயுக்குக் கூறுவதே இங்கு பவுலின் நோக்கமாக இருந்தது. இருப்பினும் இந்த அன்பு எங்கிருந்து வருகிறது? இது சுத்தமான இருதயத்திலிருந்தும் நல்மனச் சாட்சியிலிருந்தும் வருகிறது. ஆகவே அன்பு உற்பத்தி செய்யப்படுவதற்குமுன்பு சுத்த இருதயத்தையும் நல்மனச் சாட்சியையும் கொண்டிருக்க வேண்டியது அவசியமா யிருக்கிறது. இந்தக் காரணத்தினால்தான் நாம் மற்றவர்களுக்கு உதவிசெய்யும் போது தங்கள் இருதயத்தோடும் தங்கள் மனச் சாட்சியோடும் இடைபடுவதற்கு நாம் முதலாவது அவர் களுக்கு உதவிசெய்ய வேண்டும். இருதயமும் மனச்சாட்சியும் இடைபடுத்தப்படும்போது, உணர்ச்சி எளிதாக கர்த்தரை நேசிக்கவும் கர்த்தரை விரும்பவும் முடியும். உணர்ச்சியில் அன்பு இருக்கும்போது, நம் ஆவி தேவனுடைய ஜீவனுக்கு ஒரு வடிகாலைக் கொடுக்கிறது. இவ்வாறு உணர்ச்சி என்பது ஜீவன் வெளியே வளரும்போது அது கடந்துசெல்லுகிற இரண்டாவது இடமாக அல்லது ஜீவன் வெளியே வளர்வதற் கான வடிகாலின் இரண்டாவது பகுதியாக இருக்கிறது.

## C. மனம்

ஜீவன் வெளியே வளருவதற்கு அது கடந்துசெல்லுகிற

மூன்றாவது பகுதி நம் மனமாகும். மனம் புதிதாக்கப்பட வேண்டும். மனதோடு இடைபடுவதென்றால், நம் மனம் புதிதாக்கப்படுவதும், எல்லா பழைய கருத்துக்களிலிருந்து விடுதலையாக்கப்படுவதுமாகும். "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்று ரோமர் 12:2 கூறுகிறது. புதிதாக்கப்பட்டு மறுசாயலாக்கப்பட்ட மனம் நம்மிடம் இருக்கும்போது மட்டுமே, நாம் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்ள முடியும், மேலும் கர்த்தருடைய ஜீவன் கடந்துசெல்லவும், இயல்பாக வெளியே வளரவும் அனுமதிக்க முடியும். இவ்வாறு மனமும்கூட ஜீவன் வெளியே வளருவதோடு நெருக்கமான தொடர்புடையதாகும்.

நம் முழு நபரிலுள்ள எல்லாப் புதிதாக்கும் வேலையும் பரிசுத்த ஆவியானவரால் செய்யப்படுகிறது (தீத்து 3:5). ஆகையால், மனம் புதிதாக்கப்படுவதைப்பற்றிப் பேசும்போது, பரிசுத்த ஆவியானவரின் வேலையைக் கொண்டுதான் ஆரம்பிக்க வேண்டும். நம்மை மறுபடிபிறக்கச்செய்வதே நம்முள் பரிசுத்த ஆவியானவருடைய ஆரம்ப வேலை என்பதை நாம் அறிந்திருக்கிறோம். இதற்குப்பிறகு, நம்மைப் புதிதாக்குவதற்கு பரிசுத்த ஆவியானவர் நம்முள் தொடர்ச்சி யாக வேலைசெய்கிறார். பரிசுத்த ஆவியானவரின் மறுபடிபிறப்பிக்கப்படுதல், நாம் தேவனுடைய ஜீவனைப் பெறவும், தேவனுடைய சுபாவத்தைக் கொண்டிருக்கவும் செய்கிறது. பரிசுத்த ஆவியானவரின் புதிதாக்குதல், நாம் தேவனை அறிந்துகொள்ள, அல்லது தேவனு டைய சித்தத்தைப் புரிந்துகொள்ளச்செய்கிறது, மேலும் தேவனு டைய மனதைக் கொண்டிருக்கச்செய்கிறது.

பரிசுத்த ஆவியானவர் தம் புதிதாக்கும் வேலையில் நம்முள் இருக்கிற ஆவி, மனம் என்ற பகுதிகளைப் புதிதாக்கு கிறார். நாம் தேவனை அறிந்துகொள்ள விரும்பினால், நம் பக்கத்தில் ஆவியும் மனமுமே அதை நிறைவேற்ற முடியும் என்று உள்ளார்ந்த அறிவு என்ற தலைப்பைக்கொண்ட அத்தியாயத்தில் நாம் தெளிவு படுத்தியிருந்தோம். முதலாவது நாம் நம் ஆவியிலுள்ள உள்ளுணர் வின் அறிதலைப் பெற்றுக்கொள்கிறோம், பின்பு மனதில் புரிதலை ஆதாயப் படுத்திக்கொள்கிறோம்; இதனால் நாம் தேவனுடைய சித்தத்தையும் தேவனையும் புரிந்துகொள்கிறோம். இவ்வாறு ஆவியும் மனமும் நாம் தேவனை அறிந்துகொள்வதற்கான ஒரு ஜோடியான உறுப்புக்களாக இருக்கின்றன என்று கூற முடியும். ஆவியைக் கொண்டிருப்பது மட்டுமே போதுமானதல்ல; மனதை மட்டுமே கொண்டிருப்பதும் போதுமானதல்ல. நமக்கு ஆவி,

மனம், ஆகிய இரண்டும் இருக்கவேண்டும். இது மின்சார விளக்கு டன் பிரகாசிக்கிற விளக்குக் குமிழியைப் போல இருக்கிறது. விளக்குக் குமிழி மட்டுமே போதுமான தல்ல; ஜொலிக்கும் இழை மட்டுமே போதுமானதல்ல; அவை இரண்டும் சேர்ந்து வேலை செய்வது தேவையாயிருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் புதிதாக்குதல் நாம் தேவனை அறிந்துகொள்ளும் நோக்கத்திற்காகவே இருப்பதால், தேவனை அறிந்துகொள்ளும் ஜோடி உறுப்புக்களான நம் ஆவியையும் மனதையும் அவர் இயல்பாகவே புதிதாக்க வேண்டும்.

"அந்தப்படி முந்தின நடக்கைக்குரிய...பழைய மனிதனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி," என்று எபேசியர் *4:22-23* கூறுகிறது. இந்தப் பகுதி, புதிதாகிற காரியத்தைப்பற்றி பேசுகிறது, மனதையும் ஆவியையும் ஒன்றாக இணைத்து, ஆவியை "மனதின் ஆவி" என்று அழைக்கிறது. தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்வது மனதின் காரியமாக இருந்தாலும்கூட, மனம் தன்னில்தானே நேரடியாக தேவனைத் தொடவோ தேவனை அறியவோமுடியாது. தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்ளவேண்டுமானால், நாம் முதலாவது ஆவியைப் பயன்படுத்தி தேவனைத் தொடவும் தேவனை உணரவும்வேண்டும். பின்பு மனதை உபயோகப்படுத்தி ஆவியின் உள்ளுணர்விலுள்ள அர்த்தத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். ஆகவே தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்கிற விஷயத்தில், மனதைப் பொறுத்தவரை, அதற்கு ஆவியின் ஒத்துழைப்பு தேவைப்படுகிறது; ஆவியைப் பொறுத்தவரை, அது மனதோடு இணைக்கப்பட்டு, மனதிற்குரியதாக மாறுகிறது. இது, விளக்குக் குமிழியிலுள்ள ஜொலிக்கும் இழை, விளக்குக் குமிழியோடு இணைக்கப்பட்டு, விளக்குக் குமிழிக்கு உரியதாக இருப்பதைப் போன்றதாகும். எனவே இந்தப் பகுதியில் வேதாகமம் நம் ஆவியை "மனதின் ஆவி" என்று அழைக்கிறது. பரிசுத்த ஆவியானவர் நம் "மனதின் ஆவியை" புதிதாக்கும்போது, அதின் அர்த்தம் அவர் நம் ஆவியையும் நம் மனதையும் புதிதாக்குகிறார் என்பதாகும். பரிசுத்த ஆவியானவர் நம் ஆவியைப் புதிதாக்குகிறார்; ஏனென்றால், அறிந்துகொள்ளுகிற விஷயத்தில், ஆவி மனதின் ஆவியாக மாறுகிறது; ஆகையால், மனதின் நிஜமான புதிதாகுதல் எப்போதும் ஆவியின் புதிதாகுதலோடு தொடங்குகிறது. பரிசுத்த ஆவியானவர் முதலாவது நம் ஆவியைப் புதிதாக்குகிறார்; பின்பு, அவர் நம் மனதை புதிதாக்குகிறார்; இவ்வாறு, நம் மனதின் ஆவி புதிதாக்கப்படுகிறது.

நம் மனதின் ஆவி இவ்வாறு, பரிசுத்த ஆவியானவரால் புதிதாக்கப்படும்போது, நம் ஆவி உயிரோட்டமாகவும் கூர்மை

யாகவும் மாறுகிறது. பரிசுத்த ஆவியானவர் ஒவ்வொரு முறை வேலைசெய்கிறபோதும் அபிஷேகிக்கிறபோதும் இந்த ஆவியால் அறியமுடியும், உணரமுடியும். அதே நேரத்தில் நம் மனம் தெளிவாகவும் சாமர்த்தியமாகவும் இருக்கிறது; அது ஆவியிலுள்ள உள்ளுணர்வின் அர்த்தத்தை உடனே கூறுகிறது. இந்த வழியில், நாம் தேவனுடைய சித்தத்தைப் புரிந்துகொள்ளமுடியும். அப்போது, நம் மனம் எதையெல்லாம் சிந்திக்கிறதோ, பரிசீலிக்கிறதோ, அதெல்லாம் ஆவிக்கு உரியதாகிவிடுகிறது; அது மாம்சத்தால் வேலைசெய்வதற்கு ஒருபோதும் மாம்சத்திற்கு அடிபணியாது. பின்பு, நம் மனம் இனி மாம்சத்தின்மேல் பொருத்தப்பட்ட மனமாயிராமல், ஆவியின்மேல் பொருத்தப்பட்ட மனமாக இருக்கும். இப்படிப்பட்ட ஒரு மனதையே "ஆவியின் மனம்" என்று ரோமர் 8:6 அழைக்கிறது. இந்த ஆவியின் மனம், தொடர்ச்சியாக ஆவியின் மேல் பொருத்தப்பட்டிருப்பதாலும், ஆவிக்கு அக்கறைச் செலுத்துவதாலும், தேவனுடைய ஜீவன் நம் ஆவியிலிருந்து தொடர்ச்சியாக வெளியே வளர அது அனுமதிக்கிறது.

சுருங்கக்கூறின், மனம் புதிதாக்கப்படுவதைப்பற்றி கீழ்க்கண்ட மூன்று குறிப்புகள் இருக்கின்றன: முதலாவதாக, மனம் புதிதாக்கப் படவும், பழைய கருத்துக்களையெல்லாம் கழற்றிவிடவும் வேண்டும் என்று ரோமர் 12 கூறுகிறது; இரண்டாவதாக, மனம் ஆவியோடு ஒத்துழைக்கவும், அதோடு ஒன்றாக சேர்க்கப்படவும், அதற்கு ஆவி தேவைப்படுகிறது; இதனால் ஆவி "மனதின் ஆவியாக" மாறுகிறது என்று எபேசியர் 4 கூறுகிறது. மூன்றாவதாக, மனம் ஆவியின் பக்கம் நின்று, ஆவிக்கு அடிபணிந்து, ஆவிக்குரியதாகி, தொடர்ச்சியாக ஆவியின்மேல் பொருத்தப்பட்டு, ஆவிக்கு அக்கறைசெலுத்தி, ஆவியின் அசைவையும் உணர்வையும் கவனிக்க வேண்டும், இதன்மூலம் அது "ஆவியின் மனதாக" மாறுகிறது என்று ரோமர் 8 கூறுகிறது. இவ்வாறு மனம் புதிதாகி, ஆவிக்கு ஒத்துழைத்து, ஆவியின்பக்கம் நிற்கும்போது, ஜீவன் கடந்துசெல்லவும், எந்தத் தடையுமில்லாமல் மிருதுவாக வெளியே வளரவும் அது அனுமதிக்க முடியும். இவ்வாறு மனம் என்பது ஜீவன் வெளியே வளரும்போது அது கடந்துசெல்லுகிற மூன்றாவது இடமாக அல்லது ஜீவன் வெளியே வளர்வதற்கான வடிகாலின் மூன்றாவது பகுதியாக இருக்கிறது.

## D. சித்தம்

நான்காவதாக, ஜீவன் வெளியே வளரும்போது, அது நம் சித்தத்தின்மூலம் கடந்துசெல்லுகிறது. இருதயம் தூய்மையாகவும், மனச்சாட்சி குற்றமற்றதாகவும், உணர்ச்சி நேசிக்கிறதாகவும், மனம் புதிதாக்கப்படுகிறதாகவும் இருக்கவேண்டும் என்று நாம்

பார்த்திருக்கிறோம். பின்பு சித்தம் எப்படி இருக்க வேண்டும்? சித்தம் வளைந்து கொடுக்கக்கூடியதாக இருக்க வேண்டும் என்று வேதாகமத்திலிருந்து நாம் பார்க்கிறோம். சித்தத்தைப் பொறுத்த வரை, அது வளைந்துகொடுக்கும் காரியமாகும். சித்தத்தோடு இடைபடுவது என்றால், நம் சித்தத்தை வளைந்துகொடுக்கக் கூடியதாக ஆக்குவதாகும்.

சித்தம் நம் முன்மொழிதல்கள் மற்றும் தீர்மானங் களுக்கான உறுப்பாகும். நாம் விரும்புகிறோமா இல்லையா, தீர்மானிக்கி றோமா இல்லையா ஆகிய எல்லாம் சித்தத்தின் செயல்பாடுகளாக இருக்கின்றன. "நான் விரும்புகிறேன்" அல்லது "நான் தீர்மானிக்கி றேன" என்று நாம் கூறும்போது, அதற்கு அர்த்தம் நம் சித்தம் விரும்புகிறது, நம் சித்தம் தீர்மானிக்கிறது என்பதாகும். ஆகவே, சித்தம் என்பது நம் முழு ஆள்தத்துவத்தின் மிக முக்கியமான பகுதியாகும்; அது நம் செயல்களையும் அசைவுகளையும் தீர்மானிக்கிறது. அது நம் முழு ஆள்தத்துவத்தின் சுக்கான் என்று நாம் கூறலாம். ஒரு படகு சுக்கானுக்கேற்றபடி திரும்புகிறதைப் போல, ஒரு மனிதன் தன் சித்தத்துக்கேற்றபடி முன்னோக்கியோ, பின்னோக்கியோ அசைகிறான்.

ஒரு மனிதனுடைய சித்தம் முழுவதும் தனித்துவமானது, முழுவதும் சுயேட்சையானது. எதையெல்லாம் அது எதிர்க்கிறதோ, ஒத்துக்கொள்ள வில்லையோ அதைச்செய்ய கட்டாயப்படுத்தவோ, வற்புறுத்தவோ முடியாது. மனிதனைப் பொறுத்தவரை இந்த வழியில் அது செயல்படுவதுபோல, தேவனைப் பொறுத்தவரை யிலும் செயல்படுகிறது. ஆகவே, தேவனுடைய ஜீவன் நம்முள்ளிருந்து வெளியேவளர முடியுமா இல்லையா என்பது நம் சித்தம் வளைந்துகொடுத்து சரணடைகிறதா என்பதோடு மிகவும் நெருக்கமாகத் தொடர்புடையதாகும். நம் சித்தம் கடினமாக, பிடிவாதமாக, கலகம்செய்கிறதாக இருந்து, எல்லாக் காரியங்களிலும் நம் சொந்த யோசனைகளின்படி செயல்பட்டால், தேவனுடைய ஜீவன் வெளியே வளர்வதற்கான எந்த வழியும் இருக்காது. நம் சித்தம் மிருதுவாக்கப்பட்டும், வளைந்துகொடுக்கக் கூடியதாகவும், ஜீவனின் வேலைக்கேற்றபடி செயல்படுவதற்கு சித்தமாகவும் இருந்தால், தேவனுடைய ஜீவன் வெளியே வளரமுடியும். இவ்வாறு சித்தம் என்பது ஜீவன் வெளியே வளரும்போது அது கடந்துசெல்லுகிற நான்காவது இடமாக அல்லது ஜீவன் வெளியே வளர்வதற்கான வடிகாலின் நான்காவது பகுதியாக இருக்கிறது.

நாம் இருதயத்தைக் குறிப்பிடும்போதெல்லாம், இருத யத்தின் பல்வேறு பகுதிகளான, இருதயத்தின் மனச்சாட்சி, இருதயத்தின் உணர்ச்சி, இருதயத்தின் மனம், இருதயத்தின் சித்தம் ஆகியவை

களைக் குறிப்பிடுகிறோம் என்பதை நாம் கவனிக்கவேண்டும். ஒரு நபருடைய இருதயம் தூய்மையாக இல்லை என்று நாம் கூறும்போது, முழு இருதயத்தையும் குறிப்பிடுகிறோம். இந்த நபருடைய இருதயம் குற்ற மில்லாமல், ஆக்கினைத்தீர்ப்பில்லாமல் இருக்கிறது என்று நாம் கூறும்போது, மனச்சாட்சியைக் குறிப்பிடு கிறோம். ஒரு நபருடைய இருதயம் கர்த்தரை நேசிக்கிறது என்று நாம் கூறும்போது, உணர்ச்சியைக் குறிப்பிடுகிறோம். ஒரு நபருடைய இருதயம் புரிந்துகொள்ளாமல் இருக்கிறது என்று நாம் கூறும்போது, மனதைக் குறிப்பிடுகிறோம். இந்த நபருடைய இருதயம் கடினமாகவும் பிடிவாதமாகவும் இருக் கிறது என்று நாம் கூறும்போது, சித்தத்தைக் குறிப்பிடு கிறோம். நம் இருதயத் தோடு இடைபடுவதைப்பற்றி நாம் பேசும்போது, இருதயத்தின் இந்த ஐந்து காரியங்களோடு இடைபடுவதையே நாம் அர்த்தப் படுத்துகிறோம்.

நம் இருதயம் தூய்மையாக, குற்றமற்றதாக, கர்த்தரை நேசிக்கிறதாக, தெளிவாக, சாமர்த்தியமாக, வளைந்துகொடுக்கக் கூடியதாக மாறும்வரை நாம் நம் இருதயத்தோடு இடைபட முடியுமானால், தேனுடைய ஜீவனுக்கு உபயோகமான ஒரு இருதயம் நம்மிடம் இருக்கும்; மேலும், நம்முள்ளிருந்து ஒரு தெளிவான வடிகாலைக் கொண்டிருக்கும்படி நாம் தேவனுடைய ஜீவனை அனுமதிக்கமுடியும்.

## இறுதி வார்த்தை

ஜீவன் இருக்கும் இடம், ஜீவன் வெளியேறும் வழி, ஜீவன் கடந்துசெல்லும் பாதை, ஆகியவைகளை நாம் அறிந்துகொண்ட பிறகு, நம்மிலிருந்து தேவனுடைய ஜீவன் வெளியே வளருவதற்கான ஒரு வழியைக் கொண்டிருக்க விரும்பினால், நம்முடைய ஆவி, இருதயம், மனச்சாட்சி, உணர்ச்சி, மனம், சித்தம், ஆகியவைகளில் எந்தப்பிரச்சினையும் இல்லாதவரை நாம் அவைகளோடு இடைபடவேண்டும். இது ஏனென்றால், தேவனுடைய ஜீவன், நம் ஆவியை அதன் இருப்பிடமாகவும், நம் இருதயம், மனச்சாட்சி, உணர்ச்சி, மனம், சித்தம் ஆகியவை களை அதன் வடிகாலாகவும் எடுத்துக்கொள்கிறது. இந்த ஆறு உறுப்புகளில் ஏதாவது ஒன்றில் பிரச்சினை இருந்தாலும்கூட, தேவனுடைய ஜீவன் அடைக்கப்பட்டு, வெளியேற முடியாமல் போய்விடும். ஆகையால் நாம் ஜீவனில் வளர்ச்சியை விரும்பினால், அது உண்மையாகவே அவ்வளவு எளிதல்ல. நாம் ஆவியைத் தொடவேண்டும், ஆவியை அறியவேண்டும் என்பது மட்டுமல்ல, நாம் இருதயத்தின் ஒவ்வொரு பகுதியோடும் இடைபடவும் வேண்டும். ஏதாவது ஒன்றில் நாம் குறைவு

பட்டாலும்கூட, நாம் வெற்றிபெறமுடியாது. இந்தக் காரணத் தினால்தான், இன்று ஜீவனில் வளர்ந்துள்ள சகோதர சகோதரி களின் எண்ணிக்கை மிகக் குறைவாகவே உள்ளது, மேலும் அவர்களுடைய வளர்ச்சி மிகவும் மெதுவாக இருக்கிறது!

கர்த்தரை நேசிக்காதவர் என்று உங்களால் கூறமுடியாத ஒரு சகோதரனை சில நேரங்களில் நீங்கள் பார்க்கிறீர்கள். உண்மையில், எல்லாவிதத்திலும் அவர் ஓரளவுக்கு நல்ல சகோதரனாக இருக்கிறார். ஆனால் அவனுடைய மனம் ஒருவிதமாக இருப்பதால், அவனு டைய முழு ஆவிக்குரிய எதிர்காலமும் முடங்கிப் போயிருக்கிறது. சில சகோதரிகள் தங்கள் மனச்சாட்சியோடு இடைபட்டிருக்கி றார்கள், அவர்களுடைய மனதில் எந்தப் பிரச்சினையும் இல்லை; இருப்பினும், அவர்கள் தங்கள் உணர்ச்சியில் விழுந்து, அதாவது கர்த்தரைத் தவிர மற்ற அன்பைக் கொண்டிருப்பதால், அதிகமான ஆவிக்குரிய வளர்ச்சி அவர்களிடம் இல்லை. எல்லாக் காரியங் களிலும் பிடிவாதமான சித்தத்தைக் கொண்டிருக்கிற சில சகோதரர்கள் இருக்கிறார்கள்; அவர்கள் ஏற்கெனவே தங்கள் மனதில் தீர்மானித்ததையே வலியுறுத்துகிறார்கள்; அவர்கள் தங்களைச் சரிசெய்துகொள்வதற்கு சித்தமில்லாமல் இருக்கிறார்கள், மேலும் ஒளியின் பிரகாசித்தலுக்கு பணிந்தடங்க முடியாதவர்களாயிருக்கி றார்கள்; ஆகையால், ஜீவன் வெளி யேற முடியாது. இவ்வாறு நம் நிஜ வாழ்க்கையில் இந்த எல்லாப் பகுதிகளோடும் போதுமான அளவுக்கு இடைபடுவது உண்மையில் எளிதானதல்ல. இந்தக் காரியங்களில் எந்தப் பிரச்சினையும் இல்லாத ஒரு சகோதரனோ, சகோதரியோ இருந்தால், அது நிஜமாகவே ஒரு அற்புதம். கர்த்தர் நம்மேல் இரக்கமாயிருப்பாராக!

அத்தியாயம் பதினான்கு

# வெளிச்சமும் ஜீவனும்

இப்போது நாம் ஜீவனின் அறிவைப்பற்றிய கடைசி முக்கியமான குறிப்பாகிய வெளிச்சத்தையும் ஜீவனையும் பற்றிப் பார்க்கலாம். தேவனுடைய வார்த்தையிலிருந்தும், நம் அனுபவத்தி லிருந்தும், வெளிச்சம் விஷேமாக ஜீவனோடு தொடர்புடையது என்பதை நாம் பார்க்கிறோம். நாம் பிரகாசிக்கப்படுவதினால்தான் ஜீவனைப் பெறுகிறோம் என்று கூறலாம். நாம் பெறுகிற ஜீவனின் அளவு, மிகச்சரியாக நாம் பிரகாசிக்கப்படுவதின் அளவோடு தொடர்புடையதாக இருக்கிறது. ஒளியின் பிரகாசித்தல் மட்டுமே ஜீவனைக் கொண்டுவரமுடியும்; மேலும் வெளிச்சத்தின் பிரகாசம் மட்டுமே ஜீவனை அதிகரிக்கச்செய்யவும் முடியும். ஆகையால் ஜீவனை அறியவிரும்பினால், வெளிச்சத்திற்கும் ஜீவனுக்கு முள்ள உறவை நாம் பார்க்கவேண்டும்.

## I. ஜீவன் நடத்தையிலிருந்து வித்தியாசமானது

நாம் நல்ல மனிதர்களாக அல்லது கெட்ட மனிதர்களாக இருப்பதல்ல, மாறாக ஜீவ-மனிதர்களாக அல்லது தேவ-மனிதர்களாக இருப்பதே நம்மை இரட்சித்ததில் தேவனுடைய நோக்கம் என்று நாம் திரும்பத் திரும்ப கூறியுள்ளோம். ஆகையால் நாம் இரட்சிக்கப்பட்டபின்பு, வெறுமனே நம் நடத்தையில் ஒழுக்கத்தின் தரத்தை அடைவதோ, மனிதனின் நன்மையை வாழ்ந்துகாட்டுவதோ மட்டுமல்ல, மாறாக நம் வாழ்க்கையில் ஜீவனின் தரத்தை அடைந்து, தேவனுடைய ஜீவனை வாழ்ந்துகாட்ட வேண்டும். எனவே இன்று நாம் எடுத்துக்கொள்ளுகிற வழி சுய-முன்னேற்றத்தின் வழியல்ல, மாறாக ஜீவனின் வழி. நடத்தையை முன்னேற்றுவதை நாம் பின்தொடராமல், ஜீவனில் வளர்வதையே நாம் பின்தொடர்கிறோம். வலது இடது புறம் சாயாமல் நாம் ஜீவனின் வழியில் முன்னேறிச்செல்ல வேண்டுமானால், ஜீவனுக் கும் நடத்தைக்குமுள்ள வித்தியாசத்தை வேறுபடுத்தக்கூடிய வர்களாக இருக்கவேண்டும்.

ஜீவனும் நடத்தையும் உள்ளபடியே வித்தியாசமானது. ஆரம்பத்தில் வேதாகமம் ஏதேன் தோட்டத்திலுள்ள இரண்டு மரங்களைக் குறிப்பிடுகிறது: ஒன்று ஜீவமரம், மற்றொன்று நன்மை-தீமையுள்ள மரம். ஜீவமரம் தேவனை ஜீவனாகக் குறிப்பிடுகிறது; ஆனால் நன்மை-தீமையுள்ள மரம், நல்லதும் தீயதுமான நடத்தையைக் குறிப்பிடுகிறது. ஜீவமரமும், நன்மை-

தீமையுள்ள மரமும் ஒரே மரம் அல்ல; மாறாக இரண்டு மரங்க ளாகும். ஜீவனும் நடத்தையும் இரண்டுவகையான காரியங்கள் என்பதையே இது நமக்குக் காட்டுகிறது.

ஜீவனுக்கும் நடத்தைக்குமுள்ள அடிப்படையான வித்தி யாசம் என்ன என்பதை நாம் பார்க்கவேண்டும். எளிமையாகப் பேசுவதா னால், ஜீவன் என்பது இயல்பான வளர்ச்சி; ஆனால் நடத்தை மனித வேலை. எடுத்துக்காட்டாக, ஒரு வீட்டையும் ஒரு மரத்தை யும் பரிசீலிக்கலாம். வீடு என்பது நடத்தையின் விளைவு, அதாவது மனித வேலையின் உற்பத்தி; ஆனால் மரம் என்பது ஒரு ஜீவனின் வெளிப்படுதல், அதாவது இயல்பான வளர்ச்சியின் வெளிப்படுதல். வீட்டின் கதவுகளும் ஜன்னல்களும் வேலையினால் அங்கு பொருத்தப்பட்டிருக்கின்றன; மரத்தின் மலர்களும் இலைகளும் வளர்வதினால் வருகிறது. கட்டப்பட்ட வீடு ஒருவகையான நடத் தையை வெளிப்படுத்துகிறது; வளர்ந்திருக்கிற மரம் ஒரு வகை யான ஜீவனை நிரூபித்துக்காட்டுகிறது. இவை இரண்டிற்குமுள்ள வித்தியாசம் மிகவும்தெளிவானது. கிறிஸ்தவர்க ளாகிய நம்மைப் பொறுத்தவரை, நடத்தைக்கும் ஜீவனுக்குமுள்ள வித்தியாசம் இதைப்போன்றதுதான். நம் சொந்த மனித முயற்சியினால் உற்பத்திசெய்யப்படுகிறதே நடத்தையாக இருக்கிறது; ஆனால் நம்முள்ளிருக்கிற தேவனுடைய ஜீவனிலிருந்து உற்பத்திசெய்யப் படுகிறது மட்டுமே ஜீவனாக இருக்கிறது. சில சகோதர சகோதரிகள் மிக அன்பாக, பொறுமையாக, தாழ்மையாக, இரக்கமாக இருக்கிறார்கள். முதல்முறை அவர்களைப் பார்க்கும்போது, அவர்க ளிடம் நிஜமாகவே ஜீவன் இருப்பதைப்போல் தோன்றுகிறது; ஆனால் இது உள்ளிருந்து வெளியே வளரும் ஜீவனல்ல; உண்மையில் இந்த நற்பண்புகள் அவர்களால் உருவாக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட வகை நடத்தை மட்டுமேயாகும். அவர்களுடைய நடத்தை மிகவும் முன்னேற்றப்பட்டிருந்தாலும்கூட, அவர்களுடைய ஜீவனின் வளர்ச்சி மிகக் குறைவாகவே இருக்கிறது.

ஜீவனும் நடத்தையும் உள்ளபடியே வித்தியாசமாயிருந் தாலும்கூட, புறம்பான தோற்றத்தில் பலமுறை ஒன்றுபோலவே இருக்கின்றன; மேலும் அவைகளை வேறுபடுத்துவது கடின மாகும். ஜீவனையும் நடத்தையையும் நாம் எவ்வாறு வித்தியாசப் படுத்தமுடியும்?

முதலாவது, அவைகளுக்கிடையேயுள்ள சுவை அல்லது வாசனையினால் அவைகளை வித்தியாசப்படுத்தலாம். ஒரு நடத்தை மிக நெருக்கமாக ஜீவனைப்போலவே இருக்கமுடியும். ஆனால் நிச்சயமாக அதற்கு ஜீவனின் சுவையோ வாசனையோ இருக்காது. எடுத்துக்காட்டாக, புறம்பானரீதியில் ஒரேமாதிரியாக தோன்றக்கூடிய இரண்டு மரங்கள் இருக்கக்கூடும். இருப்பினும்

ஒன்று ஜீவனை உடைய நிஜமான மரம், ஆனால் மற்றொன்று ஜீவன் இல்லாத செயற்கையான மரம். ஜீவனை உடைய நிஜமான மரத்தில் அநேகக் கனிகள் இருக்கின்றன, ஆனால் ஜீவன் இல்லாத செயற்கையான மரத்தில் யாரோ ஒருவர் சில கனிகளை வைத்திருக்கிறார்கள். இரண்டு மரங்களின் கனிகளும் ஒரே வடிவத்தையும் ஒரே நிறத்தையும் கொண்டிருக்கின்றன; புறம்பான தோற்றத்தில் அங்கே எந்த வித்தியாசமும் இல்லை. ஆனால் நாம் அந்தக் கனியை முகர்ந்தாலோ அல்லது சுவைத்தாலோ, உடனே நாம் வித்தியாசத்தைச் சொல்லமுடியும். நிஜமான கனி சுவைமிகுந்து இருக்கிறது, ஆனால் செயற்கையான கனி சுவையில்லாமல் இருக்கிறது; அது சுவைக்கக் கூடியதாக இல்லாமல் பார்க்கக்கூடிய தாக மட்டுமே இருக்கிறது. கிறிஸ்தவர்களாகிய நம் அனுதின வாழ்க்கையில் வெளிப்படுத்தப்படுவது எதுவோ அதுவும் இப்படித்தான் இருக்கிறது. சில சகோதர சகோதரிகளைப் பொறுத்த வரை, அவர்களுடைய அனுதின வாழக்கையின் தோற்றமும் நடத்தையும் அதிகமாக ஜீவனுக்குரியதைப்போலவே தோன்றி னாலும், நீங்கள் அதை கவனத்தோடு முகர்ந்துபார்த்தால், அங்கு ஜீவனின் வாசனை இருக்காது. சில சகோதரிகள் ஜெபம் மற்றும் ஐக்கியத்தில் மேடம் குயானைப்போலவே பாவனைசெய்கிறார்கள்; ஆனால் வாசனை சரியானதாக இல்லை. சில சகோதரர்கள் நசரேய னாகிய இயேசுவின் தாழ்மையைப் பாவனைசெய்கிறார்கள். அவர்கள் உண்மையாகவே ஒருபக்கம் வெளியார்ந்தரீதியில் நடித்தாலும், உள்ளார்ந்தரீதியில் வாசனை காணப்படவில்லை. இப்படிப்பட்டவைகள் மனிதர்களின் வேலைகள், ஜீவனின் வளர்ச்சியல்ல; இவை நடத்தையிலிருந்து வெளிவரும் நடிப்பு, ஜீவனின் வாழ்ந்துகாட்டுதல் இல்லை. இவ்வாறு கிறிஸ்தவர் களுடைய வாழ்க்கை ஜீவனிலிருந்து வருகிறதா அல்லது வெறுமனே ஒரு வகை நடத்தையா என்பதை அதன் சுவையினாலும், வாசனையினாலும், நாம் பகுத்துணரமுடியும். ஜீவனிலிருந்து வருகிற எல்லாம் ஜீவனின் சுவையை அல்லது வாசனையை, அதாவது தேவனுடைய சுவையை அல்லது வாசனையைக் கொண்டிருக்கிறது; அது நடத்தையாக மட்டுமே இருந்தால், அதற்கு மனிதனின் சுவையும் வாசனையும் மட்டுமே இருக்கும்.

இரண்டாவதாக, சுற்றுச்சூழல் மாற்றங்களின் பரீட்சையின் மூலம் நாம் ஜீவனையும் வாசனையையும் வேறுபடுத்தமுடியும். ஜீவனிலிருந்து வருகிறதெல்லாம் சுற்றுச்சூழல் மாற்றத்தின் போது நிற்கமுடியும்; அது தாக்கப்பட்டாலும்கூட, அப்போதும் அது தப்பிப்பிழைக்கமுடியும். ஆனால் நடத்தை அப்படிப்பட்டதல்ல. ஒரு தாக்குதல் வருகிற அந்தக் கணத்தில், சுபாவத்தில் மாறிவிடுகிறது அல்லது அது மறைந்துவிடுகிறது. எடுத்துக்

காட்டாக, பூமியில் ஒரு உயிருள்ள விதையை நாம் புதைத்தால், அது வளர்ந்து அதிக கனிதரும். ஆனால் பூமியில் உயிரற்ற ஒரு கல்லைப் புதைத்தால், அதிலிருந்து எதுவும் வெளிவராது. அநேக நேரங்களில், ஒரு கிறிஸ்தவன் வெளிப்படுத்துவது ஜீவனா அல்லது நடத்தையா என்பதை வேறுபடுத்துவது மிகக்கடினமாகும்; மேலும் வேறு நேரங்களில், அதன் சுவையினால் அல்லது வாசனையினால் வித்தியாசப் படுத்துவது இன்னும் கடினமாகும். அப்போது சுற்றுச்சூழல் மாற்றத்தை மட்டுமே நாம் பரீட்சையாக அனுமதிக்க முடியும். ஒரு கிறிஸ்தவனுக்கு சுற்றுச்சூழல்மூலம் வசீகரங்கள், சோதனைகள், இக்கட்டுகள், தாக்குதல்கள் ஆகியவைகளை தேவன் அனுமதிக்கும்போது, அவனிடம் இருப்பது தேவ னுடைய ஜீவனி லிருந்து வருகிறதாக இருந்தால், இந்த எல்லா சூழ்நிலைகளினூடாகக் கடந்துசென்றபின்பும், அது இன்னும் தாக்குப்பிடிக்கமுடியும். மேலும் அது இன்னும் அதிகமாக வெளிப்படுத்தப்படும். இது ஏனென்றால், தேவனுடைய ஜீவன் மாபெரும் உயிர்த்தெழுந்த வல்லமையை அடக்கியிருக்கிறது; அது தாக்குதல், அழிவு, மரணம் போன்றவைகளுக்கு அஞ்சாது, மேலும் எந்த எதிரிடையான சுற்றுச்சூழலாலும் அதை அடக்கிவிடமுடியாது; இதற்கு மாறாக, அது எல்லாவற்றையும் உடைத்தெறிந்து, எல்லாவற்றையும் மேற்கொண்டு, சீரழியாமல் என்றென்றும் செழித்தோங்குகிறது. இருப்பினும், அவனிடம் இருப்பது வெறுமனே மனித நடத்தையி லிருந்து வருவதாக இருந்தால், அது எதிரிடையான சுற்றுச்சூழலை, தாக்குதல்களை, அழிவை, சோதனைகளை சந்தித்த உடனே, அது அதன் சுபாவத்தை மாற்றிவிடுகிறது அல்லது அது மறைந்து விடுகிறது. எல்லா மனித நடத்தைகளும் மனித உழைப்பிலிருந்து வருவதால், அது தாக்குதல்களை அல்லது அழிவை தாங்கிநிற்க முடியாது; அது சோதனைகளையோ, பரீட்சைகளையோ மேற்கொள்ளவும் முடியாது; சுற்றுச்சூழல் மாறின உடனே, அது எப்போதும்போல நிலைத்திருக்க கஷ்டப்படுகிறது.

ஒருமுறை மேடம் குயானைப்போல, எந்தச் சுற்றுச்சூழலைச் சந்தித்தாலும் கலக்கமடையாத ஒரு சகோதரி இருந்தாள்; அவள் எப்போதும் எல்லாவற்றையும் அமைதியாக எடுத்துக் கொள்வாள். அவள் புறம்பானரீதியில் மேடம் குயானைப்போல் நடிக்கக் கற்றுக்கொண்டது மட்டுமல்ல; அவளுடைய சுவையும் மணமும்கூட மேடம் குயானுக்கு ஒத்திருந்தது. ஒரு நாள் வந்தது, அவளுடைய நேசகுமாரன் "ஒரே மகன் ஐசக்" திடீரென நோய் வாய்ப்பட்டான். அப்போது அவள் கற்றுவைத்திருந்த எல்லாம் நழுவி ஓடிவிட்டன. மேலும் எல்லாரையும்விட மிகவும் அதிகமாக கவலைப்பட்டாள். இதற்குமுன் அவள் கவலையில்லாதவள்போல் காட்டிக் கொண்டது, மனித முயற்சியினாலானது என்பதையே

இது நிரூபிக்கிறது. ஆகையால் அது பரீட்சையில் நிலைநிற்க முடியவில்லை.

ஆகவே சகோதர சகோதரிகளின் ஆவிக்குரிய நிலைமையைப் பற்றி நாம் அவசரப்பட்டு தீர்ப்புக்கூறிவிடக்கூடாது அல்லது அவர்களுடைய வாழ்க்கையின் வெளிப்படுத்துதலைப் பார்த்து விரைவாக புகழ்ந்துவிடவும்கூடாது. நம் கணிப்பும் உணர்வுகளும் பெரும்பாலும் உண்மையானவை இல்லை. தேவன் காலத்தால் நிரூபித்திருப்பது மட்டுமே சரியானதாக இருக்கிறது. வெறுமனே மனித நடத்தையாக இருப்பது காலப்போக்கில் விழுந்துபோய் விடும்; அது சுபாவத்தில் மாறிவிடும் அல்லது அது அழிந்து போய்விடும். இருப்பினும் தேவனுடைய ஜீவனிலிருந்து வருகிறவைகள் மட்டுமே காலப்போக்கில் நிலைநிற்கும். காலம் கொண்டுவருகிற இந்தச் சோதனை தேவனுக்குரியதாகும். இது, ஜீவன் என்றால் என்ன மற்றும் நடத்தை என்றால் என்ன என்பதை நாம் பார்க்கும்படிச்செய்கிறது.

ஜீவனுக்கும் நடத்தைக்கும் உள்ள வித்தியாசத்தை விளக்கு வதற்கு, இங்கு சில தனிப்பட்ட காரியங்களை நான் குறிப்பிடுகி றேன். நான் கர்த்தருக்குள் விசுவாசித்த உடனே, குருமடங்களில் உள்ளவர்கள் தங்கள் அனுதின வாழ்க்கை யிலும், நடத்தையிலும், மனப்பாங்கிலும், பக்தியோடு இருப்பார்கள், மேலும் தேவனைப் பொறுத்தவரை மிகவும் கனத்துக்குரியவர்கள் என்று நான் கேள்விப் பட்டேன். இதை நான் கேள்விப்பட்டபோது, அவர்களை மிகவும் வியந்து பாராட்டினேன். அப்போதிலிருந்து குருமடங்களிலுள்ள மாணவர்களின் பக்தியுள்ள வாழ்க்கையை வாழும்படித் தீர்மானித்தேன். முன்பிருந்ததைவிட முழுவதும் வித்தியாசமான ஒரு நபராக இருக்கிற கிறிஸ்தவனாகும்படி விரும்பினேன். இவ்வாறு நடப்பதற்கும் கற்றுக்கொள்வதற்கும் முயற்சிசெய்தேன். இப்படிப்பட்ட செயலும் கற்றுக்கொள்ளுதலும் ஜீவனிலிருந்து வருபவையல்ல. ஆனால் வெளியார்ந்த ஆதிக்கத்திலிருந்தும், என் இருதயத்திலுள்ள பாராட்டுதலிலிருந்தும் வருபவையாகும். மற்றவர்களைப்போல பாவனைசெய்வதற்கு என் சொந்த முயற்சியைக்கொண்டு என்னால் இயன்றவரை முயற்சிசெய்தேன்; எனவே அது முற்றும்முடிய ஒரு வகை நடத்தையாகவே இருந்தது.

மற்றுமொரு எடுத்துக்காட்டைப் பரிசீலிக்கலாம். அந்தக் காலத்தில், புதிய வருடத்தை கொண்டாடும் பழக்கம் சீனர்களி டையே மேலோங்கி இருந்தது. இருப்பினும் கர்த்தருடைய விடுதலையின்மூலம் எனக்குள் இப்படிப்பட்ட காரியங்களுக்கு எந்த இடமும் இல்லாதிருந்தது. அந்த வருடத்தின் முதல் நாள் காலையில், நான் படுக்கையிலிருந்து எழுந்தபிறகு, வழக்கம்போல முழங்கால்படியிட்டு ஜெபித்து, வேதத்தை வாசித்து, கர்த்தருடைய

பிரசன்னத்தை அனுபவித்தேன். நான் ஜெபத்தை முடித்து எழுந்தவுடனே, எனக்காக ஆயத்தமாயிருந்த புதிய உடுப்பைப் போட்டுக்கொள்ளும்படி என் அம்மா என்னிடம் கூறினாள். நான் அதை சாதாரணமாக எடுத்து அணிந்துகொண்டேன். மேலும் புதுவருட விருந்து சாப்பிடுவதற்கு என் குடும்பத்தாரோடு சென்றேன். நான் சாப்பிட்டுவிட்டு திரும்பவும் என் அறைக்கு வந்தபோது, நான் மீண்டும் முழங்கால்படியிட்டு ஜெபித்தேன். ஆனால் ஆச்சரியப்படும்படி எனக்குள் தேவனுடைய பிரசன்னத்தை இழந்துவிட்டேன். எனக்குள்ளிருந்த தேவன் என்னைவிட்டு போய் விட்டதைப்போல் உணர்ந்தேன். அப்போது நான் அந்த உடுப்பை அணிந்திருக்கக்கூடாது என்ற ஆழமான உணர்வு எனக்கிருந்தது. உடனே நான் அதை கழற்றிவிட்டு, என் பழைய உடுப்பை அணிந்துகொண்டேன். பின்பு மீண்டும் ஜெபித்தேன். இந்த முறை நான் தேவனுடைய பிரசன்னத்தைத் தொட்டேன்; தேவன் திரும்பி வந்ததுபோல் உணர்ந்தேன்.

ஆ! சகோதர சகோதரிகளே, இதுதான் ஜீவன்! இது ஒரு புறம்பான உற்சாகமோ, தீர்மானமோ, நடத்தையோ இல்லை; இது ஒரு போதனையோ, பயிற்சியோ, பாவனையோ இல்லை. எனக்குள் மிக ஆழமான பகுதியில் இருந்த தேவனுடைய ஜீவன் எனக்கு ஒரு குறிப்பிட்ட உணர்வைத் தந்து, நான் அந்தப் புதிய உடுப்பைப் போட்டுக்கொள்ளக்கூடாது என்று எனக்குத் தெரியப் படுத்தியது. உள்ளிருந்த இந்த உணர்வு என்னைத் தப்புவிக்கிற ஜீவனின் வல்லமையாகவும் இருந்தது. அந்த நாளிலிருந்து பண்டிகை கொண்டாடும் பழக்கம் முழுமையாக என்னைவிட்டுப் போய்விட்டது. புறம்பான பாராட்டுதல் மற்றும் பாவனைசெய்தல் என்ற முந்தைய எடுத்துக்காட்டிலிருந்து இது எவ்வளவு வித்தியாச மானது. இதுவே ஜீவனின் வெளிப்படுத்துதலாகும்.

ஷங்காயில் 1940-ல் உடன்-வேலையாட்களுக்காக ஒரு பயிற்சிக்கூட்டம் நடந்தது, அநேகர் வந்திருந்தார்கள். அப்போது ஒரு சகோதரன், "இங்கே தங்கியிருக்கிற சகோதர சகோதரி களுடைய ஜீவனின் வளர்ச்சி போதுமானதில்லை யென்றால் அவர்கள் இன்னும் அதிகமாகச் செயல்பட வேண்டும்" என்று என்னிடம் கூறினார். இந்த வார்த்தைகள் மிகவும் அர்த்தமுள்ள வைகள், ஏனென்றால் அப்படிப்பட்ட சூழ்நிலையில், ஒருவர் இயல்பாகவே கொஞ்சம் அதிக பக்தியாக, கொஞ்சம் அதிக ஆவிக்குரியவராக செயல்படுவார். இந்த நடவடிக்கை களெல்லாம் ஜீவன் இல்லை.

எப்போதெல்லாம் ஒரு குறிப்பிட்ட சுற்றுச்சூழலின் ஆதிக்கத்தின் காரணமாகவும், பாராட்டுதல் அல்லது பயத்தின் காரணமாகவும் ஒரு குறிப்பிட்ட வாழ்க்கை முறையை வாழ்கிறோமோ,

அப்போதெல்லாம் இப்படிப்பட்ட வாழ்க்கை வெறும் ஒரு நடிப்பாக, ஒரு வகை நடத்தையாக இருக்கிறது; மேலும் ஒருநாள், அந்தச் சுற்றுச்சூழல் மாறுகிறபோது, அதுவும் மாறிவிடுகிறது. இவ்வாறு நம் வாழ்க்கை சுற்றுச்சூழலின் ஆதிக்கத்தினுடைய விளைவாக இருக்கக்கூடாது, மாறாக உள்ளிருக்கிற ஜீவனின் உணர்வாக இருக்க வேண்டும். புறம்பான சுற்றுச்சூழல் எனக்குப் பொருந்துகிற போது நான் அப்படி வாழ்கிறேன்; புறம்பான சுற்றுச்சூழல் எனக்குப் பொருந்தாதபோதும் நான் அப்படியே வாழ்கிறேன். சுற்றுச் சூழல் மாறக்கூடும், ஆனால் என் வாழ்க்கை மாறக் கூடாது. இப்படிப் பட்ட வாழ்க்கைதான் ஜீவனுக்குரியதாக இருக்கிறது.

ஜீவனுக்கும் நடத்தைக்குமுள்ள வித்தியாசத்தை நாம் பார்த்திருக்கிறபடியால், இப்போது நம் சொந்த வாழ்க்கையை ஆராய்ந்து அதை ஒவ்வொரு குறிப்பாகப் பரிசோதிக்க வேண்டும். அதில் எவ்வளவு நடிப்பு இல்லை? அதில் எவ்வளவு பாவனைசெய்தல் இல்லை? அதில் எவ்வளவு நம்முள்ளிருந்து ஜீவன் வாழ்ந்துகாட்டப்படுகிறது? என்று இந்த வழியில் ஒருமுறை நம்மை பரிசோதித்தால், அதில் அதிக மானவை புறம்பான தாக்கத்தினால் ஏற்படும் வெளிப்பிரகாரமான குறிப்பிட்ட ஒழுங்கு முறைகளுக்கான நடத்தையாக, பாவனைசெய்தலாக, பணிந்தடங்குதலாக, ஒத்திகைசெய்தலாக மட்டுமே இருப்பதை நாம் பார்க்கமுடியும்; அதற்குரிய மிகச்கொஞ்சம் மட்டுமே உள்ளிருக்கிற ஜீவனால் வாழ்ந்துகாட்டப்படுவதாக இருக்கிறது. நாம் முற்றும் முடிய மனித உழைப்பின் நடத்தையை இன்னும் கைவிட்டுவிடவில்லை என்பதையே இது சுட்டிக்காட்டுகிறது.

பின்பு எவ்வாறு மனித உழைப்பை விட்டுவிட்டு, ஜீவனை வாழ்ந்துகாட்டுவது? மற்றவர்கள் உற்சாகப்படுத்துவதிலிருந்தும், போதனையிலிருந்தும், அல்லது ஒருவனுடைய சொந்த பாவனையிலிருந்தும், பயிற்சியிலிருந்தும், பிறப்பதே நடத்தையாக இருக்கிறது என்பதை நாம் உணரவேண்டும். ஆனால் ஜீவன் தேவனுடைய பிரகாசித்தலிலிருந்து வருகிறது. நடத்தைக்கு எந்தப் பிரகாசித்தலும் தேவையில்லை; அதை மனித முயற்சியினால் செய்யமுடியும். இருப்பினும் ஜீவன் வெளிச்சத்தின் பிரகாசத்தினால் மட்டுமே உற்பத்திசெய்யப் படமுடியும். ஆகையால், நாம் நடத்தையிலிருந்து விடுதலையாக்கப்பட்டு, ஜீவனை வாழ்ந்துகாட்ட விரும்பினால், நாம் பிரகாசிப்பிக்கப்பட வேண்டும். பிரகாசிக்கப் படாமல், நாம் நடத்தையை மட்டுமே உருவாக்கமுடியும்; ஆனால் வெளிச் சத்தின் பிரகாசித்தலைக்கொண்டு, நாம் ஜீவனை வாழ்ந்து காட்டமுடியும்.

## II. ஜீவன் வெளிச்சத்திலிருந்து வருகிறது

ஜீவன் வெளிச்சத்தின் பிரகாசித்தலிலிருந்து வருகிறது என்று முழு வேதாகமும் வெளிப்படுத்துகிறது. வெளிச்சம் நுழைகிறபோது, ஜீவன் பின்தொடர்ந்துவருகிறது. எங்கு வெளிச்சம் இருக்கிறதோ, அங்கு ஜீவன் இருக்கிறது. ஜீவனின் அளவு, வெளிச்சத்தின் அளவுக்கு நேர்விகிதத்தில் இருக்கிறது. தேவன் தம் மீட்டுத் திருப்பும் வேலையைத் தொடங்குவதற்கு முன்பு, முழு பூமியும் வெறுமையாகவும் இருளாகவும் இருந்தது என்று ஆதியாகமம் ஒன்று இரண்டு அத்தியாயங்கள் கூறுகின்றன. இதன் அர்த்தம் அது மரணத்தைக்கொண்டு நிரப்பப்பட்டிருந்தது, ஏனென்றால் இருள் மரணத்தின் சின்னமாகும். ஆகையால் வெளிச்சம் உண்டாகக்கடவது என்று கட்டளையிட்டதே தேவனுடைய வேலையின் முதல்படியாக இருந்தது. வெளிச்சம் வந்தபிறகு, அது இருளுக்கு உரிய மரணத்தை அழித்து, ஜீவனைக் கொண்டுவர ஆரம்பித்தது. இவ்வாறு, ஜீவன் வெளிச்சத்தைப் பின்தொடர்கிறது, மேலும் ஜீவன் ஒளியிலிருந்து ஆரம்பிக்கிறது.

முதலாவது நாளில் தேவன் வெளிச்சத்தைக் கட்டளையிட்டார்; பின்பு மூன்றாவது நாளில் தாவர ஜீவன் கொண்டுவரப்பட்டது. தாவர ஜீவனுக்கு, முதல் நாளின் வெளிச்சம் போதுமானதாக இருந்தது. இருப்பினும் உயர்வான ஜீவனுக்கு பலமான வெளிச்சம் தேவைப்பட்டது. ஆகையால், தேவன் நான்காவது நாளில், சூரியனும் சந்திரனும் நட்சத்திரங்களும் பிரகாசிக்கும்படிக் கட்டளையிட்டார். இந்த முறையில், உயர்வான ஜீவன் கொண்டுவரப்பட்டது. பறவைகள், மீன்கள், மிருகங்கள், எல்லா வகையான விலங்கு ஜீவன்கள் மட்டுமல்ல, தேவனுடைய சாயலில் இருந்த மனித ஜீவனும்கூட அங்கே இருந்தது. இறுதியாக, ஏழாவது நாளில் ஜீவமரத்தால் பிரதிநிதித்துவப் படுத்தப்பட்ட தேவன் வந்தார். மிகஉயர்ந்த ஒளியாகிய தேவன், தம் ஜீவனாகிய மிகஉயர்ந்த ஜீவனைக் கொண்டுவந்தார். ஜீவனின் பல்வேறுவகையான தோன்று தலின் வழிமுறை, ஜீவன் எப்போதும் வெளிச்சத்தைப் பின்தொடர்ந்து செல்கிறது என்பதை நமக்குக் காட்டுகிறது. ஜீவன் எப்போதும் வெளிச்சத்துடன் ஆரம்பிக்கிறது, மேலும் வெளிச்சம் எவ்வளவு பலமாகிறதோ ஜீவன் அவ்வளவு உயர்வாகிறது.

முதலாவது நாளின் வெளிச்சம் உறுதியானதாக இல்லை; ஆகையால் தாழ்வான ஜீவனை, அதாவது உணர்வற்ற ஜீவனாக இருக்கிற தாவர ஜீவனைக் கொண்டுவந்தது. இது, முதலாவது இரட்சிக்கப்பட்டபோது, உள்ளே நாம் பெற்றுக்கொண்ட வெளிச்சத்தின் பிரகாசத்தை அடையாளப்படுத்துகிறது (2 கொரி. 4:6). இந்த வெளிச்சம் தேவனுடைய ஜீவனை நமக்குள் கொண்டுவந்தாலும்கூட, அது ஜீவனின் ஆரம்பநிலையை, அதாவது

அதிக சாரமற்ற, மேலும் உருவமற்ற ஜீவனை மட்டுமே நமக்குப் பகிர்ந்தளித்தது.

நான்காவது நாளின் வெளிச்சம் முதலாவது நாளின் வெளிச்சத்தைவிட மிகப்பலமாக இருந்தது. அது அதிகத் தெளிவாக வும் திட்டவட்டமாகவும் உறுதியாகவும் இருந்தது. ஆகையால், அது விலங்கு ஜீவனாகிய உயர்ந்த ஜீவனைக் கொண்டுவந்தது. வெளிச்சம் திடமாகவும் பலமாகவும் இருந்ததால் ஜீவனும் திடமாக வும் பலமாகவும் இருந்தது. வெளிச்சம் முன்னேறிச்செல்லும்போது, அதைத்தொடர்ந்து ஜீவனும் முன்னேறிச்செல்கிறது. இது நம் அனுபவத்தை அடையாளப்படுத்துகிறது: அதாவது, பலமான, தெளிவான, அதிக திட்டவட்டமான, அதிக உறுதியான ஜீவனின் வெளிச்சத்தை நாம் நம்முள் பெறும்போது, நமக்குள் இருக்கிற ஜீவனும் வளர்ந்து, வடிவத்தில் அதிக திட்டவட்டமானதாக மாறுகிறது. இவ்வாறு, கிறிஸ்து நம்முள் "உருவாக்கப்படுகிறார்."

ஏழாவது நாளின் வெளிச்சம் மிகவும் உயர்வானது; ஆகையால், அது மிகஉயர்ந்த ஜீவனை, அதாவது ஜீவமரம் பிரதிநிதித்துவப் படுத்தின தேவனுடைய ஜீவனைக்கொண்டு வந்தது. வெளிச்சம் உச்சியை அடையும்போது, ஜீவனும் சிகரத்தை எட்டுகிறது. வெளிச்சம் பூரணமாகும்போது, ஜீவனும் முழுமையடைகிறது. நம்முள் நாம் பெற்றுக்கொள்ளும் வெளிச்சத்தின் பிரகாசம் உச்சியை அடைந் திருக்கும்போது, நம் ஆவிக்குரிய ஜீவனும் நிறைவாகி, முதிர்ச்சியடைந்திருக்கும், அதாவது முற்றும்முடிய தேவனைப்போலவே இருக்கிற நிலையை அடைந்திருக்கும்.

ஜீவன் வெளிச்சத்தைப் பின்தொடர்ந்துசெல்லுகிறது என்று ஆதியாகமம் ஒன்று இரண்டு அத்தியாயங்களில், பரிசுத்த ஆவியானவர் தொடர்ச்சியாக நமக்குக் காட்டுகிறார். முதலாவது நாள், நான்காவது நாள், ஏழாவது நாள் என்று வெளிச்சம் மூன்று நிலைகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது; ஆகையால் ஜீவனும்கூட மூன்று நிலைகளாக பிரிக்கப்பட்டிருக்கிறது. வெளிச்சம் ஒவ்வொரு நிலையின் தொடக்கத்தையும் அடையாளப்படுத்துகிறது. ஒரு குறிப்பிட்ட நிலையின் வெளிச்சம், அந்தக் குறிப்பிட்ட நிலையின் ஜீவனைக் கொண்டுவருகிறது. அந்த நிலையில் உள்ள வெளிச்சத்தின் அளவுதான் அது கொண்டுவருகிற ஜீவனின் அளவைத் தீர்மானிக்கிறது.

நான்காவது நாள் வெளிச்சத்தில் படைக்கப்பட்ட மனிதன், ஏழாவது நாள் வெளிச்சத்தில் வெளிப்படுத்தப்பட்ட ஜீவமரத்தைத் தொட்டு, இதன்மூலம் அந்த மரம் பிரதிநிதித் துவப்படுத்துகிற படைக்கப்படாத ஜீவனைப் பெறவேண்டும் என்பதே தேவனுடைய நோக்கமாயிருந்தது. எதிர்பாராதவிதமாக, மனிதன் இந்த ஜீவனைப் பெற்றுக்கொள்வதற்குமுன்பு, சாத்தான் வந்து அவனைச்

சோதித்தான். நன்மை-தீமையுள்ள மரம் பிரதிநிதிப்படுத்துகிற, சாத்தானுடைய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி அவன் மனிதனைத் தூண்டினான். இதனால் மனிதன் கெடுக்கப்பட்டான். கெடுக்கப்பட்டதிலிருந்து, மனிதன் ஜீவமரத்தைத் தொடாதபடி, பின்பு ஜீவமரத்திற்குப் போகும் வழியை அடைக்க மட்டும்தான் தேவனால் முடிந்தது (ஆதி. 3:24). இந்த வழியில், ஏழாவது நாள் வெளிச்சத்தில் கொண்டுவரப்பட்ட ஜீவன் தூக்கியெறியப்பட்டது. பின்பு ஒரு நாள், தேவன்தாமே மாம்சமாகி, ஒளியாகவும் ஜீவனாகவும் இருக்கும்படி பூமிக்கு வந்தார். யோவான் அவரைப்பற்றிப் பேசும்போது, "அவருக் குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது" (யோவான் 1:4) என்று கூறுகிறார். "நான் உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன், என்னைப் பின்பற்றுகிறவன்... ஜீவஒளியை அடைந்திருப்பான்" (யோவான் 8:12) என்று அவரும் தம்மைப்பற்றிக் கூறுகிறார். அவரை விசுவாசித்துப் பெற்றுக்கொள்கிற எல்லாரும் அவரிலுள்ள இந்த ஜீவனைப் பெற்றுக்கொள்ளும்படி, ஏழாவது நாளின் வெளிச்சத்துடன் ஏழாவது நாளின் ஜீவன் மனிதர்களிடையே வெளிப்படுத்தப்பட்டது என்பதே கர்த்தராகிய இயேசு பூமிக்கு வந்ததின் அர்த்தமாகும். இந்த வழியில், தேவனுடைய ஆதி நோக்கம் நிறைவேறுகிறது.

வெளிப்படுத்தின விசேஷம் இருபத்தொன்று இருபத் திரண்டு அத்தியாயங்களில், புதியஎருசலேம் காணப்படு கிறது. அந்த நகரத்திற்குள் தேவனுடைய மகிமையின் வெளிச்சம் இருக்கிறது; ஆகையால் சூரியனின் வெளிச்சமோ சந்திரனின் வெளிச்சமோ அங்கு தேவையில்லை. இனி ஒருபோதும் இராக்காலம் அங்கு இருக்காது. அதேநேரத்தில், நகரத்தின் வீதியின் நடுவில், ஜீவத் தண்ணீருள்ள நதி இருக்கிறது, மேலும் நதியின் இருகரையிலும் ஜீவமரம் இருக்கிறது. இரட்சிக்கப்பட்டவர்களெல்லாரும் இலவசமாக ஜீவத்தண்ணீரைப் பருகி, ஜீவமரத்தில் பங்குபெறலாம். இவ்வாறு, அந்த நகரத்தின் உட்புறம் ஜீவனாலும் வெளிச்சத் தாலும் நிறைந்திருக்கிறது. ஒரு புறம், வெளிச்சம் இருளை விரட்டுகிறது; மறுபுறம், ஜீவன் மரணத்தை விழுங்குகிறது. இதுவே, ஏழாவது நாளின் வெளிச்சத்திலுள்ள ஜீவன் மனிதர்களால் பெற்றுக்கொள்ளப்பட்டு மனிதர்களோடு கலந்திணையும்போது ஏற்படுகிற மகிமையான காட்சியாகும். மேலும் இது வெளிச்சத் திலுள்ள ஜீவனாக மனிதர்கள் தேவனைப் பெற்றுக்கொண்டதின் இறுதி முழுநிறைவேற்றமாகும்.

ஜீவனையும் வெளிச்சத்தையும் ஒன்றாகச் சேர்த்து தொடர்ச்சியாகப் பேசுகிற ஒரு கோடு முழு வேதாகமத்திலும் இருப்பதை இந்த எல்லாப் பகுதிகளும் காட்டுகின்றன. எங்கு

வெளிச்சம் இருக்கிறதோ, அங்கு ஜீவன் இருக்கிறது. இதுவே வேதாகமத்திலுள்ள ஒரு மாபெரும் கோட்பாடாகும். "ஜீவ ஊற்று உம்மிடத்தில் இருக்கிறது; உம்முடைய வெளிச்சத் திலே வெளிச்சம் காண்கிறோம்" என்று சங்கீதம் *36:9* கூறுகிறது. இதுவும்கூட ஜீவனுக்கும் வெளிச்சத்திற்கும் இடையேயுள்ள உறவைப்பற்றி மிகத்தெளிவாகப் பேசுகிறது. ஜீவன் எப்போதும் வெளிச்சத்தைப் பின்தொடர்ந்துசெல்கிறது. மேலும் வெளிச்சம் மட்டுமே ஜீவனைக் கொண்டுவரமுடியும்.

ஆகையால், ஒரு மனிதனிலுள்ள ஜீவனின் நிலைமையை அறிய விரும்பினால், அவனுக்குள் பிரகாசிக்கப்படுதலின் தரத்தை நாம் பார்க்கவேண்டும். ஒரு மனிதன் கொஞ்சம் அதிகம் ஆர்வ முள்ளவனாக மாறினால், அவன் ஜீவனில் வளர்ந்திருக்கிறான்; அல்லது அவன் கொஞ்சம் அதிக பக்தியுள்ளவனாக இருந்தால், அவனுடைய ஜீவன் முன்னேறிவிட்டது என்று நாம் அடிக்கடி நினைக்கிறோம். இப்படிப்பட்ட கருத்துக்கள் முற்றிலும் சரியானதல்ல. ஜீவன் என்பது மனிதனுடைய ஆர்வத்தில் இல்லை, அவனுடைய பக்தியிலும் இல்லை. ஜீவனுக்கு ஒரேவொரு மண்டலமும், ஒரேவொரு ஊற்றும் மட்டுமே இருக்கிறது, அது வெளிச்சமே. ஜீவன் வெளிச்சத்துடன் தங்கியிருக்கிறது; ஜீவன் வெளிச்சத்திலிருந்து வருகிறது. ஒரு நபர் ஜீவனில் வளர்ந்திருக்கி றாரா என்பதைத் தீர்மானிப்பதற்கு, அவனுடைய உள்ளான பிரகாசித்தலின் நிலைமையை நாம் கவனிக்கவேண்டும்.

ஆகவே மற்றவர்கள் ஜீவனில் வளர நாம் உதவிசெய்ய விரும்பினால், அவர்கள் பிரகாசிக்கப்படுவதற்கு நாம் உதவி செய்யவேண்டும். மற்றவர்கள் நம்மிலிருந்து பிரகாசித்தலைப் பெறமுடிந்தால், அவர்கள் ஜீவனில் வளரமுடியும். எடுத்துக் காட்டாக, வார்த்தையின் ஊழியத்தில், நாம் கூறுவது எதுவோ அது வெறும் ஒருவகையான உற்சாகமாக அல்லது போதனை யாக இருந்தால், அது மக்களை உசுப்பி, மக்களை வசீகரித்து, அவர்களை நடத்தையில் முன்னேற்ற மட்டுமே செய்யமுடியும். அது ஜீவனின் முடிவான விளைவை உற்பத்திச்செய்ய முடியாது. நம் வேலையும்கூட ஒரு தற்காலிகமான பாதிப்பை மட்டுமே கொண்டிருக்கும். அதின் விளைப்பயன் நீடித்து நிற்கமுடியாது. நம்மில் நாம் பிரகாசிக்கப்பட்டு, வெளிச்சத்தின் பிரகாசித்தலில் வாழ்வோமானால், அப்போது நாம் விடுவிக்கிற வார்த்தைகள் வெளிச்சத்தைக் கொண்டுவரமுடியும். இது மனிதர்களுடைய உண்மையான கஷ்டங்களை வெளிப்படுத்துகிறது. (எல்லாக் காரியங்களும் கடிந்துகொள்ளப்பட்டு வெளிச்சத்தினால் வெளியரங்கமாகும் என்று கூறுகிற எபேசியர் *5:13* இதைக் குறிப்பிடுகிறது.) மனிதர்கள் இப்படிப்பட்ட வார்த்தைகளைக்

கேட்டபின்பு, அவர்கள் உபதேசத்தைத் தெளிவாக நினைவுகூறாமலிருக்கலாம், எனினும் அவர்களைத் தொடர்ச்சியாக அசைக்கிற, அவர்களைத் தொடுகிற, அவர்களுடைய அனுதின வாழ்க்கையின் மாற்றங்களை ஏற்படுத்துகிற ஜீவிக்கிற ஏதோவொன்று அவர்களுக்குள் ஆழத்தில் இருக்கிறது. இப்படிப்பட்ட மாற்றங்கள் மனித பிரயாசத்தினால் ஏற்பட்ட புறம்பான சீர்திருத்தமல்ல, மாறாக அவைகள் தனக்குள் பிரகாசிப்பித்தலை பெற்றுக்கொள்வதி லிருந்து வரும் ஜீவனின் வெளிப்படுத்துதலாயிருக்கின்றன; ஆகையால் இதன் விளைப்பயன் மாறாமல் நிலைத்திருக்கும்.

சுவிசேஷம் அறிவித்தலிலும் இதே கோட்பாடு பொருந்துகிறது. சுவிசேஷத்தை அறிவிக்கிற சிலர் தங்கள் வார்த்தைகளால் மனிதர்களை நம்பவைக்கமுடியும்; இருப்பினும் உள்ளிருக்கும் சுவிசேஷத்தினுடைய பிரகாசிக்கும் ஒளியை மனிதர்கள் தொடும்படிச்செய்யமுடியாது. ஆகையால் ஒரு மனிதன் தான் விசுவாசிக்கிறேன் என்று வாயினால் அறிக்கையிட்டு, விசுவாசிப்பதற்கு தன் இருதயத்தில் தீர்மானித்திருந்தாலும்கூட, அவன் மறுபடிபிறக்கவும் இரட்சிக்கப்படவும், உள்ளிருந்து ஜீவனைப் பெற்றுக்கொள்ளமுடியாது. இருந்த போதிலும், சுவிசேஷம் அறிவிக்கிற சிலர் முழுவதும் ஒளியினால் நிறைந்த வார்த்தைகளை அறிவிக்கிறார்கள். இதை மனிதர்கள் கேட்கிறபோது, சுவிசேஷத்தின் ஒளி அவர்களுக்குள் பிரகாசிக்கிறது. அவர்கள் தொடர்ந்து தங்கள் தலைகளை அசைத்து, “நான் விசுவாசிக்கவில்லை” என்று கூறினாலும், அவர்கள் வீட்டிற்குத் திரும்பிச் செல்லும்போது, “விசுவாசி, விசுவாசி” என்று அவர்களுக்குள்ளிருந்து ஏதோவொன்று தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறது. அப்போது அதை விசுவாசிப்பதைத்தவிர வேறொன்றும் அவர்க ளால் செய்யமுடியாது. இதுவே உள்ளிருந்து மனிதர்கள் ஜீவனைப்பெற்று, மறுபடிபிறந்து இரட்சிக்கப்படும்படிச் செய்கிற வெளிச்சத்தினுடைய அந்த பிரகாசித்தலின் விளைவாகும். ஜீவன் வெளிச்சத்திலிருந்து வருகிறது என்பதை இந்த எடுத்துக்காட்டுகளெல்லாம் வெளிப்படுத்துகின்றன. வெளிச்சத்துடன் ஜீவன் கொண்டு வரப்படமுடியும்; வெளிச்சம் இல்லாமல், ஜீவன் கொண்டுவரப்பட முடியாது. உள்ளபடியே ஜீவன் வெளிச்சத்திலிருந்துதான் உற்பத்தியாகிறது.

## III. வெளிச்சம் தேவனுடைய வார்த்தையில் இருக்கிறது

ஜீவன் வெளிச்சத்துடன் தங்கியிருக்கிறது என்றால், வெளிச்சம் எதனுடன் தங்கியிருக்கிறது? வெளிச்சம் தேவனுடைய வார்த்தையில் தங்கியிருக்கிறது என்று வேதாகமத்திலிருந்து நாம் பார்க்கிறோம். இதுவும் வேதாகமத்தில் மிகப்பெரிய

கோட்பாடாகும். "உம்முடைய வசனம் என் கால்களுக்குத் தீபமும் பாதைக்கு வெளிச்சமாயிருக்கிறது" என்று சங்கீதம் 119:105 கூறுகிறது. மேலும், "உம்முடைய வசனத்தின் பிரசித்தம் வெளிச்சம் தந்து..." என்று 130-ம் வசனம் கூறுகிறது. உண்மையாகவே வெளிச்சம் தேவனுடைய வார்த்தையில் தங்கியிருக்கிறது என்பதை இந்த வசனங்கள் நமக்குக் காட்டுகின்றன. ஆகையால் நாம் வெளிச்சத்தைப் பெறவிரும்பி னால், நாம் தேவனுடைய வார்த்தையைப் பெறவேண்டும். நாம் எப்போதெல்லாம் தேவனுடைய வார்த்தையைப் பெறுகிறோமோ, அப்போ தெல்லாம் நாம் வெளிச்சத்தைப் பெறுகிறோம். நாம் தேவனுடைய வார்த்தையில் குறைவாக இருப்பதே, நம்மிடம் வெளிச்சம் இல்லாததற்கான காரணமாகும்.

இங்கு நாம் பேசுகிற தேவனுடைய வார்த்தை என்பது வேதாகமத்திலுள்ள எழுதப்பட்ட வார்த்தையைக் குறிக்கவில்லை; மாறாக பரிசுத்த ஆவியானவர் உள்ளிருந்து பேசுகிற வார்த்தை யைக் குறிக்கிறது. வேதாகமம் தேவனுடைய எழுதப்பட்ட வார்த்தையாகும்; இது நிச்சயமாகவே சரிதான். ஆனால் பதிவுசெய்யப்பட்ட எழுத்துக்களால் தொகுக்கப் பட்டிருக்கின்ற இப்படிப்பட்ட வார்த்தை, பிரசாசித்தலின் வல்லமையைக் கொண்டிருக்கவில்லை, மேலும் அது நமக்கு வெளிச்சமாக இருக்க முடியாது. இருப்பினும், பரிசுத்த ஆவியானவர் வேதாகமத்தின் வார்த்தையைப் புதிதாக வெளிப்படுத்தி, அதை நமக்குத் திறந்துகாண்பித்து, உயிர்ப்பிக்கும்போது, வார்த்தைக்கு பிரகாசிக்கும் வெளிச்சத்தின் வல்லமை இருக்கிறது, மேலும் அது நம் வெளிச்சமாகவும் இருக்கமுடியும். நாம் வேதாகமத்தை வாசிக்க மட்டுமே செய்தால், அதாவது அதைத் திறம்பட வாசித்து இன்னும் அதை மனப்பாடம் செய்திருந்தாலும்கூட, நாம் பெற்றுக்கொள்ளு கிறவைகள் எழுத்துக்களின் உபதேசங்களாக இருக்கின்றன. இன்னும் நாம் தேவனுடைய வார்த்தையைப் பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறோம்; எனவே, நாம் வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ளவில்லை. நம் ஆவியிலுள்ள பரிசுத்த ஆவியானவர் நமக்கு வெளிப்பாட்டைத் தந்து, வேதாகமத்தின் வார்த்தைகளை நமக்குத் திறந்துகாண்பிக்கிறபோது மட்டுமே அந்த வார்த்தை தேவனுடைய ஜீவிக்கிற வார்த்தையாக மாறுகிறது, அது தேவனுடைய வெளிச்சத்தை நாம் பெற்றுக்கொள்ளும்படிச் செய்யமுடியும்.

"நான் உங்களுக்குச் சொல்லுகிற வசனங்கள் ஆவியாயும் ஜீவனாயும் இருக்கிறது" என்று யோவான் 6:63-ல் கர்த்தர் கூறினார். இங்கு கர்த்தர் வார்த்தைகள், ஆவி, ஜீவன் ஆகிய மூன்று காரியங்களையும் சேர்த்துப்பேசுகிறார். ஜீவனும் ஆவியும்

நம்முள்ளிருப்பதால் கர்த்தர் இங்கு பேசுகிற வார்த்தைகள், வெளியேயிருக்கிற வேதாகமத்தின் வார்த்தைகளல்ல, நம்முள் பேசப்பட்ட வார்த்தைகளைக் குறிக்கிறது என்பது தெளிவாகிறது. நமக்கு வெளியே இருக்கிற வார்த்தைகளெல்லாம் வெளிச்சமாக இல்லை வெறும் அறிவாகவே இருக்கின்றன. நம் ஆவிக்குள் நுழைகிற வார்த்தைகள் மட்டுமே தேவனுடைய ஜீவிக்கிற, பிரகாசிக்கிற, வார்த்தைகளாக இருக்கின்றன. நாம் வேதாகமத்தை வாசிக்கும்போது வாசிப்பதற்கும், பெற்றுக்கொள்ள நம் ஆவியைத் திறப்ப தற்கும் ஐக்கியத்தில் தொடர்ச்சியாக நம் ஆவியைப் பயிற்சி செய்தால் வேதாகமத்தின் வார்த்தைகள் நமக்கு ஆவியாகவும் ஜீவனாகவும் இருக்கும். அவைகள் நம் ஆவிக்குள் நுழைந்து, ஜீவிக்கிற வார்த்தைகளாக மாறி, ஜீவனின் ஒளியைக் கொண்டுவரமுடியும்.

வெளிச்சம் தேவனுடைய வார்த்தையில் இருப்பதால், நாம் தேவனுடைய வார்த்தையை மதிக்கவேண்டும். எப்போதெல்லாம் பரிசுத்த ஆவியானவர் நம்முள்ளிருந்து பேசுகிறாரோ, அப்போதெல்லாம் நாம் முற்றும்முடிய கீழ்ப்படியவேண்டும், புறக்கணிக்கவோ, கீழ்ப்படியாமலிருக்கவோகூடாது. அவருடைய வார்த்தைகக்கு நடுங்குகிறவனையே தேவன் நோக்கிப்பார்ப்பார் என்று ஏசாயா 66:2 கூறுகிறது. மேலும், தேவனுடைய வார்த்தைக்கு நடுங்குகிறவன் அவருடைய வார்த்தையைக் கேட்பான் என்று வசனம் 5 கூறுகிறது. நாம் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிய வில்லையென்றால், நாம் தேவனுடைய வெளிச்சத்தை நிராகரிக்கி றோம். எப்போதெல்லாம் நாம் வெளிச்சத்தை நிராகரிக்குமோ அப்போதெல்லாம் வெளிச்சம் மறைந்துவிடுகிறது. வெளிச்சம் மறைகிறபோது, ஜீவனும் போய்விடுகிறது, பரிசுத்த ஆவி யானவர் மற்றும் தேவனுடைய பிரசன்னம் திரும்பப் பெறப்படுகின்றன. மேலும் எல்லா ஆவிக்குரிய ஐசுவரியங்களையும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும்கூட இழந்துவிடுகிறோம். இது நிஜமாகவே ஒரு மிகப்பெரிய நஷ்டமாகும்! இவ்வாறு, எப்போதெல்லாம் ஒருவன் நிஜமாகவே தேவனை அறிந்து தேவனுடைய வார்த்தை யைத் தொடுகிறானோ, அப்போ தெல்லாம் அவன் பயந்து, நடுங்குகிறான். மேலும் புறக் கணிக்கவோ கீழ்ப்படியாமலிருக்க வோ துணியமாட்டான்.

தேவன் ஒருமுறை உன்னோடு பேசி அதற்குச் செவி சாய்க்காமல், மீண்டும் அவர் உன்னோடு பேசி, நீ அதற்குக் கீழப்படியாமல், மூன்றாவது முறை அவர் உன்னோடு பேசும் போதும் நீ அவரைப் போகவிட்டுவிட்டால், நிச்சயமாக உனக்குள் சிறிதளவு வெளிச்சம்கூட இருக்காது, கொஞ்சம் திறப்புகூட இருக்காது, எந்தவிதத்திலும் ஜீவனும்கூட நுழையமுடியாது. தேவன்

உன்னோடு பேசுகிறபோதெல்லாம் நீ அவருக்குக் கீழ்ப்படிந்தால், உன் அனுபவம் முற்றிலும் வித்தியாசமாக இருக்கும். தேவனுடைய வார்த்தைக்கு உன் முதலாவது கீழப்படிதல் உனக்குள் ஒரு திறப்பை உற்பத்திச் செய்கிறது, இதன்மூலம் வெளிச்சம் பிரகாசிக்கமுடியும். மீண்டும் நீ தேவனுடைய வார்த்தைக்குக் கீழப் படியும்போது, மீண்டும் ஒரு திறப்பு ஏற்படுகிறது, இதன்மூலம் அதிகமான வெளிச்சம் உள்ளாக பிரகாசிக்கமுடியும். இவ்வாறு நீ தொடர்ந்து கீழ்ப்படிந்தால், உடலைச்சுற்றிலும் கண்களால் நிறைந்த, ஒளிஊடுருவத்தக்க, வெளிச்சத்தால் நிறைந்த, ஜீவனால் நிறைந்த, நான்கு ஜீவன்களைப்போல் நீ இருப்பாய் (வெளி. *4:8*). எனவே, ஜீவன் வெளிச்சத்தில் இருக்கிறது, வெளிச்சம் தேவனுடைய வார்த்தையில் இருக்கிறது என்று நாம் பார்க்கிறோம்.

## IV. வெளிச்சம் உள்ளான உணர்வு

வெளிச்சம் தேவனுடைய வார்த்தையில் இருக்கிறது, இந்தத் தேவனுடைய வார்த்தை உள்ளிருந்து பரிசுத்த ஆவி யானவர் நமக்குப் பேசுகிற வார்த்தையைக் குறிக்கிறது என்று நாம் பார்த்திருக்கிறோம்; ஆகையால் நாம் பெறுகிற வெளிச்சம் ஒரு வெளியார்ந்த, அனுபவம்சாராத, வெளிச்சமல்ல; மாறாக ஒரு உள்ளார்ந்த, அனுபவம்சார்ந்த வெளிச்சமாகும்.

தேவனுடைய ஜீவன் கர்த்தராகிய இயேசுவில் இருக்கிறது, இந்த ஜீவன் மனிதருக்கு ஒளியாயிருக்கிறது என்றும் யோவான் *1:4* நமக்குச் சொல்லுகிறது. நாம் கர்த்தராகிய இயேசுவை நம் இரட்சகராகப் பெறும்போது, இந்த ஜீவன் நமக்குள் நுழைந்து, நம் “ஜீவனின் ஒளியாக” மாறுகிறது (யோவான் *8:12*). ஆகையால் கண்டிப்பாகப் பேசுவதானால், இந்த ஒளி, வெளியிலிருந்து நம்மைப் பிரகாசிக்கிற ஒரு அனுபவம்சாராத ஒளியல்ல; ஆனால் உள்ளிருந்து நம்மைப் பிரகாசிக்கிற அனுபவம்சார்ந்த ஒளியாக இருக்கிறது.

நாம் வெளிப்பாட்டின் ஆவியைப் பெறும்போது, நம் மனக் கண்கள் பிரகாசிக்கப்படுகின்றன என்று எபேசியர் *1:17-18* கூறுகிறது. இதற்கு உள்ளே வெளிச்சத்தின் பிரகாசித்தலைப் பெறுகிறோம் என்பது அர்த்தம். பரிசுத்த ஆவியானவரின் வெளிப் பாடு ஒரு உள்ளார்ந்த, அனுபவம்சார்ந்த காரியமாக இருப்பதால், இந்த வெளிப்பாட்டினால் கொண்டுவரப்படுகிற வெளிச்சமும் நிச்சயமாக நமக்கு வெளியிலிருக்கிற ஒரு அனுபவம்சாராததல்ல, மாறாக நம்முள் இருக்கிற அனுபவம் சார்ந்த வெளிச்சமாக இருக்கவேண்டும்.

வெளிச்சம் நம்முள் இருப்பதால், ஒவ்வொரு முறை வெளிச்சம்

பிரகாசிக்கிறபோதும், அது உள்ளே ஒரு குறிப் பிட்ட உணர்வைக் கொண்டிருக்கும்படிச் செய்கிறது. ஆகவே வெளிச்சம் நம் உள்ளான உணர்வு என்று நாம் கூறலாம். புதுவருட நேரத்தில் நான் அணிந்த உடுப்பின் எடுத்துக் காட்டைப் பரிசீலித்துப் பாருங்கள். நான் புதிய உடுப்பை அணிந்தபோது, எனக்குள் சமாதானத்தை உணரவில்லை. அந்த உணர்வு உள்ளான பிரகாசித்தலாக இருந்தது. ஆகவே உள்ளிருக்கிற வெளிச்சம் உள்ளான உணர்வாக இருக்கிறது; மேலும் உள்ளிருக்கிற உணர்வு உள்ளிருக்கிற வெளிச்ச மாகவும் இருக்கிறது. பத்து ஆண்டுகளுக்கு முன்பு உணர்வு என்ற இந்த வார்த்தையை நாம் மிக அரிதாகவே பயன்படுத்தினோம். இப்போது நாம் வெளிச்சத் தின் பிரகாசித்தலைப்பற்றிப் பேசினால், உணர்வைப்பற்றிய பேசுதலை நாம் தவிர்க்கமுடியாது, ஏனென்றால் உள்ளே நாம் கொண்டிருக்கிற எல்லா உணர்வுகளும் நாம் பெற்ற பிரகாசித்த லேயாகும் என்பதில் நாம் மிகத் தெளிவாக இருக்கிறோம்.

இன்று நாம் வெளிச்சத்தில் இருக்கிறோமா, இருளில் இருக்கிறோமா, நாம் அதிகமாக பிரகாசிக்கப்பட்டிருக்கிறோமா, கொஞ்சமாக பிரகாசிக்கப்பட்டிருக்கிறோமா என்பது நம்முள் ளிருக்கிற உணர்வின் நிலையைச் சார்ந்திருக்கிறது. உணர் வில்லாத ஒரு நபர் இருளில் இருக்கிறான், மேலும் அவன் தனக்குள் பிரகாசிக்க தேவனுடைய வெளிச்சத்தை அனுமதிப் பதில்லை. உணர்வுடைய நபர் வெளிச்சத்தில் இருக்கிறான், மேலும் தனக்குள் பிரகாசிக்க தேவனுடைய வெளிச்சத்தை அனுமதிக்கிறான். இவ்வாறு உணர்வினால் நிறைந்திருக்கிற ஒரு நபர் வெளிச்சத்தினால் நிறைந்து, ஒளிவுமறைவு இல்லாதவனாக இருக்கிறான்.

கர்த்தருக்கு முன்பாக சில சகோதர சகோதரிகளின் நிலைமை இதைப்போல இருக்கிறது. மற்றவர்கள் அவர்களைத் தொடர்பு கொள்ளும்போது, அவர்கள் ஒளிவுமறைவில்லாமலும், தெள்ளத் தெளிவாகவும் இருப்பதை மற்றவர்கள் உணர்கிறார்கள். அவர் பேசும்போதெல்லாம் அவர் ஒளிவு மறைவில்லாதவர் என்ற உணர்வை மற்றவர்களுக்குத் தருவார் என்று ஒரு சகோதரனைப் பற்றிக் கூறினார்கள். இந்த வார்த்தை உண்மையானது. சிலர் பேசும்போது, அவர்கள் ஒளிவுமறைவுயில்லாதவர்களாக இல்லை என்பதை நீங்கள் உணர்கிறீர்கள். வேறுசிலர் தங்களுக்குள் கொஞ்சம் வெளிச்சத்தைக் கொண்டிருக்கிறார்கள், ஆனால் அவர்கள் அவ்வளவு ஒளிவுமறைவுயில்லாதவர்களாக இல்லை என்பதை நீங்கள் உணர்கிறீர்கள். இன்னும் சிலர், அவர்கள் எழுந்து பேச ஆரம்பித்த உடனே, அவர்கள் முழுவதும் ஒளிவுமறைவு யில்லாதவர்கள் என்ற உணர்வை உட்செலுத்திவிடுகிறார்கள்.

உள்ளான உணர்வினால் நிறைந்திருப்பதால் அவர்கள் இப்படி இருக்கிறார்கள். அதிக உணர்வினால் நிறைந்திருக்கிற ஒரு மனிதன் அதிக ஒளிவுமறைவுயில்லாதவனாக இருக்கிறான் என்பது எப்போதும் சரிதான்.

நாம் எப்படி இந்த உணர்வினால் நிறைந்து, ஒளிவு மறைவி யில்லாமல் இருக்கமுடியும்? இது, பரிசுத்த ஆவியானவர் நம்மை பிரகாசிக்கிறபோதும், நமக்கு உணர்வைத் தருகிறபோதும் நாம் அவரை எவ்வாறு நடத்துகிறோம் என்பதைச் சார்ந்திருக்கிறது. பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படும் உணர்வுக்கு நாம் கீழ்ப்படியவில்லையென்றால், நாம் உள்ளாக ஒளிவுமறைவியில் லாமல் இருக்கமுடியாது. மேலும் நம் உணர்வு தவிர்க்கமுடியாத அளவுக்கு மெதுவாகி, மழுங்கிவிடுகிறது. நாம் மீண்டும் மீண்டும் கீழ்ப்படியாமலிருந்தால், நமக்குள் இருக்கிற உணர்வு அதிகமாக மழுங்கி, அதிகமாக மங்கிவிடுகிறது, காலம் செல்லச்செல்ல அது முழுவதுமாக இருளடைந்து, எந்த உணர்வுமே இல்லாததாகி விடுகிறது. பரிசுத்த ஆவியானவர் கொடுக்கிற உணர்வுக்கு நாம் தொடர்ந்து கீழ்ப்படியச் சித்தமாயிருந்தால், பரிசுத்த ஆவியானவர் நம்முள் அதிகமான இடத்தை ஆதாயப்படுத்து வார், மேலும் வேலை செய்வதற்கு அதிகமான வாய்ப்பைக் கொண்டிருப்பார்; உள்ளிருக்கிற பிரகாசித்தல் இன்னும் அதிகமதிமாக பிரகாசமாகி, உணர்வு அதிக உணர்வுள்ள தாகவும் அதிக கூருணர்வுள்ள தாகவும் மாறும்.

## V. பிரகாசித்தல் தேவனுடைய இரக்கத்தை சார்ந்திருத்தல்

எவ்வாறு நாம் பிரகாசித்தலைப் பெறமுடியும்? பிரகாசித்தல் எதைச் சார்ந்திருக்கிறது? தேவனுடைய பக்கத்திலிருந்து பேசி னால், பிரகாசித்தல் முற்றும்முடிய தேவனுடைய இரக்கத்தைச் சார்ந்திருக்கிறது. அவர் எவன்மேல் இரக்கமாயிருக்கச் சித்தமா யிருக்கிறாரோ அவன்மேல் இரக்கமாயிருக்கிறார், எவன்மேல் உருக்கமாயிருக்கச் சித்தமாயிருக்கிறாரோ அவன்மேல் உருக்க மாயிருக்கிறார் (ரோமர் 9:15). தேவன் யாருக்கு வெளிப்பாட்டைத் தருகிறாரோ அவன் வெளிப்பாட்டைப் பெறுகிறான். தேவன் யாருக்கு பிரகாசித்தலைத் தருகிறாரோ அவன் பிரகாசித்தலைப் பெறுகிறான். அது முழுக்கமுழுக்க தேவனுக்குரியதாகும்; அது நமக்குரியதல்ல. எனவே ஒருவனும் வெளிச்சத்தை உரிமைகோர முடியாது, மேலும் ஒருவனும் வெளிச்சத்தைக் கட்டுப்படுத்த முடியாது. வெளிச்சம் வரும்போது, நீங்கள் அதைத் தேடாமலே அது உங்களிடம் வருகிறது. வெளிச்சம் வரவில்லையென்றால், நீங்கள் அதைத் தேடினாலும்கூட, அது உங்களிடம் வராது. அது உதிக்கும் சூரியனைப்போன்றது. சூரியன் உதிக்கும்போது, அது

உதிக்கிறது. அது உதிக்க வேண்டாமென்று நீங்கள் விரும்பினாலும், அது உங்களுக்குச் செவிகொடுக்காது. சூரியன் உதயமாகாதபோது, அது உதிக்காது; அது உதிக்கவேண்டுமென்று நீங்கள் விரும்பினாலும், அது உங்களுக்கு செவிகொடுக்காது. இதைப்போல, தேவன் நம்மைப் பிரகாசித்தால், நாம் பிரகாசிக்கப் பட முடியும்; தேவன் நம்மைப் பிரகாசிக்கவில்லையென்றால், நம்மால் ஒன்றுமே செய்யமுடியாது. தேவனை எதிர்த்த சவுல் ஒருநாள் தமஸ்குவுக்குப் போகும்வழியில் வெளிச்சத்தைத் தேடும் இருதயமில்லாதவனாக இருந்தான்; பரலோகத்திலிருந்து ஒளி அவன்மேல் பிரகாசித்து, அவனை சாஷ்டாங்மாக விழச்செய்து, அவனை மிகப்பெரிய ஆசீர்வாதத்திற்கு உரியவனாக்கியது (அப். 9:3-4). தேவன் அவன்மேல் இரக்கமாயிருந்தார். இவ்வாறு தேவனுடைய ஒளி மனிதனுடைய கரத்தினால் கட்டுப்படுத்தப் படுவதில்லை, மாறாக தேவனுடைய கரத்தினால் கட்டுப் படுத்தப்படுகிறது. அது முழுக்கமுழுக்க தேவனுடைய இரக்கத்தைச் சார்ந்திருக்கிறது.

ஆகையால் நாம் பிரகாசிக்கப்பட வேண்டுமானால், நாம் தேவனுக் காக மட்டுமே காத்திருந்து, அவரை நோக்கிப்பார்த்து, அவரில் நம்பிக்கை வைக்கவேண்டும்; இதைத்தவிர நம்மால் வேறெதுவும் செய்யமுடியாது. நாம் மற்றக் காரியங்களைச் செய்யும்போது, நாமே தீர்மானிக்கமுடியும்; ஆனால் பிரகாசிக்கப் படுவதை நாம் தீர்மானிக்க முடியாது. இந்தச் சகோதரனுக்கு எப்படி வேதாகமத்தை வாசிக்கவேண்டு மென்று தெரியும், எனக்கும் வேதாகமத்தை வாசிப்பது எப்படியென்று தெரியும்; அவர் வேதாகமத்திலிருந்து வெளிச்சத்தைப் பெறமுடியும், நானும் வேதாகமத்திலிருந்து வெளிச்சத்தைப் பெறமுடியும், என்று நாம் கூறமுடியாது. இப்படிப்பட்ட மனமுள்ளவர்கள் வெளிச்சத்தைப் பெறுவது கடினமாகும்.

நாம் இயற்கையான வெளிச்சத்தைக் கட்டுப்படுத்த முடியா விட்டாலும், மின்சாரம், எரிகிற எண்ணைவிளக்கு, அல்லது மெழுகுவர்த்திமூலம் நம் சொந்த வெளிச்சத்தை உருவாக்க முடியும் என்று சிலர் சொல்லக்கூடும். இருப்பினும் நாம் ஆவிக்குரிய காரியங்களில் பிரகாசிக்கப்பட விரும்பினால், இப்படி நாம் செய்யமுடியாது. தேவன் பிரகாசிப்பதற்காக நாம் காத்திருந்துதான் ஆக வேண்டும். தேவன் நம்மைப் பிரகாசிக்கவில்லையென்றால், நாம் நிச்சயமாக வெளிச்சத்தைத் தயாரிக்கவோ அல்லது நாமாக வெளிச்சத்தைத் தேடவோகூடாது. இந்தக் காரியத்தைக்குறித்து, "உங்களில் எவன் கர்த்தருக்குப் பயந்து அவருடைய தாசனின் சொல்லைக் கேட்டு தனக்கு வெளிச்சமில்லாததினால் இருட்டிலே நடக் கிறானோ, அவன் கர்த்தருடைய நாமத்தை நம்பி, தன்

தேவனைச் சார்ந்துகொள்ளக்கடவன். இதோ, நெருப்பைக் கொளுத்தி, அக்கினிப்பொறிகளால் சூழப்பட்டிருக்கிற நீங்கள் அனைவரும், உங்கள் அக்கினி தீபத்திலும் நீங்கள் மூட்டின அக்கினி ஜீவாலையிலும் நடவுங்கள்; வேதனையில் கிடப்பீர்கள்; என் கரத்தினால் இது உங்களுக்கு உண்டாகும்" என்று ஏசாயா *50:10-11* கூறுகிறது. இதுவே முழு வேதாக மத்திலும், பிரகாசிக்கப் படும் காரியத்தைப்பற்றி மிகத்தெளிவாகப் பேசுகிற பகுதியாகும். ஒருபக்கத்தில், இது ஒரு சரியான வழியைக் குறிப்பிடுகிறது: நாம் தேவனுக்குப் பயந்து, அதாவது தேவனுடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிந்து, திடீரென்று இருளில் விழுந்து எந்த வெளிச்சமும் இல்லாதிருந்தால், கர்த்தருடைய நாமத்தை நம்பி, நம் தேவனைச் சார்ந்து, தேவனுடைய வெளிச்சம் பிரகாசிக்க காத்திருப்பதைத்தவிர, நாம் வேறெந்தக் காரியத்தையும் செய்யக்கூடாது. இது ஏனென் றால், தேவன் மட்டுமே ஒளியாக இருக்கிறார், தேவன் மட்டுமே ஒளியின் ஊற்றாக இருக்கிறார், மேலும் தேவனுடைய ஒளியில் மட்டுமே நாம் வெளிச்சத்தைக் காணமுடியும். மறுபக்கத்தில், நமக்கு வெளிச்சம் இல்லாதபோது, அக்கினியை மூட்டுவதினால், அல்லது நம் சொந்த வெளிச்சத்தை உருவாக்குவதினால் நாமாகவே வெளியேறும் வழியைக் கண்டுபிடிக்கக்கூடாது என்று இந்த வசனம் நம்மை எச்சரிக்கவும் செய்கிறது. ஏனென்றால், நாம் தேவனுக்கு காத்திருப்பதற்குப் பதிலாக, சுயமாக உருவாக்கப்பட்ட வெளிச்சத்தைக்கொண்டு நம்மை இடைகட்டிக்கொண்டால், சில காலம் நம் சொந்த அக்கினியின் வெளிச்சத்தில் நாம் நடந்தாலும் கூட, முடிவில் நாம் துக்கத்தில் விழுந்துவிடுவோம்.

அதேநேரத்தில், மற்றவர்களின் வெளிச்சத்தை நாம் கடன் வாங்கவும் முடியாது, அதாவது மற்றவர்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சத்தை நம் உபயோகத்திற்காக நாம் சொந்தமாக எடுத்துக்கொள்ள முடியாது. எடுத்துக்காட்டாக பாடுகளைச் சந்தித்த போது, சிலுவையின் இடைபடுதலை ஏற்றுக்கொண்டு எவ்வாறு தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டார் என்று ஒருவர் ஐக்கியகூட்டத்தில் சாட்சிகூறுவதாக வைத்துக்கொள்வோம். ஒரு குறிப்பிட்ட சகோதரன் இப்படிப்பட்ட சாட்சியை கேட்டபிறகு, அதிகமாகத் தொடப்பட்டு, வீட்டிற்குத் திரும்பிவந்து அந்தநாளிலிருந்து சிலுவையின் இடைபடுதலை ஏற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கக்கூடும். இது தானாக வெளிச்சத்தைத் தேடுவதோ, தானாகவே வெளிச்சத்தைத் தயாரிப்பதோ இல்லை, இது மற்றவர்களிடமிருந்து வெளிச்சத்தைக் கடன்வாங்குவதாகும்; இது மற்றவர்கள் பெற்றுக்கொண்ட வெளிச்சத்தை தன் சொந்தமாக எடுத்துக்கொள்வதாகும்; இப்படிச் செய்கிறவன் கொஞ்சகாலத்திற்குப்பிறகு, நிச்சயமாக இப்படிப்பட்ட வெளிச்சத்தை விட்டுவிடுவான். இவ்வாறு கடன்வாங்கிய

வெளிச்சத்தால் எந்தப் பயனும் இல்லை; அது நிஜமான வெளிச்சத்தின் இடத்தை எடுத்துக் கொள்ளமுடியாது.

நம்மிடையே தேவனுக்குப் பயந்து, அவருடைய சத்தத்தைக் கேட்டு, இருளை எதிர்கொள்கிறவர்கள், தேவனில் நம்பிக்கை வைத்து, தேவனைச்சார்ந்துகொண்டு, முழு இருதயத்தோடும் அவரை நோக்கிப்பார்த்து, அவருக்காக அமைதியாகக் காத்திருந்து, ஒருவிசை அவருடைய இரக்கத்தைத் தேடுவதைத் தவிர வேறு எதையும் செய்யக்கூடாது என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ள வேண்டும். எப்போதெல்லாம் தேவன் வருகிறாரோ, அதாவது எப்போதெல்லாம் தேவன் இரக்கத்தை அருளுகிறாரோ, அப்போதெல்லாம் அவருடைய முகத்தின் ஒளி நம் வெளிச்சமாகவும், அவருடைய தோன்றுதல் நம் தரிசனமாகவும், அவருடைய பிரசன்னம் நம் ஆதாயமாகவும் இருக்கிறது. நாம் அவரைத் தொட்டாலேபோதும், நாம் வெளிச்சத்தைப் பார்க்கிறோம். அவர் நம்மிடமிருந்து தம் முகத்தை மறைக்கிற அந்தக் கணத்தில் நாம் உடனடியாக இருளில் இருக்கிறோம். வெளிச்சத்திற்காக நாம் எவ்வளவு போராடினாலும் அதனால் எந்தப் பயனும் இல்லை; நாம் எவ்வளவு அதிகமாகப் போராடினாலும், அது வீணாகவே இருக்கிறது. நீங்கள் கொஞ்சம் அலட்சியமாயிருக்கிறீர்கள், எனவே நீங்கள் வெளிச்சத்தைப் பார்க்கமுடியாது, நான் கொஞ்சம் பக்தியாக இருக்கிறேன், ஆகையால் வெளிச்சம் வருகிறது; அல்லது நீங்கள் கொஞ்சம் சோம்பேறியாக இருக் கிறீர்கள், எனவே நீங்கள் வெளிச்சத்தைப் பார்க்கமுடியாது, நான் கொஞ்சம் ஜாக்கிரதையாக இருக்கிறேன், ஆகையால் நான் வெளிச்சத்தைப் பார்க்கிறேன் என்பதல்ல. பிரகாசித்தல் நம் பிரயாசத்தையோ, போராட்டத்தையோ சார்ந்ததல்ல, மாறாக தேவனுடைய இரக்கத்தையே சார்ந்ததாகும். ஐயகோ! இன்று எத்தனையோ பேர் விளக்கை எரிப்பதாலும், நெருப்பை மூட்டுவதாலும், தங்கள் சொந்த வெளிச்சத்தை உண்டுபண்ணு கிறார்கள். இருள் வரும்போது, விடியல்வரை, அதாவது சூரியன் உதிக்கும்வரை அவர்கள் காத்திருப்பதில்லை; அவர்கள் தாங்களாகவே அக்கினியை மூட்டி, தங்களுக்காக வெளிச்சத்தை உண்டுபண்ணுகிறார்கள். பிரகாசிக்கப்படுவ தற்கு தாங்களாகவே அக்கினியை மூட்டுகிற எல்லாரும் துக்கத்தில் முடிவார்கள் என்று தேவன் கூறுகிறார். இதுவே தேவனுடைய கட்டளை. எவ்வளவு பயங்கரமான காரியம் இது! தேவனுக்கு பயப்படுவதற்கும், அவருடைய இரக்கத்திற்காக அவரை நோக்கிப் பார்ப்பதற்கும் நம்மை நாம் ஒப்புக்கொடுப்போமாக.

## VI. பிரகாசிக்கப்படுவதற்கான வழி

பிரகாசிக்கப்படுதல் முற்றிலும் தேவனுடைய கட்டுப் படுத்தும்

கரத்தையும், முழுவதும் அவருடைய இரக்கத் தையுமே சார்ந்திருப் பதால், நாம் முற்றிலும் மந்தமாகவும் அலட்சியமாகவும்தான் இருக்க வேண்டுமா? இல்லை, நிச்சயமாக இல்லை. வேதாகமத்தின் போதனையிலிருந்தும் நம் அனுபவங்களிலிருந்தும், இன்னும் நமக்குப் பொறுப்புகள் இருக்கிறது என்று நாம் பார்க்கிறோம். "இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன்...எங்கள் இருதயங்களிலே *பிரகாசித்தார்*" என்று இரண்டு கொரிந்தியர் *4:6* கூறுகிறது. தேவன் ஏற்கெனவே நம்மேல் இரக்கமாயிருந்திருக்கிறார், அதாவது ஏற்கெனவே நம்மேல் பிரகாசித்திருக்கிறார் என்று இந்த வசனம் நமக்குச் சொல்லுகிறது. நம் இருதயங்களில் பிரகாசிக்கிற தேவனே நம் ஒளியாக இருக் கிறார். நாம் இரட்சிக்கப்பட்டவர்களாக இருக்கும்வரை, நாம் நம்முள் தேவனைக் கொண்டிருக்கிறோம், மேலும் நாம் ஒளியையும் கொண்டிருக்கிறோம். ஆகையால் இப்போது, நாம் ஒளிக்காக எவ்வாறு கேட்பது அல்லது ஒளியைத் தேடுவது என்பதல்ல கேள்வி, மாறாக நாம் எவ்வாறு பிரகாசிக்கப்படுதலைப் பெற்றுக்கொள்ள முடியும் அல்லது ஒளி பிரகாசிப்பதற்கு நாம் எவ்வாறு அனுமதிக்கவேண்டும் என்பதே கேள்வியாகும். சூரியன் ஏற்கெனவே உதயமாகி விட்ட பிறகு, மீண்டும் நாம் சூரியனைத் தேடவேண்டிய தேவையில்லை; நாம் அதன் பிரகாசத்தை மட்டுமே பெற்றுக்கொள்ள வேண்டும். முட்டாள்கள் மட்டுமே சூரியன் உதயமாகி பகலானபிறகு அதைத்தேடுகிறார்கள். "ஆதலால் தூங்குகிற நீ விழித்து, மரித்தோரைவிட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பார்" என்று எபேசியர் *5:14* கூறுகிறது. நீ விழித்தெழ வேண்டும்; பின்பு நீ பிரகாசித்தலைப் பெறுவாய். இவ்வாறு பிரகாசித்தல் என்பது பெற்றுக்கொள்கிற ஒரு காரியமாக, அதாவது ஏற்றுக்கொள்கிற ஒரு காரியமாக இருக்கிறது; அது உரிமையோடு கோருகிற அல்லது தேடுகிற காரியமல்ல. வெளிச்சத்தை ஏற்றுக்கொண்டு பிரகாசிக்கப்படுகிற வர்களாக இருக்கவேண்டுமானால், முக்காடுகளை நீக்குவதே நாம் சுமக்கும் பொறுப்பாகும். இது குறைந்தது பின்வரும் குறிப்புகளை உள்ளடக்கியது.

முதலாவது நாம் பிரகாசித்தலை விரும்பவேண்டும். வெளிச்சம் நாம் கேட்பதையோ தேடுவதையோ சார்ந்ததல்ல, மாறாக நம் ஏற்றுக்கொள்ளுதலையும் பெற்றுக்கொள்ளு தலையும் சார்ந்திருப்பதால், நாம் ஏற்றுக்கொள்ளவும் பெற்றுக்கொள்ளவும் விரும்புகிறோமா இல்லையா என்பதே நாம் பிரகாசிக்கப்படுவ தற்கான முதல் நிபந்தனையாகும். சூரியன் ஏற்கெனவே உதித்துவிட்டது; ஆகையால் நீ அதைத் தேடவோ அல்லது கேட்கவோ வேண்டியதில்லை; நீ அந்த வெளிச்சத்தினால் பிரகாசிக்

கப்பட்டு, வெளிச்சத்தின் பிரகாசித் தலைப் பெற்றுக்கொள்ள மட்டுமே வேண்டும். நீ அந்தப் பிரகாசித்தலைப் பெற்றுக்கொள்ள விருப்பமில்லாமல், அதாவது நீ பிரகாசிக்கப்பட விரும்பாமல் உன்னைத் தொடர்ச்சியாக மூடிக்கொள்வாயானால், பின்பு ஒவ்வொரு நாளும் சூரியன் அங்கு இருந்தாலும், அது உன்மேல் பிரகாசிக்கமுடியாது. ஜீவனின் வெளிச்சமும் இதைப்போலவே இருக்கிறது; அது ஏற்கெனவே நம்முள் பிரகாசித்திருக்கிறது. இன்று நாம் அந்த வெளிச்சத்திற்காக காத்துக்கொண்டிருக்கிறோம் என்பதல்ல, மாறாக அந்த வெளிச்சம் நமக்காகக் காத்துக் கொண்டிருக்கிறது. அந்த வெளிச்சம் நமக்குள் இருக்கிறது, அதாவது நாம் அதின் பிரகாசித்தலைப் பெற்றுக்கொள்ளும்படி நமக்காக மாறாமல் காத்துக்கொண்டிருக்கிறது. ஆகையால் நாம் பிரகாசிக்கப்படவும், பிரகாசித்தலை ஏற்றுக்கொள்ளவும் விரும்பினால், நாம் பிரகாசிப்பிக்கப்பட முடியும். நாம் அதை விரும்பாமலும், அதை ஏற்றுக்கொள்ளாமலும் இருந்தால் நாம் பிரகாசிக்கப்படுவது கடினமாகும்.

உண்மையில் இன்று வெகுசிலரே இந்தப் பிரகாசித்தலை விரும்புகிறார்கள். சிலர் விரும்பவில்லை, ஏனென்றால் தங்கள் இருதயத்தில் மெத்தனமாக இருக்கிறார்கள்; மற்றவர்களும் இதை விரும்பவில்லை, ஏனென்றால் அதைப் புறக்கணிக்கும்படி ஏற்கெனவே தீர்மானித்துவிட்டார்கள். நம்முள்ளிருக்கிற வெளிச்சத் திற்கு ஆயிரக்கணக்கான காரியங்கள் திரைகளாக மாறியிருக்கின்றன. அந்தத் திரைகள் நீக்கப்படுவதற்கு நாம் விரும்பவில்லையென்றால், நாம் பிரகாசத்தை விரும்பாதவர்க ளாகவும், அதைப் புறக்கணிப்பவர்களாகவும் இருப்போம். பின்பு நாம் இயல்பாக பிரகாசிக்கப்படுவதற்கு வேறெந்த வழியும் இல்லை. எடுத்துக்காட்டாக காலையில் நாம் வேதாகமத்தை வாசித்து ஜெபிக்கும்போது, நிஜமாகவே நாம் பிரகாசத்தை விரும்பினால், அது நிச்சயமாக வரும். பிரகாசம் வருகிறபோது, உள்ளார்ந்தரீதியில் ஏதோவொன்றை நாம் பார்க்கமுடியும். இந்தப்பார்த்தலே நம் உள்ளான உணர் வாகும். எப்போதெல்லாம் நாம் நம்முள் ஒரு குறிப்பிட்ட ஆழமான உணர்வைக் கொண்டிருக்கிறோமோ, அப்போதெல்லாம் வெளிச்சத்தின் பிரகாசம் வந்தது என்பதற்கு அது நிரூபணமாகும். இப்போது இந்தப் பிரகாசித்தலின் உணர் வுக்கு நாம் கீழ்ப்படிகிறோமா இல்லையா என்பதுதான் கேள்வி. நாம் இந்தப் பிரகாசித்தலின் உணர்வுக்குக் கீழ்ப்படிந்து, குறிப்பிட்ட இடைபடுதல்களைக் கொண்டிருந்தால், அப்போது நம்மிலிருந்து திரைகளை நீக்கிவிடுகிறோம். இவ்வாறு நாம் பிரகாசித்தலை விரும்பி, வெளிச்சத்தின் பிரகாசித்தலை ஏற்றுக் கொண்டு, தொடர்ச்சியாகப் பிரகாசித்தலைக் கொண்டிருப்போம்.

பிரகாசித்தலின் உணர்வுக்கேற்றபடி நாம் இடைபடவில்லையென்றால், நம்மிலிருந்து திரைகளைநீக்குவதற்கு நாம் விரும்பவில்லை என்பது இதன் அர்த்தம். பின்பு நாம் பிரகாசித்தலை விரும்பாதவர்களாக, அதாவது வெளிச்சத்தின் பிரகாசத்தை நிராகரிப்பவர்களாக இருக்கிறோம். ஆகவே நாம் பிரகாசித்தலைப் பெற்றுக்கொள்ளமுடியாது.

இரண்டாவதாக, நாம் கர்த்தருக்கு நம்மைத் திறந்துகொடுக்க வேண்டும். கர்த்தர் வெளிச்சமாக இருக்கிறார், எனவே நம் முழு இருதயமும் அவரைநோக்கித் திரும்பினால், நிச்சயமாகவே நம்மிடம் வெளிச்சம் இருக்கும்; ஆனால் நாம் அவரைவிட்டுத் திரும்பி, மற்ற காரியங்களைச் சார்ந்துகொண்டால், நிச்சயமாக நம்மிடம் வெளிச்சம் இருக்காது. "அவர்கள் கர்த்தரிடத்தில் மனம் (இருதயம்) திரும்பும்போது, அந்த முக்காடு எடுபட்டுப்போம்" என்று இரண்டு கொரிந்தியர் *3:16* கூறுகிறது. இருதயம் கர்த்தரிடத்தில் திரும்பாதபோது, திரை அங்கே இருக்கிறது; ஆனால் இருதயம் கர்த்தரிடத்தில் திரும்பும்போது திரைநீக்கப்படுகிறது. அப்போது ஒருவன் கர்த்தரை முகமுகமாய்ப் பார்க்கமுடியும்; அப்போது ஒருவன் ஒளியைப் பார்க்கமுடியும். ஆகையால் நாம் பிரகாசத்தைப் பெறவிரும்பினால், நாம் நம்மை கர்த்தருக்குத் திறந்து கொடுத்து, உள்ளே ஆழத்திலிருந்து நம்மை விடுவித்து, சிறிதளவும் ஒதுக்கிவைக்காமல் அல்லது பிடித்துவைக்காமல் நம்மைக் கர்த்தருக்கு முன்பாக வைக்கவேண்டும். அப்போது ஒளியைப் பெறுவது மிகவும் எளிதாகிவிடும்.

ஆனால் பிரச்சினை என்னவென்றால், நம்மை நாம் கர்த்தருக்குக் திறந்துகொடுப்பது அவ்வளவு எளிதல்ல. இன்னும் அடிக்கடி நம்மை நாமே மறைத்துக்கொள்கிறோம்; நம்மை பிடித்துவைத்துக் கொள்கிறோம். இன்னும் நாம் நம்மை கர்த்தருக்குத் திறந்து கொடுக்க தைரியமற்றவர்களாக இருப்பது மட்டுமல்ல; கர்த்தரிடம் ஜெபிக்கவும் தைரியமற்றவர்களாக இருக்கிறோம். இது, ஒரு குழந்தை சில நேரங்களில் தன் பெற்றோர்களின் முகத்தைப் பார்க்கப் பயப்படுவதைப்போன்று இருக்கிறது. குழந்தையை அதின் பெற்றோர்கள் அழைக்கும்போது, அக்குழந்தை தன் வாயினால் பதிலளிக்கிறது; இருப்பினும் அக்குழந்தை முன்னால் வருவதற்கு விரும்பவில்லை, ஏனெனில் பெற்றவர்களுக்குப் பின்னால் சொல்லமுடியாத காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது. ஆ, கர்த்தருக்கு முன்பாக அநேகருடைய நிலைமை இதைப் போன்றுதான் இருக்கிறது. ஏனென்றால் கர்த்தருக்குப் பிரியமில்லாத காரியங்களும் அலுவல்களும் அவர்களிடம் இருப்பதால், அவர்கள் தங்களை மறைத்துக்கொண்டு தங்களைப் பிடித்துவைத்துக் கொள்கிறார்கள். கர்த்தர் இந்தக் காரியங்களையும் அலுவல்

களையும் தொட்டுவிட்டால் நாம் என்னசெய்வது? கர்த்தர் இந்தக் காரியங்களோடும் அலுவல்களோடும் இடைபட்டால், நாம் என்னசெய்வது? அவர்கள் பொக்கிஷமாக நினைக்கிற சில காரியங்களைத் தமக்கு அர்ப்பணிக்க வேண்டுமென்று கர்த்தர் விரும்பினால் என்னசெய்வது? என்று பயப்படு கிறார்கள். அவர்கள் கர்த்தரால் பிரகாசிக்கப்படுவதற்கு மிகவும் பயப்படுவதால், கர்த்தருக்குத் தங்களைத் திறந்துகொடுக்கத் துணிவதில்லை. எனவே அவர்கள் இறுக்கமாக சுருட்டிவைக்கப்பட்டு, திறக்கப்பட விருப்பமில்லாத, கர்த்தர் எழுதவேண்டு மென்று விரும்புகிற வார்த்தைகளை எழுத அவரை அனுமதிக்காத, ஒரு துண்டுக் காகிதத்தைப்போல் இருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட மக்கள் கர்த்தருக்குத் தங்களை திறந்து கொடுக்க விரும்பமில்லாமல், செய்திகளைக் கேட்பதற்கும், வேதாகமத்தை வாசிப்பதற்கும், தங்கள் மனதைப் பயன்படுத்தினாலும், அவர்கள் கேட்கிற செய்திகளும், அவர்கள் படிக்கிற வேதாகமமும் மற்றவர்களைத் தீர்ப்புச்செய்வதற்கான குறிப்பேடாகவும், மற்றவர்களைக் குறைகூறும் ஒரு கருவியாகவுமே மாறுகிறது; ஆனால் தாங்களோ சிறிதளவு வெளிச்சத்தைக்கூடப் பெறுவ தில்லை. இந்தச் சூழ்நிலை, ஒரு மனிதன் இரவில் ஒரு அறையில் இருப்பதைப்போல் இருக்கிறது. அறை பிரகாசமாக இருந்தால், வெளியிலிருக்கிற காரியங்களை அவனால் பார்க்கமுடியாது; ஆனால் அறை இருளாக இருந்தால், அவன் வெளியிலிருக்கிற காரியங்களைத் தெளிவாகப் பார்க்கமுடியும். இதைப்போல, கர்த்தருக்குத் தங்களை மூடிக்கொள்ளுகிறவர்கள் தீர்ப்புச்செய்வ திலும், மற்றவர்களைக் குறைகூறுவதிலும், கைதேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் மற்றவர்களுடைய நிலமையைக் குறித்து மிகத் தெளிவாக இருக்கிறார்கள், ஆனால் தங்கள் சொந்த நிலைமையைக் குறித்து சிறிதளவும் அறியாமலிருக்கிறார்கள். அவர்கள் முழுவதும் இருளில் இருக்கிறார்கள் என்பதை இது நிரூபிக்கிறது!

இப்படி தங்களை கர்த்தருக்குத் திறந்துகொடுக்க விருப்ப மில்லாதவர்கள், கர்த்தரை அறிவிக்கவும், கர்த்தருக்காக வேலை செய்யவும் முடியும். அவர்கள் பிரகாசத்தை ஏற்றுக்கொள்ள விருப்பமில்லாமல் இருந்தாலும், பிரகாசித்தலைத் தேடும்படி மற்றவர்களை அறிவுறுத்தமுடியும். கர்த்தர் தங்கள்மேல் கிருபையாயிருந்து, தங்களுக்கு அதிமான ஜீவனைத்தருவார், தங்களைத் தயார்ப்படுத்தி, தங்கள்மேல் வரங்களை அருளுவார், இதனால் தாங்கள் ஊழியமும் வேலையும் செய்யமுடியும் என்று அவர்கள் அடிக்கடி நம்பினாலும்கூட, அவர்கள் கர்த்தருடைய பிரகாசித்தலுக்குப் பயப்படுகிறார்கள், மேலும் கர்த்தருடைய

பிரகாசித்தலை நிராகரிக்கவும் செய்கிறார்கள். இவ்வாறு அவர்கள் ஊழியம்செய்கிற வார்த்தைகளும் அவர்கள் செய்கிற வேலைகளும், ஜீவிக்கிற பிரகாசத்தை மனிதர்களுக் குள் உட்செலுத்தமுடியாத செத்த புத்திமதிகளாக இருக்கின்றன.

இவ்வாறு மனிதர்கள் தங்களைக் கர்த்தருக்கு திறந்து கொடுக்க விருப்பமற்றவர்களாக இருக்கும்போது, அவர்கள் உள்ளார்ந்த ரீதியில் ஒழுங்கின்மையாகவும் வெறுமையாகவும் மற்றும் இருளாகவும் வெளிச்சமில்லாமலும் இருக்கிறார்கள். இது நிலவறையில் இருப்பதைப்போல் இருக்கிறது: வெளியே எவ்வளவு பலமான வெளிச்சம் இருந்தாலும், அது உள்ளுக்குள் பிரகாசிக்க முடியாது. ஆனால் கர்த்தருக்குத் திறந்துகொடுக்கிற ஒருவனுடைய நிலைமை முற்றிலும் வித்தியாசமாக இருக்கிறது. அவன் முற்றும்முடிய தன்னை விடுவிக்கிறான், மேலும் உள்ளிருந்து வெளிவரை எதையும் ஒதுக்கிவைக்காமல் கர்த்தருக்கு முன்பாக எல்லாக் காரியங்களையும் பரப்பிவைத்து தேவனுடைய வெளிச்சம் பிரகாசிக்க அனுமதிக்கிறான். இப்படிப்பட்ட ஒரு நபர் நிச்சயமாக, இடைவிடாமல் பிரகாசிக்கப்படுதலைப் பெற்றுக்கொள்வான். ஒரு செய்தியைக் கேட்டதினாலோ, வேதாகமத்தை வாசித்ததினாலோ, அவன் வெளிச்சத்தின் பிரகாசத்தைப் பெற்றவுடனே, அவன் அதைத் தாழ்மையோடு ஏற்றுக்கொள்கிறான்; ஒருபக்கம் துக்கமாக இருக்கிறான், மறுபக்கம் கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறான். தன் சொந்த இழப்பினாலும், தோல்வியி னாலும் துக்கமாயிருக் கிறான்; கர்த்தருடைய இரக்கத்தினாலும், தேவனுடைய பிரகாசத்தினாலும் அவரைத் தொழுதுகொள்ளுகிறான். வெளிச்சத்தில் இருப்பதால், அவன் மற்றவர்களுடைய தவறுகளைப் பார்ப்பதில்லை, மாறாக தன் சொந்தக் குறைபாடுகளையே பார்க்கிறான். ஆகவே அவன் மற்றவர்களை ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பதில்லை; பரிசுத்த கர்த்தருக்கு முன்பாக தன் தலையை உயர்த்த முடியாத ஒரு புழுவைப்போல அல்லது ஒரு பூச்சியைப்போல தானே மிகவும் பரிதாபத்திற்குரிய நபர் என்று மட்டும் அவன் உணர்கிறான். மேலும் அவன் தேவனுடைய இரக்கத்திற்காக தேவனை நோக்கிப்பார்க்கிறான், தன்னை இரட்சிக்கும்படி தேவனிடம் கேட்கிறான், வெளிச்சத்தின் ஆழமான பிரகாசத்தைப் பெற்றுக்கொள்ள விருப்பமாயிருக்கிறான். இந்த வழியில், தேவனுடைய வெளிச்சம் தொடர்ச்சியாக அவனுக்குள் பிரகாசிக்கிறது, மேலும் தேவனுடைய ஜீவன் தொடர்ச்சியாக அவனுக்குள் வளர்கிறது. அப்போது அவன் ஒரு ஒளிவுமறை வில்லாத நபராக, முழுவதும் உணர்வினால் நிறைந்த நபராக மாறுகிறான்.

மூன்றாவதாக, நம்மை நாம் தடுத்து நிறுத்தவேண்டும். நம்மை

நாம் தடுத்து நிறுத்துவதென்றால் என்ன? நம் கண்ணோட்டங்கள், காரியங்களைப் பார்க்கும் நம் முறைகள், நம் உணர்வுகள், அபிப்பிராயங்கள், வார்த்தைகள் போன்றவைகளைத் தடுத்து நிறுத்துவதாகும். நிறுத்துவது ஒரு எளிதான காரியமல்ல என்பது நம்மெல்லாருக்கும் தெரியும். உண்மையில் இந்த முறையில் நிறுத்த முடிந்தவர்கள் ஒருசிலரே. நம்மை நாம் தடுத்து நிறுத்தமுடியாமலிருப்பது நாம் பிரகாசிப்பிக்கப்படுவதிலிருந்து நம்மைத் தடுக்கிற ஒரு திரையாக, அதாவது கடினமான திரையாக இருக்கிறது.

எடுத்துக்காட்டாக, சில சகோதரர்கள் வேதாகமத்தை வாசிக்கும் போது, எப்போதும் தங்கள் சொந்த உணர்வுக ளோடும் யோசனை களோடும் படித்து, அதன் அர்த்தத்திற்குள் தங்கள் சொந்தக் கருத்துக்களை வைக்கிறார்கள். “சீமோன் பேதுரு” என்று வேதாகமம் தெளிவாகக்கூறுகிறது, ஆனால் அவர்கள் அதை வாசிக்கிறபோது அது “பேதுரு சீமோனாக” மாறிவிடுகிறது. “இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுல்” என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது, ஆனால் அவர்கள் அதை வாசிக்கும்போது, “கிறிஸ்து இயேசுவின் அப்போஸ்தலனாகிய பவுல்” என்று மாறிவிடுகிறது. அவர்கள் தேவனுடைய வார்த் தையை வாசிக்காதபோது, அவர்களுடைய அபிப்பிராயங்கள் மறைந்திருக்கின்றன; ஆனால் அவர்கள் தேவனுடைய வார்த்தையை வாசித்தவுடனே, அவர்களுடைய அபிப்பிராயங்கள் எழும்பிவருகின்றன. ஆகையால் அவர்கள் வேதாகமத்தை வாசிக்கும்போதெல்லாம், அவர்களுடைய அபிப்பிராயமும் கருத்தும் இல்லாத ஒரு பகுதியும் இல்லை. ஆனால் இப்படிப்பட்ட எல்லா அபிப்பிராயங்களும் கருத்துக் களும் எந்த மதிப்பும் இல்லாத மரம், புல், வைக்கோல், என்பதை அவர்கள் அறியாம லிருக்கிறார்கள். சில சகோதரர்கள் தங்கள் ஊழியத்தில் இதைப் போன்றுதான் இருக்கிறார்கள். அவர்கள் பிரசங்கிக்கும்போது மையமோ, முக்கியமான குறிப்போ இல்லாமல் அவர்களுடைய வார்த்தைகள் அங்குமிங்குமாக சென்றுகொண்டிருக்கும். சில சகோதர சகோதரிகள் ஊழியத்தைக் கவனிக்கும்போது, திரும்பத் திரும்பக்கேட்டபிறகும் எல்லா முக்கியமான, தேவையான குறிப்புகளையும் எளிதாகத் தவறவிட்டுவிடுகிறார்கள். இருப்பினும் பேசியபிறகு பொதுவாக மக்கள் மறந்துவிடுகிற தேவையில்லாத வார்த்தைகளை நினைவில் வைத்திருக் கிறார்கள். இது ஏனென்றால், அவர்களால் நிறுத்தமுடியாத அநேக கருத்துக்களும் எண்ணங்களும் அவர்களிடம் இருக்கின்றன. எப்போதும் வெளியார்ந்தரீதியில் மிகவும் பரபரப்பாகவும், உள்ளார்ந்தரீதியில் விநோதமான கற்பனை களில் திளைத்தும் இருக்கிற இப்படிப்பட்ட சகோதர சகோதரி

களால் தங்கள் முழு ஆள்தத்துவத்தின் எந்தப் பகுதியையும் தடுத்துநிறுத்தமுடியாது. இதன்விளைவாக கொஞ்சம்கூட வெளிச்சத்தைப் பெற்றுக்கொள்ள முடியாது.

புதிய ஏற்பாட்டில் இப்படிப்பட்ட ஒரு எடுத்துக்காட்டு இருக்கிறது. லூக்கா 10 மற்றும் யோவான் 11 ஆகிய இரண்டிலும் மிகவும் பரபரப்பான, தன்னைத் தடுத்துநிறுத்த முடியாத, மார்த்தாளைப் பார்க்கிறோம்: அவள் வெளியார்ந்த ரீதியில் எவ்வளவு பரபரப்பானவள் என்பதை லூக்கா 10 பதிவுசெய் திருக்கிறது, ஆனால் அவள் உள்ளார்ந்தரீதியில் எவ்வளவு சுறுசுறுப்பானவள் என்பதை யோவான் 11 பதிவுசெய்திருக்கிறது. அவளுடைய முழு ஆள்தத்துவமும் அறக்கப்பறக்க இருந்தது என்று நாம் கூறலாம். அவளுக்கு அநேக அபிப்பிராயங்களும் கருத்துக்களும் இருந்தது மட்டுமல்ல, அவள் அநேக வார்த்தைகளையும் வைத்திருந்தாள்; அவளால் ஒரு கணமும் சும்மா இருக்கமுடியவில்லை. ஆகையால் கர்த்தர் பேசின ஒரு வார்த்தைகூட அவளுக்குள் நுழையவில்லை. கர்த்தர் அவளைச் சந்தித்தபோது, கர்த்தர் தம் வாயைத் திறப்பதற்கு முன்பாகவே, அவள் தன் வாயைத் திறந்து, “ஆண்டவரே நீர் இங்கே இருந்தீரானால் என் சகோதரன் மரித்திருக்கமாட்டான்” என்று கர்த்தரைக் குற்றப்படுத்தினாள். அதற்கு கர்த்தர் “உன் சகோதரன் உயிர்த் தெழுவான்” என்று பதிலுரைத்தார். பின்பு அவள் உடனே, ஒரு அபிப்பிரயாத்தை உடையவளாக “உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசிநாளில் அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன்” என்று பதிலளித்தாள். உயிர்த்தெழுதல் இன்னும் அநேக ஆயிரம் ஆண்டுகளுக்குப்பிறகு நடக்கும் என்று அற்புதமாக கர்த்தருடைய வார்த்தைக்கு விளக்கமளித்தாள். அதற்கு கர்த்தர் “நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிற வனெவனும் என்றென்றைக்கும் மரியாமலுமிருப்பான்” என்று அவளுக்குக் கூறினார்: அதற்கு அவள், “ஆம் ஆண்டவரே நீர் உலகத்தில் வருகிறவரான தேவகுமாரனாகிய கிறிஸ்து என்று நான் விசுவசிக்கிறேன்” என்று கூறினாள். அவருடைய கேள்விக்கு அவள் ஞானமாக பதில் கூறவில்லை. கர்த்தர் என்ன கூறினார் என்பதை அவள் கவனிக்கவில்லை; அவள் மிகவும் அபிப்பிராயவாதியாகவும், வாயாடியாகவும் இருந் தாள். அவள் இந்த வார்த்தைகளைப் பேசி முடித்தவுடனே சென்று, தன் சகோதரியாகிய மரியாளை இரகசியமாய் அழைத்து: “போதகர் வந்திருக்கிறார் உன்னை அழைக்கிறார்” என்றாள். இது முற்றும்முடிய அவளுடைய ஜோடிப்பாக இருக்கிறது; இது கர்த்தருக்காக பேசின அவளுடைய

சொந்த யோசனையாக இருந்தது. வாயாடிகளும் அபிப்பிராயவாதி களும் யோசனைகளைக் கொடுக்கவும், அபிப்பிராயங்களை வெளிப்படுத்தவும் முடியும். இப்படிப்பட்ட மக்கள் கொஞ்சம் கூட நிறுத்தமாட்டார்கள்; இவ்வாறு, அவர்கள் முற்றும்முடிய வெளிச்சத்திலிருந்து திரையிடப்பட்டிருக்கிறார்கள், மேலும் உண்மையாக அவர்கள் பிரகாசிப்பிக்கப்படுவதற்கான எந்த வழியுமில்லை.

தன்னை நிறுத்தமுடியாத ஒரு பிரச்சினை மனிதனுக்குள் இருக்கிறது. அநேகர் வெளிச்சமில்லாமல் வேதாகமத்தை வாசிக்கி றார்கள், முக்கிமான குறிப்புகளைப் புரிந்துகொள்ள முடியாமல் ஊழியத்தைக்கேட்கிறார்கள், இது அவர்கள் பாவமுள்ளவர்கள் அல்லது உலகப்பிரகாரமானவர்கள் என்பதினால் அல்ல; மாறாக அவர்கள் அபிப்பிராயங்கள், உணர்வுகள், யோசனைகள், வார்த்தைகள், ஆகியவைகளால் நிறைந்திருப்ப தால் அப்படியிருக் கிறார்கள். கண்டிப்பாகப் பேசுவதானால் பாவமும் உலகமும், தூக்கியெறிவதில் எந்தப்பிரச்சினையும் இல்லாத ஒரு கிழிந்த-கந்தலான துண்டுத்துணியைப்போல இருக்கிறது. ஆனால் நம்மிலுள்ள அபிப்பிராயங்களையும் உணர்வுகளையும் யோசனை களையும் தூக்கியெறிவது அவ்வளவு எளிதல்ல. இதனால்தான் அவைகள் நம்மில் மிகக் கடினமான திரையாக மாறியிருக்கின்றன; அவைகள் கர்த்தருடைய பிரகாசித்தலைப் பெற்றுக்கொள்ள முடியாதபடி நம்மைத் தடுக்கின்றன.

ஆகவே நாம் பிரகாசிப்பிக்கப்பட விரும்பினால், நம்மை நாம் அமைதிப்படுத்தி, நம்மை நாம் தடுத்துநிறுத்தவேண்டும். நம் புறம்பான நடவடிக்கைகளை தடுத்துநிறுத்துவது மட்டுமல்ல, நம்முள்ளிருக்கிற அபிப்பிராயங்கள், உணர்வுகள், யோசனைகள், கண்ணோட்டங்கள், வார்த்தைகள் ஆகியவைகளையும்கூட தடுத்துநிறுத்தவேண்டும். முற்றும்முடிய தடுத்து நிறுத்தப்பட்ட ஒரு நபர் கர்த்தருடைய பிரசன்னத்திற்கு வரும்போது, அவன் கர்த்தருடைய வார்த்தையைப் பெற்றுக்கொள்வதில் மிக எளிமையாகவும், ஒற்றையாகவும் இருக்கமுடியும். கர்த்தர் எதைக்கூறினாலும் அவன் கேட்கிறான் மற்றும் புரிந்துகொள்கிறான். அவன் வேதாகமத்தை வாசிக்கும் போது தன் சொந்தக் கருத்தையும் விளக்கத்தையும் அதற்குள் வாசிக்கமாட்டான். மாறாக வேதாகமத்தில் உள்ளபடியே அதன் அர்த்தத்தை வாசிப்பான். ஆரம்பத்தில் அவன் எதை வாசிக்கிறான் என்று புரியாததைப்போல் தோன்றும், ஆனால் வெளிச்சம் வரும்போது, வேதாகமத்தில் உள்ள பெரிய காரியங்கள் அவனில் பிரகாசிக்கும், அவன் வெளிப்பாட்டைக் கொண்டிருக்கச்செய்யும். அவன் செய்தியைக் கேட்கிறபோதும் இதுவே உண்மையாயிருக்கிறது. உள்ளிலிருந்து

வெளிவரை அவனுடைய முழு நபரும் கர்த்தருக்கு முன்பாக அமைதியாகவும், விருப்பத்தோடும் அவருடைய பேசுதலைக் கேட்க காத்துக்கொண்டிருக்கிறது. ஆகவே வார்த்தைகள் விடுவிக்கப்படும்போது, செய்தியின் தேவையான குறிப்பை அவனால் கிரகித்துக்கொள்ளவும், உள்ளே கர்த்தருடைய வார்த்தையைப் பெற்றுக்கொள்ளவும் முடியும். இப்படிப்பட்ட நபர் தன்னைத் தடுத்துநிறுத்த முடியும் என்பதால் தேவனுடைய ஜீவிக்கிற வார்த்தையை அதாவது தேவனுடைய வெளிச்சத்தை இடைவிடாமல் பெறமுடியும், ஏனென்றால் தேவனுடைய வெளிச்சம் தேவனுடைய வார்த்தையில் இருக்கிறது. ஆகவே பிரகாசிப்பிக்கப்படுவதற்கான மூன்றாவது கோரிக்கை தன்னைத் தடுத்து நிறுத்துவதாகும்.

நான்காவதாக, நாம் வெளிச்சத்தோடு வாக்குவாதம்செய்யக் கூடாது. நாம் பிரகாசிப்பிக்கப்படுவதற்கு இது மற்றுமொரு ஆதார கோரிக்கையாக இருக்கிறது. உள்ளே பிரகாசித்தலையும், உணர்வை யும் பெற்றவுடனே நாம் அதை ஏற்றுக்கொண்டு, பணிந்தடங்கி, அதற்கேற்றவாறு இடைபடவேண்டும்; எந்த வாக்குவாதமும் நம்மிடம் இருக்கக்கூடாது. நாம் எப்போதெல்லாம் வெளிச்சத்தோடு வாக்குவாதம் செய்கிறோமா அப்போதெல்லாம், வெளிச்சம் பின்வாங்கிவிடுகிறது.

பரிசுத்த ஆவியானவர் இந்தப் பிரகாசிக்கும் வேலையை மனிதனுக்குள் செய்கிறபோது, அது மிகமென்மையான, நுட்பமான காரியமாகும். அவர் மனிதனுடைய எதிர்ப்பைச் சந்திக்கிறபோது, உடனே பின்வாங்கிவிடுகிறார். அவரை எதிர்ப்பதால் பரிசுத்த ஆவியானவரைப் பின்வாங்கச்செய்வது மிகவும் எளிதாகும், ஆனால் அவரை திரும்பிவரும்படி அழைப்பது மிகக்கடினமாகும். ஒருவேளை நாம் அறிக்கை செய்து, மனந்திரும்பி, கர்த்தருடைய மன்னிப்பைப் பெற்றாலும்கூட, பரிசுத்த ஆவியானவர் உடனே திரும்பிவராமல் இருக்கலாம். இப்படிப்பட்ட சூழ்நிலையை நாம் உன்னதப்பாட்டில் பார்க்கிறோம். கர்த்தர் தம் பிரியமானவளுடைய கதவைத் தட்டும்போது, அவள் கதவைத் திறக்கவில்லை. பின்னர் அவள் தான் செய்ததை உணர்ந்து கதவைத் திறக்கும்போது, அங்கே கர்த்தரைக் காணவில்லை. இந்த வழியில், கர்த்தர் தம்மை மறைத்துக்கொள்ளுகிறபோது இது நம்மேல் அவருடைய தண்டனையாக இருக்கிறது.

பரிசுத்த ஆவியானவர் மட்டுமே இந்த வழியில் வேலை செய்வதில்லை; பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை உடையவர்களும் இந்த வழியில் வேலைசெய்கிறார்கள். தேவனை அறிந்த, தேவனால் உபயோகப்படுத்தப்படுகிற ஒரு வேலையாள்

எப்போதும் மற்றவர்களுக்கு உதவிசெய்வதில் சந்தோஷப்படு கிறான். நீங்கள் அவரைக் குறைகூறி அல்லது வேண்டுமென்றே அவரை எதிர்த்தாலும், சரி அல்லது தவறைக்குறித்து அவர் உங்களோடு எதிர்த்துநிற்கவோ, தர்க்கம் செய்யவோ, வாக்குவாதம் செய்யவோமாட்டார். அவருக்கு ஒரேவொரு வழி மட்டுமே இருக்கிறது: அதாவது, அதற்குமேல் உங்க ளோடு ஒன்றும் பேசமுடியாமல், உங்களுக்கு உதவி செய்யமுடியாமல் உங் களைவிட்டு பின்வாங்கிச்சென்றுவிடுகிறார். ஆகவே எதிர்த்துநிற்க விரும்புகிறவன் முட்டாள், அவனுக்கு ஏற்படுகிற இழப்பு பேரிழப்பாகும்! பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை உடையவர்களிடம் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! தெருவில் செல்பவர்களை நீங்கள் சுலபமாகக் குறைகூறிவிடலாம், ஆனால் பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை உடைய ஒருவரை நீங்கள் சுலபமாகக் குறைகூறவோ, வேண்டுமென்று வாக்குவாதம் செய்யவோகூடாது. உங்கள் குறைகூறுதல் சரியானதல்ல அல்லது உங்களுடைய வாக்குவாதம் காரணமில்லாதது என்று இதற்கு அர்த்தமல்ல; உங்கள் குறைகூறுதல்களெல்லாம் சரியானதாகவும், உங்கள் தர்க்கங்க ளெல்லாம் காரணமான தாகவும் இருக்கலாம்; ஆனால் ஒரு காரியம் நிச்சயம்: அதாவது நீங்கள் அவரைக் குறைகூறி, அவரோடு வாக்கு வாதம்செய்தவுடனே, உங்களோடுள்ள அவருடைய ஊழியம் முடிந்துவிடுகிறது. அவர் ஆயிரக்கணக்கான மக்களுக்கு உதவி செய்யக்கூடும், ஆனால் அவர் உங்களுக்கு உதவிசெய்ய முடியாது. அவர் உங்களுக்கு உதவிசெய்யமாட்டார் என்ப தல்ல, மாறாக அவரால் உங்களுக்கு உதவிசெய்யமுடியாது. அவர் உங்களுக்கு உதவிசெய்ய விரும்பினாலும்கூட, நீங்கள் எதையும் ஆதாயப்படுத்திக்கொள்ள முடியாது. எவ்வளவு முக்கியமான காரியம் இது! நாம் எவ்வளவு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்!

ஆகவே நம்முள் பேசுகிற பரிசுத்த ஆவியானவரோடும், நமக்கு வெளியே பேசுகிற ஊழியர்களோடும் நாம் குறை கூறவோ, வாக்குவாதம் செய்யவோகூடாது. மனிதனுக்குள் இருக்கிற பிரகாசிக்கும் பரிசுத்த ஆவியானவரோடு நாம் வாக்குவாதம் செய்யக்கூடாது, ஏனென்றால் ஒருமுறை நீங்கள் வாக்குவாதம் செய்தால் குறைந்தது அநேக நாட்களாவது நீங்கள் இருளில் இருக்கவேண்டியிருக்கும். அந்த இருளின் காலகட்டம் உங்களுக்கு தண்டனையாகவும், நினைவூட்டுதலாகவும் இருக்கும். தேவனை ஒருமுறை புண்படுத்துவது ஒன்றும் பெரிய காரியமல்ல, அவருடைய மன்னிப்பைக் கேட்டு பெற்றுக்கொள்ளமுடியும் என்று நீங்கள் நினைக்கலாம். ஆம், அவர் உங்களை மன்னித்துவிடுவார். ஆனால் தேவ னுக்கு அவருடைய அரசாங்கம் இருக்கிறது; எனவே

அவர் உங்களுக்கு வைத்திருக்கிற தண்டனையிலிருந்து நீங்கள் தப்பித்துக்கொள்ள முடியாது. நீங்கள் அவரை பலமுறை புண்படுத்தினால், நிச்சயமாக உங்களுடைய முடிவு மிக அவல மாயிருக்கும். இஸ்ரயேல் மக்கள் பாலைவனத்தில் தொடர்ச்சியாக தேவனோடு வாக்குவாதம்செய்து, தேவனைப் புண்படுத்தினார்கள். அவர்கள் காதேஸ்-பர்னாவை அடைந்தபோது, தேவனுடைய அரசாங்கத்தின் கரம் அவர்கள்மேல் வந்தது; அவர்களால் அலைந்துதிரிய வனாந்திரத்திற்கு திரும்ப மட்டுமே முடிந்தது. அவர்கள் அழுது மனந்திரும்பியபோதும்கூட, சூழ்நிலையை சீரமைக்கமுடியவில்லை. ஆகவே நாம் பரிசுத்த ஆவியானவரிட மிருந்து பெறுகிற பிரகாசிப்பித்தலாக இருந்தாலும் அல்லது தேவனுடைய வார்த்தையை ஊழியம் செய்கிறவர்களிடமிருந்து பெறுகிற பிரகாசித்தலாக இருந்தாலும், நாம் கீழ்ப்படியவேண்டும், வாக்குவாதம் செய்யக்கூடாது. ஆவிக்குரிய காரியங்களைப் பின்தொடர் வதில் இது மிக முக்கியமான கோட்பாடாகும்.

பரிசுத்த ஆவியானவர் நம்மைப் பிரகாசிக்கும்போது, நாம் உண்மையாகவே பலவீனமாகவும், பணிந்தடங்கமுடியாமலும் இருந்தால், "ஆ தேவனே, நான் இந்த விஷயத்தில் உமக்குக் கீழ்ப்படிகிறேன், ஆனால் நான் பலவீனமாயிருக்கிறேன்; என்மேல் இரக்கமாயிரும்" என்று அதிகமாக நாம் கூறவேண்டும். இந்த வகையான இருதய நடவடிக்கையும் அவருடைய இரக்கமாக இருக்கிறது. ஆனால் நாம் பிரகாசிக்கப்பட்டவுடனே கொஞ்சம்கூட வாக்குவாதம்செய்யாமல் உடனே கீழ்ப்படிவது சிறந்தது. இந்த வழியில், நம்மைத் தொடர்ச்சியாக பிரகாசிக்க நாம் தேவனை அனுமதிக்க முடியும்.

ஐந்தாவதாக, நாம் தொடர்ச்சியாக ஒளியில் வாழவேண்டும். ஒரு குறிப்பிட்ட விஷயத்தில் நாம் பிரகாசத்தைப் பெறும்போது, அதன்மூலம் நாம் தேவனுடைய சித்தத்தை அறியமுடிகிறது, இது ஒருமுறை கீழ்ப்படிந்துவிட்டு அதோடு விட்டுவிடுகிற காரியமல்ல. நாம் பெற்ற பிரகாசத்தின்கீழ் நம்மைத் தொடர்ச்சியாகக் காத்துக்கொள்வதற்குக் கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு குறிப்பிட்ட காரியத்தில் நீங்கள் பிரகாசத்தைப் பெறும்போது, அந்த குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் பணிந்தடங்கவேண்டும் என்பதல்ல, நீங்கள் அந்தக் கோட்பாட்டின்படி தொடர்ச்சியாகப் பணிந்தடங்க வேண்டும் என்பதே இதன் அர்த்தம்.

இந்த ஐந்து குறிப்புகளும் பிரகாசிக்கப்படுதலைப் பெற்றுக் கொள்ளும் வழியாகும். கர்த்தருக்கு முன்பாக இந்த ஐந்து குறிப்புகளுக்கு நாம் கவனம்செலுத்தினால், நாம் இடைவிடாத பிரகாசிப்பிக்கப்படுதலைப் பெற்று, வெளிச்சத்தில் வாழமுடியும். இந்த நிலையில் உள்ளே எந்தவகையான வழிநடத்துதல்

தேவையோ, அந்தவகையான வழிநடத்துதலை தேவன் நமக்குத் தருவார்; எந்தவகையான வெளிச்சம் தேவையோ, அந்த வகையான வெளிச்சத்தை தேவன் நமக்குத்தருவார்; எந்தவகை யான வளர்ச்சி நம் வாழ்க்கைக்குத் தேவையோ, அந்தவகையான வளர்ச்சியை ஒளி பிரகாசிப்பதின்மூலம் தேவன் நம் வாழ்க்கையில் கொண்டிருக்கச்செய்வார். கர்த்தர்தாமே நம்மேல் கிருபையாக இருப்பாராக!

## கர்த்தருடைய இரண்டு வேலையாட்களைப்பற்றி

வாச்மென் நீ அவர்களும், அவருடைய உடன் வேலையாளாகிய விட்னெஸ் லீ அவர்களும் கிறிஸ்துவின் சரீரத்திற்கு செய்த ஊழியம், எண்பது வருடங்களுக்கும்மேலாக பூமியில் எல்லா கண்டங்களிலும் உள்ள கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஓர் ஆசீர்வாதமாக இருந்திருக்கிறது என்பதற்காக நாங்கள் கர்த்தருக்கு நன்றிசெலுத்துகிறோம். அவர்கள் எழுதியவைகள் அநேக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. எங்களுடைய வாசகர்கள் வாச்மென் நீயைப்பற்றியும், விட்னெஸ் லீயைப்பற்றியும் பல கேள்விகளை எங்களிடம் கேட்டிருக்கிறார்கள். அவர்களுடைய கேள்விகளுக்கான பதிலாக இந்த இரண்டு சகோதரர்களின் வாழ்க்கையையும் வேலையையும் பற்றிய இந்தச் சுருக்கமான குறிப்பை நாங்கள் வழங்குகிறோம்.

### வாச்மென் நீ

வாச்மென் நீ பதினேழாவது வயதில் கிறிஸ்துவைப் பெற்றுக்கொண்டார். உலகமெங்கும் உள்ள தேடும் இருதயமுள்ள விசுவாசிகளிடையே அவருடைய ஊழியம் நன்கு அறியப்பட்ட ஒன்று. ஆவிக்குரிய வாழ்க்கையைப்பற்றியும், கிறிஸ்துவுக்கும் அவருடைய விசுவாசிகளுக்கும் உள்ள உறவைப்பற்றியும் அவர் எழுதியவைகளிலிருந்து அநேகர் உதவிபெற்றிருக்கிறார்கள். இருந்தாலும், சபை வாழ்க்கையை நடைமுறைப்படுத்துதல், கிறிஸ்துவின் சரீரத்தைக் கட்டியெழுப்புதல் ஆகியவைகளை வலியுறுத்தின அவருடைய ஊழியத்தின் சம அளவுக்கு முக்கியமான இன்னோர் அம்சத்தைப் பற்றி அநேகருக்குத் தெரியாது. கிறிஸ்தவ வாழ்க்கையைப் பற்றியும் சபை வாழ்க்கையைப்பற்றியும் சகோதரர் நீ பல புத்தகங்களை எழுதியுள்ளார். வாச்மென் நீ தனது வாழ்க்கையின் முடிவுவரை, தேவனுடைய வார்த்தையில் உள்ள வெளிப்பாட்டைத் திரைநீக்கிக் காண்பிப்பதற்காக கர்த்தரால் கொடுக்கப்பட்ட கொடையாக இருந்தார். சீனாவில் இருபது வருடங்கள் சிறையில் கர்த்தருக்காக பாடுபட்டபின்பு, இயேசு கிறிஸ்துவின் உண்மையுள்ள சாட்சியாக 1972-ல் அவர் இறந்தார்.

### விட்னெஸ் லீ

விட்னெஸ் லீ அவர்கள், வாச்மென் நீயின் மிக நெருக்கமான, மிக நம்பகமான உடன் வேலையாளாக இருந்தார். 1925-ல் பத்தென்பது வயதில், அவர் சக்திவாய்ந்த ஆவிக்குரிய

மறுபிறப்பை அனுபவித்தார், மேலும் ஜீவனுள்ள தேவனை சேவிக்கும்படி தன்னை அவருக்கு அர்ப்பணித்தார். அந்த நேரத்திலிருந்து அவர் தீவிரமாய் வேதாகமத்தைப் படிக்க ஆரம்பித்தார். அவருடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப ஏழு வருடங்களில் ப்ளைமவுத் பிரதரனால் பெருமளவு ஆட்கொள்ளப்பட்டார். அதன்பின் அவர் வாச்மென் நீயை சந்தித்தார், அடுத்த 17 வருடங்களுக்கு 1949வரை அவர் சீனாவில் சகோதரர் நீயின் உடன் வேலையாளாக இருந்தார். இரண்டாம் உலகப் போரின்போது, சீனா ஜப்பானால் ஆக்கிரமிக்கப்பட்டபோது, அவர் ஜப்பானியர்களால் சிறையில் அடைக்கப்பட்டு, கர்த்தருக்கு செய்த தன் உண்மையுள்ள சேவைக்காகப் பாடுபட்டார். தேவனுடைய இவ்விரண்டு வேலையாட்களின் ஊழியமும் வேலையும் சீனாவில் கிறிஸ் தவர்களிடையே மாபெரும் எழுப்புதலைக் கொண்டுவந்தது, அது நாடுமுழுவதும் சுவிசேஷம் பரவுவதையும் நூற்றுக்கணக்கான சபைகள் கட்டியெழுப்பப் படுவதையும் விளைவித்தது.

1949-ல் சீனாவில் கர்த்தரை சேவித்த தன் உடன் வேலையாட்கள் எல்லாரையும் வாச்மென் நீ ஒன்றாக அழைத்து, தாயகத்திற்கு வெளியே தைவான் என்ற தீவில் ஊழியத்தைத் தொடரும்படி விட்னெஸ் லீக்குப் பொறுப் பளித்தார். அடுத்த சில வருடங்களில், தைவானிலும் தென் கிழக்கு ஆசியாவிலும் தேவனுடைய ஆசீர்வாதத்தின் காரண மாக, நூற்றுக்கும் அதிகமான சபைகள் ஸ்தாபிக்கப்பட்டன.

1960-களின் ஆரம்பத்தில் விட்னெஸ் லீ அமெரிக்காவுக்குக் குடிபெயர்ந்துசெல்லும்படி கர்த்தரால் நடத்தப்பட்டார்; அங்கு கர்த்தருடைய பிள்ளைகளின் நலனுக்காக 35 வருடங் களுக்கும் மேலாக ஊழியம்செய்து, பணியாற்றினார். 1974முதல் ஜூன் 1997-ல் அவர் கர்த்தரிடம் செல்லும்வரை, கலி∴போர்னியாவில் அனஹெம் என்ற நகரத்தில் அவர் இருந்தார். அமெரிக்காவில் பல ஆண்டுகளாக செய்த அவருடைய வேலையில் 300-க்கும் மேற்பட்ட புத்தகங்களை அவர் வெளியிட்டார்.

விசேஷமாக, கிறிஸ்துவின் ஆராய்ந்தறியமுடியாத ஐசுவரியங்களைப்பற்றிய ஆழமான அறிவையும் அனுபவத்தையும் விரும்புகிற தேடும் இருதயமுள்ள கிறிஸ்தவர்களுக்கு விட்னெஸ் லீயின் ஊழியம் உதவியாக இருக்கிறது. எல்லாவற்றிலும் எல்லாவற்றையும் நிரப்புகிறவருடைய நிறைவாகிய அவருடைய சரீரமான சபையைக் கட்டி யெழுப்புவதற்காக கிறிஸ்துவை அறிவது எப்படி என்பதை சகோதரர் லீயின் ஊழியம் முழு வேதத்திலுள்ள தெய்வீக வெளிப்பாட்டைத் திறந்துகாண்பித்து நமக்கு வெளிப் படுத்துகிறது. கிறிஸ்துவின் சரீரத்தைக்

கட்டியெழுப்புகிற இந்த ஊழியத்தில் எல்லா விசுவாசிகளும் பங்குபெறவேண்டும்; இதனால் சரீரம் அன்பில் தன்னைத்தானே கட்டியெழுப்ப முடியும். இந்தக் கட்டுதலை நிறைவேற்றுவது மட்டுமே கர்த்தருடைய நோக்கத்தை நிறைவாக்கி, அவருடைய இருதயத்தைத் திருப்தியாக்கமுடியும்.

இவ்விரண்டு சகோதரர்களுடைய ஊழியத்தின் பிரதான குணாதிசயம் என்னவென்றால், அவர்கள் வேதாகமத்தின் தூய்மையான வார்த்தையின்படி சத்தியத்தைப் போதித்தார்கள்.

வாச்மென் நீ மற்றும் விட்னெஸ் லீயின் பிரதானமான நம்பிக்கைகளின் சுருக்கமான விவரிப்பு பின்வருமாறு:

1. பரிசுத்த வேதாகமம் பிழையற்ற, தேவனால் சுவாசித்து ஊதப்பட்ட, பரிசுத்த ஆவியானவரால் வார்த்தை வார்த்தை யாக ஏவப்பட்ட, முழுமையான தெய்வீக வெளிப்பாடாக இருக்கிறது.

2. தேவன் ஒரேவொரு மூவொரு தேவன், அதாவது நித்தியத்திலிருந்து நித்தியம்வரை சம அளவில் உடன் இருக்கிற, பரஸ்பரமாக ஒருவருக்குள் ஒருவர் இருக்கிற பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவர்.

3. தேவனுடைய குமாரன், அதாவது தேவன்தாமே நம் மீட்பராகவும் இரட்சகராகவும் இருக்கும்படி கன்னியாகிய மரியாளிடமிருந்து பிறந்த, இயேசு என்ற பெயரையுடைய ஒரு மனிதனாக மனிதமாம்சமானார்.

4. உண்மையான மனிதராகிய இயேசு பிதாவாகிய தேவனை மனிதர்களுக்குத் தெரியப்படுத்தும்படி முப்பத்து மூன்றரை வருடங்கள் பூமியில் வாழ்ந்தார்.

5. தேவனுடைய பரிசுத்த ஆவியைக்கொண்டு தேவனால் அபிஷேகிக்கப்பட்ட கிறிஸ்துவாகிய இயேசு நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து, நம் மீட்பை நிறைவேற்றுவ தற்காக தம் இரத்தத்தைச் சிந்தினார்.

6. இயேசுகிறிஸ்து மூன்று நாட்கள் அடக்கம்பண்ணப் பட்டபிறகு, மரித்தோரைவிட்டு எழுப்பப்பட்டார்; நாற்பது நாட்களுக்குப்பிறகு அவர் பரலோகத்திற்குள் ஏறிச்சென்றார், அங்கே தேவன் அவரை எல்லாருக்கும் கர்த்தராக்கினார்.

7. கிறிஸ்து பரமேறியபின்பு தம்மால் தெரிந்துகொள்ளப் பட்ட அவயவங்களை ஒரே சரீரத்திற்குள் ஞானஸ்நானம் பண்ணும்படி தேவனுடைய ஆவியை ஊற்றினார். பாவிகளைக் கண்டித்து உணர்த்தவும், தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்குள் தெய்வீக ஜீவனை வழங்கி அவர்களை மறுபடிபிறப்பிக்கவும், கிறிஸ்துவின் விசுவாசிகள் ஜீவனில் வளர்வதற்காக அவர்களில் குடியிருக்கவும், கிறிஸ்துவின் முழு வெளிப்படுதலுக்காக அவருடைய சரீரத்தைக் கட்டியெழுப்பவும் இந்த ஆவியானவர்

இன்று பூமியில் அசைகிறார்.

8. இந்த யுகத்தின் முடிவில் கிறிஸ்து தம் விசுவாசிகளை எடுத்துக்கொள்ளவும், உலகத்தை நியாயந்தீர்க்கவும், பூமியைச் சொந்தமாக்கிக்கொள்ளவும், தம் நித்திய இராஜ்ஜியத்தை ஏற்படுத்தவும் திரும்பிவருவார்.

9. ஜெயங்கொள்கிற பரிசுத்தவான்கள் ஆயிரவருட அரசாட்சியில் கிறிஸ்துவோடு அரசாளுவார்கள்; கிறிஸ்துவில் விசுவாசிக்கிற எல்லாரும் புதிய வானத்திலும் புதிய பூமியிலும் புதிய எருசலேமில் உள்ள தெய்வீக ஆசீர்வாதங்களில் நித்தியத்திற்கும் பங்குபெறுவார்கள்.

# விநியோக கொள்கை

இந்த ஏழு புத்தகங்களின் மின்னணு வடிவத்தை இலவசமாக வழங்குவதில் லிவிங் ஸ்ட்ரீம் மினிஸ்ட்ரி மகிழ்ச்சியடைகிறது. இந்தப் புத்தகங்களை அநேகர் முழுவதுமாக வாசிப்பார்கள் என்றும் அவைகளை மற்றவர்களுக்கு அறிமுகப்படுத்துவார்கள் என்றும் நங்கள் ஆவலோடு எதிர்பார்க்கிறோம். நல்ல ஒரு ஒழுங்கை பராமரிப்பதற்காக, இந்தக் கோப்புகளை உங்கள் சொந்த பயன்பாட்டிற்காக மட்டுமே அச்சிட்டுக்கொள்ளும்படி வேண்டிகொள்கிறோம். இந்தக் கோப்புகளை எந்த வடிவிலும், வேறெங்கும் மறுசமர்ப்பிப்பு செய்யாதீர்கள். கூடுதலாக பிரதிகளை நீங்கள் நகலெடுக்க விரும்பினால் copyrights@lsm.org ல், ஒரு எழுதப்பட்ட விண்ணப்பத்துடன் எங்களைத் தொடர்பு கொள்ளுங்கள். நடைமுறை சட்டத்திற்கேற்ப காப்புரிமை சம்பந்தமான அறிவிப்புகள் யாவும் மதிக்கப்படவேண்டும் என்றும் நாங்கள் கேட்டுகொள்கிறோம். இந்த பிடிஎப் கோப்புகள் எந்த வகையிலும் வேறெந்த பயன்பாட்டிற்கும் திருத்தப்பட, மாற்றியமைக்கப்படக் கூடாது.